ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீவசனபூஷண ப்ரமாணத்திரட்டு

Vachana Bhusha Pramana Tirattu

ஸம்ஸ்க்ருத ஶ்லோக ப்ரமாணத்திரட்டுக்குப் பதவுரை
தமிழ் பாசுர ப்ரமாணத்திரட்டுக்குப் பதவுரை,
ப்ரமாணத்திரட்டிலுள்ள ஶ்லோக அகராதி, செய்யுளகராதி.

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யராகிய யதிராஜஜீயர்
திருவடி சம்பந்தியும்
லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ கோலாஹல அத்தங்கி திருமலை திருவேங்கட
தாதாசார்ய க்ருபாபாத்ரரும்,
ஸ்ரீவைஷ்ணவ மஹாசங்கத் தலைவருமான
ஸ்ரீமாந் பூ. இராகவராமாநுஜ ஸ்வாமிகளால்
இயற்றப்பட்டு

ஸ்ரீமத் காஞ்சீமுனி நூற்பதிப்புக் கழகம்
சென்னை. R. இராஜகோபால் நாயுடு அவர்களது
செல்வரங்கன் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1937 [ரூபா 1—4—0



ஸ்ரீமத் மணவாளமாமுனிகள்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

விஶதவாக் சிகாமணியும் யதிவரபுநரவதாரமுமான

ஸ்ரீமத் மணவாளமாமுனிகள்

அருளிச்செய்த

ஸ்ரீவசனபூஷண வ்யாக்யாந

ப்ரமாணத்திரட்டு

தனியன்கள்.

1. ஸ்ரீஶைலேஶ தயாபாத்ரம்-தீபக்த்யாதி குணார்ணவம் ।
யதீந்த்ர ப்ரவணம் வந்தே - ரம்யஜாமாதரம் முநிம் ॥

ஸ்ரீஶைலேஶ - திருமலையாழ்வாருடைய, தயா - க்ருபைக்கு, பாத்ரம் - பாத்ரரும், தீபக்த்யாதி - ஜ்ஞாநபக்திகள் முதலாகிய, குண - குணங்களில், அர்ணவம் - கடல் போல்வருமாகிய, யதீந்த்ர - யதிராஜரிடத்து, ப்ரவணம் - அன்புள்ள, ரம்யஜாமாதரம் - ரம்யஜாமாத்ருவென்கிற திருநாமத்தையுடைய, முநிம் - மணவாளமாமுனிகளை, வந்தே - நமஸ்கரிக்கிறேன்.

2. லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் - நாதயாமுந மத்யமாம் ।
அஸ்மதாசார்ய பர்யந்தாம் - வந்தே குருபரம்பராம் ॥

லக்ஷ்மீநாத - ஸ்ரீமஹாலக்ஷ்மீ நாயகனை, ஸமாரம்பாம் - ப்ராரம்பத்திலும், நாத - ஸ்ரீமந் நாதமுனிகளையும், யாமுந - ஸ்ரீயாளவந்தாரையும், மத்யமாம் - மத்யத்திலும், அஸ்மத் - என்னுடைய, ஆசார்ய - ஆசார்யனை, பர்யந்தாம் - அந்தத்திலுமுடைய, குருபரம்பராம் - குருபரம்பரையை, வந்தே - ஸேவிக்கிறேன்.

3. யோநித்யமச்யுத பதாம்புஜ யுக்மருக்ம -
வ்யாமோஹதஸ் ததிதராணி த்ருணாயமேநே ।
அஸ்மத் குரோர் பகவதோஸ்ய தயைக ஸிந்தோ
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்யே ॥

ய: - எந்த பாஷ்யகாரர், நித்யம் - நிரந்தரம், அச்யுத - நாசரஹிதனாகிய ஸ்ரீய:பதியினுடைய, பதாம்புஜ யுக்ம - பாதாரவிந்த த்வயமாகிய, ருக்ம - ஸ்வர்ணத்தினிடத்தில், வ்யாமோஹத:—விசேஷாதரத்தை யடைந்திருக்கிறவராய், ததிதராணி - அந்த பகவத் பாதத்வயத்துக்கு வேறான விஷயங்களை, த்ருணாய - த்ருணப்ராயமாய், மேநே - நினைத்தாரோ, அஸ்மத் குரோ: - அப்படிப்பட்ட என்னுடைய ஆசார்யரும், பகவத: - பூஜ்யரும், தயைக ஸிந்தோ: - க்ருபாஸமுத்ரருமாகிய, அஸ்ய - இந்த, ராமாநுஜஸ்ய-ராமாநுஜாசார்யருடைய, சரணௌ - திருவடிகளை, ஶரணம் - ரக்ஷகமாய், ப்ரபத்யே - ஆச்ரயிக்கிறேன்.

4. மாதாபிதா யுவதயஸ் தநயா விபூதி: -
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம் ।
ஆத்யஸ்ய ந:குலபதேர் வகுளாபிராமம் -
ஸ்ரீமத் ததங்க்ரி யுகளம் ப்ரணமாமி மூர்த்நா ॥

மாதாபிதா - தாய் தந்தைகள், யுவதய: - யௌவந ஸ்திரீகள், தநயா: - புத்ரர்கள், விபூதி: - ஐஶ்வர்யம், ஸர்வம் - ஸமஸ்தமும், மதந்வயாநாம் - என் வம்சத்தாருக்கு, நியமேந - நியமனத்தினால், யதேவ - எந்த ஆழ்வாருடைய திருவடிகள் ஆகின்றனவோ, ஆத்யஸ்ய - முதல்வராகிய, ந: - என்னுடைய, குலபதே: - ப்ரபன்னஜந கூடஸ்தராகிய ஶடகோபருடைய, வகுளாபிராமம் - மகிழ மலர்களால் மநோஹரமாகிய, ஸ்ரீமத் - தேஜஸ்ஸோடுகூடிய, தததங்க்ரி யுகளம் - அந்தபாத த்வந்த்வத்தை, மூர்த்நா - சிரஸ்ஸினாலே, ப்ரணமாமி - சேவிக்கிறேன்.

5. பூதம் ஸரஶ்ச மஹதாஹ்வய பட்டநாத -
ஸ்ரீபக்திஸார குலஶேகர யோகிவாஹாந் ।
பக்தாங்க்ரிரேணு பரகால யதீந்த்ர மிஶ்ராந் -
ஸ்ரீமத் பராங்குஶ முநிம் ப்ரணதோஸ்மி நித்யம் ॥

பூதம் - பூதத்தாழ்வாரையும், ஸரஶ்ச - ஸரஸ்ஸில் அவதரித்தபொய்கையாழ்வாரையும், மஹதாஹ்வய - பேயாழ்வாரையும், பட்டநாத - பெரியாழ்வாரையும், ஸ்ரீபக்திஸார - திருமழிசையாழ்வாரையும், குலசேகர - குலசேகராழ்வாரையும், யோகிவாஹாந் - திருப்பாணாழ்வாரையும், பக்தாங்க்ரிரேணு - தொண்டரடிப்பொடியாழ்வாரையும், பரகால - திருமங்கையாழ்வாரையும், யதீந்ரமிஶ்ராந் - பூஜ்யராகிய யதிராஜரையும், ஸ்ரீமத் - கைங்கர்யயுக்தராகிய, பராங்குஶமுநிம் - பரனுக்கு அங்குசராய் மநநசீலரான நம்மாழ்வாரையும், நித்யம் - நிரந்தரமும், ப்ரணத: - ஸேவித்தவன், அஸ்மி - ஆனேன்.

6. லோககுரும் குருபிஸ்ஸஹ பூர்வை: கூரகுலோத்தம
தாஸமுதாரம் । ஸ்ரீநகபத்யபிராம வரேஶௌ தீப்ரஶ
யாநகுருஞ்ச பஜேஹம் ॥

பூர்வை: - முன்னோர்களான, குருபிஸ்ஸஹ - ஆசார்யர்களோடுகூட, லோககுரும் - பிள்ளைலோகாசார்யரையும், உதாரம்-உதாரரான, கூரகுலோத்தமதாஸம் - கூரகுலோத்தமதாஸரையும், ஸ்ரீநகபதி அபிராமவரேஶௌ - திருவாய்மொழிப்பிள்ளை, கோட்டூர் அழகியமணவாளப்பெருமாள்பிள்ளை ஆகிய இருவரையும், தீப்ரஶயாநகுருஞ்ச-திகழக்கிடந்தான் திருநாவீறுடையபிரான் தாதரண்ணாய்யரையும், அஹம் - நான், பஜே - ஸேவிக்கிறேன்.

7. லோகசார்யாய குரவே க்ருஷ்ணபாதஸ்ய ஸூநவே ।
ஸம்ஸார போகி ஸந்தஷ்ட ஜீவஜீவாதவே நம: ॥

க்ருஷ்ணபாதஸ்ய - க்ருஷ்ணயாசார்யருக்கு, ஸூநவே - திருக்குமாரராயும், ஸம்ஸார - ஸம்ஸாரமாகிற, போகி - ஸர்ப்பத்தால், ஸந்தஷ்ட - கடிக்கப்பட்ட, ஜீவ - ஜீவாத்மாக்களுக்கு, ஜீவாதவே - (ஜீவிக்கும்படியான) மருந்தாயுமிருக்கிற, லோகாசார்யாயகுரவே - பிள்ளைலோகாசார்யர் (என்கிற) ஆசார்யன்பொருட்டு, நம: - நமஸ்காரமானது உண்டாகட்டும்.

8. லோகாசார்ய க்ருபாபாத்ரம்-கௌண்டிந்ய குலபூஷணம் ।
ஸமஸ்தாத்ம குணாவாஸம் வந்தே கூரகுலோத்தமம் ॥

லோகாசார்ய - பிள்ளைலோகாசார்யருடைய, க்ருபா - கிருபைக்கு, பாத்ரம் - கொள்கலமாயும், கௌண்டிந்ய-கௌண்டிந்யகுலத்திற்கு, குலபூஷணம்-அலங்காரபூதராயும், ஸமஸ்த - எல்லா, ஆத்மகுண - ஆத்மகுணங்களுக்கும், ஆவாஸம் - ஸ்தாநமாயுமிருக்கிற, கூரகுலோத்தம - கூரகுலோத்தமதாஸரை, வந்தே - நமஸ்கரிக்கிறேன்.

9. நமஸ் ஸ்ரீசைல நாதாய குந்தீநகர ஜந்மநே ।
ப்ரஸாத லப்த பரமப்ராப்ய கைங்கர்ய சாலிநே ॥

ப்ரஸாத - (ஆழ்வாருடைய) க்ருபையால், லப்த - அடையப்பட்ட, பரமப்ராப்ய கைங்கர்யசாலிநே - மிகவும் உத்தேஸ்யமான (ஆழ்வாருடைய) ஸர்வவித கைங்கர்யத்தாலும் விளங்காநின்றுள்ளவராய், குந்தீநகர-குந்தீநகரத்திலே, ஜந்மநே - அவதரித்தவரான, ஸ்ரீசைலநாதாய - திருவாய்மொழிப்பிள்ளையின் பொருட்டு, நம꞉ - நமஸ்காரம்.

10. லோகாசார்ய பதாம்போஜ ராஜஹம்ஸாயிதாந்தரம் ।
ஜ்ஞாந வைராக்ய ஜலதிம் வந்தே ஸௌம்யவரம் குரும் ॥

லோகாசார்ய - பிள்ளைலோகாசார்யருடைய, பதாம்போஜ - திருவடித்தாமரையில், ராஜஹம்ஸாயிதாந்தரம் - ஹம்ஸச்ரேஷ்டம்போல் இடைவிடாமலிருக்கிற மனதையுடையவராயும், ஜ்ஞாநவைராக்ய - ஜ்ஞாநத்திற்கும் வைராக்யத்திற்கும், ஜலதிம்-ஸமுத்திரமாயிருக்கிறவருமான, ஸௌம்யவரம் குரும் - (கோட்டியூர்) அழகிய மணவாளப்பெருமாள்பிள்ளையை, வந்தே - சேவிக்கிறேன்.

11. ஸ்ரீஜிஹ்வாவததீசதாஸ மமலம் அசேஷ சாஸ்த்ரவிதம் ।
ஸுந்தர வரகுருகருணா கந்தளித ஜ்ஞாநமந்திரம் கலயே ॥

ஸுந்தரவரகுரு - கோட்டியூர் அழகியமணவாளப்பெருமாள் பிள்ளையினுடைய, கருணா - க்ருபையாலே, கந்தளித - விருத்தியடைந்த, ஜ்ஞாந மந்திரம் - ஸ்வரூபயாதாத்ம்ய ஜ்ஞாநத்தையுடையவரும், அமலம் - குற்றமற்றவரும், அசேஷசாஸ்த்ரவிதம் - எல்லா சாஸ்திரங்களையு மறிந்தவருமான, ஸ்ரீஜிஹ்வா வததீசதாஸம் - திகழக்கிடந்தான் திருநாவீறுடையபிரான் தாதரண்ணரையரை, கலயே - ஸ்தோத்திரம்பண்ணுகிறேன்.

12. புருஷகார வைபவஞ்ச ஸாதநஸ்ய கௌரவம்
தததிகாரிக்ருத்ய மஸ்யஸத்குரூப ஸேவநம் ।
ஹரிதயா மஹேதுகீம் குரோருபாய தாஞ்சயோ
வசநபூஷணே வதஜ்ஜகத்குரும் தமாச்ரயே ॥

புருஷகார வைபவஞ்ச - (ஸாபராதசேதநன் பகவச்சரணாரவிந்தங்களில் சேர்ப்பிக்கும்) கடகையான பெரியபிராட்டியாருடைய அதிசயமான வைபவமும், ஸாதநஸ்ய கௌரவம்-(உபாயாந்தரங்களைக்காட்டில் ஸுலபஸாதநமான) ப்ரபத்தியின் ஆதிக்யமும், தத் - அந்த, அதிகாரிக்ருத்யம் - (ப்ரபத்தி பண்ணின) அதிகாரியின் அநுஷ்டாநமும், அஸ்ய - இவன், ஸத்குரூபஸேவநம் - ஸதாசார்ய அநுவர்த்தநக்ரமமும், ஹரிதயாம் அஹேதுகீம் - ஈச்வரனுடைய நிர்ஹேதுகக்ருபையையும், குரோருபாயதாஞ்ச - (ஸம்ஸாரஸாகரத்தை தாண்டுவிக்கும்) ஆசார்யஸாதநத்வமும், ய꞉ - எந்தபிள்ளைலோகாசார்யர், வசநபூஷணே - ஸ்ரீவசநபூஷணத்தில், அவதத் - அருளிச்செய்தாரோ, தம் - அந்த, ஜகச்குரும் - ஸ்ரீமத் பிள்ளைலோகாசார்யரை, ஆச்ரயே - ஆச்ரயிக்கிறேன்.

13. ஸாங்காகில த்ராவிட ஸம்ஸ்க்ருத ரூபவேத
ஸாரார்த்த ஸங்க்ரஹ மஹாரஸ வாக்யஜாதம் ।
ஸர்வஜ்ஞ லோககுரு நிர்மிதமார்ய போக்யம்
வந்தே ஸதா வசநபூஷண திவ்யஸாஸ்த்ரம் ॥

ஸாங்க - எல்லா அங்கங்களோடுகூடின, த்ராவிடஸம்ஸ்க்ருதரூப - த்ராவிட ஸம்ஸ்க்ருதரூபமான, வேத - உபயவேதத்தினுடைய, ஸாரார்த்த - தாத்பர்யார்த்தத்தை, ஸங்க்ரஹ - ஸங்ரஹித்து, மஹாரஸ-மிகவும் ச்ரேஷ்டார்த்த ப்ரதிபாதகமான, வாக்யஜாதம்-வாக்யஸமூஹத்தோடுகூடின, ஸர்வஜ்ஞலோககுரும் நிர்மிதம் - ஸர்வஜ்ஞரான பிள்ளைலோகாசார்யரால் அருளிச்செய்யப்பட்டதும், ஆர்யபோக்யம் - அகிலஆசார்யர்களும் அநுபவிக்கத் தகுந்ததும், வசனபூஷண திவ்யசாஸ்த்ரம்-ஸ்ரீவசந பூஷணமென்னும் திவ்யசாஸ்திரத்தை, ஸதா - எப்பொழுதும், வந்தே - ஸேவிக்கிறேன்.

14. ஆகண்டோத்கண்ட வைகுண்ட ப்ரியாணாம் கண்ட பூஷணம்।
குருணா ஜகதாமுக்தம் வ்யாப்தம் வசந பூஷணம் ॥

ஆகண்ட - கண்டத்தளவும், உத்கண்ட-ஆசையுடன்கூடின, வைகுண்ட ப்ரியாணாம் - விலக்ஷணமோக்ஷப்ரீதியுக்தரான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு, கண்ட பூஷணம் - (மங்களஸூத்ரம்போலே) கண்டாபரணமான (அதாவது ஸதாநுஸந்தாந யோக்யமென்றபடி), ஜகதாம் - உலகத்திற்கு, குருணா - ஆசார்யரான பிள்ளைலோகாசார்யராலே, உக்தம் - சொல்லப்பட்ட, வ்யாப்தம் - எங்கும் வ்யாபித்த, வசநபூஷணம் - ஸ்ரீவசநபூஷணமென்கிற ரஹஸ்யக்ரந்தத்தை, (வந்தே - ஸேவிக்கிறேன்.)

15. பேறு தருவிக்குமவள் தன் பெருமை யாறு பெருவான்முறை
யவன்கூறுகுருவைப்பனுவல் கொள்வதிலையாகியகுளிர்ந்தவருள் தான்
மாறில் புகழ்நற்குருவின் வண்மையோடெலாம் வசநபூடணமதில்
தேறிட நமக்கருள் முடும்பையிறையவன் கழல்கள்சேரென்மனனே.

பேருதருவிக்குமவள்தன் பெருமை - புருடார்த்தத்தைக் கொடுக்கும்படி செய்பவளாகிய பெரியபிராட்டியாரின் வைபவமும், ஆறு - வழியும் (உபாய வைபவமும்), பெருவான்முறை - புருடார்த்தத்தைப் பெறுமவனாகிய அதிகாரியின் கிருத்தியமும், கூறுகுருவை - சிறப்பித்துக்கூறும் ஆசார்யனை, அவன் *பனுவல் - அந்த அதிகாரி துதித்துப் பணியுமியல்பும், (நல்ல சிஷ்ய லக்ஷணமும்), கொள்வதிலையாகிய - (சேதனனுடைய உபகாரமொன்றையும்) கொள்ளாதிருக்கிற, குளிர்ந்தஅருள் - சுகரூபமாகிய எம்பெருமானது நிர்ஹேதுக க்ருபையும், மாறில்புகழ் - மாறுபாடில்லாத கீர்த்தியையுடைய, நல் குருவின் வண்மையோடு - அறிவொழுக்கமுடைய ஆசார்யனது வலிமையும், எலாம் - (ஆகிய ஆறுஅர்த்தம்) அனைத்தையும், வசனபூடணமதில் - ஸ்ரீவசன பூஷணமென்ற சிறந்தநூலில், தேறிட - தெளிவாக அறிந்திட, நமக்குஅருள்-

* பனுவல் என்பதை பணிதல் என்று கொண்டால் பொருத்தமாயிருக்கும். இந்த "பேறுதருவிக்குமவள்" என்ற செய்யுள் "புருஷகார வைபவஞ்ச" என்ற ஸ்லோகத்தின் மொழிபெயர்ப்பு. அதில் "அஸ்ய ஸத்குரூப ஸேவநம்" என்பதற்கேற்ப "அவனை கூறுகுருவைப்பணிதல்" என்றிருத்தல் நன்று. ஒன்பது ப்ரகரணத்தை வகுத்துரைக்கும் செய்யுளில் "தூயமாகுருவின் பாதமாமலர் பணிபவர் தன்மையும்" என்றிருப்பதும் இத்திருத்தத்தினை வலியுறுத்தும்.

நமக்கு அருளிச்செய்த, முடும்பை இறையவன் - முடும்பைஎன்னும் பதிக்குத் தலைவராகிய பிள்ளைலோகாசார்யருடைய, கழல்கள் - திருவடிகளை, என் மனனே - என்மனமே, சேர் - அடைவாயாக.

16. திருமாமகள்தன் சீரருளேற்றமுந்,
திருமால்திருவடி சேர்வழிநன்மையும்,
அவ்வழி யொழிந்தன வனைத்தின் புன்மையும்,
மெய்வழியூன்றிய மிக்கோர்பெருமையும்,
ஆரணம்வல்லவ ரமருநன்னெறியையும்,
நாரணன்றாள் தரு நற்குருநீதியுஞ்,
சோதிவானரு டூயமாகுருவின்,
பாதமாமலர் பணிபவர்தன்மையுந்,
தீதில்வானவர் தேவனுயிர்களை,
யேதுமின்றி யெடுக்கும்படியையும்,
மன்னியவின்பமு மாகதியுங்குரு,
வென்னுநிலைபெறு மின்பொருடன்னையும்,
அசைவிலாவேத மதனுளனைத்தையும்,
வசனபூடண வழியாலருளிய,
மறையவர்சிகாமணி வண்புகழ்முடும்பை,
யிறையவனெங்கோ னேருலகாரியன்,
தேன்மலர்ச்சேவடி சிந்தைசெய்பவர்,
மாநிலத்தின்பமதெய்தி வாழ்பவரே.

திரு - பெரியபிராட்டியார், மாமகள்தன்சீர்-அந்தப்பெரியபிராட்டியாருக்கும் சீர்மையான, அருளேற்றமும் - கிருபாதிசயங்களையுரைக்கும் புருஷகார வைபவமும், திருமால் திருவடி - பெரியபிராட்டியாருக்கு நாயகனாகிய எம்பெருமானது பாதங்களை, சேர்வழிநன்மையும் - அடைவிக்கும் ஸித்தோபாயத்தின் நன்மையும், அவ்வழி ஒழிந்தன - அந்த ஸித்தோபாயத்தை ஒழிந்தனவாகிய, அனைத்தின் புன்மையும்-கர்மஞானபக்திகளாகிய உபாயங்களின் இழிவும், மெய்வழி ஊன்றிய - உண்மையான ஸித்தோபாயத்தைப்பற்றிய, மிக்கோர் பெருமையும் - சிறந்த ஸித்தோபாயநிஷ்டரின் வைபவமும், ஆரணம் வல்லவர் - பரமரஹஸ்யமான வேதாந்தார்த்தஞானமுடைய இந்த அதிகாரிகள், அமரும் - ஸ்வயம்ப்ரயோஜனமென்று வர்த்திக்கிற, நன்னெறியையும் - பொருத்தமான அநுஷ்டானவழியும், நாரணன்தாள்தரு - நாராயணன் திருவடியைக்கொடுக்கின்ற, நற்குருநீதியும் - உத்தமாசார்யலக்ஷணமும், சோதி வானவன் அருள் - ஜ்யோதிஸ்வரூபனான எம்பெருமானுடைய அருள்பெற்ற, தூயமாகுருவின் - பரிசுத்தமும் பெருமையுமுடைய ஆசார்யனது, பாதமாமலர் - திருவடிப்போதுகளை, பணிபவர் தன்மையும் - வணங்கும் உத்தமசிஷ்யர்களின் லக்ஷணமும், தீதுஇல் - தோஷமில்லாத, வானவர்தேவன் - நித்யஸூரிகளுக்கு ஸ்வாமியான எம்பெருமான், உயிர்களை - ஆத்மாக்களை, ஏதுமின்றி - ஒருகாரணமுமில்லாமல் (நிர்ஹேதுகமாக), எடுக்கும்படியையும்-ஸம்ஸாரக்கடலினின்றெடுத்துக் கரையேற்றுமுறையும், மன்னியஇன்பமும்-நிலைபெற்றஆநந்தமும், மாகதியும் - சிறந்த உபாயமும், குருவென்னும்நிலை - (திருமந்திரத்தை உபதேசித்த) ஆசார்யனே என்கிற நிஷ்டையும், பெறும் இன்

பொருள்தன்னையும்-அடையத்தக்க சிறந்த பிரயோஜனமும், ஆகியஇவைகளை யும், அசைவிலா - அசைக்கவொண்ணாத, வேதம்அதனுள் அனைத்தையும் - வேதத்தில் அடங்கிய பூர்வபாக உத்தரபாகங்களிலுள்ள எல்லா அர்த்தங்களை யும், வசனபூடணவழியாய் அருளிய - ஸ்ரீ வசனபூஷணம் என்கிற சிறந்த நூலின் வாயிலாக அருளிச்செய்த, மறையவர் சிகாமணி - வேதியருக் குச் சிரோபூஷணம்போன்றவராயும், வண்புகழ்-செழிப்பும் கீர்த்தியுமுடைய, முடும்பைஇறையவன்-முடும்பையென்னும்பதிக்குத் தலைவராயும், எம்கோன் - எங்கட்கு நாயகராயுமிருக்கிற, ஏர்உலகாரியன் - அழகியபிள்ளைலோகாசார்ய ருடைய, தேன்மலர்ச்சேவடி - தேன்பொருந்திய தாமரைமலர்போன்ற திரு வடியை, சிந்தைசெய்பவர் - மனனஞ்செய்பவர், மாநிலத்து - பெரிய நிலவுல கத்தில், இன்பம்எய்தி வாழ்பவர் - இன்பத்தைப்பெற்று வாழ்பவராவர்.

17. லோகாசார்யக்ருதே லோகஹிதே வசநபூஷணே ।
தத்வார்த்த தர்ஸிநோ லோகே தந்நிஷ்டாஸ்ச ஸுதுர்லபா: ॥

லோகஹிதே-லோகஹிதத்தின்பொருட்டு, லோகாசார்ய க்ருதே - ஸ்ரீமத் பிள்ளைலோகாசார்யராலே அருளிச்செய்யப்பட்ட, வசநபூஷணே - ஸ்ரீவசன பூஷணத்திலே, தத்வார்த்த தர்சிந: - உண்மையான அர்த்தவிசேஷங்களை ஆராய்ந்தவர்களும், தந்நிஷ்டாம்ச - அதின்படி அநுஷ்டானத்துடன் கூடின வர்களும், ஸுதுர்லபா: - மிகவும் துர்லபர்கள்.

18. ஜகதாசார்ய ரசிதே ஸ்ரீமத் வசந பூஷணே ।
தத்வஜ்ஞாநஞ்ச தந்நிஷ்டாம் தேஹி நாத யதீந்த்ர மே ॥

யதீந்த்ரநாத-யதிராஜஸ்ரேஷ்டரே, ஜகதாசார்ய - ஸ்ரீமத்பிள்ளைலோகா சார்யரால், ரசிதே - அருளிச்செய்யப்பட்ட, ஸ்ரீமத் வசநபூஷணே - ஸ்ரீமத் வசநபூஷண திவ்ய சாஸ்திரத்தின், தத்வஜ்ஞாநஞ்ச - தத்வஜ்ஞாநாதிகளை யும், தந்நிஷ்டாம் - அந்த அநுஷ்டானத்தையும், மே - எனக்கு, தேஹி - க்ருபைசெய்தருளவேணும்.

19. கோதிலுலகாசிரியன் கூரகுலோத்தம தாதர்
தீதில்திருமலையாழ்வார் செழுங்குரவை மணவாளர்
ஓதரியபுகழ்த் திருநாவுடையபிரான் தாதருடன்
போதமணவாளமுனி பொன்னடிகள்போற்றுவனே.

கோதுஇல் உலகாசிரியன் - குற்றமில்லாத பிள்ளைலோகாசிரியரையும், கூரகுலோத்தமதாதர் - கூரகுலோத்தமதாசரையும், தீதுஇல்-தீமைஇல்லாத, திருமலையாழ்வார் - திருவாய்மொழிப்பிள்ளையையும், செழுங்குரவை - செழிப்புற்ற குரவையென்னும் பதியையுடைய, மணவாளர் - கொல்லிகாவல தாஸரான அழகியமணவாளப்பெருமாளையும், ஓதரியபுகழ் - சொல்லுதற்கரிய கீர்த்தியையுடைய, திருநாவுடையபிரான் தாதருடன் - (திருவாய்மொழிப் பிள்ளையின் திருத்தகப்பனாரான) திகழக்கிடந்தான்திருநாவீறுடையபிரான் தாதரண்ணரோடு, போதமணவாளமுனி-ஞானமுடைய மணவாளமாமுனிவ ரையும், பொன்னடிகள் - திருவடிகளை, போற்றுவன் - வணங்குவேன்.

20. வாழியுலகாசிரியன் வாழியவன்மன்னுகுலம்
வாழிமுடும்பையென்னு மாநகரம்—வாழி
மனஞ்சூழ்ந்தபேரின்ப மல்குமிகுநல்லார்
இனஞ்சூழ்ந்திருக்கு மிருப்பு.

உலகாசிரியன் - பிள்ளைலோகாசார்யர், வாழி - வாழ்க, அவன்மன்னு குலம் - அவ்வாசார்யரது நிலை பேறுடையகுலம், வாழி—. முடும்பை என்னும் மாநகரம் - (பிள்ளைலோகாசார்யர் திருவவதரித்த) முடும்பையென்னும் சிறந்த நகரமும், வாழி.—மனம்சூழ்ந்த - மனத்தைச்சூழ்ந்திருக்கின்ற, பேரின்பம் மல்கும் - பேரானந்தம்நிறைந்த, மிகுநல்லார் இனம் - மிக்கநல்லோராகிய சிஷ்டர்களின் கோஷ்டி, சூழ்ந்திருக்கும் இருப்பு - சூழ்ந்திருத்தற்குரிய இருப்பிடமும், வாழி—.

21. ஓதுமுடும்பை யுலகாசிரியனருள்
ஏதுமறவாத வெம்பெருமான்—நீதி
வழுவாச்சிறுநல்லூர் மாமறையோன்பாதந்
தொழுவார்க்குவாரா துயர்.

ஓதுமுடும்பை - சிறப்பித்துரைக்கப்பட்ட முடும்பையென்னும் பதியில் திருவவதரித்த, உலகாசிரியன் அருள் - பிள்ளைலோகாசாரரது திருவருளை, ஏது மறவாத - சிறிதுமறவாதிருக்கிற, எம்பெருமான் - ஸ்ரீசைலேசராகிய திருவாய்மொழிப்பிள்ளையும், நீதிவழுவா - அறநெறியினின்றும் சிறிதும்தவறாத, சிறுநல்லூர் மாமறையோன் - சிறுநல்லூர் என்னும் பதியிலுள்ள சிறந்த அந்தணருமாகிய இவர்களது, பாதந்தொழுவார்க்கு - திருவடிகளை வணங்குகின்றவர்களுக்கு, துயர் வாரா - துன்பம்வந் தடையமாட்டா.

22. யத்ரர்ஷய: ப்ரதமஜாயே புராணா: ।

யத்ர - எந்த பரமபதத்தில், ருஷய: - (தர்ஶநாத் - ருஷி:) ருஷி என்கிற திருநாமமுடைய, ப்ரதமஜா: - முதலிலே இருப்பவர்களான, ய: - எந்த நித்யஸூரிகளோ, தே - அவர்கள், புராணா: - அநாதியாயிருக்குமவர்கள், (புராபி - நவ: - புராணா:=முன்பிலும் புதிதாகயிருப்பவர்கள்.)

23. அநாதி மாயயா ஸுப்த: யதாஜீவ: ப்ரபுத்யதே ।
அஜமநித்ர மஸ்வப்ந மத்வைதம் பு்த்யதே ததா ॥

அநாதி - காரணசூந்யையான, மாயயா - ப்ரக்ருதியினால், ஸுப்த: - உறங்குகிற, ஜீவ: - ஜீவாத்மாவானவன், யதா - எப்பொழுது, ப்ரபுத்யதே - ஜ்ஞாநவானாகிறானோ, ததா - அப்பொழுது, அஜம் - தன்னைப் பிறப்பில்லாதவனாகவும், அநித்ரம் - உறக்கமில்லாதவனாகவும், அஸ்வப்நம் - ஸ்வப்நஸூந்யனாகவும், அத்வைதம் - பரமாத்மாவுக்கும் தனக்கும் பேதமில்லாதவனாகவும், புத்யதே - அறிகிறான்.

24. மாறிமாறிப் பலபிறப்பும்பிறந் தடியையடைந் துள்ளந்தேறி
ஈறிலின்பத் திருவெள்ளம் யான் மூழ்கினன்
பாறிப் பாறி யசுரர்தம் பல்குழாங்கள் நீறெழ பாய்பறவையொன்
றேறி வீற்றிருந்தாய் யுன்னையென்னுள் நீக்கேலெந்தாய்.

பலபிறப்பும் - பலபிறவிகளிலும், மாறிமாறிப்பிறந்து - மாறிமாறி ஜநித்து, அடியை - உன் திருவடிகளை, அடைந்து - கிட்டி, உள்ளம் - மனம், தேறி - தெளிந்து, ஈறுஇல் - முடிவில்லாத, இன்பம் - ஆநந்தமாகிற, இருவெள்ளம் - பெருவெள்ளத்திலே, யான் - அடியேன், மூழ்கினன் - முழுகினேன், அசுரர்தம் - அசுரர்களுடைய, பல் - பலவகைப்பட்ட, குழாங்கள் -

(22) யஜு. அச்சி. பம் - 62, வா - 1. (23) மாண்டூக்யம், கண்-2, வா-21. (24) திருவா. 2-6-8.

கூட்டங்கள், பாறிப்பாறி - ஓடியோடி, நீறெழ - தூளியாய் எழும்படி, பாய் - பாய்கிற, ஒன்று - ஒப்பற்ற, பறவை - பெரியதிருவடியின்மேலே, ஏறி - ஆரோகணித்து, வீற்றிருந்தாய் - வீற்றிருந்தவனே, எந்தாய் - என்தந்தையே, உன்னை - உன்னை, என்னுள் - என்னெஞ்சில்நின்றும், நீங்கேல்-அகற்றாதே.

25. யாதானுமோ ராக்கையில் புக்கு அங்காப்புண்டு மாப்பவிழ்ந்தும்
மூதாவியில் தடுமாறுமுயிர் முன்னமே யதனால்
யாதானும் பற்றிநீங்கும் விரதத்தை நல்வீடு செய்யும்
மாதாவினைப் பிதுவை திருமாலை வணங்குவனே.

உயிர் - ஜீவனானது, முன்னமே - அநாதிகாலமாக, யாதானும் ஓர் - ஏதோஒரு, ஆக்கையில் - தேஹத்தில், புக்கு - பிரவேசித்து, அங்கு - அந்த தேஹத்தில், ஆப்பு உண்டும் - பந்தத்தை யடைந்தும், ஆப்பு அவிழ்ந்தும் - பந்தத்தை விட்டும், மூது - பழையதான, ஆவியில் - ஸூக்ஷ்மசரீரத்தில், தடுமாறும் - அலையாநிற்கும், அதனால் - அந்தவாசனையினால், யாதானும் - ஏதேனும் ப்ராக்ருதமானவிஷயத்தை, பற்றி - அவலம்பித்து, நீங்கும் - (பகவத்விஷயத்தைவிட்டு) அகலும்படியான, விரதத்தை - ஸங்கல்பத்தை, நல்வீடு செய்யும் - நன்றாக விடுவிப்பதை செய்தவனாய், மாதாவினை - மாதாவைப்போல் ப்ரியபரனுமாய், பிதுவை - பிதாவைப்போல் ஹிதபரனுமான, திருமாலை - ஸ்ரீய: பதியானவனை, வணங்குவன் - ஆஶ்ரயிப்பேன்.

26. அநந்தாவை வேதா: ॥

வேதா: - வேதங்கள், அநந்தாவை - எல்லையில்லாதவைகள்.

27. உயர்வற வுயர்நல முடையவன் யவனவன்
மயர்வற மதிநல மருளினன் யவனவன்
அயர்வறு மமரர்க ளதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே.

என்மனனே - என்மனமே, உயர்வு - பிறரது உயர்த்தி, அற - ஒழியும்படி, உயர் - (வாக்மனங்களுக்கு எட்டாதபடி) உயர்ந்த, நலம் - இன்பத்தை, உடையவன் - உடையவன், யவன் - எவனோ, அவன்-அந்தபுராண ப்ரஸித்தனானவனது, மயர்வு - அஜ்ஞானம், அற - நசிக்கும்படி, மதிநலம் - (இயற்கையாகிய) ஜ்ஞாநபக்திகளை, அருளினன் - அருள்செய்தவன், யவன் - யவனோ, அவன் - அவனது, அயர்வு - மறப்பு, அறும் - இல்லாத, அமரர்கள் - நித்யஸூரிகளுக்கு, அதிபதி - தலைவனாயிருப்பவன், யவன் - யவனோ, அவன் - அவனது, துயர் - துன்பங்களை, அறு - நீக்குதற்குரிய, சுடர் - (இடையறாத) ஒளியுள்ள, அடி - திருவடிகளை, தொழுது-(முக்கரணங்களாலும்) வழிபட்டு, எழு - அபிவ்ருத்தியை அடைவாயாக.

28. ப்ரத்யக்ஷமேகஞ் சார்வாகா: கணாதஸுகதௌ புந: ।
அநுமாநஞ்ச தச்சாத ஸாங்க்யாஸ் ஶப்தஞ்சதே அபி ॥
அர்த்தபத்தயா ஸஹைதாநி சத்வார்யாஹ ப்ரபாகர: ।
ந்யாயைக தேஶிநோப்யேவ முபமாநம் ப்ரசக்ஷதே ॥
அபாவ ஷஷ்டாந்யேதாநி பாட்டா வேதாந்திநஸ் ததா ।
ஸம்ப வைதிஹ்ய யுக்தாநி தாநி பௌராணி ஜகு: ॥

(25) திருவிருத்தம்-95. (26) யஜுர் - கா-1, ப்ர - 44. (27) திருவா. 1-1-1. (28)—.

சார்வாகா: - லோகாயத மதஸ்தர்கள், ப்ரத்யக்ஷம் ஏகம்-பிரத்யக்ஷமொன்றையே (ப்ரமாணமாக), ஜகு: - சொல்லுகிறார்கள். கணாதஸுகதௌ புந: - நையாயிகர்களும் பௌத்தர்களும், அநுமாநஞ்ச-அநுமானத்தையும், தச்ச-அந்த ப்ரத்யக்ஷத்தையும் ப்ரமாணமாகச்சேர்த்துச் சொல்லுகிறார்கள். ஸாங்க்யா: - கபிலமதஸ்தர்கள், ஶப்தஞ்ச-சப்தத்தையும், தேஅபி-அந்தப்ரத்யக்ஷ அநுமாநங்களையும் சேர்த்துச்சொல்லுகிறார்கள். ப்ரபாகர:-ப்ரபாகரன், அர்த்தாபத்யா ஸஹ - அர்த்தாபத்தியோடு கூட, ஏதாநி சத்வாரி - இந்த ப்ரத்யக்ஷ அநுமாந சப்த அர்த்தாபத்தி என்னும் நான்கையும் சேர்த்து, ஆஹ - சொல்லுகிறான், ந்யாயைக தேஶிந: - நையாயிகர்களில் சிலர், ஏவம் - முன்சொன்ன நான்கையும், உபமானமபி - உபமானத்தையும் சேர்த்து, ப்ரசக்ஷதே - சொல்லுகிறார்கள். பாட்டா:-பாட்டமதஸ்தர்களும், ததா - அப்படியே, வேதாந்திந: - வைதிகர்களும், ஏதாநி - முன்சொன்ன ப்ரத்யக்ஷாதி ஐந்து ப்ரமாணங்களை, அபாவஷஷ்டாநி-அபாவத்தோடு சேர்த்து ஆறு ப்ரமாணங்களாக, ஜகு: - சொல்லுகிறார்கள். பௌராணிகா: - பௌராணிகர்கள், தாநி - கீழ்ச்சொன்ன அந்த ஆறு ப்ரமாணங்களை, ஸம்பவைதிஹ்ய யுக்தாநி - ஸம்பவம் ஐதிஹ்யம் என்ற இவைகளுடன் கூடி எட்டுப்ரமாணங்களாகச் சொல்லுகிறார்கள்.

29. வேதே கர்த்ராத் யபாவாத் பலவதிஹி நயைஸ்த்வன்முகே நீயமாநே தந்மூலத்வேந மாநம் ததிதரதகிலம் ஜாயதே ரங்கதாமந் । தஸ்மாத் ஸாங்க்யம் ஸயோகம் ஸபஶுபதி மதம் குத்ரசித் பஞ்சராத்ரம் ஸர்வத்ரைவ ப்ரமாணம் ததிதமவகதம்பஞ்சமாதேவ வேதாத் ॥

ஹேரங்கதாமன் - ஓ ரங்கநாதனே, கர்த்ராத்யபாவாத் - செய்தவனில்லாமையால், பலவதி - ஸ்ம்ருதீதிஹாஸங்களைக்காட்டிலும் ப்ரபலமான, வேதே-வேதமானது, ந்யாயை: - ந்யாயங்களினால், த்வன்முகே - தேவரீரை ப்ரதிபாதிப்பதாக, நீயமாநே - அடைவிப்பிக்கப்பட்டிருந்தவளவில், ததிதரத் - அந்த வேதத்தைக்காட்டிலும் வேறான, அகிலம் - ஸமஸ்தமான (ஸ்ம்ருதி முதலியவைகள்), தந்மூலத்வேந - அந்த வேதத்தை மூலமாக உடைத்தாயிருப்பதாலே, மாநம் ஜாயதே - ப்ரமாணமாகிறது. தஸ்மாத் - ஆகையால், ஸயோகம் - யோகமதத்தோடும், ஸபஶுபதிமதம் - சைவாகமத்தோடும்கூடின, ஸாங்க்யம் - ஸாங்க்யாகமம், குத்ரசித் - சிலவிடத்திலேயே, ப்ரமாணம் - ப்ரமாணமாக ஆகிறது. பஞ்சராத்ரம் - பாஞ்சராத்ராகமமானது, ஸர்வத்ரைவ - ஸர்வாம்சத்திலும் ப்ரமாணமாகிறது. ததிதம் - இவ்வித அர்த்தமானது, பஞ்மாதேவ வேதாத்-ஐந்தாம்வேதமான பாரதத்தாலேயே, அவகதம்-அறியப்பட்டது.

30. வாசா விரூப நித்யயா ।

விரூப - அழகுள்ளவனே, நித்யயா - எப்போதுமுள்ள, வாசா - (வேத) வாக்கினால் (ஈஶ்வரனான உன்னை) அறியலாம்.

---

(29) ஸ்ரீரங்க - ஸ்தவம் - உத்தர - 14. (30) யஜு. வே. கா-2, ப்ர-6, ப-2, வா-2.

31. அநாதி நிதநா ஹ்யேஷா வாகுத்ஸ்ருஷ்டா ஸ்வயம்புவா ।
ஆதௌ வேதமயீ திவ்யா யதஸ்ஸர்வா: ப்ரஸூதய: ॥

யத: - எந்த வாக்கினால், ஸர்வா: - ஸமஸ்தமான, ப்ரஸூதய: - ஜந்மங்களும் (ஸகல ஜகத்தின் ஸ்ருஷ்டிகளும் அறியப்படுகிறதோ அந்தவேதம்), அநாதிநிதநா - உத்பத்தி விநாஶங்க ளற்றதாய், திவ்யா - ப்ரமாணாந்தரங்களைக் காட்டிலும் விலக்ஷணையாய், வேதமயீ - வேதஸ்வரூபமான, ஏஷா - இந்த, வாக் - வேதமானது, ஆதௌ - ஸ்ருஷ்டி காலத்தில், ஸ்வயம்புவா - ஸ்வயமாகவே, உத்ஸ்ருஷ்டா - ஸர்வேஶ்வரனால் உண்டாக்கப்பட்டது.

32. ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்ய முத்ருத்ய புஜமுச்யதே ।
வேத ஶாஸ்த்ராத் பரம் நாஸ்தி நதைவம் கேஶவாத் பரம் ॥

வேத சாஸ்த்ராத்-வேதமாகிற சாஸ்திரத்தைக்காட்டிலும், பரம்-மேலான ப்ரமாணம், நாஸ்தி - கிடையாது, கேஶவாத் - கேஶவனைக்காட்டிலும், பரம் - மேலான, தைவம் - தேவதை, நாஸ்தி - கிடையாது (என்பது), ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்யம் - மூன்று தடவை உண்மை உண்மை உண்மை (என்று) புஜம்-கையை, உத்ருத்ய-தூக்கிக்கொண்டு, உச்யதே - (வ்யாஸரால் ப்ராமாண பூர்வகமாக) சொல்லப்படுகிறது.

33. திடவிசும் பெரிவளி நீர்நில மிவைமிசை
படர்பொருள் முழுவது மா யவையவைதொறும்
உடன்மிசை யுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்
சுடர்மிகு சுருதியு ளிவையுண்ட சுரனே.

திடம் - கனவையுடைத்தான, விசும்பு - ஆகாசமும், எரி - அக்நியும், வளி - வாயுவும், நீர் - ஜலமும், நிலம் - பூமியும், இவைமிசை - இவையாஶ்ரயமாகக்கொண்டு, படர் - பரந்த, பொருள்முழுவதும் - பௌதிக பதார்த்தங்களுமெல்லாம், ஆய்-தானும்படி (அவற்றுக்கு உபாதாநமாய்), அவையவைதொறும்-அவ்வோபதார்த்தங்கள்தோறும், உடன்மிசை - சரீரத்தில், உயிரென-ஆத்மா வ்யாபிக்குமாபோலே, கரந்து - மறைந்து வ்யாபித்து, எங்கும் பரந்து - இப்படி ஸகல பதார்த்தங்களிலும் நுழைந்து, சுடர் - ஸ்வத: ப்ரமாண்யௌஜ்வல்யத்தாலும், மிகு - மிக்கிருப்பதாய், சுருதியுள் - கேள்வியாலே வருவிக்கப்படுவதான ஸ்ருதியினுடைய, உளன் - உள்ளான பொருளாய்க்கொண்டு தோற்றுமவன், இவையுண்ட - (இப்பதார்த்தங்களை ஸம்ஹாரக் காலத்திலே) தன்னுள்ளே விழுங்கின, சுரன் - தேவ ஶப்த வாச்யன்.

34. ஆதௌ வேதா: ப்ரமாணம் ஸ்ம்ருதிருபகுருதே ஸேதிஹாஸை: புராணைர் ந்யாயைஸ் ஸார்த்தம் த்வதர்ச்சாவிதிமுபரி பரிக்ஷீயதே பூர்வபாக: । ஊர்த்வோ பாகஸ் த்வதீஹாகுண

(31) மநுஸ்ம்ருதி. (32) ஹரி-சேஷ-2-15. (33) திருவா. 1-1-7. (34) ஸ்ரீர - ஸ்த - உத் - 19

விஹவ பரிஜ்ஞாபனைஸ் த்வத்பதாப்தௌ வேத்யோ வேதைஸ்ச
ஸர்வை ரஹமிதி பகவந் ஸ்வேநச வ்யாசகத்த ॥

ஹே பகவந் - ஓ பகவானே, வேதாः - வேதங்கள், ஆதௌ - முதலடியில், ப்ரமாணம் - ப்ரமாணமாகின்றன, ஸ்ம்ருதிः - மந்வாதி ஸ்ம்ருதிகள், ஸேதிஹாஸைः - ஸ்ரீராமாயணம் முதலான இதிஹாஸங்களோடுகூடிய, புராணைः- ஸ்ரீவிஷ்ணு புராணாதிகளோடும், ந்யாயைஸ் ஸார்த்தம் - பூர்வோத்தர மீமாம்ஸைகளோடும், உபகுருதே - உபகரிக்கிறது. பூர்வபாகः - (அந்த வேதத்தில்) கர்மகாண்டமானது, த்வதர்ச்சாவிதிம் உபரி - தேவரீரது ஆராதந விதியில், பரிக்ஷீயதே - ஒன்றுவிடாமல் பர்யவஸிக்கிறது. ஊர்த்வோ பாகः - மேலான ப்ரஹ்ம பாகமானது, த்வதீஹாகுண விபவ பரிஜ்ஞாபனைः - தேவரீருடைய ஸ்ருஷ்டி முதலிய வ்யாபாரங்கள், (ததநுகுண ஜ்ஞாந ஶக்த்யாதிகள் இவைகளை நன்றாய்த் தெரிவிப்பதால்), த்வத்பதாப்தௌ - தேவரீர் திருவடிகளைச் சேருகிறதில் [பரிக்ஷீயதே - பர்யவஸிக்கிறது]. ஸர்வைः - ஸமஸ்தங்களான, வேதைः - வேதங்களால், அஹம் - நான், வேத்யः - அறிவிக்கப்படுமவன், இதி - என்று, ஸ்வேநச - தேவரீர்முகமாகவும், வ்யாசகத்த - வெளியிட்டருளிற்று.

35. அதாதோ தர்ம ஜிஜ்ஞாஸா ।

அதः - வேதாத்யயனமானபிறகு, அதः - அதேகாரணத்தினால், தர்ம ஜிஜ்ஞாஸா - தர்மத்தையறிய விருப்பம், (கர்த்தவ்யா - செய்யவேண்டும்).

36. அதாதோ ப்ரஹ்ம ஜிஜ்ஞாஸா ।

அதः - வேதத்தின் பூர்வபாகமாகிய கர்ம காண்டங்களின் அர்த்தத்தை விசாரித்தபிறகு, அதः - கர்மபலங்கள் அற்பமென்றும் அஸ்திரமென்றும் ஜ்ஞாநமுடையவனானதால், ப்ரஹ்ம ஜிஜ்ஞாஸா - ப்ரஹ்மத்தினுடைய விசாரத்தில் இச்சை, (கர்த்தவ்யா - செய்யவேண்டியது).

36.* ஸ ஆத்மா அங்காந்யா தேவதாः ।

ஸः - அந்த (பரமாத்மாவானவன்), ஆத்மா - ப்ராணன், அந்யாதேவதாः- மற்றதேவதைகள், அங்காநி - (பரமாத்மாவுக்கு) ஶரீரங்கள்.

37. யே யஜந்தி பித்ரூந் தேவாந் ப்ராஹ்மணாந் ஸஹுதாஸநாந் ।
ஸர்வ பூதாந்தராத்மாநம் விஷ்ணுமேவ யஜந்தி தே ॥

யே - எவர்கள் ஸஹுதாஸநாந் - அக்நிஹோத்ராதிகளுடன் கூடிக்கொண்டு, பித்ரூந் - பித்ருக்களையும், தேவாந் - தேவதைகளையும், ப்ராஹ்மணாந் - ப்ராஹ்மணர்களையும் (குறித்து), யஜந்தி - ஆராதிக்கிறார்களோ, தே - அவர்கள், ஸர்வபூதாந்தராத்மா - ஸர்வபூதாந்தர்யாமியான, விஷ்ணுமேவ - ஸர்வவ்யாபியான ஸ்ரீமந்நாராயணனையே, யஜந்தி-ஆராதித்தவர்களாகிறார்கள்.

(35) பூர் - மீ - 1 - 1 - 1. (36) உத் - மீ - 1 - 1 - 1. (36*) தை. உபநிஷ. அநு. (37) தக்ஷஸ்ம்ருதி.

37.* யேப்யந்ய தேவதா பக்தா யஜந்தே ஶ்ரத்தயாந்விதா: ।
தேபி மாமேவ கௌந்தேய யஜந்த் யவிதி பூர்வகம் ॥

யேது - யவர்கள், அந்யதேவதா பக்தா: - இதர தேவதைகளுக்கு பக்தர்களாய், ஶ்ரத்தயாந்விதா: - ஶ்ரத்தையோடு கூடினவர்களாய், யஜந்தே-யாகம் செய்கிறார்களோ, தேஅபி - அவர்களும், (ஹே) கௌந்தேய - ஓ குந்தீபுத்ரா, அவிதிபூர்வகம் - அஶாஸ்திரமாக, மாம்ஏவ - என்னைக்குறித்தே, யஜந்தி - யாகம் செய்கிறார்கள்.

38. த்வதர்ச்சாவிதிம் ... ... 34-வது இலக்கம் காண்க.

39. இதிஹாஸ புராணாப்யாம் வேதம் ஸமுப ப்ரும்ஹயேத் ।
பிபேத் யல்பஶ்ருதாத் வேதா மாமயம் ப்ரதரிஷ்யதி ॥

இதிஹாஸ புராணப்யாம் - இதிஹாசங்களாலும் புராணங்களாலும், வேதம் - வேதத்தை (வேதார்த்தத்தை), ஸமுபப்ரும்ஹயேத் - விஸ்தரிக்க வேண்டியது, வேத: - வேதமானது, அல்பஶ்ருதாத் - கொஞ்சம் தெரிந்தவனிடமிருந்து, அயம் - இவன், மாம் - என்னை, ப்ரதரிஷ்யதி - வஞ்சிப்பானென்று, பிபேதி - பயப்படுகிறது.

40. ப்ராயேண பூர்வபாகார்த்த பூரணம் தர்மஶாஸ்த்ரத: ।
இதிஹாஸ புராணாப்யாம் வேதாந்தார்த: ப்ரகாஶ்யதே ॥

ப்ராயேண - பெரும்பாலும், பூர்வபாகார்த்த - (வேதத்தினுடைய பூர்வபாகமான ஆராதனஸ்வரூப) அர்த்தத்தை, தர்மஶாஸ்த்ரத: - ஸ்ம்ருதிகளைக் கொண்டுதான், பூரணம் - நிர்ணயஞ் செய்பவேண்டும், வேதாந்தார்த்த: - (வேதத்தினுடைய உத்தரபாகமான) ஆராத்ய ஸ்வரூபத்தை, இதிஹாஸ புராணப்யாம் - இதிஹாஸ புராணங்களைக்கொண்டுதான், ப்ரகாஶ்யதே - ப்ரகாசப்படுத்தவேண்டும்.

41. வேத வேத்யே பரே பும்ஸி ஜாதே தஶரதாத்மஜே ।
வேத: ப்ராசேதஸாதாஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மநா ॥

வேத: - வேதத்தால், வேத்யே - அறியவேண்டிய, பரேபும்ஸி - பரம புருஷனாகிய ஸ்ரீமந் நாராயணன், தசரதாத்மஜே - தசரதனுக்கு திருக்குமாரனாய், ஜாதே - அவதரிக்கவே, வேத: - வேதங்களானவை, ப்ராசேதஸாத் - ப்ரசேதஸ்ஸின் குமாரனான வால்மீகி மஹரிஷியினிடத்தினின்றும், ஸாக்ஷாத் ராமாயணாத்மநா - ராமாயண ஸ்வரூபமாக, ஆஸீத் - உண்டாயிற்று.

42. மதிமந்தாந மாவித்ய யேநாஸௌ ஶ்ருதி ஸாகராத் ।
ஜகத் ஹிதாய ஜநிதோ மஹாபாரத சந்த்ரமா: ॥

யேந - எந்த வ்யாசராலே, ஸ்ருதிஸாகராத் - வேதமாகிற சமுத்திரத்தினின்றும், மதிமந்தாநம் - புத்தியென்கிற மத்தையிட்டு, ஆவித்ய - கடைந்து,

(37*). ஸ்ரீகீதை, 9 - 23. (39, 40) பார்ஹஸ்பத்யஸ்ம்ருதி.
(41) ஸ்காந்தம். (42) வாயுப்ரோக்தசைவேஷு.

ஜகத் ஹிதாய - லோக ஹிதத்தின்பொருட்டு, அஸௌ - இந்த, மஹாபாரத சந்த்ரமா: - ஸ்ரேஷ்ட்டமான பாரதசந்திரனே, ஜநித: - உண்டாக்கப்பட்டது.

43. வ்யாஸ வாக்ய ஜலௌகேந குதர்ம தருஹாரிணா ।
வேத ஶைலாவதீர்ணேந நீரஜஸ்கா மஹீக்ருதா ॥

வேதஶைல - வேதமென்கிற பர்வதத்தினின்றும், அவதீர்ணேந-பிறந்த, குதர்ம - அதர்மமாகிற, தரு - மரங்களை, ஹாரிணா - போக்கடிக்கத்தக்க, வ்யாஸவாக்ய - வ்யாஸருடைய வாக்யங்களாகிற, ஜலௌகேந - ஜலத்தால், மஹீ - பூமியை, நீரஜஸ்க்ருதா - (அஜ்ஞாநமாகிற அழுக்கு) அற்றதாகச் செய்யப்பட்டது.

43.* பிபேதி கஹநாச் சாஸ்த்ராந் நரஸ் தீவ்ராதி வௌஷதாத்।
பாரதஸ் சாஸ்த்ர ஸாரோஅயமத: காவ்யாத்மநா க்ருத: ॥

ய: நர: - எந்த நரன், தீவ்ராத் - க்ரூரமான, ஔஷதாத் இவ - மருந்தைப்போல, கஹநாத் - அறியமுடியாத, சாஸ்த்ராத் - சாஸ்திரத்தினின்றும், பிபேதி - பயப்படுகிறான். அத: - ஆகையால், அயம் - இந்த, சாஸ்த்ரஸார:- சகலசாஸ்திர சாரமான, பாரத: - பாரதமானது, காவ்யாத்மநா - காவ்யரூபமாக, க்ருதா - செய்யப்பட்டது.

43.* விஷ்ணௌ வேதேஷு வித்வத்ஸு குருஷு ப்ராஹ்மணேஷு ச। பக்திர் பவதி கல்யாணீ பாரதாதேவ தீமதாம் ॥

தீமதாம் - புத்திமான்களுக்கு, விஷ்ணௌ - (ஸர்வவ்யாபகனான) ஸ்ரீமந் நாராயணனிடத்திலும், வேதேஷு - அவனை ப்ரதிபாதிக்கிற வேதங்களிடத்திலும், வித்வத்ஸு - அவற்றின் அர்த்தங்களை அறிந்தவர்களிடத்திலும், குருஷு - அவற்றை உபதேசிக்கிற ஆசார்யர்களிடத்திலும், ப்ராஹ்மணேஷு ச - ப்ரஹ்மநிஷ்டர்களிடத்திலும், பாரதாதேவ-மஹாபாரதத்தினாலேயே, கல்யாணீ - சுபகரமான, பக்தி: - பக்தியானது, பவதி - உண்டாகிறது.

44. யஸ்மிந் கல்பேது யத் ப்ரோக்தம் புராணம் ப்ரஹ்மணாபுரா ।
தஸ்ய தஸ்யது மாஹாத்ம்யம் தத்ஸ்வரூபேண வர்ண்யதே ॥

புரா - பூர்வகாலத்தில், யஸ்மிந் கல்பேது-எந்த கல்பத்திலே, ப்ரஹ்மணா-ப்ரஹ்மாவினாலே, யத்புராணம் ப்ரோக்தம் - (எந்த குணம் தலையெடுத்த போது) எந்த புராணம் சொல்லப்பட்டதோ, தஸ்யஸ்யது - அந்தந்த (ஸாத்விக ராஜஸ தாமஸ) தேவதைகளுடைய, மாஹாத்ம்யம் - மஹிமையானது தத்ஸ்வரூபேண-அந்தந்த குணநுகுணமாகவே, வர்ண்யதே-சொல்லப்பட்டது.

45. அயேதிஹாஸ புராணயோ ரிதிஹாஸா பலீயாம்ஸ:
குத: பரிக்ரஹாதி ரேகாத் ஸர்வத்ர மாத்யஸ்த்யேந ।
ஸூதார்த்த ப்ரதீதே: வசந ஸௌஷ்டவேந கர்த்து ராப்தமத்வாவகதேஶ்ச ॥

(43) மார்க்கண்டேய புராணம். (43*) (43*) பவிஷ்யத் புராணம்.
(44) மாத்ஸ்ய புராணம். (45) தத்வநிர்ணயம்.

அத: - பிறகு, இதிஹாஸ புராணயோ:—இதிஹாஸ புராணங்க ளிரண்டிலும், இதிஹாஸா - இதிஹாஸங்கள், பலீயாம்ஸ: - ப்ரபலங்கள், குத: - ஏனென்றால், தேஷாம் - அந்த இதிஹாஸங்களை, பரிக்ராஹாதிரேகாத்-விஸேஷமாய் அங்கீகரிக்கப்பட்டதினாலும், ஸர்வத்ர மாத்யஸ்த்யேந - லௌகிக வைதிக விஷயங்களிலும் நடுநிலைமையால், பூதார்த்த ப்ரதீதே: - முன்னடந்த விஷயங்களைச்சொல்லுகையாலும், வசந ஸௌஷ்டவேந - நன்றாய் ஒன்றுசேரக்கூடிய வாக்கியங்களால், கர்த்ரு: - செய்தவர்கள், ஆப்ததமத்வாவகதேஸ்ச - நம்பத்தக்கவர்களா யிருப்பதாலும், (ப்ரபலங்கள்).

46. மஹாபாரதம்ஹி பரிக்ரஹ விஸேஷாவஸிதம் ।

மஹாபாரதம் ஹி - மஹாபாரதமானது, பரிக்ரஹ விஸேஷாவஸிதம் - புராணங்களாலே மிகவும் அங்கீகரிக்கப்பட்டது.

47. தர்மேசார்த்தேச காமேச மோக்ஷேச பரதர்ஷப ।
யதிஹாஸ்தி ததந்யத்ர யந்நேஹாஸ்தி நதத் க்வசித் ॥

பரதர்ஷப - ஹே தர்மபுத்திரரே, தர்மேச அர்த்தேச காமேச மோக்ஷேச - தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷம் (ஆகிய இவைகளில்), யத் - யாதொன்றானது, அந்யத்ர - இந்த பாரதத்திற்கு வேறான வேதங்களில், அஸ்தி - இருக்கிறதோ, தத் - அதுவானது, இஹ - இந்த பாரதத்தில், அஸ்தி - இருக்கிறது.

48. இதிலௌகிக வைதிக ஸகலார்த்த நிர்ணயாதி க்ருதத்வேந ।
க்வசிதபி அபக்ஷபாதித்வாச்ச புராணேப்யோ பலவத்தரம் ॥

இதி - (ஸகல வேதத்திலுள்ள அர்த்தங்களும் மஹா பாரதத்திலுள்ளது) என்று, வைதிக (அர்த்த)-வேதத்திலுள்ள அர்த்தங்களையும், லௌகிக (அர்த்த)- உலகத்திலுள்ள அர்த்தங்களையும், ஸகலார்த்த - இன்னும் மற்றுமுள்ள ஸகலார்த்தங்களையும், நிர்ணயாதி க்ருதத்வேந - நிர்ணயிப்பதற்கு ஏற்பட்டிருப்பதால், க்வசிதபி - ஒருவிடத்திலும், அபக்ஷபாதித்வாச்ச - பக்ஷபாதமில்லாமையாலும், புராணேப்யோ - புராணங்களைக் காட்டிலும், பலவத்தரம் - மிகவும் மேலான ப்ரமாணம்.

49. இதிஹாஸ புராணம் பஞ்சமம் ।

இதிஹாஸ - இதிஹாஸ (ஸ்ரீராமாயண மஹாபாரத)ங்களும், புராண - 18-புராணங்களும், பஞ்சமம் - ஐந்தாவது (வேதமாகச் சொல்லப்படுகிறது.)

50. இதிஹாஸ புராணாப்யாம்...39, 40-வது இலக்கம் காண்க.

51. இதிஹாஸாஸ்ச புராணாநிச இதிஹாஸ புராணாநி ஸ்ம்ருதயஸ்ச
இதிஹாஸ புராணாநிச ஸ்ம்ருதீதிஹாஸ புராணாநி ।

இதிஹாஸாஸ்ச - இதிஹாஸங்களையும், புராணாநிச - புராணங்களையும் (சேர்த்து), இதிஹாஸபுராணாநி - இதிஹாஸ புராணங்கள் (என்று ஒரே பத

(46, 47, 48,) ஸஹஸ்ரநாமபாஷ்ய. (49) சா - உ. 7 - 21. (51)

மாகச் சொல்லப்படும்), ஸ்ம்ருதயஸ்ச - ஸ்ம்ருதிகளையும், இதிஹாஸ புராண நிச - இதிஹாஸ புராணங்களையும் (சேர்த்து), ஸ்ம்ருதீதிஹாஸ புராணநி - ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்கள். (என்று ஒரே பதமாகச் சொல்லப்படும்).

52. வால்மீகயே மஹர்ஷயே ஸந்திதேஸாஸநம் ததः ।
ப்ரஹ்மணா ஸமநுஜ்ஞாதஸ்ஸோப்யுபாவிஸதாஸநே ॥

மஹர்ஷயே - உத்தம ரிஷியான, வால்மீகயே - வால்மீகியைக் குறித்து, ஆஸநம் - ஆஸநத்தை, ஸந்திதேச - (ப்ரஹ்மாவானவன்), கொடுக்க, ததः - பிறகு, ஸோபி - அந்தவால்மீகி, ப்ரஹ்மணா - சதுர்முகனான ப்ரஹ்மாவாலே, ஸமநுஜ்ஞாதः - அநுஜ்ஞை பெற்றவராய், ஆஸநே - ஸிம்ஹாஸநத்தில், உபாவிஸத் - உட்கார்ந்தார்.

53. நதே வாகந்ருதா காவ்யே காசிதத்ர பவிஷ்யதி ।
குரு ராமகதாம் புண்யாம் ஸ்லோகபத்தாம் மநோரமாம் ॥

தே - உன்னுடைய, அத்ர - இந்த (ஸ்ரீராமாயணமாகிற), காவ்யே - காவ்யத்தில், காசித் - ஒன்றுகூட, அந்ருதா - பொய்யாக, நபவிஷ்யதி - ஆகப் போகிறதில்லை, ராமகதாம் - ஸ்ரீராம கதையை, புண்யாம் - புண்யமாயும், மனோரமாம் - மனதிற்கு இனிமையாயுமிருக்கிற, ஸ்லோகபத்தாம் - ஸ்லோகரூபமாய், குரு - செய்வாயாக.

54. யாவத் ஸ்தாஸ்யந்தி கிரயஸ் ஸரிதஸ்ச மஹீதலே ।
தாவத்ராமாயண கதா லோகேஷு ப்ரசரிஷ்யதி ॥

மஹீதலே - பூமியில், கிரயः - மலைகளும், ஸரிதஸ்ச - நதிகளும், யாவத்- எவ்வளவு காலம், ஸ்தாஸ்யந்தி - இருக்கிறதோ, தாவத் - அவ்வளவு காலம், ராமாயண கதா - ஸ்ரீராமாயண கதையானது, லோகேஷு - உலகமெல்லாம், ப்ரசரிஷ்யதி - பரவியிருக்கப் போகிறது.

55. வேத வேத்யே.........41-வது இலக்கம் காண்க.

56. தளிர்நிறத்தால் குறைவில்லாத் தனிச்சிறையில் விளப்புற்ற
கிளிமொழியாள் காரணமாக் கிளரரக்கன் நகரெரித்த
களிமலர்த் துழாயலங்கல் கமழ்முடியன் கடல்ஞாலத்
தளிமிக்கான் கவராத வறிவினால் குறைவிலமே.

தளிர் நிறத்தால் - தளிர்போன்ற நிறத்தினால், குறைவு இல்லா - குறைவற்ற, தனிச்சிறையில் - தனிமையான சிறையில், விளப்புற்ற - ப்ரஸித்தையான, கிளிமொழியாள் - கிளிமொழிபோலே இனிய மொழியையுடைய பிராட்டி, காரணமா - காரணமாக, கிளர் - அநீதியாலே கிளர்ச்சியையுடையனை, அரக்கன் - ராவணனுடைய, கிளர்நகர் - சம்பத்து நிறைந்த நகரமாகிய இலங்கையை, எரித்த - நெருப்புக்கு இரையாக்கினவராய், (மீண்டுவந்து முடிசூடி), களி - தேனையுடைத்தாய், மலர் - மலர்ந்த, துழாய் அலங்கல் - திருத்

---

(52) ரா. பா. 2. 26 (53) ரா-பா-2-35. (54) ரா. பா. 2-37.
(56) திருவா. 4-8-5

துழாய் மாலையாலே, கமழ் - பரிமளிக்கிற, முடியன் - திருவபிஷேகத்தை யுடையவராய், கடல் ஞாலத்து - கடல் சூழ்ந்த பூமியிலே, அளிமிக்கான் - க்ருபை மிஞ்சும்படி எழுந்தருளியிருந்தவன், கவராத - விரும்பாத, அறிவினால் - அறிவால், குறைவு இலம் - ஒரு காரியமுடையோமல்லோம்.

57. எளிவரு மியல்வின னிலைவரம்பில பலபிறப்பாய்
ஒளிவரு முழுநல முதலில கேடிலவீடாம்
தெளிதரு நிலைமைய தொழிவிலன் முழுவதுமிறையோன்
அளிவரு மருளினோ டகத்தனன் புறத்தனனமைந்தே.

நிலை - ஒரு நிலையும், வரம்பு - ஒரு கட்டளையும், இல - இல்லாத, பல - பலவகைப்பட்ட, பிறப்பு ஆய் - பிறவிகளையுடையனாய், முதல் இல - முதல் இன்றியும், கேடு இல - அழிவு இன்றியும் உள்ள, முழுநலம் - மங்கள குணங்களெல்லாம், ஒளிவரும் - விளங்குகின்ற, எளிவரும் - எளிமை தோற்றுகிற, இயல்வினன் - இயற்கையை உடையவனாய், வீடாம் - மோக்ஷமாகிற, தெளிதரும் - தெளிவைத் தருகிற, அது நிலைமை - அந்த நிலைமையை, முழுவதும் - முழுதும், ஒழிவிலன் - நீக்கமில்லாதவனான, இறையோன் - ஸ்வாமியாய், அளிவரும் - உபகார இயற்கையாகிய, அருளினோடு - அருளோடே, அமைந்து - சமைந்து, அகத்தனன் - அடியவர்க்கு உள்ளே இருப்பவனாய், புறத்தனன் - அல்லாத பிறருக்குப் புறத்தினனா யிருப்பன்.

58. யத்யஸ்தி பதிஶுஶ்ரூஷா யத்யஸ்தி சரிதம்தப: ।
யதிசாஸ்த்யேகபத்நீத்வம் ஶீதோபவ ஹநூமத: ॥

பதி ஶுஶ்ரூஷா - (நான்) என் பர்த்தாவுக்குப் பணிவிடை செய்வது, யதி அஸ்தி - இருப்பதும், சரிதம் தப: யதி அஸ்தி - தவமநுஷ்டிப்பதும், ஏகபத்நீத்வம் யதிச அஸ்பதி - ஒருவனுக்கே பத்நியாயிருப்பதும் (உண்மையாக இருக்குமேயானால்), ஹநூமத: - ஹநுமாருக்கு, ஶீதோ பவ - குளிர்ந்திருக்க வேண்டும்.

59. நஷ்டோ பவ ।
நஷ்டமடைய வேண்டும்.

60. காவ்யம் ராமாயணம் க்ருத்ஸ்நம் ஸீதாயாஶ் சரிதம் மஹத் ।
பௌலஸ்த்ய வத மித்யேவ சகார சரித வ்ரத: ॥

ராமாயண - ஸ்ரீராமாயண, காவ்யம் - காவியம், க்ருத்ஸ்நம்-முழுவதும், மஹத் - அதிகமாகவும் ப்ரதாநமாகவும், ஸீதாயா: - பிராட்டியினுடைய, சரிதம் - சரித்ரமே, (இருக்கிறது). சரித வ்ரத: - ஆசரிக்கப்பட்ட வ்ரதங்களையுடைய (வால்மீகி பகவான்), பௌலஸ்த்யவதம் - புலஸ்தியருடைய வம்ஶஸ்தனான இராவண வதம், இத்யேவ - என்றே, சகார - செய்தார்.

61. உத்பாஹுஸ் த்வாமுபநிஷத ஸாவாஹநைகா நியந்த்ரீம்
ஸ்ரீமத் ராமாயணமபி பரம் ப்ராணிதி த்வச்சரித்ரே ।

(57) திருவா. 1-3-2. (58) ரா-ஸு-53-29. (59 (60) ரா. பா. 4 - 7. (61) ஸ்ரீகுண. 14.

ஸ்மர்த்தாரோ அஸ்மஜ் ஜநநி யதமே ஸேதிஹாஸை:
புராணைர் நிந்யுர்வேதாநபிச ததமே த்வந் மஹிம்நி ப்ரமாணம் ॥

ஹே அஸ்மத் ஜநநி - ஓ எங்கள் தாயே, அஸௌ-இந்த, ஏகா உபநிஷத் ஸ்ரீஸூக்தமென்கிற ஒரு உபநிஷத் மாத்திரம், உத்பாஹு:-கையைத் தூக்கிக் கொண்டு, த்வாம் - உம்மை, நியந்த்ரீம் - ஜகத்துக்கு ஈஸ்வரியாக, நாஹ - சொல்லவில்லை, (ஆனால்), ஸ்ரீமத் ராமாயணமபி-ஸ்ரீமத்ராமாயணமும், த்வத் சரித்ரே - தேவரீர் சரித்திரத்திலேயே, பரம் ப்ராணிதி-மிகவும் ஜீவிக்கிறது, (ஸ்ரீராமாயணம் தேவரீர் வைபவத்தைச்சொல்லியே ஜீவியா நின்றது), யதமே-எவர்கள், ஸ்மர்த்தார: - ஸ்ம்ருதி செய்தவர்களோ, ததமேபிச - அவர்களும், வேதாந் - வேதங்களை, ஸேதிஹாஸை: புராணை: - இதிஹாஸங்களோடு கூடிய புராணங்களோடு, த்வந் மஹிம்நி - தேவரீர் மஹிமையில், ப்ரமாணம் நிந்யு: - ப்ரமாணங்களாகக் காண்பித்தார்கள்.

62. க்ருஷ்ண த்வைபாயநம் வ்யாஸம் வித்தி நாராயணம் ப்ரபும் ।
கோஹ்யந்யோ புவி மைத்ரேய மஹாபாரதக்ருத் பவேத் ॥

க்ருஷ்ண த்வைபாயநம் வ்யாஸம் - க்ருஷ்ணத்வைபாயநரென்னும் பெயருடைய வ்யாஸ மஹரிஷியை, ப்ரபும் நாராயணம் வித்தி - ஸ்வாமியான நாராயணனென்று தெரிந்துகொள், மைத்ரேய - மைத்ரேயரே! புவி - இந்த பூமியில், கோஹ்யந்ய: - மற்றவர் யார்தான், மஹாபாரத க்ருத் பவேத்-மஹா பாரதம் செய்தவராக ஆவார்.

63. ஏவம் விதம் பாரதந்து ப்ரோக்தம் யேந மஹாத்மநா ।
ஸோயம் நாராயணஸ் ஸாக்ஷாத் வ்யாஸரூபி மஹாமுநி: ॥

ஏவம் விதம் - இப்படிப்பட்ட, பாரதந்து - பாரதமானது யேந - எந்த, மஹாத்மநா - மஹாத்மாவால், ப்ரோக்தம் - செய்யப்பட்டதோ, ஸோயம் - அந்த, வ்யாஸரூபி - வ்யாஸரூபத்தையுடைய, மஹாமுநி: - மஹ ரிஷியை ஸாக்ஷாத் நாராயண: - ஸாக்ஷாத் ஸ்ரீமந்நாராயணன் (என்று அறியவேண்டும்).

64. ஸஹோவாச வ்யாஸ: பாராஸர்ய: ।

பாராஸர்ய: - பராசர மஹரிஷியினுடைய குமாரரான, ஸஹ - அந்த, வ்யாஸ: - வ்யாஸ மஹரிஷியானவர், உவாச - சொன்னார்.

65. வேதாநத்யாபயாமாஸ மஹாபாரத பஞ்சமாந் ।

மஹாபாரத - மஹாபாரதமாகிய, பஞ்சமாந் வேதாந் - ஐந்தாவது வேதத்தை, அத்யாபயாமாஸ - சொல்லி வைத்தார்.

66. ஸ்ரீராமாயணவத் மஹாபாரதம் ஸரணம் ।

ஸ்ரீராமாயணவத் - ஸ்ரீராமாயணத்தைப்போல், மஹாபாரதம் - ப்ரமாணதமமான மஹா பாரதமும், ஸரணம் - (நமக்கு) உபாயம் (என்றதாயிற்று).

---

(62) வி. 4. 3-4 5 (63) (64) ஆரணம். ப்ர. 1. அநு. 8.
(65) பாரதம். (66) ஸஹஸ்ரநாம பாஷ்யம்,

67. முன்னோர் தூது வானரத்தின் வாயில் மொழிந்து அரக்கன்
மன்னூர் தன்னைவாளியினால் மாளமுனிந்து அவனே
பின்னோர்தூ தாதிமன்னர்க்காகிப் பெருநிலத்தார்
இன்னார் தூதனென நின்றா னெவ்வுள் கிடந்தானே.

முன் - ராமாவதாரத்திலே, ஓர் - அத்விதீயமான, தூது - தூதவாக்யத்தை, வாநரத்தின் - திருவடியினுடைய, வாயில் - வாயாலே, மொழிந்து - சொல்லியனுப்பி, அரக்கன் - ராக்ஷஸனான ராவணன், மன்னு - பொருந்தி வர்திக்கிற, ஊர்தன்னை - லங்கையை, வாளியினால் - அம்பாலே, மாள - நசிக்கும்படியாக, முனிந்து - சீறியருளினவனாய், அவனே - அந்த சக்ரவர்த்தித் திருமகன்றானே, பின் - க்ருஷ்ணாவதாரத்தில், ஆதிமன்னர்க்கு - ப்ரதாந ராஜாக்களான பாண்டவர்க்கு, ஓர் தூதாகி - ஓர் தூதனாய், பெருநிலத்தார் - பெரிய பூமியிலுள்ளார், இன்னார் தூதன் என - இவன் பாண்டவதூதன் என்னும்படி, நின்றான் - (அர்ஜுநனுடைய தேர்முன்னே) நின்றவனே, எவ்வுள் - திருவெவ்வுள் (என்னும் பதியில்), கிடந்தான் - சயனத்திருக்கோலமாக எழுந்தருளியிருக்கிறான்.

68. போதார் தாமரையாள் புலவிக்குல வானவர்தம்
கோதா கோதில் செங்கோல் குடைமன்ன ரிடை நடந்த
தூதா தூமொழியாய் சுடர்போலென் மனத்திருந்த
வேதா நின்னடைந்தேன் திருவிண்ணகர் மேயவனே.

போது ஆர் - காலத்திலே யலர்ந்த (செவ்வி யழியாத), தாமரையாள் - தாமரைப்பூவை வாசஸ்தாநமாகவுடைய பெரிய பிராட்டியாருடையவும், புலவி - பூமிப்பிராட்டியாருடையவும், குலம் - தொண்டக் குலத்தையுடைய, வானவர்தம் - நித்ய ஸூரிகளுடையவும், கோதா - ஸந்தோஷத்துக்கு விஷயமானவனே! கோது இல் - ப்ரதிஹதியாகிற தோஷமில்லாத, செங்கோல் - ஆஜ்ஞையையுடையராய், குடை - முத்துக்குடையையுடையரான, மன்னர்- துர்யோதநாதிகளான ராஜாக்களுடைய, இடை - ஸபாமத்யத்திலே, நடந்த தூதா - தூதுபோனவனே! தூமொழியாய் - பரிசுத்தமான (பாண்டவ பக்ஷபாதியான) சொற்களையுடையவனே!, சுடர்போல் - விளக்குப்போலே உஜ்வலனாய்க்கொண்டு, என்மனத்து - என் ஹ்ருதயத்தில், இருந்த - வாஸம் பண்ணுகின்றவனே!, வேதா - வேதப்ரதிபாத்யனே! திருவிண்ணகர் மேயவனே - திருவிண்ணகர் என்னும் பதியில் பொருந்தியிருப்பவனே, நின்னடைந்தேன் - உன் திருவடிகளிலே சரணம் புகுந்தேன்.

69. ஸ உச்ரேயாந் பவதி ஜாயமாந:।

ஸ: - அந்த (பரமாத்மாவானவன்), ஜாயமாந: - அவதரித்த பின்பே, உச்ரேயாந் - மிக்க தேஜஸ்ஸை யுடையவனாக, பவதி - ஆகிறான்.

---

(67) பெரிய. திரு. 2-2-3. (68) பெரிய. திரு. 6-2-9.
(69) அஷ்டகம் 3, ப்ர. 6 ப. 3. வா-9.

70. பத்துடை யடிவர்க் கெளியவன் பிறர்களுக்கரிய
வித்தகன் மலர்மகள் விரும்பும் நமரும்பெறலடிகள்
மத்துறுகடை வெண்ணெய் களவினில் உரவிடையாப்புண்டு
எத்திற முறலினோ டிணைந்திருந் தேங்கிய வெளிவே.

பத்து உடை - பக்தியையுடைய, அடியவர்க்கு - அடியாருக்கு, எளிய வன் - எளியன், பிறர்களுக்கு-(பக்தியில்லாத) மற்றவர்களுக்கு, அரிய-(கிட்டு தற்கு) அரிய, வித்தகன் - ஆச்சர்யபூதன், மலர்மகள் - பெரிய பிராட்டியார், விரும்பும் - விரும்பும்படியான, பெறல் அரு - பெறுதற்கு அரிய, நம் அடிகள் நமது ஸ்வாமி, மத்து - மத்தினால், உறு - வருந்தி, கடை - கடைந்த, வெண் ணெய் களவினில் - வெண்ணெய் திருட்டில், உர இடை - மார்பினிடை யிலே, யாப்பு உண்டு - கட்டுப்பட்டு, உரலினோடு - உரலோடு, இணைந்து இரு ந்து - அசையாதிருந்து, ஏங்கிய - அச்சத்தால் ஏங்கின, எளிவு - எளிமை, எத்திறம் - எந்த ப்ரகாரமா யிருந்தது.

71. வ்யாஸ ப்ராஸாதாத் வக்ஷ்யாமி நாராயண கதாமிமாம் ।

வ்யாஸ - வ்யாஸருடைய, ப்ராஸாதாத் - அநுக்ரஹத்தினால், இமாம் - இந்த, நாராயண கதாம் - நாராயண கதையை, வக்ஷ்யாமி - சொல்லப்போகி றேன் (என்று வைசம்பாயனர் ஜநமேஜய மஹாராஜனைப் பார்த்துச் சொல்லுகிறார்).

72. தாநஹம் த்விஷதஃ க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந் ।
க்ஷிபாம் யஜஸ்ர மஶுபா நாஸுரீஷ்வேவ யோநிஷு ॥

த்விஷதஃ-பகைக்கின்றவரும், க்ரூராந்-கொடுமையானவரும், அஶுபாந்- துஷ்டர்களுமான, தாந் - அந்த, நராதமாந் - அதமமான மநுஷ்யர்களை, ஸம் ஸாரேஷு - ஸம்சாரங்களில்), ஆஸுரீஷு - அசுர சம்பந்தமான, யோநிஷு ஏவ - பிறவிகளிலேயே, அஜஸ்ரம் - எப்போதும், க்ஷிபாமி - தள்ளிவிடுகி றேன்.

73. மத்பக்தம் ஶ்வபசம்வாபி நிந்தாம் குர்வந்தி யே நராஃ ।
பத்மகோடி ஶதேநாபி நக்ஷமாமி வஸுந்தரே ॥

வஸுந்தரே - அழகுள்ள பூமிப்பிராட்டியே, மத் - என்னிடத்தில், பக் தம்-பக்தியுள்ளவன், ஶ்வபசம்வாபி - (நாய்மாம்சம் தின்பவனான) ஸ்வபசனானா லும், (அவனை,)யே-எந்த, நராஃ - மனிதர்கள், நிந்தாம்-நிந்தனையை, குர்வந்தி- செய்கிறார்களோ, (அவர்களை), பத்மகோடி ஶதேநாபி - அநேககோடி பத்ம காலங்களானாலும், நக்ஷமாமி - பொறுக்கமாட்டேன்.

74. தன்னடியார் திறத்தகத்துத் தாமரையாளாகிலுஞ்
சிதகுரைக்குமேல்

(70) திருவா. 1-3-1. (71) பார. ஆதி. 1-27 (72) ஸ்ரீகீதை. 16-19. (73) வராஹ புராணம். (74) பெரியா. திரு. 4-9-2.

என்னடியாரது செய்யார் செய்தாரேல்
நன்றுசெய்தா ரென்பர் போலும்
மன்னுடைய விபீடணற்காய் மதிளிலங்கைத்
திசைநோக்கி மலர்க்கண் வைத்த
என்னுடைய திருவரங்கர்க் கன்றியும்
மற்றொருவர்க் காளாவரே.

தாமரையாளாகிலும்-(ஆஸ்ரிதர் குற்றங்களைக் காணுக்கண்ணிட்டு "இறையும் அகலகில்லேன்" என்றிருக்கும்) பெரியபிராட்டியாரேயாகிலும், தன் அடியார் திறத்தகத்து - தன் அன்பர் விஷயமாக, சிதகு உரைக்குமேல் - அவர்கள் குற்றங்களைக் கணக்கிட்டுச் சொல்லத் துடங்கினுளாகில், என்னடியார் - எனக்கு சேஷபூதர், (மறந்தும் புறந்தொழாதவர்களாதலால்), அது - (பேர் சொல்லவுங்கூடக் கூசவேண்டும்படியான) அக்குற்றங்களை, செய்யார் - ஒருக்காலும் செய்யமாட்டார்கள், செய்தாரேல்-ப்ராமாதிகமாகச்செய்தார்களேயாகிலும், நன்று செய்தார் - அவை நற்றங்கிடீர், என்பர்போலும் - (என்றாற்போலே, சில உதாஸீநோக்திகளை அவளோடே மறுதலைத்து) வாய்திறந்து சொல்லுமவராய், மன் உடைய - செல்வம் மாறாத, விபீடணர்க்காய் - ஸ்ரீவிபீஷணாழ்வானை முடி சூடுகைக்காக, மதில் - மதிளையுடைத்தான, இலங்கைத் திசை நோக்கி - இலங்கை முகமாக, மலர்க்கண்வைத்த - குளிர்ந்த கண்களும் தானுமாய் பள்ளிகொண்டருளுமவனாய், என்னுடைய திருவரங்கர்க்கன்றியும் - ஆஸ்ரிதர் உகந்து அடிமைசெய்யும் துறையான பெரிய பெருமாளையொழிய, மற்றொருவர்க்கு - வேறொருவர்க்கு, ஆளாவரே - அடிமை செய்வர்களோ.

75. மத் ப்ராப்திம் ப்ரதிஜந்தூநாம் ஸம்ஸாரே பததாமத:।
லக்ஷ்மீ: புருஷகாரத்வே நிர்திஷ்டா பரமர்ஷிபி:।
மமாபிச மதம் ஹ்யேதந் நாந்யதா லக்ஷணம் பவேத்॥

ஸம்ஸாரே - ஸம்ஸாரத்தில், அத: பததாம் - கீழே விழுகிற, ஜந்தூனும் - ஜந்துக்களுக்கு, மத்ப்ராப்திம் ப்ரதி - என்னை யடைவதைக் குறித்து, புருஷகாரத்வே - புருஷகாரத்வத்தில், லக்ஷ்மீ: - பிராட்டியானவள், பரமர்ஷிபி: - மஹரிஷிகளாலே, நிர்திஷ்டா - சொல்லப்பட்டாள், ஏதத் - பிராட்டி புருஷகாரமாக இருக்கும் இருப்பானது, மமாபிசமதம் - எனக்குமிதுவே ஸம்மதம், அந்யதா - வேறான, லக்ஷணம் - ஆகாரம், நபவேத் - உண்டாகாது.

76. அஹம் மத்ப்ராப்த்யுபாயோவை ஸாக்ஷாத் லக்ஷ்மீபதி: ஸ்வயம்।
லக்ஷ்மீ: புருஷகாரேண வல்லபா ப்ராப்தியோகிநீ ॥
ஏதஸ்யாஸ்ச விஸேஷோயம் நிகமாந்தேஷு ஸப்த்யதே ॥

ஸாக்ஷாத் லக்ஷ்மீபதி: - ஸாக்ஷாத் ஸ்ரீய:பதியாயிருக்கிற, அஹம் - நான்; ஸ்வயம் - தானே, உபாயோவை - உபாயபூதனு யிருக்கிறேன், வல்லபா -

(75) ஸ்ரீபாஞ்சராத்திரம். (76) ஸ்ரீபாஞ்சராத்திரம்.

(உபதேசாதிகளாலே என்னை வசீகரிக்க) வல்லவளான, லக்ஷ்மீ: - பிராட்டியானவள், புருஷகாரேண - புருஷகாரத்தால், ப்ராப்தியோகிநீ - என்னை யடைவிக்கிறுள், ஏதஸ்யா:-இந்த பெரிய பிராட்டியாருக்கு, அயம் விஶேஷ:- (எனக்கு உபாயத்வமும், பெரிய பிராட்டியாருக்கு புருஷகாரத்வமுமாகிற) இந்த விசேஷமானது, நிகமாந்தேஷு - வேதாந்தங்களில், ஶப்த்யதே - கோஷிக்கப்படுகிறது.

77. ஆகிஞ்சந்யைக ஶரணா: கேசித் பாக்யாதிகா: புந: ।
மத்பதாம்போருஹ த்வந்த்வம் ப்ரபத்ய ப்ரீத மாநஸா: ॥
லக்ஷ்மீம் புருஷகாரேண வ்ருதவந்தோ வராநந ।
மத்க்ஷமாம் ப்ராப்ய ஸேநேஶ ப்ராப்யம் ப்ராபகமேவ மாம் ॥
லப்த்வா க்ருதார்த்தா: ப்ராப்ஸ்யந்தே மாமேவாநந்யமாநஸா:॥

வராநந ஸேநேஶ - அழகுள்ள முகமுடைய சேநாபதியாழ்வானே, ஆகிஞ்சந்யைக ஶரணா:-என்னையே உபாயமாகப் பற்றின, கேசித்-சில, பாக்யாதிகா:- (நிர்ஹேதுக க்ருபையைப்பெற்ற) பாக்யாதிகர்கள், மத் - என்னுடைய, பதாம் போருஹ த்வந்த்வம் - திருவடித்தாமரைகளிரண்டையும், ப்ரபத்ய - ப்ரபத்தி பண்ணி, ப்ரீத மாநஸா: - ப்ரீதியோடுகூடிய மனதையுடையவர்களாய், புந: - மறுபடியும், லக்ஷ்மீம் - பெரிய பிராட்டியை, புருஷகாரேண - புருஷகாரமாய், வ்ருதவந்த: - வரித்தவர்களாய், (அதனாலே), மத் - என், க்ஷமாம் - பொறுமையை யடைந்து, ப்ராப்யமேவ - ப்ராப்யனான, மாம் - என்னையே, ப்ராபகம் - உபாயமாக, லப்த்வா - அடைந்து, க்ருதார்த்தா: - க்ருதக்ருத்யர்களாய், அநந்யமாநஸா: - வேறொன்றில் பொருந்தாத நெஞ்சையுடையவர்களாய்க்கொண்டு, மாமேவ - என்னையே, ப்ராப்ஸ்யந்தே - அடைவர்கள்.

78. ஏதத் ஸாபேக்ஷ ஸம்பந்தா த்ந்யேஷா மமலாத்மநாம் ।
தேவி ஸூரி குரூணாஞ்ச கடகத்வம் நது ஸ்வத: ॥

அந்யேஷாம் - இதரமான, அமலாத்மநாம் - நிர்மல ஸ்வபாவர்களான, தேவி-(பெரிய பிராட்டியாரைத் தவிர்த்து மற்ற) தேவிமார்களுக்கும், ஸூரி - நித்யஸூரிகளுக்கும், குரூணாஞ்ச - ஆசார்யர்களுக்கும்,ஏதத் - இந்த, ஸாபேக்ஷ ஸம்பந்தாத் - பிராட்டியினுடைய ஸாபேக்ஷ சம்பந்தத்தினாலே, கடகத்வம் - புருஷகாரத்வம் (என்பது உண்டாகிறது), நது ஸ்வத: - இயல்பாகக் கிடையாது.

79. யேச வேதவிதோ விப்ரா: யேசாத்யாத்ம விதோ ஜநா: ।
தே வதந்தி மஹாத்மாநம் க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம் ॥

யேச - எந்த, விப்ரா: - ப்ராஹ்மணர்கள், வேதவித: - வேதமறிந்தவர்களோ, யேச - எந்த, ஜநா: - ஜநங்கள், அத்யாத்மவித: - வேதாந்தமறிந்தவர்களோ, தே - அவர்கள், மஹாத்மாநம் - மஹாத்மாவாகிய, க்ருஷ்ணம் - க்ருஷ்

(77) ஸ்ரீபாஞ்ச. (78) தீபஸங்க்ரஹம். (79) பார. ஆர. 88 - 253.

ணனை, ஸநாதநம் - நித்யஸித்தமான, தர்மம் - மோக்ஷ ஸாதநமாக, வதந்தி - சொல்லுகிறார்கள்.

80. ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ ।

ஹ்ரீஶ்ச - பூமிப்பிராட்டியும், லக்ஷ்மீஶ்ச - பெரிய பிராட்டியும், தே - தேவரீருக்கு, பத்ந்யௌ - தேவிகள்.

81. அஸ்யேஶாநா ஜகதோ விஷ்ணு பத்நீ ।

விஷ்ணுபத்நீ-விஷ்ணுவின் தேவியாரான பெரிய பிராட்டியார், அஸ்ய-இந்த, ஜகத: - ஜகத்தை, ஈஶாநா - நியமிக்குமவள்.

82. அஹந்தா ப்ரஹ்மணஸ்தஸ்ய ஸாஹமஸ்மி ஸநாதநீ ।

தஸ்ய - அந்த, ப்ரஹ்மண: - பரப்ரஹ்மத்திற்கு, ஸோஹம்-அந்த (பெரிய பிராட்டியாகிற) நான், ஸநாதநீ - அநாதியாக, அஹந்தா-(ஸ்வரூப) நிரூபகையாக, அஸ்மி - இருக்கிறேன்.

83. தமஸ: பரமோ தாதா ஶங்கசக்ர கதாதர: ।

ஸ்ரீவத்ஸ வக்ஷா நித்யஸ்ரீ: அஜய்யஶ் ஶாஶ்வதோ த்ருவ: ॥

தமஸ: - மூலப்ரக்ருதிக்கு, பரம: - அப்பாற்பட்டவரும், தாதா - (அத்வாரக ஸத்வாரக) ஸ்ருஷ்டிகளைச் செய்பவரும், சங்க - திருச்சங்கையும், சக்ர-திருச்சக்கரத்தையும், கதா - கதையையும், தர: - ஏந்தினவரும், ஸ்ரீவத்ஸ - ஸ்ரீவத்ஸம் என்னும் மறுவை, வக்ஷா: - திருமார்பிலுடையுடையவரும், நித்ய ஸ்ரீ: - பெரியபிராட்டியாரின் நித்ய சம்பந்தமுடையவரும், அஜய்ய: - ஒருவராலும் ஜயிக்கமுடியாதவரும், ஶாஶ்வத: எக்காலத்திலிருப்பவரும், த்ருவ:-நித்யமானவருமாக (எழுந்தருளியிருக்கிறீர் என்று சக்ரவர்த்தித் திருமகனைக் குறித்து மண்டோதரி சொல்லுகிறாள்.)

84. ஶ்ரிங் ஸேவாயாம் ।

எம்பெருமானை சேவிக்கிறாள்.

85. ஶ்ரீயதே ।

(எல்லாச் சேதனர்களாலும் புருஷகாரம் செய்யும்பொருட்டு) ஆஶ்ரயிக்கப்படுகிறாள்.

86. ஶ்ரயதே ।

எம்பெருமானை நித்யசேவை பண்ணுகிறாள்.

87. தேவத்வே தேவதேஹேயம் மநுஷ்யத்வேச மாநுஷீ ।

விஷ்ணோர் தேஹாநுரூபாம்வை கரோத்யேஷாத்மநஸ் தநும் ॥

இயம் - இந்த, ஏஷா - பிராட்டி, தேவத்வே - அவன் தேவனாயிருக்கும் போது, தேவ தேஹா - தேவ சரீரமாகவும், மநுஷ்யத்வேச - அவன் மநுஷ்ய

(80) புருஷஸூக்தம். (81) ஸ்ரீஸூக்தம். (82) ஸ்ரீஸூக்தம். (83) ரா. யு. 114 - 16. வி. பு. 1 - 9 - 145. (84) (85) (86) (87) வி. பு. 1-9-145.

ஞக அவதரிக்கும்போது, மாநுஷீ - தான் மநுஷ்ய சரீரமாகவும், விஷ்ணோ:- எம்பெருமானுக்கு, தேஹாநுரூபாம்வை - திருமேனிக்கநுகுணமாக, ஆத்மநதநும் - தன் சரீரத்தை, கரோதி - செய்கிருள்.

88. ராகவத்வே ஹவத்ஸீதா ருக்மிணீ க்ருஷ்ண ஜந்மநி ।
அந்யேஷு சாவதாரேஷு விஷ்ணோரேஷாநபாயிநீ ॥

ராகவத்வே - சக்ரவர்த்தித் திருமகனு யவதரித்தபோது, ஏஷா - தான், ஸீதா - ஸீதாபிராட்டியாக, அபவத் - திருவவதரித்தாள். க்ருஷ்ண ஜந்மநி - க்ருஷ்ணனுக அவதரித்தபோது, ஏஷா - தான், ருக்மிணி-ருக்மிணி பிராட்டியாக, அபவத் - திருவவதரித்தாள், விஷ்ணோ: - எங்கும் வ்யாபித்த விஷ்ணுவினுடைய, அந்யேஷுச அவதாரேஷு - மற்ற அவதாரங்களிலும், ஏஷா - இவள், அநபாயிநி - விட்டுப் பிரியாதவள்.

89. லக்ஷ்ம்யாஸஹ ஹ்ருஷீகேஶோ தேவ்யாகாருண்யரூபயா ।
ரக்ஷகஸ் ஸர்வ ஸித்தாந்தே வேதாந்தேஷுச கீயதே ॥

காருண்ய ரூபயா - காருண்யமே ரூபமாகவுடையளான, லக்ஷ்ம்யா தேவ்யாஸஹ - பெரிய பிராட்டியாரோடுகூட, ஹ்ருஷீகேஶ: - இந்திரியங்களை நியமிக்குமவனுன எம்பெருமான், ரக்ஷக: - ஸர்வரக்ஷகனுக, ஸர்வஸித்தாந்தே - எல்லாஸித்தாந்தங்களிலும், வேதாந்தேஷுச - வேதாந்தங்களிலும், கீயதே - சொல்லப்படுகிருன்.

90. ததஸ்ஸா ஹ்ரீமதி பாலா பர்த்து: விஜய ஹர்ஷிதா ।
அவோசத் யதி தத் தத்யம் பவேயம் ஶரணம் ஹிவ: ॥

தத: - பிறகு, ஹ்ரீமதி - வெட்கமடைந்த, ஸா - அந்த, பாலா - பாலபருவமுள்ள ஜானகியானவள், பர்த்து:-தன் கணவனுடைய, விஜயஹர்ஷிதா- விஜயத்தைக்கேட்டு சந்தோஷமடைந்தவளாய், அவோசத்-(த்ரிஜடை என்ன) சொன்னுளோ, தத் தத்யம் யதி - அது சத்தியமாக இருக்குமேயானுல், வ: - உங்களுக்கு, ஶரணம் பவேயம்ஹி - ரக்ஷகையாக ஆகிறேன், (என்று ராவணபவநத்திலுள்ள ராக்ஷஸிகளைப் பார்த்து ஸீதாபிராட்டியின் வார்த்தை).

91. ராஜ ஸம்ஶ்ரய வஶ்யாநாம் குர்வந்தீநாம் பராஜ்ஞயா ।
விதேயாநாஞ்ச தாஸீநாம் க: குப்யேத் வாநரோத்தம ॥

வாநரோத்தம - ஏ வாநர ஶ்ரேஷ்டனே, ராஜ ஸம்ஶ்ரய வஶ்யாநாம் - ராஜ ஸேவையில் அமர்ந்தவர்களும், பர - ராஜாவின், ஆஜ்ஞயா - கட்டளையினுல், குர்வந்தீநாம் - இட்ட காரியத்தை செய்கிறவர்களும், விதேயாநாம் - (ராஜகாரியத்தைச் செய்யாமல்போனுல்) தண்டிக்கப்படுகிறவர்களுமான, தாஸீநாம் - வேலைக்காரிகளிடத்தில், க: - எவன், குப்யேத் - கோபிப்பான்.

---

(88) வி. பு.1 - 9 - 144. (89) லக்ஷ்மீதந்த்ரம். (90) ரா - ஸு. 58-93. (91) ரா. யு. 116-38.

92. ப்ராப்தவ்யம் து தஶா யோகாத் மயைதஜிதி நிஸ்சிதம் ।
தாஸீநாம் ராவணஸ்யாஹம் மர்ஷயாமீஹ துர்வலா ॥

ராவணஸ்ய தாஸீநாம் - ராவணதாஸிகளுடைய, எதத் - இந்த ஹிம்சை யானது, தஶாயோகாத் - காலபலத்தால், ப்ராப்தவ்யமிதி மயாநிஸ்சிதம் - என்னால் அநுபவிக்கவேணுமென்று நிச்சயிக்கப்பட்டது. துர்பலா - பல மற்றவளான (க்ருபாபரவசையான), அஹம் - நான், இஹ - இந்த ராக்ஷஸி கள் விஷயத்தில், மர்ஷயாமி - பொறுக்கிறேன்.

93. பாபாநாம்வா ஸுபாநாம்வா வதார்ஹாணும் ப்லவங்கம ।
கார்யம் கருணமார்யேண ந கஸ்சிந்நாபராத்யதி ॥

ப்லவங்கம - வாநர ஸ்ரேஷ்டனே, பாபாநாம்வா - உன் அபிப்ராயப்படி பாபம் செய்தவர்களாயும், ஸுபாநாம்வா - என் அபிப்ராயப்படி புண்யம் செய்தவர்களாயும், வதார்ஹாணும்-கொல்லத்தக்கவர்களுமாயிருக்கிற ராக்ஷஸி கள் விஷயத்தில், ஆர்யேண - பெரியவரான உம்மாலே, கருணம் கார்யம் - க்ருபை செய்யவேணும், (ஏனெனில்), நஅபராத்யதி - அபராதம் செய்யாத வர்கள், நகஸ்சித் - ஒருவரும்கூட இல்லை.

94. அபத்யலாபோ வைதேஹி மமாயம் ஸமுபஸ்திதः ।
கிமிச்சஸி ஸகாமாத்வம் ப்ரூஹி ஸர்வம் வராநநே ॥

ஹே வைதேஹி - விதேஹ ராஜாவின் புத்ரியே, அபத்யலாபः - பிள்ளை யாகிற இந்த லாபமானது, மம - எனக்கு, ஸமுபஸ்திதः-லபித்தது, வராநநே-ச்ரேஷ்டமான முகமுடையவளே, ஸகாமா - ஆசையோடு கூடிய, த்வம் - நீ, கிம் - எதை, இச்சஸி - விரும்புகிறாய், ஸர்வம் - அவை யெல்லாவற்றையும், ப்ரூஹி - சொல் (என்று பிராட்டியைக் குறித்து சக்ரவர்த்தித் திருமகன் வார்த்தை).

ஸः - அந்த (ராவணனால் அவமானிதனான), அயம் - இந்த (சரணமென்று வந்த), விபீஷணः - விபீஷணாழ்வான், அதேஶகாலே ஸம்ப்ராப்தः - அதேஶத்திலே அகாலத்திலே வந்தான், இதி அத்ர - என்கிற விஷயத்தில், மே - எனக்கு, இயம் விவக்ஷாச - இந்த சொல்லவேண்டுமென்கிற இச்சையானது, அஸ்தி - இருக்கிறது, ஸः - அந்த விபீஷணன், இஹ - இவ்விடத்தில் (எப்பொழுது எவ்விடத்தில் வந்தானோ (அவ்வரவுந்து) ஸः ஏஷः தேஶः காலஃச - இதுவே தேஶமும் காலமும் (எப்படி ஆகுமோ அப்படிப்பட்டதை), யதாமதி - நான் அறிந்தவளவும் (விஜ்ஞாபித்துக்கொள்ளப்படுகிற அந்த விவக்ஷையை), நிபோத - அறிந்துகொள், புருஷாத் - புருஷாதமனான ராவணனைக்காட்டிலும், புருஷம் - புருஷோத்தமரான தேவரீரை, ப்ராப்ய - ப்ராப்யராக புத்தி பண்ணி, ததா - அப்படியே, தோஷகுணௌ அபிப்ராப்ய - (ராவணனிடத்திருந்தால் வரும்தோஷத்தையும், தேவரீரையடைந்தால்வரும் குணத்தையும்) எண்ணி, ராவணே - ராவணனிடத்தில், தௌராத்ம்யம் - கெட்டத்தன்மையையும், ததா - அப்படி, த்வயி - தேவரீரிடத்தில், விக்ரமம் ச - ஆண்பிள்ளைத்தனத்தையும், த்ருஷ்ட்வா - பார்த்து (வந்தவனாகையாலே), தஸ்ய - அந்த விபீஷணனுக்கு, ஆகமநம் யுக்தம் - இவ்வரவு யுக்தம், தஸ்யபுத்திதः - அவனுடைய புத்திக்கும், ஸத்ருஶம் - இது தகுந்தது.

203. பய்ய வைராச்ச பாபாச்ச ராக்ஷஸேந்த்ராத் விபீஷணः ।
அதேஶ காலே ஸம்ப்ராப்தः ஸர்வதா ஶங்க்யதாமயம் ॥

---

(200) ஸநத்குமார-ஸம். (201) (202) ரா. யு. 17-46.
(203) ரா. யு. 17-57.

பத்தவைராத் - ப்ரபல விரோதத்தை யுடையவனும், பாபாத்ச - மாதாவினிடத்தில் அபராதஞ்செய்த மஹாபாபியாயுமிருக்கிற, ராக்ஷஸேந்த்ராத் - ராவணனிடத்திலிருந்து, அயம் விபீஷணஃ - இந்த விபீஷணன், அதேஶகாலே- அதேஶத்தில் அகாலத்தில், ஸம்ப்ராப்தஃ - வந்தான், ஸர்வதா - முற்றிலும், சங்க்யதாம் - சங்கிக்கப்படுவனாகிறான்.

204. த்வயேந மந்த்ர ரத்நேந மத் ப்ரியேண ஹிஜேத்ஸதா ।
அசிராத் மத் ப்ரஸாதேந மத்லோக ஸமச்சதி ॥

மத் - எனக்கு, ப்ரியேண - ப்ரியமான, மந்த்ர ரத்நேந - மந்த்ர ஶ்ரேஷ்டமான, த்வயேந - த்வயத்தாலே, ஸதா - எப்போதும், பஜேத் - பஜிக்கிறானோ, ஸஃ - அவன், அசிராத் - சீக்கிரம், மத்ப்ரஸாதேந - என் அநுக்ரஹத்தால், மல்லோகம் ச - என் லோகமான வைகுண்டத்தையும், கச்சதி - அடைகிறான்.

205. சஞ்சலம்ஹி மநஃ க்ருஷ்ண ப்ரமாதி பலவத்த்ருடம் ।
தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே வாயோரிவ ஸுதுஷ்கரம் ॥

ஹே க்ருஷ்ண - வாரீர் கண்ணா, சஞ்சலம் - சலிக்கும் ஸ்வபாவமான, மநஃ - மனது, பலவத் - வலுவில் (புருஷனை), த்ருடம் - மிகுதியும், ப்ரமாதி - கலக்குந் தன்மையது, தஸ்ய - அதினுடைய, நிக்ரஹம் - ஜயத்தை, அஹம் - நான், வாயோஃ இவ - காற்றினதுபோல, ஸுதுஷ்கரம் - மிகவும் செய்யவரியதென்று, மந்யே - நினைக்கின்றேன்.

206. வென்றியே வேண்டி வீழ்பொருட் கிரங்கி
வேற்கணார் கலவியே கருதி
நின்றவா நில்லா நெஞ்சினையுடையே
னென்செய்கேன் நெடுவிசும்பணவும்
பன்றியா யன்று பாரகம் கீண்ட
பாழியா னாழியா னருளே
நன்று நானுய்ய நான் கண்டுகொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்.

வென்றியே - ஜயத்தையே, வேண்டி - அபேக்ஷித்து, வீழ் - நசிக்குந்தன்மையுள்ள, பொருட்கு - தநத்துக்கு, இரங்கி - துஃக்கித்து, வேல்கணார் - வேல்போன்ற கண்ணையுடைய ஸ்த்ரீகளது, கலவியே - ஸம்ஶ்லேஷத்தையே, கருதி - நினைத்து, நின்றவா நில்லா - ஒன்றிலும் நிலைபெற்றிராத, நெஞ்சினை - நெஞ்சை, உடையேன் - உடையநான், என் செய்கேன் - என்ன செய்வேன், (உன்னை பெறுகைக்கு ஈடான ஓர் உபாயமும் செய்யவல்லேனல்லேன்), அன்று - பூமியை ப்ரளயம் கொண்ட அந்நாளிலே, நெடு - உயர்ந்த,

(204) (205) ஸ்ரீகீதை. 6-34.
(206) பெரிய-திரு. 1-1-4.

விசும்பு - ஆகாசத்தை, அணவும் - தழுவும்படி வளர்ந்த, பன்றியாய் - வராஹ ரூபங்கொண்டு, பாரகம் - பூமியை, கீண்ட - உத்தரித்த, பாழியான் - மிடுக்கை யுடையனான, ஆழியான் - ஸர்வேஶ்வரனது, அருளே - க்ருபையாலே, நான் - விஷயப்ரவணனாய்ப் போந்த நான், நன்று - செவ்வையாக, உய்ய - உஜ்ஜீவிக் கும்படி, நாராயணா என்னும் நாமம் - நாராயணா என்ற திருநாமத்தை, நான் - அபிமாநியாயிருந்த நான், கண்டு கொண்டேன் - அறியப்பெற்றேன்.

207. து³ர்லபோ⁴ மாநுஷோ தே³ஹோ தே³ஹிநாம் க்ஷணப⁴ங் கு³ர꞉। தத்ராபி து³ர்லப⁴ம் மந்யே வைகுண்ட² ப்ரிய த³ர் ஶநம்॥

மாநுஷ꞉ தேஹ꞉ - மநுஷ்ய சரீரமானது, துர்லப꞉ - அதிகப் பிரயாஸை யால் அடையத்தக்கது, தேஹிநாம் (தேஹ꞉) - சரீரிகளுடைய (தேஹமானது), க்ஷணபங்குர꞉ - நொடிப் பொழுதில் முடிந்து விடுகிறது, தத்ராபி - அப்படிப் பிரயாஸ ஸாத்யமான தேஹத்தைபெற்று சிலகாலம் ஜீவித்திருந்தாலும், வைகுண்ட ப்ரியதர்சனம் - நாசமற்ற தேசமான பரமபதத்தில் விருப்ப முண்டாய் அதற்கு வேண்டியதான சர்வேஶ்வரனே உபாயோபேய மென் கிற ஜ்ஞாநமானது, துர்லபம் மன்யே - அதிகப்பிரயாஸையால் அடையத் தக்கதாக எண்ணுகிறேன்.

208. ரஜஸ்வலைக வஸ்த்ராஹம் நதுமாம் நேதுமர்ஹஸி।
கு³ரூணாம்சபுர꞉ ஸ்தா²தும் ஸபா⁴யாம் நாஸ முத்ஸஹே॥

அஹம் - நான், ரஜஸ்வலா - ரஜஸ்வலையாயும், ஏக வஸ்த்ரா - ஒரு துகிலையுடையவளாயு மிருக்கிற, மாம்நேதும் - என்னையிப்போது அழைத் துக்கொண்டு போவது, நது அர்ஹஸி - உசிதமல்ல, குரூணாம் ச - குருக்கள், புர꞉ - முன்னிலையிலும், ஸபாயாம் - ஸபையிலும், ஸ்தாதும் - இருப்பதற்கு, அஹம் - நான், ந உத்ஸஹே - ஸஹிக்கமாட்டேன்.

209. மறங்கிளர்ந்த கருங்கடல் நீருரந்துரந்து
பரந்தேறி யண்டத்தப்பால்
புறங்கிளர்ந்த காலத்து பொன்னுலக
மேழினையு மூழில் வாங்கி
அறங்கிளர்ந்த திருவயிற்றி னகம்படியில்
வைத்தும்மை யுய்யக்கொண்ட
நிறங்கிளர்ந்த கருஞ்சோதி நெடுந்தகையை
நினையாதார் நீசர்தாமே.

மறம் கிளர்ந்த - கொடுமை பொருந்திய, கருங்கடல் - கருங்கடலின், நீர் - ப்ரவாஹமானது, உரம் - வேகத்தாலே, துரந்து - ஓடி, பரந்து - சுற்றும் பரம்பி, அண்டத்து - அண்ட கடாஹத்துக்கு, அப்பாற் புறம் - அவ்வருகாக,

(207) ஸ்ரீபாக. 11-2-22. (208) பாரதம், ஸபா.
(209) பெரிய - திரு. 11-6-8.

ஏறி-வ்யாபித்து, கிளர்ந்த காலத்து - கிளர்ந்த ஸமயத்திலே, பொன் - ஸ்ப்ருஹணீயமான, உலகம் ஏழினையும் - உலகங்களனைத்தையும், ஊழில் வாங்கி - முறையாலே வாங்கி, அறம் - ரக்ஷண தர்மத்தாலே, கிளர்ந்த - விஞ்சின, திருவயிற்றின் அகம் படியில் - திருவயிற்றினுள்ளே, வைத்து - வைத்து, உம்மை உய்யக்கொண்ட-உங்களை உஜ்ஜீவிக்கும்படி செய்த, கருநிறம் கிளர்ந்த - கருமை மிக்கிருந்துள்ள, சோதி - தேஜஸ்ஸையுடைய, நெடுந் தகையை - ஸர்வேச்வரனை, நினையாதார் தாம் - நினைக்கப் பெறாதவர்கள், நீசர் - மிகத் தண்ணியர்கள்.

210. வரம்ஹுத வஹ ஜ்வாலா பஞ்சராந்தர் வ்யவஸ்திதி: ।
நஶௌரி சிந்தா விமுகஜந ஸம்வாஸ வைஶஸம் ॥

ஹுத வஹ - அக்கினியினுடைய, ஜ்வாலா - சுவாலைகளாகிற, பஞ்சர - கூட்டினுடைய, அந்த: - உள்ளே, வ்யவஸ்திதி: - அடங்கியிருப்பதாவது, வரம் - சிறந்ததேயன்றி, ஶௌரி - ஸ்ரீகிருஷ்ணனுடைய, சிந்தா - தியானத்திலே, விமுக - ஆவலற்ற, ஜந - ஜநங்களுடன், ஸம்வாஸ - ஸஹவாசம்செய்வதாகிற, வைஶஸம் - பெருந்துன்பமானது, ந (வரம்) - சிறந்ததாகாது.

211. ஶ்வபசோபி மஹீபால விஷ்ணுபக்தோ த்விஜாதிக: ।
விஷ்ணுபக்தி விஹீநஸ்து யதிஶ்ச ஶ்வபசாதம: ॥

ஹே மஹீபால - ஏ மஹாராஜாவே, விஷ்ணு பக்த: - விஷ்ணு பக்தியுடையவனான, ஶ்வபச: அபி - நாய் மாம்ஸம் புஜிக்கிறவனானாலும், த்விஜ - ப்ராம்ஹணனைக்காட்டிலும், அதிக: - ச்ரேஷ்டன், விஷ்ணுபக்தி - விஷ்ணு பக்தி, விஹீந: - இல்லாத, யதி:து - ஸந்யாஸியானாலும், ஶ்வபச:-ச்வபசனைக் காட்டிலும், அதம: - தாழ்ந்தவன்.

212. விப்ராத் த்விஷட் குணயுதாத் அர விந்தநாப ।
பாதாரவிந்த விமுகாத் ஶ்வபசம் வரிஷ்டம் ॥

த்விஷட் குணயுதாத் - பன்னிரண்டு குணங்களோடு கூடியவனும், அரவிந்தநாப பாதாரவிந்த விமுகாத் - தாமரை போன்ற உந்தியையுடைய பகவானுடைய திருவடித்தாமரைகளில் விமுகனுமிருக்கிற, விப்ராத் - ப்ராஹ்மணனைக்காட்டிலும், ஶ்வபசம் வரிஷ்டம் - ச்வபசன் ச்ரேஷ்டன், (பன்னிரண்டு குணங்களாவன - சமம், தமம், தபஸ்ஸு, சௌசம், பொறுமை, ருஜுத் தன்மை - விரக்தி, ஜ்ஞாநம், விஜ்ஞாநம், ஸந்தோஷம், ஸத்யம், ஆஸ்திகத் தன்மை.)

213. அநாசாராந் துராசாராந ஜ்ஞாத்ரூந் ஹீநஜந்மந: । மத்பக்
தாந் ஶ்ரோத்ரியோ நிந்தந் ஸத்ய: சண்டாளதாம் வ்ரஜேத் ॥

---

(210) சௌநக ஸம்ஹிதை. (211)
(212) ஸ்ரீபாகவதம். (213) ப்ரஹ்மாண்டபுராணம்.

அநாசாராந் - ஆசாரத்தை விட்டவனுயும், துராசாராந் - கெட்ட ஆசாரத்தை யனுஷ்டிப்பவனுயும், அஜ்ஞாத்ரூந் - ஜ்ஞாநமில்லாதவனுயும், ஹீநஜன்மநः - தாழ்ந்த ஜாதியில் பிறந்தவர்களாயு மிருக்கிற, மத் பக்தாந் - என்னுடைய பக்தர்களை, நிந்தன் - தூஷிக்கிற, ஶ்ரோத்ரியः - அபிஜனவித்யாவ்ருத்தங்களாலே பெருமையுடைய ப்ராஹ்மணோத்தமன், ஸத்யः - உடனே, சண்டாளதாம் - சண்டாளத்தன்மையை, வ்ரஜேத் - அடைவான்.

214. } இந்த ஐதிஹ்யத்தை குருபரம்பரையில் நம்பிள்ளை
215. } வைபவத்தில் காண்க.

216. ஏவமுக்தஸ்து யர்மஜ்ஞः ப்ரத்யுவாச விபீஷணः ।
ஸமுத்ரம் ராவவோ ராஜா ஶரணம் ஗ந்துமர்ஹதி ॥

ஏவம் உக்தः - இவ்விதம் சொல்லப்பட்டவரும், தர்மஜ்ஞः - தர்மத்தை யறிந்தவருமான, விபீஷணஃது - விபீஷணுழ்வான், ப்ரத்யுவாச - பதில் சொன்னுன். ராஜாராகவः - அரசனுனராகவனுனவர், ஸமுத்ரம் - ஸமுத்ரத்தை, ஶரணம்கந்து மர்ஹதி - சரணமடைய யோக்யமாகிருர்.

217. ஏவமுக்தாஃ ஸ்த்ரயஃ பார்யாஃ யமௌச ஹரதர்ஷஹ த்ரௌ
பத்யா ஸஹிதாஸ் ஸர்வே நமஸ்சக்ருர் ஜநார்தநம் ॥

ஹே பரதர்ஷப - ஓ ஜனமேஜயனே, ஏவம் - இவ்விதமாய், உக்தாः - சொல்லப்பட்டவர்களான, த்ரயः - மூன்று, பார்த்தாः - குந்தீ புத்திரர்களும், யமௌச - நகுலஸஹதேவர்களும், ஸர்வே - எல்லாரும், த்ரௌபத்யாஸஹிதாः - த்ரௌபதியோடு கூடியவர்களாய், ஜநார்த்தநம் - கண்ணனை, நமः - நமஸ்காரம், சக்ருः - செய்தார்கள்.

218. ஶங்கசக்ர கதா ... ... 188-வது இலக்கம் காண்க.
219. ஸபித்ராச ... ... 108-வது இலக்கம் காண்க.
220. ஸோஹம் தே தேவதேவேஶ நார்ச்சநாதௌ ஸ்துதௌநச।
ஸாமர்த்யவாந் க்ருபாமாத்ர மநோவ்ருத்திः ப்ரஸீதமே ॥

ஹே தேவ தேவேஶ-ப்ரஹ்மாதி தேவர்களுக்கும் தேவனுனவனே, தே - தேவரீருடைய, அர்ச்சநாதௌ - அர்ச்சனை முதலியவற்றிலும், ஸ்துதௌச - ஸ்தோத்திரம் பண்ணுவதிலும், அஹம் - நான், ஸாமர்த்யவாந் ந-ஸாமர்த்திய மில்லாதவன், ஸः - அப்படிப்பட்ட, மே - எனக்கு, க்ருபாமாத்ர-நிர்ஹேதுக கிருபையாலே, மனோவ்ருத்திः - திருவுள்ளமுகந்து, ப்ரஸீத - ப்ரஸன்னராக வேணும்.

221. பரமாபத மாபந்நோ மநஸாசிந்தயத் ஹரிம் ।
ஸது நாகவரः ஶ்ரீமாந் நாராயண பராயணः ॥

---

(216) ரா-யு. 19-31. (217) பாரதம்.
(220) வி-பு. 5-7-10. (221) வி-த. 69-80.

ஸ்ரீமாந் - கைங்கர்ய சம்பத்தையுடையவரும், நாராயண பராயண: - பகவத் த்யாநபரரும், நாகவர: - கஜஸ்ரேஷ்டருமான, ஸ: - அந்த கஜேந்திராழ்வான், பரமாபதம் - அதிக ஆபத்தை, ஆபந்ந: - அடைந்தவராய், மநஸா - மனதினால், ஹரிம் - விரோதியைப் போக்குமவரான ஸ்வாமியை, சிந்தயேத் - சிந்தித்தார்.

222. ஸோஹம் பருஷிதஸ்தேந தாஸவச்சாவமாநித: ।
த்யக்த்வா புத்ராம்ஸ்ச தாராம்ஸ்ச ராகவம் ஶரணம்கத: ॥

ஸ: அஹம் - இராவணனுக்கு ஹிதோபதேசம் பண்ணின நான், தேந - அந்த ராவணனாலே, பருஷித: - கடினோக்திகள் சொல்லப்பட்டவனாய், தாஸவச்ச - வேலைக்காரனைப்போல், அவமாநித: - அவமானிக்கப்பட்டவனாய், புத்ராந்ச - பிள்ளைகளையும், தாராந்ச - பார்யையும், த்யக்த்வா - விட்டு, ராகவம் - பெருமாளை, ஶரணங்கத: - சரணமடைந்தேன்.

223. பாஹும் புஜகபோகாப முபதாயாரிஸூதந । அஞ்ஜலிம் ப்ராங்முக: க்ருத்வா ப்ரதிஶிஶ்யே மஹோததே: ॥

புஜகபோகாபம் - ஸர்பத்தின் உடல் போலேயிருக்கிற, பாஹும் - திருக்கையை, உபதாய - தலையணையாகக்கொண்டு, அரிஸூதந: - சத்ருக்களை நிரஸிக்கும்பெருமாள், ப்ராங்முக: - கிழக்கு முகமாக, அஞ்ஜலிம்க்ருத்வா - கைகூப்பி, மஹோததே: - ஸமுத்திரத்திற்கு எதிராக, ப்ரதிஶிஶ்யே - சயனித்தார்.

224. ஸப்ராது ... ... 105-வது இலக்கம் காண்க.

225. ஸோஹம் த்வாம் ஶரணமபார மப்ரமேயம் ஸம்ப்ராப்த: பரமபதம் யதோ ந கிஞ்சித் । ஸம்ஸார ஶ்ரம பரிதாப தப்தசேதா நிர்வாணே பரிணததாம்நி ஸாபிலாஷ: ॥

ஸம்ஸார ஶ்ரமபரிதாப தப்தசேதா: - சம்சாரத்தினுடைய ச்ரமத்தினால் பரிதபித்த மனதை யுடையவன், யத: - எந்த காரணத்தினால், கிஞ்சித் - கொஞ்சமாகிலும், பரமபதம் - உத்க்ருஷ்ட ஸ்தானத்தை, நஸம்ப்ராப்த: - அடையான், அத: - அந்த காரணத்தினால், பரிணததாம்நி - பரிணாம ஸ்தானமான, நிர்வாண - மோக்ஷத்தில், ஸாபிலாஷ: - ஆசையுடன் கூடின, ஸோஹம் - ஸம்ஸாரத்தில் பரிதபித்த மனதையுடைய (முசுகுந்தனாகிய) நான், அபாரம் - எல்லையில்லாத, அப்ரமேயம் - இவ்வளவென்று சொல்லி முடியாத, த்வாம் - (க்ருஷ்ணனாகிற) உன்னை, ஶரணம் - உபாயமாக, ஸம்ப்ராப்தி - அடைந்தேன்.

226. மூடோயமல்பமதிரல்ப விசேஷ்டிதோயம் க்லிஷ்டம் மநோஸ்ய விஷயைர் நமயி ப்ரஸங்கீ । இத்தம் க்ருபாம் குருமயி ப்ரணதேகிலேச த்வாம் ஸ்தோது மம்புஜஜவோபிஹி தேவ நேஶ: ॥

---

(222) ரா-யு. 17-16. (223) ரா. யு. 21-1.
(225) ஸ்ரீபாகவதம். 10-51. (226)

அயம் - இவன், மூட: - தெரியாதவன், அல்பமதி: - ஸ்வல்பபுத்தியை யுடையவன், அல்ப விசேஷ்டித: - கிஞ்சித் சேஷ்டை செய்கிறவன், அயம் - இந்த, மந: - மனது, விஷயை: - துர்விஷயங்களில், க்லிஷ்டம் - வ்யாப்த மானது, அகிலேச - எல்லாவற்றிற்கும் நாயகனே, தேவ தேவ - தேவதை களுக்குத் தேவனான ஸ்வாமி, இத்தம் - இந்த ப்ரகாரமாக, ப்ரணதே - சேவித் துக்கொண்டிருக்கிற, மயி - (க்ஷுத்ரபந்துவான) என்னிடத்தில், க்ருபாம் - அநு க்ரகத்தை, குரு - செய்யவேணும், அப்புஜபவோபி - பிரமனானபோதிலும், த்வா - உன்னை, ஸ்தோதும் - ஸ்தோத்திரம் பண்ண, ந - சக்தியற்றவன்.

227. ஹூவந்தம் ப்ரபந்நா ஸா ஹூவந்தமவாபஹ ॥

ஸா - அந்தமாதவீ, பகவந்தம் - பகவானைக்குறித்து, ப்ரபந்நா - ப்ரபத்தி பண்ணினவளாய், பகவந்தம் - பகவானை, அவாபஹ - அடைந்தாள்.

228. தம் ப்ரஸிந்ந ஶிரோக்ரீவ மாஸ்யேப்ய ஸ்ருத ஶோணிதம்।
விலோக்ய ஶரணம் ஜக்முஸ்தத் பத்ந்யோ மதுஸூதநம்॥

ப்ரபிந்ந சிரோக்ரீவம் - பிளக்கப்பட்ட தலை கழுத்து இவைகளையுடையவ னையும், ஆஸ்யேப்ய: - முகங்களில் நின்றும், ஸ்ருதசோணிதம் - கக்கப்பட்ட ரக்தத்தையுடையவனையுமிருக்கிற, தம் - அந்த காளியனை, விலோக்ய - பார்த்து, தத்பத்ந்ய: - அந்தக்காளியனுடைய பத்நிகள், மதுஸூதநம் - கண்ணனை, சரணம் - ரக்ஷகமாக, ஜக்மு: - அடைந்தார்கள்.

229. ப்ரணமப்ரவணா நாத தைத்ய ஸைந்ய பராஜிதா:।
ஶரணம் த்வாமநு ப்ராப்தாஸ் ஸமஸ்தா தேவதா கணா:॥

ஹே நாத - ஏ ஸ்வாமிந், தைத்ய ஸைந்ய பராஜிதா: - அஸுர ஸைந்யங்க ளால் ஜயிக்கப்பட்டவர்களான, ஸமஸ்தா: தேவதா கணா: - எல்லாதேவக் கூட்டங்களும், ப்ரணம - நமஸ்காரத்தில், ப்ரவணா: - ஆசையுடையவர்களாய், த்வாம் - தேவரீரை, ஶரணம் - ரக்ஷகமாக, அநுப்ராப்தா: - அடைந்தார்கள்.

230. ராக்ஷஸைர் வத்யமாநாநாம் வாநராணாம் மஹாசமூ:।
ஶரண்யம் ஶரணம் யாதா ராமம் தஶரதாத்மஜம்॥

ராக்ஷஸை:-ராக்ஷஸர்களால், வத்யமாநாநாம் - அடிபட்டவர்களான, வாந ராணாம் - வாநரங்களுடைய, மஹா - பெரிய, சமூ: - சைந்யங்கள். ஶரண்யம் - ரக்ஷகனும், தசரதாத்மஜம் - சக்ரவர்த்தித் திருமகனுமான, ராமம் - ராம பிரானை, ஶரணம் - ரக்ஷகமாக, யாதா: - அடைந்தன.

231. அர்ச்சாவதார விஷயே மயாப் யுத்தேசதஸ் ததா।
உக்தா குணா ந ஶக்யந்தே வக்தும் வர்ஷஶதைரபி॥

---

(227) (228) வி. பு. 5-7-7.
(229) (230) ரா. யு. 94-17.
(231) பாத்ம ஸம்ஹிதை.

வர்ஷ சதைரபி - நூறுவருஷங்களானாலும், வக்தும் - (அர்ச்சாவதாரத்தின் குணங்களையெல்லாம்) சொல்லுகைக்கு, ந சக்யந்தே - (ஒருவராலும்) முடியாது, ததா - அப்படிப்பட்ட, அர்ச்சாவதார விஷயே - அர்ச்சாவதார விஷயத்திலிருக்கிற, குணா: - குணங்கள், மயாபி - என்னாலும், உத்தேசத: - சுருக்கமாய், உக்தா: - சொல்லப்பட்டன.

232. ஆறெனக்கு நின்பாதமே சரணாகத்
தந்தொழிந்தாய் உனக்கோர்
கைம்மாறு நானொன்றிலேன்
எனதாவியும் உனதே
சேறுகொள் கரும்பும் பெருஞ்செந்நெலும்
மலிதண் சிரீவரமங்கை
நாறு பூந்தண்டுழாய்
முடியாய் தெய்வநாயகனே.

எனக்கு - அடியேனுக்கு, ஆறு - பிராப்திக்கு வழி, நின் பாதமே - உன் திருவடிகளே, சரண் ஆக - புகலிடமாக, தந்து ஒழிந்தாய் - தந்து விட்டாய், உனக்கு - இப்படி உபகாரகனான உனக்கு, ஓர் கைம்மாறு - ஒரு பிரதியுபகாரம், நான் ஒன்று இலேன் - நான் சிறிதும் உடையேனல்லேன், எனது ஆவியும் - என்னுடைய ஆத்மாவும், உனதே - முன்பே உனதாகவே யிராநின்றது, சேறு - சேற்றை, கொள் - இடமாகக் கொண்டிருக்கிற, கரும்பும் - கருப்பஞ் சோலையும், பெரு - அதினும் பெரிதாகிய, செந்நெலும் - செந்நெற் பயிர்களும், மலி - மிகுந்த, தண் - குளிர்ச்சியாகிய, சிரீவரமங்கை - சிரீவரமங்கையில் எழுந்தருளி யிருக்கிற, நாறு - பரிமளிக்கிற, பூ - அழகும், தண்-குளிர்ச்சியுமுள்ள, துழாய் - திருத்துழாயாலே அலங்கரிக்கப்பட்ட, முடியாய் - திருமுடியை யுடையவனே, தெய்வநாயகனே - நித்யஸூரிகளுக்குத் தலைவனே.

233. உழலையென்பின் பேய்ச்சிமுலையூடு அவளையுயிருண்டான்
கழல்களவையே சரணாகக்கொண்ட குருகூர்ச்சடகோபன்
குழலின்மலியச்சொன்ன வோராயிரத்து ளிப்பத்தும்
மழலைதீரவல்லார் காமர்மானேய் நோக்கியர்க்கே.

உழலை - உழலை கோத்தாற்போலே யிருக்கிற, என்பின் - எலும்புகளையுடைய, பேய்ச்சி - பூதனையின், முலையூடு - முலையின் அகவாயாலே, அவளை - அவளை, உயிர் உண்டான் - உயிரைக் கவர்ந்தவனாகிய கிருஷ்ணனுடைய, கழல்கள் அவையே - திருவடிகளாகிற அவற்றையே, சரணாகக்கொண்ட - இஷ்டசித்திக்கு உபாயமாகக்கொண்ட, குருகூர் - திருநகரிக்குத் தலைவரான, சடகோபன் - ஆழ்வார், குழலின் - குழலோசையினும், மலிய - மிக்க இனிமை

(232) திருவா. 5-7-10. (233) திருவா. 5-8-11.

யுண்டாக, சொன்ன - அருளிச்செய்த, ஓர் - ஒப்பற்ற, ஆயிரத்துள் - ஆயிரத்துள்ளே, இப்பத்தும் - இப்பத்தையும், மழலைதீர - தமது அறியாமை தீர, வல்லார் - சொல்லவல்லவர், மான் ஏய் - மான் நோக்கத்தை யொத்த, நோக்கியர்க்கு - நோக்கத்தையுடைய மாதருக்கு, காமர் - மன்மதன்போலே போக்யராவர்.

234. நாமங்க ளாயிரமுடைய நம்பெருமா னடிமேல்
சேமங்கொள் தென்குருகூர்ச் சடகோபன் தெரிந்துரைத்த
நாமங்க ளாயிரத்து ளிவைபத்துந் திருவல்லவாழ்
சேமங்கொள் தென்னகர்மேல் செப்புவார் சிறந்தார்பிறந்தே.

நாமங்கள் ஆயிரமுடைய - திருநாமங்களாயிரத்தையுடைய, நம்பெருமான் அடிமேல் - நமது இறைவனது திருவடிகளின்மீது, சேமம் கொள் - அவற்றையே ரக்ஷகமாகக்கொண்ட, தென் குருகூர் - தென்குருகூர்க்குத் தலைவரான, சடகோபன் - ஆழ்வார், தெரிந்து - இத்திருவடிகளே ரக்ஷகமென்று ஆராய்ந்து தெளிந்து, உரைத்த - அருளிச்செய்த, நாமங்கள் - அவனுக்குத் திருநாமங்கள்போலே வாசகமான, ஆயிரத்துள் - ஆயிரத்துள்ளும், இவை பத்தும் - இவை பத்தையும், திருவல்லவாழ் - திருவல்லவாழ் என்கிற, சேமம் கொள் - காக்குந் தொழிலை மேற்கொண்ட, தென் - அழகிய, நகர்மேல் - திருநகரி விஷயமாக, செப்புவார் - சொல்லவல்லவர்கள், பிறந்து - சரீர சம்பந்தத்தை யுடையராயிருந்தும், சிறந்தார் - பகவதநுபவமாகிற சிறப்பையுடையராவர்கள்.

235. உன்னடிக்கீழ் ... ... 166-வது இலக்கம் காண்க.

236. வம்புலாங் கூந்தல் மனைவியைத் துறந்து
பிறர்பொருள் தாரமென் றிவற்றை
நம்பினா ரிறந்தால் நமன்றமர் பற்றி
யெற்றிவைத் தெரி யெழுகின்ற
செம்பினா லியன்ற பாவையைப் பாவி
தழுவென மொழிவதற் கஞ்சி
நம்பனே வந்துன் திருவடி யடைந்தேன்
நைமிசா ரணியத்து ளெந்தாய்.

நைமிசாரண்யத்துள் எந்தாய்—, நம்பனே - நம்பத் தகுந்தவனே, வம்பு உலாம் - பரிமளம் வீசாநின்றுள்ள, கூந்தல் - குழலையுடையளான, மனைவியை - (தன்) பார்யையை, துறந்து - விட்டு, பிறர் பொருள் - பிறர் த்ரவ்யமும், பிறர் தாரம் - பிறர் மனையாட்டிகளும், என்று இவற்றை - ஆகிய இவைகளை, நம்பினார் - விரும்பினவர்கள், இறந்தால் - இறந்துபோனால், நமன் தமர் - யமபடர்கள், பற்றி - பிடித்துக்கொண்டு, எற்றி - ஹிம்ஸித்து, வைத்து - ஓரிடத்

(234) திருவா. 5.9.11. (236) பெரிய-திரு. 1.6 4.

திலே பொகட்டு, செம்பினுல் - செம்பாலே, இயன்ற - செய்யப்பட்டதாய், எரி எழுகின்ற - நெருப்புப்பொறி வீசாநின்றுள்ள, பாவையை - ஒரு ஸ்த்ரீ ப்ரதிமையை (முன்னே நிறுத்தி), பாவீ - பாபீ, தழுவு - (இத்தைத்) தழுவக் கடவாய், என - என்று, மொழிவதற்கு - சொல்லுகிற சொற்களுக்கு, அஞ்சி - பயந்து, உன் திருவடிவந்து அடைந்தேன்—.

237. தாயே தந்தையென்றும் தாரமே கிளைமக்களென்றும்
நோயே பட்டொழிந்தே னுன்னைக் காண்பதோ ராசையினல்
வேயேய் பூம்பொழில் சூழ் விரையார் திருவேங்கடவா
நாயேன் வந்தடைந்தேன் நல்கியாளென்னைக் கொண்டருளே.

வேய் - மூங்கில்கள், ஏய் - நெருங்கி யிருப்பதாய், பூ - புஷ்பித்து விரை ஆர் - பரிமளம் மிக்கிருப்பதான, பொழில் சூழ் - சோலையாலே சூழப்பட்டிருக்கிற, திருவேங்கடவா - ஸ்ரீவேங்கடாத்ரியை நிரூபகமாக வுடையவனே, தாயே என்றும் - (தாயல்லாதாளைத்) தாயென்றும், தந்தை யென்றும் - (தந்தையல்லாதானைத்) தகப்பனென்றும், தாரமே யென்றும் - (மனையாளல்லாதவளை) மனையாட்டி யென்றும், கிளையே யென்றும் - (பந்துக்களல்லாதவர்களை) பந்துக்களென்றும், மக்களே யென்றும் - (மக்களல்லாதாரைப் பிள்ளைகளென்றும் நினைத்து, நோய்பட்டு ஒழிந்தேன் - அநர்த்தப்பட்டுப் போந்தவனுப், நாயேன் - நாய்போலே மிகத்தண்ணியனுன நான், உன்னை - நிருபாதிக பந்துவான தேவரீரை, காண்பது - காணவேணு மென்கிற, ஓர் ஆசையினல்- ஒரு ஆசையாலே, வந்து - (தேவரீர் திருவடிகளிலே) வந்து, அடைந்தேன் - சரணம் புகுந்தேன், என்னை - தாஸபூதனுன வென்னை, நல்கி - க்ருபை செய்து, ஆள்கொண்டருள் - அடிமை கொண்டருளவேணும்.

238. தாவளந் துலகமுற்றும் தடமலர்ப் பொய்கைபுக்கு
நாவள நவின்றங்கேத்த நாகத்தின் நடுக்கந் தீர்த்தாய்
மாவளம் பெருகி மன்னு மறையவர்வாழும் நாங்கைக்
காவளம் பாடிமேய கண்ணனே களைகண்ணீயே.

உலகம் முற்றும் - (ஸ்ரீகஜேந்திராழ்வான்) எல்லா லோகங்களையும், தாவளந்து-தாவித் திரிந்து, (அப்பொழுது காணப்பட்ட), தடம் - பெரிதான, மலர் - பூவையுடைய, பொய்கை - (ஒரு) மடுவிலே, புக்கு - இழிந்து, அங்கு - அந்தப் பொய்கையிலே (இருந்து), நா - நாவுக்கு, வளம் - அலங்காரமான திருநாமத்தை, நவின்று - சொல்லி, ஏத்த - ஸ்தோத்ரம் செய்யா நிற்க, நாகத்தின்- (அந்த) யானையினுடைய, நடுக்கம் - பயத்தை, தீர்த்தாய் - போக்கினவனே, மாவளம் - அதிசஸம்பத்தானது, பெருகி - விருத்தியடைந்து, மன்னு - பொருந்தியிருக்கிற, மறையவர் - ப்ராஹ்மணர்கள், வாழும் - ஸுகமாக வர்த்திக்கிற, நாங்கை - திருநாங்கூரிலுள்ள, காவளம்பாடி - திருக்காவளம்பாடி யென்னும் திவ்யதேசத்திலே, மேய - பொருந்தி வர்த்திப்பவனுன, கண்ண

(237) பெரிய-திரு. 1-9-1. (238) பெரிய. திருமொ. 4-6-1.

னே - க்ருஷ்ணனே, நீயே - ஆச்ரிதபக்ஷபாதியான நீயே, களைகண் - ரக்ஷகனாகவேணும்.

239. ஏழை யேதலன் கீழ் மகனென்று
திரங்கி மற்றவற் கின்னருள் சுரந்து
மாழை மான் மடநோக்கி யுன்தோழி
உம்பி யெம்பி யென் றொழிந்திலை உகந்து
தோழன் நீ யெனக் கிங்கொழி யென்ற
சொற்கள் வந்தடியேன் மனத்திருந்திட
ஆழிவண்ண நின்னடியிணை யடைந்தேன்
அணிபொழில் திருவரங்கத் தம்மானே.

ஏழை - விஷய சபலன் (அஜ்ஞன்); ஏதலன் - சத்ரு, கீழ் மகன் - நீச ஜாதி, என்று - என்று நினையாமல், இரங்கி - தயை பண்ணி, மற்று - அதுக்கு மேலே, அவற்கு - அந்த குஹப்பெருமாள் விஷயத்தில், இன் - இனிதான (ஸ்வயம் ப்ரயோஜநமான), அருள் - க்ருபையை, சுரந்து - பண்ணி, மாழை - முக்தமான, மான் - மானினுடைய, மடம் - ம்ருதுவான, நோக்கி - கண்கள் போன்ற கண்களையுடைய இந்த ஸீதை, உன் தோழி - உனக்கு ஸகி' உம்பி - உனக்குத் தம்பியான லக்ஷ்மணன், எம்பி - என்னுடைய தம்பி, என்று - என்று சொன்ன இவ்வளவு மாத்ரத்தில், ஒழிந்திலை - விடாதவனாய்க்கொண்டு, உகந்து - ஆதரத்துடனே, நீ - நீ, எனக்கு - எனக்கு, தோழன் - ஸ்நேஹிதன், இங்கு ஒழி - இங்கே நிற்கக் கடவாய், என்ற சொற்கள் - என்று சொன்ன உக்திகள், வந்து - கர்ணகர்ணிகையாக வந்து, அடியேன் - தாஸபூதனான என்னுடைய, மனத்து - மநஸ்ஸில், இருந்திட - பொருந்தியிருக்க (அதிலீடுபட்டு), ஆழி - ஸமுத்ரம் போன்ற, வண்ண - ஸ்வபாவத்தை யுடையவனே, அணி - அலங்காரமான, பொழில் - சோலைகள் சூழ்ந்த, திருவரங்கத்து - திருவரங்கத்தில் கண்வளர்ந்தருளுகிற, அம்மானே - ஸ்வாமியே, நின் அடியிணை - உன் இரண்டு திருவடிகளை, அடைந்தேன் - சரணமாகப் புகுந்தேன்.

240. பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவாவ ஶிஷ்யதே ।
ஸர்வம் பூர்ணம் ஸஹோம் ॥

பூர்ணஸ்ய - அநந்தாவதாரங்களுக்கும் மூலமான வ்யூஹ வாசுதேவனிடமிருந்து, பூர்ணம் - கல்யாண குணங்களாலே பூர்ணமான அர்ச்சாவதாரமே, அவசிஷ்யதே - பரத்வாதிகளில் சரமமாயிருக்கிறது. ஓம் - ப்ராப்யமான அர்ச்சாவதாரத்தில், ஸர்வம் - ஸர்வ குணங்களும், ஸஹ பூர்ணம் - பூர்ணமாயிருக்கிறது.

241. வாஸுதேவோஸி பூர்ண: ॥

---

(239) பெரிய-திரு. 5-8-1. (240) கடவல்லி.
(241)

ஹே வாஸுதேவ - ஸர்வ வ்யாபியான தேவரீர், பூர்ண: - எல்லா குணங்களோடு, அஸி - இருக்கிறீர்.

242. நிகரில் புகழாய் ... ... 166-வது இலக்கம் காண்க.

243. தஸ்ய ச்சயா மஹாதேஜா புங்க்தே வை பக்தவத்ஸல: ।
ஸ்நாநம் பாநம் ததா யாத்ராம் குருதே வை ஜகத்பதி: ॥
ஸ்வதந்த்ரஸ் ஸஜகந்நாதோப் யஸ்வதந்த்ரோ யதா ததா ।
ஸர்வ சக்திர் ஜகத் தாதாப் யசக்த இவ சேஷ்டதே ॥

பக்தவத்ஸல: - ஆச்ரிதர்களுடைய தோஷத்தைப் பாராதவனாயிருக்கிற, மஹாதேஜா: - பெருமதிப்பனான ஸர்வேச்வரன், தஸ்ய ச்சயா - ஆச்ரிதருடைய இச்சையாலே, புங்க்தே வை - புஜியா நின்றான், ஜகத்பதி: - ஜகத்துக்கு ஸ்வாமியானவன், (ஆஸ்ரிதர்களுடைய இச்சையாலே), ஸ்நாநம் - ஸ்நாநத்தையும், பாநம் - தாஹசாந்தியையும், ததா யாத்ராம் - அப்படியே யாத்ரையையும், குருதே - பண்ணுகிறான், ஸ: ஜகந்நாத: - அந்த ஜகந்நாதன், ஸ்வதந்த்ரோபி - ஸ்வதந்த்ரனாயிருக்கச்செய்தேயும், அஸ்வதந்த்ர யதா - ஸ்வதந்த்ரமில்லாதவன் எப்படியிருப்பனோ, ததா - அப்படியிருக்கிறான், ஜகத்தாதா - ஸர்வ காரணபூதன், ஸர்வ சக்தோபி - ஸர்வ சக்தனாயிருக்கச்செய்தே, அசக்த இவ - சக்தியற்றவன்போல, சேஷ்டதே - நடிக்கிறான்.

244. ஆஸ்தாம் தே குணராசிவத் குணபரீவாஹாத்மநாம்
ஜந்மநாம் ஸங்க்யா பௌம நிகேதநேஷ்வபி குடீகுஞ்
ஜேஷு ரங்கேஸ்வர । அர்ச்ய: ஸர்வ ஸஹிஷ்ணு ரர்ச்
சக பராதீநாகிலாத்ம ஸ்த்திதி: ப்ரீணீஷே ஹ்ருதயாலுபி:
தவ தத: சீலாத் ஜடீ பூயதே ॥

ரங்கேஸ்வர - ஸ்ரீரங்கநாதனே, குணராசிவத் - (உமது ஞாநம் சக்தி முதலிய) குணங்கட்கு எல்லையில்லாமை போலவே, குண பரீவாஹ ஆத்மநாம் - (தயை வாத்ஸல்யம் முதலிய) குணங்களுடைய ப்ரவாஹ ரூபங்களான [தேவரீரது தயாதி குணங்களைப் பிரகாசப்படுத்துவதான], ஜந்மநாம் - பிறவிகளுடைய, ஸங்க்யா - எண்ணிக்கையானது, ஆஸ்தாம் - (எல்லையில்லாததாக) இருக்கட்டும், பௌம - பூமியிலுள்ள, நிகேதநேஷு - திருக்கோயில்களிலும், குடீ - திருமாளிகைகளிலும், குஞ்ஜேஷு - (ருஷிகளுடைய) பர்ணசாலைகளிலும், அர்ச்ய: - (எல்லாராலும்) அர்ச்சிக்கத் தக்கவரும், ஸர்வ ஸஹிஷ்ணு: - எல்லா அபசாரங்களையும் பொருக்குந்தன்மை யுடையவருமான, த்வம் - தேவரீர், அர்ச்சக பராதீந - அர்ச்சகர்கட்குப் பராதீநமாயிருக்கிற, அகில - ஸமஸ்தமான, ஆத்ம ஸ்திதி - தன்னுடைய நிலையையுடையவராய்க்கொண்டு, ப்ரீணீஷே - ஸந்தோஷப் படுகிறீர், [மாலை கந்தம் வஸ்திரம் அலங்காரம் முதலியவற்றினால் அர்ச்சிக்கிறவன் எதைை பகவனுகிய உமக்கு ஸமர்ப்பிக்

(243) விஷ்வக்ஸேந ஸம்ஹிதை. (244) ஸ்ரீரங்க உத். 74.

கின்றுனே அதனை உமக்குப் போக்யமாக நீர் ஸ்வீகரிக்கிறீர் என்றபடி], தவ - தேவரீருடைய, தத: - அந்த சீல குணத்தினால், ஹ்ருதயாளுபி: - நல்ல யநஸ்விகர்கள், ஜடீபூயதே - ஸ்தம்பிக்கிறார்கள், [உமது இப்படிப்பட்ட சீல குணத்தை யநுஸந்தித்து பக்தி பரவசர்கள் திக்ப்ரமை கொள்ளுகிறார்க ளென்பது கருத்து].

245. ஏவம் பஞ்ச ப்ரகாரோஹ மாத்மநாம் பததாமத:। பூர்வஸ் மாதபி பூர்வஸ்மாத் ஜ்யாயாம்ஸ்சைவோத்தரோத்தர: ॥
ஸௌலப்யதோ ஜகத்ஸ்வாமீ ஸுலபோஹ்யுத்தரோத்தர:॥

ஏவம் - இப்படி, பஞ்ச ப்ரகார: - (பரத்வம் வ்யூகம் விபவம் அந்தர்யாமித்வம் அர்ச்சாவதாரமாகிய) ஐந்து ப்ரகாரமாயிருக்கிற, அஹம் - நான், அத: பததாம் - ஸம்ஸாரத்தில் அழிந்துகிடக்கிற, ஆத்மநாம்-ஆத்மாக்களைக்குறித்து, பூர்வஸ்மாத் அபி பூர்வஸ்மாத் - பூர்வ பூர்வத்தைக்காட்டிலும், உத்தரோத்தர:- மேன்மேல், ஜ்யாயான் - சீலாதிகுணங்களால் அதிசயித்து வருகிறேன், ஜகத் ஸ்வாமீ - உலகத்திற்கு ஸ்வாமியானவன், உத்தரோத்தர: - மேன்மேல், ஸௌலப்யத: - ஸௌலப்ய குணத்தால், ஸுலப: ஹி - ஸுலபனாயிருக்கிறானன்றோ.

246. வட்கிலளிறையும் மணிவண்ணு வென்னும்
வானமே நோக்கு மையாக்கும்
உட்குடை யசுர ருயிரெல்லா முண்ட
வொருவனே யென்னு முள்ளுருகும்
கட்கிலீ உன்னைக் காணுமா றருளாய்
காகுத்தா கண்ணனே யென்னும்
திட்கொடி மதிள்சூழ் திருவரங்கத்தாய்
இவள்திறத் தென் செய்திட்டாயே.

இறையும் - அல்பமும், வட்கு - தனக்குரிய நாணத்தை, இலள் - உடைத்தா யிருக்கின்றிலள், மணிவண்ணு - மணிவண்ணனே, என்னும் - என்பாள், வானமே நோக்கும் - நீ வருவை யென்று ஆகாசத்தையே பாரா நின்றாள், மையாக்கும்-நீ வரக் காணாமை யாலே மயங்குவள், (தடையினால் தாமதித்தது என்னுமைக்கு), உட்கு - மிடுக்கை, உடை - உடையராகிய, அசுரர் - அசுரர்களுடைய, உயிர் யெல்லாம் - ப்ராணங்களை யெல்லாம், உண்ட - க்ரஹித்த, ஒருவனே - ஒப்பற்ற வீரனே, என்னும் - என்னு நின்றாள், (அந்த சாமர்த்தியத்தை நினைத்து), உள் உருகும் - மன முருகா நின்றாள், கட்கு இலீ - கண்ணுக்குக் காணவொண்ணாத நீ, உன்னை - கண்டல்லது தரிக்க வொண்ணாத உன்னை, காணும் ஆறு - காணும்படி, அருளாய் - கிருபை பண்ணியருள வேணும், (நீ காட்ட நினைத்தபோது), காகுத்தா - சக்ரவர்த்தித் திருமகனே,

(245) விஷ்வக்ஸேந ஸம்ஹிதை. (246) திருவா. 7-2-3.

கண்ணனே - கிருஷ்ணனே, என்னும் - என்று நின்றாள், (அதற்கு பிற்பட்டாரு மிழவாதபடி) திண் - திடமுள்ளதாய், கொடி - கொடிகளை உடைத்தான, மதிள் சூழ்-மதிள் சூழ்ந்த, திருவரங்கத்தாய் - கோயிலிலே எழுந்தருளி யிருப்பவனே, இவள் திறத்து - இவள் விஷயத்தில், என் செய்திட்டாய் - நீ யாது செய்தனை (என்று திருத்தாயார் பெரிய பெருமாளைக் குறித்து கேட்கிறாள்).

247. முளைக்கதிரைக் குறுங்குடியுள் முகிலை மூவா
மூவுலகுங்கடந் தப்பால் முதலாய்நின்ற
அளப்பரிய வாரமுதை யரங்கமேய
வந்தணனை, யந்தணர்தஞ் சிந்தையானை
விளக்கொளியை மரதகத்தைத் திருத்தண்காவில்
வெஃகாவில் திருமாலைப் பாடக்கேட்டு
வளர்த்ததனால் பயன்பெற்றேன் வருகவென்று
மடக்கிளியைக் கைகூப்பி வணங்கினாளே.

முளை கதிரை - பால ஸூர்யனை யொத்தவனாய், குறுங்குடியுள் முகிலை- திருக்குறுங்குடியில் நித்யவாஸம் பண்ணுகிற மேகத்தை யொத்தவனாய், மூவா மூவுலகும் கடந்து - நித்யமான த்ரிவித ஆத்ம வர்க்கத்துக்கும் அவ்வருசானவனாய், அப்பால் - பரமபதத்திலே, முதலாய் - (உபய விபூதிக்கும்) காரணபூதனாய்க் கொண்டு, நின்ற - எழுந்தருளி யிருக்கிறவனாய், அளப்பரிய - (ஸ்வரூப ரூப குணங்களால்) அளவிடக் கூடாதவனாய், ஆரமுதை - அமிர்தக்கடல் போலே நிரதிசய போக்யபூதனாய், அரங்கம் - கோயிலிலே, மேய - நித்யவாஸம் பண்ணுகிற, அந்தணனை - பரிசுத்தனாய், அந்தணர் தம் சிந்தையானை - பரிசுத்தராநுடைய ஹ்ருதயத்திலே நித்யவாஸம் பண்ணுமவனாய், விளக்கொளியை-விளக்கொளிபோலேநெஞ்சிலே ப்ரகாசிக்குமவனாய், திருத்தண்காவில் - திருத்தண்கா என்னும் பதியில், மரதகத்தை - மரதகம்போலே குளிர்ந்த வடிவையுடையனான பச்சைவண்ணராய், வெஃகாவில் - திருவெக்காவிலே கண் வளர்ந்தருளுகிறவருமான, திருமாலை - ஸ்ரீய:பதியான சர்வேஸ்வரனை, பாட - ப்ரீதிப்ரகர்ஷத்தாலே பாட, கேட்டு - ப்ரீதியுடன் கேட்டு, வளர்த்ததனால்-உன்னை வளர்த்ததனாலுண்டான, பயன் - ப்ரயோஜனத்தை, பெற்றேன் - பெற்றேன், வருக என்று - இங்கே வாவென்றழைத்து, மடக்கிளியை-பவ்யமான கிளியை, கைக்கூப்பி - அஞ்சலி பண்ணி, வணங்கினாள் - அதின் காலிலும் விழுந்தாள்.

248. பாலாழி நீகிடக்கும் பண்பையாம் கேட்டேயும்
காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்—நீலாழிச்
சோதியாயாதியாய் தொல்வினை யெம்பால் கடியும்
நீதியாய் நிற்சார்ந்து நின்று.

---

(247) திருநெ. 14. (248, பெரிய திருவ. 34.

நீல - கறுத்த, ஆழி - கடற்போன்ற, சோதியாய் - தேஜஸ்ஸையுடையவனே, ஆதியாய் - ஜகத்காரணபூதனே, எம்பால் - எம்மிடத்தில், தொல் - அநாதியாயுள்ள, வினை - பாபத்தை, கடியும் - போக்குகையை, நீதியாய் - ஸ்வபாவமாக வுடையவனே, நின் - உன்னை, சார்ந்து நின்று - பற்றிநின்று, பால் ஆழி - திருப்பாற்கடலில், நீ - நீ, கிடக்கும் - சயனித்த, பண்பை - அழகை, யாம் - நாம், கேட்டேயும் - கேட்கும்போதே, கால் ஆழும் - கால் (மேலெழாமல்) அழுந்தும், நெஞ்சு - நெஞ்சு, அழியும் - சிதிலமாகும், கண் சுழலும் - கண் ப்ரமிக்கும்.

249. விண்மீதிருப்பாய் மலைமே னிற்பாய் கடற்சேர்ப்பாய்
மண்மீதுழல்வா யிவற்றுளெங்கும் மறைந்துறைவாய்
எண்மீதியன்ற புறவண்டத்தா யெனதாவி
உண்மீதாடி யுருக்காட்டாதே யொளிப்பாயோ.

விண்மீது - (நித்யாஸ்ரிதர்க்கு அனுபாவ்யனாய்க்கொண்டு மேன்மைக் கெல்லையான) பரமபதத்திலே, இருப்பாய் - பரம்பொருளாகி எழுந்தருளியிருப்பவனே, (தாழ்ந்தாருக்கு முகங் கொடுக்கைக்காக), மலைமேல் - நீர்மைக் கெல்லைநிலமான திருமலையிலே, நிற்பாய் - அர்ச்சா ரூபியாகி நிற்பவனே, (பிரமன் முதலியோர்களுக்கு ஆஸ்ரயணீயனாகும்பொருட்டு), கடல்-திருப்பாற் கடலிலே, சேர்ப்பாய்-அநிருத்தரூபமாக வியூகங்கொண்டு கண்வளர்ந்தருளுமவனே, (அளவற்றவரை அழகாலே வசீகரிக்கும்பொருட்டு ராமக்ருஷ்ணாதி விபவரூபனாகி), மண்மீது - பூமியிலே அவதரித்து, உழல்வாய் - அங்குள்ளாரோடு ஸஜாதீயனாய் சஞ்சரிப்பவனே, இவற்றுள் - இந்த உலகங்களுக்குள், எங்கும் - சகல பதார்த்தங்களிலும், மறைந்து - (அந்தராத்மபூதனாய் இந்திரியங்களுக்கு) தோன்றாதபடி, உறைவாய் - வர்த்திப்பவனே, எண் மீது - எண்ணுக்கு மேலே, இயன்ற - போகக் கடவதான, புறம் - புறம்புண்டான, அண்டத்தாய் - அண்டங்களிலும் உளனான நீ, எனது ஆவி - என்னுடைய ப்ராணத்துக்கு இடமான நெஞ்சுக்குள்ளே, உள் மீது ஆடி - உள்ளும் புறம்புஞ் சஞ்சரித்து, உருக் காட்டாதே - வடிவைக் கண்ணுக்குக் காட்டாதே, ஒளிப்பாயோ - மறைப்பாயோ.

249. [1] பொன்னானாய் பொழிலேழுங் காவல்பூண்ட
புகழானா யிகழ்வாய தொண்டனேன் நான்
என்னானா யென்னானா யென்னலல்லால்
என்னறிவ னேழையேன், உலகமேத்தும்
தென்னானாய் வடவானாய் குடபாலானாய்
குணபால மதயானா யிமையோர்க்கென்னும்

(249) திருவா. 6-9-5.　　(249—1) திருநெடு. 10.

முன்னானாய் பின்னானார் வணங்கும் சோதி
திருமூழிக்களத்தானாய் முதலானாயே.

உலகமேத்தும் - லோகத்தார் ஸ்துதிக்கத் தக்கதான, தென்னானாய் - தென் திருமாலிருஞ்சோலை மலையிலே நின்றருளினவனே, வடவானாய் - வட திருவேங்கடத்திலே நின்றருளினவனே, குடபாலானாய் - மேற்றிசையான (கோயிலிலே) கண்வளர்ந்தருளினவனே, குணபால மதயானாய் - கீழ்த்திசையான திருக்கண்ணபுரத்திலே மதயானை போலே செருக்குத் தோன்ற நின்றவனே. இமையோர்க்கு - நித்யஸூரிகளுக்கு, என்றும் - எக்காலத்திலும், முன்னானாய் - கண்ணாற் கண்டநுபவிக்கலாம்படி முன்னே யிருப்பவனே. பின்னானார் - அவதாரத்திற்குப் பிற்பட்டவர்கள், வணங்கும் - ஆஶ்ரயிக்கத் தக்கதாக, சோதி - தேஜோமயனாய், திருமூழிக்களத்தானாய் - திருமூழிக்களத்திலே வர்த்திக்கிறவனே, முதலானாய் - ஜகத்காரண பூதனே, பொன்னானாய் - பொன்போலே எல்லாப்படியாலும் எனக்கு உபகரிக்குமவனே, பொழிலேழும் காவல் பூண்ட - ஏழுலோகங்களையும் ரக்ஷிக்கையால் வந்த, புகழானாய் - குணப்ரதையை யுடையவனே, இகழ்வாய - இகழ்வையே வடிவாகவுடைய, தொண்டனேன் நான் - தாஸபூதனான நான், என்னானாய் என்னானாய் என்னலல்லால் - என்னுடைய ஆனாய் என்னுடைய ஆனாய் என்று சொல்லுமித்தனையல்லது, ஏழையேன் - உன் விஷயத்தில் அதிசபலனான நான், என்னறிவன் - (உன்னுடைய குணசேஷ்டிதங்களில்) எத்தை யறிவேன்.

250. ஹௌம நிகேதநே ... ... 244-வது இலக்கம் காண்க.

251. ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு யா புத்தி: பாவிதா ந்ருணாம் ।
தாமேவ பஜதே ஜந்து ருபதேஶோ நிரர்த்தக: ॥

ந்ருணாம் - மனிதர்களுக்கு, யா புத்தி: - எந்த புத்தியானது, ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு - அநேக ஜந்மங்களில், பாவிதா - வாஸனையோடு கூடிக்கொண்டிருக்கிறதோ, தாம் ஏவ - அந்த புத்தியையே, ஜந்து: - ஜந்துவானவன், பஜதே - அடைகிறான், (ஆகையால்), உபதேஶ: - ஶாஸ்த்ரார்த்த உபதேசம், நிரர்த்தக: - ப்ரயோஜந மற்றது.

252. சிலம்படி யுருவில் கருநெடுங் கண்ணார்
திறத்தனா யறத்தையே மறந்து
புலம்படிந் துண்ணும் போகமே பெருக்கிப்
போக்கினேன் பொழுதினை வாளா
அலம்புரி தடக்கை யாயனே மாயா
வானவர்க் கரசனே வானோர்
நலம்புரிந் திறைஞ்சும் திருவடியடைந்தேன்
நைமிசாரணியத் துளெந்தாய்.

---

(251) (252) பெரிய. திரு. 1-6-2.

நைமிசாரணியத்து ளெந்தாய். - சிலம்பு - சிலம்பையணிந்து, உருவில் - அழகாயிருந்துள்ள, அடி - பாதங்களையும், கருநெடு - கறுத்து நீண்ட, கண்ணார் திறத்தனாய் - கண்களையுமுடைய ஸ்திரீகள் பக்கலிலே ஆஸக்தனாய், அறத்தை - தர்ம ரூபியான உன்னை, மறந்தே-சற்றேனும் நினையாமல், புலன் - இந்திரியங்கள், படிந்து - பொருந்தி, உண்ணும் - அனுபவிக்கிற, போகமே - போகத்தையே, பெருக்கி - மேன்மேல் பெருகச்செய்து, பொழுதினை - காலத்தை, வாளா - வ்யர்த்தமாக, போக்கினேன் - கழித்து விட்டேன், அலம்புரி - கலப்பையாகிற ஆயுதம் தரித்த, தடம் - பரந்த, கை - திருக்கைகளை யுடையனாய், ஆயனே - இடைச் சாதியில் திருவவதரித்தவனே, மாயா - ஆஸ்சர்யச் செய்கை யுடையவனே, வானவர்க்கு - தேவர்களுக்கு, அரசனே - தலைவனானவனே, வானோர் - நித்ய ஸூரிகள், நலம் புரிந்து - அன்பை யுடையராய்க் கொண்டு, இறைஞ்சும் - ஆஸ்ரயியா நின்றுள்ள, திருவடி - (தேவர்) திருவடிகளை, அடைந்தேன் - அடைக்கலமாகக் கிட்டினேன்.

253.　சூதினை பெருக்கிக் களவினைத் துணிந்து
　　சுரிகுழல் மடைந்தையர் திறத்துக்
காதலே மிகுத்துக் கண்டவா திரிந்த
　　தொண்டனேன் நமன்றமர் செய்யும்
வேதனைக் கொடுங்கி நடுங்கினேன் வேலை
　　வெண்டிரை யலமரக் கடைந்த
நாதனே வந்துன் திருவடியடைந்தேன்
　　நைமிசாரண்யத்து ளெந்தாய்.

வெள் - வெளுத்த, திரை - அலைகளையுடைய, வேலை - திருப்பாற்கடலை, அலமர - கலங்கும்படி, கடைந்த - மதனம்பண்ணின, நாதனே - ஸ்வாமியே, நைமிசாரண்யத்துள் - நைமிசாரண்யத்தில் வந்து, எந்தாய் - எனக்கு உபகாரகனானவனே, சூதினைப் பெருக்கி - பெருக்கச்சூதாடியும், களவினைத் துணிந்து - களவுகாண அத்யவஸித்தும், சுரி - சுருண்ட, குழல் - மயிர் முடியை யுடைய, மடந்தையர் திறந்து - ஸ்திரீகள் பக்கலிலே, காதல் மிகுத்து - மிகுந்த ஆசையை யுடையனாய், கண்ட ஆ - கண்ணுக்குத் தோற்றின விஷயங்களிலே, திரிந்த - யதேச்சமாக நடந்து, தொண்டனேன் - (அவர்களுக்கு) பரிசர்யைப் பண்ணிப்போந்த நான், நமன் தமர் - யமபடரானவர்கள், செய்யும் - பண்ணுகிற, வேதனைக்கு-ஹிம்ஸையை நினைத்து, ஒடுங்கி - அவயவங்களெல்லாம் தம் தம் நிலை குலைந்து, நடுங்கினேன்-நடுங்கினவனாய், உன் திருவடி - தேவரீர் திருவடிகளிலே, வந்து அடைந்தேன் - வந்து சரணம் புகுந்தேன்.

254. } சூதனாய்க் கள்வனாகித் தூர்த்தரோ டிசைந்த காலம்
255. } மாதரார் கயற்கணென்னும் வலையுட்பட் டழுந்துவேனைப்
　　போதரே யென்று சொல்லிப் புந்தியிற் புகுந்து தன்பால்
　　ஆதரம் பெருக வைத்த வழகனூ ரரங்க மன்றே.

(253) பெரிய. திரு. 1-6 3.　　(254—255) திருமாலை. 16.

சூதன் ஆய் - ஈச்வரனும் தர்மாதர்மங்களுமில்லை என்று சொல்லுமவனாய், கள்வன் ஆகி - ஈச்வர சேஷமான ஆத்மவஸ்துவை யென்னதென்று சொல்லுமவனாய், தூர்த்தரோடு - விஷயாந்தர ப்ரவணரோடே, இசைந்த காலம் - பொருந்திப் போந்த காலத்திலே, மாதரார் - ஸ்த்ரீகளுடைய, கயல் - கயல்போலே அழகியதான, கண் என்னும் - கண்களாகிற, வலையுள்பட்டு - வலையிலே அகப்பட்டு, அழுந்துவேனை - அழுந்திக்கிடக்கிற வென்னை, போதரே என்று சொல்லி - வாவென்று சொல்லி, புந்தியில் புகுந்து - என் மநஸ்ஸிலே வந்து புகுந்து, தன்பால் - தன் விஷயத்திலே, ஆதரம் பெருக வைத்த - அன்பை மிகவும் பெருகப் பண்ணின, அழகன் ஊர் - அழகை நிரூபகமாக வுடையவனுடைய தேசம், அரங்கம் அன்றே - கோயிலன்றோ வென்கிறார்.

256. ஆறெனக்கு ... ... 232-வது இலக்கம் காண்க.

257. கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்
உண்டவாய னென்னுள்ளங் கவர்ந்தானை
அண்டர்கோ னணியரங்க னென் னமுதினைக்
கண்டகண்கள் மற்றொன் றினைக் காணாவே.

கொண்டல் வண்ணனை - நீருண்ட மேகம்போலே யிருக்கிற திருநிறத்தை யுடையனாய், கோவலன் ஆய் - இடையர்க் குலத்திலே வந்து திருவவதரித்து, வெண்ணெய் உண்ட - வெண்ணெயை யமுது செய்த, வாயன் - திருப்பவளத்தை யுடையனாய், என் உள்ளம் கவர்ந்தானை - சதிரிள மடவாரை மதித்துப்போந்த என் மநஸ்ஸை அபஹரித்தவனாய், அண்டர்கோன் - அண்டாந்தர்வர்த்திகளான ஆத்ம வர்க்கத்துக்கு நிர்வாஹகனாய், அணி - ஸம்ஸாரத்துக்கு ஆபரணமான, அரங்கன் - கோயிலிலே வந்து கண் வளர்ந்தருளுமவனாய், என் அமுதினை - எனக்கு அம்ருதம்போலே பரம போக்யனானவனை, கண்ட கண்கள் - காணப்பெற்ற கண்களானவை, மற்று ஒன்றினை காணா - வேறொன்றைக் காணா வென்கிறார், ஏ- ஆஶ்சர்யம்.

258. தானேயாகிநிறைந் தெல்லா வுலகு முயிரும் தானேயாய்
தானேயா னென்பானாகித் தன்னைத்தானே துதித்து எனக்குத்
தேனேபாலே கன்னலே யமுதே திருமாலிருஞ்சோலை
கோனேயாகி நின்றொழிந்தா னென்னைமுற்று முயிருண்டே.

என்னை - என்னை, முற்றும் - முழுதும், உயிர் உண்டு - ஆத்மபோகத்தைப் பண்ணி, (அத்தாலே), தானே ஆகி - ப்ரதாநனாய்க்கொண்டு, நிறைந்து - பரிபூர்ணனாக, எல்லா உலகும் - எல்லா உலகங்களும், உயிரும் - அவற்றிலுள்ள ஜீவ ராசிகளும், தானே ஆய் - தானே யாம்படி அவற்றிற்கு அந்தராத்மாவாகி, (அப்படி பொதுவாகவே யன்றி), யான் என்பான் - நான் என்கிற பொருளும், தானே ஆகி - தானேயாம்படியாய்,(அந்த பிரிவற்ற பாவத்தாலே)

(257) அமலனாதி. 10. (258) திருவா. 10-7-2.

தன்னை - துதிக்கப்படுகிற தன்னைப்பற்ற, தானே துதித்து - துதிப்பவனும்தானேயாயிருந்து துதித்து, (அத்தால் தனக்குண்டான வுகப்பை), எனக்கு - எனக்கு பிரகாசிப்பிக்கையாலே, தேனே - தேனும், பாலே - பாலும், கன்னலே - கருப்பஞ்சாறும், அமுதமே - அமிர்தமுமாய் (அந்த சகல போக்யமும்), திருமாலிருஞ்சோலை - திருமாலிருஞ்சோலையி லெழுந்தருளி யிருக்கிற; கோனே ஆகி - ஸ்வாமியான தானேயாகி, நின்று ஒழிந்தான் - நின்று விட்டான்.

259. காலாழும் ... ... 248-வது இலக்கம் காண்க.

260. இட்டகா லிட்டகையளா யிருக்கும்
எழுந்துலாய் மயங்கும் கைகூப்பும்
கட்டமே காதலென்று மூர்ச்சிக்கும்
கடல்வண்ணா! கடியை காணென்னும்
வட்டவாய்நேமி வலங்கையா! என்னும்
வந்திடா யென்றென்றே மயங்கும்,
சிட்டனே! செழுநீர்த் திருவரங்கத்தாய்!
இவள்திறத்து என் சிந்தித்தாயே?

(ஆர்த்தி மிகுதியாலே பரவசப்பட்டு) இட்ட இட்ட - இட்டுவைத்த இடத்திலே கிடக்கும்படியான, கால் - காலையும், கைகள் - கைகளையும், ஆய் - உடையளாய், இருக்கும் - இருப்பாள், (ஆர்த்தி முதிர்ந்தபடியாலே ஸந்நிபதிதரைப்போலே), எழுந்து - பாரவஶ்யம் குலைந்தெழுந்து, உலாய் - உலாவி, மயங்கும் - பிறகு மோகிப்பாள், (காலமுணர்த்த மோகந்தெளிந்தவளவில் நீ வரக்கூடுமென்று), கைகூப்பும் - அஞ்சலி பண்ணுவாள், (நீ வரக் காணாமையாலே), காதல் - ஆசையானது, கட்டமே யென்று - கஷ்டமாயே யிருந்ததென்று வெறுத்து, மூர்ச்சிக்கும் - மூர்ச்சிப்பாள், கடல் வண்ணா - (தனக்குள்ளே எல்லாவற்றையு மொதுக்கி ரக்ஷிக்கும் பரப்புள்ள) கடலினது ஸ்வபாவத்தை யுடையவனே, கடியை - எனக்குக் காதுகனா யிராநின்றாய், என்னும் - என்னா நின்றாள், (ஆஶ்ரித ரக்ஷணத்தில்) வட்டவாய் - வட்டமாகிய வாயையுடைய, நேமி - திருவாழியை, வலங்கையா - வலக்கையிலுடையவனே, என்னும் - என்னா நின்றாள். (நடுவே களைப்பாறி), வந்திடாய் - கையுந் திருவாழியுமாய்க்கொண்டு வந்திடாய், என்றென்றே - என்று பலகாலுஞ் சொல்லி, மயங்கும் - அறிவழியா நின்றாள், (இப்படி இவளை வருத்தி), சிட்டனே - சிஷ்டபாவனை பண்ணி, செழுநீர் - செழிய நீரையுடைய, திருவரங்கத்தாய் - திருவரங்கத்தி லெழுந்தருளி யிருப்பவனே, இவள் திறத்து-இவள் விஷயத்தில், என் சிந்தித்தாய் - என்ன நினைத்திருக்கிறாய் (என்று திருத்தாயார் பெரிய பெருமாளைக்குறித்து கேட்கிறாள்).

(260) திருவா. 7.2.4.

261. அங்குற்றே னல்லேன் இங்குற்றே னல்லேன் உன்னைக் காணு
[மவாவில் வீழ்ந்து, நான்
எங்குற்றேனு மல்லேன் இலங்கைசெற்ற அம்மானே!
திங்கள் சேர் மணிமாட நீடு சிரீவர மங்கல நகருறை
சங்கு சக்கரத்தாய் தமியேனுக் கருளாயே.

அங்கு உற்றேன் அல்லேன் - (உபாயாநுஷ்டான முடையனாய்க்கொண்டு நீ யிருக்கிற) பரமபதத்தில்புகுந்தவ னல்லேன், இங்கு உற்றேன் அல்லேன் - (உபாயாநுஷ்டான மில்லாதவர் ஆறியிருக்கையன்றோ உள்ளதென்று நிரபேக்ஷனாய்) இருந்த இடத்தி லிருக்கிறேனல்லேன், உன்னை - போக்கியனான உன்னை, காணும் - அனுபவிக்கவேணு மென்கிற, அவாவில் - ஆசை என்னும் கடலில், வீழ்ந்து - விழுந்து, நான் - ஆற்றாமையை உடைய நான். எங்கு உற்றேனும் அல்லேன் - அந்நியரான லௌகிகர் நிலையில் ஒன்றிலும் சேர்ந்தவ னல்லேன், இலங்கை - ஆஸ்ரித விஷயத்தில் விரோதியான லங்கையை. செற்ற - அழித்து ஸ்வாதீனமாக்கிக்கொண்ட. அம்மானே - சுவாமியே, (பிற்பட்டார்க்கு உதவுகைக்காக), திங்கள் - சந்திரனோடு, சேர் - பொருந்தும்படி, மணி - மாணிக்க மயமான, மாடம் - மாளிகைகள், நீடு - வளர்கின்ற, சிரீவரமங்கல நகர் - சிரீவரமங்கல நகரிலே, உறை - நித்தியவாசம் பண்ணுகிற, சங்கு சக்கரத்தாய் - (ஆஸ்ரித விரோதிகளை அழிக்கத்தக்கதும் போக்கியமா யுள்ளதுமான) சங்கு சக்கரங்களை உடையவனே, தமியேனுக்கு - உன்னை யொழியத் துணையில்லாத எனக்கு, அருளாய் - கிருபைபண்ணி அருளவேண்டும்.

262. என்கொள்வன் உன்னைவிட்டென்னும் வாசகங்கள் சொல்லியும்
வன்கள்வனேன் மனத்தை வலித்துக் கண்ணநீர் கரந்து
நின்கணெருங்க வைத்தே எனதாவியை நீக்ககில்லேன்
என்கண் மலினமறுத்து என்னைக் கூவியருளாய் கண்ணனே.

உன்னை - பரமப்ரயோஜநபூதனான உன்னை, விட்டு - விட்டு, என் - என்ன ப்ரயோஜனத்தை, கொள்வன் - கொள்வேன், என்னும் என்கிற, வாசகங்கள் - பாசுரங்களை, சொல்லியும் - பலபடியாகச்சொல்லுவதும் செய்து, வன் - அநாதிஸித்தமாக ஆத்மாவை அபஹரித்த, கள்வனேன் - க்ருத்ரிமனான நான், மனத்தை - விஷயாந்தரங்களிலேபோன நெஞ்சை, வலித்து - வர வழித்து, கண்ணநீர் - அவற்றின் இழவால் பிறக்கும் கண்ணநீரையும், கரந்து - வாசநா நிவ்ருத்தியாலே மாற்றி, மனத்தை - அந்த நெஞ்சை, நின்கண் - நிரதிசயபோக்யனான உன்னிடத்திலே, நெருங்க வைத்து - நெருங்கவைத்து, எனது - என்னுடைய, ஆவியை - ஆத்மாவை, நீக்க - ஸம்ஸாரத்தில் நின்றும் விடுவிக்க, கில்லேன் - மாட்டுகிறிலேன், (இதுக்கு ஹேதுவான), என்கண் - என்னுடைய, மலினம் - அவித்யாதி தோஷத்தை, அறுத்து - போக்கி, என்னை - அசக்தனான என்னை, கண்ணனே - சோகித்தாரை "மாஶுச:" என்னும்

(261) திருவா. 5 7 2. (262) திருவா. 5-1-4.

க்ருஷ்ணனே, கூவியருளாய் - உன்பக்கலிலே அழைத்துக் கொண்டருள வேணும்.

263. ஊரவர்கவ்வை யெருவிட்டு அன்னைசொல் நீர்படுத்து
ஈரநெல் வித்திமுளைத்த நெஞ்சப் பெருஞ்செய்யுள்
பேரமர் காதல் கடல்புரைய விளைவித்த
காரமர்மேனி நங்கண்ணன் தோழி கடியனே.

ஊரவர் - ஊராருடைய, கவ்வை - பழி சொல்லாகிற, எரு இட்டு - எருவையிட்டு, அன்னை சொல் - தாயின் சொல்லாகிய, நீர் - நீரை, படுத்து - நிறுத்தி, ஈரம் - ஆசையாகிற, நெல் - தானியத்தை, வித்தி - விரைத்து, முளைத்த - அது பயிரான, நெஞ்சம் - மனமாகிற, பெருஞ் செய்யுள் - பெரிய கழனிக்குள்ளே, பேர் - பெரிய, அமர் - ஊர்ப்பூசலை யுடைத்தான, காதல் - மிகு விருப்பத்தை, கடல் புரைய - சமுத்திரத்தை நிகர்க்க, விளைவித்த - பலிக்கும்படி பண்ணின, கார் அமர் - கார்கால மேகத்தின் நிறம் பொருந்திய, மேனி - திருமேனியையுடைய, நம் கண்ணன் - நமக்கு பவ்யனான க்ருஷ்ணன், தோழி-அவன் குணங்களைச் சொல்லி மூட்டிவிட்ட தோழீ, கடியனே- இன்று அவன் குறைசொல்லிப் பழிக்கும்படி கடியனானானே (என்று நாயகி தன்மையை யடைந்து மடலூரும்படியில் உத்யோகிக்கிறார்).

264. என்னான்செய்கேன் யாரேகளைகண் என்னைஎன் செய்கின்றாய்
உன்னாலல்லால் யாவராலும் ஒன்றும் குறைவேண்டேன்
கன்னார் மதிள்சூழ் குடந்தைக்கிடந்தாய் அடியேனருவாணாள்
சென்னாள்எந்நாள் அந்நாள் உனதாள் பிடித்தே செலக்காணே.

நான் - அடியேன், என் செய்கேன் - (என் ரக்ஷணத்தின் பொருட்டு) என்ன செய்வேன், (வேறு தங்கள் காரியங்களைத் தாமறியாத சேதநருள்), களைகண் - ரக்ஷகராவார், யார் - யாவர், என்னை - அசக்தனான என்னை, என் செய்கின்றாய் - என்ன செய்ய இருக்கிறாய், உன்னால் அல்லால் - உன்னாலல்லது, யாவராலும் - வேறொருவராலும், ஒன்றும் குறை - ஒரு குறையையும், வேண்டேன் - நிரம்புவதாக வேண்டியிரேன், கன் ஆர் - தொழில் நிரம்பிய, மதிள் சூழ் - மதிள் சூழ்ந்த, குடந்தை - திருக்குடந்தையிலே, கிடந்தாய் - கண்வளர்ந்தருளினவனே, அடியேன் - உன்னடியேனான என்னுடைய, அரு - ஆத்மவஸ்து, வாழ் - உஜ்ஜீவிக்கிற, நாள் - காலம், செல் நாள் - கழிகின்ற நாள்கள், எந் நாள் - எத்தனை நாள், அந் நாள் - அந்த நாள்களெல்லாம், உனதாள் - உன் திருவடிகளை, பிடித்தே - பற்றிக்கொண்டே, செல்ல-நடக்கும்படி, காண் - பார்த்தருள வேண்டும்.

265. அவித்யாதோ தேவே பரிப்ருடதயா வா விதிதயா ஸ்வபக்தேர்
பூம்நாவா ஜகதி கதிமந்யாம விதுஷாம் கதிர் கம்யஸ்
சாஸௌ ஹரிரிதி ஜிதந்தாஹ்வய மநோ ரஹஸ்யம் வ்யா
ஜஹ்ரே ஸகலு பகவாந் சௌநக முநி: ॥

(263) திருவா. 5-3-4. (264) திருவா. 5 8 3. (265) ஜிதந்தா.

அவித்யாத:- அஜ்ஞானத்தாலேயாவது, விதிதயாவா - ஜ்ஞானத்தாலேயாவது, ஸ்வபக்தே: - தன் பக்தியினுடைய, பூம்நாவா - ஆதிக்யத்தாலேயாவது, பரிப்ருடதயா-பரிச்சேதிக்க வொண்ணுதவனென்று, தேவே - பகவானிடத்தில், ஜகதி - இவ்வுலகில், அந்யாம்கதிம் - பகவானைத்தவிர வேறு உபாய முண்டென்று, அவிதுஷாம் - அறியாதவர்களுக்கு, அஸௌஹரி: - இந்த பகவான், கதி: - உபாய மாகவும், கம்யச்ச-உபேய மாகவுமாகிறான், இதி - என்று, ஸ: - அந்த, பகவான் - ஸர்வஜ்ஞனை, சௌனகமுனி: - சௌனக மஹரிஷியானவர், ஜிதந்தாஹ்வய - ஜிதந்தையென்று பெயரையுடைய, மநோ ரஹஸ்யம் - மந்த்ரத்தின் ரஹஸ்யத்தை, வ்யாஜஹ்ரே - வ்யாக்யானம் பண்ணியருளினார்.

266. இதம் ஶரண மஜ்ஞாநா மிதமேவ விஜாநதாம் ।
இதம் திதீர்ஷதாம் பாரமிதமாநந்த்ய மிச்சதாம் ॥

இதம் - இந்தப்ரபத்தியே, அஜ்ஞாநாம் - ஜ்ஞாநமில்லாதவர்களுக்கும், ஶரணம் - உபாயம், விஜாநதாம் - ஜ்ஞாநமுடையவர்களுக்கும், இதமேவ - இதுவே உபாயம், பாரம் - ஸம்ஸார சமுத்திரத்தின் கரையை, திதீர்ஷதாம் - கடக்க வேணுமென்ற விருப்ப முடையவர்களுக்கும், இதம் - இதுவே உபாயம், ஆநந்த்யம் - ஸ்வரூபமான பகவதநுபவத்தைப் பெற, இச்சதாம் - விரும்புகிறவர்களுக்கும், இதம் - இதுவே உபாயம்.

267. அபாயோபாய நிர்முக்தா மத்யமாம் ஸ்திதிமாஸ்திதா ।
ஶரணாகதி ரக்ரியைஷா ஸம்ஸாரார்ணவ தாரிணீ ॥

அபாய - அபாயமான, உபாய - இதர உபாயங்களை, நிர்முக்தா: - விடப்பட்ட, மத்யமாம் - திருமந்த்ரத்தின் மத்யமபதமான நம: பதத்தினுடைய, ஸ்திதிம் - ஸ்தாநத்தைக் குறித்து, ஆஸ்திதா - இருக்கப்பட்டவர்கள், யே - யாரோ, ஸம்ஸாரார்ணவ தாரிணீ - சம்சார சமுத்திரத்தைத் தாண்டுகின்ற, தேஷாம் - அவர்களுக்கு, யேஷ - இந்த, ஶரணாகதி: - ப்ரபத்தி, அக்ரே - ப்ரதான உபாய மல்லவா.

268. என்னன் செய்கேன் ... ... 264-வது இலக்கம் காண்க.

269. காறை பூணுங் கண்ணாடி காணுந் தன்கையில் வளை குலுக்கும்
கூறை யுடுக்கு மயர்க்குந் தன் கோவைச் செவ்வாய்த்திருத்தும்
தேறித் தேறி நின்றாயிரம்பேர்த் தேவன்றிறம் பிதற்றும்
மாறில் மாமணிவண்ணன் மேலிவள் மாலுறுகின்றாளே.

காறை - பொன்னினாற் செய்த காறையை, பூணும் - கழுத்திலே பூணாநிற்கிறாள். (காறையு சழுத்துமான சேர்த்தியழகை), கண்ணாடி - கண்ணாடிப்புறத்திலே, காணும் - பாரா நிற்கிறாள், தன் - தன்னுடைய, கையில் - கையிலிருக்கிற, வளை-வளையை, குலுக்கும் - அசைத்துப் பாரா நிற்கிறாள். (அவன்

(266) லக்ஷ்மீதந்த்ரம். 17 - 100. (267) லக்ஷ்மீதந்த்ரம். 17 - 19.
(269) பெரியா திரு 3 7.8.

விரும்பி மேல் விழும்படி), கூறை - பரிவட்டத்தை, உடுக்கும் - நன்றாகவுடா நிற்கிறாள். அயர்க்கும் - அவன் வாராமையாலே, அறிவழியா நிற்கிறாள். (மீளவும் அறிவு குடி புகுந்து), கோவை - கோவைக் கனிபோலே, செம் - சிவந்திருக்கிற, தன் - தன்னுடைய, வாய் - அதரத்தை, திருத்தும் - மிகச் சிவக்கும்படி பண்ணா நிற்கிறாள். (இப்படி அறிவழிந்த விவள்), தேறித்தேறி - மிகத் தெளிவுடையளாய், நின்று - தரித்து நின்று, ஆயிரம் பேர் - ஆயிரந் திருநாமங்களை யுடையனாய், தேவன் - கண்டவர் சிந்தை கவரத் தக்க வடிவழகை யுடையனானவனுடைய, திறம் - ப்ரகாரங்களை, பிதற்றும் - அடைவு கெடப்பேசா நிற்கிறாள். (ஆகையால்), மாறில் - ஒப்பில்லாத, மாமணி - நீல ரத்நம்போன்ற, வண்ணன்மேல் - வடிவழகுடையவன் விஷயமாக, இவள் - இவள், மாலுறுகின்றாள் - பிச்சேறுகின்றாள் (என்று மகள் தசையை தாயார் பாசுரத்தாலே கூறுகிறாள்).

270. போகுநம்பி உன்தாமரைபுரை கண்ணிணையும் செவ்வாய்முறு
ஆகுலங்கள் செய்ய அழிதற்கே நோற்றோமே யாம் [வலும்
தோகைமாமயிலார்கள் நின்னருள்சூடுவார் செவியோசைவைத்
ஆகள் போகவிட்டுக் குழலூது போயிருந்தே. [தெழ

நம்பி - குணபூர்ணனே, போகு - போ, உன் - உன்னுடைய, தாமரை புரை - தாமரைமலரை நிகர்த்த, கண் இணையும் - இரண்டு திருக்கண்களும், செவ்வாய் முறுவலும் - சிவந்த வாயிலே பிரகாசிக்கிற புன்னகையும், ஆகுலங்கள் செய்ய - துன்பங்களைச்செய்ய, அழிதற்கே - அழிந்து விடுவதற்கே, நோற்றோமே ஆம் - நாங்கள் நோற்றோமே யாவோம், தோகை - கலாபத்தையுடைய, மா - அழகான, மயிலார் - மயில்போலே அலைந்த குழலையுடையவர்கள், நின் அருள் - உன்னருளை, சூடுவார் - சூடுமவர்கள், (அவர்கள்), ஓசை - தொனியை, செவிவைத்து - கேட்டு, எழ - எழுந்து வரும்படியாக, ஆகள் - பசுக்களை, போகவிட்டு - தூரத்தே செல்லவிட்டு, (அழைப்பாரைப்போலே), போய் இருந்து - அங்கே போயிருந்து, குழல் ஊது - வேய்ங்குழலை யூது (என்று ப்ரணய ரோஷத்தாலே திரஸ்காரம் பண்ணியருளுகிறார்).

271 குழகி எங்கள் குழமணன்கொண்டு கோயின்மை செய்து கன்ம
பழகி யாருமிப்போம் பரமே இத்திருவருள்கள் [மொன்றில்லை
அழகியார் இவ்வுலக மூன்றுக்கும் தேவிமை தருவார் பலருளர்
கழக மேறேல் நம்பீ உனக்கும் இளைதே கன்மமே

குழகி - விளையாடி, எங்கள் குழமணம் கொண்டு - எங்கள் குழமணலைக் கொண்டு, கோயின்மைசெய்து - மேன்மைசெய்து, ஒன்று கன்னம் இல்லை - ஒருகாரியமில்லை, (உம்முடைய சரசங்களும் மேன்மையும்), யாம் - நாங்கள், பழகி யிருப்போம் - பண்டே பழகியிருக்கிறோம், இ - இந்த, திருவருள்கள் -

(270) திருவாய்மொழி, 6-2-2. (271) திருவாய்மொழி, 6-2-6.

மேன்மையான அருள்களானவை, பரமே - நாங்கள் பொறுக்க வசமோ, அழகியார் - அதுக் கநுரூபமான அழகையுடையராய், இ - உம்முடைய சர்வேஸ்வரத்துக்கு விஷயமான இந்த, உலக மூன்றுக்கும் - மூன்றுலகங்களுக்கும், தேவிமை - உம்மோடொக்க முடி சூடுகைக்கு, தகுவார் - தகுதியாயிருப்பவர். பலர் உளர் - அநேகம் பேருளர், நம்பி - குணபூர்த்தி யுடையவனே, கழகம் ஏறேல் - எங்கள் திரளில் வந்து ஏறாதே, உனக்கும் - (பிறர்க்குத் தீமைசெய்தலே இயற்கையான) உனக்கும், கன்மம் இந்தச் செயல், இளைதே - பிள்ளைத்தனமே, (என்று ப்ரணய ரோஷத்தாலே திரஸ்காரம் பண்ணியருளுகிறார்).

272. அரியேறே என்னம்பொற்சுடரே செங்கண் கருமுகிலே
எரியே பவளக்குன்றே நாற்றோளெந்தாய் உனதருளே
பிரியா அடிமை என்னைக்கொண்டாய் குடந்தைத் திருமாலே
தரியேன் இனி உன் சரணம்தந்து என் சன்மம் களையாயே.

அரியேறே - நிரங்குஸஸ்வாதந்திரியத்தாலே ஆண் சிங்கம் போல்பவனே, என் - எனக் கநுபாவ்யமான, அம்-அழகான, பொன், பொன்போலேயிருக்கிற, சுடரே - ஒளியை யுடையவனே, செம்கண் - சிவந்த திருகண்களையுடைய, கருமுகிலே - காளமேகம் போலே யிருப்பவனே, எரியே - நக்ஷத்திர பதத்தளவும் ஓங்கிய, பவளக் குன்றே - பவள மலையே, நால் தோள் - நான்கு திருத்தோள்களையுடைய, எந்தாய் - எந்தையே, உனது அருளே - உனது க்ருபையாலே, என்னை - என்னை, பிரியா அடிமை கொண்டாய் - நீங்காத தொண்டனாகக் கொண்டவனே, குடந்தை - திருக்குடந்தையிலே, திருமாலே - பெரிய பிராட்டியாரோடு கூடி சந்நிஹிதனா யிருப்பவனே, இனி - இப்படி உபகாரகனான நீ பிராட்டியோடு கூடி ஸந்நிஹிதனான பின்பு, தரியேன் - ஆறியிருக்கமாட்டேன், உன் - எனக்குப்ராப்யமான உன்னுடைய, சரணம் - திருவடிகளை, தந்து - கொடுத்தருளி, என் - என்னுடைய, சன்மம் - சரீர சம்பந்தத்தை, களையாய் - போக்கியருளாய் (என்கிறார்).

273. ஒளிவண்ணம் வளைசிந்தை உறக்கத்தோடு இவையெல்லாம்
எளிமையால் இட்டென்னை ஈடழியப் போயினவால்
குளிரருவி வேங்கடத்து என்கோவிந்தன் குணம்பாடி
அளியத்த மேகங்காள் ஆவிகாத் திருப்பேனே

குளிர்-குளிர்ந்த, அருவி-அருவியாறுகள் பாயாநின்றுள்ள, வேங்கடத்து - திருமலையிலெழுந்தருளி யிருக்குமவனாய், என் கோவிந்தன் - என் கோவிந்தனுடைய, குணம் - குணங்களை, பாடி - பாடி, (அத்தாலே), அளியத்த-தயையை யுடையரான, மேகங்காள்-மேகங்களே, ஒளி - சரீரத்தின் பளபளப்பும், வண்ணம் - நிறமும், வளை - தோள்வளை, - சரிவளை கழல்வளை முதலிய வளைகளும், சிந்தை - மநஸ்ஸும், உறக்கத்தோடு - நித்ரையும், இவையெல்லாம்-இவைகளெல்லாம், எளிமையால்- அலக்ஷ்யதாபுத்தியாலே, என்னை-

(272) திருவாய்மொழி. 5.8-7. (273) நாச்சி - திருமொ. 8-3.

விஶ்லேஷத்தால் நலிந்திருக்கிற என்னை, ஈடழிய - முதலழியும்படி, இட்டுப் போயின-பொகட்டுப் போய்விட்டன, (இப்படியிருக்க), ஆவி-என் ப்ராணனை, காத்திருப்பேனே - ரக்ஷித்துக் கொண்டிருப்பேனோ (காக்க முடியாதென்று கருத்து).

274. [1] மணந்தபேராயா மாயத்தால் முழுதும்
வல்வினையேனை யீர்கின்ற
குணங்களையுடையாய் அசுரர்வன்கையர் கூற்றமே
கொடிய புள்ளுயர்த்தாய்
பணங்களாயிரமுடைய பைந்நாகப்பள்ளியாய்
பாற்கடல் சேர்ப்பா
வணங்குமாறு அறியேன் மனமும் வாசகமும்
செய்கையும் யானும் நீ தானே

மாயத்தால் - ஆச்சரிய சேஷ்டிதங்களாலே, முழுதும் - எல்லாப் பொருள்களையும், மணந்த - செறிந்து உகப்பிக்கின்ற பேர் ஆயா - பெருமையுடைய கண்ணனே, வல் வினையேனை - (அப்படி உன்னை மணக்கப் பெறாத) ப்ரபலபாபத்தை யுடையேனை, ஈர் கின்ற - வருத்துகின்ற, குணங்களையுடையாய் - சௌலப்யாதிகுணங்களை ஸ்வபாவமாக வுடையவனே, வன்கையர் அசுரர் - ஆச்ரித விரோதிகளான அசுரர்களுக்கு, கூற்றமே - யமனே, கொடிய - (அவ்விரோதிகள் கண்டபோதே முடியும் படியான க்ரூரத்தை யுடைய, புள் - பெரியதிருவடியை, உயர்த்தாய் - கொடியாக வுடையவனே, (இப்படி லோகரக்ஷணத்தின்பொருட்டு), பணங்கள் ஆயிரமும் உடைய - ஆயிரம் படங்களையுமுடைய, பை - அதிவிஸ்தீர்ணமான, நாகம் - திருவனந்தாழ்வானாகிற, பள்ளியாய் - படுக்கையை யுடையவனே, பாற்கடல் சேர்ப்பா - திருப்பாற்கடலின் துறையை உடையவனே, மனமும் வாசகமும் செய்கையும் - (மனமும் சொல்லும் செயலும், ஆகியகரணங்களும், யானும் - (அவற்றையுடையனான நானும், நீ தானே - நீ தானேயாயிருக்கிறாய், (ஆகையால்), வணங்கும் ஆறு - (உன்னை) வணங்கும் விதத்தை, அறியேன் - அறிந்திலேன்.

274 [2] திருமாலை பாடக்கேட்டு ... ... 247-வது இலக்கம் காண்க.

274 [3] யத்யேந காமகாமேந நஸாத்யம் ஸாதநாந்தரை: ।
முமுக்ஷூணா யத்ஸாங்க்யேந யோகேந நச ஹக்திதம் ॥
ப்ராப்யதே பரமம் யாம யதோ நாவர்த்ததே புந: ।
தேந தேநாப்யதே தத்தத் ந்யாஸேநைவ மஹாமுநே ॥
பரமாத்மாச தேநைவ ஸாத்யதே புருஷோத்தம: ॥

முமுக்ஷூணாம் - முமுக்ஷுக்களுக்கு, யேந காமேந - எந்த ஆசையாலே, யத் காமம் - எந்த கோரிக்கையை, சாத்யம் - சாதிக்கப்படுகின்றதோ, தத் -

(274—1) திருவாய்மொழி. 8-1 8. (274—3.) லக்ஷ்மீதந்த்ரம்.

அந்த காமம், ஸாதநாந்தரை: - இதர சாதனங்களாலே, ந சாத்யம் - சாதிக்க முடியாது, ஸாங்க்யேந யோகேந - சாங்க்ய யோகத்தாலே, நாசாத்யம் - சாதிக்க முடியாது, பக்தித: - பக்தியாலே, நசாத்யம் - சாதிக்கமுடியாது, யத: - எந்த காரணத்தினால், நாவர்த்ததே புந: - புநராவ்ருத்தி ரஹிதமான, பரமம்தாம: - மேலான பரமபதத்தை, ப்ராப்யதே - அடைகிறான், ஹே மஹாமுநே - ஓ மனனசீலரே, தேந தேந - அந்த புருஷார்த்தத்தை, ந்யாஸேநைவ - ப்ரபத்தி (சரணாகதியினாலேயே), தத் - அந்த, தத் - மேலான பரமபதத்தை, ஆப்யதே - அடைகிறான், தேநைவ - அந்த ப்ரபத்தியினாலேயே புருஷோத்தம: - உத்தம புருஷனும், பரமாத்மா ச - பரமாத்மாவுமான சர்வேஸ்வரனை, ஆப்யதே - அடைகிறான்.

275. [1] உறங்களா லியன்ற மன்னர் மாளப்
பாரதத் தொருதே ரைவர்க்காய்ச் சென்று
இரங்கி யூர்ந்தவர்க் கின்னருள் செய்யும்
எம்பிரானை வம்பார் புனல்காவிரி
அரங்கமாளி யென்னாளி விண்ணாளி
ஆழி சூழிலங்கை மலங்கச் சென்று
சரங்களாண்ட தண்டாமரைக் கண்ணனுக்கன்றி
என் மனம் தாழ்ந்து நில்லாதே ॥

உரங்களாலே - மிடுக்கினாலே, இயன்ற - (இராஜ்யத்தை) நடத்தாநின்ற, மன்னர் - துர்யோதனாதி ராஜாக்கள், மாள - நசிக்கும்படியாக, பாரதத்து - பாரத யுத்தத்தில், ஐவர்க்காய் - பஞ்சபாண்டவர்களுக்காக, சென்று - போய், இரங்கி - (அவர்கள் விஷயமாக) மனம் தளர்ந்து, ஒரு தேர் - ஒரு தேரை, ஊர்ந்து - நடத்தி, அவர்க்கு - அந்த பஞ்சபாண்டவர் விஷயத்தில், இன் - இனிய (ஸ்வயம் ப்ரயோஜநமான), அருள் - கிருபையை, செய்யும் - பண்ணா நின்ற, எம்பிரானை - உபகாரகனை, வம்பு - புதிதான, புனல் - ஜலத்தினாலே, ஆர் - நிறைந்த, காவிரி - திருக்காவேரியையுடைய, அரங்கம் ஆளி - திருவரங்கத்தைப் பரிபாலனம்செய்யுமவனாய், என்-என்னை, ஆளி - ஆளுமவனாய், விண் ஆளி - பரமபதத்துக்கு நிர்வாஹகனாய், ஆழிசூழ் - ஸமுத்ரத்தினால் சுற்றப்பட்ட, இலங்கை - லங்காபுரியானது, மலங்க - வயாகுலப்படும்படி, சென்று - கிட்டி, சரங்கள் - பாணங்களை, ஆண்ட - ப்ரயோகித்த, தண் - குளிர்ந்த, தாமரை - தாமரைபோன்ற, கண்ணனுக்கு அன்றி - கண்களையுடையவனை விட்டு (மற்றொருவர் விஷயத்தில்), என் மனம் - என் மனஸ்ஸானது, தாழ்ந்து - நைச்யத்தை வஹித்து (உருக்கமுற்று), நில்லாது - இருக்கமாட்டாது.

275 [2] உயிர்க்கது கால னென்று உம்மை யானிரந்தேற்கு நீர்
குயிற் பைதல்காள் கண்ணன் நாமமே குழறிக் கொன்றீர்

(275—1) பெரிய திருமொழி. 7-3-4. (275—2) திருவா. 9-5-8.

தயிர்ப் பழஞ் சோற்றொடு பாலடிசிலும் தந்து சொல்
பயிற்றிய நல்வள மூட்டினீர் பண்புடையீரே।

நான் - நான், (இவ்வவஸ்தையில்), அது - அது, உயிர்க்கு - ப்ராணனுக்கு, காலன் என்று - யமனென்று, உம்மை - உங்களைக்குறித்து, இரந்தேற்கு - ப்ரார்த்தித்த எனக்கு; குயில் பைதல்காள் - குயில்பிள்ளைகளே, நீர் - நீங்கள், (உங்கள் பிள்ளைத்தனத்தாலே), கண்ணன் - கிருஷ்ணனுடைய, நாமமே - திருநாமங்களையே, குழறி - அநக்ஷர மதுரமாகச் சொல்லி, கொன்றீர் - முடித்துவிட்டீர்கள், (உங்கள் பால்யத்துக்கீடாக), தயிர்பழஞ்சோற்றொடு - இளம்போதைக்குத் தயிரையுடைத்தான பழஞ்சோற்றோடே, பால் அடிசிலும் - பிற்காலுக்குப் பாலுஞ் சோருமாக, தந்து - உங்களுக்குத் தந்து, சொல் - அவன் திருநாமங்களாகிற சொற்களை, பயிற்றிய - அப்யசித்த வதுக்கு ப்ரத்யுபகாரமாக, நல்வளம் - நல்ல சம்பத்தை, ஊட்டினீர் - அநுபவிப்பித்தீர்கள், பண்பு - நல்ல நீர்மையை, உடையீர் - உடையீரா யிருந்தீர்கள்.

276. [1] புறங்கள் மூன்றும் ஓர் மாத்திரைப்போதில்
பொங்கெரிக்கு இரைகண்டவ னம்பில்
சரங்களே கொடிதாய் அடுகின்ற
சாம்பவான் உடன்நிற்கத் தொழுதோம்
இரங்குநீ யெமக் கெந்தைபிரானே
இலங்கு வெங்கதிரோன் சிறுவா
குரங்குகட் கரசே யெம்மைக் கொல்லேல்
கூறினோம் தடம் பொங்கத்தம் பொங்கோ.

ஓர் மாத்திரைப்போதில் - ஒருகண்ணிமைப் பொழுதில், புரங்கள் மூன்றும் - த்ரிபுரங்களையும், பொங்கு - விருத்தியடையர்நின்றுள்ள, எரிக்கு - அக்நி பகவானுக்கு, இரைகண்டவன் - இரையாகக் கண்ட (தஹித்த) ருத்ரனுடைய, அம்பில் - அம்புகளிலுங் காட்டில், கொடிதாய் - கொடியதாயிருக்கிற, சரங்களே - ராமபாணங்களே, அடுகின்ற - நலியா நின்றன, சாம்பவான் - ஸ்ரீஜாம்பவான், உடன் நிற்க - புருஷகாரமாகக் கூடநிற்க, தொழுதோம் - வணங்கா நின்றோம், எந்தைபிரானே - எங்கள் நாயகனே, இலங்கு - லோகத்துக்கெல்லாம் ப்ரகாஸகனான, வெம்கதிரோன் - ஆதித்யனுடைய, சிறுவா - (மகனான) சுக்ரீவனே, குரங்கட்கு அரசே - வானரயூதபதியே, எமக்கு - எங்கள்திறத்திலே, நீ - நீ, இரங்கு - இரங்கியருளவேணும் எம்மை - எங்களை, கொல்லேல் - கொல்லாதொழிய வேணும், கூறினோம் - எங்களால் சொல்லலாவதைச் சொன்னோம், தடம்பொங்கத்தம் பொங்கோ - தடம் பொங்கத்தம் பொங்கோ என்று விஜயத்தை (அசுரர் வாயாலே) கூறுகிறார்.

(276—1) பெரிய திரு. 10.2.9.

276 [2] மங்கல நல்வனமாலை மார்வி லிலங்க
மயில் தழைப் பீலி சூடிப்
பொங்கிளவாடை அரையில் சாத்திப்
பூங்கொத்துக் காதில் புணரப் பெய்து
கொங்கு நறுங் குழலார்களோடு
குழைந்து குழலினி தூதி வந்தாய்
எங்களுக்கே ஒருநாள் வந்தூத
உன் குழலின்னிசை போதராதே

மங்கலம் - மங்களங்களுக்கெல்லாம் இருப்பிடமாய், நல் - தர்ஸநீயமான- வநமாலை - வநமாலையானது, மார்வில் - திருமார்பிலே, இலங்க - ப்ரகாசிக்க, தழை - தழைத்த, மயில்பீலி - மயிலிறகுகளை, சூடி - திருமுடியிலே தரித்தும்; பொங்கு இளவாடை - மிகவும் மெல்லிதான திருப்பரியட்டத்தை, அரையில் - திருவரையிலே, சாத்தி - சாத்திக்கொண்டும், காதில் - திருச்செவியிலே, பூங்கொத்து - பூங்கொத்துக்களை, புணரப்பெய்து - மிகவும் பொருந்தவிட்டும்; கொங்கு - தேனையும், நறும் - நறுநாற்றத்தையுமுடைய, குழலார்களோடு - குழலையுடைய ஸ்த்ரீகளோடே, குழைந்து - ஸம்ஶ்லேஷித்து, (அக்கலவியால் பிறந்த ஸந்தோஷத்தாலே), இனிது - இனிதாக, குழல் - வேய்ங்குழலை, ஊதி வந்தாய் - ஊதிக்கொண்டு வந்தாய், எங்களுக்கு - எங்கள் விஷயத்திலே, ஒரு நாள் - ஒரு நாளிலே, வந்தூத - வந்து ஊதுகைக்கு, உன் - உன்னுடைய, குழலின் - வேய்ங்குழலினது, இசை - இசையானது, போதராதே - வாராதோ வென்கிறாள்.

277. யாமுடை நெஞ்சமும் துணையன்றாலோ
ஆபுகு மாலையு மாகின்றாலோ
யாமுடை யாயன்றன் மனம் கல்லாலோ
அவனுடை தீங்குழ லீருமாலோ
யாமுடைத் துணையென்னும் தோழிமாரும்
எம்மில் முன்னவனுக்கு மாய்வராலோ
யாமுடை யாருயிர் காக்குமாறென்
அவனுடை யருள்பெறும்போதரிதே.

யாமுடை - நம்மதான, நெஞ்சமும் - மனசும், துணை அன்று - சகாயமாகிறதில்லை, ஆ - பசுக்கள் வந்து, புகும் - புகுரும்படியான, மாலையும் - சந்த்யா காலமும், ஆகின்று - ஆகாநின்றது, (அவற்றோடேகூடப் புதரக் காணாமையாலே), யாமுடை ஆயன்தன் - நமக்குக் கையாளாம்படி சுலபனான க்ருஷ்ண

(276—2) பெருமாள் திருமொழி. 6-9.
(277) திருவா. 9-9-5.

னுடைய, மனம் - ம்ருது ஸ்வபாவமான நெஞ்சானது, கல் - கல்லாய்விட்ட தாகவேணும், அவனுடை - அந்த க்ருஷ்ணனுடைய, தீம் குழல் - இனிய குழலானது, ஈரும் - நலியாநின்றது, யாமுடை - நமக்கு பரதந்த்ரைகளாய், துணை என்னும் - உசாத்துணை என்னும்படியான, தோழிமாரும் - தோழிகளும், எம்மின் முன் - எனக்கு முன்னே, அவனுக்கு - அவன்பொருட்டு, மாய்வர் - ஈடுபடாநிற்பர்கள், (இவ்வளவில்), அவனுடை - அவனுடைய, அருள் - கிருபையை, பெறும் போது - பெறுங்காலம், அரிது - அரிதா யிராநின்றது, (ஆனபின்பு), யாமுடை ஆருயிர் - நம்முடைய ஆத்மாவை, காக்கும் ஆறு - ரக்ஷிக்கும் ப்ரகாரம், என் - எதாயிருக்கிறது?

278. யத் யத் ஸாங்கம் தத்தத் ஸாதநம் ।

யத் யத் - எது எது, ஸ: அங்கம் - அங்கத்தோடு கூடினதோ, தத் தத் - அது அது, ஸாதநம் - ஸாதனமாகும்.

279. உபாயோபேயத்வே ... ... 158-வது இலக்கம் காண்க.

280. ஶரண்யம் ஶரணம் ச த்வா மாஹுர் திவ்யா மஹர்ஷய: ।

த்வாம் - தேவரீரை, சரண்யம் - ரக்ஷகனாகவும், சரணம்ச - உபாயமாகவும், திவ்யா - திவ்ய ஜ்ஞாநமுள்ள, மஹர்ஷய: - மஹரிஷிகள், ஆஹு: - சொல்லுகிறார்கள்.

280. அம்ருயம் ஸாயநம் ஸாய்பம் ஸம்பஶ்யந்தி மநீஷிண: ।

மநீஷிண: - மனதை ஜயித்த பெரியோர்கள், அம்ருதம் - நித்ய வித்தமான, ஸாதநம் - உபாயமாகவும், ஸாத்யம் - உபேயமாகவும், ஸம்பஶ்யந்தி - (தேவரீரை) பார்க்கிறார்கள்.

281. ஹக்த்யா லஹ்ப ஸ்த்வநந்யா ।

அநந்யா - இதர விஷயங்கள் கலசாத, பக்த்யா-பக்தியினாலேயே, லப்ய:- அடையத்தகுந்தவன்.

282. உஹய பரிகர்மித ஸ்வாந்தஸ்ய ஐகாந்திகாத்யந்திக ஹக்தி யோகைக லஹ்ப: ॥

உபய பரிகர்மித - கர்மஜ்ஞாநங்களினாலே அலங்கரிக்கப்பட்ட, ஸ்வாந்தஸ்ய - (பரிசுத்தமான) மனதை யுடையவனுடைய, ஐகாந்திகாத்யந்திக - அநந்ய ப்ரயோஜனமாயும் இதற்கு மேலில்லை என்னலாம்படியாயுமிருக்கிற, பக்தியோகைக - பக்தி யோகத்தினாலேயே, லப்ய: - அடையப்படுகிறான்.

283. ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோஜ்ஞாந ஸமாதிபி: ।
நராணாம் க்ஷீண பாபாநாம் க்ருஷ்ணே ஹக்தி ப்ரஜாயதே ॥

ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு - ஆயிரம் ஜந்மங்களில், தப: - தவமாகிற கர்மத்தினாலும், ஜ்ஞாந - ஜ்ஞாநயோகத்தினாலும், ஸமாதிபி: - பக்தியோகத்தின

(278, 279, 280—1) (281) லக்ஷ்மீதந்த்ரம்.
(282) ஆத்மஸித்தி. (283) லகுஅத்ரி ஸ்ம்ருதி.

லும், நராணும் - மனிதர்களுக்கு, பாபாநாம் - பாபங்கள் (எல்லாம்), க்ஷீணே - நசித்து, (அதன் பிறகு), க்ருஷ்ணே - கண்ணனிடத்தில், பக்தி: - பக்தியானது, ப்ரஜாயதே - உண்டாகிறது.

284. ஸம்ஸார ஸாகரம் கோரம் அநந்த க்லேஶ பாஜநம் ।
த்வமேவ ஶரணம் ப்ராப்ய நிஸ்தரந்தி மநீஷிண: ॥

மநீஷிண: - மனஸ்ஸை விஷயாதிகளில் செல்ல வொட்டாமல் ஜயித்திருக்குமவர்கள், த்வமேவ - மோக்ஷப்ரதனை உன்னையே, ஶரணம் - நிரபேக்ஷோபாயமாக, ப்ராப்ய - ஸ்வீகரித்து, அநந்த க்லேஶ பாஜநம் - கணக்கற்ற துக்கத்திற்கு இருப்பிடமாயும், கோரம் - மிகவும் கொடிதாயுமுள்ள, ஸம்ஸார ஸாகரம் - சம்ஸாரமாகிற சமுத்ரத்தை, நிஸ்தரந்தி - கடக்கிறார்கள்.

285. ஸர்வஜ்ஞோபி ஹி விஶ்வேஶ ஸதா காருணிகோபி ஸந் ।
ஸம்ஸார தந்த்ர வாஹித்வாத் ரக்ஷ்யாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே ॥

விஶ்வேஶ: - ஸர்வேஶ்வரன், ஸர்வஜ்ஞ: அபி - ஸர்வஜ்ஞனும், ஸதா - எப்பொழுதும், காருணிக: அபி ஸந் - தயையுள்ளவனுமி ருந்தாலும், ஸம்ஸார - ஸம்ஸாரமாகிற, தந்த்ரம் - (லீலாவிபூதி) ரக்ஷணத்தை, வாஹித்வாத் - நடத்துபவனுயிருத்தலாலே, ரக்ஷ்ய - ரக்ஷ்யபூதனை சேதனனுடைய, அபேக்ஷாம் - அபேக்ஷையை, ப்ரதீக்ஷதே ஹி - எதிர்பார்க்கிருன் அல்லவா.

[1] யாச்நா ப்ரபத்தி: ।

யாச்நா - யாசிக்கலே, ப்ரபத்தி: - (கர்ப்பத்திலுடையது) ப்ரபத்தியாகும், [இது யாச்நா கர்ப்பமாகையால் வாசிகமானது].

286 [2] ப்ரார்த்தநா மதி: ।

மதி: - புத்தியாலே, ப்ரார்த்தநா - ப்ரார்த்திப்பதை கர்ப்பத்திலுடையது ப்ரபத்தியாகும், [இது த்ருடாத்யவஸாய ஜநகமாகையால் மாநஸீகமானது].

287. வாமனனென் மரதகவண்ணன் தாமரைக் கண்ணினன்
காமனைப் பயந்தாய் என்றென்றுன் கழல் பாடியே பணிந்து
தூமனத்தனனய்ப் பிறவித் துழதி நீங்க என்னைத்
தீமனங்கெடுத்தா யுனக் கென்செய்கே னென் சிரீதரனே.

வாமனன் - வாமனனே, என்மரதக வண்ணன் - எனது மரதகம்போன்ற ஒளியை யுடையவனே, தாமரைக்கண்ணினன் - தாமரை மலர்போலும் திருக்கண்களை யுடையவனே, காமனை பயந்தாய் - மன்மதனை ஈன்றவனே, என்று-என்று பலகால் சொல்லி, உன்கழல் - உன் திருவடிகளில், பாடியேபணிந்து - பாடியே வணங்கி, தூ மனத்தனனய்-பரிசுத்தமான மனத்தை யுடையேனாய்,

(284) ஜிதந்தா. 1-4. (285) லக்ஷ்மீதந்த்ரே. 17-79.
(286—1) அஹி-ஸம். 35 36. (286—2) லக்ஷ்மீஸ்ம்ருதி. 17-72.
(287) திருவா. 2-7-8.

பிறவி - பிறப்புக்களிலுண்டான, துழதி-அலமாப்பு, நீங்க-தீரும்படி, என்னை - என்னை, தீமனம் கெடுத்தாய் - தீமையான மனத்தை அடக்கினை, என்சிரி தரனே - எனது ஸ்ரீமானே, உனக்கு - உனக்கு, என்செய்கேன் - யாது கைம் மாறு செய்வேன்.

288. திரிவிக்கிரமன் செந்தாமரைக்க
ணெம்மானென் செங்கனிவாய்
உருவில் பொலிந்த வெள்ளைப்பளிங்கு
நிறத்தனனென்றென்று உள்ளிப்
பரவிப் பணிந்து பல்லூழியூழி
நின்பாத பங்கயமே
மருவித் தொழும் மனமே தந்தாய்
வல்லைகா ணென் வாமநனே

திரிவிக்கிரமன் - திரிவிக்கிரமன், செந்தாமரைக்கண் எம்மான் - செந்தா மரைமலர்போலுந் திருக்கண்களையுடைய எனது சுவாமி, என் - என்னுடைய, செம் கனிவாய் - சிவந்த கனிபோலும் திருப்பவளத்தின், உருவின் பொலிந்த-வடிவிலே பிரகாசிக்கிற, வெள்ளை பளிங்கு - வெண் பளிங்கு போன்ற, நிறத் தனன் - திருமுத்தின் நிறத்தை யுடையவன், என்று என்று - என்று பலகால் சொல்லி, உள்ளி - நினைத்து, பரவி - துதித்து, பணிந்து - வணங்கி, பல் ஊழி ஊழி - அநேக கல்பங்களளவும், நின் - உன்னுடைய, பாதபங்கயமே - திரு வடித்தாமரைகளிலே, மருவி தொழும் - பொருந்தி அடிமை செய்கின்ற, மனம் - மனத்தையே, தந்தாய் - கொடுத்தருளினாய், என் வாமனனே - என் வாமனரூபனே, வல்லைகாண் - நீ சமர்த்தன் காண்.

289. உற்றே னுகந்து பணிசெய் துன பாதம்
பெற்றேன் ஈதே யின்னம் வேண்டிவ தெந்தாய்
கற்றார் மறைவாணர்கள் வாழ் திருப்பேராற்கு
அற்றா ரடியார் தமக் கல்லல் நில்லாவே

உற்றேன் - உன் திருவடியை யடைந்தேன், (அத்தாலே), உகந்து - விரும்பி, பணிசெய்து - வாசிகமான அடிமைசெய்து, உன பாதம் பெற்றேன்- உன் திருவடிகளைப் பெற்றேன், எந்தாய் - நிருபாதிக பந்துவானவனே, ஈதே- இவ்வடிமையே, (இவ்வாத்மாவுக்கு), இன்னம் வேண்டுவது - இன்னமும் வேண்டப்படுவது, (இது உண்டாகவே), கற்றார் - ஆசார்ய முகத்தாலே அறிய வேண்டு மவற்றை அறிந்தவர்களாகிய, மறைவாணர்கள் - வேதியர்கள், வாழ்- பகவதநுபவத்தோடே வாழ்கின்ற, திருப்பேராற்கு - திருப்பேர் நகரில் வர்த் திக்கிற வுனக்கு, அற்றார் - அற்றுத்தீர்ந்தவராகிய, அடியார் தமக்கு - அடியா ரானவரிடத்தில், அல்லல் - அநுபவ விரோதிகளான துக்கங்கள், நில்லா- நில்லாது.

(288) திருவா. 2-7-7. (289) திருவா. 10-8-10.

290. திவளும் வெண் மதிபோல் திருமுகத்தரிவை
செழுங் கடல் அமுதினில் பிறந்த
வவளும் நின் னாகத் திருப்பதுமறிந்து
மாகிலு மாசை விடாளால்
குவளையங் கண்ணி கொல்லியம் பாவை
சொல்லு நின்றாள் நயந்திருந்த
விவளை யுன் மனத்தால் என் நினைந்திருந்தா
யிட வெந்தை யெந்தை பிரானே.

திவளும் - ஒளிவிடா நின்றுள்ள, வெள் - வெளுத்த, மதிபோல் - சந்த்ரனைப்போன்ற, திரு - அழகிய, முகத்து - திருமுகத்தையுடையளாய், அரிவை- அரிவைப்பருவத்தளாய், செழு - பெரிய, கடல் - கடலில் பிறந்த, அமுதினில் அம்ருதத்திலே, பிறந்த - அவதரித்தவளான, அவளும் - அந்த பெரிய பிராட்டியாரும், நின் - தேவரீருடைய ஆகத்து - திருமார்பிலே, இருப்பதும் - எழுந்தருளி யிருக்குமதையும், அறிந்தும் - அறிந்திருக்கச் செய்தேயும், ஆகிலும் - ஆகிலும், ஆசை - தேவரீர் பக்கல் ஆசையை, (என் பெண்பிள்ளை), விடாள் - விடுகிறிலள் ; அம் - அழகிய, குவளை - குவளைப் பூப்போன்ற, கண்ணி - கண்ணழகை யுடையளாய், கொல்லி - கொல்லிமலையி லெழுதப்பட்ட, அம் - அழகிய, பாவை - ப்ரதிமை போன்ற வடிவழகை யுடையளாய், நின் - தேவரீருடைய, தாள் - திருவடிகளை, நயந்து இருந்த - ஆசைப்பட்டிருக்கிற, இவளை - இவள் திறத்தில், உன் மனத்தால் - தேவரீர் திருவுள்ளத்தாலே, என் நினைந்திருந்தாய் - நினைத்திருந்த தென் ? (பரமபதத்தைவிட்டு), இட வெந்தை - திருவிட வெந்தையில் வந்து நிற்கிற, எந்தை பிரானே - என்குல நாதனே, சொல்லு - ஒரு வார்த்தை யருளிச்செய்யவேணும்.

291. இந்த ஐதிஹ்யம் குருபரம்பராப்ரபாவம் ஸ்ரீமத் நம்பிள்ளை வைபவத்தில் காண்க.

292. ஸ்வத்வ மாத்மநி ஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் ப்ரஹ்மணி ஸ்திதம் । ஆத்ம தாஸ்யம் ஹரே ஸ்வாம்யம் ஸ்வபா வஞ்ச ஸதா ஸ்மர ॥

ஸ்வத்வம் - சொத்து என்கிற தன்மையானது, ஆத்மநி - ஆத்மாவினிடத்தில், ஸஞ்ஜாதம் - உள்ளது, ஸ்வாமித்வம் - ஸ்வாமி என்கிற தன்மையானது, ப்ரஹ்மணி - ப்ரஹ்மமான ஸ்ரீமந் நாராயணனிடத்தில், ஸ்திதம் - உள்ளது, ஆத்ம-ஆத்மாவுக்கு, தாஸ்யம் - அடிமையும், ஹரே-ஹரியான ஸ்ரீமந் நாராயணனுக்கு, ஸ்வாம்யம் - எஜமானனா யிருக்கையும் (ஆகிற இது), ஸ்வபாவஞ்ச - (இருவருக்கும்) இயல் பானது (என்று), ஸதா - எப்பொழுதும், ஸ்மர - நினை.

---

(290) பெரிய திரு. 2-7-1. (292) மஹாபாரதம்.

293. ஹவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யஸே ।
அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதஃ ஸ்வபதஶ்சதே ॥

பவாம்ஸ்து - தேவரீர், வைதேஹ்யா ஸஹ - பிராட்டியோடுகூட, கிரிஸாநுஷு - மலைகளின் தாழ்வரைகளில், ரம்ஸ்யஸே - க்ரீடிக்கப் பார்க்கிறீர், அஹம் - அடிமையாகிய நான், ஜாக்ரதஃ - விழித்துக்கொண்டிருக்கும் தசையிலும், ஸ்வபதஶ்ச - கண்வளர்ந்து கொண்டிருக்குந் தசையிலும், தே - தேவரீருக்கு, ஸர்வம் - ஸர்வவித கைங்கர்யங்களையும், கரிஷ்யாமி - பண்ணக் கடவேன்.

294. ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி
வழுவிலா வடிமை செய்யவேண்டும் நாம்
தொழிகுர லருவித் திருவேங்கடத்
தெழில் கொள்சோதி யெந்தை தந்தை தந்தைக்கே.

தெழிகுரல் - உரத்த சப்தத்தையுடைய, அருவி - மலையின் வீழாறுகள் பொருந்தின, திருவேங்கடத்து - திருமலையில், எழில்கொள் - அழகைக் கொண்ட, சோதி - ஒளியுருவை யுடையனான, எந்தை தந்தை தந்தைக்கு-எம்முடைய குலநாதனுக்கு, நாம் - சேஷபூதரான நாம், ஒழிவு இல் - ஒழிவில்லாத, காலம் எல்லாம் - காலம் முழுதும், உடன் ஆய் - எல்லாத் தேசத்திலும் பின் தொடர்ந்து, மன்னி - எல்லா அவஸ்த்தைகளிலும் பிரியாது நின்று, வழுவு இலா - ஒன்றும் நழுவாதபடி, அடிமை செய்யவேண்டும் - எல்லா தொண்டுகளையும் பண்ண வேண்டும்.

295. சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்துன்
பொற்றா மறையடியே போற்றும் பொருள் கேளாய்
பெற்றம் மேய்த்துண்ணுங் குலத்திற் பிறந்து நீ
குற்றேவ லெங்களைக் கொள்ளாமற் போகாது
இற்றைப் பறைகொள்வான் அன்று காண் கோவிந்தா
எற்றைக்கு மேழேழு பிறவிக்கு முன்றன்னோடு
உற்றோமேயாவோம் உனக்கே நாமாட் செய்வோம்
மற்றை நங்காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்.

சிற்றம் சிறுகாலே - அத்யந்தம் ப்ராதஃ காலத்திலே, வந்து - (தேவரீர்வர இருக்கக்கடவ நாங்கள்) வந்து, உன்னைச் சேவித்து - தேவரீரைச் சேவித்து, உன் - தேவரீருடைய, பொன் தாமரை அடி - அழகிய தாமரை மலர்போன்ற திருவடிகளை, போற்றும் பொருள் - மங்களாசாஸநம் பண்ணும் ப்ரயோஜநத்தை, கேளாய் - கேட்டருளவேணும், பெற்றம் மேய்த்து - பசுக்களை (வயி

(293) ரா-அயோ. 31-25. (294) திருவா. 3-3-1.
(295) திருப்பாவை. 29.

(ரா) மேய்த்து, உண்ணும் - பின்பு தாங்களுண்கிற, குலத்தில் - இடைக்குலத்தில், பிறந்து - திருவவதரித்து, நீ - தேவரீர், குற்றேவல் - அந்தரங்க கைங்கர்யங்களுக்கு, எங்களை - (தேவரீரையொழிய ரக்ஷகரில்லாத) எங்களை, கொள்ளாமல் - திருவுள்ளம்பற்றி யருளாமலிருக்தல், போகாது - தகாது; (நாங்கள் தேவரீரைக்கிட்டினது), கோவிந்தா - பசுக்களை ரக்ஷித்தவரே, இன்று - இன்றைக்கு, பறைகொள்வான் அன்று காண் - ஒரு ப்ரயோஜனங் கொண்டு அகலுகைக்கு அன்றுகாண், (என்ன) - (ஆனால் உங்கள் கருத்து என்? என்ன), எற்றைக்கும் - காலமுள்ளதனையும், எழேழு பிறவிக்கும் - (தேவரீருடைய) எவ்வவதாரங்களிலும், உன் தன்னோடு - தேவரீரோடே, உற்றோமே ஆவோம் - அநந்யார்ஹைகளாயிருக்க வேண்டும்; உனக்கே - தேவரீருக்கே, நாம் ஆள்செய்வோம் - நாங்கள் அடிமைசெய்யவேண்டும், நம் - எங்களுடைய, மற்றைக்காமங்கள் - மற்ற அபிப்ராயங்களை, மாற்று - தவிர்த்தருள வேண்டுமென்கிறார்கள்.

296. ஹவந்த மேவாநுசரந் நிரந்தரம்
ப்ரஶாந்த நிஶ்ஶேஷ மநோரதாந்தர꞉ ।
கதாஹ மைகாந்திக நித்ய கிங்கர꞉
ப்ரஹர்ஷ யிஷ்யாமி ஸநாத ஜீவித꞉ ॥

பவந்தமேவ - பரிபூர்ணனை நின்னையே, நிரந்தரம் - இடை விடாமல், அநுசரந் - அநுவர்த்தித்தவனும், ப்ரஶாந்த நிஶ்ஶேஷ மநோ ரதாந்தர꞉ - நின்னை யொழிந்த விஷயங்களில் மனோ வ்யாபாரங்களை பூர்ணமாக தவிர்ந்தவனும், ஐகாந்திக நித்ய கிங்கர꞉ - ஏகரூபமாய் ஆத்ம தத்வமுள்ள காலமத்தனையும் அநுஷ்டிக்கத் தக்கதுமான கைங்கர்யத்தையே ஸ்வரூபமாக உடையவனும், ஸநாத ஜீவித꞉ - ஸத்தையை உடையவனுமுள்ள, அஹம் - நான், கதா - எப்பொழுது, ப்ரஹர்ஷ யிஷ்யாமி - தேவரீரை, மிகவும் உகப்பிக்கக் கடவேன்?

297. செடியாய வல்வினைகள் தீர்க்குந் திருமாலே
நெடியானே வேங்கடவா நின்கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையருங் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே.

செடியாய - பாப பலமான, வல்வினைகள் - ஸம்ஸார ஸம்பந்தத்தை, தீர்க்கும் - அறுக்குமவனைப், திருமாலே - ஸ்ரீய꞉ பதியாய், நெடியானே - ஸர்வாதிகனைப், வேங்கடவா - திருமலையி லெழுந்தருளி யிருப்பவனே, நின் - தேவரீருடைய, கோயிலின் - கோயிலினுடைய, வாசல் - திருவாசலிலே, அடியாரும் - சேஷபூதரும், வானவரும் - தேவதைகளும், அரம்பையரும் - ரம்பாஸ்த்ரீகளும், கிடந்து - கூடி, இயங்கும் - ஸஞ்சரிக்கிற, படியாய்க்கிடந்து - படியாக

(296) ஸ்தோத்திர ரத்னம். 46. (297) பெருமாள்திரு. 4.9.

விருந்து, உன் - தேவரீருடைய, பவளம் - பவளம் போன்ற, வாய் - திருவதரத்தை, காண்பேன் - காணவேணு மென்கிறார்.

298. நாயம் தேவோ நமர்த்யோவா நதிர்யக் ஸ்தாவரோபிவா ।
ஜ்ஞாநாநந்தமயஸ்த் வாத்மா ஶேஷோ ஹி பரமாத்மநः ॥

அயம் - இந்த ஜீவாத்மா, நதேவः - தேவனு மல்ல, நமர்த்யः - மனிதனுவுமல்ல, ந திர்யக் - மிருகங்களுமல்ல, ந ஸ்தாவரோபிவா - கல் மரம் முதலிய ஸ்தாவரங்களுமல்ல, து - ஆனல், ஜ்ஞாநாநந்த மயः - ஜ்ஞாநாநந்த ஸ்வரூபனு, ஆத்மா - இவ்வாத்மா, பரமாத்மநः - பரமாத்மாவுக்கு, ஶேஷः - சேஷபூதன் (என்பது) (வேதம் முதலிய இடங்களில் ப்ரஸித்தம்) ஹி - அல்லவா,

299. ஸ்வரூப மணு மாத்ரம் ஸ்யாத் ஜ்ஞாநாநந்தைக லக்ஷணம் ।

ஸ்வரூபம் - ஜீவாத்ம ஸ்வரூபமானது, அணுமாத்ரம் - அணுவளவு, ஸ்யாத் - இருக்கிறது, ஜ்ஞாநாநந்தைக - ஜ்ஞானம் ஆநந்தம் இவைகளையே, லக்ஷணம் - லக்ஷணமாக உடையது,

300. தாஸபூதாஸ் ஸ்வதः ஸர்வேஹ்யாத்மாநः பரமாத்மநः ।
நாந்யதா லக்ஷணம் தேஷாம் பந்தே மோக்ஷே ததைவச ॥

பரமாத்மநः - பரம புருஷனை ஸ்ரீயः பதிக்கு, ஸர்வே - எல்லா, ஆத்மாநः - ஜீவாத்மாக்களும், ஸ்வதः - இயல்பாகவே, தாஸபூதாः - அடிமையானவர்கள், ஹி - அல்லவா? தேஷாம் - அந்த ஜீவாத்மாக்களுக்கு, பந்தே - பத்தாவஸ்தையிலும், ததைவ - அப்படியே, மோக்ஷே - மோக்ஷத்திலும், அந்யதா - வேறான, லக்ஷணம் - முக்யமான அடையாளம், ந - இல்லை.

301. அடியேனுள்ளா னுடலுள்ளான் அண்டத்தகத்தான் புறத்துள்
படியேயிதுவென் றுரைக்கலாம்படியனல்லன் பரம்பரன் [ளான்
கடிசேர்நாற்றத் துள்ளாலே யின்ப துன்பக் கழிநேர்மை
ஒடியாவின்பப் பெருமையோன் உணர்விலும்ப ரொருவனே.

அண்டத்து - அண்டத்திலுள்ள எல்லாப் பொருள் களுக்கும், அகத்தான் - அந்தராத்மாவாய், புறத்து - புறத்தில் அவ்யக்த மஹ தஹங்காரங்களுக்கும், உள்ளான் - ஆத்ம பூதனாய், இதுவே படி என்று - இதுவே ப்ரகாரம் என்று, உரைக்கல் ஆம்படியன் அல்லன் - சொல்லலாம்படியான தொரு ப்ரகாரத்தை யுடையனல்லனாய், பரம்பரன் - பரரான நித்ய முக்தருக்கும் பரனாயிருப்பானொருவனாய், கடி நாற்றம் - விலக்ஷணமான கந்தங்களெல்லாம், சேர் - சேர்ந்த, ஆலேயுள் - மதுவினுள், இன்பம் - இன்பத்தினது, துன்பம் - அல்பம் அஸ்திரத் வங்களாகிற துன்பத்தின், கழி - கழிவையுடைத்தான, நேர்மை - நுண்மையினுடைய, ஒடியா - அழியாத, இன்பம் - ஆநந்தத்தின், பெருமையோன் -

(298) பாகவதம். (299) (300) ஹாரீத ஸ்ம்ருதி.
(301) திருவா. 8-8-2.

பெருமையையுடையனாய், உணர்வில் - ஜ்ஞானத்தில் வந்தால், உம்பர் - (அந்த ஆநந்தம் போலே நித்யத்வம் முதலியவற்றால்) மேலாயிருப்பவனுமான, ஒருவன் - ஒப்பற்றவன், அடியேன் - அடியேனது, உள்ளான் - அகவாயிலே நில்லா நின்றான், உடல் - (அருவருப்பான) சரீரத்தினுடைய, உள்ளான்-இருதயத்திலும் வர்த்தியா நின்றான்.

302. ஸ்வோஜ்ஜீவ நேச்சா யதிதேஸ்வ ஸத்தாயாம் ஸ்ப்ருஹாயதி ।
ஆத்ம தாஸ்யம் ஹரேஸ்வாம்யம் ஸ்வபாவஞ்ச ஸதா ஸ்மர ॥

தே - உனக்கு, ஸ்வ உஜ்ஜீவந - ஆத்ம உஜ்ஜீவநத்தில், இச்சாயதி - ஆசை யிருந்தபோதிலும், ஸ்வஸத்தாயாம் - ஆத்ம ஸத்தையை, ஸ்ப்ருஹாயதி - (சாஸ்திரம்கொண்டு அறியவேண்டுமென்று) ஆசையிருந்தபோதிலும், ஆத்ம - ஆத்மாவுக்கு, தாஸ்யம் - அடிமையும், ஹரே - ஹரியான ஸ்ரீமந் நாராயணனுக்கு, ஸ்வாம்யம் - எஜமானனா யிருக்கையும், ஸ்வபாவஞ்ச - (இருவருக்கும்) இயல்பானது, (என்று) ஸதா - எப்பொழுதும், ஸ்மர - நினை.

303. அல்வழக் கொன்றுமில்லா அணிகோட்டியர்கோ
னபிமான துங்கன்
செல்வனைப் போலத் திருமாலே
நானுமுனக்கு பழவடியேன்
நல்வகையால் நமோ நாராயணாவென்று
நாமம் பல பரவிப்
பல்வகையாலும் பவித்திரனே உன்னைப்
பல்லாண்டு கூறுவனே.

திருமாலே - ஸ்ரீயஃபதியான ஸர்வேஸ்வரனே, பல்வகையாலும் - (ஸ்வரூபாதி) அநேக ப்ரகாரத்தினாலும், பவித்திரனே - பரிசுத்தனே, அல் - அல்லாத (விபரீதமான), வழக்கு - ந்யாயங்களில், ஒன்றும்-ஒருவிதமான அந்யாயமும், இல்லா - இல்லாதவராய், அணி - பூமண்டலத்துக்கு அலங்காரமான, கோட்டியர் - திருக்கோட்டியூரிலுள்ளார்க்கு, கோன் - நிர்வாஹகராய், அபிமாநம் - ஸ்ரீவைஷ்ணவாபிமாநத்தாலே, துங்கன் - உயர்ந்தவ (பூர்ண)ரான, செல்வனைப்போலே - செல்வநம்பியைப்போலே, நானும் - அந்யபரனான நானும், உனக்கு - வகுத்த சேஷியான உனக்கு, பழ அடியேன் - அநாதியான சேஷபூதனாய்க்கொண்டு, நல்வகையால் - நல்ல ப்ரகாரத்தினாலே (கேவலசப்த மாத்ரமன்றிக்கே அர்த்தாநு ஸந்தான பூர்வகமாக), நமோ நாராயணா என்று - எம்பெருமானுக்கே உரியேன் எனக்கு உரியேனல்லேன் என்கிற அர்த்தத்தை ப்ரதிபாதிக்கிற, நாமம் - திருநாமத்தை, பல - பலதடவை, பரவி - சொல்லி, உன்னை - (ஸௌந்தர்யாதி குணயுக்தனான) உன்னை, பல்லாண்டு கூறுவனே - மங்களாசாஸநம் பண்ணுகிறேன்.

(302) (303) திருப்பல்லாண்டு, 11.

304. ஏகாந்தி வ்யபதேஷ்டவ்யோ நைவ க்ராம குலாதிபி: ।
விஷ்ணுநா வ்யபதேஷ்டவ்யஸ் தஸ்ய ஸர்வம் ஸஏவஹி ॥

ஏகாந்தீ - ப்ரபந்நனுனவன், க்ராம குலாதிபி: - க்ராமம் குலம் முதலியவைகளால், ந வ்யபதேஷ்டவ்ய: - சொல்லப்படுபவ னல்லன், விஷ்ணுநா - பகவத் சம்பந்தத்தை யிட்டு, வ்யப தேஷ்டவ்ய: - சொல்லப்படுமவன், ஹி- அல்லவா, தஸ்ய - அவனுக்கு, ஸர்வம்-க்ராம குலாதி களெல்லாம், ஸயேவ - அந்த விஷ்ணுவே யாவர்.

305. ஶரைஸ்து ஸங்குலாம் க்ருத்வா லங்காம் ப்ரபலார்தந: ।
மாம் நயேத் யதிகாகுத்ஸ்த: தத்தஸ்ய ஸத்ருஶம் பவேத் ॥

ப்ரபலார்தந: - சத்ருக்களின் சேனைகளை நாசம் பண்ணுமவரான, காகுத்ஸ்த: - ககுத்ஸ்த குலத்தில் பிறந்த சக்ரவர்த்தித் திருமகன், சரைஸ்து-பாணங்களால், லங்காம் - இலங்கையை, ஸங்குலாம் - துக்கிக்கும்படியாக, க்ருத்வா - செய்து, மாம் - என்னை, நயேத் யதி - அழைத்துக் கொண்டு போவாராகில், தத் - அந்த வீரத்தன்மை, தஸ்ய - பராக்ரமசாலியான அவர் பெருமைக்கு, ஸத்ருஶம் - தகுந்ததாக, பவேத் - ஆகும்.

306. ஶீதோபவ ... ... 58 வது இலக்கம் காண்க.

307. த்ம்தோ பவ । தக்த: பவ - எரிந்து போக வேண்டும்

308. அஸந்தேஶாத்து ராமஸ்ய தபஸஶ் சாநுபாலநாத் ।
நத்வா குர்மி தஶக்ரீவ பஸ்மபஸ்மார்ஹ தேஜஸா ॥

ராமஸ்ய - ராமனுடைய, அஸந்தேசாத்து - நியமன மில்லாமையாலும், தபஸ: - பதிவ்ரதை என்னும் தபஸ்ஸை, அநுபாலநாத்ச - ரக்ஷிக்க வேண்டியிருக்கையாலும், பஸ்மார்ஹ - சாம்பலாக்குகைக்கு யோக்யனான, தசக்ரீவ - பத்து தலைகளையுடைய, த்வாம் - (இராவணனென்னும் பெயரையுடைய) உன்னை, தேஜஸா - (பதிவ்ரதா) தேஜஸ்ஸைக் கொண்டு, பஸ்ம - சாம்பலாகும்படி, ந குர்மி - செய்யாதிருக்கிறேன்,

309. குருஷ்வ மாமநுசரம் வைதர்ம்யம் நேஹ வித்யதே ।
க்ருதார்த்தோஹம் பவிஷ்யாமி தவசார்த்த: ப்ரகல்பதே ॥

தவச அர்த்த: - தேவரீருக்கும் பிராட்டியாருக்கும் அடிமை செய்யும் பொருட்டும், ப்ரகல்பதே - சந்தோஷமுண்டாகும் பொருட்டும், மாம் - அடியேனை, அநுசரம் - தேவரீரின் பின்னே வரும்படி, குருஷ்வ - நியமித்தருள வேணும், இஹ - இந்த விஷயத்தில், ந வைதர்ம்யம் - விரோதமில்லை, (அத்தால்), அஹம் - சேஷபூதனான நான், க்ருதார்த்த: - க்ருதார்த்தனாக, பவிஷ்யாமி - ஆகுவேன்,

(304) விஷ்-ஸம். (305) ரா-யு. 39-30.
(308) ரா-ஸு. 22-20. (309) ரா-அ. 30-22.

310. நசஸீதா த்வயா ஹீநா நசாஹமபி ராகவ ।
முஹூர்த்தமபி ஜீவாவோ ஜலாந் மத்ஸ்யா விவோத்ருதௌ ॥

ஹே ராகவ - ஓராகவனே, த்வயா - தேவரீரை, விநா - விட்டுப் பிரிந்தால், நச ஸீதா - ஸீதையுமில்லை, நச அஹமபி - நானும் இல்லை, ஜீவாவ: - யதி - அப்படி ஜீவித்திருப்போமாகில், ஜலாத் - நீரிலிருந்து, உத்ருதௌ - வெளிப்படுத்தப்பட்ட, மத்ஸ்யௌ இவ - மீன் (நீர்பசை யுள்ளளவு ஜீவித்திருப்பது) போல, முஹூர்த்தம் - ஒரு முகூர்த்த காலமே, ஜீவாவ: - (கூட அழைத்துக்கொண்டு போவீர் என்னும் ஆசை உள்ளளவும்) ஜீவித்திருப்போம்.

311. தநுராதாய ஸகுணம் கநித்ர பிடகாதர: ।
அக்ரதஸ்தே கமிஷ்யாமி பந்தாநமநு தர்ஸயந் ॥
ஆஹரிஷ்யாமிதே நித்யம் மூலாநிச பலாநிச ।
வந்யாநி யாநிசாந்யாநி ஸ்வாஹாராணி தபஸ்விநாம் ॥

ஸகுணம் - குண ஸஹிதமான, தநு: - வில்லை, ஆதாய - எடுத்துக்கொண்டு, கநித்ர - மண்வெட்டி (களைகொத்தி) யையும், பிடகா - கூடையையும், தர: - விரவில் தரித்தவனாய், பந்தாநம் - மார்க்கத்தை, அநுதர்ஸயந் - காண்பித்துக்கொண்டு, அக்ரத: - முன்னே, கமிஷ்யாமி - செல்கிறேன், தபஸ்விநாம் - தபஸ்விகளுக்கு, ஸ்வாஹாராணி - ஸ்வகீய ஆகாரமான, மூலாநிச - கந்த மூலாதிகளும், பலாநிச - பழவகைகளும, அந்யாநி - இதரமான, வந்யாநி - வனஸம்பந்தமானது, யாநி - யாதிருக்கின்றதோ, தாநி - அவைகளையும், தே - தேவரீருக்கு, நித்யம் - ப்ரதி தினமும், ஆஹரிஷ்யாமி - சேகரித்துக் கொண்டு வந்து கொடுப்பேன்.

312. சத்ர சாமரபாணிஸ்து லக்ஷ்மணோநுஜகாமஹ ॥

லக்ஷ்மண - இளையபெருமாள், சத்ர - திருக்குடையையும், சாமர - திருவெண் சாமரத்தையும், பாணிஸ்து - கையில் தரித்துக்கொண்டு, அநுஜகாமஹ - பெருமாளைப் பின் தொடர்ந்து போனார்.

313. அத தஸ்மிந்திநே புண்யே ஸுஹலக்நே ஸுஹோதயே ।
ராகவஸ்யாபிஷேகார்த்தம் மங்களம் சக்ரிரே ஜநா: ॥

அத: - பிறகு, தஸ்மிந்திநே - அந்த பட்டாபிஷேகத் திருநாளில், ஸுபலக்நே - நல்ல லக்னத்தில், சுபோதயே - நல்ல முகூர்த்தத்தில், ராகவஸ்ய - சக்ரவர்த்தித் திருமகனுக்கு, அபிஷேகார்த்தம் - திருவபிஷேகத்திற்காக, ஜநா: - அயோத்யா ஜனங்கள், மங்களம் - மங்கள காரியங்களை, சக்ரிரே - பண்ணினார்கள்,

(310) ரா-அ. 53-31. (311) ரா-அ. 31-23-24.
(312) ரா-அ. 12-32. (313) பாத்ம-உத். 2-49.

314. [1] மந்த்ரபூதஜலைஸ் ஸூத்தைர் முநயஸ் ஸம்ஶித வ்ரதா: ।
ஜபந்தோ வைஷ்ணவாந் ஸூக்தாந் சதுர்வேத மயாந்
ஶுபாந் ॥ அபிஷேகம் ஸூஹம் சக்ரு: காகுத்ஸ்தம்
ஜகதாம்பதிம் ॥

ஸம்ஶித வ்ரதா: - பரிசுத்தமான விரதத்தோடு கூடிய, முநய: - (மநந சீலர்களான) ருஷிகள், சதுர் வேத மயாந் - நான்கு வேத ஸ்வரூபங்களாயும் சுபாந் - சுபங்களாயுமிருக்கிற, வைஷ்ணவாந் ஸூக்தாந் - விஷ்ணுவை ப்ரதிபாதிக்கிற மந்த்ரங்களை, ஜபந்த: - ஜபித்துக்கொண்டு, ஸூத்தை: - பரிசுத்தங்களான, மந்த்ரபூதஜலை: - வேதோக்த மந்த்ரங்களாலே பாவநமாக்கின ஜலத்தாலே, ஜகதாம் - உலகத்திற்கு, பதிம் - நாயகனான, காகுத்ஸ்தம் - ராகவனுக்கு, அபிஷேகம் - திருவபிஷேகம், சக்ரு: - செய்தார்கள்.

2 தஸ்மிந் ஸூபதமே லக்நே தேவதுந்துபயோ திவி ।
நிநேது: புஷ்பவர்ஷாணி வவர்ஷுஶ்ச ஸமந்தத: ॥

சுபதமே - அப்படிப்பட்ட, தஸ்மிந் லக்நே - மங்களகரமான லக்நத்தில், திவி - ஆகாசத்தில், தேவதுந்துபய: - தேவதுந்துபி முதலான வாத்தியங்கள், நிநேது: - முழங்கின, ஸமந்தத: - நாலு பக்கத்திலும், புஷ்ப வர்ஷாணி - பூமழை, வவர்ஷு: - பொழிந்தார்கள்.

3 திவ்யாம்பரைர் பூஷணைஶ்ச திவ்ய கந்தாநுலேபநை: ।
புஷ்பைர் நாநாவிதைர் திவ்யைர் தேவ்யாஸஹ ரகூத்வஹ: ॥
அலங்க்ருதஶ்ச ஶுஶுபே முநிபிர் வேத பாரகை: ॥

வேத பாரகை: - வேதபாராயணம் பண்ணிக்கொண்டிருக்கும், முநிபி: மஹரிஷிகளோடு (கூடினவரும்), திவ்யாம்பரை: - திவ்யமான வஸ்திரங்களாலும், பூஷணை: ச - திவ்யாபரணங்களாலும், திவ்ய கந்தாநுலேபநை: - நல்ல வாசனையோடுகூடிய சந்தனங்களாலும், திவ்யை: - திவ்யங்களான, நாநாவிதை: - அநேகவிதமான, புஷ்பை: - புஷ்பங்களாலும், அலங்க்ருத: ச - அலங்கரிக்கப்பட்டவரும், தேவ்யா ஸஹ - ஸீதாப்பிராட்டியோடு கூடினவருமாக, ரகூத்வஹ: - ரகுகுலச்ரேஷ்டரான சக்ரவர்த்தித் திருமகன், ஶுஶுபே - ப்ரகாசித்தார்.

4 சத்ரஞ்ச சாமரம் திவ்யம் த்ருதவாந் லக்ஷ்மணஸ் ததா ।
பார்ஶ்வே பரத ஶத்ருக்நௌ தாளவ்ருந்தம் விவேஜது: ॥

ததா - அப்பொழுது, லக்ஷ்மண: - இளையபெருமாள், திவ்யம் சத்ரம் சாமரஞ்ச - திவ்யமான திருக்குடையையும் திருவெண்சாமரத்தையும், த்ருதவாந் - தரித்தடிமை செய்தார், பரதசத்ருக்நௌ - பரதன் சத்ருக்நன் ஆகிய இவர்கள், பார்ஶ்வே - இருபக்கத்திலும், தாளவ்ருந்தம் - விசிறியைக் கொண்டு, விவேஜது: - விசிறினார்கள்.

(314—1, 2, 3, 4,) பாத்ம-உத். 2-49.

5 தர்ப்பணம் ப்ரததௌ ஸ்ரீமாந் ராக்ஷஸேந்த்ரோ விபீஷண: ।
ததார பூர்ண கலஶம் ஸுக்ரீவோ வாநரேஶ்வர: ॥

ஸ்ரீமாந் - ஸ்ரீமானான, ராக்ஷஸேந்த்ர: - ராக்ஷஸாதிபதியான, விபீஷண: - விபீஷணாழ்வான், தர்ப்பணம் - கண்ணாடி, ப்ரததௌ - சமர்ப்பித்தார். வாநரேஶ்வர: - வாநராதிபதியான, ஸுக்ரீவ: - (ஸுக்ரீவ) மஹாராஜர், பூர்ணகலஶம் - பூர்ணகும்பத்தை, ததார - தரித்து அடிமை செய்தார்.

6 ஜாம்பவாம்ஶ்ச மஹாதேஜா புஷ்பமாலாம் மநோஹராம் ।
வாலி புத்ரஸ்து தாம்பூலம் ஸகர்ப்பூரம் ததௌ ப்ரியாத் ॥

மஹாதேஜா: ஜாம்பவான் ச - பெருமதிப்புடைய ஜாம்பவான், மநோஹராம் புஷ்பமாலாம் - மனதிற்குச் சந்தோஷமான, புஷ்பமாலையை ததௌ - ஸமர்ப்பித்தார், வாலி புத்ர: து - அங்கதன், ஸகர்ப்பூரம் தாம்பூலம் - கர்ப்பூரத்தோடு கூடிய தாம்பூலத்தை, ப்ரியாத்ததௌ - ப்ரீதியோடு கொடுத்தார்.

7 ஹநுமாந் தீபிகாம் திவ்யாம் ஸுஷேணஸ்து த்வஜம் ஸுபம் ।
பரிவார்ய மஹாத்மாநம் மந்த்ரிணஸ் ஸமுபாஸிரே ॥

ஹநுமாந் - திருவடி, திவ்யாம் தீபிகாம் - திவ்யமானக் கைப்பந்தத்தைப் பிடித்துக்கொண்டும், ஸுஷேண: து - ஸுஷேணன், ஸுபம் த்வஜம் - அழகான த்வஜத்தைப் பிடித்துக்கொண்டும், மந்த்ரிண: - மந்திரிகள், மஹாத்மானம் பரிவார்ய - பெருமாளைச் சுற்றிக்கொண்டும், ஸமுபாஸிரே - ஸேவித்தார்கள்.

315. இதம் புண்யமிதம் மேத்யம் இதம் பஹும்ருகத்விஜம் ।
இஹ வத்ஸ்யாமி ஸௌமித்ரே ஸார்த்தமேதேந பக்ஷிணா ॥

லக்ஷ்மண - ஓ லக்ஷ்மணா, இதம் புண்யம் - இவ்விடம் புண்யத்தைக் கொடுக்கும்படியானது, இதம் மேத்யம் - இவ்விடம் பரிசுத்தமானது. இதம் பஹும்ருகத்விஜம் - இவ்விடம் அநேக விதமான மிருகங்களோடும் பக்ஷிகளோடும் கூடியது, ஏதேந பக்ஷிணா ஸார்த்தம் - இந்த பக்ஷிராஜனான பெரியவுடையாருடன், இஹ வத்ஸ்யாமி - இங்கு வஸிக்கப்போகிறேன்.

316. காசிதாவஸதஸ்யாந்தே ஸ்தித்வா த்ருஷ்ட்வா பஹிர் குரும் ।
தந்மயத்வேந கோவிந்தம் தத்யௌ மீலிதலோசநா ॥
தச்சித்த விமலாஹ்லாத க்ஷீண புண்ய சயா ததா ।
ததப்ராப்தி மஹாது:க விலீநாஶேஷ பாதகா ॥
சிந்தயந்தீ ஜகத்ஸூதிம் பரப்ரஹ்ம ஸ்வரூபிணம் ।
நிருச்வாஸதயா முக்திம் கதாந்யா கோபகன்யகா ॥

காசித் - ஒரு கோபகன்யகை, பஹி: - வெளியில், குரும் த்ருஷ்ட்வா - பெரியோர்களைப் பார்த்து (தான் போகக் கூடாமையாலே), ஆவஸ தஸ்யாந்தே

(5, 6, 7) பாத்ம - உத். 2-49. (315) ரா-ஆ. 15-19.
(316) வி-பு. 4 513-20.

ஸ்திக்ா - க்ருஹத்துக்குள்ளே யிருந்தே, கோவிந்தம் - கோவிந்தனே, தந்மயத்வேந - அவன் மயமாகவே, மீலித லோசநா - மூடிய கண்களையுடைய வளாய், தத்யௌ - த்யாநம் பண்ணினுள். ததா - அப்போது, தச்சித்த - அந்தக்ருஷ்ணனிடத்தில் வைத்த மனதையுடைய வளாதலால் வந்த, விமலாஹ்லாத - நிர்மல ஸுகத்தால், க்ஷீண புண்ய சயா - போக்கடிக்கப்பட்ட புண்ய ஸமூஹங்களை யுடையவளாயும், ததப்ராப்தி - அவனை யடையாததினுல் வந்த, மஹா துக்க - மஹா துக்கத்தினுலே, விலீந சேஷ பாதகா - நசித்த பாபஸமூஹங்களையுடைய வளாயும், பரப்ரஹ்ம ஸ்வரூபிணம் - பரப்ரஹ்ம ஸ்வரூபியான, ஜகத் ஸூதிம் - ஜகத் காரண வஸ்துவை, சிந்த்யந்தீ - த்யானம் பண்ணிக்கொண்டு, நிருச் வாஸதயா - மூச்சில்லாமையால், அந்யா கோப கந்யகா - வேறு கோப கன்னிகையானவள், முக்திம் கதா - தேஹ விமோசனத்தை யடைந்தாள்.

317. விஷ்ணோः கார்யம் ஸமுத்திஸ்ய தேஹத்யாகோ யதா க்ருதः ।
ததா வைகுண்ட மாஸாத்ய முக்தோ பவதி மானவः ॥

விஷ்ணோः கார்யம் - எம்பெருமானுடைய காரியத்தை, ஸமுத்திஸ்ய - உத்தேசித்து, யதா - எப்பொழுது, தேஹத்யாகः க்ருதः - தேஹத்தின் தியாகமானது செய்யப்பட்டதோ, ததா - அப்போது, மாநவः - மநுஷ்யன், வைகுண்ட மாஸாத்ய - வைகுண்டத்தை யடைந்து, முக்தோபவதி - முக்தனுகிறுன்.

318. தேவகார்ய பரோபூத்வா ஸ்வாம் தநும் யः பரித்யஜேத் ।
ஸயாதி விஷ்ணு ஸாயுஜ்யமபி பாதகக்ருந் நரः ॥

யः - எவன், தேவ கார்யபரः பூத்வா - தேவகார்யத்தைச் செய்கிறவனுய் ஆகி, ஸ்வாம் தநும் பரித்யஜேத் - தன்னுடைய சரீரத்தை விடுகிறுனே, ஸः நரः - அந்த மனிதன், பாதகக்ருத் அபி - பாபியானுலும், விஷ்ணு ஸாயுஜ்யம் யாதி - விஷ்ணுவின் பதவியை அடைகிறுன்.

319. ரங்கநாதம் ஸமாஸ்ரித்ய தேஹத்யாகம் கரோதியः ।
தஸ்யவம்ஸே ம்ருதாः ஸர்வே கச்சந்த் யாத்யந்திகம் லயம் ॥

ரங்கநாதம் - ரங்கநாதனை, ஸமாஸ்ரித்ய - அநந்யப்ரயோஜனமாய் ஆஸ்ரயித்து, யः - எவன், தேஹத்யாகம் - சரீரத்யாகத்தை, கரோதி - செய்கிறுனே, தஸ்ய - அவனுடைய, வம்ஸே - குலத்தில், ம்ருதாः - இறந்த, ஸர்வே - அகிலரும், ஆத்யந்திகம் லயம் - மோக்ஷத்தை, கச்சந்தி - அடைகிறுர்கள்.

320. அக்நிப்ரவேஸம் யஸ்சாபி குருதே மத்கதாத்மநா ।
ஸயாத் யக்நிப்ரகாஸேந விமாநேந மமாலயம் ॥

(317) ஆக்நேயபுராணம். (318) வாயுபுராணம்.
(319) வாமந. பு. (320) பாரதம்-ஆச்-பர்வம்.

ப்ராணம்ஸ் த்யஜதியோ மர்த்யோ மாம் ப்ரபந்நோப்யநாஶகம்।
பாலஸூர்ய ப்ரகாஶேந வ்ரஜேத் யாநேந மத் க்ருஹம்॥

மத்கதாத்மநா - என்னிடத்தில் வைத்த மனதினாலே, யஸ்சாபி - எவனு கிலும், அக்நிப்ரவேசம் - அக்நிப்ரவேசத்தை, குருதே - பண்ணுகிறானோ. ஸ: - அவன், மம - என்னுடைய, ஆலயம் - பரமபதத்தை, அக்நி ப்ரகாஶேந - அக்நிபோல் திவ்ய தேஜஸ்ஸினால் ப்ரகாசிக்கிற, விமாநேந - விமாநத்தினால், யாதி - அடைகிறான், மாம் - என்னிடத்தில், ப்ரபந்ந: - பரந்யாஸம் பண்ணின, ய: மர்த்ய: - எந்த மனிதன், ப்ராணாந் த்யஜதி - ப்ராணனை விடுகிறானோ, (அவன்) பால ஸூர்ய ப்ரகாஶேந - பால ஸூர்யனைப்போல் விளங்குகிற, விமாநேந - விமாநத்தினால், அநாஶகம் - நாசமில்லாத, மத் க்ருஹம் - என்னுடைய (பரமபதமாகிய மேலான) வீட்டை, வ்ரஜேத் - அடைவான்.

321. இதம் குர்யாத்.

இதம் - இதை, குர்யாத் - செய்.

322. உருவுடையா ரிளையார்கள் நல்லார்
ஓத்து வல்லார்களைக்கொண்டு வைகல்
தெருவிடை யெதிர்கொண்டு பங்குனிநாள்
திருந்தவே நோற்கின்றேன் காமதேவா
கருவுடை முகில்வண்ணன் காயாவண்ணன்
கருவிளைபோல் வண்ணன் கமலவண்ணத்
திருவுடை முகத்தினில் திருக்கண்களால்
திருந்தவே நோக்கெனக் கருள்கண்டாய்.

காமதேவா - மன்மதனே, உருவுடையார் - அழகிய வடிவையுடையராய், இளையார்கள் - யுவாக்களாய், நல்லார் - காமதந்த்ரத்திற் சொன்ன ஆசாரங்களை யுடையராய், ஓத்து - காம சாஸ்திரத்தை அதிகரித்து, வல்லார்களை - அநுஷ்டிக்க வல்லரா யிருப்பவர்களை, கொண்டு - முன்னிட்டுக்கொண்டு, வைகல் - நாள்தோறும், தெருவிடை - அவன் வரும் வழியிலே, எதிர் கொண்டு - எதிரே சென்று, பங்குனி - பங்குனி மாதத்தில், நாள் - பெரிய திருநாளிலே, திருந்த - தெளிந்திருக்கைக் கீடாக, நோற்கின்றேன் - அநுஷ்டிக்கின்றேன், கருவுடை - கர்ப்பத்தையுடைய, முகில் - காளமேகம் போன்ற, வண்ணன் - வடிவுடையனாய், காயா - காயாம்பூப் போன்ற, வண்ணன் - திருநிறத்தை யுடையனாய், கருவிளைபோல் - காக்கணம் பூப்போன்ற, வண்ணன் - பளபளப்பை யுடையனாய், கமலவண்ணம் - செந்தாமரைமலரின் நிறம்போன்ற காந்தியை யுடைத்தான, திருவுடை முகத்தினில் - திருமுக மண்டலத்தி லுண்டான, திருக்கண்களால் - திருக்கண்களாலே, எனக்கு - என் விஷயத்தில், திருந்த - அவன் விசேஷ கடாக்ஷம் பண்ணும்படிக்கீடாக, நோக்கு அருள் - நீ கடைக்கணிக்க வேணும்.

(321) (322) நாச். தி. 1.6.

323. மாசுடை யுடம்பொடு தலையுலறி
வாய்ப்புறம் வெளுத் தொருபோதுமுண்டு
தேசுடைத் திறலுடைக் காமதேவா
நோற்கின்ற நோன்பினைக் குறிக்கொள்கண்டாய்
பேசுவ தொன்றுண் டிங்கெம்பெருமான்
பெண்மையைத் தலையுடைத் தாக்கும்வண்ணம்
கேசவ நம்பியைக் கால்பிடிப்பா
ளென்னுமிப் பேறெனக் கருள்கண்டாய்.

தேசுடை - பிரிந்தாரைச் சேர்க்கையால் வந்த புகரையும், திறலுடை - அவர்கள் விரோதியைப் போக்குகைக்கீடான மிடுக்கையு முடையனாய், எம்பெருமான் - எனக்கு ஸ்வாமியான, காமதேவா - மந்மதனே, மாசுடை - அழுக்குப்படிந்த, உடம்பொடு - உடம்போடே கூட, தலை உலறி - தலைமயிரை விரித்துக் கொண்டும், (தாம்பூலதாரண மில்லாமையாலே) வாய்ப்புறம் - உதடுகள், வெளுத்து - வெளுத்தும், ஒருபோது - ஓரே வேளை, உண்டும் - புசித்துக் கொண்டு, நோற்கின்ற - நோற்கிற, நோன்பினை - இந்த நோன்பை, குறிக்கொள் கண்டாய் - நீ எப்போதும் ஜ்ஞாபகத்தில் வைக்கவேணுங்காண், இங்கு - இப்போது, பேசுவது - சொல்லவேண்டுவது, ஒன்று உண்டு - ஒன்றுளது- பெண்மை - என் ஸத்தை, தலையுடைத் தாக்கும் வண்ணம் - தலைமை பெறும் படிக்கீடாக, கேசவன் - கேசியென்னும் அஸுரனை நிரஸித்தவனாய், நம்பியை- கல்யாண குணங்களால் பூர்ணனா யிருக்கிறவனுக்கு, கால் பிடிப்பாள் - கால் பிடிக்குமவள், என்னும் - என்கிற, இப்பேறு - இந்த புருஷார்த்தத்தை, எனக்கு - எனக்கு, அருள் கண்டாய் - க்ருபை பண்ணவேணு மென்கிறாள்.

324. நாணுநிறையும் கவர்ந்தென்னை நன்னெஞ்சம் கூவிக்கொண்டு
சேணுயர் வானத்திருக்கும் தேவபிரான் றன்னை
ஆணையென் தோழி யுலகுதோ றலர்தூற்றி ஆம்
கோணைகள் செய்து குதிரியாய் மடலூர்துமே.

என்னை - என்னிடத்தினின்றும், நாணும் - நாணத்தையும், நிறையும் - பூர்த்தியையும், கவர்ந்து - அபகரித்து, நல்நெஞ்சம், - சிநேகிப்பதற்குறிய மனதையும், கூவிக்கொண்டு - அழைத்துக் கொண்டு, சேண் உயர் - மிகவும் உயர்ந்த, வானத்து - பரமபதத்திலே, இருக்கும் - எழுந்தருளியிருக்கிற தேவ பிரான் தன்னை - நித்திய சூரிகளுக்கு தலைவனானவனை, என் தோழி - எனக்குத் தோழியே, ஆணை - உன் ஆணையே, உலகு தோறு - எல்லா உலகங்களிலும், அலர் தூற்றி - பழியைப் ப்ரசித்தமாம்படி தூற்றி, ஆம் - செய்ய இயல்வதான, கோணைகள் செய்து - மிடுக்குகளைச் செய்து, குதிரி ஆய் - நாணமற்றவளாய், மடல் ஊர்தும் - மடலூரக்கடவோம்.

(323) நாச். தி. 1 8. (324) திருவா. 5-3 9.

325. ஓதிநாமம் குளித் துச்சிதன்னால், ஒளிமாமலர்
பாதநாளும் பணிவோம் நமக்கே நலமாதலில்
ஆதுதாரா னெனிலும் தரும் அன்றியு மன்பராய்
போதுமாதே தொழுது மவன் மன்னு புல்லாணியே.

மாதே - பெண்ணே, நமக்கே - நமக்கே, நலம் ஆதலில் - புருஷார்த்த மாகையால், குளித்து - (நாம்) ஸ்நாநம் செய்து, நாமம் - (அவனுடைய) திரு நாமத்தை, ஓதி - சொல்லி, உச்சிதன்னால் - சிரஸ்ஸினால், ஒளி - ப்ரகாசியாநின்ற, மா - ஶ்லாக்யமான, மலர் பாதம் - திருவடித்தாமரைகளை, நாளுந் - தினந்தோறும், பணிவோம் - தொழக்கடவோம், ஆது - யாதொரு நலத்தையும், தாரானெனிலும் - (அவன்) கொடாமல் போனாலும், தரும் - (இந்த ஸாதநாநுஷ்டாநம்) கொடுக்கும், அன்றியும் - அதுவுமன்றிக்கே, அன்பராய் - பக்தராய், போதும் - போவோம், அவன் - அந்த எம்பெருமான், மன்னு - பொருந்தி வர்த்திக்கிற, புல்லாணியே - திருப்புல்லாணி யென்கிற திவ்ய தேசத்தையே, தொழுதும் - தொழுவோம்.

326. பெருந்தெருவே ஊராரிகழிலு மூராதொழியேன் நான்
வாரார் பூம்பெண்ணை மடல்.

ஊரார் - ஊரிலுள்ளார், இகழிலும் - பழித்தாலும், நான் - நான், பெருந் தெருவே - பெரிய வீதியில், வாரார் - நீண்ட, பூ - அழகிய, பெண்ணை மடல் - பனைமடலைக்கொண்டு, ஊராதொழியேன் - ஊராமல் தவறேன்.

327. உன்னியுலவா வுலகறிய வூர்வன்நான்
முன்னிமுளைத்தெழுந் தோங்கி யொளிபரந்த
மன்னியபூம் பெண்ணைமடல்

மற்று - இன்னுமுள்ள, இவைதான் - இந்தச் சேஷ்டிதங்கள், உன்னி உலவா - நினைத்து முடியாது, முளைத்து எழுந்து - (நன்றாக) முளைத்து வ்ருத்தி யடைந்து, ஓங்கி - பெருகி, ஒளிபரந்த - ஒளிமிக்கதாய், பூ - அழகியதாய், மன்னிய - நிலை நின்ற, பெண்ணை மடல் - பனை மடலைக்கொண்டு, முன்னி - முற்கோலி, நான் - நான், உலகு - லோக மெல்லாம் அறிய - அறியும்படி, ஊர்வன் - மடலூரக்கடவேன்.

328. நமக்கே நலமாதலில் ... ... 325-வது இலக்கம் காண்க.

329. யாமடலூர்ந்து மெம்மாழி யங்கைப்பிரானுடை
தூமடல் தண்ணந் துழாய் மலர்கொண்டு சூடுவோம்
யாமடமின்றித் தெருவுதோ றயல்தையலார்
நாமடங்காப் பழிதூற்றி நாடு மிரைக்கவே.

---

(325) பெரிய திரு. 9-3 9. (326) சிறிய திருமடல். 77.
(327) பெரிய திருமடல். 148. (329) திருவா. 5-3 10.

யா - எதாயினும் ஒருபடியாலும் பெண்மைக்குறிய, மடம் இன்றி - ஒடுக்கம் இல்லாமல், தெருவு தோறு - தெருக்கள்தோறும் புகுந்து, அயல் - அயலாரான, தையலார் - மாதர்கள், நாமடங்கா - நாவானது இடைவிடாதே சொல்லுகின்ற, பழிதூற்றி - பழியைத்தூற்றி, நாடும் - சகலலோகமும், இரைக்க - கூடும்படி, யாமம - மடலூரத் தகாத பெண்மையையுடைய நாம், மடல் ஊர்ந்து - நமக்கீடல்லாத மடலை ஊர்ந்தாயினும், ஆழி அம் கை - திருவாழியைத் தரித்த அழகிய கையையுடைய, எம்பிரான் உடை - எமக்கு உபகாரகனானவனுடைய, தூமடல் - பரிசுத்தமான இதழ்களையுடைய, தண் அம் - குளிர்ச்சியும் அழகுமுள்ள, துழாய் மலர் - திருத்துழாய் மலர் மாலையை, கொண்டு சூடுவோம் - அவன் தரப்பெற்று தலையிலே சூடக் கடவோம்.

330. தையொரு திங்களும் தரை விளக்கித்
தண் மண்டலமிட்டு மாசி முன்னுள்
ஐய நுண்மணற்கொண்டு தெருவணிந்து
அழகினுக் கலங்கரித் தனங்கதேவா
உய்யவுமாங்கொலோ வென்று சொல்லி
உன்னையு மும்பியையும் தொழுதேன்
வெய்யதோர் தழலுமிழ் சக்கரக்கை
வேங்கடவற் கென்னை விதிக்கிற்றியே.

தையொரு திங்களும் - தைமாதம் முழுதும், தரை - அவன் வரும் ஸ்தலத்தை, விளக்கி - அலங்கரித்து, தண் - குளிர்ந்து அழகாயிருந்துள்ள, மண்டலம் - மண்டலாகாரமான கோலத்தை, இட்டு - இட்டும், மாசி - மாசி மாதத்தில், முன் நாள் - முதல் பக்ஷத்திலும், ஐய - அழகியதாய், நுண் - நுண்ணியதான, மணற் கொண்டு - மணலைக் கொண்டு, தெரு - அவன் வரும் தெருவை, அழகினுக்கு - கேவலம் அழகுக்காகவே, அணிந்து - அழகு பெறும்படி, அலங்கரித்து - அலங்காரம் பண்ணி, அநங்கதேவா - மந்மதனே, உய்யவுமாங்கொலோ என்று - உஜ்ஜீவிக்கவும் கூடுமோ என்று, சொல்லி - ஆசையாலே சொல்லி, உன்னையும் - உன்னையும், உம்பியையும் - உன் தம்பியான சாமனையும், தொழுதேன் - பணிந்தேன், வெய்யது - அதிக வெப்பத்தை யுடையதான, தழல் உழிழ்-நெருப்புப் பொறிகளைச் சிந்தா நின்றுள்ளதாய், ஓர் - அத்விதீயமான, சக்கரம் - திருவாழியை, கை - திருக்கையிலேயுடைய, வேங்கடவற்கு - திருமலையி லெழுந்தருளி யிருக்கிறவனுக்கு, என்னை - என்னை, விதிக்கிற்றி - அந்தரங்க கைங்கர்யம் பண்ணும்படி விதிக்கவேணுமென்கிறாள்.

331. பேசுவதொன்றுண்டு ... ... 323-வது இலக்கம் காண்க.

332. ஞானங்கனிந்த நலங்கொண்டு நாடொறும் நைபவர்க்கு
வானங்கொடுப்பது மாதவன் வல்வினையேன் மனத்தில்
ஈனங்கடிந்த விராமாநுசன்றன்னை யெய்தினர்க்கத்
தானங்கொடுப்பது தன்தகவென்னுஞ் சரண் கொடுத்தே.

(330) நாச. திரு. 1-1. (332) இரா. நூற். 66.

மாதவன் - ச்ரியஃபதியான ஸர்வேச்வரன், ஞானங் கனிந்த நலங் கொண்டு - ஜ்ஞாந விபாகரூபமான ப்ரேமத்தை யுடையராய், நாடொறும் - நாள் தோறும், நைபார்க்கு - சிதிலராமவர்களுக்கு, வானங் கொடுப்பது - மோக்ஷங் கொடுப்பது. வல்வினையேன் மனத்தில் - மஹாபாபியான என்னுடைய மநஸ்ஸில், ஈனங் கடிந்த - தோஷத்தை போக்கியருளின, இராமாநுசன்றன்னை - எம்பெருமானார் தம்மை, எய்தினர்க்கு - அடைந்தவர்களுக்கு, தன்தகவென்னும் சரண் கொடுத்து-தம்முடைய க்ருபையென்று சொல்லப்படுகிற சாதநத்தை அவர்களுக்கு நைம்முதலாகக் கொடுத்து, அத்தானங் கொடுப்பது - வானம் என்று சொன்ன அந்தஸ்த்தாநங் கொடுத்துதருளுவது.

333. பேரமர்காதல் ... ... 263-வது இலக்கம் காண்க.

334. ஶமத₃ம நியதாத்மா ஸர்வபூ₄தாநுகம்பீ
விஷயஸுக₂ விரக்தோ ஜ்ஞாந த்ருப்த: ப்ரஶாந்த: ।
அநியத நியதாந்நோ நைவஹ்ருஷ்டோ நருஷ்ட:
ப்ரவஸித இவ கே₃ஹே வர்த்ததே யஸ் ஸமுக்த: ॥

ய: - எவன், ஶம - உட்புலனை யடக்குவதாலும், தம - புறப்புலன்களை யடச்குவதினாலும், நியத - அடக்கப்பட்ட, ஆத்ம - தேஹத்தையுடையவனும், ஸர்வபூதாநுகம்பீ - எல்லா வுயிர்களிடத்திலும் தயையுடையவனும், விஷயஸுக - சிற்றின்பங்களில், விரக்த: - வெறுப்புற்றவனும், ஜ்ஞாந - மெய்யறிவினாலே, த்ருப்த: - மகிழ்வுற்றவனும், ப்ரஶாந்த: - சாந்தியுடையவனும், அநியத - கால நியமமின்றியும், நியத - சாஸ்திர நியமமுற்று மிருக்கின்ற அந்ந: - உணவுடையவனும், நைவஹ்ருஷ்ட: - சுகத்தினால் மகிழ்வுராதவனும், நருஷ்ட: - தீமையினால் சினமுறாதவனும் ஆகி, கேஹே - வீட்டிலும், ப்ரவஸித இவ - தூரதேசம் சென்றவன் போலவே, வர்த்ததே - இருக்கின்றனனோ, ஸ: - அவன் தான், முக்த: - முக்தி பெறுவான்.

335. அமாநித்வ மத₃ம்பி₄த்வ மஹிம்ஸா க்ஷாந்தி ரார்ஜவம் ।
ஆசார்யோபாஸநம் ஶௌசம் ஸ்தை₂ர்யம் ஆத்ம விநிக்₃ரஹ: ॥

அமாநித்வம் - தன்னை புகழ்ந்து கொள்ளாமையும், அதம்பித்வம் - டாம்பீகமில்லாமையும், அஹிம்ஸா - (மனோ வாக்கு காயங்களால்) ஹிம்ஸை செய்யாமையும், க்ஷாந்தி: - பொறுமையும், ஆர்ஜவம் - கபடமின்மையும், ஆசார்யோபாஸநம் - சத்குரு சேவையும், சௌசம் - மனச்சுத்தி சரீரசுத்திகளும், ஸ்தைர்யம் - மோக்ஷ மார்க்கத்தில் விடாமுயற்சியும், ஆத்மவிநிக்ர: - தேஹேந்திரியங்களை விஷயாதிகளில் செலுத்தாமல் மோக்ஷ சாதனமான காரியங்களில் உபயோகிப்பதும், (ஜ்ஞானமாகும்.)

336. மாற்பால் மனஞ்சுழிப்ப மங்கையர்தோள் கைவிட்டு
நூற்பால் மனம்வைக்க நொய்விதாம்—நாற்பால

(334) (335) ஸ்ரீகீதை. 13 8.
(336) மூன். திரு. 14.

வேதத்தான் வேங்கடத்தான் விண்ணோர்முடி தோயும்
பாதத்தான் பாதம் பணிந்து.

நால்பால வேதத்தான்-சதுர்விதவேத ப்ரதிபாத்யனாய், வேங்கடத்தான் - திருமலையை வாஸஸ்தானமாக வுடையனாய், விண்ணோர்-நித்யஸூரிகளின், முடிதோயும் - கிரீட மூறையும்படியான, பாதத்தான் - திருவடிகளையுடையனான, பாதம் - ஸர்வேஸ்வரனுடைய திருவடிகளை, பணிந்து - ஆஶ்ரயித்து, மால்பால் - அந்த ஸர்வேஸ்வரன்பக்கல், மனம் - மனஸ்ஸை, சுழிப்ப - ப்ரவணமாக்கினால், மங்கையர் - பெண்களின், தோள் - தோளை, கைவிட்டு - நிராசை பண்ணி, நூல்பால் - வேதங்களில், மனம் - உள்ளத்தைப், வைக்க - பொருத்த, நொய்விதாம் - எளிதாம்.

337. பரமாத்மநி யோ ரக்தோ விரக்தோ அபரமாத்மநி ।
ஸர்வைஷணா விநிர்முக்தஸ் ஸபைக்ஷம் போக்துமர்ஹதி ॥

யஃ - எவன், பரமாத்மநி - பரமாத்மாவினிடத்தில், ரக்தஃ - ஆசையுள்ளவனாய், அபரமாத்மநி - பகவத்வ்யதிரிக்த விஷயங்களில், விரக்தஃ - ஆசையற்றவனாய், ஸர்வைஷணா - ஈஷணாத்ரயங்களை, விநிர்முக்தஃ - விட்டவனாயிருக்கிறானோ, ஸஃ - அவன், பைக்ஷம்-பிக்ஷைவாங்கி, போக்தும் - புஜிக்க, அர்ஹதி- யோக்யனாகிறான்.

338. கண்டுகேட் டுற்றுமோந் துண்டுழலும் ஐங்கருவி
கண்டவின்பம் தெரிவரிய வளவில்லாச் சிற்றின்பம்
ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்பக்
கண்டசதிர் கண்டொழிந்தே னடைந்தே னுன்திருவடியே.

கண்டு - ரூப குணத்தைக் கண்டும், கேட்டு - சப்த குணத்தைக் கேட்டும், உற்று - ஸ்பரிச குணத்தை கிட்டியும், மோந்து - கந்த குணத்தை மோந்தும், உண்டு - ரஸ குணத்தைப் புசித்தும், உழலும் - அலையா நிற்கிற, ஐங்கருவி - பஞ்சேந்திரியங்களாலும், கண்ட - அனுபவித்த, இன்பம் - செல்வத்தின் சுகமும், தெரிவு அரிய - இந்திரியங்களால் அநுபவித்தற்கரிதான, அளவு இல்லா - (இந்தச் செல்வத்தின் சுகத்தைப்பார்க்கிலும் அழிவின்மை முதலியவைகளால்) அளவற்ற, சிறு-(பகவதநுபவத்தை நோக்க மிகவும்) சிறிதான.இன்பம் - ஆத்மாநுபவ சுகமும், ஒண் தொடியாள் - அழகான வளையலை யுடையளாகிய, திருமகளும் - பெரிய பிராட்டியும், நீயுமே - புருஷோத்தமனான நீயுமே, நிலாநிற்ப - எழுந்தருளியிருக்கும்படி, கண்ட - நிரூபித்து வைத்த, சதிர் - நல்விரகை, கண்டு - பிரத்தியக்ஷமாகக்கண்டு, ஒழிந்தேன் - கேவல ஐசுவரியத்தையும் கேவல ஆத்மாநுபவத்தையும் ஒழிந்தேன், உன் திருவடி - ஸ்ரீயஃபதியான உனது திருவடிகளை, அடைந்தேன் - அநுபவ முகத்தாலே கிட்டினேன்.

---

(337) பார்ஹஸ்பத்ய ஸ்ம்ருதி. (338) திருவா. 4-9-10.

339. ஶமஶ்சித்த ப்ரசாந்தி: ஸ்யாத் தமஶ்சேந்த்ரிய நிக்ரஹ: ।

சித்த: - அந்தர் யிந்திரியத்தை, ப்ரசாந்தி: - அடக்குவது, சம: - சமமென்னும், இந்த்ரிய - பாஹ்யேந்திரியத்தை, நிக்ர: - அடக்குவது, தம: - தமமென்னும், (கூறப்படும்),

340. புத்திர் ஜ்ஞாநமஸம்மோஹ: க்ஷமா ஸத்யம் தம: ஶம: ।
ஸுகம் து:க்கம் பவோऽபாவோ பயஞ்சாபய மேவச ॥

புத்தி: - புத்தியும், ஜ்ஞாநம் - ஜ்ஞானமும், அஸம்மோஹ: - பிரம நிவ்ருத்தியும், க்ஷமா - பொறுமையும், ஸத்யம் - உண்மையுரையும், தம: - புறக்கரண நிக்ரஹமும், சம: - அந்தக்கரண நிக்ரஹமும், ஸுகம் - இன்பமும், துக்கம் - துன்பமும், பவ: - உண்மையும், அபாவ: - இன்மையும், பயம்ச - பயமும், அபயம் ஏவச - பய நிவ்ருத்தியும், (என்னிடத்தி னின்றுமே உண்டாகின்றன.)

341. தமோ பாஹ்யகரணாநர்மநர்த்த விஷயேப்யோ நியமநம்
ஶமோந்த: கரணஸ்ய ததா நியமநம் ॥

தம: - தமமாவது, பாஹ்ய கரணாநாம் - ப்ராஹ்யேந்திரியங்களை, அநர்த்த விஷயேப்ய: - சப்தாதி விஷயங்களில் போய் அநர்த்தப் படாதபடி, நியமநம் - நியமிக்கை. சம: - சமமாவது, அந்த: கரணஸ்ய - மனதை, ததா - அப்படியே, நியமநம் - நியமிக்கை.

342. தஸ்மை ஸ வித்வா நுபஸந்நாய ஸம்யக் ப்ரஶாந்த சித்தாய ஶமாந்விதாய । யேநாக்ஷரம் புருஷம் வேத ஸத்யம் ப்ரோவாச தாம் தத்வதோ ப்ரஹ்ம வித்யாம் ॥

ஸம்யக் உபஸந்நாய - நன்ருய் கிட்டி நின்றவனைப், ப்ரசாந்த சித்தாய - மனச்சுத்தியை யுடையவனாய், சமாந்விதாய - பாஹ்யேந்திரிய நிக்ரஹமுடையவனாயு மிருக்கிற, தஸ்மை - அந்த சிஷ்யனைக் குறித்து, ஸ: - அந்த, வித்வாந் - ஆசாரியன், யேந - எந்த ப்ரஹ்ம வித்யையால், ஸத்யம் - ஸத்யமான, அக்ஷரம் - நாச ரஹிதமான, புருஷம் - புருஷனை, வேத - அறிவனோ, தாம்ப்ரஹ்ம வித்யாம் - அந்த ப்ரஹ்ம வித்யையை, தத்வத: - உள்ளபடி, ப்ரோவாச - உபதேசிக்க வேண்டும்.

343. ஏதேந ஶ்ரவணோபயுக்த மவதாநம் விவக்ஷிதம் ।
நதூபாஸநோபயுக்தாத் யந்தேந்த்ரிய ஜயாதி: ॥

ஏதேந - இதனல், ஶ்ரவண - கேட்பதற்கு, உபயுக்தம் - உபயோகமான, அவதாநம் - ஜாக்கிரதையானது, விவக்ஷிதம் - சொல்லப்பட்டது. உபாஸந -

(339)
(340) ஸ்ரீகீதை. 10-4.
(341) கீதாபாஷ்யம்.
(342) மு உப. 1-2-12.
(343) ஶ்ருதப்ரகாசிகை.

உபாஸநத்திற்கு, உபயுக்த - உபயோகமான, அத்யந்த-அதிகமான, இந்திரிய - இந்திரியத்தின், ஜயாதி: - அடக்கம் முதலியவை, நது - சொல்லப்படவில்லை.

344. தைவாதீநம் ஜகத் ஸர்வம் மந்த்ராதீநந்து தைவதம் ।
தந்மந்த்ரம் ப்ராஹ்மணாதீநம் தஸ்மாத் ப்ராஹ்மண தைவதம் ॥

ஸர்வம் - ஸமஸ்தமான, ஜகத் - லோகமானது, தைவாதீநம் - ஈஶ்வராதீநமா யிருக்கிறது, தைவதம் - அந்த தேவதையானது, மந்த்ராதீநம் - திருமந்த்ரத்திற்கு ஸ்வாதீநப்பட்டிருக்கிறது, தந்மந்த்ரம் - அந்த திருமந்த்ரமானது, ப்ராஹ்மணாதீநம்- ஆசார்யாதீநமா யிருக்கிறது, தஸ்மாத் - ஆகையால், ப்ராஹ்மணதைவதம் - ஆசார்யனே தேவ (பெரியவ) னுவான்.

345. ப்ரஹ்மவித் ப்ராஹ்மணோ விது: ।

ப்ரஹ்ம - ப்ரஹ்மத்தை, வித் - அறிந்தவன், ப்ராஹ்மண: -ப்ரஹ்மணன் என்று, விது: - சொல்லப்படுகிறுன்.

346. மந்த்ராதீநந்து ... ... 344-வது இலக்கம் காண்க.

347. ஆட்செய் தாழிப்பிரானைச் சேர்ந்தவன் வண்குருகூர்நகரான்
நாட்கமழ் மகிழ்மாலைமார்பினன் மாறன் சடகோபன்
வேட்கையாற் சொன்னபாடலாயிரத்துள் ளிப்பத்தும்வல்லார்
மீட்சியின்றி வைகுந்தமாநகர் மற்றது கையதுவே.

ஆள் செய்து - பரோபதேசமுகமான வாசிக கைங்கரியத்தைப் பண்ணி, ஆழிப்பிரானை - திருவாழியைக் கையிலேயுடைய யுபகாரகனை, சேர்ந்தவன் - அடைந்தவராய், வண்குருகூர் நகரான் - விலக்ஷணமான திருநகரிக்கு நிர்வாஹகராய், நாள் கமழ் - புதுமையாய் பரிமளிக்கிற, மகிழ்மாலை - மகிழ் மலர் மாலையை, மார்பினன் - மார்பிலே அணிந்தவராய், மாறன் - மாறன் என்கிற குடிப் பேரையும், சடகோபன் - (வேதத்திற்குப் புறம்பானவர்களை வெல்லுகையாலே சடகோப ரென்னும் திருநாமத்தையு முடைய) ஆழ்வார், வேட்கையால் - அன்பு மிகுதியால், சொன்ன - அருளிச் செய்த, பாடல் - கானருபமான, ஆயிரத்துள் - ஆயிரத்துள்ளும், இப்பத்தும் - இந்த பத்துப் பாட்டையும், வல்லார் - கற்று வல்லார்களுடைய, கையது - கையினிடத்தாகிறது, (அது யாதெனில்), மற்று - (இதின் பழக்கமாகிற பிரயோஜனத்துக்கு) மேலே, அது - அவ்வருகுண்டாய், மீட்சியின்றி - மீளுதலில்லாது, வைகுந்தம்-ஸ்ரீவைகுண்டமாகிற, மாநகர் - பெரியநகரம்.

348. தைவாதீநம் ... ... 344-வது இலக்கம் காண்க.

349. ஸராக்ஷஸ பரீவாரம் ஹதவாம்ஸ் த்வாம் மஹாத்யுதி: ।
இந்த்ரியாணி புராஜித்வா ஜிதம் த்ரிபுவநம் த்வயா ॥

(344) (345)
(347) திருவா. 4-10-11. (349) ரா-யு. 114-18.

ஸராக்ஷஸ பரீவாரம் - பரிஜனங்களான ராக்ஷஸர்களோடு கூடிய, த்வாம் - உன்னை, மஹாத்யுதி: - அதிக காந்தியுடைய, (பெருமாள்), ஹதவாந் - கொன்றார், த்வயா - உன்னால், இந்த்ரியாணி - இந்திரியங்களை, புரா ஜித்வா - முன்பு ஜயித்து, த்ரிபுவநம் - மூன்று உலகங்களும், ஜிதம் - ஜயிக்கப்பட்டது.

350.
351. படிமன்னு பல்கலன் பற்றோடறுத் தைம்புலன் வென்று
செடிமன்னு காயஞ்செற்றார்களு மாங்கவனை யில்லார்
குடிமன்னு மின்சொர்க்கமெய்தியு மீள்வர்கள் மீள்வில்லை
கொடிமன்னு புள்ளுடை யண்ணல்கழல் குறுகுமினோ.

படி - நிலத்தையும், மன்னு - நிலைபெற்ற, பல்கலன் - பலவகைப்பட்ட ஆபரணங்களையும், பற்றோடு - சங்கத்தோடே, அறுத்து - விட்டு, ஐம்புலன் - இந்திரியங்களைந்தையும், வென்று - தன் வசமாம்படி வென்று, செடி மன்னு - தூறு மண்டிக் கிடக்கிற, காயம் - சரீரத்தை, செற்றார்களும் - விரதம் முதலிய வற்றால் வருத்தினவர்களும், மன்னும் - கற்பத்தளவும் நிலைபெற்றிருக்கிற, குடி - குடியிருப்பை உடைத்தாய், இன் - இனிதான, சொர்க்கம் எய்தியும் - சுவர்க்கலோகத்தை அடைந்தும் (அந்த போகம் நிலைப்பதற்கு உறுப்பாக); ஆங்கு அவனை இல்லார் - அந்த சர்வேசுவரனையுடைய ரல்லாதார், மீள்வர்கள் - அங்கு நின்றும் மீள்வர்கள், (ஆதலால்), கொடிமன்னு - துவசத்திலே நிலைபெற்ற, புள் உடை - பெரிய திருவடியையுடைய, அண்ணல் - பெரியோனது, கழல் - திருவடிகளை, குறுகுமின் - கிட்டப் பாருங்கோள், (கிட்டுவீர்களாயின்), மீள்வு இல்லை - உங்களுக்கு மீட்சியில்லை.

352. தஸ்மாதேவம் வித் ஶாந்தோ தாந்தோ உபரதஸ் திதிக்ஷு:
ஸமாஹிதோ பூத்வா ஆத்மந்யேவாத்மாநம் பஶ்யேத் ॥

தஸ்மாத் - ஆகையால், ஏவம்வித் - இவ்விதமறிந்தவன், சாந்த: தாந்த: - அந்தர்ப்பாஹ்யேந்திரியங்களை அடக்கினவனாய், உபரத: - ஸர்வ விஷய விரக்தனாய், ஸமாஹிதோ பூத்வா - ஜாக்கிரதை யுடையவனாய், ஆத்மநி ஏவ - ஆத்மாவிலேயே, ஆத்மாநம் பஶ்யேத் - பரமாத்மாவைப் பார்க்க வேண்டும்.

353. புன்புல வழியடைத் தரக்கிலச்சினை செய்து
நன்புல வழிதிறந்து ஞானநற்சுடர் கொளீஇ
என்பிலெள்கி நெஞ்சுருகி யுள்கனிந் தெழுந்ததோர்
அன்பிலன்றி யாழியானை யாவர்காண வல்லரே.

புல் - க்ஷுத்ரங்களான, புலன் - ஶப்தாதி விஷயங்களைப் பற்றி நிற்கிற வழி - இந்திரியங்களாகிற மார்க்கத்தை, அடைத்து - அவ்விஷயங்களிலேபோகாதபடி தடுத்து, அரக்கு - ஶப்தாதி விஷயங்களினுடைய க்ஷுத்ரத்தையை அநுஸந்தித்து, இலச்சினை - வாஸனையும் அநுவர்த்தியாதபடி, செய்து -

---

(350—351) திருவா. 4-1-9. (352) ப்ரு-உப. 2-4.
(353) திருச். வி. 76.

பண்ணி, நல்-நன்றான, புல - எம்பெருமானென்கிற விஷயத்தில், வழி - இந்த்ரிய மார்க்கத்தை, திறந்து - ப்ரகாஶிப்பித்து, ஞானம் நல் - நன்றான ஜ்ஞாநமாகிற, சுடர் - ப்ரபையை, கோளீ - கொளுத்தி, என்பில் - அஸ்த்திமயமான சரீரத்திலே, எள்கி - இரங்கி, நெஞ்சு - ஹ்ருதயமானது, உருகி - கரைந்து, உள்-உள்ளே, கனிந்து - பக்வமாய், எழுந்து - பரமபக்தி ரூபமாக ஆவிர்ப்பூதமான, ஓர் - முக்யமான, அன்பிலன்றி - ப்ரேமத்தாலல்லது, ஆழியானை - திருவாழியைத் திருக்கையிலே தரித்தவனை, யாவர்காண - காண்கைக்கு யார், வல்லர் - ஸமர்த்தர்.

354. ஏகாந்திது விநிஶ்சித்ய தேவதா விஷயாந்தரை: ।
ஹக்த்யுபாயம் ஸமம் க்ருஷ்ண ப்ராப்தௌ க்ருஷ்ணைக ஸாதந: ॥

ஏகாந்தீது - பரமைகாந்தியானவன், பக்தியுபாயம் - பக்தி யோகம் என்னும் உபாயத்தை, தேவதாந்தரை: - தேவதாந்தரங்களோடும், விஷயாந்தரை: - விஷயாந்தரங்களோடும், ஸமம் - ஸமமாக, விநிஶ்சித்ய - நிச்சயம் பண்ணி (த்யஜித்து.) கிருஷ்ணைக ஸாதந: - கண்ணன் ஒருவனையே (உபாயமாக) ப்ரபத்தி பண்ணி, கிருஷ்ண: - கண்ணனை, ப்ராப்தௌ - அடைய வேண்டும்.

355. அடக்கரும் புலன்கள் ஐந்தடக்கி ஆசையாமவை
தொடக்கறுத்து வந்து நின்தொழிற்கணின்ற வென்னைநீ
விடக்கருதி மெய்செயாது மிக்கோராசையாக்கிலும்
கடற்கிடந்த நின்னலாவோர் கண்ணிலேனெம்மண்ணலே.

அடக்கரும் - நியமிக்க வரிதான, புலன்களைந்து - பஞ்சேந்த்ரியங்களை, அடக்கி - நீயே உன் விஷயமாக்கி, ஆசையாமவை - விஷயாந்தரங்களிலாசை, யென்று பேர் பெற்றவைபை, தொடக்கு - வாஸநையாகிற சம்பந்தத்தோடுகூட அறுத்து, தவிர்த்துப் வந்து - புருஷார்த்தத்தின் மேலெல்லையிலே வந்து, நின்-உன்னுடைய, தொழில் கண் - கைங்கர்யமாகிற தொழிலிடத்து, நின்ற வென்னை - நிலை நின்ற வென்னை, நீ - (இந்த்ரியஜயமே துடங்கி இவ்வளவும் புகுரநிறுத்தின) நீ, விடக்கருதி - விட நினைத்து, மெய் செயாது - அந்யதாசாரத்தைப்பண்ணி, மிக்கோராசையாக்கிலும் - விஷயாந்தரங்களிலே ருசியைப் பிறப்பித்தாயாகிலும், எம் அண்ணலே - எனக்கு நிருபாதிகஸ்வாமியானவனே, கடல் - திருப்பாற் கடலிலே, கிடந்த - என்னுடைய ஹிதார்த்தமாகக் கண் வளர்ந்தருளின, நின்னலால் - உன்னையொழிய, ஓர் - வேறொரு; கண்ணிலேன் - நிர்வாஹகரை யுடையே னல்லேன்.

356. ராமோ ஹாமிதி லோகஸ்ய சாதுர்வர்ஸ்ய ரக்ஷிதா ।
மர்யாதாநாம் ச லோகஸ்ய கர்த்தா காரயிதா சஸ: ॥

---

(354) ப்ரு-உப. 2-4. (355) திருச். வி. 95.
(356) ரா. ஸு. 35-11.

ஹே பாமிநி - ஓ அழகு பொருந்திய ஸீதையே, லோகஸ்ய - உலகத்தில், சாதுர் வர்ண்யஸ்ய - நான்கு வர்ணத்திலுள்ளவர்களையும், ரக்ஷிதா - ரக்ஷிக்கிறவர், ராமஃ - ராமபிரானே, லோகஸ்ய - உலகத்தில், மர்யாதாநாம்ச - (நான்கு வர்ணத்திற்கு முள்ள) மர்யாதைகளை, கர்த்தா - செய்கிறவரும், காரயிதாச - செய்விக்கிறவரும், ஸஃ - அந்த ராமபிரானேயாவர்.

357. மாம்ஸாஸ்ருக் பூயவிண்மூத்ர ஸ்நாயு மஜ்ஜாஸ்தி ஸம்ஹதௌ ॥

மாம்ஸ - மாம்ஸமும், அஸ்ருக் - இரத்தமும், பூய - சீழும், விண் - மலமும், மூத்ர - மூத்திரமும், ஸ்நாயு - செந்நீரும், மஜ்ஜ - கொழுப்பும், அஸ்தி - எலும்பும், ஸம்ஹதௌ - கூடினது (சரீரமாகும்).

358. மாற்பால் ... ... 336-வது இலக்கம் காண்க.

359. "அவனையல்லது அறியேன்," என்பது திருவாய்மொழி, 5—3—5-வது பாசுரத்தின் தாத்பர்யம்.

360. } கடியன் கொடியனெ டியமா லுலகங்கொண்ட
361. } அடிய னறிவருமேனி மாயத்த னாகிலும்
கொடிய வென்னெஞ்ச மவனென்றே கிடக்குமெல்லே
துடிகொ ளிடைமடத் தோழி யன்னையென் செய்யுமே.

கடியன் - (தன் காரியத்தில் எதிர்த்தலை பாராமல் விரைகின்ற) கடுமையையுடையவன், கொடியன் - (அக்காரியந் தலைக்கட்டினால் விரும்பிப் பாராமல் போகின்ற) கொடியவன், நெடியமால் - (போகத்தொடங்கினால் விலக்க அரிதாம்படி) பெரிய மேன்மையை யுடையவன், உலகங்கொண்ட - உலக முழுதையும் தன்னதேயாம்படி அளந்து கொண்ட, அடியன் - திருவடியை யுடையவன், அறிவு அரு-அறிதற்கு அரிய, மேனி - அழகினால் மயக்குகின்ற, மாயத்தன், ஆகிலும் - ஆச்சரியத்தை யுடையவனேயாகிலும், கொடிய - (உலகமரியாதை யன்றியே குற்றஞ் சொல்லி மீட்க அரிதாம்படி) கொடிதான, என் நெஞ்சம் - என் மனமானது, அவனே என்று - (கீழ்ச்சொன்ன சுபாவ விசேஷங்களையுடைய) அவனே தஞ்சமென்று, கிடக்கும் - கிடவாநிற்கும், எல்லே - (இதொரு நெஞ்சின்) சுபாவ மிருந்தபடியே, துடிகொள் - துடியினழகைக் கொண்ட, இடை - இடையையும், மடம் தோழி - மடப்பத்தையுமுடைய தோழியே, அன்னை என் செய்யும் - என் தாயானவள் யாது செய்வள்.

361. [1] வேம்பின்புழு வேம்பன்றி யுண்ணாது * அடியேன்
நான் பின்னு முன்சேவடி யன்றி நயவேன் *
தேம்ப லிளந்திங்கள் சிறைவிடுத்து * ஐவாய்ப்
பாம்பினணைப் பள்ளிகொண்டாய் பரஞ்சோதீ.

---

(357) (360—361) திருவா. 5-3-5.
(361—1) பெரிய. திரு. 11-8-7.

தேம்பல் இளந் திங்கள் - தேய்ந்து பருவம் நிரம்பாத சந்த்ரனுடைய, சிறை - க்ஷயரோகத்தை, விடுத்து - போக்கி, ஐவாய் பாம்பினணை - ஐந்தலை நாகத்தணையிலே, பள்ளி கொண்டாய் - பள்ளிகொண்டருளா நின்ற, பரம் சோதி - பரஞ்ஜோதிஸ் ஸ்வரூபனான ஸர்வேஶ்வரனே, வேம்பின் புழு - வேம்புக்கு இட்டுப்பிறந்த புழுவானது, வேம்பு அன்றி - வேம்பை யொழிய (மற்றொன்றை), உண்ணாது - தின்னாது (அதுபோலே); அடியேன் - உனக்கு ஶேஷபூதனான, நான் - நான், பின்னும் - நீ வேம்பானாலும், உன் - உன்னுடைய, சேவடி அன்றி - திருவடிகளை யொழிய (மற்றொன்றை), நயவேன் - விரும்பமாட்டேன்.

362. [1] புள்வாய் பிளந்த புனிதா வென்றழைக்க
உள்ளே நின்று என்னுள்ளம் குளிருமொருவா
கள்வா கடல்மல்லைக் கிடந்த கரும்பே
வள்ளாலுன்னை யெங்ஙனம் நான் மறக்கேனே.

புள் வாய் - பக்ஷியாகிய பகாஸுரனுடைய வாயை, பிளந்த - கிழித்துப் பொகட்ட, புனிதா - பரிசுத்தனே, என்று அழைக்க - என்று (நான்) கூப்பிடாநிற்க, உள்ளே நின்று - என் ஹ்ருதயத்திலே யிருந்து, என் உள்ளம் - என் மனஸ்ஸு, குளிரும் - குளிரும் (தாபமாறும்) படியாயிருக்கிற, ஒருவா - அத்விதீயனே, கள்வா - அறிய வொண்ணாத (ஸ்வபாவத்தையுடைய) வனே, கடல் மல்லை - திருக்கடல் மல்லையில், கிடந்த - பள்ளி கொண்டிருக்கிற; கரும்பே - போக்ய பூதனே, வள்ளால் - உதாரனான, உன்னை - தேவரீரை, நான் - ஶேஷபூதனான நான், எங்ஙனம் - எந்த உபாயத்தினால், மறக்கேன் - மறக்க சக்தனாகிறேன்? (ஒருநாளும் மறவேன்).

362. [2] அஹமஸ்யாவரோ ப்ராதா குணைர் தாஸ்ய முபாகத: ।
க்ருதஜ்ஞஸ்ய பஹுஜ்ஞஸ்ய லக்ஷ்மணோ நாம நாமத: ॥

க்ருதஜ்ஞஸ்ய - உபகார ஸ்மரண முடையவராய், பஹுஜ்ஞஸ்ய - அல்போபகாரத்தையும் பஹுவாக நினைக்கிற, அஸ்ய - இந்த பெருமாளுக்கு, அஹம் - நான், அவர: ப்ராதா - தம்பி, குணை: - (அவர்) குணங்களுக்கு (தோற்று), லக்ஷ்மணோ நாம நாமத: - லக்ஷ்மண னென்னும் ப்ரஸித்தமான பெயரினால், தாஸ்யம் - அடிமையாயிருக்குந் தன்மையை, உபாகத: - அடைந்தேன்.

(362—1) பெரிய. திரு. 7-1-4. (362—2) ரா. கி. 4-12.

இரண்டாவது ப்ரகரணம்

363. நெறிகாட்டி நீக்குதியோ நின்பால் கருமா
முறிமேனி காட்டுதியோ மேனாளறியோமே
என்செய்வான் எண்ணினாய் கண்ணனே ஈதுரையாய்
என்செய்தால் என்படோம் யாம்.

நெறி - (வேறு) உபாயத்தை, காட்டி - காண்பித்து, நின்பால் - உன்னிடத்தில் நின்றும், நீக்குதியோ - அகற்றுகிறாயோ, கரு - கரிய, மா - மாவின், முறி - தளிர் போன்ற, மேனி - (உன்) திருமேனியை, காட்டுதியோ - காண்பிக்கிறாயோ, கண்ணனே - க்ருஷ்ணனே, மேல் நாள் - அநாதி காலமாய், அறியோமே - (உன்னை) அறியாமல் போந்த எங்களை, என் செய்வான் - எது செய்கைக்காக, எண்ணினாய் - ஸங்கல்பித்தாய்? ஈது - இந்த, (மாஶுசஃ என்ற) சொல்லை, உரையாய் - அருளிச் செய்யவேணும், என் செய்தால் - எத்தனை நன்மையைப் பண்ணினாலும், யாம் - (நீ இனி கைவிட்டால்) நாங்கள், என் படோம் - எந்த அநர்த்தத்தை யடைய மாட்டோம்?

364. காலேஷ்வபிச ஸர்வேஷு திக்ஷு ஸர்வாஸுசாச்யுத ।
ஶரீரேச கதௌசாபி வர்த்ததே மே மஹத் பயம் ॥

ஹே அச்யுத - ஓ ஆஶ்ரிதர்களை நழுவ விடாதவனே, மே - எனக்கு, ஸர்வேஷு காலேஷு அபிச - ஸமஸ்த காலங்களைப் பார்த்தாலும், திக்ஷு ஸர்வாஸுச - எல்லா புண்ய தேசங்களைப் பார்த்தாலும், ஶரீரேச - என்னுடைய தேஹத்தைப் பார்த்தாலும், கதௌசாபி - உபாயாந்தரங்களைப் பார்த்தாலும், மஹத்பயம் - அதிகமான பயமானது, வர்த்ததே - விளைவிக்கிறது.

365. மாஶுசஃ ... ... 157-வது இலக்கம் காண்க.

366. காலேஷ்வபிச ... ... 364-வது இலக்கம் காண்க.

367. ஸக்ருதேவ ஹி ஶாஸ்த்ரார்த்தஃ க்ருதோயம் தாரயேந்நரம் ।
உபாயாபாய ஸம்யோகே நிஷ்டயா ஹீயதேநயா ॥
அபாய ஸம்ப்லவே ஸத்யஃ ப்ராயஶ்சித்தம் ஸமாசரேத் ।
ப்ராயஶ்சித்திரியம் ஸாத்ர யத் புநஃ ஶரணம் வ்ரஜேத் ॥
உபாயா நாமுபேயத்வ ஸ்வீகாரேப்யேததேவ ஹி ॥

ஶாஸ்த்ரார்த்தஃ - சாஸ்திரார்த்தமான, அயம் - இந்த ப்ரபத்தியை, ஸக்ருதேவ - ஒரே தடவை, க்ருதஃ - அநுஷ்டிக்க, நரம் - சேதனனை, தாரயேத்ஹி - காப்பாற்றுமல்லவா, உபாய - சாதனாந்தரங்களாகிற, அபாய - அபாயங்கள்.

---

(363) பெரிய. திருவ. 6. (364) ஜிதம். ஸ்தோ. 9.
(367) லக்ஷ்மீதந்த்ரம்.

ஸம்யோகே - சேர்ந்தால், அநய நிஷ்டயா - ப்ரபத்யநுஷ்டானத்திலிருந்து, ஹீயதே - நழுவின வனாகிறான், அபாய ஸம்ப்லவே - ப்ராமாதிகமாக நிஷித் தாநுஷ்டான முண்டானால், ஸத்ய: - உடனே, ப்ராயஶ்சித்தம் ஸமாசரேத் - ப்ராயச்சித்தம் பண்ண வேண்டும், புந: - மறுபடியும், இயம் - இந்த, ஶரணம்- சரணாகதி, வ்ரஜேத் - பண்ண வேண்டும், (இதி) யத் - (என்பது) யாதொன் றுண்டோ, ஸா - அதுவானது, அத்ர- இவ்விஷயத்தில், ப்ராயஶ்சித்தி: - ப்ரா யஶ்சித்தமாகும், உபாயாநாம் - உபாயாந்தரங்களில், உபாயத்வ ஸ்வீகாரே அபி- உபாயத்வ புத்தி பிறந்தாலும், ஏதத் ஏவ ஹி - இதுவேப் ராயச்சித்த மல்லவா, (ப்ரபத்தி புந: ஸ்மரணமேயன்றி புந: கரணமன்று).

368. நிர்வாணமய ஏவாயமாத்மா ஜ்ஞாநமயோமல: ।
துக்கா ஜ்ஞாநமயா தர்மா: ப்ரக்ருதேஸ்தே து நாத்மந: ॥

அயம் - இந்த, ஆத்மா - ஜீவாத்மாவானவன், அமல: - மல மற்றவனு யும், ஜ்ஞாநமய: - ஜ்ஞாந ஸ்வரூபியாயும், நிர்வாணமய ஏவ - ஸுகமயனாகவு மிருக்கிறான், துக்க: - துக்கம், அஜ்ஞாநமயா - அஜ்ஞாநம், (முதலியவை கள்), ப்ரக்ருதே - ப்ரக்ருதியினுடைய, தர்மா: - தர்மங்கள், நஆத்மந: - ஆத்மா வின் தர்மங்களல்ல.

369. புருஷஸ்ஸபர: பார்த்த பக்த்யா லப்யஸ்த்வநந்யா ।
யஸ்யாந்தஸ்தாநி பூதாநியேந ஸர்வமிதம் ததம் ॥

இதம் ஸர்வம் - இதெல்லாம், யஸ்ய - யாதொருத்தனுடைய, அந்தஸ் தாநி - உள்ளுக்குள் இருக்கின்றனவோ, யேந - எவனால், ததம் - வ்யாபிக்கப் பட்டதோ, ஸ: - அந்த, பர: புருஷ: - பரமபுருஷன், அநந்யயா - மற்றொன் றை நாடாத, பக்த்யா - பக்தியினால், லப்ய: - அடையத் தகுந்தவன்.

370. பக்த்யா த்வநந்யயா அஹமேவம் விதோர்ஜுந ।
ஜ்ஞாதும் த்ரஷ்டுஞ்ச தத்வேந ப்ரவேஷ்டுஞ்ச பரந்தப ॥

பரந்தப - பகைவரைத் தபிக்கும், ஹே அர்ஜுந - ஓ அர்சுனா, ஏவம் விதம் - இந்த விதமான, அஹம் - நான், அநந்யயா - மற்றொன்றையும் நாடா த, பக்த்யா - பக்தியினால், ஜ்ஞாதும் - அறியவும், தத்வேந - உள்ளபடியே, த்ரஷ்டுஞ்ச - காணவும், ப்ரவேஷ்டுஞ்ச - புகுதவும், ஶக்ய: - கூடியவன்.

371. யானே யென்னை அறியகிலாதே
யானே யென்றனதே யென்றிருந்தேன்
யானே நீ யென்னுடைமையும் நீயே
வானே யேத்து மெம் வானவரேறே.

யானே - நான் தானே, என்னை - என்னை, அறியகிலாதே - அறிய மாட் டாமையாலே, யானே - நானே, என்றனதே யென்றிருந்தேன் - என்னுடை

(368) வி. பு. 6-7-22. (369) ஸ்ரீகீதை. 8-22.
(370) ஸ்ரீகீதை. 11-54. (371) திருவா. 2-9-9.

மை யென்று நினைத்திருந்தேன், வானே - பரமபத முழுதும், எத்தும் - உன் சம்பந்தத்தைத் துதிக்கும்படி, எம் வானவரேறே - எம்முடைய நித்ய ஸூரிகளுக்கு நாயகனே, யான் - நான், நீயே - நீயே யென்னலாம் படி வேற்றுமையின்றி யிருப்பேன், என்னுடைமையும் - என்னுடைமைகளும், நீயே - உன்னுடையவை என்னலாம் படியிருக்கும்.

372. விசித்ராதேஹ ஸம்பத்திரீஸ்வராய நிவேதிதும் ।
பூர்வமேவ க்ருதா ப்ரஹ்மந் ஹஸ்த பாதாதி ஸம்யுதா ॥

ஹே ப்ரஹ்மந் - ஓ ப்ராஹ்மணரே, விசித்ரா - விசித்ரமாயும், ஹஸ்தபாதாதி ஸம்யுதா - கை கால்களோடு கூடினதுமான, தேஹ சம்பத்தி: - சரீர ஸந்நிவேசமானது, ஈஸ்வராய - ஸர்வேஸ்வரனான ஸ்ரீய:பதியினிடத்தில், நிவேதிதும் - (ஆத்மாக்களையும் பூஜாத்ரவ்யங்களையும்) சமர்ப்பிப்பதற்கு, பூர்வமேவ - முன்பே, க்ருதா - ஸ்ருஷ்டிக்கப்பட்டது.

373. முந்நீர்ஞாலம் படைத்த வெம்முகில் வண்ணனே
அந்நாள் நீதந்த வாக்கையின் வழி யுழல்வேன்
வெந்நா ளோய்வீய வினைகளை வேரறப்பாய்ந்
தெந்நாள் யானுன்னை யினி வந்து கூடுவனே.

முந்நீர் - மூன்று வகைப்பட்ட நீரையுடைய, ஞாலம் - உலகத்தை, படைத்த - சிருஷ்டித்த, எம்முகில் வண்ணனே - எமது மேக வண்ணனே, அந்நாள் - அந்த சிருஷ்டி காலத்திலே, நீதந்த - நீ உன்னை யடைகைக்குறுப்பாகத் தந்த, ஆக்கையின் - சரீரத்தினுடைய, வழி - பிணிப்பாகிய நெறியிற் சென்று, உழல்வேன் - கர்ப்பம் நரகம் முதலியவற்றில் சென்று உழல்கின்ற நான், வெம் நாள் - ஜ்ஞானம் பிறந்த பின்பு பரிதபித்தற்குக் காரணமான நாளிலே, நோய் - அஹங்காரம் காமம் முதலிய வ்யாதிகள், வீய - நசிக்கும்படி, வினைகளை - அவற்றிற்குக் காரணமான கருமங்களை, வேர் அற - வேர் அற்றுப் போம்படி, பாய்ந்து - கொத்தி எடுத்து, யான் - நான், உன்னை - உபகாரகனான உன்னை, இனி - இப்படி உபகாரத்தை மறந்தவனான பின்பு, வந்து - இந்நிலையை விட்டு வந்து, எந்நாள் கூடுவன் - எந்நாளில் சேர்வேன்.

374. ஸததம் கீர்த்யந்தோ மாம் யதந்தஸ்ச த்ருடவ்ரதா: ।
நமஸ்யந்தஸ்ச மாம் பக்த்யா நித்யயுக்தா உபாஸதே ॥

மாம் - என்னை, ஸததம் - எப்பொழுதும், கீர்த்தயந்த: - சொல்லுகிறவர்களும், யதந்தஸ்ச - யத்நம் செய்யுமவர்களும், த்ருட வ்ரதா: - திடமான விரதம் கொண்டவர்களும், மாம் - என்னை, நமஸ்யந்த: ச - நமஸ்கரிப்பவர்களும், பக்த்யா - பக்தியுடன், நித்ய யுக்தா: - நித்யம் கூடினவர்களும், மாம் - என்னை, உபாஸதே - உபாஸிக்கின்றார்கள்.

(372) விஷ்ணுதத்வம். (373) திருவா. 3-2-1.
(374) ஸ்ரீகீதை. 9-14.

375. ஓமித்யாத்மாநம் ய்யாயத !

ஆத்மாநம் - பரமாத்மாவை, ஓம் இதி - ப்ரணவார்த்தங்கொண்டு, த்யாயத - த்யாநம் பண்ணுங்கள்.

376. ஆத்மாநமேவ லோகமுபஸீத ।

ஆத்மாநம் ஏவ - பரமாத்மாவையே, லோகம் - உலகத்திலுள்ளார், (லோக சரீரனாக), உபாஸீத - உபாஸிக்கவேண்டியது.

377. ஆத்மாவா அரே த்ரஷ்டவ்யஃ ஸ்ரோதவ்யோ மந்தவ்யோ
நிதித்யாஸிதவ்யஃ ॥

அரே - ஓ சிஷ்யனே, ஆத்மாவா - அந்த பரமாத்மாவான ஈஸ்வரனையே, த்ரஷ்டவ்யஃ - பார்க்கத்தகுந்தவன், ஸ்ரோதவ்யஃ - கேட்கத்தகுந்தவன், மந்தவ்யஃ - மநநம்பண்ணத்தகுந்தவன், நிதித்யாஸிதவ்யஃ - மிகவும் த்யானிக்கத் தகுந்தவன்.

378. அச்சுத னமலனென்கோ அடியவர் வினை கெடுக்கும்
நச்சுமா மருந்தமென்கோ நலங்கட லமுதமென்கோ
அச்சுவைக் கட்டியென்கோ அறுசுவை யடிசிலென்கோ
நெய்ச்சுவைத் தேறலென்கோ கனியென்கோ பாலென்கேனோ.

அச்சுதன் - ஆசிரிதரை நழுவவிடாத இனிமையையுடையவனாகிய, அமலன் என்கோ - நிர்மலன் என்பேனோ, அடியவர் - தொண்டரது, வினை - துன்பத்தை, கெடுக்கும் - போக்குவதான, நச்சும் - இனிமையாலே விரும்பப் படுவதான, மாமருந்தம் என்கோ - பசுமருந்து என்பேனோ, நல் - விலக்ஷணமான, அம் - அழகிய, கடல் - கடலில், அமுதம் என்கோ - அவன் கடைந்தெடுத்த அமுதம் என்பேனோ, அ - அந்த அமிருதத்தினுடைய, சுவை - ரஸத்தையுடைத்தான, கட்டி என்கோ - கருப்புக்கட்டி என்பேனோ, அறுசுவை - அறுவகைச் சுவைகளோடு கூடிய, அடிசில் என்கோ - அன்னமென்பேனோ, நெய் - நெய்யின் சுவையையுடைய, தேரல் என்கோ - தேன் என்பேனோ, கனி என்கோ - பழம் என்பேனோ, பால் என்கோ - பாலென்பேனோ.

379. த்ரைகுண்யவிஷயா வேதா நிஸ்த்ரைகுண்யோ ஹவார்ஜுந।
நிர்த்வந்த்வோ நித்ய ஸத்வஸ்தோ நிர்யோகக்ஷேம ஆத்மவாந்॥

வேதாஃ - வேதங்கள், த்ரைகுண்ய விஷயாஃ - முக்குணங்களுக்கு (வசப்பட்டவரின்) விஷயமானவைகள், ஹே அர்ஜுந - ஓ அர்ஜுநா, த்வம்து - நீயோ, நிஸ்த்ரைகுண்யஃ - முக்குணங்களும் அற்றவனாய், பவ - ஆகு, நிர்த்வந்த்வஃ - (சீதம் உஷ்ணம் முதலிய) ஸுகமில்லாதவனாய், பவ - ஆகு, நித்ய

(375) முண்ட. உப. 2-2 6. (376) ப்ருஹ. உப. 1-4 15.
(377) ப்ரு. 4 4 5. (378) திருவா. 3 4-5.
(379) ஸ்ரீகீதை. 2-45.

ஸத்வஸ்த²: - நித்யமும் ஸத்வ குணத்திலிருந்து, நிர்யோக க்ஷேம: - யோக க்ஷேமங்களற்று, ஆத்மவாந் - ஆத்மஸ்வரூபத்தை தேடிக்கொண்டிரு.

380. அக்³நீஷோமீயம் பஶுமாலபே⁴த ॥

அக்நிஷோமீயம் - (ஜ்யோதிஷ்டஹோமத்திற்கு), அக்நிஷோம தேவதையைக் குறித்தான, பசும் - பசுவை, ஆலபேத - ஹிம்சிக்கவேண்டும்.

381. ஆலம்ப⁴: ஸ்பர்ஶ ஹிம்ஸயோ: ॥

(ஆலம்பம் - ஹிம்ஸை என்கைக்கு ப்ரமாணம் "ஆலம்பஸ் ஸ்பர்ஶ ஹிம்ஸயோ:" என்பதாகும்). ஆலம்ப: - ஆலம்பமென்பது, ஸ்பர்ஸ ஹிம்ஸயோ: - ஸ்பர்சித்து ஹிம்ஸிப்பதாகும்.

382. அத²பாதக பீ⁴தஸ்த்வம் ஸர்வ பா⁴வேந பா⁴ரத ।
விமுக்தாந்ய ஸமாரம்போ⁴ நாராயண பரோ ப⁴வ ॥

த்வம் - நீ, பாதக பீத: அத - ஸ்வரூப விருத்தங்களான உபாயாந்தரங்களில் பயமுடையவனாகில், பாரத - ஓ யுதிஷ்டிர, விமுக்தாந்ய ஸமாரம்ப: - பகவத் வ்யதிரிக்தங்களெல்லாவற்றின் ஆரம்பத்தை விட்டவனாய், ஸர்வ பாவேந - ஸகல எண்ணங்களாலும், நாராயணபர: பவ - நாராயண பரனாக ஆகக்கடவாய்.

383. ஶ்யேநேந அபி⁴சரந் யஜேத ।

அபிசரன் - அபிசார ப்ரயோகம் பண்ணுமவன், ஸ்யேநேந - டேனையைக் கொண்டு, யஜேத - யஜ்ஞம் பண்ணக் கடவன்.

384. ஆஜ்ஞாதே ஸநிமித்த நித்ய விதய: ஸ்வர்கா³தி³ காம்யத் விதி⁴:
ஸோநுஜ்ஞா ஶடி²சித்த ஶாஸ்த்ர வஶதோபாயோபி⁴சார
ஶ்ருதி: । ஸர்வீயஸ்ய ஸமஸ்த ஶாஸிதுரஹோ ஶ்ரீரங்க ஸர்வ
ஸ்வதே ரக்ஷாகூதநிவேதி³நீ ஶ்ருதிரஸௌ த்வந் நித்ய ஶாஸ்
திஸ்தத: ।

ஹே ஸ்ரீரங்க ஸர்வஸ்வ - கோயிலை ஸர்வஸ்வத்தாக உடையவனே, ஸநிமித்த - நைமித்திக விதிகளோடு கூடிய, நித்ய விதய: - நித்ய விதிகள், தே - தேவரீருடைய, ஆஜ்ஞா - கட்டளையாகும். ஸ: - அந்த, ஸ்வர்க்காதி - ஸ்வர்க்கம் முதலியவற்றை, காம்யத்விதி: - (ஆசைப்பட்டவர்களுக்காக ஏற்பட்ட ஜ்யோதிஷ்டோமாதி) காம்ய விதியானது, அநுஜ்ஞா - அநுஜ்ஞையாகிறது (அநுஜ்ஞையாவது - செய்யாவிடில் தோஷமின்றிக்கே, செய்தால் அநந்த பலங்களைப் பெறக்கூடிய கர்மங்கள்), அபிசார ஸ்ருதி: - சத்ருவதம்முதலிய சாதனங்களை விதிக்கும் ஸ்ருதியானது, ஶடசித்த - சாஸ்திரத்தில் நம்

(380) (381) நாநாரத்நமாலை. த்ர்யக்ஷர காண்டன். 296.
(382) (383) பார. ஸ்ரீவிஷ்ணுதர்மம்.
(384) ஸ்ரீரங்க. ஸ்த. 20.

பிக்கை யில்லாதவர்களுக்கு, சாஸ்த்ரவஶ்யத꞉ - நம்பிக்கையை உண்டு பண்ணி வசமாக்கும், உபாய꞉ - வழி, தத꞉ - ஆகையால், ரக்ஷாகூதநி வேதிநீ - ரக்ஷண ரூபமான தாத்பர்யத்தைத் தெரிவிக்கிற, அளௌ கீழ்ச்சொன்ன, ஸ்ருதி꞉ - ஸ்ருதியானது, த்வந் நித்ய சாஸ்தி꞉ - தேவரீருடைய நித்ய சாஸநமாகிறது; அஹோ - ஆச்சரியம்.

385. யஜ்ஞேந தாநேந தபஸாநாஶகேந ப்ராஹ்மணா விவிதிஷந்தி।

யஜ்ஞேந - யஜ்ஞத்தினாலும், தாநேந - தானத்தினாலும், தபஸா - தவத்தினாலும், அநாஶகேந - உபவாஸத்தினாலும், ப்ராஹ்மணா꞉ - ப்ரஹ்மவிஷய ஜ்ஞாநமுள்ளவர்கள், விவிதிஷந்தி-உபாசனம் செய்கிறார்கள் (தெரிந்துகொள்ளவேண்டுமென்று இச்சிக்கிறார்கள்.)

386. அவித்யயா ம்ருத்யும் தீர்த்வா வித்யயாம்ருத மஶ்நுதே ॥

அவித்யயா - கர்மாதிகளாலே, ம்ருத்யும் - உபாஸந விரோதிகளான பாபங்களை, தீர்த்வா - போக்கி, வித்யயா - உபாஸநத்தாலே, அம்ருதம் - மோக்ஷத்தை, அஶ்நுதே - அடைகிறான்.

387. } ஸர்வாபேக்ஷாச யஜ்ஞாதி ஶ்ருதேரஶ்வவத் ।
388. }

யஜ்ஞாதி ஸ்ருதே꞉ - யாகாதி கர்மங்களை அங்கங்களோடு செய்யவேணுமென்று வேதங்களில் சொல்லியிருப்பதால், அஶ்வவத் - குதிரையைப்போல, (ஜேணம் முதலிய உடுப்புகளில்லாத குதிரை கமநஸாதநமாகாதாப்போல), ஸர்வாபேக்ஷாச - பக்தியோகமானது ஸகல கர்மங்களையும் அங்கமாக அபேக்ஷிக்கிறது.

389. கஷாய பக்தி꞉ கர்மாணி ஜ்ஞாநந்து பரமாகதி꞉ ।

கர்மாணி - யாகாதி கர்மங்கள், கஷாய பக்தி꞉ - ரஜஸ்தமஸ்ஸுக்களைப் போக்கடிக்கும் ஸாதநங்கள், ஜ்ஞாநந்து - ஜ்ஞாநமே, பரமாகதி꞉ - (மோக்ஷமடைவதற்கு) உயர்ந்த உபாயம்.

390. கஷாயே கர்மபி꞉ பக்வே ததோ ஜ்ஞாநம் ப்ரவர்த்ததே ।

கர்மபி꞉ - கர்மாநுஷ்டானங்களாலே, கஷாயே - பாபங்கள், பக்வே - பக்வமடைகிறது, தத꞉ - அதனால், ஜ்ஞாநம் - ஜ்ஞாநம், ப்ரவர்த்ததே - உண்டாகிறது.

391. மற்றொன்றில்லை சுருங்கச் சொன்னோம் மாநிலத்தெவ்வுயிர்க்கும்
சிற்றவேண்டா சிந்திப்பே யமையுங் கண்டீர்களந்தோ
குற்றமன்றெங்கள் பெற்றத்தாயன் வடமதுரைப் பிறந்தான்
குற்றமில்சீர் கற்று வைகல் வாழ்தல் கண்டீர் குணமே.

---

(385) ப்ரு. உப. 4 4.
(386) மைத்ரீ. உப. 7-9.
(387—388) ப்ரு. உப. 4-4.
(389)
(390)
(391) திருவா. 9-1-7.

மற்று - வேறு; ஒன்று - ஒன்று, இல்லை - இல்லை, சுருங்க - சங்கிரஹமாக, சொன்னோம் - உங்களுக்குச் சொன்னோம், மா - பெரிய, நிலத்து - பூமியிலே, எவ்வுயிர்க்கும் - எல்லா ஆத்மாக்களுக்கும், சிற்றவேண்டா - ஆயாசப்படவேண்டா, சிந்திப்பே - அநுசந்திப்பதுவே, அமையும் கண்டீர்கள் - போரும் கண்டீர்கள், அந்தோ - ஐயோ, (இந்த சுகரமார்க்கம் பலவ்யாப்த மல்லவாகிலும்), குற்றம் - அநர்த்தத்தை யுண்டாக்குவது, அன்று - அல்லவே, எங்கள் - ஆஶ்ரிதரான எங்கள், பெற்றம் - பசுக்களுக்கு, தாயன் - ரக்ஷகனாய், வட மதுரை - வட மதுரையிலே, பிறந்தான் - பிறந்தவனுடைய, குற்றம் இல் - குற்ற மில்லாத, சீர் - கல்யாண குணங்களை, கற்று - அப்யசித்து, வைகல் - எப்போதும், வாழ்தல் கண்டீர் குணம் - வாழ்கையே உங்களுக்கு ஸ்வபாவமும் ப்ராப்தமுமாவது.

392. ஸுவத் ப்ரவ்ருத்தி விரோதி ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்தி ப்ரபத்திः ।

பகவத் - பகவானுடைய, ப்ரவ்ருத்தி - ஸர்வரக்ஷகத்வமாகிற ப்ரவ்ருத்திக்கு, விரோதி - விரோதமாக, ஸ்வ - தன்னை, ப்ரவ்ருத்தி - ரக்ஷித்துக்கொள்ளுகையாகிற ப்ரவ்ருத்தியிலிருந்து, நிவ்ருத்தி - மீளுவதுதான், ப்ரபத்திः - ப்ரபத்தியாகும்.

393. பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோமே ஸக்த்யா ப்ரயச்சதி ।
தது ஹம் ஸக்த்யுபஹ்ருத மஶ்நாமி ப்ரயதாத்மநः ॥

பத்ரம் - (ஏதாகிலும் ஒரு) இலையையோ, புஷ்பம் - புஷ்பத்தையோ, பலம் - பழத்தையோ, தோயம் - தண்ணீரையோ, யः - எவன், மே - எனக்கு, பக்த்யா - பக்தியோடு, ப்ரயச்சதி - கொடுக்கிறானோ, ப்ரயத ஆத்மநः - பரிசுத்த மநதையுடையவனான, தஸ்ய - அவனுடைய, பக்த்யுபஹ்ருதம் - பக்தியோடு கொடுக்கப்பட்ட, தத் - அதை, அஹம் - நான், அஶ்நாமி - அருந்துகிறேன்.

394. அந்யத் பூர்ணாதபாம் கும்ஸா தந்யத் பாதாவநே ஜநாத் ।
அந்யத் குசலஸம் ப்ரஶ்நாத் நசேச்சதி ஜநார்தநः ॥

ஜநார்த்தநः - (ரக்ஷண விரோதிகளை நிரபேக்ஷமாக நிரசிக்கும்) ஸர்வேஶ்வரன், பூர்ணாத் - பூரணமான, அபாம் - ஜலத்தையுடைய, கும்பாத் - கும்பத்தைக் காட்டிலும், அந்யத் - மற்றொரு வஸ்துவை, நச இச்சதி - ஆசைப்படமாட்டான், பாதாவநே ஜநாத் - திருவடி விளக்குவதைக் காட்டிலும், அந்யத் - வேறொன்றை, நச இச்சதி - ஆசைப்படமாட்டான், குசல ஸம்ப்ரஶ்நாத் - குசல ப்ரஶ்நத்தைக் காட்டிலும், அந்யத் - வேறொன்றை, நச இச்சதி-ஆசைப்படமாட்டான்.

---

(392) (393) ஸ்ரீகீதை. 9-26.
(394) ஸ்ரீகீதை. 9-26.

395. பரிவதிலீசனைப் பாடி, விரிவது மேவலுறுவீர்
பிரிவகையின்றி நன்னீர் தூய்ப், புரிவதுவும் புகைபூவே.

பரிவதில் - துக்கத்தைப் போக்குகிற, ஈசனை - சர்வேஶ்வரனை, பாடி - தோத்திரம் செய்து, விரிவது - ஆநந்தக் கண்ணீர் முதலான குறிகளால் விரிவை, மேவல் - பெறுகைக்கு, உறுவீர் - உறுதியுள்ளவர்களே, பிரிவகை - பிரயோஜனத்தைக் கொண்டு விலகிப்போதல், இன்றி - இல்லாமல், நல்நீர் - பரிசுத்தமான தீர்த்தத்தை, தூய் - சமர்ப்பித்து, புரிவதுவும் - அதின் பிறகு சமர்ப்பிப்பதுவும், புகை பூவே - தூபமும் மலருமே.

396. ஏதத் ஸாமஹாயந்நாஸ்தே ।

ஏதத் - இந்த, ஸாம - ஸாமத்தை, காயன் - பாடிக் கொண்டு, ஆஸ்தே - இருக்கிறார்கள் (நித்ய முக்தர்கள்).

397. த்வதங்க்ரி முத்திஶ்ய கதாபி கேநசித் யதாதயாவாபி ஸக்ருத் க்ருதோஞ்ஜலிঃ । ததைவமுஷ்ணாத் யஶுபாந் யஶேஷதঃ ஶுபாநி புஷ்ணாதி நஜாது ஹீயதே ॥

த்வத் - தேவரீருடைய, அங்ரிம் - திருவடிகளை, உத்திஶ்ய-உத்தேசித்து, கதாபி - எப்போதாகிலும், கேநசித் - எவனாலேயாவது, யதா ததா வாபி - எவ்விதமாயாவது, ஸக்ருத் க்ருதঃ - ஒருதரம் செய்யப்பட்டதான, அஞ்ஜலிঃ - அஞ்ஜலிமுத்ரை, ததைவ - அப்போதே, அஶுபாநி - சகல பாபங்களையும், அஶேஷதঃ - பூர்ணமாக, முஷ்ணாதி - போக்குகிறது, ஶுபாநி - (பரபக்தி பரஜ்ஞான பரமபக்தி தேஶவிசேஷப்ராப்தி யாகிற) இஷ்டங்களை, புஷ்ணாதி - போஷிக்கின்றது, ஜாது - இதனையும் கொடுத்தாலும், நஹீயதே - தான் குறைகிறதில்லை.

398. பத்தாஞ்ஜலி புடா ஹ்ருஷ்டா நம இத்யேவ வாதிநঃ ।

பத்தாஞ்சலி புடாঃ - கூப்பின கைகளையுடையவராய், ஹ்ருஷ்டாঃ - ஸந்தோஷமடைந்தவர்களாய், நமঃ இத்யேவ வாதிநঃ - நமঃ என்று சொல்லுகிறவர்களாய், (பகவானை சரணமடைந்தார்கள்.)

399. கைகளாலாரத் தொழுது தொழுதுன்னை
வைகலு மாத்திரைப்போது மோர்வீடின்றிப்
பைகொள் பாம்பேறி யுறைபரனே யுன்னை
மெய்கொள்ளக் காண விரும்பு மென் கண்களே.

என் கண்கள் - என் கண்களானவை, கைகளால் - கைகளாலே, உன்னை - தேவரீரை, ஆரத்தொழுது தொழுது - பரிபூர்ணமாக வணங்கி வணங்கி, வைகலும் - நாள்தோறும், மாத்திரைப் போதும் - க்ஷண காலமும், வீடுஇன்றி-

(395) திருவா. 1-6-1. (396)
(397) ஸ்தோத்ர ரத்நம். 28. (398) (399) திருவா. 3-8-4.

இடை விடாமல், பைகொள் - படத்தைக் கொண்ட, பாம்பு ஏறி - திருவநந்தாழ்வான் மேலே ஏறி, உறை - நித்யவாசம் பண்ணுகிற, உன்னை - தேவரீரையே, மெய் கொள்ளக்காண - உண்மையாகக் காணவேணுமென்று, விரும்பும் - ஆசைப்படா நின்றன.

400. சிதஃ பரமசில்லாபே ப்ரபத்திரபி நோபபஃ।
விபர்யயே து நைவாஸ்ய ப்ரதிஷேதாய பாதகம்॥

சிதஃ - சேதநனுக்கு, பரமசில்லாபே - பரமாத்மாவை பெறுகிற விஷயத்தில், ப்ரபத்திரபி - ப்ரபத்தியும், ந உபதிஃ - ஸாதன மன்று, விபர்யயே து - ஈஸ்வரன் சேதநனைப் பெற நினைக்கும்போது, அஸ்ய பாதகம் - இந்த சேதநனால் செய்யப்பட்ட பாதகங்களும், ப்ரதிஷேதாய நைவ - ப்ரதிபந்தகமாகாது.

401. ஏபிஸ்ச ஸசிவைஸ் ஸார்த்தம் ஸிரஸா யாசிதோ மயா।
ப்ராதுஃ ஸிஷ்யஸ்ய தாஸஸ்ய ப்ரஸாதம்கர்த்து மர்ஹஸி॥

(தேவரீருக்கு) ப்ராதுஃ - தம்பியும், ஸிஷ்யஸ்ய - ஸிஷ்யனும், தாஸஸ்ய - தாஸனுமான என் விஷயத்தில், ப்ரஸாதம் - அநுக்ரஹத்தை, கர்தும் அர்ஹஸி - செய்யவேண்டும், (என்று) ஏபிஃ - இந்த, ஸசிவைஃ ச ஸார்த்தம் - மந்திரிகளோடுகூட, ஸிரஸா - தலையினால் வணங்கி, மயா - என்னால், யாசிதஃ - யாசிக்கப்படுகின்றது.

402. ஏழை யேதலன் ... ... 239-வது இலக்கம் காண்க.

403. யத் த்வத் ப்ரியம் ததிஹ புண்யமபுண்ய மந்யத்
நாந்யத்தயோர் பவதி லக்ஷணமத்ர ஜாது।
யச்சேஷ்டாயிதம் தவஹி யத்கிலராஸ கோஷ்ட்யாம்
தத் கீர்த்தநம் பரமபாவந மாமநந்தி॥

இஹ - இவ்வுலகில், யத் - எது, த்வத் - தேவரீருக்கு, ப்ரியம் - ப்ரீதிகரமோ, தத் - அதுவானது, புண்யம் - புண்யம், அந்யத் - தேவரீருக்கு ப்ரியமல்லாதது, அபுண்யம் - பாபம், அத்ர - இவ்வுலகில், அந்யத்-மற்றது, தயோஃ - புண்ய பாபங்களுக்கு, லக்ஷணம் - லக்ஷணமாக, ஜாது ந பவதி - ஒருக்காலுமாகிறதில்லை, ராஸகோஷ்ட்யாம் - ராஸக்ரீடையில், தவ - தேவரீருடைய, யத் - எந்த, தூர்த்தாயிதம் - தூர்த்த காரியங்களுண்டோ, தத் - அந்த, கீர்த்தநம் - தூர்த்தசெயலைச்சொல்லுவது, பரமபாவநம் - மஹாபரிசுத்தமாக, ஆமநந்தி - (பெரியோர்கள்) சொல்லுகிறார்கள்.

404. அஹமஸ்ம்யபராதாநா மாலயஃ அகிஞ்சநோ கதிஃ।

(400)
(401) ஸ்ரீரா. அ. 104 12.
(403) அதிமாநுஷஸ்தவம்.
(404) பாஞ்சராத்ரம்.

அஹம் - நான், அபராதா நாம் - அபராதங்களுக்கு, ஆலயः-இருப்பிடமாயும், அகிஞ்சநः - உபாய சூந்யனாயும், அகதிः - கதியற்றவனாயும், அஸ்மி - இருக்கிறேன்.

405. அநந்ய ஶரணஸ் த்வத் பாதாரவிந்த யுகளம் ஶரணமஹம் ப்ரபத்யே ।

அநந்ய ஶரணः - உபாயாந்தர சூந்யனான, அஹம் - நான், த்வத் - தேவரீருடைய, அரவிந்த - தாமரை மலர்போன்ற, பாதயுகளம் - இரண்டு திருவடிகளையும், ஶரணம் - உபாயமாக, ப்ரபத்யே - பற்றுகிறேன்.

406. த்வமேவ மாதாச பிதா த்வமேவ
த்வமேவ பந்துஶ்ச குருஸ் த்வமேவ ।
த்வமேவ வித்யா த்ரவிணம் த்வமேவ
த்வமேவ ஸர்வம் மமதேவ தேவ ॥

மம - எனக்கும், தேவ - தேவதைகளுக்கும், தேவ - தேவனானவனே, த்வமேவ மாதா - தாயும் நீயே, த்வமேவ பிதா - தந்தையும் நீயே, த்வமேவ பந்துஶ்ச - பந்துவும் நீயே, த்வமேவ குருः - ஆசார்யனும் நீயே, த்வமேவ வித்யா-ஜ்ஞாநமும் நீயே, த்வமேவ த்ரவிணம் - திரவியமும் நீயே, த்வமேவ ஸர்வம் - எல்லாம் நீயே.

407. தஸ்மாத் ப்ரணம்ய ப்ரணிதாயகாயம் ப்ரஸாதயே த்வாமஹமீச மீட்யம் । பிதேவ புத்ரஸ்ய ஸகேவ ஸக்யுः ப்ரியः ப்ரியாயார்ஹஸி தேவஸோடும்

ஈஶம் - சேஷியுமாய், ஈட்யம் - ஸ்துத்யனுமான, த்வாம் - உன்னை, ப்ரணம்ய - மானசமான தண்டனும், ப்ரணிதாயகாயம் - காயிகமான தண்டனும், ப்ரஸாதயே - சமர்ப்பிக்கிறேன், (தேவரீர்) [171—406] "பிதாஸி" "த்வமேவ மாதாச" என்கிற ஸ்லோகங்களிலே ஸர்வ விதபந்து), ஆகையால், பிதேவ புத்ரஸ்ய - புத்ரன் பண்ணின குற்றத்தைப் பிதா பொறுக்குமாப்போலவும், ஸகேவ ஸக்யுः - தோழன் செய்த குற்றத்தைத் தோழன் பொருக்குமாப் போலவும், ப்ரியः ப்ரியாயாः - பிரியையினுடைய குற்றத்தை பிரியனானவன் பொருக்குமாப்போலவும், தேவ ஸோடும் - தேவனாயும் பொறுக்கைக்கு பந்துவுமாயிருக்கையாலே, அர்ஹஸி - பொறுக்கத்தகுந்தவராக இருக்கிறீர்.

408. ஸகே ராவவ யர்மஞ்ச ரிபூணமபி வத்ஸலः ।
அப்யநுஜ்ஞாது மிச்சாமி மிஷ்யாமி யயர்மதம் ॥

ஸகே - ஓ சிநேகிதரும், தர்மஜ்ஞः - தர்மங்களை யறிந்தவரும், ரிபூணமபி - சத்ருக்கள் விஷயத்திலும், வத்ஸல - வாத்ஸல்ய குணமுடையவருமான,

(405—406—407) ஶரணாகதி கத்யம். (408)

ராகவ - ரகுகுலத்தில் பிறந்த ராமா, அப்யநுஜ்ஞாதும் - அநுஜ்ஞை பெற்றுக் கொள்ள, இச்சாமி - விரும்புகிறேன். யதாகதம் - வந்தபடியே, கமிஷ்யாமி. போகிறேன்.

409. ஆநயைநம் ஹரிஶ்ரேஷ்ட உத்தமஸ்யாபயம் மயா ।
விபீஷணோவா ஸுக்ரீவ யதிவா ராவண: ஸ்வயம் ॥

ஹரிஶ்ரேஷ்ட - வாநரோத்தமனை, ஸுக்ரீவ - சுக்ரீவனே, ஏவம் - இந்த விபீஷணனை, ஆநய - அழைத்துக்கொண்டுவா, அஸ்ய - இவநுக்கு, மயா - என்னால், அபயம் - பய நிவ்ருத்தியை, தத்தம் - கொடுக்கப்பட்டது, விபீஷணோவா - விபீஷணனாகிலுமாம், ஸ்வயம் - ஸாக்ஷாத்தான, ராவணோ யதி - இராவணனாகிலுமாம்.

410. நாயமாத்மா ப்ரவசநேந லப்யோ ந மேதயா ந பஹுநா ஶ்ருதேந। யமேவைஷ வ்ருணுதே தேந லப்யஸ் தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம் ॥

அயம் - இந்த, ஆத்மா - பரமாத்மாவானவன், ப்ரவசநேந - மனநத்தினாலும், மேதயா - நித்யாநுஸந்தாநத்தாலும் (பக்தியினாலும்), பஹுநா ஶ்ருதேந - அதிகமான ஶ்ரவணத்தினாலும், நலப்ய: - அடையக்கூடியவனன்று, ஏஷ: - இந்த பரமாத்மா, யமேவ-எவனை, வ்ருணுதே - வரிக்கிறானோ, தேந - அந்த புருஷனால், லப்ய: - அடையத்தக்கவன். ஏஷ: - இந்த, ஆத்மா - பரமாத்மா, தஸ்ய - அவனுக்கே, ஸ்வாம் தநூம் - தன் திருமேனியை, விவ்ருணுதே - ப்ரகாசிப்பிக்கிறான்.

411. தமப்ய பாஷ ஸௌமித்ரே ஸுக்ரீவ ஸசிவம் கபிம் ।
வாக்யஜ்ஞம் மதுரைர் வாக்யை: ஸ்நேஹயுக்த மரிந்தம ॥

அரிந்தம - பகைவரை யடக்கவல்ல, ஹே ஸௌமித்ரே - ஓ லக்ஷ்மணா, ஸுக்ரீவ ஸசிவம் - ஸுக்ரீவமந்திரியும், வாக்யஜ்ஞம் - பேசத் தெரிந்தவருமான, தம் - அந்த, கபிம் - சிறிய திருவடியை, மதுரை:-மதுரமான, வாக்யை:- சொற்களுடனே, ஸ்நேஹ யுக்தம் - சிநேகத்துடன் கூடியிருக்கும்படி, அப்யபாஷ - பேசுவாயாக.

412. [1] மாழைமான் .... 239-வது இலக்கம் காண்க.

412. [2] கோவிந்தன் குடக்கூத்தன் கோவலனென்றென்றே குனித்து।
தேவுந்தன்னையும் பாடியாடத்திருத்தி என்னைக் கொண்டென்॥
பாவந்தன்னையும் பாறக் கைத் தெமரேழெழு பிறப்பும்।
மேவுந்தன் மய மாக்கினான் வல்ல னெம்பிரான் விட்டுவே ॥

வல்லன் - சர்வ சக்தியையுடையவன், விட்டு - சர்வ வியாபகன், எம்பிரான் - எம் உபகாரகன், கோவிந்தன் - பசுப் பெருக்கத்தை யுடையான், குடக்

(409) ரா. யு. 18 34. (410) கட. உப. 2 23, முண். உப. 3 2 37.
(411) ரா. கி. 3-27. (412—2) திருவா. 2 7 4.

கூத்தன் - குடக்கூத்தை யுடையவன், கோவலன் - சோபால ஜன்மத்தை யுடையவன், என்று என்று - என்று பலகால் சொல்லி, குனித்து - கூத்தாடி, தேவும் - பரத்துவத்தையும், தன்னையும்-தனது நீர்மையையும், பாடி-புகழ்ந்து பாடி, ஆட - சஞ்சரிக்கும்படி, திருத்தி - திருந்தப்பண்ணி, என்னை - அடியேனை, கொண்டு - தன்னுடையவனாகக் கொண்டு, என் - என்னுடைய, பாவந் தன்னையும் - பாவங்களையும், பாற - ஓடும்படி, கைத்து - துரத்தி, எமர் - எம்மவர், ஏழேழ் பிறப்பும் - ஏழேழ் பிறவியும், மேவும் - தன்னை அடையும்படியான, தன்மையம் - தன்மையை உடையோமாம்படி, ஆக்கினான்-செய்தான்.

413. 1 ஸர்வலோக ஶரண்யாய ராகவாய மஹாத்மநே ।
நிவேதயத மாம் க்ஷிப்ரம் விபீஷண முபஸ்திதம் ॥

(ஓ வானரர்களே) ஸர்வ லோக ஶரண்யாய - எல்லா உலகங்களுக்கும் ரக்ஷகனும், மஹாத்மநே - மஹாத்மாவாகிய, ராகவாய - ராகவன் பொருட்டு, உபஸ்திதம் - அருகில் வந்திருக்கிற, விபீஷணம் மாம் - விபீஷணனென்று பெயரையுடைய என்னை, க்ஷிப்ரம் - விரைவில், நிவேதயத - அறிவியுங்கோள்.

413. 2 என்னை நெகிழ்க்கிலு மென்னுடை நன்னெஞ்சந்
தன்னை அகல்விக்கத் தானும் கில்லானினி
பின்னை நெடும்பணைத் தோள் மகிழ்பீடுடை
முன்னை யமரர் முழுமுதலானே ।

என்னை - அடியேனை, நெகிழ்க்கிலும் - விடுவித்துக் கொண்டாலும், என்னுடை - என்னுடைய, நல்நெஞ்சம் தன்னை - நல்லமனத்தை, தானும் - சர்வசக்தியான தானும், இனி - இனிமேல், அகல்விக்க - விடுவித்தற்கு, கில்லான் - சமர்த்தனன்று, பின்னை - நப்பின்னைப் பிராட்டியினுடைய, நெடு - நீண்ட, பணை - பெருத்த, தோள் - தோள்களில், மகிழ் - மகிழ்ச்சியாகிய, பீடு உடை - மேன்மையை உடையவரான, முன்னை - பழையோரான, அமரர் - நித்யசூரிகளுக்கு, முழு - தாரகாதிகளான எல்லாவற்றிற்கும், முதலானே - தானே முதல்வனானவனன்றோ.

414. கோலமலர்ப் பாவைக் கன்பாகிய வென்னன்பேயோ
நீலவரை யிரண்டு பிறைகவ்வி நிமிர்ந்ததொப்ப [தாய்
கோலவராக மொன்றாய் நிலம்கோட்டிடைக் கொண்டவெந்
நீலக்கடல் கடைந்தாய் உன்னைப்பெற்றினிப் போக்குவனோ.

கோலம் - வடிவழகையும், மலர் - போக்யதையையும் உடையளான, பாவைக்கு - பெரிய பிராட்டிக்கு, அன்பு ஆகிய - உகப்பான அத்தாலே, என் அன்பேயோ - என்பக்கலிலும் மிக்க அன்புடையையாய், நீலவரை - நீலரத்ந கிரியானது, இரண்டு பிறைகவ்வி - இரண்டு பிறைகளைக் கவ்விக்கொண்டு, நிமிர்ந்தது ஒப்ப - நிமிர்ந்தெழுந்தாற்போல, கோலம் - அழகாகிய, வராகம்

(413—1) ரா. யு. 17-13. (413—2) திருவா. 1-7-8.
(414) திருவா. 10-10-7.

ஒன்று ஆய் - ஒரு மஹா வராஹமாகி, நிலம் - பூமியை, (ப்ரளயத்திலே முழுகி யெடுத்து), கோட்டிடை கொண்ட - திருவெயிற்றிலே வைத்து நோக்கின, எந்தாய் - எமக்கு சுவாமியே, இ நீலம் கடல் - உன் வடிவின் நிழலாலே நீலமான திருப்பாற் கடலை, கடைந்தாய் - கடைந்து ஆசிரிதரை ரக்ஷித்தவனே, உன்னை - (இப்படி புருஷகார பூர்வகமாக எனக்கு நல்லையாய் என்னை ரக்ஷிப்பவனை) உன்னை, பெற்று - கிடைக்கப் பெற்று, இனி - இனி, போக்குவனோ - நழுவ விடுவேனோ.

415. } எண்மர் பதினொருவ ரீரறுவ ரோரிருவர்
416. } வண்ண மலரேந்தி வைகலும்—நண்ணி
ஒரு மாலையால் பரவி யோவாது எப்போதும்
திருமாலைக் கைதொழுவர் சென்று.

எண்மர் - அஷ்டவஸுக்களும், பதினொருவர் - ஏகாதச ருத்ரர்களும், ஈராறுவர் - பன்னிரண்டு ஆதித்யர்களும், ஓர் - அத்விதீயமான, இருவர் - அச்விநி தேவதைகளிருவரும், வண்ணம் - நாநா வர்ணத்தையுடைய மலர் - பூவை, ஏந்தி - தரித்துக் கொண்டு, வைகலும் - திநந்தோறும், நண்ணி - கிட்டி, ஒரு - அத்விதீயமான, மாலையால் - புருஷ ஸூக்தாதிசப்த ஸந்தர்ப்பங்களாலே, பரவி - துதித்து, எப்போதும் - ஸர்வ காலமும், ஓவாது - இடைவிடாமல், திரு - லக்ஷ்மியோடு கூடின, மாலை - ஸர்வேஶ்வரனை, சென்று - கிட்டி, கைதொழுவர் - கையால் நமஸ்கரிப்பர்கள்.

417. அடியேன் சிறியஞானத்த னறிதலார்க்கு மறியானை
கடிசேர் தண்ணந்துழாய்க் கண்ணிபுனைந்தான் றன்னைக்கண்
செடியாரக்கை யடியாரைச் சேர்தல்தீர்க்கும் திருமாலை [ணனை
அடியேன் காண்பா னலற்றுவ னிதனில்மிக்கோ ரயர்வுண்டே.

சிறிய ஞானத்தன் - அற்பஞானத்தை யுடையவனாகிய, அடியேன் - நான், அறிதலார்க்கும் - ஞானிகளுக்கும், அரியானை - அறிதற்கரிதானவனை, கடிசேர் - பரிமளம் பொருந்திய, தண் - குளிர்ந்த, அம் - அழகாகிய, துழாய் கண்ணி - திருத்துழாய் மாலையை, புனைந்தான்தன்னை - தரித்தவனை, கண்ணனை - கிருஷ்ணனை, செடி ஆர் - சம்சாரமாகிற பெருங்காடு நிறைந்த, ஆக்கை - சரீர சம்பந்தத்தை, அடியாரை - ஆசிரிதரை, சேர்தல் தீர்க்கும் - சேர்தலை ஒழிக்கிற, திருமாலை - லக்ஷ்மீநாதனை, அடியேன் - சேஷபூதனான நான், காண்பான் - காணும் பொருட்டு, அலற்றுவன் - கூவுகின்றேன், இதனின் மிக்கு - இதனிலும் மேற்பட்டு, ஓர் அயர்வு உண்டே - ஓரறிவு கேடு உண்டோ?

418. ஒண்டொடியாள் ... ... 338-வது இலக்கம் காண்க.

(415—416) முதல் திரு. 52. (417) திருவா. 1·5·7.

419. ஆருயிர்பட்ட தெனதுயிர் பட்டது
பேரிதழ்த் தாமரைக்கண் கனிவாயதோர்
காரெழில்மேகத் தென்காட்கரைக் கோயில்கொள்
சீரெழில் நால்தடந்தோள் தெய்வவாரிக்கே

பேர் இதழ் - பெரிய இதழையுடைத்தான, தாமரை - தாமரைபோலே யிருக்கிற, கண் - கண்ணையும், கனி - கனிபோலே சிவந்த, வாயது-வாயையு முடைத்தா யிருப்பது, ஓர் - ஒரு, கார் எழில் - கறுத்த எழிலை யுடைத்தான, மேகம் - மேகம் போலே, தென் - அழகிய, காட்கரை - திருக்காட்கரையை, கோயில் கொள் - வாசஸ்தானமாகக் கொண்டு, சீர் எழில் - வீர ஸ்ரீயையும் எழிலையு முடைத்தாய், நால் - நாலுவகைப்பட்ட, தடம் - பெரிய, தோள் - திருத்தோள்களையுடையனுய், தெய்வம் - தெய்வங்களுக்கு, வாரிக்கு - உற்பத்தி ஸ்தாநமான கடலாயிருக்கிறவனுக்கு, எனது உயிர் - என் ஆத்மா, பட்டது - போக்யமாய்க் கொண்டு பட்டது, ஆர் உயிர் பட்டது - நித்யாநுபவம் பண்ணுகிற ஸூரிகள் ஸ்வரூபந்தான் பட்டதோ.

420. ஸ்வதந்த்ரோஹம் ।

அஹம் - நான், ஸ்வதந்த்ரஃ - ஸ்வாதந்த்ரன்.

421. ஹாரோபி நார்ப்பிதஃ கண்டே ஸ்பர்ஶ ஸம்ரோத பீருணா ।
ஆவயோரந்தரே ஜாதாஃ பர்வதாஃ ஸரிதோ த்ருமாஃ ॥

ஸ்பர்ஶ - (அந்யோந்ய) ஆலிங்கநத்தில், ஸம்ரோத பீருணா - விரோத பயத்தினல், கண்டே - (ஸீதாபிராட்டி) தன் கழுத்தில், ஹாரஃ அபி-ஒரு முத்து மாலையும், ந அர்ப்பிதஃ - அணிந்துகொள்ளவில்லை, - ஆவயோஃ - அப்படியுள்ள எங்களிருவருக்கும், அந்தரே - மத்தியில், பர்வதாஃ - மலைகளும், ஸரிதஃ - நதிகளும், த்ருமாஃ - மரங்களும், ஜாதாஃ - உண்டாயின.

422. தீபோ நேத்ராதுரஸ்யேவ ப்ரதிகூலாஸி மேத்ருவம் ।
தத்கச்சத்வாயநுஜ்ஞாதா யதேஷ்டம் ஜநகாத்மஜே ॥

ஜநகாத்மஜே - ஓ ஜநக புத்ரியே, நேத்ராதுரஸ்ய - கண்ரோகமுடையவனுக்கு, தீப இவ - விளக்குப்போல, மே - எனக்கு, ப்ரதிகூலா - ப்ரதி கூலமாக, அஸி - இருக்கிறுய், த்ருவம் - நிச்சயம், தத் - ஆகையால், அநுஜ்ஞாதா-உத்தரவு பெற்றவளாய், யதேஷ்டம் - இஷ்டப்படி, கச்ச - போவாயாக.

423. ஸபங்கா மநலங்காராம் விபத்மாமிவ பத்மிநீம் ॥

விபத்மாம் - தாமரைப்பூக்க ளில்லாத, பத்மிநீம் இவ - தாமரைப் பொய்கையைப்போல, ஸபங்காம் - அழுக்குப் படிந்தவளும், அநலங்காராம் - அலங்கார மற்றவளுமான (பிராட்டியைத் திருவடி கண்டார்).

(419) திருவா. 9 6 9. (422) ரா. யு. 118-17.
(423) ரா. ஸு. 15.21.

424. [1] தீர்வமுஷ்ணம் விநிஸ்வஸ்ய மேதிநீ மவலோகயந் ।
உவாச மேவ ஸங்காஸம் விபீஷண முபஸ்திதம் ॥

(ராமஃ - பெருமாள்) உபஸ்திதம் - சமீபத்திலிருந்த, மேக ஸங்காஸம் - மேகநிறத்தையுடைய, விபீஷணம் - விபீஷணனைக் குறித்து, தீர்க்கம் - தீர்க்கமாயும், உஷ்ணம் - உஷ்ணமாயும், விநிஸ்வஸ்ய-மேல் மூச்சு விட்டுக்கொண்டு, மேதிநீம் அவலோகயந் - பூமியைப் பார்த்துக்கொண்டு, உவாச-சொன்னார்.

[2] திவ்யாங்கராகாம் வைதேஹீம் திவ்யாபரண பூஷிதாம் ।
இஹ ஸீதாம் சிரஸ்நாதாமுபஸ்தாபய மாசிரம் ॥

சிரஸ்நாதம் - சிரஸ்நாநம் பண்ணினவளும், திவ்யாங்கராகாம் - திவ்யமான பரிமளமுள்ள சந்தனம் அணிந்தவளும், திவ்யாபரண பூஷிதாம்-திவ்யமான ஆபரணங்களால் அலங்கரிக்கப் பட்டவளுமான, வைதேஹீம் - விதேஹ தேசத்தரசன் புத்திரியான, ஸீதாம் - ஸீதாப்பிராட்டியை, இஹ - இவ்விடத்திற்கு, உபஸ்தாபய - அழைத்துக்கொண்டுவா, மாசிரம் - தாமதம் வேண்டாம்.

425. அஸ்நாதா த்ரஷ்டுமிச்சாமி ஹர்த்தாரம் ராக்ஷஸாதிப ।

ஹே ராக்ஷஸாதிப - ஓ ராக்ஷஸ ராஜனான விபீஷணா, பர்த்தாரம் - என் பர்த்தாவாகிய இராகவரை, அஸ்நாதா - ஸ்நாநம் பண்ணாமலே, த்ரஷ்டும் - பார்க்க, இச்சாமி - ஆசைப்படுகிறேன்.

426. யதாஹ ராமோ ஹர்த்தாதே ததாதத் கர்த்தும் அர்ஹஸி ।

தே - உன்னுடைய, பர்த்தா - பர்த்தாவாகிய பெருமாள், யதா - எந்தப்ரகாரம், ஆஹா - சொன்னாரோ, ததா - அப்படியே, (த்வம் - நீயும்.) தத் - அதை, கர்த்தும் - செய்கைக்கு, அர்ஹஸி - கடமைப்பட்டவளாகிறாய்.

427. பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கு மழுக்குடம்பும்
இந்நின்ற நீர்மை யினியாமுறாமை வுயிரளிப்பான்
எந்நின்ற யோநியுமாய்ப் பிறந்தா யிமையோர்தலைவா
மெய்ந்நின்று கேட்டருளாய் அடியேன்செய்யும் விண்ணப்பமே.

உயிர் - ப்ராணிகளை, அளிப்பான் - ரக்ஷிக்கைக்காக, எந்நின்ற - அநேக விதமான, யோனியுமாய் - பிறவிகளாய், பிறந்தாய் அவதரித்தவனே, இமையோர் - நித்யஸூரிகளுக்கு, தலைவா - ஸ்வாமியானவனே, பொய்ந்நின்ற - அஸத்யமாயிருக்கிற, (தேகாத்மாபிமான ரூபமான), ஞானமும் - ஜ்ஞாநமும், பொல்லா ஒழுக்கும் - விபரீத நடத்தையும், அழுக்கு - மலிநமான, உடம்பும் - சரீரமும், (ஆகிற), இந்நின்ற - இப்படிப்பட்ட ஸ்வபாவத்தை, இனி - இது முதல், யாம் - நாங்கள், உறாமை - அடையாமற்படி, அடியேன் - தாஸ பூதனான நான், செய்யும் - செய்கிற, மெய் - யதார்த்தமான, விண்ணப்பம் -

(424) ரா. யு. 118-6-7. (425) ரா. ஸு. 118-17.
(426) ரா. யு. 117-14. (427) திருவிரு. 1.

விஜ்ஞாபநத்தை, நின்று - ஸ்திரமாயிருந்து, கேட்டருளாய் - கேட்டருள வேணும்.

428. செஞ்சொற்கவிகா ளுயிர்காத் தாட்செய்மின் திருமாலிருஞ்
வஞ்சக்கள்வன் மாமாயன் மாயக்கவியாய்வந்து என் [சோலை
நெஞ்சுமுயிரு முள்கலந்து நின்றாறறியாவண்ணம் என்
நெஞ்சுமுயிரு மவையுண்டு தானேயாகி நிறைந்தானே.

வஞ்சம் கள்வன் - வஞ்சித்து அபஹரிப்பானாய், மாமாயன் - (அதுக்கடிமையாய் எதிர்த்தலையை மயக்கும்படியான) பெரிய ஆச்சரியரூப குணாதிகளையுடையவன், மாயக்கவி ஆய் - கவிபாடுவித்துக் கொள்வதில் க்ருத்ரிம வியாபாரத்தை யுடையனாய், வந்து - நாமிருக்கு மிடத்திலே வந்து, என் நெஞ்சு உள்ளும் - என் நெஞ்சினுள்ளும், உயிர் உள்ளும் - ஆத்மாவினுள்ளும், கலந்து - ஒருபடியாய்க்கலந்து, நின்றார் - அருகில் நின்றவராகிய திருமகள் முதலானாரும், அறியாவண்ணம் - அறியாதபடி, அவை - அந்த, என் நெஞ்சும் - என் நெஞ்சையும், உயிரும் - உயிரையும், (பிரித்துக் காணவொண்ணாதபடி), உண்டு - புசித்து, தானே ஆகி - தானே போக்தாவாய்ப் பெரும்பேறு பெற்று, நிறைந்தான் - நிறைந்தவனானான், செம் சொல் - செஞ்சொற்களால், கவிகாள் - கவிபாட வல்லவர்களே, உயிர்காத்து - உங்களுயிரைக் காத்துக் கொண்டு, ஆள்செய்மின் - அடிமை செய்யுங்கள்.

429. மங்கவொட்டுன் மாமாயை திருமாலிருஞ்சோலை மேய
நங்கள்கோனே யானேநீயாகி யென்னை யளித்தானே
பொங்கைம்புலனும் பொறியைந்தும் கருமேந்திரிய மைம்பூதம்
இங்கிவ்வுயிரேய் பிரகிருதி மானாங்கார மனங்களே.

திருமாலிருஞ்சோலை - திருமாலிருஞ்சோலை மலையிலே, மேய - நித்யவாசம் பண்ணுகிற, நங்கள் கோனே - எமக்கு சுவாமியானவனே, யானேநீஆகி - நானே நீயாகி, என்னை யளித்தானே - என்னை ரக்ஷித்தவனே, பொங்கு - போக்யதையாலே கிளர்ந்து புலப்படுகிற, ஐம்புலனும்-ஓசை முதலிய விஷயங்கள் ஐந்தும், பொறிஐந்தும் - அதிலே அகப்படுத்துகைக்குக் காரணமான கண் முதலிய ஜ்ஞானேந்திரியங்கள் ஐந்தும், கருமேந்திரியம் - அவ்விஷயங்களில் ப்ரவர்த்திக்கைக்குக் காரணமான வாக்கு முதலிய கருமேந்திரியங்கள் ஐந்தும், ஐம்பூதம் - அவைகட்கு ஆசிரயமான மண் முதலிய பூதங்கள் ஐந்தும், இங்கு - சம்சாரதசையில், இவ்வுயிர் எய் - இவ்வுயிரோடே படைக்கப்பட்ட, பிரகிருதி - மூலப்ரக்ருதி, மான் - மஹான், ஆங்காரம் - அஹங்காரம், மனங்கள் - மனம் ஆகிற; உன் மாமாயை - உன்னுடைய மிகுந்த ஆச்சரியமான ப்ரக்ருதி ப்ராக்ருதங்கள், மங்க ஒட்டு - மங்கும்படி இசைந்தருள வேணும்.

(428) திருவா. 10-7-1. (429) திருவா. 10-7-10.

430. ஆஹ்லாத ஸீதநேத்ராம்பு: புளகீக்ருத காத்ரவாந் ।
ஸதா பரகுணாவிஷ்ட: த்ரஷ்டவ்ய: ஸர்வ தேஹிபி: ॥

(சாதுக்கள்) ஸதா - எப்பொழுதும், பரகுண - பரமாத்மாவின் குணங்களை, ஆவிஷ்ட: - அநுபவித்துக்கொண்டு, ஆஹ்லாத - அந்த ஆநந்தத்தால்; ஸீத - குளிர்ந்த, நேத்ராம்பு: - கண்ணீரை யுடையவர்களாயும், புளகீக்ருத - மயிர்க்கூச்சலோடு கூடிய, காத்ரவாந் - சரீரத்தை யுடையவர்களாயும், ஸர்வ தேஹிபி: - சகல ஜநங்களாலும், த்ரஷ்டவ்ய: - பார்க்கத் தகுந்தவர்களாயும் (இருப்பர்கள்).

431. என்நாள் யானுன்னை ... ... 373-வது இலக்கம் காண்க.

432. கூவிக்கூவிக் கொடுவினை தூற்றுள் நின்று
பாவியேன் பலகாலம் வழிதிகைத் தலமருகின்றேன்
மேவியன் றாநிரை காத்தவன் உலகமெல்லாம்
தாவிய வம்மானை எங்கினித் தலைப்பெய்வனே

கொடு - கொடிதான, வினை - பாவங்களுக்குப் பிறப்பிடமாகிய, தூற்றுள் - நுழைந்தால் வெளிப்படவொண்ணாத சம்சாரமாகிற புதரில் அகப்பட்டு, நின்று - நின்று, பலகாலம் - அநேககாலம், வழிதிகைத்து - வழியறியாமல் பிரமித்து, அலமருகின்றேன் - சுழலா நின்றேன், பாவியேன்-பெரும் பாவியாகிய நான், அன்று - அந்நாளில், மேவி - நெஞ்சு பொருந்தி, ஆநிரை-பசுக்கூட்டங்களை, காத்தவன் - காத்தவனாய், உலகமெல்லாம் - எல்லாவுலகங்களையும், தாவிய - திரிவிக்கிரமனாய்த் தாவியளந்த, அம்மானை - சுவாமியை, இனி - இனி, கூவிக் கூவி - பலகாலம் கூப்பிட்டு, எங்கு - எங்கே, தலைப்பெய்வன் - கிட்டுவேன்,

433. நாளேலறியே னெனக்குள்ளன நானும்
மீளாவடிமை பணிசெய்யப் புகுந்தேன்
நீளார்மலர்ச் சோலைகள்சூழ் திருநாவாய்
வாளேய்தடங்கண் மடப்பின்னை மணாளா

நீள் - ஓங்கி, ஆர் - நிறைந்த, மலர் - பூவையுடைத்தான, சோலைகள் - சோலைகள், சூழ் - சூழ்ந்த, திருநாவாய் - திருநாவாயிலே, வாள் ஏய் - ஒளியை யுடைத்தான, தடம் கண் - பெரிய கண்களை யுடைய, மடம் பின்னை - ஆத்ம குணபரி பூர்ணையான நப்பின்னைப் பிராட்டிக்கு, மணாளா - நிரதிசய போக்தாவானவனே, நானும் - நானும், மீளா அடிமைப் பணிசெய்ய - விச்சேத ரஹிதமான நிரந்தர கைங்கர்யம் பண்ணுகைக்கு, புகுந்தேன் - அந்வயித்தேன், (அதுக்கு), எனக்கு - எனக்கு, உள்ளன - உள்ளனவாகக் கற்பித்து வைத்த, நாளேல் - நாளாகில், அறியேன் - அறிகிலேன்.

---

(430) (432) திருவா. 3-2-9.
(433) திருவா. 9 8-4.

434. தறியேனினி ... ... 272-வது இலக்கம் காண்க.

435. ஆவிதிகைக்க ஐவர்குமைக்கும் சிற்றின்பம்
பாவியேனைப் பலநீகாட்டிப் படுப்பாயோ
தாவி வையங்கொண்ட தடந்தாமரைகட்கே
கூவிக்கொள்ளும் காலமின்னம் குறுகாதோ.

ஆவிதிகைக்க - நெஞ்சு கலங்க, ஐவர்-பஞ்சேந்திரியங்களும், குமைக்கும் - தத்தம் விஷயங்களைக் காட்டவேண்டுமென்று தனித் தனியே நலிகிற, சிறு இன்பம் - அற்பசாரமான விஷயசுகத்தை, பலகாட்டி - பலவகையாகக்காட்டி நீ - இவற்றைக் கழிக்கவல்ல நீ, பாவியேனை - (பேரின்பத்துக் குரியனாயிருந்தும் துன்பமயமான சம்சாரத்திலே வர்த்திக்கும்படி) பாவியாகிய என்னை, படுப்பாயோ - முடிக்க நினைக்கிறாயோ, வையம் பூமியை, தாவிகொண்ட - தாவியளந்து கொண்ட, தடம் - நித்திய போக்யமான, தாமரைகட்கு - திருவடித் தாமரைகளில் நான் அந்வயிக்கும்படி, கூவிக் கொள்ளும் காலம்-என்னை அழைத்துக் கொள்ளுங்காலம், இன்னம் - இன்னமும் - குறுகாதோ - கிட்டாதோ.

436. ஆர்த்தாநாமாஶுபலதா ஸக்ருதேவ க்ருதாஹ்யஸௌ ।
த்ருப்தாநாமபி ஜந்தூநாம் தேஹாந்தரநிவாரிணீ ॥

ஸக்ருதேவ - ஒரு தடவையே, க்ருத - செய்யப்பட்ட, அஸௌ - இந்த சரணாகதி (ப்ரபத்தி) யானது, ஆர்த்தாநாம் - ஆர்த்தியுடையவர்களுக்கு, ஆசு- சீக்கிரமாக, பலதாஹி - பலத்தைக் கொடுக்கின்றதல்லவா, த்ருப்தாநாம-திருப்த ப்ரபந்நர்களான, ஜந்தூநாம் - சேதனர்களுக்கு, தேஹாந்தர - இதரமான தேஹங்களை, நிவாரிணீ - வரவொட்டாதபடி செய்கின்றது.

437. திருமாலிருஞ்சோலை மலையே திருப்பாற்கடலே யென்தலையே
திருமால்வைகுந்தமே தண்திருவேங்கடமே யெனதுடலே
அருமாமாயத் தெனதுயிரே மனமேவாக்கேகருமமே
ஒருமா நொடியும் பிரியா னென்னூழி முதல்வனொருவனே.

திருமாலிருஞ் சோலை மலையே-திருமாலிருஞ் சோலை மலையையும் திருப்பாற்கடலே - திருப்பாற் கடலையும், (அவற்றோடொக்க) என் தலையே - என் தலையையும், திருமால் வைகுந்தமே - ஸ்ரீயப் பதியானவன் கொண்டிருக்கிற பரமபதத்தையும், தண் திருவேங்கடமே - குளிர்ச்சியையுடைய பெரிய திருமலையையும், (அப்படியே) எனது உடலே - என் சரீரத்தையும், அருமா - அரிய பெரிய, மாயத்து - ஆச்சரியமான ப்ரக்ருதியோடே பிறந்த, எனது உயிரே - என்னுடைய ஆத்மாவையும், மனமே - மனத்தையும், வாக்கே-வாக்கையும், கருமமே- தொழிலையும், ஒருமா நொடியும் - ஒரு கணத்தில் ஒருமாப் பொழுதும், பிரி

(435) திருவா. 6.9 9. (436) ஸ்ரீபாஞ்ச.
(437) திருவா. 10-7 8.

யான் - பிரிகின்றிலன், என் ஊழிமுதல்வன் - என் காரண பூதனானவன், ஒருவனே - ஒருவனாயிருக்கிறானே.

438. கல்லும் கனைகடலும் வைகுந்த வானாடும்
புல்லென் றொழிந்தனகொல் ஏபாவம்—வெல்ல
நெடியான் நிறங்கரியா னுள்புகுந்து நீங்கான்
அடியேன துள்ளத் தகம்.

வெல்ல நெடியான் - மிக்க உயர்த்தியை யுடையனாய், நிறம் கரியான் - நிறத்தால் கரியனானவன், உள்புகுந்து - உள்ளே ப்ரவேசித்து, அடியேனது - அடியேனுடைய, உள்ளத்து அகம் - ஹ்ருதயத்தில் நின்றும், நீங்கான் - பிரிகிறிலன், (ஆகையால்) கல்லும் - திருமலையும், கனை - கோஷிக்கிற, கடலும் - திருப்பாற் கடலும், வைகுந்தம் - ஸ்ரீவைகுண்ட மென்கிற, வான் - பரமாகாசத்திலுள்ள, நாடும் - தேசமும், புல் என்று - அல்ப மென்னும்படி, ஒழிந்தன கொல் - போய்விட்டது, ஏபாவம் - என்ன பாவம்.

439. நாகத்தணைக் குடந்தை வெஃகாத் திருவெவ்வுள்
நாகத்தணை யரங்கம் பேரன்பில்—நாகத்
தணைப் பாற்கடல் கிடக்கு மாதிநெடுமால்
அணைப்பார் கருத்த னவான்

ஆதி - ஜகத் காரணனான, நெடுமால் - ஸர்வேச்வரன், அணைப்பார் - பக்த ஜனங்களுடைய, கருத்தன் - ஹ்ருதயத்தில், ஆவான் - ப்ரவேசிக்கைக்காக, நாகத்தணை - திருவநந்தாழ்வானாகிற படுக்கையின் மேல், குடந்தை - திருக்குடந்தையிலும், வெஃகா - திருவெஃகாவிலும், திருவெவ்வுள் - திருவள்ளூரிலும், (கிடக்கும் - சயனித்துக் கொண்டிருக்கும்), நாகத்தணை - திருவநந்தாழ்வானாகிற படுக்கையின்மேல், அரங்கம் - கோயிலிலும், பேர் - திருப்பேரிலும், அன்பில் - திருவன்பிலும், (கிடக்கும் - சயனித்துக்கொண்டிருக்குமே), நாகத்தணை - திருவநந்தாழ்வானாகிற படுக்கையின் மேல், பாற்கடல் - திருப்பாற்கடலிலும், கிடக்கும் - சயனித்துக் கொண்டிருக்கிறான்.

440. தலைமேல் புனைந்தேன் சரணங்கள் ஆலின்
இலைமேல் துயின்றா னிமையோர் வணங்க
மலைமேன் தான்நின் றென்மனத்து ளிருந்தானை
நிலைபேர்க்க லாகாமை நிச்சித்திருந்தேனே

சரணங்கள் - அவன் திருவடிகளை, தலைமேல் - என் தலைமேலே, புனைந்தேன் - வைத்திருந்தேன், ஆலின் இலைமேல் - ஆலிலையின் மீது, துயின்றான் - கண் வளர்ந்தருளினவனாய், இமையோர் - நித்ய ஸூரிகள், வணங்க - வணங்கும்படி, மலைமேல் - திருமலையிலே, தான் - சுயம்பிரயோஜன மாம்படி,

(438) பெரிய. திருவந்தாதி. 68. (439) நான். திருவ. 36.
(440) திருவா. 10-4-4.

நின்று - எழுந்தருளி நின்று, என்மனத்துள் - என் நெஞ்சில் புகுந்து, இருந்தானை - நிலைபெற்றிருந்தவனை, நிலை - இந்த இருப்பினது நிலையை, பேர்க்கல் ஆகாமை - குலைக்கவொண்ணாமை, நிச்சித்து - நிச்சயித்து, (அத்தாலே) இருந்தேன் - க்ருத க்ருத்யனாயிருந்தேன்.

441. பனிக்கடலில் பள்ளிகோளைப் பழகவிட்டு ஓடிவந்தென்
மனக்கடலில் வாழவல்ல மாயமணாள நம்பீ
தனிக்கடலே தனிச்சுடரே தனியுலகே யென்றென்று
உனக்கிடமாயிருக்க வென்னை யுனக்குரித் தாக்கினையே

பனி - குளிர்ச்சியே ஸ்வபாவமான, கடலில் - திருப்பாற் கடலில், பள்ளிகோளை - பள்ளி கொள்ளுதலை, பழகவிட்டு - மறந்துவிட்டு, ஓடிவந்து - ஓடி வந்து, என் மநக்கடலில் - என் மநஸ்ஸாகிற கடலிலே, வாழவல்ல - வாழவல் லவனாய், மாய - ஆச்சர்ய சக்தி யுக்தனாய், மணாள - பெரிய பிராட்டியார்க்கு வல்லபனாய், நம்பீ - குணபூர்ணனானவனே, தனிக்கடல் - அத்விதீயமான திருப்பாற்கடல், தனிச்சுடர் - அத்விதீயமான ஆதித்ய மண்டலம், தனியுலகு- அத்விதீயமான பரமபதம், என்றென்று - என்று சொல்லுகிற தேசங்கள், உனக்கு - தேவரீருக்கு, இடமாயிருக்க - இருப்பிடங்களாக அமைந்திருக்க, என்னை - அடியேனை, உனக்கு தேவரீருக்கு, உரித்தாக்கினையே - சேஷமாக்கிக்கொண்டாயே, என்று ஈடுபடுகிறார்.

442. வெற்பென் றிருஞ்சோலை வேங்கடமென் றிவ்விரண்டும்
நிற்பென்று நீமதிக்கும் நீர்மைபோல்—நிற்பென்
றுளங்கோயி லுள்ளம்வைத் துள்ளினேன் வெள்ளத்
திளங்கோயில் கைவிடே லென்று.

சோலை - திருமாலிருஞ்சோலை, வேங்கடம் - திருமலை, என்று - என்கிற திருநாமத்தையுடைய, இரும் - விசாலமான, வெற்பு என்று-திருமலையென்று சொல்லப்படுகிற, இவ்விரண்டும் - இந்த இரண்டு ஸ்தாநமும், நிற்பு என்று - (உகந்தருளின) வாஸஸ்தாநமென்று, நீ - நீ, மதிக்கும் - எண்ணும், நீர்மை போல் - ஸ்வபாவம் போலே, உளம் - ஹ்ருதயமாகிற, கோயில்-இருப்பிடமும், நிற்பு என்று - (உகந்து) வர்த்திக்கும் ஸ்தாநமென்று, உள்ளம் வைத்து - அறிந்து, வெள்ளம் - திருப்பாற்கடலாகிற, இளங்கோயில் - பாலாலயத்தை, கைவிடேல் என்று - கைவிடா தொழியவேணுமென்று, உள்ளினேன்-ப்ரார்த்தித்தேன்.

443. பிண்டியார் மண்டையேந்திப் பிறர்மனைத் திரிதந்துண்ணும்
உண்டியான் சாபந்தீர்த்த வொருவனூர் உலகமேத்தும்
கண்டியூ ரரங்கம் மெய்யம் கச்சிபேர் மல்லையென்று
மண்டினார் உய்யலல்லால் மற்றையார்க் குய்யலாமே.

---

(441) பெரியா. திரு. 5 4-9. (442) இர. திருவ. 54.
(443) திருக்குறுந்தாண்டகம். 19.

பிண்டி ஆர் - (உளுத்த) பொடிகள் உதிருகிற, மண்டை-தலையோட்டை, ஏந்தி - கையலேந்திக் கொண்டு, பிறர்மனை - அயலாருடைய வீடுகளிலே, திரிதந்து உண்ணும் - திரிந்து (இரந்து) உண்கிற, உண்டியான் - மொட்டையாண்டியான ருத்ரனுடைய, சாபம் தீர்த்த-சாபத்தைப் போக்கின, ஒருவன் - அத்விதீயனுடைய, ஊர் - திருப்பதிகளான, உலகமேத்தும் கண்டியூர்-லோகத்தார் ஸ்துதிக்கிற திருக்கண்டியூரும், அரங்கம் - பெரிய கோயிலும், மெய்யம் - திருமெய்யமும், கச்சி-திருவெஃகாவும், பேர் - திருப்பேரும், மல்லை என்று - திருக்கடல்மல்லையுமாகிய திருப்பதிகளில், மண்டினார் - நெஞ்சு மண்டினார், உய்யலல்லால் - உஜ்ஜீவிப்பார்களேயல்லது, மற்றையார்க்கு - மற்றவர்களுக்கு, உய்யலாமே - உஜ்ஜீவிக்க விரகுண்டோ.

444. அஸந்நேவ ஸபவதி அஸத்ப்ரஹ்மேதி வேதசேத் ।
அஸ்தி ப்ரஹ்மேதிசேத் வேத ஸந்தமேநம் ததோ விதுரிதி॥

ப்ரஹ்ம - ப்ரஹ்மமானது, அஸத் - இல்லை, இதி - என்று, வேதசேத் - அறிகிறானே யாகில், ஸ: - அவன், அஸந்நேவ - இல்லாதவனாகவே, பவதி - ஆகிறான், ப்ரஹ்ம - ப்ரஹ்மமானது, அஸ்தி இதி - இருக்கிறதென்று, வேத சேத் - அறிகிறானே யாகில், தத: - அந்த காரணத்தினால், ஏநம் - இவனை, ஸந்தம் - இருக்கிறவனாக, விது: - அறிகிறார்கள்.

445. மதுசூதனையன்றி மற்றிலேனென் றெத்தாலும் கருமமின்றி
துதிசூழ்ந்த பாடல்கள் பாடியாடநின் றூழியூழிதொறும் [ய்ய
எதிர்சூழல்புக் கெனைத்தோர் பிறப்பு மெனக்கே யருள்கள்செ
விதிசூழ்ந்ததா லெனக்கே லம்மான் திரிவிக்கிரமனையே.

மதுசூதனை அன்றி - மதுசூதனை யல்லது, மற்று இலேன் - வேறொரு பற்றுடையே னல்லேன், என்று - என்று, எத்தாலும் - யாதொரு பதார்த்தத்தாலும், கருமம் இன்றி - ஒரு காரியமில்லாமல், துதி - தோத்திர ரூபத்தாலே, சூழ்ந்த - அவனது மங்கள குணங்களை வளைந்த, பாடல்கள் - பாசுரங்களை, நின்று - நிலைபெற்று, பாடி ஆட - பாடி ஆடும்படி, ஊழி ஊழிதொறும் - கல்பங்கள்தோறும், எனைத்து - அநேகங்களாய், ஓர் - ஒப்பற்றவைகளான, பிறப்பும் - பிறவிகள்தோறும், எதிர் - எனக்கெதிரில், சூழல்புக்கு - சூழ்ச்சியோடே அவதரித்து, எனக்கே - என்பொருட்டே, அருள்கள் - உபகாரங்களை, செய்ய - பண்ணுகைக்கு, எனக்கு - எனக்குறப்பான, ஏல் - அங்கீகாரத்தையுடையவனாய், அம்மான் - சுவாமியான, திரிவிக்கிரமனை - திரிவிக்கிரமனை, விதி - விதியானது, சூழ்ந்தது - வளைந்துகொண்டது.

446. மநோவாக்காயை: ... ... 160-வது இலக்கம் காண்க.

447. நகாம கலுஷம் சித்தம் மம தே பாதயோ: ஸ்திதம் ।
காமயே வைஷ்ணவத்வந்து ஸர்வ ஜந்மஸு கேவலம் ॥

(444) தை. ஆந. 6-1. (445) திருவா. 2 7-6.
(447) ஜிதந்தா. 1.

தே - தேவரீருடைய, பாதயோ꞉ - திருவடிகளில், ஸ்திதம் - ஈடுபட்ட, மம - என், சித்தம் - மனது, நகாமகலுஷம் - ஸ்ரீ வைகுண்டத்தை ஆசைப் பட்டுக் கலங்குகிறதில்லை, ஸர்வ ஜந்மஸூ - எல்லா ஜந்மங்களிலும், வைஷ்ண வத்வம் து கேவலம் - கேவல அடிமையே நிரூபகமான வைஷ்ணவ ஜந்மத் தையே, காமயே - ஆசைப்படுகிறேன்.

448. நஹிமே ஜீவிதேநார்த்தோ நைவார்த்தைர் நசபூஷணை꞉ ।
வஸந்த்யா ராக்ஷஸீ மத்யே விநா ராமம் மஹாரதம் ॥

ராக்ஷஸீமத்யே - அரக்கர் மத்தியில், வஸந்த்யா꞉ - வஸிக்கின்ற, மே - எனக்கு, மஹாரதம் - மஹாசமர்த்தராகிய, ராமம் விநா - ராமரைத்தவிர, ஜீவிதேந அர்த்த꞉ நஹி - ப்ராணனால் ப்ரயோஜனமில்லை, அர்த்தை꞉ நைவ - அர்த்தங்களாலும் ஒரு ப்ரயோஜனமில்லை, நச பூஷணை꞉ - ஆபரணங்களாலும் ஒரு ப்ரயோஜனமில்லை.

449. நதேஹம் நப்ராணாந் நசஸுக மஶேஷாபிலஷிதம் நசாத் மாநம் நாந்யத் கிமபி தவஶேஷத்வ விபவாத் । பஹிர்பூதம் நாத க்ஷணமபி ஸஹே யாது ஶததா விநாஶம் தத் ஸத்யம் மதுமதந விஜ்ஞாபநமிதம்.

தவ - தேவரீருடைய, சேஷத்வ - சேஷத்வமாகிற, விபவாத் - பெருமைக்கு, பஹிர்பூதம் - புறம்பாயுள்ளவைகளான, தேஹம் - சரீரத்தையும், ந ஸஹே - வேண்டேன், ப்ராணாந் - ப்ராணன்களையும், ந - வேண்டேன், அஶேஷாபிலஷிதம் - எல்லாருக்கும் ஆசைப்படத்தக்க, ஸுகம் - ஸுகத்தை யும், ந - வேண்டேன், ஆத்மாநஞ்ச-ஆத்மாவையும், ந - வேண்டேன், அந்யத் - வேறுயுள்ள, கிமபி - ஒன்றையும், நஸஹே - வேண்டேன், நாத - ப்ராப்த சேஷியானவனே, க்ஷணமபி - க்ஷணகாலமும், ந ஸஹே - ஸஹிக்க கில்லேன், தத் - அவ்வஸ்துக்கள், ஶததா - அநேக விதமாய், விநாஶம்-நாசத்தை, யாது - அடையட்டும், மதுமதந - ஓ மதுசூதனனே, இதம் - இந்த, விஜ்ஞாபனம் - விண்ணப்பமானது, ஸத்யம் - மெய்யானது.

450. எம்மாவீட்டுத் திறமும் செப்பம்நின்
செம்மா பாதபற்புத் தலைசேர்த்தொல்லை
கைம்மா துன்பங் கடிந்தபிரானே
அம்மா வடியேன் வேண்டுவதீதே

எ - எவ்வகைப்பட்ட, மா - மேன்மை பொருந்திய, வீட்டுத்திறமும் - மோக்ஷத்தின் ஏற்றத்தையும், செப்பம் - சொல்லோம், நின் - உன்னுடைய, செ - சிவந்த, மா - சாமளமான, பாதபற்பு - திருவடித்தாமரைகளை, தலை-என் தலையிலே, ஒல்லை - விரைவாக, சேர்த்து - சேர்க்கவேணும், கைம்மா - கஜேந்

(448) ரா. ஸு. (449) ஸ்தோத்ரரத்நம். 57.
(450) திருவா. 2-9-1.

திராழ்வானுடைய, துன்பம் - துக்கத்தை, கடிந்த - போக்கின, பிரானே - உபகாரகனே, அம்மா - சுவாமியே, அடியேன் வேண்டுவது - அடியேன் ப்ரார்த்திப்பது, ஈதே - இதுவே.

451. விஷஸ்ய விஷயாணாஞ்ச தூரமத்யந்த மந்தரம் ।
உபபுக்தம் விஷம் ஹந்தி விஷயாஃ ஸ்மரணாதபி ॥

விஷஸ்ய - விஷத்திற்கும், விஷயாணாஞ்ச - சப்தாதி விஷயங்களுக்கும், அந்தரம் - தாரதம்யமானது, அத்யந்தம் தூரம் - மிகவும் தூரமானது, விஷம் - விஷமானது, உபபுக்தம் - சாப்பிட்டவனை, ஹந்தி - கொல்லும், விஷயாஃ - விஷயங்களானவை, ஸ்மரணாதபி - நினைத்தமாத்திரத்தில் கொல்லும்.

452. ஆஸ்வாத்ய தஹநஜ்வாலா முதந்யாஶமநம் யதா ।
ததா விஷய ஸம்ஸர்காத் ஸுகசிந்தா ஶரீரிணஃ ॥

தஹந ஜ்வாலாம் - அக்கிஜ்வாலையை, ஆஸ்வாத்ய-பானம் பண்ணினவன், யதா - எப்படி, உதந்யாஶமநம் - தாஹத்தைத்தீர்க்க நினைக்கிறானோ, ததா - அப்படியே, சரீரிணஃ - ஆத்மாக்களுக்கு, விஷய ஸம்ஸர்காத் - விஷய ஸங்கத்தாலே, ஸுகசிந்தா - ஸுகிக்கவேணுமென்னும் நினைவு.

453. விஷயாணாந்து ஸம்ஸர்காத் யோ஽பிஹர்த்தி ஸுகம் நரஃ ।
ந்ருத்யதஃ பணிநஃ சாயாம் விஶ்ரமாயாஶ்ரயேத ஸஃ ॥

விஷயாணாம்து - விஷயங்களினுடைய, ஸம்ஸர்காத் - ஸம்பந்தத்தாலே, யஃ - எவன், ஸுகம் - ஸுகத்தை, பிபர்த்தி - அநுபவிக்கிறானோ, ஸஃ நரஃ - அந்த மனிதன், ந்ருத்யதஃ பணிநஃ - படத்தை விரித்து ஆடுகிற பாம்பினுடைய, சாயாம் - நிழலை, விஶ்ரமாய - இளைப்பாறுவதற்கு, ஆஶ்ரயேத - ஆஶ்ரயிக்குமாப் போலாகும்.

454. காட்டிப் படுப்பாயோ ... ... 435-வது இலக்கம் காண்க.

455. அஜ்ஞஃ ஸுகமாராத்யஃ ஸுகதரமாராத்யதே விஶேஷஜ்ஞஃ ।
ஜ்ஞாநலவ துர்விதக்தம் ப்ரஹ்மாபி நரம் நரஞ்ஜயதி ॥

அஜ்ஞஃ - ஒன்றும் தெரியாதவன், ஸுகம்-சுலபமாக, ஆராத்யஃ-(சாஸ்த்ரஜ்ஞானத்தை) தெரிவிக்கத்தக்கவன், விஶேஜ்ஞஃ - ஜ்ஞானமுடையவன், ஸுகதரம் - அத்யந்த சுலபமாக, ஆராத்யஃ - தெரிவிக்கத் தகுந்தவன், ஜ்ஞாநலவ - அல்பஜ்ஞானத்தாலே, துர்விதக்தம் - கர்வமடைந்த, நரம் - மனிதனை, ப்ரஹ்மாபி - ப்ரஹ்மாவான போதிலும், ந ரஞ்சயதி - திருத்த முடியாது.

456. யா ப்ரீதிர் மயி ஸம்வ்ருத்தா மத்பக்தேஷு ஸதாஸ்துதே ।
அவமாந க்ரியா தேஷாம் ஸம்ஹரத்யகிலம் ஜகத் ॥

மயி - என்னிடத்தில், யாப்ரீதி - எந்த ப்ரேமம், ஸம்வ்ருத்தா - உண்டாயிற்றோ, (அந்த ப்ரேமமானது), மத்பக்தேஷு - என்னடியாரிடத்தில், தே -

(451) (452)
(453) (455) (456) பார. அஸ்வமேதிக பர்வம்.

உமக்கு, ஸதா - எப்பொழுதும், அஸ்து - உண்டாகக்கடவது, தேஷாம் - அந்த பக்தர்களுடைய, அவமாந க்ரியா - அவமான க்ருத்யம், அகிலம்-சமஸ்த மான, லோகம் - லோகத்தை, ஸம்ஹரதி - நாசம்செய்யும்.

457. அர்ச்சாவதாரோ பாதாந வைஷ்ணவோத்பத்தி சிந்தநம் ।
மாத்ருயோநி பரீக்ஷாயாஸ் துல்யமாஹுர் மநீஷிண: ॥

அர்ச்சாவதார - அர்ச்சாவதார விக்ரஹங்களினுடைய, உபாதாந - த்ரவ்ய நிரூபணத்தையும், வைஷ்ணவ - வைஷ்ணவனுடைய, உத்பத்தி சிந்தநம்- ஜந்ம நிரூபணத்தையும், மாத்ருயோநி பரீக்ஷாயா: - மாதாவின் யோநி பரீக்ஷைக்கு, துல்யம் - சமானமாக, மநீஷிண: - சாஸ்த்ரஜ்ஞர்கள், ஆஹு: - சொல்லுகிறார்கள்.

458. [1] தேஷாம் தத் வசநம் ஶ்ருத்வா க்ரோத பர்யாகுலாக்ஷரம் ।
ஸராஜா புநரேவைதாநிதம் வசந மப்ரவீத் ॥

ஸ: - அந்தத்ரிசங்கு மஹாராஜன், தேஷாம் - அந்த வசிஷ்ட புத்ரர்களுடைய, க்ரோத - கோபத்தினால், பர்யாகுல - வ்யாகூலமான, அக்ஷரம் அக்ஷரங்கள் கூடிய, தத் வசநம்-அந்த வார்த்தையை, ஶ்ருத்வா - கேட்டு, ஏதாந் - இந்த குருபுத்ரர்களைக்குறித்து, புநரேவ - மறுபடியும், இதம் - இந்த, வசநம் - வார்த்தையை, அப்ரவீத் - சொன்னான்.

458. [2] ப்ரத்யாக்யாதோ ஹிபவதா குருபுத்ரைஸ் ததைவச ।
அந்யாம் கதிம்கமிஷ்யாமி ஸ்வஸ்திவோஸ்து தபோதநா: ॥

தபோதநா: - தவத்தை தனமாகவுடையவர்களே, பகவதா - ஷாட்குணைஶ்வர்ய சம்பன்னனான வசிஷ்டராலே, ப்ரத்யாக்யாத: - திரஸ்கரிக்கப்பட்டேன், குருபுத்ரை: - குருபுத்ரர்களான உங்களாலும், ததைவ - அப்படியே, ப்ரத்யாக்யாத: - திரஸ்கரிக்கட்டேன். அந்யா - வேறான, கதிம் - வழியை (ஆசாரியரை), கமிஷ்யாமி - அடையக்கடவேன், வ: - உங்களுக்கு, ஸ்வஸ்தி - மங்களம், அஸ்து - உண்டாகட்டும்.

459. ருஷிபுத்ரஸ்து தத் ஶ்ருத்வா வாக்யம்கோராபி ஸம்ஹிதம் ।
ஶேபு: பரம ஸங்க்ருத்தாஸ் சண்டாளத்வம் கமிஷ்யஸி ॥

ருஷி புத்ரஸ்து - அந்த வசிஷ்ட புத்ரர்கள், கோராபி ஸம்ஹிதம் - கோர எண்ணங்கொண்ட, தத் - அந்த, வாக்யம் - வாக்கியத்தை, ஶ்ருத்வா - கேட்டு, பரம ஸம்க்ருத்தா: - மிகக்கோபமுடையவர்களாய், சண்டாளத்வம் - சண்டாள பாவத்தை, கமிஷ்யஸி - அடையக்கடவாய், இதி - என்று, ஶேபு: - சபித்தார்கள்.

460. அதராத்ரியாம் வ்யதீதாயாம் ராஜா சண்டாளதாம் கத: ।
நீல வஸ்த்ர தரோ நீல: பருஷோத்வஸ்த மூர்த்தஜ: ।
சித்ய மால்யாங்கராகஶ் சாயஸாபரணோபவத் ॥

(457)

(458—1—2) ரா. பால. 58 6.

(459) ரா. பா. 58 9.

(460)

அத: - பிறகு, ராத்ர்யாம் - அந்த இரவு, வ்யதீதாயாம் - கடந்தவுடன், ராஜா - த்ரிசங்குமஹாராஜன், சண்டாளதாம் - சண்டாளத்தன்மையை, கத: - அடைந்தான், நீலவஸ்த்ரத: - கருத்த வஸ்திரத்தை யுடையவனும், நீல: - கருத்த சரீரத்தை யுடையவனும், புருஷ: - கடினமான பேச்சையுடையவனும், த்வஸ்த மூர்த்தஜ: - குறைந்தும் சிக்குபிடித்துமுள்ள மயிரையுடையவனும், சித்ய மால்யாங்கராக: - சவத்திற்கு அலங்கரித்த மாலைகளாலும் சந்தனம் முதலியவற்றாலும், அலங்கரித்த தேஹமுடையவனும், அபஸாபரண: - இரும்பு நகைகளையுடையவனும், அபவத் - ஆனான்.

461. அநாசாராந் ... ... 213-வது இலக்கம் காண்க.

462. [1] அமரவோ ரங்கமாறும் வேதமோர் நான்குமோதி
தமர்களில் தலைவராய சாதியந்தணர்களேலும்
நுமர்களைப் பழிப்பராகில் நொடிப்பதோ ரளவில்ஆங்கே
அவர்கள்தாம் புலையர்போலும் அரங்கமா நகருளானே

அரங்கமாநகருளானே - கோயிலிலே வந்து கண்வளர்ந்தருளுமவனே! ஓர் - அத்விதீயமான, அங்கம் ஆறும் - ஆறு வேதாங்கங்களையும், ஓர் - அத்விதீயமான, வேதம் நான்கும் - நான்கு வேதங்களையும், அமர - சாவதாநமாக, ஓதி - அத்யயநம்பண்ணி, தமர்களில் தலைவராய - தாஸபூதரில் அக்ரேசரான, சாதி அந்தணர்களேலும் - ப்ராஹ்மண வர்ணத்திலே பிறந்தவர்களேயானாலும், நுமர்களை - தேவரீருடைய தாஸபூதரை, பழிப்பராகில் - அவர்களுடைய ஜந்ம வருத்தங்களைப் பார்த்து தூஷிப்பாராகில், ஆங்கே - அப்போதே, நொடிப்பது ஓர் அளவில் - அந்த க்ஷணத்திலேயே, அவர்கள் தாம் புலையர்போலும் - அவர்கள் சண்டாளர்களாவர் ரென்கிறார்.

462. [2] கிஞ்சிதாகத ஸம்ரம்போ விஸ்வாமித்ரோ ப்ரவீதிதம் ।
ஏகத: ஸ்யாமகர்ணநாம் ஸதாந்யஷ்டௌ து தேஹி மே
ஹயாநாம் சந்த்ர ஸுப்ராணாம் கச்ச காலவ மாசிரம்

கிஞ்சித் - கொஞ்சம், ஆகதஸம்ரம்ப: - கோபமடைந்தவரான, விச்வாமித்ர: - விச்வாமித்திரன், இதம் - இப்படி, அப்ரவீத் - சொன்னான், ஏகத: ச்யாம கர்ணநம் - ஒரு காது கருத்திருக்கிறதும், சந்த்ரசுப்ராணாம் - சந்திரன் போல் வெண்ணிறமுமுள்ளதுமான, சதாநி அஷ்டௌச - எண்ணூறு, ஹயாநாம் - குதிரைகளை, மே - எனக்கு, தேஹி - கொடு, காலவ - ஏ காலவனே, கச்ச - போ, மாசிரம் - தாமதம் வேண்டாம்.

463. கிந்துதே மநஸா ஸ்யாதமஸுபம் பததாம்வர ।
நஹ்யயம் பவத: ஸ்வல்போ வ்யபிசாரோ பவிஷ்யதி ॥

ஹே பததாம் வர - பக்ஷிகளில் ஸ்ரேஷ்டரான ஓ திருவடி, தே - உம்முடைய, மநஸா - மனதினால், கிம் - என்ன, அசுபம் - தீங்கானது, அநுத்

(462—1) திருமாலை. 43. (462—2, 463) பாரதம். உத்.

யாதம் - நினைக்கப்பட்டது, பவதः - உம்முடைய, அயம் - இந்த, வ்யபிசாரः - அபசாரம், ஸ்வல்பः - அல்பமாக, நபவிஷ்யதிஹி - ஆகப்போகிறதில்லை யல்லவா.

464. உபாப்யா மேவ பக்ஷாப்யாம் ஆகாசே பக்ஷிணாம் கதிः ।
தயைவஜ்ஞான கர்மாப்யாம் ப்ராப்யதே பகவாந்ஹரிः

பக்ஷிணாம் - பக்ஷிகளுக்கு, உபாப்யாம் ஏவ - இரண்டு சிறகுகளாலேயே, ஆகாசே - ஆகாசத்தில், கதிः - எப்படி ஸஞ்சாரமோ, ததைவ - அப்படியே, ஜ்ஞான கர்மாப்யாம் - ஜ்ஞானாநுஷ்டாநங்களாலே, பகவாந் - ஷாட்குண ஸம்பந்நரான, ஹரிः - ஸ்வாமியை, ப்ராப்யதே - அடையப்படுகிறான்.

465. வீசுஞ்சிறகால் பறத்தீர் விண்ணாடு நுங்கட் கெளிது
பேசும்படியன்ன பேசியும் போவது நெய்தொடுவுண்
டேசும்படியன்ன செய்யு மெம்மீசர் விண்ணோர் பிரானார்
மாசின் மலரடிக்கீழ் எம்மைச் சேர்விக்கும் வண்டுகளே.

விண்ணோர் - நித்யஸூரிகளுக்கு, பிரானார் - ஸ்வாமியானவனாய், நெய் - நெய்யை, தொடு - களவு, (செய்து) உண்டு - அமுது செய்து, ஏசும்படி - (சத்ருக்கள்) பரிஹாஸம் செய்யும்படி, அன்ன - அப்படிப்பட்ட வ்யாபாரங்களை, செய்யும் - செய்தவனாய்க்கொண்டு, எம்மீசர் - எமக்கு ஸ்வாமியானவனுடைய, மாசுஇல் - தோஷமில்லாததாய், மலர் - புஷ்பம் போன்றதான, அடிக்கீழ் - திருவடிகளின் கீழே, எம்மை - எங்களை, சேர்விக்கும் - அடைவிப்பிக்கும் ஸாமர்த்யமுடைய, வண்டுகளே - ஓ வண்டுகளே, வீசும் - பரந்த, சிறகால் - இரக்கைகளினால், பறத்தீர் - பறவாநின்றீர்கள், நுங்கட்கு - உங்களுக்கு, விண் நாடு - பரமாகாசத்திலுள்ள பரமபதம், எளிது - ஸுலபமாய் (ஸ்வாதீநமாய்) இருக்கும், பேசும்படி - (அங்குச் சென்று) சொல்லும் விதமான, அன்ன - அப்படிப்பட்ட வார்த்தைகளை, பேசியும் போவது - (எங்கள் முன்னே) சொல்லிப் போகவேண்டும்.

466. பஶவோ மநுஷ்யாः பக்ஷீவா யேச வைஷ்ணவ ஸம்ஶ்ரயாः ।
தேனைவ தே ப்ரயாஸ்யந்தி தத் விஷ்ணோः பரமம்பதம் ॥

பசுः - சதுஷ்பாத ஜந்துக்களாகிலும், மநுஷ்யः - மனிதர்களாகிலும், பக்ஷீவா - பக்ஷிகளாகிலும், யேச - (இவர்களுள்) எவர்கள், வைஷ்ணவ ஸம்ஶ்ரயாः - வைஷ்ணவனை ஆஶ்ரயித்திருக்கிறார்களோ, தே - அவர்கள், தேனைவ - அந்த வைஷ்ணவ சம்பந்தத்தாலே, தத் - அந்த, விஷ்ணோः - விஷ்ணுவினுடைய, பரமம் - உத்க்ருஷ்டமான, பதம் - நித்யவிபூதியை, ப்ரயாஸ்யந்தி - அடைகிறார்கள்.

---

(464) (465) திருவிருத்தம். 54.
(666) பாரத்வாஜஸ்ம்ருதி.

467. யம்யம் ஸ்ப்ருஶதி பாணிப்யாம் யம்யம் பஶ்யதி சக்ஷுஷா ।
ஸ்தாவராண்யபி முச்யந்தே கிம்புநர் பாந்தவா ஜநா: ॥

பாணிப்யாம் - (மஹா பாகவதர்கள்) திருக்கைகளினால், யம்யம் - எதை யெதை, ஸ்ப்ருஶதி - தொடுகிறார்களோ, யம் யம் - எதை யெதை, சக்ஷுஷா - திருக்கண்களினால், பஶ்யதி - பார்க்கிறார்களோ, தே - அவைகள், ஸ்தாவராண்யபி - ஸ்தாவரங்களான போதிலும், முச்யந்தே - மோக்ஷத்தை யடைகின்றன, பாந்தவா ஜநா: - பந்து ஜனங்கள் விஷயத்தில், கிம்புந: - சொல்லவேண்டிதென்ன.

468. த்வம்வை கீத ப்ரபாவேந நிஸ்தாரயிதுமர்ஹஸி
ஏவமுக்த்வாத சண்டாளம் ராக்ஷஸஶ் ஶரணம் கத: ॥

த்வம்வை - மஹாநுபாவரான தேவரீரே, கீத ப்ரபாவேந - கானப்ரபாவத்தாலே, மாம் - என்னை, நிஸ்தாரயிதும் - ராக்ஷஸ ஜந்மத்தினின்றும், தாரயிதும் - உத்தரிப்பிக்கைக்கு, அர்ஹஸி - தகுந்தவர், (என்று) ஏவம் - இந்த ப்ரகாரமாக, உக்த்வா - சொல்லி, அத - அதன் பிறகு, சண்டாளம் - அந்திம குலோத்பவனை நம்பாடுவானை, ராக்ஷஸ: - ப்ரஹ்மராக்ஷஸன், சரணம் கத: - சரணமடைந்தான்.

469. யந்மயா பஶ்சிமம் கீதம் ஸ்வரம் கைஶிக முத்தமம் ।

மயா - என்னாலே, கைசிகம் - கைசிகம் என்று பெயரையுடையதாய், உத்தமம் - உயர்ந்ததான, ஸ்வரம் - ஸ்வரமானது, பஶ்சிமம்கீதம் - போது விடியும்போது பாடப்பட்டதோ, (அந்த கீத ப்ரபாவத்தினால் கரையேற்றுவிக்கிறேனென்று நம்பாடுவான் சொன்னார்.)

470. மார்காகதோ ந்ருபச்ரேஷ்டஸ் தம்தேஶம் ப்ராப்தவாந் வஸு: । அந்தரிக்ஷசர: ஸ்ரீமான் ஸமக்ர பலவாஹந: ॥ தம்த்ருஷ்ட்வா ஸஹஸாயாந்தம் வஸும் தேதவந்தரிக்ஷகம் । ஊசுர் த்விஜாதயோ தேவா ஏஷ: சேத்ஸ்யதி ஸம்ஶயம் ॥

ந்ருப ஸ்ரேஷ்ட: - ராஜஸ்ரேஷ்டரான, வஸு: - உபரிசரவஸு என்னும் ராஜன், மார்காகதஸ்ஸந் - வழிபாய் வந்துக் கொண்டிருக்கும்போது, தம் - அந்த, தேசம் - விவாத ஸ்தலத்தை, ப்ராப்தவாந் - அடைந்தான். அந்தரிக்ஷ - ஆகாசத்தில், சர: - சஞ்சரிக்கின்ற, ஸமக்ர பலவாஹந: - ஸம்பூர்ணமான ஸதுரங்கபலமும் வாஹநமும், ஸ்ரீமாந் - ஸர்வ ஸம்பத்தையு முடைய, ய: - எந்த உபரிசரவசு என்னும் ராஜா, ப்ராப்தவாந் - அடையப்பட்டான், அந்தரிக்ஷகம் - ஆகாசத்தில் சஞ்சரித்து, ஸஹஸாயாந்தம் - சீக்ரமாக வந்து

(467) பரா. ஸ்மி. (468—469) கைசிகபுராணம்.
(470)

கொண்டிருக்கிற, தம் - அந்த, வஸும் - வஸு என்னும் பெயரையுடைய உபரிசரவஸுவை, த்ருஷ்ட்வா - பார்த்து, ஏஷ꞉ - இந்த, ஸம்ஶயம் - ஸந்தேகத்தை, சேத்ஸ்யதி - தீர்ப்பான், இதி - என்று, த்விஜாதய꞉ - ருஷிகளும், தேவதா꞉ - தேவர்களும், ஊசு꞉ - சொன்னார்கள்.

471. யாந்யைர் யஷ்டவ்ய மித்யேஷ பக்ஷோஸ்மாகம் நராதிப ।
ஶேவதாநாம்ஹி பஶுபி꞉ பக்ஷோ ராஜந் வதஸ்வ ந꞉ ॥

ஹே நராதிப - ஓ ராஜனே, தாந்யை꞉ - தான்யங்களினால் செய்த பிஷ்ட பசுவினால், யஷ்டவ்ய꞉ - யாகம் செய்யத் தக்கது, இதி - என்பது, அஸ்மாகம் - எங்களுடைய, பக்ஷ꞉ - அபிப்ராயம், பசுபி꞉ - யாக பசுவைக் கொண்டு யஜிக்க வேண்டுமென்பது, தேவாநாம் ஹி பக்ஷ꞉ - தேவர்களுடைய அபிப்ராயம், (ஆகையால்), ஹேராஜன் - ஓ அரசனே, ந꞉ - எங்களுக்கு, வதஸ்வ - இந்த சந்தேகம் தீரும் பொருட்டு நியாயம் சொல்லு.

472. ஶேவாநாந்து மதம் ஶ்ருத்வா வஸுநா பக்ஷஸம்ஶ்ரயாத் ।
சாகேநாஜேந யஷ்டவ்யமேவ முக்தம் வசஸ்தயா

தேவாநாம் - தேவர்களுடைய, மதம் - அபிப்ராயத்தை, ஶ்ருத்வா - கேட்டு, பக்ஷஸம்ஶ்ரயாத் - தேவர்களுடைய பக்ஷத்தை அநுசரித்து, சாகேந - யாகபசுவினால் (ஆட்டினால்), யஷ்டவ்யம் யஜிக்கவேண்டியதென்று, வசுநா - உபரிசரவஸுவினால், ஏவம் - இந்த பிரகாரமாக, ததா - அப்பொழுது, வச꞉ - வார்த்தை, உக்தம் - சொல்லப்பட்டது.

473. குபிதாஸ் தே ததா ஸர்வேமுநய꞉ ஸூர்ய வர்ச்சஸ꞉ ।
ஊசுர்வஸும் விமாநஸ்தம் ஶேவ பக்ஷார்த வாதிநம் ॥
ஸுரபக்ஷோ க்ருஹீதஸ் தே யஸ்மாத் தஸ்மாத் திவ꞉ பத ।
அத்ய ப்ரப்ருதிதே ராஜந்நாகாஶே விஹதா கதி꞉ ॥
அஸ்மத் ஶாபாபி வாதேந மஹீம் பித்வா ப்ரவேக்ஷ்யஸி ।
விருத்தம் வேத ஸூத்ராணா முக்தம் யதிஹவேந் ந்ருப ॥
வயம்விருத்த வசநாயதிதத்ர பதாமஹே ॥

ததா - அப்பொழுது, சூர்ய வர்ச்சஸ꞉ - சூர்யனைப்போன்ற தேஜஸ்ஸையுடைய, தே - அந்த, ஸர்வ முநய꞉ - எல்லாருஷிகளும், குபிதா꞉ - கோபமுடையவர்களாய், விமாநஸ்தம் - விமானத்தி லிருக்கிறவனும், தேவபக்ஷார்த்த வாதிநம் - தேவ பக்ஷபாதியாய்ப் பேசினவனுமான, வஸும் - உபரிசரவஸுவைப் பார்த்து, ஊசு꞉ - சொன்னார்கள், யஸ்மாத் - எந்த காரணத்தினால், தே - உன்னால், ஸுரபக்ஷ꞉ - தேவதைகளின் அபிப்ராயத்தை, க்ருஹீத - அங்கீகரிக்கப் பட்டதோ, தஸ்மாத் - அந்த காரணத்தினால், திவ꞉ - ஆகாசத்தினின்றும், பத꞉ - விழக்கடவாய், ஹே ராஜந் - ஓ ராஜனே, தே - உனக்கு,

(471) (472) (473)

அத்ய ப்ரப்ருதி: - இன்று முதல், ஆகாசே - ஆகாசத்தில், கதி: - சஞ்சரிப்பது, விஹதா - போய்விட்டது. வேதஸூத்ராணாம் - வேத ஸூத்ரங்களுக்கு, விருத்தம் - விருத்தமாக, உக்தம் பவேத்யதி - சொல்லப்பட்டபடியால், அஸ்மத் - எங்கள், சாபாபிகாதேந - சாபமாகிற அடியினால், மஹீம் - பூமியை, பித்வா - பிளந்து கொண்டு, ப்ரவேக்ஷ்யஸி - விழக்கடவாய், வயம் - நாங்கள், விருத்த - விருத்தமான, வசநா: யதி - வார்த்தை யுடையவர்களானால், தத்ர - அந்த பூமியில், பதாமஹே - நாங்களும் விழக்கடவோம்.

474. ததஸ்தஸ்மிந் முஹூர்த்தேது ராஜோ பரிவஸூஸ் ததா ।
அயோவை ஸம்பபூவாஸு பூமேர் விவரகோ ந்ருப: ॥

தத: - பிறகு, தஸ்மிந் முஹூர்த்தேது - (அப்படி சபித்த) அந்த முஹூர்த்தத்திலேயே, உபரிசரவஸு: ராஜா - உபரிசரவஸு ராஜனாகிய, ந்ருப: - அரசன், ததா - அந்த ப்ரகாரமே, அதோ வை - தலை கீழாய், ஆசு: - சீக்கிரமாக, பூமே: - பூமியின், விவரக: - பிலத்வாரத்தில் (ப்ரவேசித்தவனாக), ஸம்பபூவ - ஆனான்.

475. ஸர்வே வேதா யத்பதமாமநந்தி தபாம்ஸி ஸர்வாணிச யத் வதந்தி । யதிச்சந்தோ ப்ரஹ்மசர்யம் சரந்தி தத்தே பதம் ஸங்க்ரஹேண ப்ரவீம் யோமித் யேதத் ॥

யத் - யாதொரு, பதம் - பலத்தை, ஸர்வே வேதா: - எல்லா வேதங்களும், ஆமநந்தி - சொல்லுகின்றனவோ யத் - யாதொன்றை, ஸர்வாணி தபாம்ஸிச - எல்லா தபஸிகளும், வதந்தி - சொல்லுகின்றார்களோ, யத் - யாதொரு பலத்தை, இச்சந்த: - விரும்பினவர்களாய், ப்ரஹ்மசர்யம் - ப்ரஹ்மசர்யாஸ்ரமத்தை, சரந்தி - அநுஷ்டிக்கிறார்களோ, தத் - அந்த, பதம் - பலத்தை, தே - உனக்கு, ஸங்க்ரஹேண - சுருக்கமாக, ப்ரவீமி - சொல்லுகிறேன், ஏதத் - அந்த பலமானது, ஓமிதி - ஓம் என்பது.

476. ஸ்வாத்யாயோத்யேதவ்ய: ॥

ஸ்வாத்யாய: - வேதங்கள், அத்யேதவ்ய: - அத்யயநம் பண்ணத்தக்கது.

477. மத்பக்தாந் ஸ்ரோத்ரியோ நிந்தந் ஸத்யஸ் சண்டாளதாம் வ்ரஜேத் ।

ஸ்ரோத்ரிய: - வேதாத்யயநம் பண்ணின விப்ரன், மத் - என், பக்தாந் - பக்தர்களை, நிந்தந் - நிந்தித்தானேயானால், ஸத்ய: - அப்பொழுதே, சண்டாளதாம் - சண்டாளத் தன்மையை, வ்ரஜேத் - அடைகிறான்.

478. பழுதிலா வொழுகலாற்றுப் பலசதுப் பேதிமார்கள்
இழிகுலத் தவர்களேனு மெம்மடியார் களாகில்
தொழுமினீர் கொடுமின் கொண்மினென்று நின்னேடுமொக்க
வழிபட வருளினாய்போல் மதிள் திருவரங்கத்தானே.

---

(474) (475)
(476) (477) (478) திருமாலை. 42.

மதிள் - திருமதிள்களாலே சூழ்ந்த, திரு அரங்கத்தானே - கோயிலிலே கண்வளர்ந்தருளுமவனே, ஒழுகல் - ப்ரஹ்மாதுடங்கித் தங்களளவும் நீண்டு வருகிற, ஆறு - வம்ஶபரவாஹத்தில், பழுது இலா - குற்றமன்றிக்கே யிருக்குமவர்களாய், பலசதுப் பேதிமார்கள் - நான்கு வேதங்களை அத்யயநம் பண்ணிப் போருமவர்களே! எம் அடியார்கள் ஆகில்-நம்மடியாரென்று அபிமாநிக்கலாம்படி யிருக்குமவர்கள், இழிகுலத்தவர்களேலும் - நிஹீந குலத்தில் பிறந்தவர்களேயாகிலும், நீர் - நீங்கள், தொழுமின் - (அவர்களைத்) தொழுங்கோள், கொடுமின் - (உங்கள் பக்கலுள்ள விசேஷார்த்தங்களை அவர்களுக்கு) உபதேசியுங்கோள், கொள்மின் - (அவர்களிடத்தில் விசேஷார்த்தங்களுண்டாகில்) கேட்டு க்ருதார்த்தராகுங்கோள், என்று - என்று இப்படி அருளிச் செய்தும், நின்னோடும் ஒக்க - (உனக்குமேல் பூஜ்யரில்லாமையாலே) உனக்கு ஸமாநமாகவாகிலும், வழிபட - அவர்களை ஆராதித்து நல்வழி போம்படியாகவும், அருளினாய் - க்ருபை செய்தருளினாயன்றோ வென்கிறார்.

479. பக்திரஷ்டவிதாஹ்யேஷா யஸ்மிந் ம்லேச்சேபி வர்த்ததே ।
தஸ்மை தேயம் ததோ க்ராஹ்யம் ஸச பூஜ்யோ யதாஹ்யஹம் ॥

ஏஷ: - இந்த, அஷ்டவிதா - எட்டு விதமான, பக்தி: - பக்தியானது, யஸ்மிந் - எந்த, ம்லேச்சேபி வர்த்ததே - மிலேச்சரிடத்தில் இருந்தபோதிலும், ஸ: - அவன் பொருட்டு, தேயம் - சகலார்த்தங்களையும் உபதேசிக்கலாம், தத: க்ராஹ்யம் - (அப்படியே) அவரிடத்திலிருந்து சகலார்த்தங்களையும் க்ரஹிக்கலாம், ஸச - அப்படிப்பட்டவர், அஹம் - நான், யதாஹி-எப்படி பூஜிக்கத் தகுந்தவனோ, (அப்படியே), பூஜ்ய: - பூஜிக்கத் தகுந்தவர்.

480. குருரேவ பரம்ப்ரஹ்ம குருரேவ பரந்தநம் ।
குருரேவ பர:காம: குருரேவ பராயணம் ।
குருரேவ பராவித்யா குருரேவ பராகதி: ।
யஸ்மாத் ததுபதேஷ்டாஸௌ தஸ்மாத் குருதரோகுரு: ॥

குருரேவ - ஆசார்யனே, பரப்ரஹ்ம - பரமாத்மா, குருரேவ - ஆசார்யனே, பரந்தநம் - சிறந்த பொருள், குருரேவ - ஆசார்யனே, பர: காம:-சிறந்த காமம், குருரேவ - ஆசார்யனே, பராயணம் - புகலிடம், குருரேவ - ஆசார்யனே, பராவித்யா - ப்ரஹ்மவித்யை, குருரேவ - ஆசார்யனே, பராகதி: - சிறந்தவழி, அஸௌ - இந்த ஆசார்யன், யஸ்மாத்-யாதொரு காரணத்தாலே, தத் - அந்த திருமந்திரத்தை, உபதேஷ்டா - உபதேசித்தானோ, தஸ்மாத் - அந்த காரணத்தாலே, குரு: - அந்த ஆசார்யனே, குருதர: - ஆசார்யர்களெல்லோரிலும் சிறந்தவன்.

481. மத்பக்தம் ஶ்வபசம் வாபி ஸாமாந்யா ஹ்யவமந்யந்தி யே நரா: ।
நரகேஷ்வவதிஷ்டந்தி வர்ஷகோடீர் நராதமா: ॥

---

(479) (480) (381)

சண்டாளமபி மத்பக்தம் நாவமந்யேத புத்திமாந் ।
அவமாநாத் பதத்யேவ ரௌரவே நரகே ஸ: ॥

யே - எந்த, நரா: - மனிதர்கள், மத்பக்தம் - என்னடியாரை, சூத்ர ஸாமாந்யாத் - சூத்திரத் தன்மையினால், அவமந்யந்தி-அவமானிக்கிறார்களோ - தே நராதமா: - அந்த கீழ்ப்பட்ட மனிதர்கள், வர்ஷகோடி: - அநேக கோடி வருஷங்கள், நரகேஷு - நரகங்களிலே, அவதிஷ்டந்தி - வாசஞ்செய்கிறார்கள். புத்திமாந் - ஜ்ஞாநமுள்ளவன், சண்டாளமபி - சண்டாளனேயாகிலும், மத் பக்தம் - என் பக்தனை, ந அவமந்யேத - அவமானிக்கக்கூடாது, அவமாநாத்-(அப்படி) அவமதி செய்தால், ஸ: - அவன், ரௌரவே - ரௌரவமென்று பேருடைய, நரகே - நரகத்தில், பதத்யேவ - விழுந்தே விடுவான்.

482. ந ஶூத்ரா பகவத்பக்தா விப்ரா பாகவதா: ஸ்ம்ருதா: ।
ஸர்வ வர்ணேஷு தே ஶூத்ரா யே ஹ்யபக்தா ஜநார்தநே ॥

பகவத் பக்தா: - பகவத்பக்தியுள்ளவர்கள், ந சூத்ரா: - சூத்திரர்களல்ல, (கிம்து - மற்று யாரென்னில்,) ஸர்வ வர்ணேஷு - எல்லா ஜாதிகளிலும், பாகவதா: - பக்தர்களாகவும், விப்ரா: - ப்ராஹ்மணர்களாகவும், ஸ்ம்ருதா: - அறியத்தகுந்தவர்கள், யே - யவர்கள், ஜநார்த்தனே - கண்ணனிடத்தில், அபக்தா: - பக்தியில்லாதவர்களோ, தே - அவர்கள், சூத்ரா: - சூத்திரர்கள்.

483. மத்பக்தஜன வாத்ஸல்யம் பூஜாயாஞ் சாநுமோதநம் । ஸ்வயமப்யர்சநஞ்சைவ மதர்தே டம்பவர்ஜநம் ॥ மத்கதாஶ்ரவணே பக்தி: ஸ்வர நேத்ராங்க விக்ரியா । மமாநுஸ்மரணம் நித்யம் யஶ்ச மாம் நோபஜீவதி ॥ பக்திரஷ்ட வியாஹ்யேஷா யஸ்மிந் ம்லேச்சேபி வர்த்ததே । ஸவிப்ரேந்த்ர: முனி: ஶ்ரீமாந் ஸ யதிஸ் ஸச பண்டித: । நமே ப்ரிய: சதுர்வேதீ மத்பக்த: ஶ்வபசோபி ய: । தஸ்மை தேயம் ததோ க்ராஹ்யம் ஸசபூஜ்யோ யதா ஹ்யயம் ॥ ஸமே பூஜ்ய: ஸதாசாரௌ மத்பக்த: ஶ்வபசோபி ய: । தஸ்மை தேயம் ததோ க்ராஹ்யம் ஸசபூஜ்யோ யதா ஹ்யயம் ॥

மத்பக்த ஜனவாத்ஸல்யம் - என்னடியார்களிடத்தில் வாத்சல்யமும், பூஜாயாஞ்சாநுமோதநம் - என்னைப் பூஜிப்பதில் சந்தோஷமும், ஸ்வயமப்யர்ச்சநஞ்சைவ - தானே திருவாராதனம் செய்கையும், மதர்த்தே - என் கைங்கர்ய விஷயங்களில், டம்பவர்ஜநம் - டம்பமில்லாமையும், மத்கதா - என் திவ்ய சரிதங்களை, ஸ்ரவணே - கேட்பதில், பக்தி: - பக்தியும், ஸ்வர என் குணநுபவத்தால் வந்த கத்கத ஸ்வரமும், நேத்ர - ஆநந்த பாஷ்ப கண்களோடனும் கூடின, அங்க விக்ரியா - புளகாங்கிதமான சரீரத்துடனும், நித்யம் - எப்பொழுதும், மம - என்னுடைய, அநுஸ்மரணம்-தியானம் செய்வதும், யஶ்ச-

எவ்வித காரணத்தாலும், மாம்ருதேபஜீவதி - என்னை விட்டு ஜீவியாத தன்மையுடையவனுகையுமாகிற, அஷ்டவித - எட்டு விதமான, ஏஷா-இந்த, பக்திः - பக்தியானது, யஸ்மிந் - எந்த, ம்லேச்சேபி வர்த்ததே - மிலேச்சனிடத்திலிருந்ததேயானாலும், ஸः - அவன், விப்ரேந்த்ரः - ப்ராஹ்மணேத்தமன், முநிः - ருஷிஸ்ரேஷ்டன், ஸ்ரீமாந் - சம்பத்தை யுடையவன், ஸः - அவன், யதிः - சந்யாசி, ஸச - அவனே, பண்டிதः - வித்வாம்சன், சதுர்வேதீ - நான்கு வேதமறிந்தவனுய், பக்தி வர்ஜிதः - பக்தியில்லாமல், பூஜபந் - என்னை ஆராதிக்கிறவன், மே - எனக்கு. நபூஜ்யः - பூஜிக்கத்தகுந்தவனல்லன், யः - எவன், ஸ்வபசः அபி - நாய் மாம்சம் தின்பவனுபிருந்தாலும், மத் - என்னிடத்தில், பக்தः - பக்தியுடையவனுயிருந்தால், ஸः அஸௌ - அந்த ஸ்வபசனே, ஸதா-எப்பொழுதும், மே - எனக்கு, பூஜ்யः - பூஜிக்கத்தகுந்தவன், தஸ்மை - அவன் பொருட்டு, தேயம் - ஜ்ஞாநப்ரதானம் பண்ணவேணும், ததோக்ராஹ்யம் - அவனிடத்திலிருந்து ஜ்ஞானம் பெற்றுக்கொள்ளவேணும், ஸச - அவனும், அஹம் யதா - நான் எப்படி பூஜிக்கத் தக்கவனே, (அப்படியே), பூஜ்யः ஹி - பூஜிக்கத் தகுந்தவனேயாவன்.

484. ஶூத்ரம் வா ஹரவத்ஹக்தம் நிஷாதம் ஶ்வபசம் ததா ।
வீக்ஷதே ஜாதி ஸாமாந்யாத் ஸ யாதி நரகம் நரः ॥

யः - எவன், பகவத் பக்தம் - பகவத் பக்தனே, சூத்ரம் வா - சூத்ரனை போதிலும், ஸ்வபசம் - நாய்மாம்சம் புஜிப்பவனை போதிலும், ததா - அப்படியே, நிஷாதம் - வேடனு யிருந்தபோதிலும், ஜாதி சாமாந்யாத் - தாழ்ந்த ஜாதியாக, ஈக்ஷதே - எவன் பார்க்கிறுனே, ஸः - அந்த, நரः - மனிதன், நரகம் - நரகத்தை, யாதி - அடைகிறுன்.

485. விப்ராத் த்விஷட்குணயுதா தரவிந்தநாஹ பாதாரவிந்த விமுகாத் ஶ்வபசம் வரிஷ்டம் । மந்யே ததர்ப்பித மனேவசநேஹிதார்யப்ராணः புநாதி ஸகலம் நது ஹூரிமாநः ॥

த்விஷட்குணயுதாத் - பன்னிரண்டு குணங்களோடு கூடினவனுயிருந்தாலும், அரவிந்தநாப - தாமரைமலரையொத்த நாபியையுடையவனுடைய, பாதாரவிந்த - திருவடித்தாமரைகளில், விமுகாத் - பக்தியில்லாதவனை, விப்ராத் - ப்ராஹ்மணனைக் காட்டிலும், ஸ்வபசம் - நாய் மாம்சம் தின்பவனே, வரிஷ்டம் - மேலானவனுக, மந்யே - எண்ணுகிறேன், தத் - அந்த ஸர்வேஸ்வரனிடத்தில், அர்ப்பித - சமர்ப்பித்த, மநः - மனதும், வசந - வாக்கும், ஈஹித - காயகமும், அர்த்த - திரவ்யமும், ப்ராணः - ப்ராணனும், (கூடிய) ஸः - அந்த ஸ்வபசன், ஸகலம் - எல்லாவற்றையும், புநாதி - பரிசுத்தமாக்குகிருன், பூரிமாநः - மிக்க அஹங்காரமுடையவன், நபுநாதி - பாவநமாக்க மாட்டான்.

(484)　　　(485) பாகவதம்.

486. [1] வைஷ்ணவாநாம் விசேஷோஸ்தி விஷ்ணோராயதநம் மஹத்।
ஜங்கம ஶ்ரீ விமாநாநி ஹ்ருதயாநி மநீஷிணாம் ॥
[2] ய: பஶ்யதி ஸதாசாரம் வைஷ்ணவம் வீதகல்மஷம் ।
யஸ்மிங்கஸ்மிந் குலேஜாதம் ப்ரணமேத தண்டவத் புவி ॥

1. வைஷ்ணவாநாம் - வைஷ்ணவர்களுக்கு; விசேஷ: - ஓரதிசயம், அஸ்தி - உண்டு, (அதாவது) விஷ்ணோ: - விஷ்ணுவுக்கு, மஹத் - ஶ்ரேஷ்டமான, ஆயதநம் - ஸ்தானம், மநீஷிணாம் - ஜ்ஞாநிகளுடைய, ஹ்ருதயாநி - சித்தமாகவும், ஜங்கமஶ்ரீ விமாநாநி - நடக்கும்படியான விமாநங்களாகவுமிருக்கின்றன. 2. ஸதாசாரம் - நல்ல அநுஷ்டானமுடையவனாகவும், வீதகல்மஷம் - தோஷமற்றவனாகவும், யஸ்மிந் கஸ்மிந்குலே - எதாகிலுமொரு நீசகுலத்தில், ஜாதம் - பிறந்தவனாயு மிருக்கிற, வைஷ்ணவம் - வைஷ்ணவனை, ய: - எவன், பஶ்யதி - பார்க்கிறானோ, (ஸ: - அவன்,) புவி - பூமியின் மேல், தண்டவத் - தடிபோல் விழுந்து, ப்ரணமேத் - ஸேவிக்க வேணும்.

487. 488. பயிலுஞ் சுடரொளி மூர்த்தியைப் பங்கயக்கண்ணனைப்
பயிலவினிய நம்பாற்கடற் சேர்ந்த பரமனைப்
பயிலுந் திருவுடையார் யவரேலுமவர் கண்டீர்
பயிலும் பிறப்பிடைதோ றெம்மையாளும் பரமரே.

பயிலும் - செறிந்த, சுடர் - அழகு முதலான காந்தியை யுடைத்தான, ஒளி மூர்த்தியை - ஒளி யுருவனை, பங்கயக் கண்ணனை - தாமரைக்கண்ணனை பயில - இவ்வடிவழகிலே ஈடுபட, இனிய - இனிதான, நம் - நம் பொருட்டு, பால் கடல் - திருப்பாற் கடலிலே, சேர்ந்த - கண்வளர்ந்தருளின, பரமனை - மேலானவனை, பயிலும் - இடையறாது அநுபவிக்கையாகிற, திரு - சம்பத்தை, உடையார் - உடையவர்கள், யவரேலும் - குலம் முதலியவற்றால் எவ்வளவு தாழ்ந்தவரேயாயினும், அவர் - அவர்களே, பயிலும் பிறப்பிடைதோறு - மேன்மேலும் அடர்ந்து வருகிற பிறவிகள்தோறும், எம்மை ஆளும் - எம்மை அடிமை கொள்ளும், பரமர் கண்டீர் - பரம சேஷிகள்கிடீர்.

489. நம்பனை ஞாலம்படைத்தவனைத் திருமார்பனை
உம்பருலகினில் யார்க்கு முணர்வரியான்றன்னை
கும்பிநரகர்க ளேத்துவரேலு மவர்கண்டீர்
எம்பல்பிறப்பிடைதோ றெந்தொழுகுலந்தாங்களே.

நம்பனை - தஞ்சமானவனை, ஞாலம் படைத்தவனை - உலகத்தைச் சிருஷ்டி பண்ணுமவனை, திருமார்பனை - பெரிய பிராட்டியைத் திருமார்பில் உடையவனை, உம்பர் உலகினில் - மேலுலகங்களிலுள்ள, யார்க்கும் - எப்படிப்பட்ட ஜ்ஞானவான்களுக்கும், உணர்வு அரியான் தன்னை - உணர்தற்கு அருமையானவனை, கும்பி நரகர்களும் - கும்பீபாகமென்னும் நரகத்தை அநுபவிப்பவர்

(486) [illegible] (487—488) திருவா. 3-7-1. (489) திருவா. 3-7-8.

களாயினும், எத்துவரேல் - துதிப்பார்களானால், அவர்தாங்கள் கண்டீர் - அவர்கள் கிடீர், எம் - எம்முடைய, பல் பிறப்பிடைதோறு - பல பிறவிகள் தோறும், எம் - எங்களுடைய, தொழு - வணங்குதற்குரிய, குலம் - உயர் குலத்தர்.

490. குலந்தாங்கு சாதிக ணாலிலுங் கீழிழிந்தெத்தனை
நலந்தா னிலாத சண்டாள சண்டாளர்களாகிலும்
வலந்தாங்கு சக்கரத்தண்ணன் மணிவண்ணற் காளென்றுள்
கலந்தா ரடியார் தம்மடியா ரெம்மடிகளே.

குலம் - (கிரமமான விவாகத்தாலும் அநுலோம ப்ரதிலோம விவாகத்தாலுமுள்ள) குலங்களை, தாங்கு - தரிப்பதான, சாதிகள் நாலிலும் - அந்தணர் முதலிய நான்கு வர்ணங்களிலும், கீழ் இழிந்து - கீழே போய், எத்தனை நலந் தான் இலாத - சிறிதும் நன்மையில்லாத, சண்டாள சண்டாளர்கள் ஆகிலும் - சண்டாளருக்கு சண்டாளன் போன்றவனாயினும், வலம் தாங்கு - வலப்பக்கத்தில் ஏந்தப்பட்ட, சக்கரத்து அண்ணல் - திருவாழியையுடைய பெரியோனாகிய, மணிவண்ணற்கு - நீலமணிபோலும் நிறமுடையவனுக்கு, ஆள் என்று - நாம் அடிமைகள் என்று, உள் கலந்தார் - உள்ளே கலந்தவர்களுக்கு, அடியார் தம் அடியார் - அடியவர்க்கு அடியவர், எம் - எங்களுக்கு அடிகள்-சுவாமிகள்.

491. நெடுமாற்கடிமை செய்வேன்போ லவனைக்கருத வஞ்சித்துத்
தடுமாற்றற்ற தீக்கதிகண் முற்றுந்தவிர்ந்த சதிர்நினைந்தால்
கொடுமாவினையே னவனடியா ரடியே கூடுமிதுவல்லால்
விடுமா றென்பதென்னந்தோ வியன்மூவுலகு பெறினுமே.

நெடுமாற்கு - சர்வேஸ்வரனுக்கு, அடிமை செய்வேன்போல் - அடிமை செய்பவன்போல, அவனைக்கருத-அவனை நினைத்தவளவிலே, தடுமாற்றற்ற - தடுமாற்றமில்லாதபடி, (என் பக்கலிலே நிற்கிற), தீக்கதிகள் - தீ நெறிகள், முற்றும் - எல்லாம், வஞ்சித்து - வஞ்சனை செய்து, தவிர்ந்த - நீங்கின, (இனி), சதிர் நினைந்தால் - உறவது பார்த்தால், அவன் - ஆஸ்ரித வாத்ஸல்யனான அவனுக்கு, அடியார் - அடியாரான பாகவதருடைய, அடியே - திருவடிகளையே, கூடும் இது அல்லால் - அடைவதாகிய இதுவன்றி, வியன் - விஸ்தீர்ணமான, மூவுலகு பெறினும் - மூன்றுலகங்களையும் பெற்றாலும், கொடு - கொடிய, மாவினையேன் - பெரும்பாவத்தை யுடையேனான நான், (அந்த ததீய சேஷத்வத்தை), விடும் ஆறு என்பது - விடும் வழியென்று சொல்லப்படுவது, என் - யாது, அந்தோ - ஐயோ.

492. வியன்மூவுலகு பெறினும்போய்த் தானே தானேயானாலும்
புயன்மேகம்போற் திருமேனியம்மான் புனைபூங் கழலடிக்கீழ்ச்

(490) திருவா. 3-7-9. (491) திருவா. 8-10-1.
(492) திருவா. 8-10-2.

சயமேயடிமை தலைநின்றார் திருத்தாள் வணங்கியிம்மையே
பயனேயின்பம் யான்பெற்றது றுமோ பாவியேனுக்கே.

வியன் - பெரிய, மூவுலகு - மூன்று லோகங்களாகிற சம்பத்தை, பெறினும் - பெற்றாலும், போய் - இதில் பற்றற்றுப் போய், (சகல கர்மக்ஷயம் பிறந்து), தானே - தானேயாய், தானே ஆனாலும் - கேவலம் தானே அநுபவ்யனானாலும், புயல் - மழை பெய்யத் தொடங்குகின்ற, மேகம் போல் - மேகம் போலே ஆஸ்ரித உபகார சீலமான, திருமேனி - திருமேனியை யுடையனான, அம்மான் - சர்வேசுவரனுடைய, புனை - அலங்கரிக்கப்பட்ட, பூ - பூவையும், கழல் - வீரக்கழலையுமுடைய, அடிக்கீழ் - திருவடிகளின் கீழே, சயமே - ஸ்வயம் ப்ரயோஜநமாயே யிருக்கிற, அடிமை - கைங்கர்யத்தின் தலை நின்றார்-மேலெல்லையிலே நின்றவர்களுடைய, திருதாள் - விலக்ஷணமான திருவடிகளை, வணங்கி - தொழுது, இம்மையே - இஹலோகத்திலே, பயனே-ப்ரயோஜந ரூபமாகவே, யான் பெற்றது - நான் பெற்றதான, இன்பம் - ஆநந்தத்துக்கு, பாவியேனுக்கு - பாவத்தைப் பண்ணின எனக்கு, உறுமோ -(அந்த ஐசுவரிய கைவல்யங்கள்) சேருமோ.

493. உறுமோ பாவியேனுக் கிவ்வுலகமூன்று முடனிறையச்
சிறுமாமேனிநிமிர்த்த வென்செந்தாமரைக்கட் டிருக்குறளன்
நறுமாவிரை நாண்மலரடிக்கீழ்ப் புகுதலன்றியவனடியார்
சிறுமாமனிசரா யென்னையாண்டா ரிங்கேதிரியவே.

இ உலகம் மூன்றும் - இந்த வுலகமூன்றும், உடன் நிறைய - ஒருமிக்க நிறைய, சிறு - சிறிய, மா - அழகான, மேனி - திருமேனியை, நிமிர்த்த - வளரும்படி பண்ணினவனாய், எம் - எமக்கு, செம் தாமரை - செந்தாமரை-மலர்போலேயிருக்கிற, கண் - திருக்கண்களை யுடையனான, திருக்குறளன், ஸ்ரீவாமநனுடைய, நறு - பரிமளத்தையுடைத்தாய், மா - சிலாக்யமான, விரை - தேனையுடைத்தான, நாள் மலர் - புதிய மலர்போலே யிருக்கிற, அடிக்கீழ் - திருவடிகளின் கீழே அடிமை செய்து, புகுதல் - அடைகையாவது அவன் - அந்த வாமநனுக்கு, அடியார் - சேஷபூதராய், சிறுமா மனிசர் ஆய் - சிறுமை தோற்றச் செய்தே சூரிகளுக்கும் அவ்வருகான ப்ரபாவத்தையுடைய மஹாபுருஷராய், (அந்த நீர்மையாலும் மேன்மையாலும்), என்னை ஆண்டார்-என்னை யடிமை கொண்டவர்கள், இங்கே திரிய - இந்த லோகத்திலே வர்த்தியா நிற்க, அன்றி - அதன்றியே, பாவியேனுக்கு - பாபத்தை யுடையேனான எனக்கு, உறுமோ - கிடைக்குமோ.

494. நாளும்வாய்க்க நங்கட்கு நளிர்நீர்க்கடலைப் படைத்துத்தன்
தாளுந்தோளு முடிகளுஞ் சமனிலாத பலபரப்பி
நீளும்படர்பூங் கற்பகக்காவு நிறைபன் னாயிற்றின்
கோளுமுடைய மணிமலைபோற் கிடந்தான் றமர்கள்கூட்டமே.

(493) திருவா. 8.10.3. (494) திருவா. 8 10 8

நளிர் - குளிர்ச்சியையுடைய, நீர் - நீரையுடைத்தான, கடலை - ஏகார்ணவத்தை, படைத்து - சிருஷ்டித்து, தன் - தனக்கு, சமன் இலாத - சமானமில்லாத, தாளும் - திருவடிகளையும், தோளும் - திருத்தோள்களையும், முடிகளும்-திருமுடிகளையும், பலபரப்பி - அநேகமாகப் பரப்பி, நீளும்-நீளாநிற்கிற, படர்பூ - பரந்த அழகையுடைய, கற்பகக்காவும் - கற்பகச் சோலையையும், நிறை - ஒளி நிறைந்த, பல் - பலவாகிய, நாயிற்றின் கோளும்-சூரியனுடைய ஒளியையும், உடைய - உடைத்தான, மணிமலைபோல்-மாணிக்க மலைபோலே, கிடந்தான் - கண்வளர்ந்தருளினவனுடைய, தமர்கள் - அடியாரோடுண்டான, கூட்டம் - சேர்த்தியானது, நங்கட்கு - நமக்கு, நாளும் - எந்நாளும், வாய்க்க - உண்டாகவேணும்.

495. தமர்கள்கூட்ட வல்வினையை நாசஞ்செய்யுஞ் சதுர்மூர்த்தி
அமர்கொளாழி சங்குவாள் விற்றண்டாதி பல்படையன்
குமரன்கோல வைங்கணை வேடாதை கோதிலடியார்தம்
தமர்கடமர்க டமர்களாஞ் சதிரேவாய்க்க தமியேற்கே.

தமர்கள் - ஆசிரிதருடைய, கூட்டம் - சங்கத்துக்கு வருகிற, வல்வினையை - பிரபலமான பாவங்களை, நாசம் செய்யும் - அழிக்கின்ற, சதுர்-சாமர்த்தியத்தையுடைய, மூர்த்தி - சுவாமி, அமர்கொள் - போர்த்தொழிலைக் கொண்ட, ஆழி - திருவாழி, சங்கு - திருச்சங்கம், வாள் - கட்கம், வில் - ஸ்ரீசார்ங்கம், தண்டு - கதை, ஆதி - முதலான, பல்படையன்-பல ஆயுதங்களையுடையனாய், குமரன் - இளமையையுடையனான, கோலம் - அழகிற் சிறந்த, ஐங்கணை வேள் - பஞ்ச பாணங்களையுடைய மன்மதனுக்கு, தாதை - தந்தையானவனுடைய, கோதுயில் - குற்றமற்ற, அடியார்தம் - அடியார்களுடைய, தமர்கள் தமர்கள் தமர்கள் ஆம்-அடியார்க் கடியார்க் கடியார்களாகும்படியான, சதிரே-சீர்மையே, தமியேற்கு-இந்தச் சம்சாரத்தில் துணையில்லாத எமக்கு, வாய்க்க - வாய்க்க வேணும்.

496. வாய்க்கதமியேற் கூழிதோறூழியூழி மாகாயாம் [மான்
பூக்கொண்மேனி நான்குதோட் பொன்னாழிக்கை யென்னம்
நீக்கமில்லா வடியார்தம் மடியாரடி யாரடியாரெம்
கோக்களவர்க்கே குடிகளாய்ச் செல்லும் நல்லகோட்பாடே.

மா - அழகான, காயாம் பூகொள் - காயாம்பூவின் நிறத்தைக் கொண்ட, மேனி - திருமேனியையும், நான்கு தோள் - நான்கு திருத்தோள்களையும், பொன் ஆழி - அழகிய திருவாழியையும், கை - திருக்கையையுமுடைய, என் அம்மான் - என் சுவாமியானவனை, நீக்கம் இல்லா - பிரிவில்லா தநுபவிக்கிற, அடியார் தம் - அடியார்களுடைய, அடியார் அடியார் அடியார்-அடியார்க் கடியார்க் கடியார், எம் கோக்கள் - எமக்கு சேஷிகள், அவர்க்கே - அவர்

(495) திருவா. 8-10-9. (496) திருவா. 8-10-10.

களுக்கே, குடிகள் ஆய் - அடிமைக் குடிகளாய், செல்லும் - நடக்கும்படியான, நல்ல கோட்பாடு - சிலாக்யமான கொள்கை, ஊழிதோறு ஊழி - மஹா கல்பந்தோறு முண்டான, ஊழி - அவாந்தர கல்பங்களிலும், தமியேற்கு - (ததீய பாரதந்த்ரியத்தில்) ஒப்பற்றிருக்கிற எமக்கு, வாய்க்க - உண்டாகவேணும்.

497. நெடுமாற் கடிமை ... ... 491-வது இலக்கம் காண்க.

498. கண்சோர வெங்குருதி வந்திழிய வெந்தழல்போல் கூந்தலாளை
மண்சேர முலையுண்ட மாமதலாய் வானவர்தம்கோவேயென்று
விண்சேரு மிளந்திங்க ளகடுரிஞ்சு மணிமாடமல்கு செல்வத்
தண்சேறை யெம்பெருமான் தாள்தொழுவார் காண்மினென்
[தலைமேலாரே.

வெம் - க்ரூரமான பார்வையையுடைய, கண் - கண்ணானது, சோர-சுழலமிட்டுத் தளரும்படியாகவும், வெம் - உஷ்ணமான, குருதி - ரக்தமானது, வந்து - வெள்ளமிட்டுக்கொண்டுவந்து, இழிய - சரீரத்தில்நின்றும் தரையில் குதிக்கும்படியாகவும், வெம் - வெப்பத்தையுடைத்தான, தழல் போல்-நெருப்புப்போலே சிவந்திருக்கிற, கூந்தலாளை - மயிரையுடைய பூதனையை, மண் சேர் - (ப்ரேதமாய்) பூமியிலே விழும்படி, முலை உண்ட - ஸ்தநபாநம் பண்ணின, மா - அத்யந்தம், மதலாய் - இளம்பருவத்தை யுடையனானவனே, வானவர்தம் - நித்யஸூரிகளுக்கு, கோவே - ஸ்வாமியே, என்று - என்று ஸ்தோத்ரம் பண்ணி, விண்சேரும் - ஆகாசத்தை அடைந்திருக்கிற, இளந்திங்கள் - பாலசந்த்ரனுடைய, அகடு - கீழ்வயிற்றை, உரிஞ்சு - பிளவாநின்ற மணிமாடம் - ரத்நமயமான க்ருஹங்களாலே, மல்கும் - ஸம்ருத்தமான, செல்வம் - ஸம்பத்தை யுடையதாய், தண் - குளிர்ந்து ஶ்ரமஹரமான, சேறை - திருச்சேறையி லெழுந்தருளியிருக்கிற, எம்பெருமான் - ஸ்வாமியினுடைய, தாள் - திருவடிகளை, தொழுவார் - ஆஶ்ரயிக்குமவர்கள், என் தலைமேலார் காண்மின் - என் சிரஸ்ஸில் திருவடிகளை வைத்து உலாவுமவர் காணுங்கோள்.

499. வந்திக்கும் மற்றவர்க்கும் மாசுடம்பில்
வல்லமணர் தமக்குமல்லேன்
முந்திச் சென்றரியுருவா யிரணியனை
முரணழித்த முதல்வற்கல்லால்
சந்தப்பூ மலர்ச்சோலைத் தண்சேறை
யெம்பெருமான் தாளைநாளும்
சிந்திப்பார்க் கென்னுள்ளம் தேனூறி
யெப்பொழுதும் தித்திக்குமே.

(498) பெரிய. தி. 7-4-1. (499) பெரிய. திரு. 7-4-5.

அரி உருவாய் - நரஸிம்ஹமாய்க் கொண்டு, முந்தி - முன்னே, சென்று-போய், இரணியனை - ஹிரண்யாஸுரனுடைய, முரண்-பலத்தை, அழித்த - அழியச்செய்த, முதல்வற்கு அல்லால் - ஜகத்காரணபூதனுக்கொழிய, வல் - வலிந்து வாதம் பண்ணுநின்றவர்களாய், உடம்பில்-சரீரத்தில், மாசு-அழுக்கையுடையவர்களான, அமணர்தமக்கும் - ஜைநர்க்கும், வந்திக்கும் - தங்கள்தேவதைகளை வந்தநம் பண்ணுநின்ற, மற்றவர்க்கும் - ஜைநவ்யதிரிக்தரான பௌத்தர்க்கும், அல்லேன் - கூட்டனல்லேன், சந்தப்பூ - சந்தந புஷ்பங்களானவை, மலர் - விகஸியா நின்ற, சோலை - பொழில்கள் சூழ்ந்த, தண்சேறை எம்பெருமான் - குளிர்ச்சி பொருந்திய திருச்சேறை (திவ்யதேசத்தில் எழுந்தருளியுள்ள) எம்பெருமானுடைய, தாளை - திருவடிகளை, நாளும் - தினந்தோறும், சிந்திப்பார்க்கு - த்யாநம் பண்ணுமவர்கள் விஷயத்தில், என் உள்ளம் - என் மனஸ்ஸானது, தேன் ஊறி - தேனிலே நனைந்து (தேன் வெள்ளமிடா நின்று கொண்டு), எப்பொழுதும் - ஸர்வகாலமும், தித்திக்கும் - மதுரமாயிரா நின்றது.

500. கண்சோர வெங்குருதி ... ... 498-வது இலக்கம் காண்க.

501. பார்வண்ண மடமங்கை பனிநன்மாமலர்க் கிழத்தி
நீர்வண்ணன் மார்வகத்தி லிருக்கையை முன்நினைந்தவனூர்
கார்வண்ண முதுமுந்நீர் கடல்மல்லைத் தலசயனம்
ஆரெண்ணும் நெஞ்சுடையா ரவரெம்மை யாள்வாரே.

பார்வண்ணம் - பூமியைத் தனக்கு ப்ரகாரமாக வுடையளாய், மடம்-ஆத்ம குணங்களை யுடையளான, மங்கை - ஸ்ரீபூமிப்பிராட்டி, நீர்வண்ணன் - நீர்வண்ணனுடைய, இருக்கையை - (இடவருகில்) இருக்கையையும், பனி - குளிர்ந்து, நல் - அழகியதாய், மா - ஶ்லாக்யமான, மலர்க்கிழத்தி - செந்தாமரை மலரைப்பிறந்தகமாகவுடைய பெரியபிராட்டி, மார்வகத்திலிருக்கையை-வலத்திருமார்விலிருக்கையையும், முன் - முதலிலே, நினைந்து - நினைத்து, அவன் - புருஷகாரமும் மிகையான அவனுடைய, ஊர் - ஊராய், கார்வண்ணம் - கறுத்த நிறத்தையுடைத்தாய், முது - பழையதாயும், முந்நீர் - கடலினருகாயுமுள்ள, கடல்மல்லை - திருக்கடல் மல்லையில், தலசயனம் - ஸ்தலசயநத்தில் பள்ளிகொண்டிருக்கையை, எண்ணும் நெஞ்சுடையார் ஆர் - அநுஸந்திக்கும் மநஸ்ஸுடையார் எவர்களோ, அவர் - அவர்கள், எம்மை-எங்களை, ஆள்வார் - அடிமை கொள்ளத் தக்கவர்கள்.

502. ஏனத்தி னுருவாகி நிலமங்கை யெழில்கொண்டான்
வானத்தி லவர்முறையால் மகிழ்ந்தேத்தி வலங்கொள்ளக்
கானத்தின் கடல்மல்லைத் தலசயனத் துறைகின்ற
ஞானத்தி னொளியுருவை நினைவாரென் நாயகரே.

(501) பெரிய. திருமொ. 2-6-2. (502) பெரி. திருமொ. 2-6-3.

ஏனத்தினுருவாகி - வராஹ ரூபியாய், நிலமங்கை - ஸ்ரீபூமிப்பிராட்டியுடைய, எழில் - அழகு (அழியாதபடி), கொண்டான்-(அண்டபித்தியில் நின்றும்) ஒட்டு விடுவித்து - எடுத்துக்கொண்டவனாய், வானத்திலவர் - ப்ரஹ்மாதி தேவர்கள், முறையால் - தங்கள் தங்களுடைய அதிகாரானுகுணமாக, மகிழ்ந்து - ஸந்துஷ்ட சித்தராய்க்கொண்டு, ஏத்தி - ஸ்தோத்ரம் பண்ணி, வலம் கொள்ள - அநுகூலவ்ருத்திகளைப் பண்ணும்படிக்கீடாக, கானத்தின் - (மேற்புறத்திலே) காட்டையும், கடல் - (கீழ்ப்புறத்திலே) கடலையுமுடைத்தான, மல்லை - மல்லா புரியிலே, தலசயனத்து - ஸ்த்தல சயநத்திலே, உறைகின்ற - கண்வளர்ந்தருளுமவனாய், ஞானத்தின் ஒளியுருவை - ஜ்ஞான ப்ரகாசகமான விக்ரஹத்தையுடையவனை, நினைவார் - நினைப்பவர்கள், என் - எனக்கு, நாயகர் - ஸ்வாமிகளாவர்.

503. விண்டாரை வென்றாவி விலங்குண்ண மெல்லியலார்
கொண்டாடு மல்லகல மழலேற வெஞ்சமத்துக்
கண்டாரைக் கடல்மல்லைத் தலசயனத் துறைவாரைக்
கொண்டாடும் நெஞ்சுடையா ரவரெங்கள் குலதெய்வமே.

விண்டாரை - சத்ருக்களை, வென்று - நிரஸித்து, (அவர்களுடைய) ஆவி - சரீரத்தை, விலங்கு - நாய்நரி முதலிய ம்ருகங்கள், உண்ண - உண்ணும்படியாகவும், மெல் இயலார் - ம்ருதுஸ்வபாவைகளான ஸ்த்ரீகள், கொண்டு - விரும்பி, ஆடும் - அணைக்கத்தக்க, மல் - மிடுக்கையுடைய, அகலம் - (ராவணனுடைய) மார்வத்தை, அழல் - அக்நியானது, ஏற - ஏறி (புஜிக்கும்படியாகவும்), வெஞ்சமத்து - க்ரூரமான யுத்தத்திலே, கண்டாரை - பார்த்தவராய், (அந்த ஶ்ரம மாறும்படி), கடல் மல்லைத் தலசயனத் துறைவாரை-திருக்கடல்மல்லையில் ஸ்த்தல சயநத்திலே பள்ளிகொண்டருளுமவரை, கொண்டாடும் நெஞ்சுடையார் - நெஞ்சுடனே கொண்டாடுமவர்கள் யாவர் சிலர், அவர் - அவர்கள், எங்கள் குலதெய்வம் - எங்கள் குலத்துக்குத் தெய்வங்களாவர்.

504. நண்ணாத வாளவுண ரிடைப்புக்கு வானவரைப்
பெண்ணாகி யமுதூட்டும் பெருமானார் மருவினிய
தண்ணார்ந்த கடல்மல்லைத் தலசயனத் துறைவாரை
எண்ணாதே யிருப்பாரை யிறைப்பொழுது மெண்ணோமே.

நண்ணாத - தன்னைக் கிட்டாதவர்களாய், வாள் - வாளையுடையரான, அவுணரிடை - அஸுரர்கள் நடுவே, பெண்ணாகிப்புக்கு - ஸ்த்ரீவேஷங்கொண்டு புக்கு, வானவரை - தேவர்களை, அமுது ஊட்டும் - அம்ருதத்தை புஜிப்பிக்கும், பெருமானார் - பெருமையை யுடையவனாய், மருவ - பொருந்தி வர்த்திப்பதற்கு, இனிய - இனிய தேசமாய், தண் ஆர்ந்த - குளிர்த்தி மாறுத

(503) பெரிய. திருமொ. 2 6 4. (504) பெரிய. திருமொ. 2 6-1.

தாய், கடல் - கடற்கரையிலே யுள்ள, மல்லை - ஸ்ரீமல்லா புரியிலே, தலசயனத்து - பூமியாகிற திருப்பள்ளியிலே, உறைவாரை - பள்ளி கொண்டருளுமவரை, எண்ணாது - நினையாமல், இருப்பாரை - அந்த க்ஷேத்திரத்திலே நித்ய வாஸம் பண்ணுமவர்களை, இறைப்பொழுதும் - க்ஷணகாலமும், எண்ணோம் - நினையோம்.

505. தேட்டருந் திறற்றேனினைத் தென்னரங்கனைத் திருமாதுவாழ்
வாட்டமில் வனமாலைமார்பனை வாழ்த்திமால்கொள் சிந்தையராய்
ஆட்டமேவி யலர்ந்தழைத் தயர்வெய்தும் மெய்யடியார்கள்தம்
ஈட்டங் கண்டிடக் கூடுமே லதுகாணுங் கண்பயனாவதே.

தேட்டு - ஸ்வயத்நத்தால் தேடுகைக்கு, அரும் - அரிதாய், திறல்-தன்னை அநுபவிக்கைக்குத் தக்க பலத்தைக் கொடுக்கும், தேனினை - தேன் போலே பரமபோக்யனாய், தென் - ஸ்ப்ருஹணீயமான, அரங்கனை - திருவரங்கத்திலே நித்ய வாஸம் பண்ணுமவனாய், திருமாது - பெரியபிராட்டியார், வாழ் - நித்ய வாஸம் பண்ணுமதாய், வாட்டம் இல் - ஒருகாலும் வாடாமல், வனம் - அழகு பெற்றிருக்கிற, மாலை - திருமாலை சாத்தியருளின, மார்பனை - திருமார்புடையவனை, வாழ்த்தி - அவனும் அவளுமான சேர்த்திக்கு மங்களாசாஸநம் பண்ணி, மால் கொள் சிந்தையராய் - பித்தேறின, மநஸ்ஸையுடையராய், (அத்தாலே), ஆட்டம் மேவி - ஆடுகையிலே ஒருப்பட்டு, அலர்ந்து - ஆடலின் மிகுதியால் வருந்தி, அழைத்து - வாய்ப்படைத்த ப்ரயோஜநம் பெறக்கூப்பிட்டு, அயர்வு எய்தும் - மெய்ம்மறந்து நிற்கிற, மெய் - அநந்யப்ரயோஜநரான, அடியார்கள்தம் ஈட்டம் - அடியார்கள் குழாங்களை, கண்டிடக்கூடுமேல் - காணக்கூடுமாகில், கண்பயனாவது-கண்படைத்த ப்ரயோஜநமாகிறது, அது காணும் - அதுவேயாம்.

506. தோடுலா மலர்மங்கை தோளிணை தோய்ந்ததுஞ் சுடர்வாளியால்
நீடுமாமரஞ் செற்றதும் நிரைமேய்த்ததுமிவையே நினைந்து[ல்
ஆடிப்பாடி யரங்கவோ என்றழைக்கும் தொண்டரடிப்பொடி
ஆடநாம்பெறில் கங்கைநீர் குடைந்தாடும் வேட்கையென்னாவதே.

தோடு உலாம் - இதழ் மிக்கிருந்துள்ள, மலர் - தாமரைப்பூவை வாஸஸ்தாநமாகவுடைய, மங்கை - பெரியபிராட்டியாருடைய, தோள் இணை - திருத்தோள்களோடு, தோய்ந்ததும் - அணைந்தருளினதும், சுடர் - புகரையுடைய, வாளியால் - அம்பாலே, நீடு - உயர்ந்த, மாமரம் - மராமரங்களேழையும், செற்றதும் - ஒருக்காலே துளையாம்படி எய்ததும், நிரைமேய்த்ததும் - பசு நிரையை மேய்த்ததும், (ஆகிய), இவையே நினைந்து-இந்த சீலாதிகுணங்களையே நினைத்து, ஆடி - (ப்ரீதிப்ரகர்ஷத்தாலே இருந்தவிடத்தி லிருக்க

(505) பெருமாள். திரு. 2-1. (506) பெருமாள். திரு. 2-2.

மாட்டாதே) யாடி, பாடி - (அதுக்குப் போக்குவிட்டுப்) பாடி, ஓ அரங்க என்று அழைக்கும் - ஓ அரங்கனே என்று கூப்பிடுகிற, தொண்டர் - தாஸபூதரான ஸ்ரீவைஷ்ணவர்களுடைய, அடிப்பொடி - பாதரேணுக்களிலே, நாம் - நாம், ஆடப்பெறில் - அவகாஹிக்கும்படியான பாக்யத்தைப்பெற்றால், கங்கைநீர் - கங்கா ஜலத்திலே, குடைந்து - அவகாஹித்து, ஆடும் - நீராடுதலில் உண்டாகும், வேட்கை - ஆசையானது, என் ஆவது - என்ன ப்ரயோஜநத்தை யுடையது.

507. தேட்டரும் ... ... 505-வது இலக்கம் காண்க.

508. மேம்பொருள் போகவிட்டு மெய்ம்மையை மிகவுணர்ந்து
ஆம்பரி சறிந்துகொண்டு ஐம்புல னகத்தடக்கிக்
காம்பறத் தலைசிரைத்துன் கடைத்தலை யிருந்துவாழும்
சோம்பரை யுகத்திபோலுஞ் சூழ்புன லரங்கத்தானே.

புனல் சூழ் - காவேரியால் சூழப்பட்ட, அரங்கத்தானே - கோயிலிலே கண்வளர்ந்தருளுமவனே, மேம்பொருள் - மேன்மையை விளைக்கக்கடவதான ப்ராக்ருத பதார்த்தங்களை, போகவிட்டு-ஸவாஸநமாகப்போக்கி, மெய்ம்மையை மிக உணர்ந்து - ஆத்மாவை உள்ளபடி யறிந்து, ஆம்பரிசு அறிந்துகொண்டு - சேதநனுக்கு கைங்கர்யமே புருஷார்த்த மென்பதை யறிந்து, ஐம்புலன் - பஞ்சேந்த்ரியங்களையும், அகத்து அடக்கி - விஷயாந்தரங்களில் போகாமே தம்முள்ளே அடக்கி, காம்பு அற-உபாயாந்தரங்களில் தமக்குண்டான ஸம்பந்தமற, தலைசிரைத்து-அஹங்கார கர்ப்பமான உபாயாந்தரங்களைப்போக்கி, உன் தலைக்கடை - உன் திருவாசலிலே, இருந்து - ஸுப்ரதிஷ்டிதராயிருந்து, வாழும் - வாழுமவராய், சோம்பரை-ஸ்வஹிதத்தில் சோம்பினவர்களை, உகத்திபோலும்- உகக்குமவனல்லையோ வென்கிறார்.

509. அயாதஸ் ஸாமயாசாரிகாந் தர்மாந் வ்யாக்யாஸ் யாமோ ।
தர்மஜ்ஞ ஸமய: ப்ரமாணம் வேதாஸ்ச ।

அத அத: - பின்பு, ஸாமயாசாரிகாந் - அந்தந்த ஸித்தாந்தாநுகுண ஆசாரஸித்தமான, தர்மாந் - தர்மங்களை, வ்யாக்யாம: - சொல்லப்போகிறோம், தர்மஜ்ஞ: - ஜ்ஞாநவான்களுடைய, ஸமய: - அநுஷ்டாநம், ப்ரமாணம் - ப்ரமாணமாகும், வேதாஸ்ச - அதை யநுஸரித்த வேதங்களும் ப்ரமாணமாகும்.

510. யாவந் நமருஹ்ணந்தி ஶிராம்ஸி பாணாராமேரிதா ராக்ஷஸபுங்கவாநாம் । வஜ்ரோபமா வாயு ஸமான வேகா: ப்ரதீயதாம் தாவதராய மைதிலீ ॥

வஜ்ரோபமா: - வஜ்ராயுதத்திற்கு ஒப்பான பலமுடையதும், வாயு - காற்றுக்கு, ஸமான - நிகரான, வேகா: - வேகமுடையதுமான, பாணா: -

(508) திருமாலை. 38. (509) ஆபஸ்தம்ப ஸூத்ரம்.
(510) ரா. யு. 14-4.

பாணங்கள், ராமேரிதாঃ - பெருமாளால் ஏவப்பட்டனவாய், ராக்ஷஸபுங்கவா நாம் - ராக்ஷஸ ஶ்ரேஷ்டர்களுடைய, சிராம்ஸி - தலைகளை, யாவத் - எதற்குள், ந க்ருஹ்ணந்தி - க்ரஹிக்கவில்லையோ, (அதற்குள்) மைதிலீ - ஸீதாப்பிராட்டி, தாசரதாய - பெருமாள்பொருட்டு, ப்ரதீயதாம் - கொடுக்கப்படட்டும்.

511. அந்யஸ்த்வேவம் விதம் ப்ரூயாத் வாக்ய மேதந் நிஶாசர ।
அஸ்மிந் முஹூர்த்தே நபவேத் த்வாம்து திக்குலபாம்ஸநம் ॥

நிஶாசர - ஓ ராக்ஷஸ, அந்யঃது - வேறொருவன், ஏவம் விதம் - இவ்வண்ணம், ஏதத் - இந்த, வாக்யம் - வாக்கியத்தைச், ப்ரூயாத் - சொல்வானேயானால், அஸ்மிந் முஹூர்த்தே - இந்த முஹூர்த்தத்தில், ந பவேத் - இருக்கமாட்டான், குல பாம்ஸநம் - இராக்கத குலத்தில் தள்ளுண்ட, த்வாம்து - உனக்கு, திக் - நிந்தையுண்டாகுக (என்று விபீஷணனைக்குறித்து இராவணன் சொன்னான்).

512. வசஸா ஸாந்த்வயித்வைநம் லோசநாப்யாம் பிபந்நிவ ।
ஆக்யாஹி மமதத்வேந ராக்ஷஸாநாம் பலாபலம் ॥

ஏநம் - சரணாகதனான ஸ்ரீவிபீஷணாழ்வானை, வசஸா - நல்வார்த்தை சொல்லி, ஸாந்தயித்வா - சமாதானப்படுத்தி, லோசநாப்யாம் - திருக்கண்களாலே, பிபந்நிவ - குளிரக்கடாக்ஷித்து, ராக்ஷஸாநாம் - ராக்ஷஸர்களுடைய, பலாபலம் - பலாபலங்களை, மம - எனக்கு, தத்வேந-உண்மையாய், ஆக்யாஹி - சொல்லவேணும் (என்று சக்ரவர்த்தித்திருமகன் கேட்டார்.)

512. [1] தர்மராஜஸ்து தத்ரைநம் ஸஞ்சஸ்காரயிஷுஸ் ததா ।
தக்துகாமோபவத் வித்வாநதாகாஶே வசோப்ரவீத் ॥
போபோ ராஜந் ந தக்தவ்யமேதத் விதுர ஸம்ஜ்ஞிகம் ।
களேபரமிஹைதத்தே தைஷதர்மঃ ஸநாதநঃ ॥
லோகா வைலக்ஷணா நாம பவிஷ்யத் யஸ்யபார்த்திவ ।
யதிதர்ம மவாப்தோஸௌ ந ஶோச பரதர்ஷப ॥

தர்மராஜঃ து - தர்ம புத்ரரானவர், தத்ர - அந்த விடத்தில், ஏநம் - இந்த விதுரரை, வித்வாந் - ஜ்ஞாநவான் என்று அறிந்து, ஸஞ்சஷ்காரயிஷுঃ - ஸம்ஸ்கரிக்க வேணுமென்று விரும்பினவராயும், ததா - அப்படியே, தக்துகாமঃ - (சூத்திரத்தன்மையைப் பார்த்து) தஹநம் பண்ணவேணுமென்னும் இச்சையையுடையவராயும், அபவத் - ஆனார். அதঃ - பிறகு, ஆகாஶே - ஆகாசத்தில், வசঃ - (ஆகாசவாணி), ஒருவார்த்தை, அப்ரவீத் - சொல்லிற்று, போ போ ராஜன்-ஓ ராஜாவே, விதுர ஸம்ஜ்ஞிகம் - விதுரரென்று பெயருள்ள, ஏதத் - இந்த, களேபரம் - சரீரமானது, ந தக்தவ்யம் - மந்த்ரமில்லாமல் கொளுத்தத் தகுந்ததல்ல, இஹ - இந்த விஷயத்தில், அஸ்ய - விதுரருக்கு,

(511) ரா. யு. 16-15. (512) ரா. யு. 19-7.
(512—1) பாரதம்.

ஏஷ: - (மந்த்ர பூர்வகமாக ஸம்ஸ்காரம் செய்கிற) இது, தர்ம: ஸநாதந: - அநாதியான தர்மமானது, ஹே பரதர்ஷப - ஓ பரதகுல ச்ரேஷ்டனான தர்ம ராஜனே, அஸ்ய - இந்த விதுரர், யதி தர்ம: - சந்யாச தர்மத்தை, அவாப்த - அடைந்தவர், பார்த்திவ - ஓ அரசனே, அஸ்ய - இந்த ஸம்ஸ்காரத்தினால், லோக விலக்ஷண: - லோகத்தில் விலக்ஷண தர்மத்தில், நாம - (நிஷ்டை யுடைவன் என்கிற) பெயரை, பவிஷ்யதி - அடையப்போகிறாய், ந சோச: - துக்கப்படாதே.

513. 1 கஶ்சித் த்விஜாதி ப்ரவரோ வேதாத்யாயீ தபோதந: ।
தபஸ்வீ தர்மஶீலஶ்ச கௌஶிகோநாம பாரத ॥
2 ஸாங்கோபாங்காந் வேதாநதீதே த்விஜஸத்தம: ।
ஸவ்ருக்ஷமூலே கஸ்மிம்ஶ்சித் வேதாநுச்சாரயந் ஸ்தித: ॥
3 உபரிஷ்டாச்ச வ்ருக்ஷஸ்ய வலாகா ஸ வ்யலீயத ।
தயாபுரீஷ முத்ஸ்ருஷ்டம் ப்ராஹ்மணஸ்ய ததோரஸி ॥

1. வேதாத்யாயீ - வேதத்தை அப்யஸித்தவரும், தபோதந: - தவத்தை தனமாகவுடையவரும், தபஸ்வீ - சாத்விகரும், தர்மஶீலஶ்ச - தர்மத்தையே சீலமாகவுடையவரும், த்விஜாதி ப்ரவர: - ப்ராஹ்மண சிரேஷ்டருமான, கௌசிகோ நாம - கௌசிகன் என்று பெயருடைய, கஶ்சித் - ஒருவர் (இருந்தார்).

2. த்விஜஸத்தம:-ப்ராஹ்மண சிரேஷ்டரும், ஸாங்கோபாங்க நிஷதாந்- அங்கங்களும் உபாங்கங்களும் கூடின, வேதாந் - வேதங்களை, அதீதே - அப்ய ஸித்த, ஸ: - அந்த கௌசிகர், கஸ்மிந் சித் - ஓராநொருபொழுது, வ்ருக்ஷ மூலே - மரத்தின் கீழே, வேதாந் - வேதங்களை, உச்சாரயந் - உச்சரித்துக் கொண்டு, ஸ்தித: - இருந்தார்.

3. வ்ருக்ஷஸ்ய-(அப்போது) மரத்தினுடைய, உபரிஷ்டாத்-மேலிருந்து, வலாகா: - பெண்கொக்கு, ஸவ்யலீயத - விஷ்டித்தது, தயா - அதனால், ப்ராஹ்மணஸ்ய - ப்ராஹ்மணனுடைய, உரஸி - மார்பில், புரீஷம் - மலத்தை, உத்ஸ்ருஷ்டம் - விடப்பட்டது.

514. க்ரோதஶ் ஶத்ருஶ் ஶரீரஸ்தோ மநுஷ்யாணாம் த்விஜோத்தம।
ய: க்ரோத மோஹௌ த்யஜதி தம் தேவா ப்ராஹ்மணம் விது: ॥

ஹே த்விஜஸத்தம - ஓ ப்ராஹ்மண சிரேஷ்டனே, மநுஷ்யாணாம் - மனிதர்களுக்கு, க்ரோத: - கோபமும், சத்ரு: - மோஹமாகிற சத்ருவும், சரீரஸ்தம் - சரீரத்திலேயே யிருக்கின்றன. ய: - எவன், க்ரோத மோஹௌ - கோபத்தையும் மோஹத்தையும், த்யஜதி - விடுகிறானோ, தம் - அவனை,

(513) பாரதம். (514) பாரதம், ஆர.

தேவாஃ - சுரர்களாகவும், ப்ராஹ்மணம் - ப்ராஹ்மணனாகவும், விதுஃ-சொல்லுகிறார்கள்.

515 [1] ஹவாநபிச யர்மஜ்ஞஸ் ஸ்வாய்யாய நிரதஸ் ஶுசிஃ
நது தத்வேந ஹஶவந் யர்மாந் வேத்ஸீதி மே மதிஃ ॥

ஹே பகவந் - ஓ பூஜ்யனான ப்ராஹ்மண, தர்மஜ்ஞஃ - தர்மத்தை யறிந்தவனும், ஸ்வாத்யாய நிரதஃ - வேதத்தில் ஆசக்தியுடையவனும், சுசிஃ - ஆசாரமுடையவனும், பவாந் அபி - இருந்தாலும்கூட, தர்மாந் - தர்மங்களை, தத்வேந - யதார்த்தமாக, நவேத்ஸி - தெரியாதவன், இதிஃ - இப்படியென்று, மே - என்னுடைய, மதிஃ - புத்தி.

[2] மாதா பித்ருஹ்யாம் ஶுஸ்ரூஷுஸ் ஸத்யவாதீ ஜிதேந்த்ரியஃ ।
மிதிலாயாம் வஸந் வ்யாதஸ் ஸதே தர்மாந் ப்ரவக்ஷ்யதி ॥

மாதா பித்ருப்யாம் - தாய்தகப்பன்பொருட்டு, ஶுஶ்ருஷுஃ - அடிமைசெய்யுமவனும், ஸத்யவாதீ - சத்தியத்தையுடையவனும், ஜிதேந்த்ரியஃ - இந்திரிய ஜயமுடையவனும், மிதிலாயாம் - மிதிலாபட்டணத்தில், வஸந் - வாசம்பண்ணிக் கொண்டிருக்கு மவனுமான, ஸ வ்யாதஃ - அந்த வ்யாதன், தே - உனக்கு, தர்மாந் - தர்மங்களை, ப்ரவக்ஷ்யதி - சொல்லத் தக்கவன்.

[3] தத்ர ஶச்சஸ்வ ஹத்ரந்தே யதா காமம் த்விஜோத்தம ।
வ்யாதஃ பரமயர்மாத்மா ஸதேஶேத்ஸ்யதி ஸம்ஶயாந் ॥

ஹே த்விஜோத்தம - ஓ ப்ராஹ்மண சிரேஷ்டனே, தத்ர - அவ்விடத்திற்கு, கச்ச - போம், தே - உமக்கு, மங்களம் - மங்கள முண்டாகுக, பரம தர்மாத்மா-ச்ரேஷ்டமான தர்மாத்மாவான, ஸவ்யாதஃ - அந்த வ்யாதன், தே - உனக்கு, யதாகாமம் - அபீஷ்டப்ரகாரம், ஸம்ஸயாந் - சந்தேகங்களை, சேத்ஸ்யதி - போக்கக்கடவன்.

516. பஞ்சகாநி பவித்ராணி ஶிஷ்டாசாரேஷு நித்யதா ।
ஏதந் மஹாமதே வ்யாய ப்ரப்ரவீஹி யதாதயம் ॥

ஹே மஹாமதே - ஓ மஹாபுத்திசாலியான, வ்யாத - தர்மவ்யாதனே, சிஷ்டாசாரேஷு - பெரியோர்களுடைய அநுஷ்டானங்களில், பவித்ராணி - பாவனங்களாயுள்ள, பஞ்சகாநி - ஐந்தான, நித்யதா - எப்போதுமுள்ள, ஏதத் - அந்த அர்த்தங்களை, யதாததம் - உள்ளபடியாக, ப்ரப்ரவீஹி - நன்றாகச்சொல்-

517. யஜ்ஞோ தாநம் தபோவேதாஸ் ஸத்யம்ச த்விஜ ஸத்தம ।
பஞ்சைதாநி பவித்ராணி ஶிஷ்டாசாரேஷு நித்யதா ॥

ஹே த்விஜ ஸத்தம - ஓ ப்ராஹ்மண ச்ரேஷ்டனே, யஜ்ஞஃ - யஜ்ஞமும், தாநம் - தானமும், வேதாஃ - வேதங்களும், தபஃ - தபஸ்ஸுக்களும், ஸத்யம் -

(515) (516—517) பாரதம். ஆரண்ய.

சத்தியமுமாகிய, பஞ்ச ஏதாநி - இவைகளைந்தும், நித்யதா - எப்போதும், ஶிஷ்டாசாரேஷு - சிஷ்டாசாரங்களிலே, பவித்ராணி - பவித்திரங்களாயிருக்கும்.

518. யத் யதாசரதி ஶ்ரேஷ்டஸ் தத்ததேவேதரோஜந: ।
ஸயத் ப்ரமாணம் குருதே லோகஸ் ததநு வர்த்ததே ॥

ஶ்ரேஷ்ட: - கலைகளை நன்றாய் அறிந்தவன், யத்யத் - எந்தெந்த கருமத்தை, ஆசரதி - அநுஷ்டிக்கிறானே, இதர: - மற்ற, ஜந: - ஜனங்களும், தத்ததேவ - அந்த கருமத்தையே யநுஷ்டிக்கிறார்கள், ஸ: - அந்த ஶ்ரேஷ்டன், யத் - ~~எந்த~~ தந்த, ப்ரமாணம் - ~~ப்ரமாணமாக~~ அளவு, குருதே - செய்கிறானோ, லோக: - ஜனங்களும், தத் - அதையே, அநுவர்த்ததே - அநுஸரிக்கிறார்கள்.

519. கர்மணைவ ஹி ஸம்ஸித்திமாஸ்த்திதா ஜநகாதய: ।
லோக ஸங்க்ரஹ மேவாபி ஸம்பஶ்யந் கர்த்து மர்ஹஸி ॥

ஜநகாதய: - (ஜ்ஞாநிகளான) ஜநகமஹாராஜன் முதலானவர்கள், கர்மணா ஏவஹி - கர்மாநுஷ்டானத்தினாலேயே, ஸம்ஸித்திம் - மோக்ஷ ஸித்தியை, ஆஸ்திதா: - அடைந்தார்கள், (ஆகையால்) (ஜ்ஞாநியானாலும்) லோகஸங்க்ரஹம் அபி - லோகத்திலுள்ள ஜனங்கள் (கர்ம ப்ரவர்த்தனரூபமான அநுஷ்டானத்தி லிழிந்து) அநுக்ரஹத்தை பெரும்பொருட்டாகவாகிலும், ஸம்பஶ்யந் - நன்றாய் ஆராய்ந்து பார்த்து, கர்த்தும் அர்ஹஸி - கர்மங்களை அநுஷ்டிக்கவே கடமைப்பட்டவன்.

520. யதிஹ்யஹம் ந வர்தேயம் ஜாது கர்மண்யதந்த்ரித: ।
மம வர்த்மாநுவர்த்தந்தே மநுஷ்யா: பார்த ஸர்வஶ: ॥

ஹே பார்த்த - ஓ பார்த்தனே, அஹம் - நான், ஜாது - ஒருக்கால், அதந்த்ரித: - ஆலஸ்யமில்லாதவனாய், கர்மணி - தர்மத்தில், நவர்த்தேயம் யதி - இல்லாமற் போவேனேயாகிலும், ஸர்வஶ: ^(எல்லாவிதத்திலும்) மநுஷ்யா: - எல்லா மநுஷ்யரும், மம - என்னுடைய, வர்த்ம - மார்க்கத்தை, அநுவர்த்தந்தே - அநுஸரிப்பர்கள்.

521. பீஷ்மத்ரோணா வதிக்ரம்ய மாம் சைவ மதுஸூதந ।
கிமர்த்தம் புண்டரீகாக்ஷ புக்தம் வ்ருஷள போஜநம் ॥

மதுஸூதந - மதுவென்னும் ராக்ஷஸனைக் கொன்றவனும், புண்டரீகாக்ஷ - தாமரைமலரைப்போன்ற கண்களையுடையவனுமான கண்ணா, பீஷ்மத்ரோணௌ - பீஷ்மாசார்யரையும் த்ரோணாசார்யரையும், மாம்ச - துர்யோதனனான என்னையும், அதிக்ரம்ய - உபேக்ஷித்து, வ்ருஷள போஜநம் ஸூத்திரனான விதுரனுடைய போஜநத்தை, கிமர்த்தம் - எதற்காக, புக்தம் - புஜிக்கப்பட்டது?

522. ஸம்ப்ரமைஃ துஷ்ய கோவிந்த ஏதந்ந: பரமம்தநம் ॥

---

(518) ஸ்ரீகீதை. 3-21. (519) ஸ்ரீகீதை. 3-20.
(520) ஸ்ரீகீதை. 3-23. (521—522) பாரதம். உத்.

ஹே கோவிந்த - ஓ க்ருஷ்ண, ஏதத் - தேவரீருடைய இந்த வரவானது, நஃ - எங்களுக்கு, பரமம் - உத்க்ருஷ்டமான, தநம் - ஸம்பத்தென்று, ஸம்ப்ரமைஃ - பக்தி பரவசத்தினால், துஷ்ய - சந்தோஷித்துச் சொன்னார்.

523. ஹுக்தவத்ஸு த்விஜாக்ரேஷு நிஷண்ணஃ பரமாஸநே ।
விதுராந்நாநி புபுஜே ஶுசீநி குணவந்திச ॥

த்விஜாக்ரேஷு - ப்ராஹ்மண ச்ரேஷ்டர்கள் ~~இடத்தில்~~, புக்தவத்ஸு - சாப்பிட்டு ~~பிடவேண்டியிருக்க~~, பரமாஸநே - ச்ரேஷ்டமான பீடத்தில், நிஷண்ணஃ - உட்கார்ந்திருந்தவனாய், ஶுசீநி - பாவநமாயும், குணவந்திச - போக்யமாயுமிருந்த, விதுராந்நாநி - விதுரருடைய ப்ரஸாதத்தை, புபுஜே - கண்ணன் அமுது செய்தருளினார்.

524. ஸோ஽ப்ய கச்சந் மஹாதேஜாஃ ஶபரீம் ஶத்ரு ஸூதநஃ ।
ஶபர்யா பூஜிதஸ் ஸம்யக் ராமோ தஶரதாத்மஜஃ ॥

மஹா தேஜாஃ - மஹா தேஜஸ்ஸைப் பெற்றவரும், சத்ருஸூதநஃ - பகைவரைக் கொல்லுமவருமான, ஸஃ - அந்த பெருமாள், சபரீம் - சபரியை, அபிகச்சந் - அடைந்தார், தஶரதாத்மஜஃ ராமஃ - சக்ரவர்த்தித் திருமகனான இராமபிரான், சபர்யா - சபரியினால், ஸம்யக் - நன்றாக, பூஜிதஃ - பூஜிக்கப்பட்டார்.

525. ப்ராதுர்பாவைஃ ஸுரநர ஸமோ தேவ தேவஸ், ததீயா ஜாத்யா வ்ருத்தைரபிச குணதஸ் தாத்ருஶோ, நாத்ர கர்ஹா ।
கிந்து ஸ்ரீமத் புவநபவந த்ராணதோந்யேஷு வித்யா வ்ருத்த ப்ராயோ பவதி விதவா கல்ப கல்பஃ ப்ரகர்ஷஃ ॥

தேவ - நித்யஸூரிகளுக்கு, தேவஃ - அதிபதியான ஸர்வேஶ்வரன், ப்ராதுர்பாவைஃ - அவதாரங்களால், ஸுரநர ஸமஃ - தேவ மநுஷ்ய சமானனாகிறான், ததீயாஃ - தத் சம்பந்திகளான பாகவதர்கள், ஜாத்யா-ஜாதியினாலும், வ்ருத்தைஃ- ஆசாரத்தினாலும், குணதஃ அபிச - குணங்களாலும், தாத்ருஶஃ - அப்படியே யாகுகிறார்கள். அத்ர - இதில், ந கர்ஹா - தூஷண மில்லை, கிந்து - எப்படி என்றால், புவந பவந த்ராணதஃ - இந்த லோக ரக்ஷணத்திற்காக அவதரிப்பதனால், ஸ்ரீமத் - உயர்ந்தவர்கள். (சம்பத்துடையவர்கள்). அந்யேஷு - அபாகவதர்களிடத்தில், வித்யா - வித்யையாலும், வ்ருத்த - ஆசாரத்தாலும், ப்ராயஃ - அதிகரித்த, ப்ரகர்ஷஃ-மேன்மையானது, விதவா கல்ப கல்பஃ - விதவாலங்காரத்துடன் சமானமாக, பவதி - ஆகின்றது.

526. சதுர்வேத தரோ விப்ரோ வாஸுதேவம் நவிந்ததி ।
வேதபார பராக்ராந்தஸ் ஸவை ப்ராஹ்மண கர்தபஃ ॥

(523) பாரதம், உத்,
(524) ரா. பா. 1.57.
(525)
(526)

சதுர்வேத தர: - நான்கு வேதங்களுக்கும் வ்யாஸபதம் செலுத்த வல்லவனான, விப்ர: - யாதொரு ப்ராஹ்மணன், வாஸுதேவம் - வாஸுதேவனை, நவிந்ததி - அறியவில்லையோ, ஸ: - அவன், வேத - வேதங்களாகிற, பார - பாரத்தை, ஆக்ராந்த: - சுமந்து கொண்டிருக்கிற, ப்ராஹ்மண கர்தப: ஸ: ப்ராஹ்மண கழுதை யென்று, வை - ப்ரஸித்தம்.

527. ஶரீரஜைர் கர்மதோஷைர் யாதி ஸ்தாவரதாம் நர: ।
வாசிகை: பக்ஷி ம்ருகதாம் ॥

நர: - மனிதன், சரீரஜை: - சரீரத்தாலுண்டான, கர்மதோஷை: - கர்மதோஷங்களாலே, ஸ்தாவரதாம் - ஸ்தாவரத் தன்மையை, யாதி - அடைகிறான், வாசிகை: - வாக்கினாலுண்டான, கர்மதோஷை: - கர்மதோஷத்தால், பக்ஷி ம்ருகதாம் - பக்ஷி ம்ருக ஜந்மங்களை, யாதி - அடைகிறான்.

528. ஊனேறு செல்வத்துடன் பிறவியான் வேண்டேன்
ஆனேறேழ் வென்றா னடிமைத் திறமல்லால்
கூனேறு சங்கமிடத்தான்றன் வேங்கடத்துக்
கோனேரி வாழுங் குருகாய்ப் பிறப்பேனே.

யான் - அவனை ஶேஷியென்றறிந்த யான், (நப்பின்னைப் பிராட்டிக்காக), ஆன் ஏறு ஏழ் - ரிஷபங்களேழையும், வென்றான் - நிரஸித்த திருவேங்கடமுடையான் விஷயத்திலே, அடிமைத்திறம் அல்லால் - கைங்கர்யம் பண்ணுகையொழிய, ஊன் ஏறு - நாள் செல்ல நாள் செல்ல மாம்ஸம் வளர்ந்து வருமதாய், செல்வம் - அநித்யமான செல்வத்தோடு கூடின, உடல் பிறவி-மநுஷ்ய ஜந்மத்தை, வேண்டேன் - இச்சியேன் என்ன, (பின்னை நீர் விரும்பியிருப்பது என்னென்ன,) கூன் ஏறு - ஶேஷத்வத்தால் வளைந்திருக்கிற, சங்கம் - ஸ்ரீபாஞ்சஜந்யத்தை, இடத்தான் தன் - இடத்திருக்கையிலே யுடையவனுடைய, வேங்கடத்து - திருமலையிலே, கோனேரி - திருக்கோனேரியில், வாழும் - வர்த்திக்கிற, குருகு ஆய் பிறப்பேன் - நாரையாகவாகிலும் பிறப்பேன் என்கிறார்.

529. ஆனாத செல்வத் தரம்பையர்கள் தற்சூழ
வானாளுஞ் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்
தேனார் பூஞ்சோலைத் திருவேங்கடச் சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதியுடையே னாவேனே.

ஆனாத - அழியாத, செல்வத்து - யௌவநமாகிற ஸம்பத்தையுடையரான, அரம்பையர்கள் - ரம்பை முதலான அப்ஸரஸ்ஸுக்கள், தன்-தன்னை, சூழ - சூழ்ந்துநிற்க, வான் ஆளும் செல்வமும் - ஸ்வர்க்கத்தை யாளுகையாகிற செல்வத்தையும், மண்ணரசும் - பூலோகத்தை ஆளுகையையும், யான்

(527) (528) பெருமாள். திரு. 4-1.
(529) பெருமாள். திரு. 4-2.

வேண்டேன் - நான் வேண்டேன், தேன் ஆர் - தேன் மிக்கிருந்துள்ள, பூ - புஷ்பங்களையுடைய, சோலை - சோலை சூழ்ந்த, திருவேங்கடம் - திருமலையிலுண்டான, சுனையில் - சுனைகளிலே, மீனாய்ப் பிறக்கும் விதியுடையேன் ஆவேனே - மீனாகவாவது பிறக்கத்தக்க விதியுடையவனாக ஆவேனென்கிறார்.

530. ஒண்பவளவேலை யுலவுதண் பாற்கடலுள்
கண்டுயிலு மாயோன் கழலிணைகள் காண்பதற்குப்
பண்பகரும் வண்டினங்கள் பண்பாடும்வேங்கடத்துச்
செண்பகமாய் நிற்குந் திருவுடையே னாவேனே.

ஒண் - ஒள்ளிய, பவளம் - பவளங்களை, வேலை - கரையிலே கொண்டுவந்து, உலவு - கொழிக்கிற, தண் - குளிர்ந்த, பாற்கடலுள் - திருப்பாற்கடலிலே, கண் துயிலும் - கண் வளர்ந்தருளுகிற, மாயோன் - ஆஶ்சர்ய பூதனான திருவேங்கடமுடையானுடைய, கழலிணைகள் - திருவடிகளை, காண்பதற்கு - ஸேவிக்கைக்காக, பகரும் - தாங்கள் பாடுகிற, பண் - இசைக்கு அநுகுணமாக, வண்டினங்கள் - வண்டுகளானவை, பண்பாடும் - பண்களைப்பாடா நின்றுள்ள, வேங்கடத்து - திருமலையிலே, செண்பகமாய் நிற்கும் - செண்பகமரமாய் நிற்கத்தக்க, திருவுடையேனாவேனே - ஸம்பத்துடையவனாகவாகிலும் ஆவேனோ வென்கிறார்.

531. கம்பமதயானைக் கழுத்தகத்தின் மேலிருந்து
இன்பமருஞ் செல்வமுமிவ்வரசும் யான்வேண்டேன்
எம்பெருமா னீசனெழில் வேங்கட மலைமேல்
தம்பகமாய் நிற்குந் தவமுடையே னாவேனே.

கம்பம் - கண்டவர்களெல்லாரும் நடுங்கும்படியான, மதம் - மதத்தையுடைய, யானை - யானையுடைய, கழுத்தகத்தின் மேல் - கழுத்தின் மேலே, இருந்து - ராஜாதி ராஜன் என்னும் பெருமை தோன்ற விருந்து, இன்பு அமரும் - ஸகல போகங்களையும் புஜிக்கத்தக்க, செல்வமும் - ஸம்பத்தையும், இவ்வரசும் - இந்த ராஜ்யமாளுகையையும், யான் - (என்னை அத்தலைக்கு சேஷ பூதனென்றறிந்த) நான், வேண்டேன் - விரும்பமாட்டேன், எம்பெருமான் - எனக்கு உபகாரகனாய, ஈசன் - ஸர்வஸ்வாமியானவனுடைய, எழில் - அழகிய, வேங்கடமலை மேல் - திருமலையிலே, தம்பகமாய் நிற்கும் - தம்பக மரமாய் நிற்கும், தவமுடையேனாவேன் - தபஸ்ஸை யுடையவனாக ஆவேன்.

532. கிடக்கிற் றொட்டில் கிழிய வுதைத்திடும்
எடுத்துக் கொள்ளின் மருங்கை யிறுத்திடும்
ஒடுக்கிப் புல்கிலு தரத்தே பாய்ந்திடும்
மிடுக்கி லாமையால் நான்மெலிந்தேன் நங்காய்.

---

(530) பெருமாள். திரு. 4 4. (531) பெருமாள். திரு. 4 5.
(532) பெரியா. திரு. 1-1-9.

நங்காய் - (பருவத்துக்குத்தக்க சேஷ்டிதங்களையுடைய பிள்ளையைப் பெற்று வளர்க்கையாலே) பூர்ணைகளாயிருக்குமவர்களே, தொட்டில்-தொட்டிலிலே, கிடக்கில் - வளர்த்தினால், கிழிய - தொட்டில் கிழியும்படி, உதைத்திடும் - உதையாநிற்கும், எடுத்துக்கொள்ளில் - இடுப்பிலே எடுத்துக்கொண்டால், மருங்கை - இடுப்பை, இறுத்திடும் - முறியாநிற்கும், ஒடுக்கிப்புல்கில் - மார்பிலே அணைத்துக்கொண்டால், உதரத்தே பாய்ந்திடும் - திருவடிகளாலே வயிற்றிலே பாயாநிற்கும், மிடுக்கு இலாமையால் - (இந்த சேஷ்டிதங்களையெல்லாம் பொறுக்கவல்ல சக்தி) பிள்ளைக்குப்போராது என்று, நான் - நான், மெலிந்தேன் - போர இளைத்தேன்.

533. தன்முகத்துச் சுட்டித் தூங்கத்தூங்கத் தவழ்ந்துபோய்ப்
பொன்முகக் கிண்கிணியார்ப்பப் புழுதி யளைகின்றான்
என்மகன் கோவிந்தன் கூத்தினை யிளமாமதீ
நின்முகங் கண்ணுளவாகி னீயிங்கே நோக்கிப்போ.

தன் - தன்னுடைய முகத்து - திருமுகத்திலே, சுட்டி - சுட்டியானது, தூங்கத் தூங்க - பலகாலுமசையும்படியாகவும், பொன் - அழகிய, முகம் - முகத்தையுடைத்தான, கிண்கிணி - கிண்கிணியானது, ஆர்ப்ப - சப்திக்கும்படியாகவும், தவழ்ந்து போய் - தவழ்ந்துசென்று, புழுதி - புழுதியை, அளைகின்றான் - அளையாநின்றான், என் - என்னுடைய, மகன் - பிள்ளையான, கோவிந்தன் - கோவிந்தனுடைய, கூத்தினை - அழகிய செய்கைகளை, மா - மிகவும், இளம் - இளமை பொருந்திய, மதீ - சந்திரனே, நின் - உன்னுடைய, முகம் - முகத்தில், கண் - கண்கள், உளவாகில் - உண்டாமாகில், நீ-நீ, இங்கே-இங்கே, நோக்கிப் போ - பார்த்துப்போ.

534. பன்னிரு திங்கள் வயிற்றிற்கொண்ட வப்பாங்கினால்
என்னிளங் கொங்கை யமுதமூட்டி யெடுத்தியான்
பொன்னடி நோவப் புலரியேகானிற் கன்றின்பின்
என்னிளஞ் சிங்கத்தைப் போக்கினே னெல்லேபாவமே.

பன்னிரு திங்கள் - பன்னிரண்டு மாஸம், வயிற்றிற் கொண்ட - நலுங்காமல் வயிற்றில் வைத்துக்கொண்டிருந்து, அப்பாங்கினால் - மிகப் பாங்காக நடத்திப் போந்த நடப்பின் மிகுதியாலே, யான் - யான், என் - மிக்கவன்பினளான வென்னுடைய, இள - குழைந்திருக்கிற, கொங்கையமுதம் - முலையில் பாலை, ஊட்டி யெடுத்து - ஊட்டியெடுத்து, பொன் - மெல்லியவாய் அழகியவாயிருந்துள்ள, அடி - திருவடிகள், நோவ - (கல்லுங்கரடுமான நிலத்திலே நடக்கையாலே) மிகவும் நோகும்படியாக, புலரி - விடியற்காலத்திலே, கானில் - காட்டிலே, கன்றின் பின் - கன்றுகளின் பின்னே, என் - என்னுடைய பிள்ளையாய், இளஞ்சிங்கத்தை - சிங்கக் குட்டிபோலே செருக்கித்திரிகிறவனை, போக்கினேன் - போகவிட்டேன், எல்லே பாவமே - ஐயோ பாவமே.

---

(533) பெரியா. திரு. 1-4-1. (534) பெரியா. திரு. 3-2-8.

535. மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்
சீர்மல்கு மாய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்
கூர்வேற் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை யிளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாராயணனே நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்.

நேர் - விலக்ஷணமான, இழையீர் - ஆபரணங்களை யணிந்தவர்களாய், சீர்மல்கும் - குண ஸம்ர்த்தியும் கோ ஸம்ர்த்தியுமுடைய, ஆய்ப்பாடி - திருவாய்ப் பாடியில், செல்வம் - பகவத் ஸம்பந்தமாகிற ஸ்ரீயால் அதிஶயித்திருக்கும், சிறுமீர்காள் - இளம் பருவமுடைய பெண்களே, மார்கழித்திங்கள்-எல்லா வஸ்துக்களும் பலிக்கும் மார்கழி மாஸமாய், மதிநிறைந்த - சந்த்ரனால் பூர்ணமான சுக்ல பக்ஷமாய், நல் நாள் - நல்லதிவஸமா யிராநின்றது, பாரோர் - க்ருஷ்ணனையும் நம்மையும் சேரவொட்டாத கோபவ்ர்த்தர்கள்தாங்களே, புகழ - கொண்டாடும்படி, படிந்து - இந்நோன்பிலே அவகாஹித்து, நீராட - க்ருஷ்ண ஸம்ஶ்லேஷம் பண்ண, போதுவீர் - போகையில் இச்சையுடையீர், போதுமின் - வாருங்கள், கூர் - சாணை பிடித்துக் கூர்மையான, வேல் - வேல் தரித்தவராய், (க்ருஷ்ணனை நலியவரும் சிறிய ஜந்துக்களையுங் கூட), கொடுந் தொழிலன் - க்ரூரமாக தண்டிக்கு மவரான, நந்தகோபன் - ஸ்ரீநந்தகோபருடைய, குமரன் - பிள்ளையாய், ஏர் ஆர்ந்த - அழகால் பூர்ணமான, கண்ணி - கண்களையுடைய, அசோதை - யசோதைப் பிராட்டிக்கு, இளம் சிங்கம் - ஸிம்ஹக் குட்டிப்போலே செருக்கும் மேனாணிப்புந்தோற்ற விருக்குமவனாய், கார் - ஆஶ்ரிதருடைய எல்லா தாபங்களு மாறும்படி மேகம்போல் குளிர்ந்த, மேனி - திருமேனியையும், செம் - (செந்தாமரை மலர்போலச்) சிவந்த, கண் - திருக் கண்களையும், கதிர்போல் - ஸூர்யனைப்போல ப்ரகாஶமாய், மதியம் போல் - சந்த்ரனைப்போல ஸந்தோஷகரமான, முகத்தான் - திருமுகமண்டலத்தையுமுடையனான, நாராயணனே - ஸர்வ ரக்ஷகனே, நமக்கே - “அவனாலே பேறு” என்று அவன் கைபார்த்திருக்கிற நமக்கே, எம்பா ஆய் - நம் நோன்பைச் பின் சென்று, பறை - நம்முடைய அபேக்ஷிதத்தை, தருவான் - கொடுக்குமவனா யிராநின்றான். ஆல் - ஆச்சர்யம், ஏல், ஓர் - அசை.

536. வையத்து வாழ்வீர்காள் நாமும் நம்பாவைக்குச்
செய்யுங் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத்துயின்ற பரம னடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலேநீராடி

(535) திருப்பாவை. 1. (536) திருப்பாவை. 2.

மையிட் டெழுதோம் மலரிட்டு நாமுடியோம்
செய்யா தனச் செய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்
ஐயமும் பிச்சையு மாந்தனையுங் கைகாட்டி
உய்யுமா றெண்ணி யுகந்தேலோ ரெம்பாவாய்.

வையத்து - பூமியில், வாழ்வீர்காள் - வாழப்பிறந்தவர்களே, பாற்கடலுள் - திருப்பாற்கடலில், பைய - மெள்ள, துயின்ற - கண்வளர்ந்தருளுகிற, பரமன் - ஸர்வஸ்மாத்பரனுடைய, அடி - திருவடிகளை, பாடி - ப்ரீதிப்ரேரிதைகளாய்ப் பாடி, (அவன் வருமளவும்), நாம் - நாங்கள், நெய் உண்ணோம் - நெய்புஜியாதவர்களாயும், (உபவாஸக்ர்ஶைகளாய்), நாட்காலே - விடியற்காலத்தில், நீராடி - ஸ்நாநஞ்செய்து, மை இட்டு எழுதோம் - கண்களை அஞ்சநங்கொண்டு அலங்கரியாதவர்களாய், மலர் இட்டு - நல்ல வாஸனையுள்ள பூக்களைக்கொண்டு, முடியோம் - குழலில் தரியாதவர்களாய், செய்யாதன - முன்னோர்கள் அநுஷ்டியாதவற்றை, செய்யோம் - செய்யாதவர்களாய், தீ - அநர்த்தத்தை விளைக்கத்தக்க, குறளை - பொய்யான வார்த்தைகளை, சென்று - ஒருவரிடம்போய், ஓதோம் - சொல்லாதவர்களாய், ஐயமும் - யோக்ய விஷயத்தில் கொடுக்கும் பொருளையும், பிச்சையும் - ப்ரம்ஹசாரிகளுக்கும் ஸந்யாஸிகளுக்கும் கொடுக்கும் பிக்ஷையையும், ஆந்தனையும் - இனி அர்த்திகளில்லையென்னுமளவும், கை காட்டி - கொடுத்து, (இப்படிகளாலே), உய்யும் ஆறு - உஜ்ஜீவிக்கும் வழியை, எண்ணி - மநோரதித்து, உகந்து - ஸந்துஷ்டசித்தராய்க்கொண்டு, நாமும் - "அவனாலேபேறு" என்றிருக்கும் நாங்களும், நம்பாவைக்கு - நம்முடைய நோன்புக்கு, செய்யும் - பண்ணுகிற, கிரிசைகள் - க்ருத்யங்களை, கேளீர் - கேளுங்கோள் என்கிறார்கள். ஏல், ஓர், எம்பாவாய் - அசைகள்.

537. ஆய்க்குலத்துன்றன்னை ... ... 122-வது இலக்கம் காண்க.

538. ஸர்வலக்ஷண ஸம்பந்நா நாரீணா முத்தமாவதூ: ।
ஸீதாப்யநுகதா ராமம் ஶஶிநம் ரோஹிணீம் யதா ॥

ஸர்வலக்ஷண - ஸாமுத்திரிகா சாஸ்த்திரத்தில் சொல்லப்பட்ட சகல லக்ஷணங்களோடும், ஸம்பந்நா - கூடினவளாயும், நாரீணாம் - ஸ்த்ரீகளுக்குள், உத்தமாவதூ: - உத்தமையானவளாயுமிருக்கிற, ஸீதாபி - ஸீதாபிராட்டியும், ஶஶிநம் - சந்திரனை, ரோஹிணீயதா - ரோஹிணி நக்ஷத்திரம் பின்தொடருமாபோலே, ராமம் - பெருமாளை, அநுகதா - பின்தொடர்ந்து சென்றாள்.

539. காவியங் கண்ணியெண்ணில் கடிமாமலர்ப் பாவையொப்பாள்
பாவியேன் பெற்றமையால் பணைத்தோளி பரக்கழிந்து
தூவிசேரன்னமன்ன நடையாள் நெடுமா லொடும்போய்
வாவியந்தண் பணைசூழ் வயலாலி புகுவர்கொலோ.

---

(538) ரா. பால. 1-27. (539) பெரிய. திரு. 3-7-9.

காவியம் கண்ணி - காவிபோலே அழகிய கண்ணையுடையவளாய், எண்ணில் - விசாரிக்கப்புகில், கடிமாமலர் - பரிமளம் மிக்க தாமரைப் பூவில்வஸிக்கிற, பாவை யொப்பாள் - பெரிய பிராட்டியாரை ஒப்பவளாய், தூவி சேர் - சிறகையுடைய, அன்னம் அன்ன - அன்னப் பெடையோடு ஸத்ருசமான, நடையாள் - நடையையுடையவளாய், பணைத்தோளி - மூங்கில் போன்ற திருத்தோள்களை யுடையவளாகிய என் பெண், பாவியேன் - பாபிஷ்டையான நான், பெற்றமை பால் - பெற்ற தோஷத்தினால், பரக்கு அழிந்து - அடக்கம் சிறிது மில்லாமல், நெடுமாலொடும் - தீர்க்க வ்யாமோஹமுடையவனோடு, போய் - தனியே போய் (ஒன்று சேர்ந்த இருவரும்), வாவி - தடாகங்களும், தண் அம்பணை - குளிர்ந்து அழகிய நீர் நிலங்களும், சூழ் - சுற்றும் சூழ்ந்த, வயல் - ஸஸ்ய ஸம்ருத்தியையுடைய, ஆலி-திருவாலியிலே, புகுவர்கொலோ- புகுவாரோ என்னவோ?

540. த்விபரார்த்தாவஸாநே மாம் ப்ராப்துமர்ஹஸி பத்மஜ ॥

ஹே பத்மஜ - ஓ தாமரைப்பூவில் பிறந்த பிரமனே, த்வி பரார்த்த-இரண்டாவது பரார்த்தத்தின் (பாதியின்), அவஸாநே - முடிவில், மாம் - என்னை, ப்ராப்தம் - அடைவதற்கு, அர்ஹஸி - தகுந்தவனாவாய்.

541. பேரே வரப்பிதற்ற லல்லாலெம் பெம்மானை
ஆரே யறிவா ரதுநிற்க—நேரே
கடிக்கமலத் துள்ளிருந்தும் காண்கிலான் கண்ணன்
அடிக்கமலந் தன்னை யயன்.

பேர் - திருநாமத்தை, வர - (வாயில்) வரும்படி, பிதற்றலல்லால் - பலகால் சொல்லுகையொழிய, எம் - நமக்கு, பெம்மானை - ஸ்வாமியானவனை, ஆர் - எவர்கள், அறிவார் - தெரிந்துகொள்வார்கள், அது நிற்க - அந்த விஷயமிருக்க, கடி - பரிமளமுள்ள, கமலத்து - நாபீ கமலத்தினுடைய, உள் - மத்யத்தில், நேரே - நிரந்தரம், இருந்தும் - வாஸம் பண்ணியும், அயன் - ப்ரஹ்மா, கண்ணன் - திருமாலுடைய, அடிக்கமலந்தன்னை - தாமரைப்பூப் போன்ற பாதத்தை, காண்கிலான் - அறிய ஸமர்த்தனல்லன்.

542. காரேய் கருணை யிராமாநுசா விக்கடலிடத்தில்
ஆரேயறிபவர் நின்னருளின் தன்மை யல்லலுக்கு
நேரே யுறைவிடம்நான் வந்துநீயென்னை யுற்றபின்உன்
சீரே யுயிர்க்குயிரா யடியேற்கின்று தித்திக்குமே.

கார் ஏய் - ஜலஸ்த்தல விபாகம் பாராதே வர்ஷிக்கும் மேகம் போலே ஸர்வ விஷயமாக உபகரிக்கும், கருணை - க்ருபையையுடைய, இராமாநுச - உடையவரே, அல்லலுக்கு - து:கத்துக்கு, நேரே உறைவிடம் நான் - நேரே

(540) (541) முதல். திருவந்தாதி. 56.
(542) இராமாநுச நூற்றந்தாதி. 25.

ஆவாஸபூமியா யிருப்பாளொருவன் நான், என்னை-இப்படியிருக்கிற வென்னை, நீ வந்து - தேவரீர் தாமே வந்து, உற்ற பின் - ப்ராபித்தருளின பின்பு, உன் சீரே - தேவரீருடைய கல்யாணகுணங்களே, உயிர்க்குயிராய் - ஆத்மாவுக்கு தாரகமாய், அடியேற்கு - அடியேனுக்கு, இன்று தித்திக்கும் - இன்று ரஸியாநின்றது, நின் - தேவரீருடைய, அருளின் தன்மை - க்ருபையின் ஸ்வபாவத்தை, இக்கடலிடத்தில் - இக்கடல் சூழ்ந்த பூமியில், ஆர் அறிபவர் - ஆர்தான் அறிவார், காரேய் கருணை என்றது - காரேய்ந்த கருணையென்றபடி, ஏய்கை-ஒப்பு.

543. கையில்கனியன்ன கண்ணனைக் காட்டித்தரினு முன்றன்
மெய்யில்பிறங்கிய சீரன்றி வேண்டிலன்யான் நிரயத்
தொய்யில் கிடக்கினுஞ் சோதிவிண்சேரினு மிவ்வருள்நீ
செய்யில்தரிப்ப னிராமாநுசா வென்செழுங் கொண்டலே.

செழும் - விலக்ஷணமான, கொண்டல் - மேகம்போலே பரமோதாரராய், எம் இராமாநுசா - அது தன்னை எங்களுக்கு ப்ரகாசிப்பித்தருளினவரே, கண்ணனை - ஆச்ரித ஸுலபனான ஸர்வேச்வரனை, கையில் கனி அன்ன - உள்ளங்கை நெல்லிக்கனி போலே, காட்டித்தரிலும் - ஸாக்ஷாத்கரிப்பித்துத் தரிலும், உன்றன் - தேவரீருடைய, மெய்யில் - திவ்யவிக்ரஹத்தில், பிறங்கிய - ப்ரகாசிக்கிற, சீரன்றி - ஸௌந்தர்யாதி குணங்களொழிய, யான்-நான், வேண்டிலன் - வேண்டேன், நிரயம் தொய்யில் - ஸம்ஸார கர்த்தமத்தில், கிடக்கிலும் - அழுங்கிக் கிடக்கவுமாம், (சுத்தஸத்வ குணமாகையாலே), சோதி - நிரவதிக தேஜோமயமான, விண் - பரமபதத்தை, சேரிலும் - ப்ராபிக்கவுமாம், (தேவரீருடைய திருமேனி குணத்தையே அநுபவித்திருக்கையாகிற,) இவ்வருள் - இதுக்குறுப்பான ப்ரஸாதத்தை, நீ செய்யில் தரிப்பன் - தேவரீர் செய்தருளில் ஏதேனுமோரிடத்திலும் கால்பாவி நிற்பன், அல்லாதபோது தரிக்கமாட்டேனென்று கருத்து.

544. த்விதா ஹஜ்யேயமப்யேவம் ந நமேயந்து கஸ்யசித் ।
ஏஷமே ஸஹஜோ தோஷ: ஸ்வபாவோ து தரதிக்ரம: ॥

த்விதா பஜ்யேயம் ஏவமபி - இரண்டு துண்டாக வெட்டப்பட்டபோதிலும், கஸ்யசித் - ஒருவருக்கும், நநமேயம் - வணங்கமாட்டேன். ஏஷ: இது, மே - எனக்கு, ஸஹஜ: - ஸ்வபாவஸித்தமான, தோஷ: - தோஷம், ஸ்வபாவ: - ஸ்வபாவமானது, துரதிக்ரம: - ஒருவராலும் தாண்டத்தக்கதன்று.

545. காம்யத இதி காம: ।

காம்யத இதி - காம சப்தத்தாலே, காம: - விஷய சம்போக ஸுகத்தைச் சொல்லுகிறது.

---

(543) இராமாநுச நூற்றந்தாதி. 104. (544) ரா. யு. 36-11.
(545)

546. ஈசிபோமி னீங்கிரேன்மி னிருமியிளைத்தீர் உள்ளம்
கூசியிட்டீ ரென்றுபேசும் குவளையங் கண்ணியர்பால்
நாசமான பாசம்விட்டு நன்னெறி நோக்கலுறில்
வாசம்மல்கு தண்டுழாயான் வதரி வணங்குதுமே.

போமின் - போங்கோள், ஈசி - சீ சீ, ஈங்கு - இங்கு, இரேன்மின் - இராதே கொள்ளுங்கோள், இருமி - இருமலாலே, இளைத்தீர் - சரீரம் கட்டுக் குலைந்தீர், (நாங்களிப்படி சொல்வதைக் கேட்டு), உள்ளம் கூசியிட்டீர் - ஹ்ருதயம் கூசினீர், என்று பேசும் - என்று சொல்லுகிற, குவளை - குவளை மலர் போலே, அம் - அழகிய, கண்ணியர் பால் - கண்ணையுடைய ஸ்த்ரீகள்பக்கலிலே, நாசமான பாசம் - விநாசத்தை விளைக்கும் ஸங்கத்தை, விட்டு-தவிர்ந்து, நல் நெறி நோக்கல் உறில் - நல்வழி போகப்பார்க்கில், வாசம் மல்கு - பரிமளம் நிறைந்த, தண் - குளிர்ந்த, துழாயான் - திருத்துழாயையுடைய ஸர்வேஸ்வரன் நித்யவாஸம் பண்ணுகிற, வதரி - ஸ்ரீபதரியை, வணங்குதும் - வணங்குவோம்.

547. பணிமின் திருவருளென்னு மஞ்சீதப் பைம்பூம்பள்ளி
அணிமென் குழலா ரின்பக்கலவி யமுதுண்டார்
துணி முன்புநாலப் பல்லேழையர்தா மிழிப்பச்செல்வர்
மணிமின்னுமேனி நம்மாயவன் பேர்சொல்லி வாழ்மினோ.

அம் சீதம் - அழகும் குளிர்ச்சியுமுள்ள, பை - பரந்த, பூம் பள்ளி - புஷ்ப சயநத்தில், திருவருள் - திருவருளை, பணிமின் - கட்டளையிடுங்கள், என்னும் - என்று ப்ரார்த்திக்கிற, அணி - அலங்காரமான, மெல் குழலார் - மெல்லிய கூந்தலையுடைய மாதரது, இன்பம் - சுகத்தைத்தருகிற, கலவி - புணர்ச்சியாகிய, அமுது உண்டார் - அமிர்தத்தை புசித்தவர்கள், துணி - சீலையானது, முன்புநால - முன்னே தொங்கும்படி, பல் ஏழையர் தாம் - பலமாதர்கள், இழிப்ப - இழிவாகச் சொல்ல, செல்வர் - கேட்டுக்கொண்டே போவர்கள்(ஆகலால்), மணி மின்னும் - நீலமணிபோலே மின்னுகின்ற, மேனி - திருமேனியையுடைய, நம்மாயவன் - நம்மாயோனுடைய, பேர் சொல்லி - திருநாமங்களைச் சொல்லி, வாழ்மின் - வாழுங்கள்.

548. ஗ர்வோ பிமாநோ ஹங்கார꞉

கர்வம், அபிமானம், அஹங்காரம் என்கிற மூன்று சப்தமும் அஹங்காரத்தைச் சொல்லுகிறது.

549. யஸ்யாநுக்ரஹ மிச்சாமி தஸ்யவித்தம் ஹராம் யஹம் ।

---

(546)　　(547)
(548) அமரகோசம்- 1　　(549) ராமா. யுத். 36-11.

யஸ்ய - எவனுக்கு, அநுக்ரஹம் - அநுக்ரஹம் செய்ய, இச்சாமி - இச்சிக்கிறேனோ, தஸ்ய - அவனுடைய, வித்தம் - திரவ்யத்தை, அஹம் - நான், ஹராமி - க்ரஹித்துக் கொள்கிறேன்.

550. அலம்புரிந்த நெடுந்தடக்கை யமரர்வேந்தன்
அஞ்சிறைப்புள் தனிப்பாக னவுணர்க்கென்றும்
சலம்புரிந்தங் கருளில்லா தன்மையாளன்
தானுகந்த வூரெல்லாந் தன்தாள்பாடி
நிலம்பரந்து வரும்கலுழிப் பெண்ணையீர்த்த
நெடுவேய்கள் படுமுத்த முந்தவுந்திப்
புலம்பரந்து பொன்விளைக்கும் பொய்கைவேலிப்
பூங்கோவலூர் தொழுதும் போதுநெஞ்சே.

அலம் புரிந்த - (இரப்பாளர்) போதும் போதும் என்னும்படி கொடா நிற்பதாய், நெடும் - நீண்டு, தடம் - பரந்திருந்துள்ள, கை - திருக்கைகளை யுடையனாய், அமரர் வேந்தன் - நித்யஸூரி நிர்வாஹகனாய், அம் - அழகிய, சிறை - சிறகையுடைத்தான, புள் - பெரிய திருவடிக்கு, தனிப்பாகன்-அத்வி தீயனான பாகனாய், அவுணர்க்கு - ராக்ஷஸர்களுக்கு, என்றும் - எந்த காலத்திலும், சலம் புரிந்து - தீங்கிழைக்குமவனாய், அங்கு - அவர்கள் விஷயத்தில், அருளில்லா - தயை யின்மையையே, தன்மையாளன் தான் - ஸ்வபாவமாக வுடையனான ஸர்வேஶ்வரன், உகந்த வூரெல்லாம் - உகந்தருளின நிலங்களிலெல்லாம், தன் தாள்பாடி - அவனுடைய திருவடிகளைப் பாடி, நிலம் பரந்து வரும் - பூமியெங்கும் வ்யாபித்து வருமதாய், கலுழி-கலக்கத்தை யுடைத்தான, பெண்ணை - தக்ஷிண பினாகினியானது, ஈர்த்த - இழுத்துக்கொண்டு வருகிற, நெடுவேய்கள் - பெரிய மூங்கில்களில், படு - உண்டாகிற, முத்தம் - முத்துக்களை, உந்த - (கழனிகளிலே கொண்டு) தள்ள, உந்தி - (கர்ஷகர் தங்கள் பயிருக்குக் களையென்று) தள்ளப்பட்டு, புலம் - கழனிகளெங்கும், பரந்து - பரவியிருக்குமதாய், பொன் விளைக்கும் - பொன் விளையாநின்றுள்ள, பொய்கை - தடாகங்களை, வேலி - சுற்றிலுமுடையதாய், பூம் - தர்சநீயமான, கோவலூர் - திருக்கோவலூரை, நெஞ்சே - மநஸ்ஸே, தொழுதும் போது-அநுபவிப்போம் வருவாயாக.

550. [1] கண்டியூரரங்கம் ... ... 443-வது இலக்கம் காண்க.

---

(550) திருநெடுந்தாண்டகம். 6.

மூன்றுவது ப்ரகரணம்

551. களைவாய்துன்பங் களையாதொழிவாய் களைகண் மற்றிலேன்
வளைவாய் நேமிப்படையாய் குடைந்தைக்கிடந்த மாமாயா
தளராவுடல மெனதாவி சரிந்து போம்போ
திளையாதுனதா ளொருங்கப்பிடித்துப் போதவிசை நீயே.

துன்பம் - உன்னை அனுபவிக்கப் பெறாத துக்கத்தை, களைவாய் - போக்கு வாய், களையாது ஒழிவாய் - போக்காதொழிவாய், களைகண் - ஆதாரம், மற்று இலேன் - வேறு உடையேனல்லேன், (துக்க நிவர்த்திக்குப் பரிகாரமாய்), வளைவாய் - வளைந்த வாயையுடைத்தான, நேமி - திருவாழியாகிய, படையாய் - ஆயுதத்தை யுடையவனே, குடந்தை கிடந்த - ஆசிரிதர்பொருட்டுத் திருக் குடைந்தையில் கண்வளர்ந்தருளின, மா - பெரிதாகிய, மாயா - ஆச்சரிய சவுந் தரியங்களை யுடையவனே, உடலம் தளரா - (உன்னை அனுபவிக்கப்பெறாத ஆர்த்தியாலே) சரீரம் தளர்ந்து, எனது ஆவி - என் உயிரானது, சரிந்து - நிலை குலைந்து, போம்போது - சரீரத்தை விட்டுப் போகும்போது, இளையாது - மெலியாமல், உனதாள் - உன் திருவடிகளையே, ஒருங்க பிடித்து - ஒருமிக்கப் பிடித்து, போத - போதும்படி, நீயே இசை - நீயே அனுமதி பண்ணவேணும்.

552. க்ஷத்ர ரோஷாத் ப்ரஶாந்தஸ் த்வம் ப்ராஹ்மணஶ்சமஹாய
பாலாநாம் மம புத்ராணு மஹயம் தாது மர்ஹஸி ॥ [ஶா: ।

த்வம் - நீர், க்ஷத்ர ரோஷாத் - க்ஷத்திரிய வதார்ஹமான ரோஷத்தி லிருந்து, ப்ரஶாந்த: - மிகவும் சாந்தராய், மஹாயஶா: - மஹா கீர்த்தி சம்பன்ன ராய், ப்ராஹ்மண:ச - ப்ராஹ்மணராக இருக்கிறீர். (ஆகையால்), பாலாநாம் - பாலர்களான, மம - என்னுடைய, புத்ராணும் - பிள்ளைகளுக்கு, அபயம் - அபயத்தை, தாதும் - கொடுப்பதற்கு, அர்ஹஸி - தகுந்தவர்.

553. மதோராம இதிஶ்ருத்வா ஹ்ருஷ்ட: ப்ரமுதிதோ ந்ருப: ।
புநர்ஜாதம் ததா மேநே ஸுதாநாத்மாந மேவச ॥

ராம: - பரசுராமன், கத இதி ஶ்ருத்வா - தோல்வியடைந்து போனுன் என்கிற வார்த்தையைக்கேட்டு, ந்ருப: - தசரத மஹாராஜன், ஹ்ருஷ்ட: - சந்தோஷ மடைந்தான். ப்ரமுதித: - மந்திரிகளுடனும் ஆநந்தித்தான், ததா - அப்போது, ஸுதாந் - பிள்ளைகளையும், ஆத்மாநம் ஏவச - தன்னையும், புந: ஜாதம் - மறுபிறவி பிறந்ததாக, மேநே - எண்ணினுன்.

554. பதி ஸம்மாநிதா ஸீதா ஹர்த்தார மஸிதேக்ஷணு ॥
ஆச்வார மநுவவ்ராஜ மங்களாந் யபிதத்நுஷீ ॥

---

(551) திருவா. 5-8-8. (552) ரா. பா. 75-6.
(553) (554) ரா. அ. 19-2.

பதி - நாயகரான சக்ரவர்த்தித் திருமகனால், ஸம்மாநிதா - கௌரவிக்கப் பட்டும், அஸிதேக்ஷணா - கருத்த திருக்கண்களையுடையவளாயும், ஸீதா - யஜ்ஞபூமியில் பிறந்தவளாயுமிருக்கிற பிராட்டியானவள், மங்களாநி - மங்களாசாஸநம் செய்துகொண்டே, பர்த்தாரம் - பர்த்தாவான ஸ்ரீராம பிரானை, ஆத்வாரம் - வாசற்படியளவும், அநுவவ்ராஜ - பின் சென்றாள்.

555. பூர்வாம் திஶம் வஜ்ரதரோ தக்ஷிணாம் பாது தே யம: ।
வருண: பஶ்சிமாமாஶாம் தநேஶஸ்தூத்தராம் திஶம் ॥

தே - உன்னை, பூர்வாம் திஶம் - கிழக்கு திக்கில், வஜ்ரதர: - தேவேந் திரனும், தக்ஷிணாம் - தெற்கு திக்கில், யம: - யமதர்மராஜனும், பஶ்சிமாம் ஆசாம் - மேற்கு திக்கில், வருண: - வருணனும், உத்தராம் திஶம் - வடக்கு திக்கில், தநேஶஸ்து - குபேரனும், பாது - ரக்ஷிக்கவேண்டும் (என்று ப்ரார்த் தித்துக்கொண்டு வாசற்படியளவும் தொடர்ந்து வந்தாள்).

556. இயம் ஸீதா மம ஸுதா ஸஹதர்மசரீ தவ ।
ப்ரதீச்ச சைநாம் பத்ரம் தே பாணிம் க்ருஹ்ணீஷ்வ பாணிநா ॥

மம - என்னுடைய, ஸுதா - குமாரத்தியான, இயம் - இந்த, ஸீதா - சீதாதேவி, தவ - உம்முடைய, ஸஹதர்மசரீ - தர்மங்களைக் கூடவிருந்து செய்வள், ஏநாம் - இவளை, ப்ரதீச்ச - அங்கீகரியும், தே - உனக்கு, பத்ரம் - மங்களமுண் டாகுக, பாணிநாம் - கையாலே, பாணிம் - ஸீதையின் கையை, க்ருஹ்ணீஷ்வ - பிடித்துக்கொள்ளும்.

557. அஹம் வேத்மி மஹாத்மாநம் ராமம் ஸத்ய பராக்ரமம் ।
வஸிஷ்டோபி மஹாதேஜா யேசேமே தபஸிஸ்திதா: ॥

அஹம் - நாம், ராமம் - ஸ்ரீராமபிரானை, மகாத்மாநம் - அபரிச்சின்ன மஹிமையுடையவரென்றும், ஸத்ய பராக்ரமம் - நாசமற்ற பலத்தை யுடையவ ரென்றும், வேத்மி - அறிவேன், மகாதேஜா: - மிக்க தேஜஸ்ஸையுடைய, வஸிஷ்டோபி - வசிஷ்ட மஹாமுநியும், வேத்தி - அறிவர், யே இமே - இந்த சமீபத்திலிருக்கிற, தபஸி - கர்மயோகத்தில், ஸ்திதா: - ஸ்திரபரர்களான ருஷிகளும் அறிவார்கள்.

558. விஸ்வாமித்ரஸ்து ப்ரஹ்மர்ஷிர் ஹூங்காரேணாபி பர்த்ஸ்ய தாம் । ஸ்வஸ்தி ராகவயோ ரஸ்து ஜயஞ்சைவாப்ய பாஷத ॥

ப்ரஹ்மர்ஷி: - ப்ரஹ்மரிஷியான, விஸ்வாமித்ரஸ்து - விஸ்வாமித்திரனால் ஹூங்காரேண - ஹூங்காரத்தினால், தாம் - அந்த தாடகையை, அபிபர்த்ஸ்ய- மிரட்டிவிட்டு, ராகவயோ: - ராமலக்ஷ்மணர்களுக்கு, ஸ்வஸ்தி - மங்களமும், ஜயஞ்சைவ - ஜயமும், அஸ்து - உண்டாகட்டும், இதி - என்று, அப்யபாஷத- சொன்னான்.

(555) ரா. அ. 16-24.   (556) ரா. பா. 73-27
(557) ரா. பா. 19-14.   (558) ரா. பா. 26-14.

559. தேதம் ஸோமமிவோத்யந்தம் த்ருஷ்ட்வாவை தர்மசாரிண: ॥
மங்களாநி ப்ரயுஞ்ஜாநா: ப்ரத்யக்ருஹ்ணந் த்ருடவ்ரதா: ॥

தர்மசாரிண: - தர்மத்தை யநுஷ்டிக்கிற, த்ருடவ்ரதா: - நிஶ்சலமான விரதத்தையுடைய, தே - அந்த தண்டகாரண்ய வாசிகளான ருஷிகள், உத்யந்தம் - உதித்த, ஸோமமிவ - சந்திரனைப்போலுள்ள, தம் - அந்த ராமனை, த்ருஷ்ட்வா - பார்த்து, மங்களாநி - மங்களாசாஸனங்களை, ப்ரயுஞ்ஜாநா: - பண்ணிக்கொண்டு, ப்ரத்யக்ருஹ்ணந் - உபசரித்தார்கள்.

560. ஆயதாஶ்ச ஸுவ்ருத்தாஶ்ச பாஹவ: பரிகோபமா: ।
ஸர்வபூஷண பூஷார்ஹா கிமர்த்தம் ந விபூஷிதா: ॥

ஆயதா: - நீண்டவைகளும், ஸுவ்ருத்தா:ச - அழகாய் உருண்டு திரண்டவைகளும், பரிகோபமா: - உழல்தடிக் கொப்பானவைகளும், ஸர்வபூஷண - எல்லா பூஷணங்களும், பூஷார்ஹா: - அணியத் தகுந்தவைகளுமான, பாஹவ: - திருக்கைகள், கிமர்த்தம் - எதுக்காக, நவிபூஷிதா: - அங்கரிக்கப் படவில்லை.

561. ஏஷஸர்வாயுதோபேதஶ்ச சதுர்பிஸ்ஸஹ ராக்ஷஸை: ।
ராக்ஷஸோப்யேதி பஶ்யத்வம் அஸ்மாந் ஹந்தும் நஸம்ஶய: ॥

ஏஷ: - இந்த, ராக்ஷஸ: - ராக்ஷஸன், சதுர்பி: ராக்ஷஸை: நான்கு ராக்ஷஸர்களுடனும், ஸர்வாயுதோபேத: - ஸமஸ்தவிதமான ஆயுதங்களுடனும் கூடினவனாய், அஸ்மாந் - நம்மை, ஹந்தும் - கொல்லுவதற்கு, அப்யேதி - எதிரே வந்து கொண்டிருக்கிறான், நசம்சய: - சந்தேகமில்லை, பஶ்யத்வம் - பாருங்கள்.

562. வத்யதாமேஷ தண்டேந தீவ்ரேண ஸசிவை: ஸஹ ।
ராவணஸ்ய ந்ருஶம்ஸஸ்ய ப்ராதாஹ்யேஷ விபீஷண: ॥

ஏஷ: - இந்த விபீஷணன், ஸசிவை: ஸஹ - மந்திரிகளுடன், தீவ்ரேண - க்ரூரமான, தண்டேந - கதையினால், வத்யதாம் - கொல்லத் தக்கவன், ஹி - ஏனென்றால், ந்ருஸம்ஸஸ்ய - க்ரூரனான, ராவணஸ்ய - இராவணனுடைய, ப்ராதா - தம்பி.

563. ராவணேந ப்ரணிஹிதம் தமவைஹி நிஶாசரம் ।
தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே க்ஷமம் க்ஷமவதாம் வர ॥

க்ஷமவதாம் வர - பொறுமையுள்ளவர்களில் சிரேஷ்டரே, தம் - அந்த, நிஶாசரம் - ராக்ஷஸனை, ராவணேந - இராவணனால், ப்ரணிஹிதம் - சாரக்ருத்யத்தில் நியமிக்கப்பட்டவனாக, அவேஹி - தெரிந்துகொள்ளும், அஹம் - நான், தஸ்ய - அவனுடைய, நிக்ரஹம் - தண்டனையை, க்ஷமம் - யுக்தமென்று, மந்யே - எண்ணுகிறேன்.

---

(559) ரா. ஆ. 1-11. (560) ரா. கி. 3-14.
(561) ரா. யு. 17-5. (562) ரா. யு. 17-27.
(563) ரா. யு. 17-24.

564. பிஸாசாந் தாநவாந் யக்ஷாந் ப்ருதிவ்யாஞ்சைவ ராக்ஷஸாந் ।
அங்குல்யக்ரேண தாந் ஹந்யாமிச்சந் ஹரிகணேஸ்வர ॥

ஹரி கணேஸ்வர - வாநர சேனைகளுக்கு மஹாராஜரே, பிஸாசாந் - பிசாசங்களும், தாநவாந் - தாநவர்களும், யக்ஷாந் - யக்ஷர்களும், ப்ருதிவ்யாஞ்சைவ - பூமியிலுள்ள, ராக்ஷஸாந் - ராக்ஷஸர்களும், தாந் - (ஆகிய) அவர்கள் எல்லோரையும், இச்சந் - இச்சித்தேனேயானால், அங்குல் யக்ரேண - நுனி விரலினாலேயே, ஹந்யாம் - கொல்லுவேன்.

565. யாமோஷதிமிவாயுஷ்மந் நந்வேஷஸி மஹாவநே ।
ஸா தேவீ மமச ப்ராணா ராவணேநோபயம் ஹ்ருதம் ॥

ஆயுஷ்மந் - தீர்க்காயுஸ்ஸம்பந்நனான ஸ்வாமீ, யாம் - எந்த தாயாரை, ஓஷதிமிவ - ஔஷதம்போலவே, மஹாவநே - மஹாரண்யத்தில், அந்வேஷஸி - தேடுகிறாயோ, ஸாதேவீ - அந்த ஸீதாபிராட்டி, மம - என்னுடைய, ப்ராணாஸ்ச - ப்ராணன்கள், உபயம் - இரண்டும், ராவணேந - இராவணனால், ஹ்ருதம் - அபஹரிக்கப்பட்டது.

566. ரக்ஷது த்வாமஸேஷாணாம் பூதாநாம் ப்ரபவோ ஹரிঃ ।
யஸ்யநாபி ஸமுத்பூத பங்கஜாதபவத் ஜகத் ॥

யஸ்ய - எவனுடைய, நாபி - திருநாபியிலிருந்து, ஸமுத்பூத - பிறந்த, பங்கஜாத் - தாமரைப் பூவினின்றும், ஜகத் - ஜகத்துக்கள், அபவத் - பிறந்ததோ, அஸேஷாணாம் - சமஸ்தமான, பூதாநாம் - ஜந்துக்களுக்கு, ப்ரபவঃ - ஜன்மகாரணபூதன் எவனோ, ஸঃ - அந்த, ஹரிঃ - ஆஸ்ரித விரோதிசீலனான எம்பெருமான், த்வாம் - உம்மை, ரக்ஷது - ரக்ஷிப்பாராக.

567. ஸம்ஸ்ப்ருஸ்ய நாஸநம் ஸௌரேர் விதுரஸ் ஸ மஹாமதிঃ ॥

மஹாமதிঃ - புத்திசாலியான, ஸவிதுரঃ - அந்த விதுரர், ஸௌரேঃ - க்ருஷ்ணனுக்காக, ஆஸநம் - (தம் திருமாளிகையில் தாமிட்ட) ஆஸநத்தை, ஸம் - நன்றாய், ஸ்ப்ருஸ்ய - அமுக்கிப் பார்த்தார்.

568. ஸ்த்ரியோ வ்ருத்தாঃ தருண்யஸ்ச ஸாயம்ப்ராதஸ் ஸமாஹிதாঃ ।
ஸர்வாந் தேவாந் நமஸ்யந்தி ராமஸ்யார்த்தே யஸஸ்விநঃ ॥

ஸ்த்ரியঃ - ஸ்திரீகளும், வ்ருத்தাঃ - வ்ருத்தர்களும், தருண்யஸ்ச-யுவதிகளும், ஸாயம் ப்ராதঃ - சாயங்கால ப்ராதঃ காலங்களில், ஸமாஹிதাঃ - கூடிக்கொண்டு, ராமஸ்யார்த்தே - ஸ்ரீராமன்பொருட்டு, யஸஸ்விநঃ - ஸம்ருத்தியை வேண்டினவர்களாய், ஸர்வாந் தேவாந் - எல்லா தேவதைகளையும், நமஸ்யந்தி - வணங்குகிறார்கள்.

(564) ரா. யு. 18-23.
(565) ரா. ஆ. 67-15.
(566) பாரதம்.
(567) பா உத்.
(568) ரா. அ. 2-52.

569. யந்மங்களம் ஸுபர்ணஸ்ய விநதாகல்பயத் புரா ।
அம்ருதம் ப்ரார்த்தயாநஸ்ய தத்தே பவது மங்களம் ॥

புரா - முன்பு, அம்ருதம் ப்ரார்த்தயாநஸ்ய - அம்ருதம் கொண்டுவர வேண்டுமென்று ப்ரார்த்திக்கப் பட்டவரான, ஸுபர்ணஸ்ய - பெரிய திருவடிக்கு, யத் - எந்த, மங்களம் - மங்களத்தை, விநதா - விநதாதேவியானவள், அகல்பயத் - பண்ணினளோ, தத் - அந்த, மங்களம் - மங்களம், பவது - உண்டாகுக.

570. ஜாதோஸி தேவதேவேஶ ஶங்க சக்ர கதாதர: ।
திவ்ய ரூபமிதம் தேவ ப்ரஸாதே நோபஸம்ஹர ॥

தேவ தேவேஶ - தேவர்களுக்கும் தேவனான நாராயணனே, ஶங்க சக்ர கதா தர: - சங்கத்தையும் சக்ரத்தையும் கதையையும் தரித்துக்கொண்டு, ஜாதோஸி - அவதரித்தீர், தேவ - ஓஸ்வாமிந், ப்ரஸாதேந - அடியேன் மீது க்ருபையினால், இதம் - இந்த, திவ்யரூபம் - திவ்யமான விஷ்ணு ரூபத்தை, உபஸம்ஹர - மறைத்துக் கொள்ளும்.

571. உபஸம்ஹர ஸர்வாத்மந் ரூபமேதத் சதுர்புஜம் ।
ஜாநாது மாவதாரம் தே கம்ஸோயம் திதிஜந்மஜ: ॥

ஸர்வாத்மந் - ஸர்வாந்தர்யாமியான ஸ்வாமி, சதுர்புஜம் - நான்கு புஜங்களுடன்கூடிய, ஏதத் ரூபம் - இந்த ரூபத்தை, உபஸம்ஹர - மறைத்துக் கொள்ளும், திதி ஜந்மஜ: - அசுர ஜந்மாவான, அயம் - இந்த, கம்ஸ: - கம்ஸன், தே - உன்னுடைய, அவதாரம் - அவதாரத்தை, மா ஜாநாத் - அறிய வேண்டாம்.

572. [1] நியம்ய ப்ருஷ்டே து தலாங்குளித்ரவாந் ஶரைஸ் ஸுபூர்ணாமிஷுதீ பரந்தப: । மஹத் தநுஸ் ஸஜ்ய மபோஹ்ய லக்ஷ்மணோ நிஶாமதிஷ்டத் பரிதோஸ்ய கேவலம் ॥

தலாங்குளித்ரவாந் - கைகளில் சர்ம கவசங்களைத் தரித்தவனாய், பரந்தப: - சத்ருக்களை தபிக்கும்படி செய்யும், லக்ஷ்மண: - லக்ஷ்மணன், ஶரை: - பாணங்களினால், ஸுபூர்ணாம் - நன்றாய் நிறைக்கப்பட்ட, இஷுதீம் - அம்பராத்தூணியை, ப்ருஷ்டே து - முதுகில், நியம்ய - கட்டிக்கொண்டு, மஹத் தநு: - பெரிய வில்லை, ஸஜ்யமபோஹ்ய - நாணேரிட்டு பிடித்துக்கொண்டு, நிஶாம் - இராத்திரி முழுவதும், தஸ்ய - அந்த பெருமாளுக்கு, கேவலம் பரித: - நான்கு புரமும் ஜாக்கிரதையாக, அதிஷ்டத் - காவலாக இருந்தார்.

[2] ததஸ் த்வஹஞ் சோத்தம சாபபாண ப்ருத் ஸ்திதோ பவம் தத்ர ஸ யத்ர லக்ஷ்மண: । அதந்த்ரிபிர் ஜ்ஞாதிபிராத்த கார்முகைர் மஹேந்த்ர கல்பம் பரிபாலயம்ஸ் ததா ॥

(569) ரா. அ. 52 33. (570) வி. பு, 5-3-10.
(571) வி. பு. 5-3-13. (572) ரா. அ. 87-22-23.

ததஃ - பிறகு, அஹம் து - நானும், உத்தம பாண சாபத்ருத் - சிறப்புள்ள பாணத்தையும் வில்லையும் தரித்தவனாய், ததா - அப்பொழுது, ஸ லக்ஷ்மணஃ - அந்த லக்ஷ்மணன், யத்ர - எவ்விடத்தில், ஸ்திதஃ - இருக்கிறாரோ, தத்ர - அவ்விடத்தில், ஸ்திதோபவம் - இருந்தவனானேன், அதந்த்ரிபிஃ - ஜாக்கிரதையுடன் விழித்துக்கொண்டு, ஆத்த கார்முகைஃ - வில்லோடு கூடினவர்களா யிருக்கிற, ஜ்ஞாதிபிஃ - பந்துக்களுடன், மஹேந்த்ர கல்பம் - மஹம்மேரு ஸத்ருசமான பெருமாளை, பரிபாலயந் - நன்றாய் பாதுகாத்துக் கொண்டு, அதிஷ்டம் - இருந்தேன்.

573. விடையே ழன்றடர்த்து வெகுண்டு விலங்கலுறப்
படையா லாழிதட்ட பரமன் பரஞ்சோதி
மடையார் நீலம்மல்கும் வயல்சூழ் கண்ணபுரமொன்
றுடையானுக் கடியே னொருவர்க் குரியேனோ.

அன்று - அந்த காலத்திலே, விடை ஏழ் - ஏழுவ்ருஷபங்களையும், வெகுண்டு - சீறிக்கொண்டு, அடர்த்து - நிரஸித்தவனாய், விலங்கல் - த்ரிகூட பர்வதத்தில், உற - சேரும்படியாக, படையால் - வாநர ஸேனையால், ஆழி - ஸமுத்ரத்தில், தட்ட - ஸேது பந்தநம் பண்ணினவனாய், பரமன் - ஸர்வஸ்மாத் பரனாய், பரஞ்சோதி - பரமதேஜோரூபியாய், மடை - மடைகளிலே, ஆர் - பரந்திருக்கிற, நீலம் - நீலோத்பலங்களாலே, மல்கும் - வ்யாப்தமான, வயல் - வயல்களாலே, சூழ் - சூழப்பட்ட, கண்ணபுரம் ஒன்று - திருக்கண்ணபுரமொன்றையே, உடையானுக்கு - (நித்யவாஸமாக) உடையனான எம்பெருமானுக்கு, அடியேன் - சேஷபூதனான நான், ஒருவர்க்கு - வேறு சிலர்க்கு, உரியேனோ - பவ்யனாவேனோ.

574. மற்றுமோர் தெய்வ முளதென் றிருப்பாரோடு
உற்றிலே னுற்றது முன்னடியார்க் கடிமை
மற்றெல்லாம் பேசிலும் நின் திருவெட் டெழுத்தும்
கற்று நான் கண்ணபுரத்துறை யம்மானே.

கண்ணபுரத்துறையம்மானே? மற்றும் - உன்னைவிட வேறான, ஓர் தெய்வம் - ஒரு தெய்வமானது, உளது - உண்டு, என்றிருப்பாரோடு - என்று சொல்லுமவர்களோடு, உற்றிலேன் - ஸம்பந்தமுடையே னல்லேன், நான் - அடியேன், நின் - உம்முடைய, திருவெட்டெழுத்தும் - திருவஷ்டாக்ஷரத்தை, கற்று - அப்யஸித்து (அந்த திருவஷ்டாக்ஷரம்), மற்றெல்லாம் - மற்றுமுள்ள அநேகார்த்தங்களை, பேசிலும் - சொல்லிற்றேயாகிலும், உற்றதும் - (நான்) அர்த்தமாக உணர்ந்து அறுதியிட்டது, உன் - உம்முடைய, அடியார்க்கு - சேஷபூதர்களான பாகவதர்களுக்கே, அடிமை - சேஷபூதனாயிருப்பது தான்.

575. நமக்கே நலமாதலில் ... ... 325-வது இலக்கம் காண்க.

---

(573) பெரிய தி. 8-9-3. (574) பெரிய. திரு. 8-10-3.

576. மாலரிகேசவனாரணன் சீமாதவன் கோவிந்தன்
வைகுந்த னென்றென்
றோலமிட வென்னைப்பண்ணி விட்டிட்டொன்று
முருவுஞ் சுவடு காட்டான்
ஏலமலர்க்குழ லன்னைமீர்கா ளென்னுடைத்
தோழியர்கா ளென்செய்கேன்
காலம்பல சென்றுங்காண்பதாணை யுங்களோ
டெங்க ளிடையில்லையே.

மால் - ஆசிரித வ்யாமோஹனனவன், (அந்த வ்யாமோஹத்தாலே), அரி - அவர்கள் பாபங்களை நசிப்பிக்குமவன், கேசவன் - அழகிய சிகையை யுடையவன், நாரணன் - ஆசிரித வாத்ஸல்யமுடையவன், சீமாதவன் - லக்ஷ்மீநாதன், கோவிந்தன் - ஆசிரிதர்க்கு சுலபனானவன், வைகுந்தன் - நித்யவிபூதியை யுடையவன், என்று என்று - என்று பலகாலும் சொல்லி, ஓலம்இட - கூப்பிடும்படி, என்னை பண்ணி - என்னைச்செய்து, விட்டு இட்டு - கைவிட்டுப் போக விட்டு, ஒன்றும் - ஒருவகையாலும், உருவும் - தன் வடிவையும், சுவடும் - அடையாளத்தையும், காட்டான் - காட்டுகின்றிலன், ஏலம் - மயிர்ச்சாந்தையும், மலர் - மலர்களையுமுடைய, குழல் - கூந்தலையுடைய, அன்னைமீர்காள் - தாய்மார்களே, என்னுடை தோழியர்காள் - என்னுடைய தோழிமார்களே, என் செய்கேன் - யாது செய்வேன், பல காலஞ்சென்று - பலகாலங் கழிந்தாகிலும், ஆணை - அவன்மேல் ஆணையே, காண்பது - காணக்கடவேன், உங்களோடு - உங்களோடே, எங்கள் இடையில்லை - எனக்கு சம்பந்தமில்லை.

577. அஞ்சிறைய மடநாராய் அளியத்தாய் நீயும்நின்
அஞ்சிறைய சேவலுமாய் ஆவாவென் றெனக்கருளி
வெஞ்சிறைப் புள்ளுயர்த்தார்க்கென் விடுதூதாய்ச் சென்றக்கால்
வஞ்சிறையிலவன் வைக்கில் வைப்புண்டாலென்செய்யுமோ.

அம் - அழகான, சிறைய - சிறகுகளையுடைய, மடம் - இளமையுள்ள நாராய் - பெண்ணாரையே, அளியத்தாய் - தயையுள்ளவளே, நீயும் - நீயும், நின் - உன்னுடைய, அம்சிறைய - அழகான சிறகுகளையுடைய, சேவலும் ஆய் - ஆண் நாரையோடே கூடி, ஆவா என்று - ஐயோவென்று, எனக்கு அருளி - எனக்கு க்ருபைசெய்து, வெம்சிறை-விரோதி பயங்கரமான சிறகுகளையுடைய, புள் - பக்ஷியை, (பெரிய திருவடியை), உயர்த்தார்க்கு - கொடியாக எடுத்த சர்வேச்வரனுக்கு, என் - என்னால், விடு - விடப்பட்ட, தூதுஆய் - தூதாய் சென்றக்கால் - போனால், அவன் - அந்த சர்வேஶ்வரன், வன்சிறையில் - க்ரூரமான சிறையில், வைக்கில் - வைத்தால், வைப்புண்டால் - நீ வைக்கப்பட்டால், என் செய்யும் - (அவ்வைப்பு) என்ன குற்றத்தை யுண்டாக்கும்.

(576) திருவா. 8-2 7. (577) திருவா. 1-4-1.

578. பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பல்கோடி நூறாயிரமும்
மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா உன்
செவ்வடி செவ்வி திருக்காப்பு.

மல் - (சாணூராதி) மல்ல வர்க்கத்தை, ஆண்ட - (வென்று) வசமாக்கிக் கொண்ட, திண் - த்ருடமான, தோள் - தோள்களையுடையாய், மணி - நீல ரத்நம் போன்ற, வண்ணா - வடிவழகை யுடையவனே, பல்ஆண்டு - (இன்னும்) அசங்க்யாதமான வருஷங்களிலும், பல் ஆயிரத்துஆண்டு - (அதுக்குமேலே) தேவமாநத்தாலே அநேகமாயிர வருஷங்களிலும், பல்கோடி - (பின்னும் ப்ரஹ்மமாநத்தாலே) அநேகம் கோடிகளாய், நூறாயிரம் - அநேக லக்ஷங்களாயுமுள்ள வருஷங்களிலும், உன் - தேவரீருடைய, செவ்வடி - சிவந்த திருவடியி (திருமேனியி) னுடைய, செவ்வி - அழகுக்கு, திருக்காப்பு - ரக்ஷையானது, (உண்டாகவேணும்.)

579. அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி யாயிரம்பல்லாண்டு
வடிவாய்நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும்பல்லாண்டு
வடிவார்சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு
படைபோர்புக்கு முழங்கு மப்பாஞ்சசன்னியமும்பல்லாண்டே.

அடியோமோடும் - ஸ்வதஸ்ஸித்த தாஸ்யத்தையுடைய எங்களோடும், நின்னோடும் - ஸர்வசேஷியான உன்னோடும் (உண்டான ஸம்பந்தம்), பிரிவு இன்றி - விச்சேதமில்லாமல், பல்ஆயிரம் ஆண்டு - அநேகமாயிரம் வருஷங்கள் (செல்லவேணும்), வடிவாய் - நிறமுடைத்தாயிருக்கிற, (அதிஸுந்தரமான) நின் - தேவரீருடைய, வலமார்பினில் - வலமார்பில், வாழ்கின்ற - நித்யவாஸம் பண்ணாநின்ற, மங்கையும் - நித்ய யுவதியான பெரிய பிராட்டியாரும், பல் ஆண்டு - அநேக வருஷங்கள் (ஸுகமே வாழ்ந்தருளவேணும்), சோதி - தேஜஸ்ஸாலே, ஆர் - நிறைந்த, வடிவு - திருமேனியை யுடையனாய், வலத்து - (தேவரீருடைய) வலது பக்கத்தில், உறையும் - பொருந்தி வர்த்தியாநின்ற, சுடர் - உஜ்ஜ்வலனான, ஆழியும் - திருவாழி யாழ்வானும், பல்ஆண்டு - அநேக வருஷங்கள் படை - ஆயுதங்களையுடைய, போர் - யுத்தத்திலே, புக்கு - ப்ரவேசித்து, முழங்கும் - த்வநியாநின்ற, அப்பாஞ்சசன்னியமும் - அந்த ஸ்ரீபாஞ்சஜந்யாழ்வானும், பல்லாண்டு - பல வருஷங்கள் (ஸுகமே வாழ்ந்தருளவேணும்).

580. உறகலுறகலுறக லொண்சுடராழியே சங்கே
அறவெறி நாந்தகவாளே யழகிய சாரங்கமே தண்டே

(578) திருப்பல்லாண்டு. 1. (579) திருப்பல்லாண்டு. 2.
(580) பெரியா. திரு. 5.2 9.

இறவுபடாம லிருந்த வெண்மருலோக பாலீர்காள்
பறவையரையா வுறகல் பள்ளியறை குறிக்கொண்மின்.

ஒண் - அழகிதான நிறத்தையும், சுடர் - ஒளியையுடைய, ஆழியே - திருவாழியே, சங்கே - திருச்சங்கே, அற - சத்ருக்கள் சரீரமறும்படியாக, எறி - எறிகிற, நாந்தகம் - ஸ்ரீநந்தகமென்னும் பேரையுடைய, வாளே - வாளே, அழகிய சார்ங்கமே - அழகையுடைய வில்லே, தண்டே - கதையே, இருந்த - ஈஸ்வரன்வைக்க இருக்குமவர்களாய், எண்மர் - எட்டுத்திக்குக்கும் காவலராய்க் கொண்டு, உலோக பாலீர்காள் - உலகத்தை காக்குமவர்களே, இறவுபடாமல் - தப்பாமல், உறகலுறகலுறல் - உறங்காதே கொள்ளுங்கோள், உறங்காதே கொள்ளுங்கோள், உறங்காதே கொள்ளுங்கோள், பறவையரையா - பக்ஷிராஜனே, உறகல் - தூங்காதே கொள்ளும், (நீங்களெல்லாரும்) பள்ளியறை- அவனுடைய பள்ளியறையான என்சரீரத்தை, குறிக்கொள்மின் - குறிக்கொண்டு நோக்குங்கோளென்கிறார்.

581. அகலகில்லேன் ... ... 166-வது இலக்கம் காண்க.

582. வாழாள்பட்டுநின்றீருள்ளீரேல் வந்து மண்ணும் மணமும் [கொண்மின்
கூழாட்பட்டுநின்றீர்களை எங்கள்குழுவினிற் புகுதலொட்டோம்
ஏழாட்காலும் பழிப்பிலோம்நாங்க ளிராக்கதர் வாழிலங்கை
பாழாளாகப் படைபொருதானுக்கு பல்லாண்டு கூறுதுமே.

வாழ் - ஸ்வரூபமாயிருக்கிற, ஆள் - (பகவத்) தாஸ்யத்தை லபிக்கப்பெற்று, நின்றீர் - (கைங்கர்யத்தில்) நிலை பெற்றீராய்க் கொண்டு, உள்ளீரேல் - (ஆராவது) இருந்தீர்களேயாகில், வந்து - (எங்களோடு) வந்து, மண்ணும் - (அங்குரார்ப்பணத்துக்கு) ம்ருக் (ஸங்க்ரஹண கைங்கர்யத்) தையும், மணமும் - அவ்வுத்ஸவத்துக்கு நிர்வாஹகராயிருக்குமத்தையும், கொண்மின் - (பகவந்நியமநத்தினால்) பெறப்பாருங்கோள், கூழ் - கூழுக்கு (ப்ரயோஜநாந்தரத்துக்காக), ஆள்பட்டு - அடிமை பூண்டு, நின்றீர்களை - இருக்கிற உங்களை, எங்கள் - அநந்யப்ரயோஜநரான எங்களுடைய, குழுவினில் - சமூகத்தில், புகுதலொட்டோம் - ப்ரவேசிக்க ஸம்மதிபோம், நாங்கள் - நாங்கள், எழாள்காலும் - ஏழு தலை முறையாக, பழிப்பு இலோம் - (ப்ரயோஜநாந்தர ஸாதநாந்தர பரதையாகிற) குற்றமுடையோமல்லோம், இராக்கதர் வாழ் - ராக்ஷஸர்கள் ஸுகமாக வாஸம் பண்ணு நின்ற, இலங்கை- லங்கையிலுண்டான, ஆள் பாழாக - ஆள்கள் - நசிக்கும்படியாக, படை-யுத்தத்திலே, பொருதானுக்கு - சத்ரு ஸம்ஹாரம் பண்ணின சக்ரவர்த்தி திருமகனுக்கு, பல்லாண்டு - அநேக ஸம்வத்ஸரம் ஸுகமே வாழ்ந்தருளவேணுமென்று, கூறுதும் - சொல்லக்கடவோம்.

---

(582) திருப்பல்லாண்டு. 3.

583. பல்லாண்டென்று பவித்திரனைப் பரமேட்டியை
சார்ங்க மென்னும்
வில்லாண்டான்றன்னை வில்லிபுத்தூர் விட்டுசித்தன்
விரும்பிய சொல்
நல்லாண்டென்று நவின்றுரைப்பார்
நமோ நாராயணாயவென்று
பல்லாண்டும் பரமாத்மனைச் சூழ்ந்திருந்
தேத்துவர் பல்லாண்டே.

பவித்திரனை - (ஸர்வ ப்ரகாரத்தாலும்) பரிசுத்தனாய், பரமேட்டியை - ஸர்வோத்தமமான பரமபதத்திலெழுந்தருளியிருப்பவனாய், சார்ங்கமென்னும்- சார்ங்கமென்னும் திருநாமமுடைய, வில் - தனுஸ்ஸை, ஆண்டான் தன்னை, ஆளுமவனுமான ஸ்ரீமந்நாராயணன் விஷயமாக, வில்லிபுத்தூர் - ஸ்ரீவில்லி புத்தூரிலே அவதரித்த, விட்டு சித்தன் - பெரியாழ்வார், பல் ஆண்டு என்று - அநேககாலம் மங்கள முண்டாகவேணு மென்று, விரும்பியசொல் - விருப்பத் துட னருளிச்செய்த ஸ்ரீஸூக்தியை, நல்லாண்டு என்று - (இதை அனுசந்திக் கும்படியான) நல்லகாலம் (நேர்பட்டதே) என்று (கொண்டாடி), நவின்று உரைப்பார் - பலகால் சொல்லுமவர்கள், நம: - எனக்குரியே னல்லேன், நாரா யணாய - எம்பெருமானுக்கே உரியேன், என்று - என்று சொல்லிக்கொண்டு, பரமாத்மனை - ஸர்வாந்தர்யாமியான ஸர்வேஶ்வரனை, சூழ்ந்து யிருந்து - சுற் றும் இருந்து, பல் ஆண்டும் - அநந்த காலங்களிலும், பல்லாண்டு - பல்லாண்டு (என்று பாடி), எத்துவர் - ஸ்தோத்ரம் செய்வர்கள்.

584. தஸ்யாஞ்ச த்வத் க்ருபாவந் நிரவதிஜநதா விஶ்ரமார்ஹாவ காஶம் ஸங்கீர்ணம் தாஸ்ய த்ருஷ்ணா கலித பரிகரை: பும்பி ராநந்த நிக்நை: । ஸ்நேஹாதஸ்தாநரக்ஷா வ்யஸநிபிரஸயம் ஶார்ங்க சக்ராஸி முக்யை ராநந்தை- கார்ணவம் ஸ்ரீர்பவதி யுவயோராஹு ராஸ்தாந ரத்நம் ॥

ஹேஸ்ரீ: பகவதி - ஸர்வ ஸ்வாமியாகிய ஸ்ரீதேவியே, தஸ்யாம் ச - அந்த ஸ்ரீவைகுண்டத்தில், த்வத் - தேவரீர், க்ருபாவத் - க்ருபையைப்போல், நிர வதி - எல்லையில்லாத, ஜநதா - ஜந ஸமூஹங்களுக்கு, விஶ்ரம - இளைப்பாறு வதற்கு, அர்ஹ - தகுந்த, அவகாஶம் - இடத்தையுடையதும், தாஸ்ய - கைங் கர்யத்தில், த்ருஷ்ணா - ஆசையினால், கலித - க்ரஹிக்கப்பட்ட, பரிகரை: - துளசிமுதலிய வஸ்துக்களை யுடையவர்களாயும், ஆநந்த நிக்நை: - ஆநந்த பூர் ணர்களான, பும்பி: - நித்யஸூரிகளால், ஸங்கீர்ணம் - சூழப்பட்டதும், ஸ்நே ஹாத் - ஸ்நேஹத்தாலே, அஸ்தாந - காரணமில்லாமல், ரக்ஷா - ரக்ஷிப்பதில், வ்யஸநிபி: - அசக்தர்களான, சார்ங்க - வில், சக்ர - திருவாழி, அஸி-வாள்,

(583) திருப்பல்லாண்டு 12. (584) ஸ்ரீகுணரத்ந கோஶம் 24.

முக்யை: - முதலிய ஐந்து திவ்யாயுத ஆழ்வார்களால், அபயம் - பயமில்லாத தும், ஆநந்தைக - பரமாநந்தங்களுக்கே, அர்ணவம் - சமுத்ரம் போன்றது மான, ஆஸ்தாந ரத்நம் - (மிகவும் உயர்ந்த) திவ்யாஸ்தாநரத்நமண்டபமானது, யுவயோ: - தேவரீர்களிருவருக்கும், (என்று) ஆஹு: - சொல்லுகிறார்கள்.

585. ஆளுமாளா ராழியுஞ் சங்குஞ் சுமப்பார்தாம்
வாளும் வில்லுங்கொண்டு பின்செல்வார் மற்றில்லை
தாளுந்தோளுங் கைகளையாரத் தொழக் காணேன்
நாளு நாளுநாடுவ னடியேன் ஞாலத்தே.

ஞாலத்து - உலகத்தில், ஆளும் ஆளார் - உபய விபூதிகளிலும் மங்களாசாஸனபரரை ஆண்டவரல்லர், தாம் - தாம், ஆழியும் - திருவாழியும், சங்கும் - திருச்சங்கையும், சுமப்பார் - தாங்குவார், (அப்படி யானாலும்) வாளும் - நாந்தகத்தையும், வில்லும் - ஸ்ரீசார்ங்கத்தையும், கொண்டு - கொண்டு, பின் செல்வார் - பின் செல்வோர், மற்றுயில்லை - வேறொருவரில்லை, (நான் பின் செல்ல நினைத்தாலும்), தாளும் - திருவடிகளையும், தோளும் - திருத்தோள்களையும், கைகளை - என் கைகளைக்கொண்டு, ஆர - பூரணமாக, தொழ - வழிபட, காணேன் - நான் காணப் பெற்றிலேன், அடியேன் - சேஷத்வமே உருவமான நான், நாளும் நாளும் - நாள்தோறும், நாடுவன் - தேடா நின்றேன்.

586. அருளாத நீரருளி யவராவி துவராமுன்
அருளாழிபுட்கடவீ ரவர்வீதி ஒருநாளென்
றருளாழி யம்மானைக் கண்டக்கா லிதுசொல்லி
யருளாழி வரிவண்டே யாமுமென் பிழைத்தோமே.

ஆழி - வட்டமான, வரி - ரேகைகளையுடைய, வண்டே - வண்டே, அருள் - கிருபையை யுடையனான, ஆழி - திருவாழியையுடைய, அம்மானை - ஸ்வாமியை, கண்டக்கால் - கண்டபோது, அருளாதநீர் - (இவ்வளவில்) கிருபை செய்யாத நீர், அருளி - கிருபைபண்ணி, அவராவி - அவருடைய ஆத்மா, துவரா முன் - நீர்மை கெடுவதற்குமுன், அருளாழி - கருணைக்கடலான, புள் - பெரியதிருவடியை, அவர் வீதி - அவரிருக்கிற வீதியில், ஒரு நாள் - ஒருநாளாகிலும், கடவீரென்று - நடத்துவீரென்று, இது சொல்லி - இவ்வார்த்தையைச் சொல்லி, அருள் - கிருபை பண்ணவேணும், யாமும் - நாமும், என் பிழைத்தோம் - என்ன குற்றஞ் செய்தோம்.

587. உண்டுகளித்தேற் கும்பரென்குறை மேலைத்
தொண்டுகளித் தந்திதொழும் சொல்லும்பெற்றேன்
வண்டுகளிக்கும் பொழில்சூழ் திருப்பேரான்
கண்டுகளிப்பக் கண்ணுள் நின்றகலானே.

---

(585) திருவா. 8-3-3. (586) திருவா. 1-4 6.
(587) திருவா. 10-8-7.

வண்டுகளிக்கும் - வண்டுகள் மதுபாநம் பண்ணிக் களிக்கும்படியான, பொழில் சூழ் - சோலைகள் சூழ்ந்த, திருப்பேரான் - திருப்பேர் நகரையுடையவன், கண்டு களிப்ப - தன்னை யெப்பொழுதும் தரிசித்துக் களிக்கும்படி, கண்ணுள் நின்று - என் கண்ணுக்கு விஷயமாய் நின்று, அகலான் - போகின்றிலன், உண்டுகளித்தேற்கு - இப்படி நித்யாநுபவம் பண்ணிக்களித்த எனக்கு, உம்பர் - மேல் ஒரு தேசவிசேஷத்திலே போய் அநுபவிக்கும் அநுபவத்தில், என் குறை-என்ன குறைகிடந்தது, மேலைத் தொண்டு - அதிகமான கைங்கர்யரசமானது, உகளித்து - மிகுந்து, அந்தி - முடிவிலே, தொழும் சொல்லு பெற்றேன் - தொழுகைக்கு வாசகமான நமஃ என்கிற சப்தத்தைச் சொல்லப் பெற்றேன்.

588. தானுகந்த ஊர் ... ... ···550-வது இலக்கம் காண்க.

589. நமோ சிந்த்யாத்புதாக்லிஷ்ட ஜ்ஞாந வைராக்ய ராஶயே।
நாதாய முநயே அகாதபகவத் பக்தி ஸிந்தவே ॥

அசிந்த்ய - அளவிடக் கூடாதவைகளாயும், அத்புத - ஆச்சரியங்களாயும், அக்லிஷ்ட - வருத்தமற்றிருப்பவையாயு முள்ள, ஜ்ஞாந - ஜ்ஞாநமும், வைராக்ய - வைராக்யமும் (ஆகிய இவற்றினுடைய), ராஶயே-ராசியாயிருப்பவரும், முநயே - மநநம் பண்ணும் நெஞ்சுடையவரும், அகாத - நிலைக்க வொண்ணாத, பகவத் - ஷாட்குண்ய பரிபூர்ணனான பரவாஸுதேவ விஷயமான, பக்தி - பக்திக்கு, ஸிந்தவே - கடல் போன்றவருமான, நாதாய - ஸ்ரீமந்நாத முநிகள் பொருட்டு, நமஃ - நமஸ்காரத்தைச் செய்கிறேன்.

590 ஆஹ்லாதஶீத ... ... 430-வது இலக்கம் காண்க.

591. காலுமெழா கண்ணநீருநில்லா வுடல்சோர்ந்து நடுங்கி
குரல்மேலுமெழா மயிர்க்கூச்சுமறா எனதோள்களும் வீழ்வொழியா
மாலுகளாநிற்கும் என்மனனே உன்னை வாழத் தலைப்பெய்திட்டேன்
சேலுகளாநிற்கும் நீள்சுனைசூழ் திருமாலிருஞ்சோலையெந்தாய்.

சேல் - மத்ஸ்யங்கள், உகளா நிற்கும் - துள்ளி விளையாடத்தக்க, நீள் - பரப்பையுடைய, சுனை - சுனைகளாலே, சூழ் - சூழப்பட்ட, திருமாலிருஞ் சோலை யெந்தாய் - திருமாலிருஞ் சோலையிலுள்ள என்ஸ்வாமியே, காலும் - கால்களும், எழா - அடிபெயருகிறன வில்லை, கண்ண நீரும் - கண்களில் நீரும், நில்லா - இடைவிடாமல் பெருகாநின்றது, உடல் - சரீரமானது, சோர்ந்து - பரவசமாய், நடுங்கி - தடுமாறி, குரலும் - மிடற்றோசையும், மேலெழா - மேலெழுகிறதில்லை, மயிர்கூச்சம் - மயிர்கூச்செறிதலும், அறா-ஒழிகிறதில்லை, என - என்னுடைய, தோள்களும் - தோள்களும், வீழ்வொழியா-வீழ்வொழியா, என் மனம் - என்னுடைய மநஸ்ஸானது, (உன்னுபகாரத்தை நினைத்து), மால் உகளாநிற்கும் - பிச்சேறா நின்றது, (இப்படியிருக்க), உன்னை - உன்னை, வாழ - அநுபவித்து வாழுகைக்கு, தலைப்பெய்திட்டேன்-முடி சூடா நின்றேன்.

---

(589) ஸ்தோத்ர ரத்நம், 1. (591) பெரியா. திரு. 5-3-5.

592. ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்க காமோயஜேத ।

ஸ்வர்க்க காமஃ - சுவர்க்கத்தை இச்சிக்கிறவன், ஜ்யோதிஷ்டோமேந - ஜ்யோதிஷ்டோமம் என்கிற யாகத்தாலே, யஜேத - யாகம் செய்யக் கடவன்.

593. ஸாயுஜ்யமுபயோரத்ர போக்தவ்யஸ்யா விஸிஷ்டதா ।
ஸார்ஷ்டிதா தத்ர போகஸ்ய தாரதம்ய விஹீநதா ।

அத்ர - இவ்விடத்தில், உபயோஃ - சேதநேஸ்வரரிருவருக்கும், போக்தவ்யஸ்ய - போகிக்கப்படும் பதார்த்தங்கள், அவிசிஷ்டதா - சமானமா யிருக்குமென்பது, யத் - எதுவோ, தத் - அது, ஸாயுஜ்யம் - ஸாயுஜ்ய மென்னப்படும், தத்ர - அவ்விடத்தில், போகஸ்ய - ஆநந்தத்தினுடைய, தாரதம்ய - தாரதம்மியம், விஹீநதா-இல்லாமல் போவது (எதுவோ அதை), ஸார்ஷ்டிதா - ஸார்ஷ்டிதை யென்று சொல்லப்படுகிறது.

594. ஜ்ஞாநபக்த்யந்விதம் கர்ம ஜநகாதிஷு த்ருஸ்யதே ।
கர்மபக்த்யந்விதம் ஜ்ஞாநம் ப்ராயேண பரதாதிஷு ॥
கர்மஜ்ஞாநாந்விதா பக்திஃ ப்ரஹ்லாத ப்ரமுகாஸ்ரயா ॥

ஜ்ஞாநபக்தியந்விதம் - ஜ்ஞாந பக்திபோடு கூடின, கர்ம - கர்மயோகம், ஜநகாதிஷு - ஜநகர் முதலானவரிடத்தில், த்ருஸ்யதே - காணப்படுகிறது, கர்மபக்த்யந்விதம் - கர்ம பக்தியோடு கூடின, ஜ்ஞாநம் - ஜ்ஞாநயோகம், ப்ராயேண - பெரும்பாலும், பரதாதிஷு - ஜடபரதாதிகளிடத்தில், த்ருஸ்யதே - காணப்படுகிறது, கர்ம ஜ்ஞாநாந்வித - கர்மஜ்ஞானத்தோடு கூடின, பக்திஃ - பக்தியோகம், ப்ரஹ்லாத ப்ரமுக - ப்ரஹ்லாதன் முதலானவர்களிடத்தில், ஆஸ்ரயா - ஆஸ்ரயித்திருக்கிறது.

595. ப்ரஹ்மவிதாப்நோதி பரம் ததேஷா அப்யுக்தா ஸத்ய ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம யோ வேத நிஹிதம் குஹாயாம் பரமே வ்யோமந் ஸோஸ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்ரஹ்மணா விபஸ்சிதேதி ॥

ப்ரஹ்மவித் - ப்ரஹ்மஜ்ஞாந முடையவன், பரமாப்நோதி - பரமாத்மாவை யடைகிறான், தத் - அந்த ப்ரஹ்மத்தைக்குறித்து, ஏஷா - இந்த ரிக்கானது, அப்யுக்தா - அத்யயனம் பண்ணுமவர்களினால் சொல்லப்பட்டது, ஸத்யம் நிருபாதிக ஸத்தாஸ்ரயமாயும், ஜ்ஞாநம்-நித்ய ஜ்ஞாநைக ஸ்வரூபமாயும், அநந்தம் - அநந்தமாயும் (தேசகால வஸ்து பரிச்சேத ரஹிதமாயும்), குஹாயாம் - ஹ்ருதயமாகிற குகையில், நிஹிதம் - வைக்கப்பட்டதாயு மிருக்கிற, ப்ரஹ்ம - பரமாத்மாவை, யஃ - யாதொருவன், வேத - அறிகிறானோ, ஸஃ - அவன், பரமே வ்யோமந் - பரமபதத்தில், ஸர்வாந் காமாந் - எல்லா கல்யாண குணங்களையும்,

(592) (593) ரஹஸ்யத்ரயஸாரம். 22.
(594) (595) தை. உப. 2-ப்ர.

விபஶ்சிதா - ஸர்வஜ்ஞனை, ப்ரஹ்மணாஸஹ - பரமாத்மாவோடுகூட, அஶ்நுதே - அநுபவிக்கிறான்.

596. நிரஸ்தாதிஶயாஹ்லாத ஸுகபாவைக லக்ஷணா।
ஹேஷஜம் பகவத் ப்ராப்தி ரேகாந்தாத்யந்திகீ மதா ॥

நிரஸ்த - போக்கடிக்கப் பட்டிருக்கிற, அதிஶய - அதிசயத்தையுடைத்தாயிருக்கிற, ஆஹ்லாத - சந்தோஷ ரூபமான, ஸுகபாவைக - ஸுகமாகை யொன்றையுமே, லக்ஷணா - வடிவமாக உடைத்தாயிருப்பதாயும், ஏகாந்தா - துக்கங்களோடு சேராததாயும் (அன்றிக்கே அநந்யப்ரயோஜநமாயும்), ஆத்யந்திகீ - நித்யமுமான, பகவத் ப்ராப்தி: - பகவதனுபவமானது, பேஷஜம் - ஸம்ஸார துக்கத்திற்கு மருந்தா யிருக்குமென்று, மதா - இஷ்டமா யிருக்குமென்றபடி.

597. தஞ்சமாகிய தந்தைதாயொடு தானுமா யவையல்லனாய்
எஞ்சலிலமரர் குலமுதல் மூவர்தம்முள்ளு மாதியை
அஞ்சிநீ ருலகத்துள்ளீர்க ளவனிவனென்று கூழேன்மின்
நெஞ்சினா னினைப்பான்யவ னவனாகும் நீள்கடல்வண்ணனே.

தஞ்சம் ஆகிய - ஆதாரமாகிய, தந்தைதாயொடு - தந்தை தாயாரோடு, தானும் ஆய் - தானும் தந்தை தாயாராகி, அவை அல்லனாய் - அவ்வளவில் ஒழியாத சகலவித பந்துவுமாய், எஞ்சல் இல்-பகவதனுபவத்தில் குறையில்லாதவரான, அமரர்குலம் - நித்யசூரி சமூகத்திற்கு, முதல் - காரணபூதனாய், மூவர் தம்முள்ளும் - மும்மூர்த்திகளுள்ளும், ஆதியை - முக்கியமானவனைப்பற்ற, உலகத்தில் உள்ளீர்கள் - உலகத்திலுள்ளவராகிய, நீர் - நீங்கள், அஞ்சி - மேன்மையைக்கண்டு கலங்கி, அவன் -பரிச்சேதிக்க வொண்ணாத மகிமையையுடையவன் அவன், இவன் - நாம் நினைத்த வடிவானவன் இவன், என்று - என்று நினைத்து, கூழேல்மின் - சந்தேகப்படாதீர்கள், நெஞ்சினால் - மனத்தைக் கொண்டு, நினைப்பார் - ஆசிரிதரால் நினைக்கப்பட்டு உவந்தருளுகிறவன்,யவன் - யாவனொருவன், அவன் - அவனே, கடல் - கடல்போல், நீள் - அளவிறந்த, வண்ணன் - சுபாவத்தையுடைய சர்வேஶ்வரன், ஆகும் - ஆவன்.

598. தேஷாம் ஸததயுக்தாநாம் பஜதாம் ப்ரீதிபூர்வகம்।
ததாமி புத்தி யோகம் தம்யேந மாமுபயாந்தி தே ॥

யேந - எதனால், தே - முன் சொன்னவர்கள், மாம் - என்னை, உபயாந்தி - அடையுமவர்களாயும், ஸதத யுக்தாநாம் - எப்போதும் என்னிடத்தில் வைத்த மனதை யுடையவர்களாயும், ப்ரீதிபூர்வகம் - ப்ரீதியோடு, பஜதாம் - பஜிக்கிறவர்களாயு மிருக்கிற, தேஷாம் - அவர்களுக்கு, தம் - அந்த, புத்தி யோகம் - புத்தியோகத்தை, ததாமி - கொடுக்கிறேன்.

---

(596) வி. பு. 6-5-59. (597) திருவா. 3-6-9.
(598) ஸ்ரீகீதை. 10-10.

599. அவஸ்ய மநு ஹோக்தவ்யம் க்ருதம் கர்ம ஶுபாஶுபம் ।
நாஹுக்தம் க்ஷீயதே கர்ம கல்பகோடி ஶதைரபி ॥

க்ருதம் - செய்யப்பட்ட, ஶுபாஶுபம் - புண்யபாப ரூபமான, கர்ம - கர்மம், அவஶ்யம்-அவஶ்யமாய், அநுபோக்தவ்யம் - அநுபவிக்கத் தக்கது, கல்ப கோடி ஶதைரபி - நூறுகோடி ப்ரஹ்மகல்பமானாலும், நாபுக்தம் - அநுபவியாமல், கர்ம - கர்மம், நக்ஷீயதே - நசிக்காது.

600. மண்ணும் விண்ணும்மகிழக் குறளாய் வலங்காட்டி
மண்ணும் விண்ணும் கொண்ட மாயவம்மானே
நண்ணியுனை நான் கண்டுகந்து கூத்தாட
நண்ணி யொருநாள் ஞாலத்தூடே நடவாயே.

மண்ணும் - பூமியும், விண்ணும் - மேலுலகமும், மகிழ - உகக்கும்படியாக, குறள் ஆய் - வாமநனாய், (கையிலே தாரைநீர் விழுந்தவாறே வளர்ந்து), வலம் - சர்வசக்தித்வத்தை, காட்டி - ப்ரகாசிப்பித்து, மண்ணும்-பூமியையும், விண்ணும் - மேலுலகத்தையும், கொண்ட - அளந்து கொண்ட, மாயம் - ஆச்சரிய சேஷ்டிதத்தையுடைய, அம்மானே - ஸ்வாமியே, உன்னை - உன்னை, நான் - நான், நண்ணி - கிட்டி, கண்டு - கண்ணாலுங்கண்டு, உகந்து - ப்ரீதியுடையனாகி, கூத்து ஆட - கூத்தாடும்படியாக, நண்ணி - நீதானே வந்து கிட்டி, ஒரு நாள் - ஒரு நாளாகிலும், ஞாலத்து ஊடே - பூமியிலே, நடவாய் - நடந்து வரவேண்டும்.

601. அண்டத் தமரர்கள்சூழ அத்தாணி யுள்ளங்கிருந்தாய்
தொண்டர்கள் நெஞ்சிலுறைவாய் தூமலராள் மணவாளா
உண்டிட்டு உலகினையேழும் ஓராலிலையில் துயில்கொண்டாய்
கண்டுநான் உன்னையுகக்கக் கருமுகைப்பூச் சூட்டவாராய்.

அண்டத்துள் - பரமபதத்தினுள்ளே, அத்தாணி - அருகில் இருப்பையுடையரான, அமரர்கள் - நித்ய ஸூரிகள், சூழ - சூழ்ந்து ஸேவித்து நிற்க, அங்கு - அவர்கள் நடுவே, இருந்தாய்-(எல்லா லோகங்களிலும் தன்னாணை செல்லும்படி) யிருந்தவனாய், தொண்டர்கள் - (இந்த லீலாவிபூதியில் மோக்ஷத்தில் விருப்பமுள்ளவர்களாய்) உன் பக்கல் அன்புடையராயிருக்குமவர்களுடைய, நெஞ்சில் - மநஸ்ஸினுள்ளே, உறைவாய் - (பரமபதத்திலுங் காட்டில்) உகந்து பொருந்தி யிருப்பவனாய், தூ - தூய்தான, மலராள் - தாமரைப்பூவைப் பிறந்தகமாகவுடைய பெரிய பிராட்டியார்க்கு, மணவாளா - நாயகனானவனாய், ஏழுலகினையும் - ஸகலலோகங்களையும், உண்டிட்டு - ப்ரளயத்தி லழியாதபடி திருவயிற்றிலே வைத்து. ஓராலிலையில்-இளையதாயிருப்பதொரு ஆலிலையிலே, துயில் கொண்டாய் - கண்வளர்ந்தருளினவனாய், உன்னை - மாலையும் மயிர்முடியுமா

(599) (600) திருவா. 6-9-2.
(601) பெரியா. திரு. 2-7-9.

யிருக்கிற உன்னை, கண்டு - பார்த்து, நான் - ஶேஷபூதனான நான், உகக்க - ஸந்தோஷிக்கும்படியாக, கருமுகைப்பூ - (நீயுகக்கும்) கருமுகைப்பூவை, சூட்ட - சூட்டுகைக்கு, வாராய் - எழுந்தருளவேணும்.

602. மற்றிருந்தீர்கட் கறியலாகா மாதவனென்பதோ
ரன்புதன்னை
உற்றிருந்தேனுக் குரைப்பதெல்லாம் ஊமையரோடு
செவிடர்வார்த்தை
பெற்றிருந்தாளை யொழியவேபோய்ப் பேர்த்தொருதாயில்
வளர்ந்தநம்பி
மற்பொருந்தா மற்களமடைந்த மதுரைப்புறத் தென்னை
யுய்த்திடுமின்.

மற்றிருந்தீர்கட்கு - அத்யவஸாய நிஷ்டரான வுங்களாலே (த்வரா நிஷ்டையான வென்தசை), அறியலாகா - அறியக்கூடாது, மாதவனென்பது - ஶ்ரிய:பதி விஷயத்தில், ஓர் - அத்விதீயமான, அன்பு தன்னையுற்று - அன்பை யுடையேனாய், (அத்தாலே), இருந்தேனுக்கு - (அவனிருக்கு மிடம் தேடிப் போகமாட்டாமே) யிருக்கிறவெனக்கு, (நான் அவ்விடம் போய்ச் சேராமைக் குறைப்பாக), உரைப்பதெல்லாம் - நீங்கள் சொல்லுவதெல்லாம், செவிடரோடு செவிடரோடே, ஊமையர் வார்த்தை - ஊமைகள் வார்த்தை சொல்லுவதுபோ லிராநின்றது, பெற்றிருந்தாளை - தன்னைப் பிள்ளையாகப்பெற்ற தேவகிப் பிராட்டியை, ஒழிய-விட்டு, போய் - நந்தகோபகுலத்திலேபோய், பேர்த்தொரு தாய் - வேறு தாயாரான யசோதைப் பிராட்டியுடைய, இல் - திருமாளிகை யிலே, வளர்ந்த - வளர்ந்தவனாப், நம்பி - பூர்ணனான கண்ணன், மல் - மல்ல ரானவர்கள், பொருந்தா - யுத்தபூமியைக் கிட்டுவதற்கு முன்பே, மற்களம் - யுத்தபூமியை, அடைந்த - சென்று கிட்டின, மதுரைப்புறத்து - மதுரையின் பக்கத்திலே, என்னை - என்னை, உய்த்திடுமின் - கொடுபோய்க் கொடுங்கோ ளென்கிறாள்.

603. தவாம்ருதஸ்யந்திநி பாதபங்கஜே நிவேஶிதாத்மா கதமந்யதிச்சதி। ஸ்திதேரவிந்தே மகரந்த நிர்ப்பரே மதுவ்ரதோ நேக்ஷுரகம்ஹி வீக்ஷதே ॥

மகரந்த நிர்ப்பரே - மதுவாலே பூர்ணமான, அரவிந்தே - செந்தாமரை, ஸ்திதேஸதி - இருக்கிறவளவில், மதுவ்ரத: - மதுவே ஜீவனமான வண்டு, இக்ஷுரகம் - முள்ளிப்பூவை, நவீக்ஷதேஹி - கண்ணாலும் பாராதன்றே, (அதுபோல), தவ - தேவரீருடைய, அம்ருதஸ்யந்திநி - தேனேய் மலரும், பாதபங்கஜே - திருவடித் தாமரைகளிலே, நிவேஶிதாத்மா - போக்யதையில் அழுந்தின நெஞ் சானது, அந்யத் - வேறுவிஷயத்தை, கதம் இச்சதி - எப்படி ஆசைப்படும்.

(602) நாச்சி. திரு. 12-1. (603) ஸ்தோத்ரரத்நம். 27.

604. மத்பக்தைஸ் ஸஹஸம் வாஸஸ்தத வஸித்௭ௌ மயாபிவா ॥

மத் பக்தைஃ - என்னடியார்களோடு, ஸஹஸம் - கூடி, வாஸஃ - வாசம் பண்ணு, தத் - அது, அவஸித்ெதள - கிடைக்காவிடில், மயாபிவா - என்னோடாவது வாசம் பண்ணு.

605. நன்மையால் மிக்க நான்மறை யாளர்கள்
புன்மையாகக் கருதுவ ராதலில்
அன்னையா யத்தனு யென்னை யாண்டிடும்
தன்மையான் சடகோபனென் னம்பியே.

நன்மையால் - அபகாரிகளளவிலும் உபகரிக்கையாகிற நன்மையால், மிக்க - அதிசயித்தவர்களாய், நான்மறை - நாலு வேதங்களுக்கும், ஆளர்கள் - வ்யாஸபதம் செலுத்த வல்லவர்கள், (என்னை),புன்மையாக-பொல்லாங்காகவே, கருதுவர் - நினைப்பர், ஆதலில் - ஆதலால், அன்னையாய் - மாதாவுமாய், அத்தனாய் - பிதாவுமாய், என்னை - அடியேனை, ஆண்டிடும் - நியமித்துப்போருகிற; தன்மையான் - ஸ்வபாவத்தை யுடையராய், சடகோபன் - என்னுடைய ஶாட்யத்தைப் போக்கினவரான வாழ்வார், என்நம்பி - என்குறை தீர்க்கவல்ல பூர்த்தி யுடையவர்.

606. ராமாநுஜாங்க்ரி ஶரணோஸ்மி குலப்ரதீபஃத்வாஸீத் ஸயாமுந முநேஸ் ஸச நாதவம்ஶ்யஃ। வம்ஶ்யஃ பராங்குஶமுநேஸ்ஸச ஸோபி தேவ்யாஃ தாஸஸ்தவேதி வரதாஸ்மி தவேக்ஷணீயஃ ॥

ஹே வரத - ஓவரதனே, ராமாநுஜ - இராமாநுஜருடைய, அங்கிரி - திருவடிகளை, ஶரணம் - உபாயமாக, அஸ்மி - பற்றியிருக்கிறேன். ஸஃது - அவரோ, யாமுநமுநேஃ - ஸ்ரீ ஆளவந்தாருடைய, குல - வம்சத்தை, ப்ரதீபஃ - ப்ரகாசிப்பித்தவராக, ஆஸீத் - இருந்தார், ஸச - அந்த ஸ்ரீ ஆளவந்தாரும், நாதவம்ஶ்யஃ- ஸ்ரீமந் நாதமுனிகள் வம்சத்தில் பிறந்தவர், ஸஃச - அந்த ஸ்ரீமந் நாதமுனிகளும், பராங்குஶமுநேஃ - நம்மாழ்வாருடைய, வம்ஶ்யஃ - ஜ்ஞாந வம்ஶத்தில் பிறந்தவர், ஸோபி - அந்த ஆழ்வாரும், தவ - தேவரீருடைய, தேவ்யாஃ - பெரிய பிராட்டியாருக்கு, தாஸஃ - தாஸபூதர்; இதி - ஆகையினால், தவ - தேவரீருடைய, ஈக்ஷணீயஃ - கடாக்ஷத்திற்கு, அஸ்மி - பாத்திரபூதனாக யிருக்கிறேன்.

607. ஸசாசார்ய வம்ஶோ ஜ்ஞேயஃ।
ஆசார்யாணமஸாவஸா வித்யாஹ்பகவத்தஃ ॥

ஸச - அந்த, ஆசார்ய - ஆசார்யருடைய, வம்ஶஃ - வம்சத்தை, ஜ்ஞேயஃ - அறிந்து கொள்ளவேண்டும், ஆசார்யாணம் - ஆசார்யர்களுடைய பரம்பரையில், ஆபகவத்தஃ - பகவான் வரையில், அஸௌ அஸௌ - இன்னார் இன்னாரென்று, வித்யா - அறியவேண்டும்.

---

(604) ஸ்ரீபாஞ்ச. (605) கண்ணி. 4.
(606) வர. ஸ்த. 102. (607)

608. த்வயமர்த்தானுஸந்தாநேந ஸஹ ஸதைவம் வக்தா ॥

ஸதா - எப்போதும், ஏவம் - இந்த, த்வயம் - மந்த்ர ரத்நமான த்வயத்தை, அர்த்தாநுஸந்தாநேந ஸஹ - அர்த்தாநு சந்தானத்தோடுகூட, வக்தா - அநுஸந்தித்துக்கொண்டிரு.

609. ஸர்வ்வாபாஹ்ருதாநி மஹதாம் ஸுக்ருதாநி ததஸ்தத: ।
ஸஞ்சிந்வந் தீர ஆஸீத ஶிலஹாரீ ஶிலம் யதா ॥

சிலஹாரீ - உதிரி நெல்லைக்கொண்டு ஜீவிக்கிறவன், சிலம்யதா - அந்த நெல்லை எப்படி பொருக்குவனோ, ததா - அப்படியே, தீர:-புத்திசாலியானவன், மஹதாம் - மஹாத்மாக்களுடைய, ஸுவ்யாஹ்ருதாநி - குற்றமற்ற வசனங்களையும், ஸுக்ருதாநி - அப்படிப்பட்ட அநுஷ்டானங்களையும், ததஸ்தத: - அவ்வவ்விடத்தில், ஸஞ்சிந்வந் - ஸங்க்ரஹித்துக்கொண்டு, ஆஸீத - இருக்க வேண்டும்.

610. இச்சை ஸ்வரூபம் இரக்கம் உபாயம் இனிமை உபேயம்.

இச்சை - ஶேஷியினுடைய இச்சாநுகுணமாக நடக்கை, ஸ்வரூபம் - ஆத்மலக்ஷணம், இரக்கம் - ஶேஷியினுடைய க்ருபையே, உபாயம் - உபாயமாகும், இனிமை - சேஷியினுடைய முகமலர்த்தியே, உபேயம் - புருஷார்த்தமாகும்.

611. [1] அவிப்லவாய தர்மாணாம் பாலநாய குலஸ்யச ।
ஸங்க்ரஹாய ச லோகஸ்ய மர்யாதா ஸ்தாபநாயச ॥
ப்ரியாய மம விஷ்ணோஶ்ச தேவதேவஸ்ய ஶார்ங்கிண: ।
மநீஷீ வைதிகாசாரம் மநஸாபி நலங்கயேத் ॥

தர்மாணாம் - வர்ணாஶ்ரம தர்மங்களினுடைய, அவிப்லவாய - அழிதலில்லாமலிருக்கும் பொருட்டும், குலஸ்யச - குலதர்மங்களினுடைய, பாலநாயச - ரக்ஷித்தல் பொருட்டும், லோகஸ்ய - உலகத்தினுடைய, ஸங்க்ரஹாய - ஸங்க்ரஹத்தின் பொருட்டும், மர்யாதா - சாஸ்திர மரியாதைகளை, ஸ்தாபநாயச - நிலை நிறுத்தும் பொருட்டும், விஷ்ணோ: - வ்யாபகசீலனும், தேவ தேவஸ்ய - சமஸ்த தேவதைகளுக்கும் தேவனும், சார்ங்கிண: - சார்ங்கம் என்னும் வில்லையுடையவருமான ஸ்வாமிக்கும், மம - எனக்கும், ப்ரியாயச - சந்தோஷமுண்டாகும் பொருட்டும், மநீஷீ - மனதை ஜயித்த புத்திசாலியானவன், வைதிகாசாரம் - வைதீக ஆசாரங்களை, மநஸாபி - மனத்தினாலும், நலங்கயேத் - அதிக்ரமிக்கக் கூடாது.

[2] யதா ஹி வல்லபோ ராஜ்ஞோ நதீம் ராஜ்ஞா ப்ரவர்த்திதாம் ।
லோகோபயோகிநீம் ரம்யாம் பஹுஸஸ்ய விவர்த்திநீம் ॥

---

(608) சரணாகதி கத்யம். (609) லக்ஷ்மீதந்த்ரம்.
(610) குருபரம்பரை (611) லக்ஷ்மீதந்த்ரம். 18.

லங்வயந் ஶூலமாரோஹேத் அநபேக்ஷாபி தாம் ப்ரதி ।
ஏவம் விலங்வயந் மர்த்யோ மர்யாதாம் வேதநிர்மிதாம் ॥
ப்ரியோபி ந ப்ரியோ மௌஸமே மதாஜ்ஞா வ்யதிவர்த்தநாத் ।
உபாயத்வ க்ரஹம் தத்ர வர்ஜயேந் மநஸா ஸுதீ: ॥

ராஜ்ஞ: - ராஜனுக்கு, வல்லபோபி - பிரியனு யிருந்தபோதிலும், ராஜ்ஞ:- ராஜாவினுல், ப்ரவர்த்திதாம் - உண்டாக்கப்பட்ட, லோகோபயோகிநீம் - ஜனங்களுக்கு உபயோகமாயும், ரம்யாம் - அழகாயும், பஹுஸஸ்ய விவர்த்தி நீம் - அநேக பயிர்களை விருத்தி பண்ணும்படி யானதாயுமுள்ள, நதீம்-நதியை, தாம் ப்ரதி அநபேக்ஷ: அபி - அந்நதியைத் தான் அபேக்ஷியாதவனுகிலும், லங்கயந் - துற்பது முதலியவற்றைச் செய்தால், யதா - எப்படியானல், சூலம் - சூலத்தில், ஆரோஹேத் - எத்துவனே, ஏவம் - இந்தப்ரகாரமாக, வேதநிர் மிதாம் - வேதங்களினுல் செய்யப்பட்ட, மர்யாதாம் - தர்மங்களின் வ்யவஸ் தைகளை, விலங்கயந் - அதிக்ரமிக்கின்ற, மர்த்ய: - மனிதன், மே - எனக்கு, ப்ரியோபி - இஷ்டனுலும், அஸௌ - இப்படிப்பட்ட மனிதன், மத் - என் னுடைய, ஆஜ்ஞா - ஆஜ்ஞையை, வ்யதிவர்த்தநாத் - தாண்டினபடியாலே, நப்ரிய: - இஷ்டனுகான். ஸுதீ: - பண்டிதன், தத்ர - அந்த கர்மாநுஷ்டான விஷயத்தில், மநஸா - மனதினுல் உபாயத்வ மென்கிற புத்தியை, வர்ஜயேத்- விடவேண்டும். (பகவத் முகவிகாஸ ஹேதுவான ப்ராப்யத்தில் அந்வயிக் கின்றது).

612. யதா பஶ்ய: பஶ்யதே ருக்மவர்ணம் கர்தாரமீஶம் புருஷம் ப்ரஹ்மயோநிம் । ததா வித்வாந் புண்ய பாபே விதூய நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி ॥

பஶ்ய:-ஜீவாத்மாவானவன், யதா-எந்தகாலத்தில், ருக்ம வர்ணம்-ஸ்வர்ண ஸ்வரூபமாய் ப்ரகாசிக்கிற அப்ராக்ருத திவ்யமங்கள விக்ரஹத்தையுடைய வனுய், ஈஶம் - ஜகத்துக்கு நியாமகனுய், கர்த்தாரம் - ஜகத்கர்த்தாவாய், ப்ரஹ்மயோநிம் - ப்ரக்ருதிக்கு உபாதானகாரணமாயு மிருக்கிற, புருஷம் - பரமபுருஷனை, பஶ்யதே - சாக்ஷாத்கரிக்கிருனே, ததா - அந்த காலத்தில், வித்வாந் - அந்த ப்ரஹ்மதர்ஶி, நிரஞ்ஜந: - ப்ரக்ருதி சம்பந்தமில்லாதவனுய், புண்ய பாபே - புண்ய பாபங்களை, விதூய - நிரஸித்து, பரமம் ஸாம்யம் - அத்யந்த சாம்யத்தை, உபைதி - அடைகிருன்.

613. அகிஞ்சித்கரஸ்ய ஶேஷத்வாநுபபத்தி: ।

அகிஞ்சித் கரஸ்ய - கிஞ்சித்கார மில்லாதவனுக்கு, சேஷத்வ - அடிமை என்பது, அநுபபத்தி: - கிடைக்கமாட்டாது.

614. யா: க்ரியா: ஸம்ப்ரயுக்தாஸ்யுரேகாந்தகதபுத்திபி: ।
தாஸ்ஸர்வாஶ் ஶிரஸா தேவ: ப்ரதிக்ருஹ்ணாதிவை ஸ்வயம் ॥

---

(612) மு. உப. 3-1. (613)
(614) பாரதம்.

ஏகாந்தகத புத்திபி: - பரமைகாந்திகளால், ய: க்ரியா: - எந்த கைங்கர்யங்கள், ஸம்ப்ரயுக்தா: ஸ்யு: - செய்யப்பட்டனவோ, தா: ஸர்வா: - அந்தகைங்கர்யங்களெல்லாவற்றையும், தேவ: ஸ்வயம் - எம்பெருமான் தானே, ப்ரஸாதலையால், ப்ரதிக்ருஹ்ணாதி - அங்கீகரிக்கிறான்.

615. தேஹி மே ததாமி தே ।

மே - எனக்கு, தேஹி - கொடு, தே - உனக்கு, ததாமி - கொடுக்கிறேன்.

616. இன்றுவந் தித்தனையும் அமுதுசெய்திடப் பெறில்நான்
ஒன்று நூறாயிரமாகக் கொடுத்துப் பின்னுமாளுஞ் செய்வன்
தென்றல் மணங்கமழும் திருமாலிருஞ் சோலைதன்னுள்
நின்றபிரான் அடியேன் மனத்தே வந்து நேர்படிலே.

தென்றல் - தென்றற் காற்றானது, மணம் கமழும் - பரிமளம் கொடுவந்து வீசாநின்றுள்ள, திருமாலிருஞ்சோலை தன்னுள் நின்ற - திருமாலிருஞ்சோலைமலையி லிருக்கிற, பிரான் - உபகாரகனானவன், இன்று வந்து - இன்று என்னிடத்தே வந்து, இத்தனையும் - வெண்ணெயும் அக்காரவடிசிலுமாகிற இவ்வளவையும், அமுதுசெய்திடப் பெறில் - அமுது செய்தருளினால், நான் - நான், ஒன்று - ஒரு தடாவுக்கு, நூறாயிரமாக - நூறாயிரம் தடாவாக, கொடுத்து - கொடுப்பதுமன்றி, அடியேன் - அடியாட்டியான வென்னுடைய, மனத்து - மநஸ்ஸிலே, வந்து நேர்படில் - வந்து கூடினால், பின்னும் - அதுக்கு மேலே, ஆளும் செய்வன் - காலமுள்ளதனையும் அடிமையும் செய்வேனென்கிறாள்.

617. ப்ரஸாத பரமௌ நாதௌ மம கேஹ முபாகதௌ ।
தந்யோஹ மர்ச்சயிஷ்யாமீத்யாஹ மால்யோப ஜீவந: ॥

ப்ரஸாத - அநுக்ரஹத்தையே, பரமௌ - பிரதானமாக வுடைய, நாதௌ - (அடியேனுக்குத் தஞ்சமாகிய) ராமகிருஷ்ணர்களிருவரும், மம - அடியேனுடைய, கேஹம் - குடிசையைக்குறித்து, உபகதௌ - எழுந்தருளினார்கள், தந்ய: - நல்வினையினனாகிய, அஹம் - அடியேன், அர்ச்சயிஷ்யாமி - பூஜை செய்யப்போகிறேன், இதி - என்று, மால்யோபஜீவந: - (மாலைகட்டி விற்றுப் பிழைக்கின்ற) மாலாகாரனென்பவன், ஆஹ - உரைத்தான்.

618. ஸுகந்தமேதத் ராஜார்ஹம் ருசிரம் ருசிராநநே ।
ஆவயோர் காத்ர ஸத்ருஸம் தீயதா மநுலேபநம் ॥

ஹே ருசிராநநே - ஓ சௌந்தர்யமான முகமுடைய குப்ஜையே, ஏதத் - இது, ஸுகந்தம் - பரிமள திரவ்யம் சேர்ந்தவை, ஏதத் - இது, ராஜார்ஹம் - ராஜாக்களுக்குத் தகுந்தது, ஏதத் - இது, ருசிரம் - குங்கும புஷ்ப காந்தியு

(615) (616) நாச். 9-7.
(617) வி. பு. 5 9-20, (618) வி. பு. 5-20-3.

டையது, (ஆகையால்), ஆவயோ: - எங்களுடைய, காத்ரஸத்ருசம் - சரீரத்திற்குத் தகுதியான, அநுலேபநம் - உயர்ந்த சந்தனத்தை, தீயதாம் - கொடுக்கத் தக்கது.

619. நோற்றநோன்பிலேன் நுண்ணறிவிலேன் ஆகிலும் உன்னைவிட்
டொன்றும்
ஆற்ற கிற்கின்றிலேன் அரவினணை யம்மானே
சேற்றுத்தாமரை செந்நெலூடுமலர் சிரிவர மங்கலநகர்
வீற்றிருந்த எந்தாய் உனக்கு மிகையல்லேனங்கே.

நோற்ற - பலன் சித்திக்கும்படி அநுஷ்டிக்கத்தக்குறிய, நோன்பு - கருமயோகம், இலேன் - உடையேனல்லேன், நுண் அறிவு - நுட்பமான ஜீவபரவிஷய ஞானயோகத்தை, இலேன் - உடையேனல்லேன், ஆகிலும் - ஆனாலும், இனி - உன்னுடைய குணாநுபவம் பிறந்தபின், உன்னை - ரக்ஷகனான உன்னை, விட்டு - நீங்கி, ஒன்றும் - ஒருக்ஷணகாலமும், ஆற்ற கிற்கின்றிலேன் - சகிக்க சக்தனல்லேன், அரவு - திருவனந்தாழ்வானை, இன் அணை - இனிதாகிய சயனமாகக் கொண்டு, (அவனுக்குத் திருமேனியை உபகரித்த), அம்மானே - சுவாமியே, சேற்றில் - சேற்று நிலத்தில், தாமரை - தாமரையானது, செந்நெல் ஊடு - செந்நெல்லோடே கலந்து, மலர் - மலரும்படியான, சிரீவரமங்கலநகர் - ஸ்ரீவர மங்கல நகரிலே, வீற்றிருந்த - எழுந்தருளி யிருந்த, எந்தாய் - எனக்கு உபகாரகனானவனே, அங்கு - அங்கு, (நீயிருக்கிற இருப்பில்), உனக்கு - ரக்ஷணகுணமுள்ள உனக்கு, மிகை - ரக்ஷ்யவர்க்கத்தில் அகப்படாதவன், அல்லேன் - அல்லேன்.

620. நதர்மநிஷ்டோஸ்மி நசாத்மவேதீ நபக்திமாந் த்வச் சரணாரவிந்தே । அகிஞ்சநோநந்யகதிஸ் ஶரண்ய த்வத் பாதமூலம் ஶரணம் ப்ரபத்யே ॥

நதர்ம நிஷ்ட: அஸ்மி - கர்மயோகத்தில் பக்தியுடையவனல்லேன், நச ஆத்மவேதீ - ஜ்ஞாநயோகமுடையவனல்லேன், த்வச் சரணாரவிந்தே - தேவரீர் திருவடித்தாமரைகளில், ந பக்திமாந் - அநவரத பக்தியுடையவனல்லேன், அகிஞ்சந: - கைமுதலற்றவன், அநந்யகதி: - வேறு ரக்ஷகரில்லாதவன், சரண்ய - ஓரக்ஷகனே, த்வத் பாதமூலம் - தேவரீர் திருவடிகளை, ஶரணம் - உபாயமாக, ப்ரபத்யே - அத்யவஸிக்கிறேன்.

621. ஸத்கர்ம நைவகில கிஞ்சந ஸஞ்சிநோமி விஜ்ஞாய வஸ்யரஹிதாநது வித்யதேமே । கிஞ்ச த்வதஞ்சித பதாம்புஜ பக்தி ஹீந: பாத்ரம் பவாமி பகவந் பவதோ தயாயா: ॥

ஹே பகவந் - ஜ்ஞாந பலைஶ்வர்ய வீர்ய தேஜஸ் ஶக்தி பூர்ணனே, ஸத் கர்ம - யஜ்ஞம் தாநம் முதலிய நல்ல கர்மங்களில், கிஞ்சந - கொஞ்சமேனும்,

(619) திருவாய்மொழி. 5-7-1. (620) ஸ்தோத்ர ரத்நம். 22.
(621) வைகுண்ட ஸ்தவம். 88.

நைவ ஸஞ்சிநோமி கில - சம்பாதிக்கப்போகிறே னில்லை, மே - எனக்கு, வித்யா அபி - ஜ்ஞாநமும்கூட, அவத்ய ரஹிதா - சந்தேகம் முதலிய தோஷங்களில்லாததாய், ந து வித்யதே - இல்லை, கிஞ்ச - பின்னும், த்வத் - தேவரீருடைய, அஞ்சித - பூஜ்யமான, பதாம்புஜ - திருவடித்தாமரைகளில், பக்தி ஹீநః - பக்தியில்லாத நான், பவதః - தேவரீர், தயாயாః - தயைக்கு, பாத்ரம் - பாத்திரனாக, பவாமி - ஆகிறேன்.

622. முளிந்தீய்ந்த வெங்கடத்து மூரிப்பெருங் களிற்றால்
விளிந்தீய்ந்த மாமரம்போல் வீழ்ந்தாரை நினையாதே
அளிந்தோர்ந்த சிந்தை நின்பாலடியேற்கு வானுலகம்
தெளிந்தே யென்றெய்துவது திருவிண் ணகரானே.

முளிந்து தீய்ந்து-(தானே) உலர்ந்து எரிந்து போன (மரங்களையுடைய), வெம் - அதிக்ரூரயான, கடத்து - காட்டிலே யுள்ளதாய், மூரி - பலிஷ்டமான, பெரும் - பெரிய, களிற்றால் - யானையினால், விளிந்தீய்ந்த - தள்ளப்பட்டதான, மா - பெரிய, மரம்போல் - மரத்தைப்போல, வீழ்ந்தாரை - நசித்துப் போனவரை, நினையாதே - மநோரதியாமல், நின்பால் - உன் விஷயத்தில், தெளிந்து - த்ருடாத்யவஸாயத்தையுடையனாய், அளிந்து-ஸ்நேஹத்தையுடையனாய், ஓர்ந்த - அநவரதபாவனையையுடைய, சிந்தை - மநஸ்ஸையுடையனான, அடியேற்கு - அடியேனுக்கு, வானுலகம் - பரமபதத்தை, என்று - எப்போது, எய்துவது - கொடுக்கப் பார்க்கிறாய், திருவிண்ணகரானே - திருவிண்ணகர் என்னும் திவ்விய தேசத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்வாமியே.

623. கூவிக்கொள்ளும் ... 435-வது இலக்கம் காண்க.

624. இந்நின்ற நீர்மை ... 427-வது இலக்கம் காண்க.

625. மாயம் செய்யேலென்னை உன்திருமார்வத்து மாலைநங்கை
வாசம்செய் பூங்குழலாள் திருவாணை நின்னாணை கண்டாய்
நேசம்செய்துன்னோ டென்னை யுயிர்வேறின்றி யொன்றாகவே
கூசம்செய்யாது கொண்டா யென்னைக்கூவிக் கொள்ளாய்
[வந்தந்தோ.

என்னை - உன்னைப் பிரிந்தால் முடியும்படியானஎன்னை, மாயம்செய்யேல் - வஞ்சியா தொழியவேணும், உன் - உன்னுடைய, திருமார்பத்து - திருமார்பிலே, மாலை - சுவர்ணமாலைபோலே யிருக்கிற, நங்கை - உன்னைப்போலே சகல கல்யாணகுணபூர்ணையான, வாசம் செய்பூங்குழலாள் - பரிமளம் வீசுகிற மலரையணிந்த கூந்தலை யுடையவளாய், திரு - விபூதிக்கு அபிமாநிநியான பெரிய பிராட்டியினுடைய, ஆணை - ஆணையானது, நின் - எல்லா உலகங்களையும் உன்னாணையாலே நிர்வஹிக்கிற உனக்கு, ஆணை- ஆணையாக, கண்டாய் - இப்படி யாணையிட்டு நிர்பந்திக்கிறது விரைவாலே

(622) பெரிய. தி. 6-3 8. (625) திருவா. 10-10.2.

என்று நினைத்து, நேசம் செய்து - நிர்ஹேதுகமாக சிநேகித்து, உன்னோடு - ஹேயப்ரத்யநீகனான வுன்னோடே, என்னை - ஹேயஸம்ஸ்ருஷ்டனான என்னை, உயிர் வேறுயின்றி - ஆத்மபேத முண்டாகாதபடி, ஒன்று ஆகவே - ஒன்றேயாம்படி, கூசம் செய்யாது - என் தாழ்வைக்குறித்துக் கூசாதே, கொண்டாய் - அங்கீகரித்தருளினாய், என்னை - இப்படி உன் ப்ருவ்ருத்தியை யறிந்திருக்கிற என்னை, வந்து - என் முன்னே வந்து, கூவிக் கொள்ளாய்-திருமிடற்றோசையைக் காட்டி அழைத்துக்கொண்டருளவேணும், அந்தோ - ஐயோ, (நீயே விரையவேண்டிய காரியத்துக்கு நான்) ஆணையிட வேண்டியிருப்பதே.

626. பையர வினணைப் பள்ளியினாய் பண்டையோ
மல்லோம் நாம் நீ யுகக்கும்
மையரியொண் கண்ணினாருமல்லோம் வைகி
என்சேரி வரவொழி நீ
செய்யவுடையும் திருமுகமுஞ் செங்கனி
வாயுங் குழலும் கண்டு
பொய்யொருநாள் பட்டதே யமையும்
புள்ளுவம் பேசாதே போகுநம்பீ.

பை - படத்தையுடைய, அரவினணை - திருவநந்தாழ்வானாகிற படுக்கையை, பள்ளியினாய் - திருப்பள்ளியாகவுடையனாய், நம்பீ - பூர்ணனானவனே, நாம் - நாங்கள், (உன் மாயையில் அகப்படுகைக்கு), பண்டையோமல்லோம் - பழையவர்களன்று அன்றியும், நீ உகக்கும் - நீ விரும்பத்தக்கவர்களாய், மை - மையணிந்து, அரி - செவ்வரி படர்ந்து, ஒண் - ஒளி பொருந்திய, கண்ணினாருமல்லோம் - கண்களையுடையவர்களு மல்லோம், நீ - நீ, வைகி - தங்கி, என் - என்னுடைய, சேரி - இருப்பிடத்தில், வரவு ஒழி - வாராதே கொள், செய்ய - சிவந்த, உடையும் - திருப்பரியட்டத்தையும், திருமுகமும் - திருமுக மண்டலத்தையும், செம் - சிவந்த, கனி - கோவைக்கனியையொத்த, வாயும் - திருப்பவளத்தையும், குழலும் கண்டு - திருக்குழலையும் கண்டு, பொய் - உன்னுடைய பொய்யான வார்த்தைகளை மெய்யென்று நம்பி, ஒரு நாள் பட்டதே - ஒரு நாள் பட்டபாடே, அமையும் - போதும், புள்ளுவம் பேசாது - க்ருத்ரிமமான வார்த்தைகளைச் சொல்லாமல், போகு - இவ்விடம் விட்டு போவென்கிறாள்.

627. யஸ்ஸர்வஜ்ஞ꞉ ஸர்வவித்ய ஸஜ்ஞாநமயம்தப꞉ ।
தஸ்மாதேதத் ப்ரஹ்மரூப மந்நஞ்ச ஜாயதே ॥

ய꞉ - எந்த (அக்ஷர) ப்ரஹ்மம், ஸர்வஜ்ஞ꞉ - எல்லாவற்றையும் அறிந்ததோ, ய꞉ - எந்த ப்ரஹ்மம், ஸர்வவித் - எல்லாவிசேஷங்களையும் அறியுமோ, யஸ்ய - எந்த பிரம்ஹத்திற்கு, தப꞉ - சங்கல்பமானது, ஜ்ஞாநமயம் - ஜ்ஞாந

(626) பெருமா. திரு. 6-7. (627) மாண். உப. 1-10.

மேபோ, தஸ்மாத் - அந்த ப்ரஹ்மத்திலிருந்து, ஏதத் - முன் சொன்னபடி, ப்ரஹ்ம நாம ரூபந்நஞ்ச - நாமரூபாத்மகமாகிய ப்ரபஞ்சம், ஜாயதே - உண்டாயிற்று.

628. அவிஜ்ஞாதா ஸஹஸ்ராம்ஸு: ।

அவிஜ்ஞாதா - ஆச்ரிதர்களுடைய தோஷங்களை அறியாதவன், ஸஹஸ்ராம்சு: - அபரிமிதமான ஜ்ஞானத்தை யுடையவன்.

629. அவிஜ்ஞாதா ஹி பகவாந் ஆகஸ்ஸு கமலேக்ஷண: ।
ஸதாஜகத் ஸமஸ்தஞ்ச பஸ்யந்நபி ஹ்ருதிஸ்தித: ॥

கமலேக்ஷண: - தாமரைபோன்ற திருக்கண்களையுடைய ஈஸ்வரன், ஸதா - எப்பொழுதும், ஹ்ருதி - மனதில், ஸ்தித: - இருந்துகொண்டு, ஸமஸ்தம் - எல்லா, ஜகத் - லோகங்களையும், பஸ்யந்நபி - பார்த்துக் கொண்டிருந்தாலும், பக்தாநாம் - அடியார்களுடைய, ஆகஸு - அபராதங்களை, அவிஜ்ஞாதாஹி - தெரியாதவ னல்லவா.

630. பராஸ்ய ஸக்திர் விவிதைவ ஸ்ரூயதே ।

அஸ்ய - இந்த ஈஸ்வரனுடைய, பர: - சிரேஷ்டமான, சக்தி: - சாமர்த்தியமானது, விவிதைவ - அநேகவிதமாக, ஸ்ரூயதே - ஸ்ருதிகளில் சொல்லப் படுகிறது.

631. நஹிம்ஸ்யாத் ஸர்வா பூதாநி ॥

ஸர்வா பூதாநி - எல்லா ஜந்துக்களையும், நஹிம்ஸ்யாத் - ஹிம்சிக்கக் கூடாது.

632. [1] பரத்ரவ்யேஷ்வபித்யாநம் மநஸாநிஷ்ட சிந்தநம் ।
விதயாபிநிவேஸஸ்ச த்ரிவிதம் கர்மமாநஸம் ॥

[2] பாருஷ்ய மந்ருதம் சைவ பைசுநஞ்சைவ ஸர்வஸ: ।
அநிபத்த ப்ரலாபஸ்ச வாங்மயம்ஸ்யாச் சதுர்விதம் ॥

[3] அதத்தாநா முபாதாநம் ஹிம்ஸா சைவா விதாநத: ।
பரதாரோபஸேவாச ஸாரீரம் த்ரிவிதம் ஸ்ம்ருதம் ॥

1. பரத்ரவ்யேஷு - பிறருடைய திரவ்யங்களை, அபித்யாநம் - அபேக்ஷிப்பதும், மநஸா - மனதினால், அநிஷ்டசிந்தநம் - இதரர்களுக்கு இஷ்டமில்லாததைக் சிந்திக்கிறதும், விததா - வேத விருத்தமான, அபிநிவேஸ: ச - அக்கிரமங்களை இச்சிப்பதுமான, த்ரிவிதம் - மூன்று விதமான தொழில்களும், மாநஸ - மனதினால், கர்ம - செய்யப்பட்ட பாபங்கள்,

---

(628) ஸஹஸ்ரநாமம். (629)
(630) ஸ்வேதா. உப. (631)
(632) மநு. ஸ்மி. 12 5.

2. பாருஷ்யம் - கொடிய வாக்கியங்களும், அந்ருதஞ்சைவ - பொய்யும், பைசுநஞ்சைவ - எல்லாவிதத்தாலும் கோள் சொல்லுகையும், அநிபத்த - சாஸ்திரத்திற்குக் கட்டுப்படாமல், ப்ரலாப: - வார்த்தை சொல்லுகையுமான, சதுர்விதம் - இந்நான்கும், வாங்மயம் ஸ்யாத் - வாக்கினால் செய்யப்பட்ட பாபங்கள்.

3. அதத்தாநாம் - ஒருவன் இஷ்டப்பட்டுக் கொடுக்காத, உபாதாநம் - த்ரவ்யத்தை யெடுப்பதும், அவிதாநத: - சாஸ்திரத்தில் விதியாத, ஹிம்ஸாச - ஹிம்சை பண்ணுவதும், பரதார - பிறர் மனைவியோடு, உபஸேவாச - கலப்பதுமாகிய, த்ரிவிதம் - இம்மூன்றும், சாரீரம் - சரீரத்தாலே செய்யப்பட்ட பாபங்கள் என்று, ஸ்ம்ருதம் - நினைக்கவேண்டும்.

633. [1] யேது ஸாமாந்ய பாவேந மந்யந்தே புருஷோத்தமம் ।
தேவை பாஷண்டி நோஜ்ஞேயா: ஸர்வகர்ம பஹிஷ்க்ருதா: ॥
[2] யஸ்து நாராயணம் தேவம் ஸாமாந்யே நாபிமந்யதே ।
ஸயாதி நரகம் கோரம் யாவச் சந்த்ர திவாகரம் ॥

1. யேது - எவர்கள், புருஷோத்தமம் உத்தமபுருஷனான ஸர்வேஶ்வரனை, ஸாமாந்யபாவேந - ப்ரஹ்மருத்ராதிகளுடன் சமானமாக, மந்யந்தே - நினைக்கிறார்களோ, தேவை - அவர்களே, பாஷண்டிந: - பாஷண்டிகளென்றும், ஸர்வகர்ம - எல்லாக் கருமங்களினின்றும், பஹிஷ்க்ருதா: - வெளிப்படுத்த வேண்டுமென்றும், ஜ்ஞேய: - அறியத்தக்கது.

2. யஸ்து - எந்த புருஷன், தேவம் நாராயணம் - ஸர்வஸ்வாமியான ஸ்ரீமந் நாராயணனை, ஸாமாந்யேந - இதரதேவதா சமானமாக, அபிமந்யதே - நினைக்கிறானோ, ஸ: - அவன், யாவச்சந்த்ர திவாகரம் - சூரிய சந்திரர்களிருக்கும் வரையில், கோரம் - பயங்கரமான, நரகம் - நரகத்தை, யாதி - அடைகிறான்.

634. அந்த: ப்ரவிஷ்ட: ஶாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா ।

(பரமாத்மாவானவன்) ஜநாநாம் - ஜனங்களுடைய, அந்த: - ஹ்ருதயத்தில், ப்ரவிஷ்ட: - இருந்துகொண்டு, ஶாஸ்தா - நியாமகனாகவும், ஸர்வாத்மா அந்த: - எல்லா ஆத்மாக்களுக்கும் ஆத்மாவாகவும் இருக்கிறான்.

635. [1] தமீஶ்வராணாம் பரமம் மஹேஶ்வரம் ।

ஈஶ்வராணாம் - ப்ரஹ்மாதி தேவதைகளுக்கும், பரமம் - உத்க்ருஷ்டமான, மஹேஶ்வரம் - ஸர்வஸ்வாமியான, தம் - அந்த ஸர்வேஶ்வரனை.

[2] ந தத் ஸமஶ்சாப்யதிகஶ்ச த்ருஶ்யதே ।

தத்ஸமஶ்ச - ஸர்வேஶ்வரனோடு சமானனும், அப்யதிகஶ்ச - அதிகனானவனும், நத்ருஶ்யதே - காணப்படவில்லை.

---

(633) (634) யஜுர். ஆரண. 3. ப்ரஶ். 20.
(635—1) ஶ்வே. உப. (635—2) ஶ்வே. உப.

636. அஜோபிஸந் நவ்யயாத்மா பூதாநாமீஸ்வரோபி ஸந் ।
ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாம் யாத்மமாயயா ॥

அஜஃ அபிஸந் - பிறப்பில்லாதவனாயிருந்தபோதிலும், அவ்யயாத்மா அபிஸந் - அழிவில்லாதவனா யிருந்தபோதிலும், பூதாநாம் - ஜந்துக்களுக்கு, ஈஸ்வரோபிஸந் - நாயகனா யிருந்தபோதிலும், ஸ்வாம் - என்னுடையதான, ப்ரக்ருதிம் - ப்ரக்ருதியை, அதிஷ்டாய - அதிஷ்டித்து; ஆத்மமாயயா-எனது ஸங்கல்பத்தால், ஸம்பவாமி - அவதரிக்கிறேன்.

637. தமருகந்த தெவ்வுருவ மவ்வுருவம் தானே
தமருகந்த தெப்பேர் மற்றப்பேர் தமருகந்த
தெவ்வண்ணம் சிந்தித் திமையா திருப்பரே
அவ்வண்ண மாழியானும்.

ஆழியான் - சக்ராயுதனான ஸர்வேஸ்வரன், தமர் - பக்தர், உகந்தது - விரும்பியது, எவ்வுருவம் - எந்த விக்ரஹமோ, அவ்வுருவம் - அந்த விக்ரஹத்தை, தானே - ஸ்வயமே, ஆம் - ஸ்வீகரிக்கும், மற்று - இப்படியேயன்றிக்கே, தமர் - பக்தர், உகந்தது - விரும்பியது, எப்பேர் - எந்தத்திருநாமமோ, அப்பேர் - அந்தத்திருநாமத்தை, ஆம் - அங்கீகரிக்கும், தமர் - பக்தர், உகந்து-விரும்பி, எவ்வண்ணம் - எந்த ப்ரகாரத்தை, சிந்தித்து - அநுஸந்தித்து, இமையாதிருப்பர் - இமை கொட்டாமல் நிற்பர்களோ (அநவரத பாவனை பண்ணுகிறார்களோ), அவ்வண்ணம் - அந்த ப்ரகாரத்தை யுடையனாய், ஆம் - இருக்கும்.

638. யோந்யதா ஸந்தமாத்மாநம் அந்யதா ப்ரதிபத்யதே ।
கிந்தேந ந க்ருதம் பாபம் சோரேணாத் மாபஹாரிணா ॥

அந்யதா ஸந்தம் - பரமாத்வுக்கு சேஷபூதனாயிருக்கிற, ஆத்மாநம் - ஆத்மாவை, யஃ - யாதொருவன், அந்யதா - ஸ்வசேஷமாக (ஸ்வதந்திரமாக), ப்ரதிபத்யதே - எண்ணுகிறானோ, தேந - அந்த, ஆத்மாபஹாரிணா - ஆத்மாபஹாரத்தைச்செய்கிற, சோரேண - திருடனாலே, கிம்பாபம் - என்ன பாபந்தான், நக்ருதம் - செய்யப்படவில்லை? (எல்லா பாபங்களும் செய்தவனாகிறான்.)

639. உதாராஃ ஸர்வ ஏவைதே ஜ்ஞாநீத்வாத்மைவ மே மதம் ।
ஆஸ்திதஃ ஸஹி யுக்தாத்மா மாமேவா நுத்தமாம் கதிம் ॥

ஏதேஸர்வே ஏவ - இவர்கள் எல்லோருமே, உதாராஃ - வண்மை யுடையோர், ஜ்ஞாநீது - ஜ்ஞாநிபோல, ஆத்மா ஏவ - (எனது) ஆத்மாவென்றே, மே-எனது, மதம் - கொள்கை, அநுத்தமாம் - உத்தமமான, கதிம் - ப்ராப்யமான, மாமேவ - என்னையே, யுக்தாத்மா - கூடினவனாய், ஆஸ்திதஸ்ஸஹி - த்யாநம்பண்ணுவானவனே.

(636) ஸ்ரீகீதை 4-6. (637) முதல் திருவ. 44.
(638) பார. ஆதி. 74-27. (639) ஸ்ரீகீதை. 7-18.

640. ஆளுமாளார் ... ... 585-வது இலக்கம் காண்க.

641. ஐஹலௌகிக மைஸ்வர்யம் ஸ்வர்ஹாஷ்யம் பாரலௌகிகம் ।
கைவல்யம் ஹஹவந்தஞ்ச மந்த்ரோயம் ஸாயயிஷ்யதி ॥

அயம் - இந்த, மந்த்ர - திருமந்திரமானது, ஐஹலௌகிகம் - இவ்வுலகிலுண்டான ஐஸ்வர்யமும் பசுபுத்ரரத்நாதி. ஐசுவரியங்களையும், ஸ்வர்காத்யம் - ஸ்வர்க்கம் முதலான, பாரலௌகிகம் - பரலோக ஐஸ்வர்யங்களையும், கைவல்யம் - ஆத்மாநுபவத்தையும், பகவந்தஞ்ச - பரமாத்மாநுபவ ஜநித ப்ரஹ்மாநந்தத்தையும், ஸாதயிஷ்யதி - சாதித்துக் கொடுக்கும்.

642. ஸர்வவேஜாந்த ஸாரார்ய: ஸம்ஸாரார்ணவ தாரக: ।
ஹதிரஷ்டாக்ஷரோ ந்ருணா மபுநர்ஹவ காங்க்ஷிணாம் ॥

ஸர்வ - ஸமஸ்தங்களான, வேதாந்த - வேதாந்தங்களினுடைய, ஸாரார்த்த: - சாரமான அர்த்தங்களையுடையதும், ஸம்ஸார - சம்சாரமாகிய, அர்ணவ - கடலினின்றும், தாரக: - கரையேற்றுவதுமாகிய, அஷ்டாக்ஷர: - எட்டெழுத்தான திருமந்திரமே, அபுநர்பவ - மறுபிறவியற்ற மோக்ஷத்தை, காங்க்ஷி-விரும்புகிற, ந்ருணும் - மனிதர்களுக்கு, கதி: - தஞ்சமாகின்றது.

643. மந்த்ராணும் பரமோ மந்த்ரோ ஹுஹ்யாநாம் ஹுஹ்யமுத்தமம் । பவித்ரஞ்ச பவித்ராணும் மூலமந்த்ரஸ் ஸநாதந: ॥

ஸநாதந: - அநாதியான, மூலமந்த்ர: - திருமந்திரமானது, மந்த்ராணும் - மந்திரங்களுக்குள், பரமோ மந்த்ர: - சிறந்த மந்திரமாயும், குஹ்யாநாம் - மறைக்கத் தக்கவைகளுள், குஹ்யமுத்தமம் - மிகவும் மறைக்கத் தகுந்ததாயும், பவித்ராணும் - தூய்மையா யுற்றவைகளுக்குள், பவிதரஞ்ச - மிகத் தூய்மையுடையதாயும் இருக்கிறது.

644. ஹுரு ஶுஶ்ரூஷயா விஜ்யா புஷ்கலேந யநேநவா ।
அயவா விஜ்யயா விஜ்யா சதுர்யம் நோபலஹ்பதே ॥

வித்யயா - வித்யையானது, குரு - ஆசாரியனுக்கு, ஶுஶ்ரூஷயா - அடிமைத் தொழில் செய்தாவது, புஷ்கலேந - மிகுதியாக, தநேநவா - தனத்தைக் கொடுத்தாவது பெறலாம். அதவா - அல்லது, வித்யயா - ஒரு வித்தையைக் கொடுத்தாலது, வித்யா - வித்யை பெறலாம், சதுர்த்தம் - இந்த நான்கு மார்க்கத்தாலல்லது, ந உபலப்யதே - பெற முடியாது

645. அருள்பெறுவா ரடியார் தம்மடியனேற்கு ஆழியான்
அருள்தருவா னமைகின்று னதுநமது விதிவகையே

(641) ஸ்ரீபாஞ்ச.
(642) ஸ்ரீபாஞ்ச. (643) ஸ்ரீபாஞ்ச.
(644) கஶ்ய. ஸம்ஹிதை. (645) திருவா. 10-6-1,

இருள்தருமா ஞாலத்து ளினிப்பிறவி யான்வேண்டேன்
மருளொழிநீ மடநெஞ்சே வாட்டாற்றா னடிவணங்கே.

அருள் - தன்னுடைய க்ருபையை, பெறுவார் - பெறுகையே நிரூபகமாக வுடையராய், அடியார்தம் - சேஷத்வ ஜ்ஞானத்தை யுடையார்க்கு, அடியனேற்கு - சேஷபூதனான எனக்கு, ஆழியான் - திருவாழியைக் கைவிடாதது போலே, அருள் - மஹோபகாரத்தை, தருவான் - பண்ணுவானாக, அமைகின்றான் - அமைந்திரா நின்றான், அது - அது, நமது விதிவகையே - நாம் விதித்த பிரகாரத்திலே ஆகாநின்றது, இருள்தரு - அஜ்ஞான இருள் பரவின, மாஞாலத்துள் - பெரிய பூமியில், இனி - அவனுடைய விஷயீகாரம் பெற்ற பிறகு, பிறவி - பிறக்கையையும், யான் வேண்டேன் - நான் விரும்பேன்; மடம் - சபலமான, நெஞ்சே - மனமே, மருள் - அறிவுகேட்டை, நீ ஒழி - நீ தவிர்வாயாக, வாட்டாற்றான் - திருவாட்டாற்றில் வெழுந்தருளி யிருக்கிற சர்வேசுவரனுடைய, அடி - திருவடிகளை, வணங்கு - தொழுவாயாக.

646. } இதந்து தே குஹ்யதமம் ப்ரவக்ஷ்யாம் யநஸூயவே ।
647. } ஜ்ஞாநம் விஜ்ஞாந ஸஹிதம் யத்ஜ்ஞாத்வா மோக்ஷ்யஸே
[ஸுஹாத் ॥

யத் - எதை, ஜ்ஞாத்வா - அறிந்து, அசுபாத் - அசுபமான சம்சாரத்தினின்றும், மோக்ஷ்யஸே - விடுபடுவாயோ, குஹ்யதமம் - அதிரஹஸ்யமும், விஜ்ஞாந ஸஹிதம் - விஜ்ஞானத்தோடு கூடியதுமான, இதந்து - இந்த, ஜ்ஞாநம் - ஜ்ஞானத்தை, அநஸூயவே - அசூயையற்றிருக்கிற, தே - உனக்கு, ப்ரவக்ஷ்யாமி - சொல்லுகிறேன்.

648. மந்தாரம் த்ராயத இதி மந்த்ரः ।

மந்தாரம் - மனனம் பண்ணுமவர்களை, த்ராயத - ரக்ஷிக்கிறது, இதி - என்பதனால், மந்த்ரः - மந்த்ரமாகும்.

649. குருரேவ பரப்ரஹ்ம ... ... 480-வது இலக்கம் காண்க.

650. ஐஹிகாமுஷ்மிகம் ஸர்வம் ஸசாஷ்டாக்ஷரதோ குருः ।
இத்யேவம் யேந மந்யந்தே த்யக்தவ்யாஸ்தே மநீஷிபிः ॥

ஐஹிகமாமுஷ்மிகம் ஸர்வம் - இஹலோக பரலோக ஐஸ்வர்யங்கள் எல்லாம், அஷ்டாக்ஷரதः - அஷ்டாக்ஷர மந்திரத்தை உபதேசித்த, ஸசகுருः - அந்த ஆசாரியனே, இதி ஏவம் - இந்த பிரகாரமாக, யே - எவர்கள், நமஸ்யந்தே - நினைக்க வில்லையோ, தே - அவர்கள், மநீஷிபிः - பெரியார்களாலே, த்யக்தவ்யாः - விடத்தகுந்தவர்கள்.

(646) ஸ்ரீகீதை, 9-1. (650)

651. கடிகொள் பூம்பொழில் காமரு பொய்கை
வைகு தாமரை வாங்கிய வேழம்
முடியும் வண்ணமோர் முழுவலி முதலை
பற்ற மற்றது நின்சரண் நினைப்பக்
கொடியவாய் விலங்கினுயிர் மலங்கக்
கொண்டசீற்ற மொன்றுண்டுள தறிந்துன்
அடியனேனும் வந் தடியிணை யடைந்தேன்
அணிபொழில் திருவரங்கத் தம்மானே.

கடிகொள் - பரிமளத்தை யுடைத்தான, பூ - புஷ்பங்கள் நிறைந்த, பொழில் - சோலையினுல் சூழப்பட்டதாய், காமரு - ஸ்ப்ருஹணீயமான, பொய்கை - மடுவிலே, வைகு - இராநின்ற, தாமரை - தாமரைப்பூவை, வாங்கிய - பறித்த, வேழம் - ஸ்ரீகஜேந்திரனை, முடியும் வண்ணம் - தன்னுடைய சாபம் முடியும் விதத்தை, ஓர் - அத்விதீயமான, முழுவலி - பூர்ணபலத்தையுடையதான, முதலை - முதலையானது, பற்ற - நெருக்கிப்பிடிக்க, மற்ற - அதுக்குமேலே, அது - அந்தயானையானது, நின்சரண் - உன் திருவடிகளை, நினைப்ப - த்யாநிக்க, (அப்பொழுது), கொடிய - க்ரூரமான, வாய்-வாயையுடைய, விலங்கின் - திர்யக்கான முதலையினுடைய, உயிர் - ப்ராணனானது, மலங்க - வ்யாகுலப் படும்படியாக, கொண்ட - ஏறிட்டுக்கொண்ட, ஒன்று - அத்விதீயமான, சீற்றம் - கோபமானது, உண்டு - உண்டாயிற்று, உளது - (இப்படி ஆஶ்ரிதவிரோதிநிரசநார்த்தமாக) உள்ள கோபத்தை, அறிந்து - அறிந்து, உன் - உனக்கு, அடியனேன் - தாஸபூதனான நான், வந்து - அகிஞ்சனனாய் வந்து, அணி - அழகான, பொழில் - சோலைகள் சூழ்ந்த, திருவரங்கத்து - திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கும், அம்மானே - ஸ்வாமியே, அடியிணை - உன் திருவடிகளை, அடைந்தேன் - பணிந்தேன்.

652. செய்யேல் தீவினையென் றருள்செய்யும் என்
கையார் சக்கரக் கண்ணபிரானே
ஐயார்கண்ட மடைக்கிலும் நின்கழல்
எய்யாதேத்த அருள்செய் எனக்கே.

தீவினை - கொடுந்தொழில்களை, செய்யேல் - செய்யாதே, என்று - என்று, என் - என் பக்கலிலே, அருள் - கிருபை செய்த, கை ஆர்-திருக்கையில் பொருந்தின, சக்கரம் - திருவாழியையுடைய, கண்ணன் - ஸ்ரீ கிருஷ்ணனாகிய, பிரானே - உபகாரகனே, ஐ ஆர் - சிலேட்டுமமானது நிறைந்த, கண்டம் - கண்டத்தை, அடைக்கிலும் - மூடிக்கொண்டாலும், நின் - உன்னுடைய, கழல் - திருவடிகளை, எய்யாது - இளைக்காமல், ஏத்த - துதிக்கும்படி, எனக்கு அருள் செய் - எனக்கு கிருபை பண்ணு.

(651) பெரிய. திரு. 5-8-3. (652) திருவா. 2-9-3.

653. ஏதத் ஸாமகாயந் நாஸ்தே ஹாவு ஹாவுஹாவு அஹமந்நமஹ மந்நமஹமந்நம் । அஹமந்நாதோ ஹமந்நாதோஹமந்நாத: ॥

(முக்தனானவன்) அஹம் - நான், அந்நம் - பாரமாத்மாவுக்கு போக்ய பூதன், அஹமந்நம் - நான் போக்யபூதன், அஹமந்நம் - நான் போக்யபூதன், அஹம் - நான், அந்நாத: - பரமாத்மாவாகிற போக்யத்தை அநுபவிக்கிறவன், அஹமந்நாத: - நான் அநுபவிக்கிறவன், அஹமந்நாத: - நானநுபவிக்கிறவன் என்று அநுஸந்தித்துக் கொண்டு, ஹாவு ஹாவு ஹாவு - ஆச்சரிய ஸூசகமாக ஹாவு ஹாவு ஹாவு என்று, ஏதத் - இந்த, ஸாமம் - சாமத்தை, காயந்-பாடிக் கொண்டு, ஆஸ்தே - இராநின்றான்.

654. என் கொலம்மான் திருவருள்க ளுலகுமுயிரும் தானேயாய்
நன்கென்னுடலம் கைவிடான் ஞாலத்தூடே நடந்துழக்கி
தென்கொள் திசைக்குத் திலதமாய்நின்ற திருமாலிருஞ்சோலை
நங்கள் குன்றம் கைவிடான் நண்ணாவசுரர் நலியவே.

உலகும் - எல்லா உலகங்களும், உயிரும் - எல்லா வுயிர்களும், தானே ஆய் - தானேயாம்படி அந்தராத்மாவாய், நண்ணா - தன்னை ஆசிரயிக்காத, அசுரர் - அசுரர்கள், நலிய-நசிக்கும்படியாக, ஞாலத்து ஊடே - பூமிக்குள்ளே, நடந்து உழக்கி - நடந்து மிகுத்து, தென்கொள் - தெற்கென்னும் பேரைக் கொண்ட, திசைக்கு - திக்குக்கு, திலதம் ஆய்நின்ற - திலகம்போலே யிருக்கிற, திருமாலிருஞ்சோலை - திருமாலிருஞ்சோலை யென்கிற, நங்கள் குன்றம் - நமக்கு அனுபாவ்யமான திருமலையை, கைவிடான் - கைவிடுகின்றிலன், என் உடலம் - என் சரீரத்தையும், நன்கு - மிகவும், கைவிடான் - கைவிடுகின்றிலன் அம்மான் - சுவாமியானவனுடைய, திருவருள்கள் - உபகாரகங்களான சீலங்கள், என்கொல் - என்னுயிருக்கின்றன.

655. ஶரீரமர்த்தம் ப்ராணஞ்ச ஸத்குருப்யோ நிவேதயேத் ।

ஶரீரம் - சரீரத்தையும், அர்த்தம் - தனத்தையும், ப்ராணஞ்ச-பிராணத்தையும், ஸத்குருப்ய: - ஸத்துக்களான ஆசார்யர்கள் பொருட்டு, நிவேதயேத்- சமர்ப்பிக்கக் கடவன்.

656. நம்பினேன் பிறர் நன்பொருள் தன்னையும்
நம்பினேன் மடவாரையும் முன்னெலாம்
செம்பொன்மாடத் திருக்குருகூர் நம்பிக்
கன்பனா யடியேன் சதிர்த்தேனின்றே.

முன்னெலாம் - அநாதி காலமெல்லாம், பிறர் - ஈஸ்வரனுடைய, நன் பொருள் தன்னையும் - விலக்ஷணமான வாத்ம வஸ்துவையும், நம்பினேன் -

(653) தைத். ப்ருகு 10-6. (654) திருவா. 10-7-4.
(655) (656) கண்ணி. 5.

ஆசைப்பட்டுப் போந்தேன், மடவாரையும் - பரஸ்திரீகளையும், நம்பினேன் - ஆசைப்பட்டுப் போந்தேன், செம் - மாற்றுமிகுந்தின, பொன் - பொன்னாலே செய்யப்பட்ட, மாடம் - மாடங்களையுடைய, திருக்குருகூர் - திருநகரியிலெழுந்தருளியிருக்கிற, நம்பிக்கு - பூர்ணரான வாழ்வாருக்கு, அடியேன் - அடியேனான நான், அன்பனாய் - ப்ரீதனாய், இன்றே - ஆழ்வாரை யாஶ்ரயித்தவின்றே, சதிர்த்தேன் - சதிரையுடையவனானேன்.

657. திண்ணன்வீடு முதல்முழுதுமாய்
எண்ணின்மீதிய னெம்பெருமான்
மண்ணும் விண்ணுமெல்லா முடனுண்ட நங்
கண்ணன் கண்ணல்ல தில்லையோர் கண்ணே.

திண் - திண்மையை யுடைத்தான, நன் - நல்ல, வீடுமுதல் - மோக்ஷ முதலாகிய, முழுதும் ஆய் - எல்லாவற்றையும் தருபவனாய், எண்ணின் மீதியன் - நினைவுக்கு அப்பாற்பட்டவன், எம்பெருமான் - எமக்கு சுவாமி, மண்ணும் விண்ணும் எல்லாம் - பூமியும் ஆகாசமுமாகிய முழுதும், உடன்உண்ட - வேற்றுமையின்றி ஒருமிக்கத் திருவயிற்றிலே வைத்து நோக்கின, நம் கண்ணன் - நமது கிருஷ்ணனே, கண் - உலகத்திற்குத் தலைவன், அல்லது - அன்றி, ஓர் கண் - வேறொரு தலைவன், இல்லை - இல்லை.

658. பெற்றார் பெற்றொழிந்தார் பின்னும்நின் றடியேனுக்கு
உற்றானாய் வளர்த்தென் னுயிராகி நின்றானை
முற்றா மாமதிகோள் விடுத்தானை யெம்மானை
எத்தால் யான்மறக்கேனிது சொல்லென் னேழைநெஞ்சே

பெற்றார் - பித்ராதிகள், பெற்று - (அடியேனை) பெற்ற பின்பு, ஒழிந்தார் - (யெவ்வாவிரோதி யென்று) பொகட்டுப் போனார்கள், பின்னும்-பின்பு, அடியேனுக்கு - சேஷபூதனான எனக்கு, உற்றானாய் - ஸகலவித பந்துவாய், நின்று - நின்று, வளர்த்து - உஜ்ஜீவிப்பித்து (அதனால்), என் - என்னுடைய, உயிராகி - ப்ராணபூதனாய்க்கொண்டு, நின்றானை - இருக்குமவனாய், முற்றா - பருவம் நிரம்பாத, மாமதி - சந்த்ரனுடைய, கோள் - க்ஷயத்தை, விடுத்தானை - போக்கினவனுமான, எம்மானை - என் ஸ்வாமியை, எத்தால் - எந்த மார்க்கத்தாலே, யான் - நான், மறக்கேன் - மறப்பேன், இது - இந்த விஷயத்தை, என் - என்னுடைய, ஏழை - அஜ்ஞதையையுடைய, நெஞ்சே - மனமே, சொல் நீ சொல்லு.

659. சரணமடைந்த தருமனுக்கா பண்டு நூற்றுவரை
மரணமடைவித்த மாயவன்றன்னை வணங்கவைத்த

(657) திருவா. 2-2-1. (658) பெரிய திரு. 8-9-7.
(659) இரா. நூற். 67.

காணமிவை யுமக்கன்றென் றிராமாநுச னுயிர்கட்
கரணங் கமைத்திலனே லரணார் மற்றிவ்வாருயிர்க்கே.

சரணமடைந்த - தன் திருவடிகளை யாஶ்ரயித்த, தருமனுக்கா - தருமபுத்திரனுக்காக, பண்டு - முற்காலத்திலே, நூற்றுவரை - துர்யோதனாதிகள் நூற்றுவரையும், மரணமடைவித்த - மரணத்தை ப்ராபிப்பித்த, மாயவன் - ஆஶ்சர்ய சக்தியுக்தனான ஸர்வேஶ்வரன், தன்னை வணங்கவைத்த - தன்னை ஆஶ்ரயிக்கைக்கு உபகரணங்களாக வைத்த, கரணமிவை - கரணங்களிவை, உமக்கன்று - உங்களுக்கு சேஷமாயுள்ளதொன் றன்று, என்று - என்று, அங்கு - கரணங்களைக்கொண்டு வ்யபிசரிக்கிற சமயத்திலே, இராமாநுசன் - எம்பெருமானார், உயிர்கட்கு - ஆத்மாக்களுக்கு, அரண் - ரக்ஷையை, அமைத்திலனேல் - கற்பித்திலராகில், இவ்வாருயிக்கு - இவ்வாத்மாவுக்கு, அரணார் - வேறொரு ரக்ஷகராவாரார்.

660. இன்னமுதெனத் தோன்றி யோரைவர் யாவரையும் மயக்க நீ [வைத்த
முன்னமாய மெல்லா முழுவே ரரிந்தென்னை யுன்
சின்னமுந் திருமூர்த்தியுஞ் சிந்தித்தேத்திக் கைதொழவேயருளெனக்
கென்னம்மா வென்கண்ணா விமையோர்தங் குலமுதலே.

என் - எனக்கு, அம்மா - சுவாமியே, என் கண்ணா - என் கண்ணனே, இமையோர்தம் குலம் - நித்யசூரிகளுடைய கூட்டத்துக்கு, முதலே - காரணனே, ஓர் - ஒப்பற்ற, ஐவர் - ஐந்திந்திரியங்களால், இன் - இனிய, அமுது என-அமிர்தமென்னும்படி, தோன்றி - போக்யமாய்ப் பிரகாசித்து, யாவரையும் - பிரமன் முதலிய எல்லாரையும், மயக்க - மோகிக்கும்படி பண்ண, நீ - சர்வசக்தியான நீ, வைத்த - உண்டாக்கி வைத்த, முன்னம் - அநாதியான, மாயம் எல்லாம் - மாயா விஷயங்களெல்லாவற்றையும், முழுவேர் அரிந்து - முழுதும் வேராடே அறுத்து, என்னை-சம்சாரத்துக்குப் பயந்தவனான என்னை, உன் - உன்னுடைய, சின்னமும் - சின்னங்களான சங்கு சக்கர முதலியவைகளையும், திருமூர்த்தியும் - அவற்றால் அழகுபெற்ற விக்கிரகத்தையும், சிந்தித்து - நெஞ்சாலே நினைத்து, ஏத்தி - வாக்காலே துதித்து, கை தொழ - கையாலே தொழும்படியாக, எனக்கே அருள் - எனக்கே கிருபை பண்ணியருளவேண்டும்.

661. மால்கொள் ... ... 505-வது இலக்கம் காண்க.

662. தோய்த்த தண்தயிர் வெண்ணெய் பாலுட னுண்டலும்
உடன்றாய்ச்சி கண்டு
ஆர்த்த தோளுடை எம்பிரான்என் னரங்கனுக்கு
அடியார்களாய்

(660) திருவா. 7-1 8. (662) பெருமா. திரு. 2-4.

நாத்தழும்பெழ நாரணவென்றழைத்து
மெய்தழும்பத் தொழுது
ஏத்தி இன்புறும் தொண்டர்சேவடி ஏத்தி
வாழ்த்துமென்னெஞ்சமே.

தோய்த்த - தடாக்களில் தோய்க்கப்பட்டிருப்பதாய், தண் - குளிர்ந்த, தயிர் - தயிரையும், வெண்ணெய் - உறியில் சேமித்து வைத்த வெண்ணெயை யையும், பால் - குடங்களில் நிறைத்துவைத்த பாலையும், உடன் - ஒரே காலத் திலே, உண்டலும் - அமுதுசெய்தவாறே, ஆய்ச்சி - தாயாரான யசோதைப் பிராட்டி, கண்டு - பார்த்து, உடன்று - கோபித்து, ஆர்த்த - பிடித்துக் கட் டின, தோள் உடை - தோளையுடையனாய், எம்பிரான் - என்னை அநந்யார் ஹனாக்கினவனாய், என் அரங்கனுக்கு - எனக்கு சேஷியான அழகியமணவாள ருக்கு, அடியார்களாய் - சேஷபூதராய், நாத்தழும்பு எழ - நாவானது தழும் பேறும்படி, நாரண என்று அழைத்து - அவன் திருநாமத்தை அடைவுகெடச் சொல்லி, மெய்த் தழும்ப - மெய் தழும்பேறும்படி, தொழுது - ப்ரணாமம் பண்ணி, ஏத்தி - ஸ்தோத்ரம் பண்ணி, இன்பு உறும் - ஆநந்தயுக்தரா யிருக்கிற, தொண்டர் - ஸ்ரீவைஷ்ணவர்களுடைய, சேவடி - ஸ்ரீபாதங்களை, என்னெஞ்சம் - என் மனஸ்ஸானது, ஏத்தி - ஸ்தோத்ரம் பண்ணி, வாழ்த்தும் - மங்களா சாஸநம் பண்ணும் என்கிறார்.

663. மந்த்ரே தத் தேவதாயாஞ்ச ததா மந்த்ர ப்ரதே குரௌ ।
த்ரிஷு பக்தி ஸதா கார்யா ஸாஹி ப்ரதம ஸாதநம் ॥

மந்த்ரே - திருமந்திரத்தினிடத்திலும், தத் தேவதாயாஞ்ச - அந்த மந்திர வாச்யனான ஈஸ்வரனிடத்திலும், ததா - அதுபோலவே, மந்த்ரப்ரதே - திரு மந்திரோபதேசம் பண்ணின, குரோ: - ஆசாரியனிடத்திலும், த்ரிஷு - (ஆகிய) மூவரிலும், பக்தி - விஸ்வாஸமானது, கார்யம் - செய்யத்தக்கது, ஸாஹி - அந்த பக்திதான், ப்ரதம ஸாதநம் - முதலுபாயம்.

664. மந்த்ர நாதம் குரும் மந்த்ரம் ஸமத்வே நாநு பாவயேத் ॥

மந்த்ரநாதம் - மந்த்ரப்ரதிபாத்யனான தேவதையும், குரும் - ஆசாரியனை யும், மந்த்ரம் - மந்த்ரத்தையும், ஸமத்வேந - சமமாக, அநுபாவயேத் - பாவிக் கத்தக்கது.

665. என்னைத்தீமனம் ... ... 287-வது இலக்கம் காண்க.
666. மருவித் தொழும் ... ... 288-வது இலக்கம் காண்க.
667. நிறை வொன்றுமிலேன் ... ... 172-வது இலக்கம் காண்க.
668. குலந்தா னெத்தனையும் பிறந்தேயிறந் தெய்த்தொழிந்தேன்
நலந்தா னொன்றுமிலேன் நல்லதோ ரறஞ் செய்துமிலேன்

(663) விஷ்ணுதத்வம். (664)
(668) பெரிய. திரு. 1-9 4.

நிலந்தோய் நீள்முகில்சேர் நெறியார் திருவேங்கடவா
அலந்தேன் வந்தடைந்தே னடியேனை யாட்கொண்டருளே.

நிலம் - பூமியிலே, தோய் - படிந்த, நீள்முகில் - மஹாமேகங்கள், சேர் - ஸஞ்சரிக்கிற, நெறி - வழியை, ஆர் - உடைத்தான, திருவேங்கடவா - ஸ்ரீ வெங்கடாத்ரிக்கு நிர்வாஹகனே, எத்தனை குலமும் - எல்லாக் குலங்களிலும், பிறந்து இறந்து - பிறப்பது இறப்பதாய்க்கொண்டு, எய்த்தொழிந்தேன் - இளைத்துப் போனவனாய், ஒரு நலமும் இலேன் - ஒரு நன்மையும் இல்லாதவனாய், நல்லது (பலத்தோடே கூடியிருப்பதாய்) நன்மையை யுடைத்தான, ஓர் அறமும் - ஒரு ஸாதநாநுஷ்டானத்தையும், செய்திலேன் - பண்ணப்பெறாதவனாய்க் கொண்டு, அலந்தேன் - ஜந்மங்கள் தோறும் திரிந்து க்லேசித்த அடியேன், வந்து அடைந்தேன் - வந்து அடைந்தேன், அடியேனை ஆள் கொண்டருள் - அடியேனை அடிமை கொண்டருளவேணும்.

669. நின்று நின்று பலநாளுய்க்கு மிவ்வுடல் நீங்கிப்போய்ச்
சென்று சென்றாகிலுங் கண்டு சன்மங் கழிப்பானெண்ணி
ஒன்றி யொன்றி யுலகம்படைத்தான் கவியாயினேற்
கென்று மென்றுமினி மற்றொருவர் கவியேற்குமே.

பலநாள் - அநேகநாள், நின்று நின்று - இடைவிடாதே நின்று, உய்க்கும் - சேதனனைத் தன் வசத்திலே யாக்குகின்ற, இவ்வுடல் - இந்த சரீரத்தை, நீங்கிவிட்டு, போய் - போய், சென்று சென்றாகிலும் - நெடுங்காலங் கழித்தாலும், கண்டு - தன்னைக்கண்டு, சன்மம் - பிறவியை, கழிப்பான் - ஒழிக்கைக்காக, எண்ணி - திருவுள்ளம்பற்றி, ஒன்றிஒன்றி - மனம்பொருந்திப் பொருந்தி, உலகம்படைத்தான் - உலகத்தைப் படைத்தவனுடைய, கவி ஆயினேற்கு - கவியான எனக்கு, இனி என்றும் என்றும் - இனிக் காலமுள்ளளவும், மற்றொருவர் - வேறொருவர், கவி - கவிபாடுதல், ஏற்குமே - தகுதியாமோ.

670. யதிமே ப்ரஹ்மசர்யம் ஸ்யாத் ।

ப்ரஹ்மசர்யம் - பிரமசரிய விரதம், யதிமேஸ்யாத் - இருக்கும் பக்ஷத்தில்.

671. காமாத் கோப்யோ பயாத்கம்ஸ: த்வேஷாச் சைத்யாதயோ
ந்ருபா: । ஸம்பந்தாத் வ்ருஷ்ணய: ஸ்நேஹாத் யூயம் பக்த்யா
வயம் ந்ருப ॥

ஹே ந்ருப - ஓ வேந்தனே, கோப்ய: - கோபஸ்திரீகள், காமாத் - காமத்தினாலும், கம்ஸ: - கஞ்சன், பயாத் - அச்சத்தினாலும், சைத்ய: - சிசுபாலன், ஆதய: - முதலான, ந்ருபா: - வேந்தர்கள், த்வேஷாத் - பகையினாலும், வ்ருஷ்ணய: - யாதவர்கள், ஸம்பந்தாத் - உறவினாலும், யூயம் - நீங்கள், ஸ்நேஹாத் - நட்பினாலும், வயம் - நாங்கள், பக்த்யா - பக்தியினாலும் (புனிதர்களாயினோம்),

(669) திருவா. 3-9-10. (670)
(671) பாகவதம்.

672. குற்றமின்றி குணம்பெருக்கி குருக்களுக் கநுகூலராய்ச்
செற்றமொன்றுமிலாத வண்கையினார்கள் வாழ்திருக்கோட்டியூர்
துற்றியேழுலகுண்ட தூமணிவண்ணன்றன்னைத் தொழாதவர்
பெற்றதாயர் வயிற்றினைப் பெருநோய் செய்வான் பிறந்தார்களே.

குற்றமின்றி - குற்றமின்றிக்கே, குணம் - சமம் தமம் முதலிய குணங்களை, பெருக்கி - மிகும்படி பண்ணி, குருக்களுக்கு - தங்கள் ஆசார்யனுக்கு, அநுகூலராய் - அநுகூலராய், ஒன்றும் - சற்றேனும், செற்றம் - பொறாமை, இலாத - இல்லாதவர்களுமாய், வண்கையினார்கள் - மிக்க கொடையை யுடையருமா யிருப்பவர்கள், வாழ் - நித்யவாசம்பண்ணுகிற, திருக்கோட்டியூர் - திருக்கோட்டியூரில், ஏழுலகு - ஸகல லோகங்களையும் (ப்ரளயங் கொள்ளாதபடி), துற்றி - திரளப் பிடித்து, உண்ட - அமுது செய்த, தூ - பழிப்பற்ற, மணிவண்ணன்றன்னை - நீலரத்நம்போன்ற வடிவையுடையவனை, தொழாதவர் - தலை வணங்கிக் கைக்கூப்பியேத்ாதவர்கள், பெற்ற - தம்மைப்பெற்ற, தாயர் - மாதாவினுடைய, வயிற்றினை - உதரத்தை, பெருநோய் செய்வான் - மிகவும் நோவு படுத்துகைக்காக, பிறந்தார்கள் - பிறந்தார்களித்தனை.

673. பொய்ந்நின்ற ... ... 427-வது இலக்கம் காண்க.

674. வித்வேஷமாந மதராக விலோப மோஹாதி ஆஜாநபூமிரஹ
மத்ர பவே நிமஜ்ஜந் । நிர்த்வந்த்வ நித்ய நிரவத்ய மஹா
குணம் த்வாம் ஹஸ்தீஶ கஶ்ஶ்ரயிது மீக்ஷிது மீப்ஸிதும்வா ॥

வித்வேஷ - வியாஜமில்லாத வைரமென்ன, மாந - குலாதிகளாலுண்டான கர்வமென்ன, மத - மதமென்ன, ராக - விஷயங்களில் ஆசையென்ன, விலோப - அதிக லோபமென்ன, மோகம் - விஷயாதி மோக மென்ன, ஆதி - இவை முதலானவைகளுக்கு, ஆஜாநபூமிः - ஜந்ம பூமியாயும், அத்ர - இந்த பவே - சம்சாரத்தில், நிமஜ்ஜந் - முழுகிக்கொண்டிருக்கிற, அஹம் - நான், நிர்த்வந்த்வ - ஜ்ஞாநாஜ்ஞாநங்கள் ஸுகதுக்கங்கள் என்கிற த்வந்த்வ மில்லாதவனாய், நித்ய - நித்யனாய், நிரவத்ய - தோஷமில்லாதவனாய், மஹாகுண - அபரிச்சின்னமான குணங்களையுடையனாயு மிருக்கிற, ஹேஹஸ்தீஸ - ஓ வரதனே, த்வாம் - தேவரீரை, ஶ்ரயிதும் - ஆஶ்ரயிக்கைக்கும், ஈக்ஷிதும் - சேவிப்பதற்கும், ஈப்ஸிதும் வா - இச்சைப்படுவதற்கும், கः - எவன்? (ஒன்றுக்கும் அதிகாரியல்லன்).

675. ஸ்ரீரங்கேஶ த்வத் குணாணுமிவாஸ்மத் தோஷாணும் கः பார
த்ருஶ்வா யயோஹம் । ஓகே மோகோ த்யவத் த்வத்
குணாநாம் த்ருஷ்ணாபூரம் வர்ஷதாம் நாஸ்மி பாத்ரம் ॥

---

(672) பெரியா. திரு. 4-4-2. (674) வர. ஸ்த. 76.
(675) ஸ்ரீரங். ஸ்த. உத். 94.

ஹே ரங்கேஶ - ஓ அரங்கேசரே; த்வத் - தேவரீருடைய; குணாநாம் இவ - குணங்களுக்குப்போல, அஸ்மத் - எங்களுடைய; தோஷாணாம் - தோஷங்களுக்கும், பாரத்ருஶ்வா - கரையறிந்தவன், க: - எவன்? யத: - யாதொன்றாலே, அஹம் - நான், ஓகே - ப்ரவாஹத்தில், மோகோதந்யவத் - விபர்த்தமான தாஹம்போல, த்ருஷ்ணாபூரம் - மநோரதித்தார் மநோரதத்தளவும், வர்ஷதாம் - வர்ஷிக்கிற, த்வத் - தேவரீர், குணாநாம் - குணங்களுக்கு, பாத்ரம் - பாத்திரமாக, ந அஸ்மி ஆகிறேனல்லேன்.

676. வேதம் வல்லார்களைக்கொண்டு விண்ணோர்பெருமான் திருப்
பாதம் பணிந் திவளுநோயிது தீர்த்துக்கொள்ளாது போய்
ஏதம்பறைந் தல்லசெய்து கள்ளூடுகலாய்த் தூய்க்
கீத முழவிட்டு நீரணங்காடுதல் கீழ்மையே.

வேதம் வல்லார்களை - வேதப்பொருளைக் கற்றுவல்லவர்களை, கொண்டு - புருஷகாரமாகக் கொண்டு, விண்ணோர் பெருமான் - நித்திய சூரிகளாலே சேவிக்கப்படுமவனான சர்வேசுவரனுடைய, திருப்பாதம் பணிந்து - திருவடிகளை வணங்கி, இவள் நோய் இது - இவளுடைய நோயான இதனை, தீர்த்துக் கொள்ளாது போய் - நீக்கிக் கொள்ளாமல் நம்முடைய நிலைக்கு வெகுதூரமாய் உரியதல்லாத விஷயத்திலே சென்று, ஏதம் பறைந்து - குற்றமானவற்றைச் சொல்லி, அல்ல செய்து - செய்பத் தகாதவற்றைச் செய்து, ஊடு - இடை இடையே, கள் - கள்ளை, கலாய் - கலந்து, தூய் - தூவி, கீதம் - அதற்கிசைந்த கீதங்களுக்குப் பொருந்த, முழவு இட்டு - வாத்திய ஓசையைப் பண்ணி, நீர் - இவளோடு சம்பந்தமுடைய நீங்கள், அணங்காடுதல் - வெறியாடுதல், கீழ்மையே - இந்த குடிக்கு இழிவேயாகும்.

677. மச்சித்தா மத்கதப்ராணா போதயந்த: பரஸ்பரம் ।
கதயந்தஶ்ச மாம்நித்யம் துஷ்யந்திச ரமந்தி ச ॥

மச்சித்தா: - என்னிடத்தில் சிந்தையும், மத்கதப்ராணா: - என் ஆதீனமான பிராணனும் (வைத்தவர்கள்), பரஸ்பரம் - ஒருவர்க் கொருவர், போதயந்த: - (என்னுடைய கல்யாண குணங்களை) போதித்துக்கொண்டு, மாம் - என்னை, நித்யம் - எப்பொழுதும், கதயந்த:ச - சொல்லிக்கொண்டும், துஷ்யந்திச - சந்தோஷிக்கிறார்கள், ரமந்திச - இன்ப முறுகின்றார்கள்.

678. அவனடியார் ... ... 493-வது இலக்கம் காண்க.

679. வஶீவதாந்யோ குணவாந் ருஜுஶ்ஶுசி: ம்ருதுர்தயாளுர் மதுரஸ் ஸ்திரஸ் ஸம: । க்ருதீ க்ருதஜ்ஞஸ் த்வமஸி ஸ்வபாவத: ஸமஸ்த கல்யாண குணாம்ருதோததி: ॥

(676) திருவா. 4-6 8. (677)
(679) ஸ்தோத்ர ரத்நம். 18.

வஸீ - ஸகலத்தையும் தன்வஸத்தில் நடத்தி வர்த்திப்பவனும், வதாந்ய:- ப்ரியவசனத்தோடு தன்னையும் தன்னுடைமையையும் ஆஸ்ரிதருக்குக் கொடுப்பவனும், குணவாந் - ஸௌஸீல்ய குணமுடையவனும், ருஜு: - ஆஸ்ரிதர் விஷயத்தில் ஏகரூபனும், ஸுசி: - பாவநனும், ம்ருது: - ஆஸ்ரிதர் விஷயத்தில் ஆற்ற மாட்டாதவனும், தயாளு: - ஆஸ்ரிதர் துக்கத்தை ஸஹிக்காதவனும், மதுர: - போக்யனும், ஸ்திர: - நிலையுடையவனும், ஸம: - ஸர்வசமனும், க்ருதீ- ஆஸ்ரிதர் காரியமெல்லாம் செய்யுமவனும், க்ருதஜ்ஞ: - செய்நன்றி மறவாதவனுமான, த்வம் - தேவரீர், ஸ்வபாவத: - ஸஹஜமாகவே, ஸமஸ்த - அஸேஷமாயிருக்கிற, கல்யாணகுண - கல்யாண குணங்களுக்கு, அம்ருதோததி: - அம்ருத ஸாகரம்போல பரம போக்யமாக, அஸி - இருக்கிறீர்.

680. ஸ்வாபாவிகாநவதிகாதிஸய ஜ்ஞாநபலைஸ்வர்ய வீர்ய ஸக்தி தேஜ ஸௌஸீல்ய வாத்ஸல்ய மார்தவார்ஜவ ஸௌஹார்த ஸாம்ய காருண்ய மாதுர்ய காம்பீர்யௌதார்ய சாதுர்ய ஸ்தைர்ய தைர்ய ஸௌர்ய பராக்ரம ஸத்யகாம ஸத்ய ஸங்கல்ப க்ருதித்வ க்ருதஜ்ஞதாத் யஸங்க்யேய கல்யாண குண கணௌக மஹார்ணவ.

ஸ்வாபாவிக - ஸ்பாவஸித்தமான, அநவதிகாதிஸய - எல்லையில்லாத ஆச்சரியகரமுமான, ஜ்ஞாந - (எல்லாவற்றையும் ஒருக்காலே உள்ளபடி யறியும்படியான) ஜ்ஞாநம், பல - ஸர்வ பதார்த்தங்களையும் தரிக்கும் தாரண சாமர்த்தியம், ஐஸ்வர்ய-சமஸ்தபதார்த்த நியமநம், வீர்யம்-ஜநநுபாதாக சக்தி - சக்தி, ஸௌஸீல்ய - மஹதோமந்தைஸ் ஸஹநீரந்த்ரேண ஸம்ஸ்லேஷிக்கை, மார்தவ - மென்மை, ஆர்ஜவ - ஏகரூபனாயிருக்கை, ஸௌஹார்த்த - ஆஸ்ரிதருக்கு ஸர்வ மங்களாந்வேஷண பரனாகை, ஸாம்ய - சமனாயிருக்கை, காருண்ய - பரதுக்க அஸஹிஷ்ணுத்வம், மாதுர்ய - ஸர்வ ரசனாயிருக்கை, காம்பீர்ய - பெருமை சிறுமை பாராதிருக்கை, ஔதார்ய - ஆஸ்ரிதர்களுடைய அபேக்ஷி தங்களைத்தானே யிருந்துக் கொடுக்கை, சாதுர்ய - ஆஸ்ரித தோஷங்களை பிராட்டி யறியாதபடி மறைக்கை, ஸ்தைர்ய - ஆஸ்ரித ரக்ஷண ப்ரஜ்ஞா பங்கம் வாராதிருக்கை, தைர்ய - திண்ணிமை, சௌர்ய - விரோதிகளை அழியச்செய்ப வல்லவனாயிருக்கை, பராக்ரம-பராக்ரமசாலியாயிருக்கை, தைர்ய - பின் வாங்காத தைரியம், ஸௌர்ய - பலப்ரவேசனம், பராக்ரம - சின்னம் பின்னம் ஸரார்தக்தம் என்கிற பராக்ரமம், ஸத்யகாம - குண விபூதிகளென்கை, ஸத்ய ஸங்கல்ப - அமோகமான பூர்வ போக்யங்களை ஸ்ருஷ்டிக்க க்ஷமனாகை, க்ருதித்வ - கர்த்தவ்யங்களடையத் தானே பேறிட்டுக்கொண்டிருக்கை, க்ருதஜ்ஞ: - அவர்கள் செய்த ஸுக்ருத லவத்தையே நினைத்திருக்கை, ஆதி - துடக்கமான, அஸங்க்யேய - எண்ணிறந்த, கல்யாண - மங்களகரமான, குண

(680) சரணாகதிகத்யம்.

கணக - குணத் திரள்களுக்கு, மஹார்ணவ - சமுத்திரத்திற்கு சமான மானவரே.

681. யதா ரத்நாநி ஜலதேரஸங்க்யேயாநி புத்ரக ।
தயா குணாஹ்யநந்தஸ்ய அஸங்க்யேயா மஹாத்மந: ॥

ஹே புத்ரக - ஓ குமாரனே, ஜலதே: - சமுத்திரத்திலுள்ள ரத்நாநி - ரத்திநங்களை, யதா - எப்படி, அஸங்க்யாநி - எண்ணமுடியாதோ, ததா - அப்படியே, மஹாத்மந: - மஹாத்மாவான, அநந்தஸ்ய - ஈஸ்வரனுடைய, குணா: - குணங்கள், அங்க்யேயா: - எண்ண முடியாது.

682. நாஹம் ஸமர்தோ ஹமவத் ப்ரியாணாம்வக்தும் குணாந் பத்ம ஹவோப்ய மம்யாந் ।

பத்மபுவ: அபி - ப்ரஹ்மாவிற்கும், அகம்யாந் - கோசரமாகாத, பகவத் ப்ரியாணாம் - பாகவதர்களுடைய, குணாந் - குணங்களை, வக்தும் - சொல்லுவதற்கு, அஹம் - நான், நஸமர்த்த: - சமர்த்தனல்லன்.

683. கடல் மல்லை ... ... 504-வது இலக்கம் காண்க.

684. சொன்னால் விரோதமி தாகிலுஞ்சொல்லுவன் கேண்மினோ
என்னாவி லின்கவி யானொருவர்க்குங் கொடுக்கிலேன்
தென்னா தெனாவென்று வண்டுமுரல் திருவேங்கடத்
தென்னானை யென்னப்ப னெம்பெருமா னுளனாகவே.

இது - நீங்கள் இதர ஸ்துதியை விடுகைக் குறுப்பான இந்த ஹிதத்தை, சொன்னால் - உங்களுக்கு சொன்னால், விரோதம்-உங்களிஷ்டத்துக்கு விரோதம், ஆகிலும் - ஆனாலும், சொல்லுவன் - உங்கள் அநர்த்தம் பொருக்க மாட்டாமையாலே சொல்லக்கடவேன், கேள்மின் - நீங்கள் செவி கொடுத்துக் கேளுங்கள், வண்டு - வண்டுகளானவை, தென்னா தெனா வென்று - (மதுவைக்குடித்த களிப்பினால்) தென்னா தெனா வென்று, முரல் - சப்திக்கிற, திருவேங்கடத்து - திருமலையிலே, என்னானை - என் கவிக்குப் பரிசிலாகத் தன்னை யானையாகத்தந்த, என்னப்பன் - எனக்கு உபகாரகனான, எம்பெருமான் - எமது சுவாமியானவன், உளன் ஆக - என் கவிக்கு விஷயமாயிருக்க, என் நாவில் - என் நாவினிடத்திலுண்டாகிய, இன் கவி - இனிதான கவிகளை, யான் - அவனுக்கு சேஷபூதனான நான், ஒருவர்க்கும் - வேறு ஒருவர்க்கும், கொடுக்கிலேன் - கொடுக்க வல்லேனல்லேன்.

685. ஒருநாயகமா யோட வுலகுட னாண்டவர்
கருநாய் கவர்ந்தகாலர் சிதைகிய பானையர்
பெருநாடுகாண விம்மையிலே பிச்சை தாங்கொள்வர்
திருநாரணன்றாள் காலம்பெறச் சிந்தித் துய்மினோ.

(681) (682)
(684) திருவா. 3-9-1. (685) திருவா. 4-1-1.

ஒரு நாயகம் ஆய் - உலகம் முழுதுக்கும் ஒப்பற்ற இறைவனாய், ஓட - நெடுங்காலம் நடக்கும்படி, உலகு உடன் - உலகத்தோடே பொருந்தி, ஆண்டவர் - அரசாண்டவர்கள், கரு நாய் கவர்ந்த - கரியநாய்களால் கவ்வப்பட்ட, காலர் - கால்களையுடையவரும், சிதைகிய - உடைந்த, பானையர் - பானையை யுடையவருமாகி, பெருநாடுகாண - பெரிய தேசத்தா ரெல்லாம் காணும்படியாக, இம்மையிலே - இந்த சன்மத்திலேயே, பிச்சை - பிச்சையை, தாம் - முன்னே அரசராயிருந்த தாமே, கொள்வர் - ஏற்பர், (ஆதலால்), திருநாரணன் - ஸ்ரீமந்நாராயணனுடைய, தாள் - திருவடிகளை, காலம்பெற - காலமுண்டாக, சிந்தித்து - அநுசந்தித்து, உய்மின் - உஜ்ஜீவியுங்கள்.

686. கொண்டபெண்டிர் மக்களுற்றார் சுற்றத்தவர் பிறரும்
கண்டதோடு பட்டதல்லாற் காதன்மற்றி யாதுமில்லை
எண்டிசையுங் கீழும் மேலும் முற்றவு முண்டபிரான்
தொண்டரோமா யுய்யலல்லா லில்லைகண்டீர் துணையே.

கொண்ட - நாம் பந்துக்களாகக் கொள்ளப்பட்ட, பெண்டிர் - தாரமும், மக்கள் - புத்திரர்களும், உற்றார் - சம்பந்திகளும், சுற்றத்தவர் - பந்துக்களும், பிறரும் - மற்றுள்ளாரும், கண்டதோடு - நமது கையிலே பிரயோசனங்கண்டபோது, பட்டது அல்லால் - உடன் படுவதல்லாமல், மற்று - வேறுவிதத்தாலே, யாதும் - ஏகதேசமும், காதல் இல்லை - சிநேக முடையாரல்லர், எண்திசையும் - எட்டுத்திக்குகளோடு கூடின, கீழும் - கீழுலகங்களையும், மேலும்-மேலுலகங்களையும், முற்றவும் - மற்றுமுள்ள எல்லாவற்றையும், உண்ட - அமுது செய்து நோக்கின, பிரான் - மஹோபகாரகனுக்கு, தொண்டரோம் ஆய்-அடியோமாய், உய்யல் அல்லால் - உஜ்ஜீவித்தலல்லது (வேறுபத்துக்கு), இல்லை துணை - துணையில்லை, கண்டீர் - பாருங்கள்.

687. சூழ்ந்தடியார் வேண்டினக்கால் தோன்றாது விட்டாலும்
வாழ்ந்திடுவர் பின்னும்தம் வாய்திறவார் சூழ்ந்தெங்கும்
வாள்வரைகள் போலரக்கன் வன்தலைகள் தாமிடியத்
தாள் வரைவில் லேந்தினார் தாம்.

எங்கும் - நாற்புறங்களிலும், சூழ்ந்து - சுற்றிக்கொண்டு, அரக்கன் - ராவணனுடைய, வாள் - ஒளியையுடைய, வரைகள்போல் - மலைகள்போன்ற, வன்-திண்ணிய, தலைகள்தாம் - தலைகள், இடிய - அழியும்படி, தாள் - காலுரத்தை யுடைத்தாய், வரை - மலைபோன்ற, வில் - வில்லை, ஏந்தினார்தாம் - தரித்த (ஸமர்த்தரான) வர்தாமே, சூழ்ந்து - வளைத்துக்கொண்டு, அடியார் - (எனக்கு நீங்கள்) தாஸராக வேணும் என்று, வேண்டினக்கால் - அபேக்ஷிக்கும்போது, தோன்றாது விட்டாலும் - (சேதநர்) இசையாவிடினும், வாழ்ந்திடுவர்- உகந்திருப்பர், பின்னும் - அதற்குமேல், தம்வாய் திறவார் - (இதைப் பிராட்டியோடும்) தம்முடைய வாயை திறந்து சொல்லார்.

(686) திருவா. 9-1-1. (687) பெரிய திருவ. 17.

688. அநந்தஸ்ய அநாதேரபரிஹரணீயஸ்ய மஹதோ
நிஹீநாசாரோஹம் ந்ருபஶுரஶுபஸ்யாஸ் பதமபி ।
தயாஸிந்தோ பந்தோ நிரவதிக வாத்ஸல்ய ஜலதே
தவ ஸ்மாரம் ஸ்மாரம் குணகணமிதீச் சாமி கதபீ: ॥

அநந்தஸ்ய - முடிவின்றிக்கே யிருப்பதாய், அநாதே: - ஆதியற்றதாய், அபரிஹரணீயஸ்ய - பிற் காலிக்கும்படி யிருப்பதாய், மஹத: - முடிவு காண வொண்ணாததாயுமுள்ள, அஶுபஸ்ய - பாபத்திற்கு, ஆஸ்பதம் - இருப்பிடமாய், நிஹீநாசார: - ஆசாரத்தில் குறைந்தவனாய், ந்ருபசு: - பசுவை போன்றவனு மான, அஹம் - அடியேன், தயாஸிந்தோ - ஓ தயாநிதியே, பந்தோ - நிருபா திகபந்துவே, நிரவதிக - எல்லையில்லாத, வாத்ஸல்ய ஜலதே - வாத்ஸல்ய ஸா கரமே, தவ உன்னுடைய, குணகணம் - கல்யாணகுண சமூஹத்தை, ஸ்மாரம் ஸ்மாரம் - நினைத்து நினைத்து, கதபீ: - அஞ்சாதவனாகி, இதி - கீழ்ச்சொன்ன படி, இச்சாமி - பரம புருஷார்த்தத்தை இச்சிக்கிறேன்.

689. உண்ணிலாவிய ஐவரால் குமைதீற்றி என்னையுன் பாதபங்கயம்
நண்ணிலாவகையே நலிவான் இன்னமெண்ணுகின்றாய்
எண்ணிலாப் பெருமாயனே இமையோர்களேத்தும் உலகமூன்
அண்ணலே அமுதே அப்பனே என்னையாள்வானே. [றுடை

உண்ணிலாவிய - உள்ளே நிரந்தர வாசம் பண்ணுகையாலே உட்பகை வராயிருக்கிற, ஐவரால் - ஐந்து இந்திரியங்களாலும், குமை - நலிவு, தீற்றி - உண்ணும்படிபண்ணி, என்னை - என்னை, உன் - உன்னுடைய, பாதபங்கயம் - திருவடித் தாமரைகளை, நண்ணிலா வகையே - அடையாதபடியே, இன்னம் - ஆர்த்தி பிறந்த பின்னும், நலிவான் சம்சாரத்திலே வைத்து நலிய, எண்ணு கின்றாய் - எண்ணுகின்றாய், எண் இலா - கணக்கிறந்த, பெரு - பெரிதாகிய, மாய னே - மாயனே, இமையோர்கள் - நித்யசூரிகளாலே, எத்தும் - துதிக்கப் படுகிற, மூன்று உலகம் - மூவகைச்சேதநா சேதநங்களையும், உடை - சேஷ மாக வுடைய, அண்ணலே - ஸ்வாமியே, அமுதே - நித்ய போக்யதையை யுடைய அமிர்தம் போன்றவனே, அப்பனே - உபகாரகனே, என்னை ஆள்வா னே - என்னை ஆண்டருள்வானே.

690. காட்டிப் படுப்பாயோ ... ... 435-வது இலக்கம் காண்க.

691. மாற்றமுள வாகிலும் சொல்லுவன் மக்கள்
தோற்றக்குழி தோற்றுவிப்பாய் கொலென்றின்னம்
ஆற்றங்கரை வாழ்மரம்போ லஞ்சுகின்றேன்
நாற்றச்சுவை யூறொலியாகிய நம்பீ

(688) ஸ்தோத்ரரத்நம் 58. (689) திருவா. 7-1-1.
(691) பெரிய. திரு. 11-8-1.

நாற்றம் - கந்தமென்ன, - சுவை ரசமென்ன, ஊறு - ஸ்பர்சமென்ன, ஒலி - ஶப்தமென்ன, ஆகிய-ஆகிய இக்குணங்களாய் நின்ற, நம்பீ - பூர்ணனே, (நான் உன்னைச் சில கேட்டால்), மாற்றம் உள - உனக்குச் சொல்லலாம் மறு மாற்றமுண்டு, ஆகிலும் - நான் சொன்னவற்றுக்கெல்லாம் நீ உத்தரம் சொன்னாயே யாகிலும், சொல்லுவன் - அதுக்குமேலே உத்தரம் சொல்லுகிறேன், மக்கள் - மநுஷ்யர்களுடைய, தோற்றக்குழி - கர்ப்பஸ்தாநமாகிற பெரும்பாழியிலே, இன்னம் - இதுக்குமேலும், தோற்றுவிப்பாய் கொல் - பிறப்பித்து ஸம்ஸரிக்கச் செய்வாயோ, என்று - என்று நினைத்து, ஆற்றங்கரை - ஆற்றங்கரையிலே, வாழ்-வர்த்திக்கிற, மரம்போல்-வ்ருக்ஷம்போலே, அஞ்சுகின்றேன் - பயப்படா நின்றேன்.

692. என்செய்ய தாமரைக்கட் பெருமானார்க் கென்றூதாய்
என்செய்யு முரைத்தக்கால் இனக்குயில்கா ணீரலிரே
முன்செய்த முழுவினையாற் திருவடிக்கீழ்க் குற்றேவல்
முன்செய்த முயலாதேன் அகல்வதுவோ வதியினமே.

என் - என்னுடைய, செய்யதாமரை - செந்தாமரை மலர்போன்ற, கண்- திருக்கண்களையுடைய, பெருமானார்க்கு - எம்பெருமானுக்கு, என் தூது ஆய்- என் தூதாகி, உரைத்தக்கால் - சொன்னால், என் செய்யும் - (அந்தச் சொல்லுதலானது உங்களுக்கு) என்ன தீமையைச் செய்யும், இனம் - கூட்டமான, குயில்காள் - குயில்களே, நீர் அலிரே - (கேட்டார்க் கினிமையான சொல்லையுடைய) நீங்க ளல்லீரோ, முன் - முற்பிறப்பிலே, செய்த - பண்ணின, முழுவினையால் - பெரும்பாபத்தால், திருவடிக்கீழ் - திருவடிகளிலே, குற்றேவல் செய்ய - அற்பகைங்கரியம் பண்ணுகைக்கு, முன் முயலாதேன் - முன்னே முயற்சி செய்யாத நான், இன்னமும் - இன்னமும், அகல்வதுவோ விதி - விலகி யிருப்பதுவோ எனக்கு அறுதி யிட்டது.

693. கையார் சக்கரத் தென்கருமாணிக்கமே என்றென்று
பொய்யே கைம்மைச் சொல்லி புறமேபுறமேயாடி
மெய்யே பெற்றொழிந்தேன் விதிவாய்க்கின்று காப்பாரார்
ஐயோ கண்ணபிரா னறையோ வினிப்போனாலே.

கை ஆர் - திருக்கையோடு பொருந்தின, சக்கரத்து-திருவாழியையுடையவனாய், என் கருமாணிக்கமே - அழகான வடிவையுடையவனே, என்று என்று - என்று பலகாலும், பொய்யே - பொய்யாகவே, கைம்மை சொல்லி - கபடவார்த்தையைச் சொல்லி, புறமே புறமே - புறம்பான விஷயங்களிலே ஒன்றைவிட் டொன்றைப்பற்றி, ஆடி - இடையறாமல் சஞ்சரித்து, மெய்யே- மெய்யன்பர் அடைந்த பிரயோஜனத்தையே, பெற்றொழிந்தேன் - அடைந்துவிட்டேன், விதி - இதுக்கு ஹேதுவாய் பகவத்க்ருபை, வாய்க்கின்று - பலிக்

(692) திருவா. 1-4-2. (693) திருவா. 5-1-1.

கும்போது, காப்பார் ஆர் - அதை தடுக்கவல்லவர் ஆர், கண்ணன் - சர்வசுலப ஞய்க்கொண்டு, பிரான் - எனக்கு உபகரித்த நீ, இனி - (உன் கிருபை எனக்கு பலித்த) பின்பு, போனல் - போனுபாகில், ஐயோ - அந்தோ, அறை யோ - முறையோ முறை.

694.
695.
696.
சீற்றமுள வாகிலும் செப்புவன் மக்கள்
தோற்றக்குழி தோற்று விப்பாய்கொ லென்றஞ்சி
காற்றத் திடைப்பட்ட கலவர் மனம்போல்
ஆற்றத் துளங்கா நிற்ப னாழிவலவா.

ஆழி - திருவாழியாழ்வானை, வலவா - வலக்கையி லேந்தின ஸர்வேஶ்வரனே, சீற்றம் உள-நீ சீறும்படியாக நான் செய்தவை பல உண்டு, ஆகிலும் செப்புவன் - ஆனலும் பின்னும் சொல்லுவன், மக்கள் தோற்றக்குழி-மநுஷ்யர்கள் கர்மாநுகுணமாக ஸம்ஸரிக்கும் கர்ப்பஸ்தாநத்திலே, தோற்றுவிப்பாய் கொல் - ப்ரவேசிப்பிக்கிருயோ, என்று-என்று, அஞ்சி - பயப்பட்டு, காற்றத்திடைப்பட்ட-பெருங்காற்றிலே அகப்பட்ட, கலவர் - மரக்கலத்தினுள்ளே இருப்பவர்களுடைய, மனம்போல் - நெஞ்சைப்போல், ஆற்ற - மிகவும், துளங்கா நிற்பன் - நடுங்கா நிற்பன்.

697. படை நின்ற பைந்தாமரையோ டணிநீலம்
மடை நின்றலரும் வயலாலி மணாளா
இடைய னெறிந்த மரமே யொத்திராமே
அடைய வருளா யெனக் குன்றனருளே.

படை - கலப்பைச்கும் அருதே கிடைக்கும் நிலத்திலே, நின்ற - தப்பி நின்ற, பைந்தாமரையோடு - தாமரை மலரோடே, அணி - தர்ஶநீயமான, நீலம் - நீலோத்பலங்களானவை, மடை - நீர்பாயும் மடைகளிலே, நின்று அலரும் - நின்றலரும்படியான, வயல் - வயல்களையுடைய, ஆலி - திருவாலிக்கு, மணாளா - நீர்வாஹகனை ஸர்வேஶ்வரனே, இடையன் - இடையனானவன், எறிந்த - கத்தியையிட்டு வெட்டிச் சாய்த்த, மரமே ஒத்து இராமே - மரமானது ஓரிடம் பச்சையாய் ஓரிடம் உலர்ந்து கிடக்குமாபோலே யிராமல், அடைய - நான் உன்னை அடையும்படி, எனக்கு - எனக்கு, உன்றன் - தேவரீருடைய, அருளே - க்ருபையையே, அருளாய் - அருளுவாய்.

698. அணியார் பொழில்சூழ் அரங்கநகரப்பா
துணியேனினி நின்னருளல்ல தெனக்கு
மணியே மணிமாணிக்கமே மதுசூதா
பணியாயெனக் குய்யும்வகை பரஞ்சோதி.

(694) பெரிய. திரு. 11-8-2. (697) பெரிய. திரு. 11-8-6.
(698) பெரிய. திரு. 11-8-8.

அணி ஆர் - அழகு மிக்கிருந்துள்ள, பொழில் - பொழிலாலே, சூழ் சூழப்பட்ட, அரங்கநகர் - திருவரங்கத்துக்கு, அப்பா - நிர்வாஹகனானவனே, இனி - இனிமேல், நின் - உன்னுடைய, அருள் அல்லது - க்ருபையை யொழிய, எனக்கு - எனக்கு, துணியேன் - அத்யவஸிக்கமாட்டேன், மணியே - நீலமணி போன்றவனே, மணி மாணிக்கமே - ரத்நம் போலே ஸ்வாபாவிகமான மேன்மையை யுடையவனே, மதுசூதா-மதுவென்னுமஸுரனை முடித்தவனே, எனக்கு - அடியேனுக்கு, உய்யும் வகை - உஜ்ஜீவநோபாயத்தை, பணியாய் - அருளிச் செய்யவேணும்.

699. நந்தா நரகத் தழுந்தாவகை நாளும்
எந்தாய் தொண்டரானவர்க் கின்னருள் செய்வாய்
சந்தோகா தலைவனே தாமரைக்கண்ணா
அந்தோ வடியேற்கருளா யுன்னருளே.

எந்தாய் - எமக்கு ஸ்வாமியானவனே, தொண்ட ரானவர்க்கு - தாஸபூதரானவர்க்கு, இன் - இனிதான, அருள் - க்ருபையை, செய்வாய் - செய்தருளுமவனே, சந்தோகா - வேத ப்ரதிபாத்யனானவனே, தலைவனே - ஸர்வாதிகனானவனே, தாமரைக்கண்ணா - செந்தாமரை போன்ற திருக்கண்களை யுடையவனே, நந்தா - மாறாதே அநுபவிக்கக்கடவ, நரகத்து - ஸம்ஸாரமாகிற நரகத்திலே, அழுந்தாவகை - அழுந்தாதபடி, அடியேற்கு - அடியேனுக்கு, நாளும்-எந்நாளும், உன் - உன்னுடைய, அருளே - க்ருபையையே, அருளாய்-அருளுவாய், அந்தோ - ஐயோ (ஆர்த்தியின் மிகுதி தோற்றுகிறது).

700. ஆற்றங்கரை ... ... 691-வது இலக்கம் காண்க.

701. காற்றத்திடை ... ... 694-வது இலக்கம் காண்க.

702. தூங்கார் பிறவிக்க ளின்னம் புகப்பெய்து
வாங்கா யென்று சிந்தித்துநா னதற்கஞ்சிப்
பாம்போ டொருகூரையிலே பயின்றாப் போல்
தாங்கா துள்ளம் தள்ளுமென் தாமரைக்கண்ணா.

என் - எனக்கு ஸ்வாமியான, தாமரைக்கண்ணா - தாமரைப் போன்றதிருக்கண்களையுடைய ஸர்வேஸ்வரனே, இன்னும் - இனிமேலும், தூங்கு ஆர் - தமஃ ப்ரசுரமான, பிறவிக்கள் - ஜந்மங்களிலே, புகப்பெய்து - புகச்செய்து, வாங்காய் என்று - மீட்கமாட்டாயென்று, நான் சிந்தித்து - நான் நினைத்து, அதற்கு - அந்த ஸம்ஸாரத்துக்கு, அஞ்சி - பயப்பட்டு, பாம்போடு - ஸர்பத்தோடே, ஒரு கூரையிலே - ஒரு கூரைவீட்டிலே, பயின்றாற் போல் - வஸித்தாற்போலே, உள்ளம் - என் மநஸ்ஸானது, தாங்காது - தரித்து நிற்கமாட்டாமல், தள்ளும் - தடுமாறா நின்றது.

(699) பெரிய. திரு. 11-8-9. (702) பெரிய. திரு. 11-8-3.

703. உருவார் பிறவிக்களின்னம் புகப்பெய்து
திருவாயென்று சிந்தித்தி யென்றதற்கஞ்சி
இருபாடெரி கொள்ளியினுள் ளெறும்பேபோல்
உருகாநிற்கு மென்றுள்ள மூழிமுதல்வா.

ஊழி முதல்வா - ப்ரளயகாலத்திலும் ரக்ஷகனாய் நின்றவனே, உரு ஆர் - நாநாரூபமான, பிறவிக்கள் - ஜந்மங்களிலே, இன்னம் - இனி மேலும், புகப் பெய்து - ப்ரவேசிப்பித்து, திரிவாய் என்று - நீ இப்படியே சுற்றிச் சுழலக் கடவை என்று, சிந்தித்தி என்று - நினைத்திருக்கிறாய் என்று, இருபாடு- இரண்டு பக்கத்திலும், எரி - நெருப்புப் பற்றி யெரியாநிற்கிற, கொள்ளியின் - கொள்ளிக் கட்டையின், உள் - உள்ளே அகப்பட்ட, எறும்பேபோல் - எறும்பு போலே, என் உள்ளம் - என் மநஸ்ஸானது, உருகா நிற்கும் - உருகிக் கரையா நின்றது.

704. கொள்ளக் குறையாத விடும்பைக் குழியில்
தள்ளிப் புகப்பெய்திகொ லென்றதற் கஞ்சி
வெள்ளத் திடைப்பட்ட நரியினம் போலே
உள்ளம் துளங்கா நிற்ப னூழிமுதல்வா.

கொள்ள - அநுபவித்தாலும், குறையாத - நசியாத, இடும்பைக்குழியில் - கர்ப்பஸ்தானத்திலே, தள்ளி - தள்ளி, புகப்பெய்திகொல் - ப்ரவேசிப்பிக்கப் போகிறாய், வெள்ளத்திடைப்பட்ட - மஹாப்ரவாஹத்தி லகப்பட்ட, நரிஇனம் போலே - நரி கூட்டம் போலே, உள்ளம் - என்னுடைய ஹ்ருதயம், துளங்கா நிற்பன் - தடுமாறும்படி இராநின்றேன்.

705. தருதுயரம் தடாயே லுன்சரணல்லால் சரணில்லை
விரைகுழவு மலர்ப்பொழில்சூழ் வித்துவக்கோட் டம்மானே
அரிசினத்தா லீன்றதா யகற்றிடினும் மற்றவள்தன்
அருள்நினைந்தே யழுங்குழவி யதுவேபோன் றிருந்தேனே.

விரைகுழவு - பரிமளம்மிக்க, மலர் - மலர்களையுடைய, பொழில் சூழ் - பொழிலாலே சூழப்பட்ட, வித்துவக்கோடு - திருவித்துவக்கோட்டி லெழுந்தருளியிருக்கிற, அம்மானே - ஸர்வேஸ்வரனே, தரு - நீயேதருகிற, துயரம் - துக்கத்தை, தடாயேல் - நீயே போக்காயாகில், உன் சரணல்லால் - தேவரீர் திருவடிகளே உபாயமல்லது, சரண் இல்லை-வேறே உபாயமில்லை, ஈன்றதாய் - பெற்றதாயாரானவள், அரி - அரிந்து போகடவேண்டும், (என்று), சினத்தால்- கோபத்தாலே, அகற்றிடினும் - தள்ளி விட்டாலும், அவள்தன் - அந்தத் தாயாருடைய, அருள் - அருளையே, நினைந்து - நினைந்துகொண்டு, அழும் - அவள் காலைக்கட்டிக்கொண்டழுகிற, குழவியதுவேபோன்று இருந்தேன் - குழந்தையை யொத்திருந்தேனென்கிறார்.

(703) பெரிய. திரு. 11-8-4. (704) பெரிய. திரு. 11-8-5.
(705) பெருமா. திரு. 5-1.

706. நிராஸகஸ்யாபி நதாவது³த்ஸஹே மஹேஶ ஹாதும் தவ பாத³ பங்கஜம் । ருஷா நிரஸ்தோபி ஶிஶு: ஸ்தநந்த⁴யோ: நஜாது மாதுஶ் சரணௌ ஜிஹாஸதி ॥

ஹே மஹேஶ - ஓகிரூபாதிக நிர்வாஹகனே, ஸ்தநந்தய: - ஸ்தநத்தையே தாரகமாகவுடைய, ஶிஶு: - குழந்தையானது, ருஷா - கோபத்தினாலே, நிரஸ்தோபி - தள்ளப்பட்டாலும், ஜாது - கோபித்தபோதோடு ஆதரித்த போதோடு வாசியற, மாது: - தாயாருடைய, சரணௌ - கால்களை, கட்டிக்கொள்ளுமத்தனையொழிய விட்டுவிட சம்மதிப்பதில்லை, தாவத் - அதுபோல, நிராஸகஸ்யாபி - ரக்ஷகரான தேவரீர் அடியேனை விட்டுவிட பார்த்தாலும், தவ - தேவரீருடைய, பாதபங்கஜம் - திருவடித் தாமரைகளை, ஹாதும் - விட்டு ஜீவிக்க, ந உத்ஸஹே - சமர்த்தனல்லேன்.

---

(706) ஸ்தோத்ரரத்நம். 26.

நான்காவது ப்ரகரணம்

707. பாதோஸ்ய விஸ்வாபூதாநி த்ரிபாதஸ்யாம்ருதம் திவி ।
த்ரிபாதூர்த்வ உதைத்புருஷ: பாதோஸ்யேஹா பவாத்புந: ॥

அஸ்ய - இந்த விராட் ஸ்வரூபியான ப்ரஹ்மத்திற்கு, விஸ்வாபூதாநி - ஜகத்திலிருக்கப்பட்ட சேதநாசேதநங்கள், பாத: - நாலிலொரு பாகமாயும், த்ரிபாத் - நாலில் மூன்று பாகங்கள், திவி - பரமபதத்திலே, அம்ருதம் - அழிவற்றும் இருக்கின்றன, புருஷ: - ஸ்ரீமந்நாராயணன், ஊர்த்வே - பரமபதத்திலே த்ரிபாத்-மூன்று பங்குடையவராக, உதைத் - உயர்ந்தெழுந்தருளி யிருக்கிறார், அஸ்ய - இந்தபகவானுடைய, பாத: - மற்றொரு பாகமானது, இஹ - இந்த ப்ரக்ருதி மண்டலத்திலே, புந: - மறுபடியும், அபவத் - உண்டாயிற்று.

708. திவி இதி அப்ராக்ருதம் ஸ்தாநமுச்யதே த்ரிபாத்வஞ்ச அப்ராக்ருதைர் போக்ய போகோபகரண போகஸ்தாந விசேஷைர்வா பூஷணாஸ்த்ராதி ரூபேண ஜகதந்தர்கத வஸ்த்வபிமாநிபிர் நித்யைர் பகவதநுபவமாத்ரபரைஸ்ச நித்யஸித்தைர் முக்தைஸ்சாத்மபிர்வா ஸம்பவதி ॥

திவிஇதி - திவிஎன்பது, அப்ராக்ருதம் ஸ்தாநம் - ப்ராக்ருத சம்பந்தமற்ற அப்ராக்ருத ஸ்தானமான பரமபதத்தை, உச்யதே - சொல்லப்படுகிறது, அப்ராக்ருதை: - அப்ராக்ருதமா யிருந்துள்ள, போக்ய போகோபகரண போகஸ்தாந விசேஷைர்வா - போக்ய விசேஷங்கள் போகோபகரண விசேஷங்கள் போகஸ்தாந விசேஷங்களாகிற, த்ரிபாத்வஞ்ச-மூன்றம்சங்கங்களோடேகூடியிருக்கையாலே த்ரிபாத் என்று, ஸம்பவதி-சொல்லப்படுகிறது, பூஷண அஸ்த்ராதிரூபேண - பூஷண அஸ்திராதி ரூபத்தாலே, ஜகதந்தர்கத வஸ்த்வபிமாநிபி: - ஜகத் அந்தர்கதவஸ்து அபிமாநிகளான, நித்யை: - நித்யஸூரிகளும், பகவதநுபவபரமாத்ரைஸ்ச - கேவல பகவதநுபவபரரா யிருக்கும், நித்யஸித்தை: - நித்யஸூரிகளும், முக்தைஸ் சாத்மபிர்வா - முக்தாத்மாக்களுமாகிற, த்ரிபாத்வஞ்ச - மூன்றம்சங்களோடே கூடியிருக்கையாலே த்ரிபாத் என்று, ஸம்பவதி - சொல்லப்படுகிறது.

709. ஸ ஏகாகீ ந ரமேத ॥

ஸ: - அந்த ஸ்ரீமந்நாராயணன், ஏகாகீ - (ப்ரக்ருதி லீனங்களான சேதன வர்க்கங்களில்லாமல்) ஒருவனா யிருந்துகொண்டு, ந ரமேத - சந்தோஷிக்கவில்லை.

---

(707) புருஷசூக்தம். (708) ஸ்ருதப்ரகாசிகை.
(709) மஹோபநிஷத்.

710. த்வம்மே அஹம்மே குதஸ்தத் தத்பிகுத இதம் வேதமூல ப்ர மாணாதேதச்சாநாதி ஸித்தாதநுபவ விபவாத் ஸோபி ஸாக் ரோஸ ஏவ । க்வாக்ரோஸ: கஸ்ய கீதாதிஷு மம விதித: கோத்ர ஸாக்ஷீ ஸுதீஸ்யாத் ஹந்த த்வத் பக்ஷபாதீ ஸ இதி ந்ருகலஹே ம்ருத்ய மத்யஸ்தவத் த்வம் ॥

ஹேஜீவ - ஓ ஜீவனே, த்வம் - நீ, மே - என்னுடைய தாஸன், அஹம் - நான், மே - எனக்கே தாசனன்றி உமக்கு தாஸனல்லேன், தத் - அந்த விஷயம், குத: - எப்படி ருஜுவாகிறது, இதம் - இந்த என்னுடைய கக்ஷி யானது, வேதமூல ப்ரமாணாத் - வேதம் முதலான சாஸ்த்ரத்தினால் நம்பப்படு கிறது, ஏதச்ச - என்னுடைய கக்ஷியும், அநாதிஸித்தாத் - நெடுங்காலமாய் சாதித்துக் கொள்ளப்பட்ட, அநுபவ விபவாத் - நிரபேக்ஷமான அநுபவத்தின் உறுதியினால் நம்பப்படுகிறது, ஸோபி - அந்த அநுபவமோ வென்னில், ஸா க்ரோஸஏவ - உன் அநுபவகாலமுதல் ஆக்ஷேபிக்கப்பட்டே யிருக்கிறது, ஆக் ரோஸ: க்வ கஸ்ய - எவ்விடத்தில் யாருடைய ஆக்ஷேபம் நடந்தது, கீதா திஷு - கீதை முதலான விடங்களில், மம - என்னுடைய ஆக்ஷேபமானது, விதித: - ப்ரஸித்தமா யிருக்கின்றது, அத்ர - அப்படி ஆக்ஷேபித்த விடத்தில், க: - எவன், ஸாக்ஷீ - கண்ணாலே கண்டவன், ஸுதீ: - சிறந்த ஜ்ஞாநிகள், ஸ்யாத் - ஸாக்ஷிகளாக யிருக்கிறார்கள், ஹந்த-இது மிகவும்வியப்பு, ஸ: - அந்த ஜ்ஞாநிகள், த்வத் பக்ஷபாதி - தேவரீருடைய பக்ஷபாதிகள், இதி - என்று, ந்ரு கலஹே-ஜீவன் வாதம் பண்ணுகையில், த்வம் - தேவரீர், ம்ருக்ய மத்யஸ்தவத் - வழக்கைத் தீர்ப்பவ னில்லாமையால் ப்ரமாணம் செய்கிறவன்போல எழுந் தருளி யிருக்கிறீர்.

711. நசக்ஷுஷா பஸ்யதி கஸ்சநைநம் ।

கஸ்சந - ஒருவனும், ஏநம் - ஈஸ்வரனை, சக்ஷுஷா - மாம்சகண்ணாலே, நபஸ்யதி - பார்க்கிறதில்லை.

712. கட்கிலீ ... ... 246-வது இலக்கம் காண்க.

713. யஆத்மநி திஷ்டந் நாத்மநோந்தரோ யமாத்மா நவேத யஸ் யாத்மா ஸரீரம் ய ஆத்மாந மந்தரோ யமயதி ஸத ஆத்மாந் தர்யாம் யம்ருத: ॥

ய: - எவர், ஆத்மநி - ஜீவனிடத்திலே, திஷ்டந் - இருக்கின்றனரோ, ய: - எவர், ஆத்மந: - ஜீவனுக்கு, அந்தர: - அந்தர்யாமியோ, யம் - எவரை, ஆத்மா - ஜீவன், நவேத - அறிகின்றிலனோ, யஸ்ய - எவருக்கு, ஆத்மா - ஜீவன், ஸரீரம் - உடலோ, ய:-எவர், அந்தர: - அந்தர்யாமியாகிய, ஆத்மாநம் - ஜீவனை, யமயதி - நியமிக்கின்றாரோ, ஸ: - அவரே, தே - உனக்கும், அந்தர் யாமி - உள்ளிருப்பவர், ஆத்மா - அந்த பரமாத்மா, அம்ருத: - அழிவற்றவர்.

(710) (711) தை. உப. ப்ர. 2.
(713) ப்ருஹ. 5-3.

714. ஆதாவீஶ்வர தத்தயைவ புருஷஸ் ஸ்வாதந்த்ரிய ஶக்த்யா ஸ்வயம் । தத்தத் ஜ்ஞாந சிகீர்ஷண ப்ரயத்நாந் யுத்பாதயந் வர்த்ததே ॥

ஆதௌ - ஆதியிலே, புருஷ꞉ - சேதனன், ஈஶ்வர - ஈஸ்வரனாலே, தத்தயைவ - கொடுக்கப்பட்டதான, ஸ்வாதந்த்ரிய - ஸ்வாதந்த்ரியமாகிற, ஶக்த்யா - சக்தியாலே, ஸ்வயம் - தானே, தத்தத் - அந்தந்த, ஜ்ஞாந - ஜ்ஞாநத்தையும், சிகீர்ஷண - செய்ய இச்சையையும், ப்ரயத்நாந் - ப்ரயத்னங்களையும், உத்பாதயந் - பிறப்பித்துக்கொண்டு, வர்த்ததே - இருக்கிறான்.

715. ததேஷா கதயாம் யேதத் யத்வ்ருத்தம் மம ஶோபநா꞉ ॥

ஶோபநா꞉ - ஸௌபாக்கியவதிகாள், ஏஷா - இந்த நான், மம - எனக்கு, யத்வ்ருத்தம் - எந்த விருத்தாந்தத்தை கேட்டீர்களோ, ஏதத் - அந்த விருத்தாந்தத்தை, கதயாமி - சொல்லுகிறேன்.

716. ஸௌவீர ராஜஸ்ய புரா மைத்ரேயோஹ்பூத் புரோஹித꞉ ।
தேநசாயதநம் விஷ்ணோ꞉ காரிதம் தேவிகா தடே ॥
அஹந்ஹநி ஶுஶ்ரூஷா புஷ்ப தூபாம்பு லேபநை꞉ ।
தீபதாநாதிபிஶ்சைவ சக்ரே தத்ர வஸந் த்விஜ꞉ ॥

புரா - பூர்வ காலத்திலே, ஸௌவீர ராஜஸ்ய - ஸௌவீர ராஜாவினுடைய, புரோஹித꞉ - புரோகிதனான, மைத்ரேய꞉ - மைத்ரேயன் என்று ஒருவர், அபூத் - இருந்தார், தேந - அவராலே, தேவிகாதடே - தேவியாற்றங்கரையிலே, விஷ்ணோ꞉ ஆயதநம் காரிதம் - விஷ்ணுவாலயம் கட்டிவைக்கப்பட்டது, தத்ர-அங்கே, த்விஜ꞉வஸந் - அந்த ப்ராஹ்மணன் வஸித்துக்கொண்டு, அஹந்யஹநி - தினந்தோறும், புஷ்பதூப அம்பு லேபநை꞉ - புஷ்பம் தூபம் தீர்த்தம் சாத்துப்படி இவைகளாலேயும், தீபதாநாதிபி꞉ சைவ - தீபசமர்ப்பணம் முதலியவைகளாலும், ஶுஶ்ரூஷாம் - கைங்கரியங்களை, சக்ரே - பண்ணிக்கொண்டிருந்தார்.

717. கார்த்திகே தீபிதோதீப உபாத்தஸ் தேநசைகதா ।
ஆஸீந் நிர்வாண ஹ்யிஷ்டோ தேவயஸ்ய புரதோ நிசி ॥
தேவதாயதநேசாஸம் தத்ராஹமபி மூஷிகா ।
ப்ரதீபவர்த்தி க்ரஹணேக்ருத புத்திர் வராநநா꞉ ॥
க்ருஹீதாச மயாவர்த்தி꞉ ப்ருஷதம்ஶோ ரராவச ।
நஷ்டாசாஹம் ததஸ் தஸ்ய மார்ஜாலஸ்ய ஹயாநுகா ॥
வக்த்ர ப்ராந்தேந நஶ்யந்த்யா ஸ தீப꞉ ப்ரேரிதோமயா ।
ஜஜ்வால பூர்வவத் தீப்த்யா தஸ்மிந் நாயதநே புந꞉ ॥

---

(714) தத்வஸாரம். (715) விஷ்ணுதர்மம்.
(716) விஷ்ணுதர்மம். (717) விஷ்ணுதர்மம்.

ஏகதா - ஒரு, கார்த்திகே - கார்த்திகை மாசத்திலே, நிசி - இராக்காலத்தில், தேவஸ்ய புரத꞉ - எம்பெருமான் முன்னே, தேந உபாத்த꞉ - அவராலே ஏற்றப்பட்ட, தீபித꞉ - ப்ரகாசித்துக்கொண்டிருக்கிற, தீப꞉ - விளக்கானது நிர்வாண ப்ராயிஷ்ட꞉ ஆஸீத் - அவியும்படியானதா யிருந்தது, தத்ர - அந்த, தேவதாயதநே ச - தேவாலயத்திலே, மூஷிகா - ஒரு பெண் எலியாய், அஹமபி - நானும், ஆஸம் - இருந்தேன், வராநநா꞉ - ஹே நல்ல முகத்துடையவர்களே, ப்ரதீபவர்த்தி க்ரஹணே - எறிந்துகொண்டிருக்கிற திரியை அபஹரிக்க வேணுமென்று, க்ருதபுத்தி꞉ - புத்தியுடையளாக ஆனேன், மயா - என்னாலே, வர்த்தி꞉ - திரியானது, க்ருஹீதா ச - வாயாலே கவ்விக்கொள்ளப்பட்டது, (அந்த சமயத்தில்), ப்ருஷதம்ச꞉ ரராவ ச - பூனை கூவிற்று, தஸ்ய - அந்த, மார்ஜாலஸ்ய - பூனையினுடைய, பயாதுரா - பயத்தாலே நடுங்கி, தத꞉ - பிறகு, அஹம் - நான், நஷ்டா ச - மரணமடைந்தேன், நஶ்யந்த்யா - மரணமடைந்துகொண்டிருக்கிற, மயா - என்னாலே, வக்த்ரப்ராந்தேந - வாயின் நுனியாலே, ப்ரேரித꞉ - தூண்டப்பட்ட, ஸ꞉ - அந்த விளக்கானது, புந꞉ - மறுபடியும், தஸ்மிந் ஆயதநே - அந்த ஆலயத்திலே, பூர்வவத் - முன்புபோலே, தீப்த்யா ஜஜ்வால - ப்ரகாசித்துக் கொண்டிருந்தது.

718. ம்ருதாசாஹம் ததோ ஜாதா வைதர்஭ீ ராஜகந்யகா ।
ஜாதிஸ்மரா காந்திமதீ பவதீநாம் பரா குணை꞉ ॥

ம்ருதா ச - மரணமடைந்த, அஹம் - நான், தத꞉ - அநந்தரம், வைதர்பீ ராஜகந்யகா - விதர்ப்பராஜன் புத்திரியாய், ஜாதா - பிறந்தேன், ஜாதிஸ்மரா - பூர்வ ஜந்மஜ்ஞாநத்தை யறிபவளாயும், காந்திமதீ - சௌந்தர்ய முடையவளாயும், பவதீநாம் - உங்களுடைய, குணை꞉ - குணங்களாலே, பரா - ச்ரேஷ்டமானவளாயும், ஜாதா - பிறந்தேன்.

719. ஏஷ ப்ரபாவோ தீபஸ்ய கார்த்திகேமாஸி ஶோபநா꞉ ।
உத்தஸ்ய விஷ்ண்வாயதநே யஸ்யேயம் வ்யுஷ்டிருத்தமா ॥
அஸங்கல்பிதமப்யஸ்ய ப்ரேரணம் யத்க்ருதம் மயா ।
விஷ்ண்வாயதந தீபஸ்ய தஸ்யை தத்புண்யஜம் பலம் ॥
உதோ ஜாதி ஸ்ம்ருதிர்ஜந்ம மாநுஷ்யம் ஶோபநம்வபு꞉ ।
வஶ்ய꞉ பதிர்மே ஸர்வாஸாம் கிம்புநர் தீப தாயிநாம் ॥

ஶோபநா꞉ - ஹே பாக்யவதிகாள், கார்த்திகேமாஸி - கார்த்திகை மாதத்தில், தீபஸ்ய - தீபத்திற்கு, ஏஷ - இப்படிப்பட்ட, ப்ரபாவ - பெருமையுண்டு, இயம் - இந்த, உத்தமா வ்யுஷ்டி꞉ - பெரிய ஏற்றங்கள் எல்லாம், விஷ்ண்வாயதநே - பகவத் ஸந்நிதியிலே, தத்தஸ்ய - ஸமர்ப்பிக்கப்பட்ட, யஸ்ய - யாதொரு தீபத்தினுடையதோ, மயா - என்னாலே, விஷ்ண்வாயதந - பகவத் ஸந்நிதியில் (ஏற்றப்பட்ட), அஸ்ய - இந்த, தீபஸ்ய - விளக்கினுடைய, அஸங்கல்பிதம் அபி - ஒரு சங்கல்பம் இல்லாமலிருக்கச்செய்தே, ப்ரே

(718) (719)

ரணம் - தூண்டுதல், க்ருதம் - செய்யப்பட்டது, இதி - என்பது, யத் - யாதொன்றுண்டோ, தஸ்ய - அதினுடைய, ஏதத் - இந்த, பலம் - பலமானது, புஜ்யதே - புஜிக்கப்படுகிறது; ததஃ - அப்படியே, ஜாதிஸ்ம்ருதிஃ - பூர்வஜந்ம ஜ்ஞாநமும், மாநுஷ்யம் ஜந்ம - மநுஷ்ய ஜந்மமும், ஶோபநம் வபுஃ - அழகுள்ள தேஹமும், ஸர்வாஸாம் - எல்லாரைப் பார்க்கிலும், மே - எனக்கு, வஶ்யஃ பதி - பர்த்ரு வஶ்யமுண்டான பின்பு, தீபதாயிநாம் - திருவிளக்கேற்றுகிறவர்களுடைய, கிம் புநஃ - (பலத்தை) கேட்கவேண்டியதென்ன.

720. யேந ஸம்வர்த்திதா பாலா யேநாஸ்மி பரிரக்ஷிதா ।
தேந பித்ரா வியுக்தாஹம் நஜீவேயம் கதஞ்சந ॥
நத்யாம்வா நிபதிஷ்யாமி ஸமித்தேவா ஹுதாஶநே ।
பர்வதாத் வா பதிஷ்யாமி பித்ருஹீநா நிராஶ்ரயா ॥

பாலா - பாலையான நான், யேந - எவராலே, ஸம்வர்த்திதா - வளர்க்கப்பட்டேனோ, யேந - எவராலே, பரிரக்ஷிதா அஸ்மி - ரக்ஷிக்கப்பட்டேனோ, தேந - அந்த, பித்ரா - பிதாவினால், வியுக்தா - விடுபட்ட, அஹம் - நான், கதஞ்சந - ஒருபோதும், நஜீவேயம் - ஜீவிக்கமாட்டேன், பித்ருஹீநா - பிதா இல்லாதவளாயும், நிராஶ்ரயா - வேறு கதி யில்லாதவளாயுமிருக்கிற நான், நத்யாம்வா - ஆற்றிலாகிலும், நிபதிஷ்யாமி - விழப்போகிறேன், ஸமித்தேவா - நன்றாய் ஜ்வலிக்கிற, ஹுதாஶநே - அக்நியிலாவது விழுகிறேன், பர்வதாத்வா - மலைமேலிருந்தாவது, பதிஷ்யாமி - கீழே விழுகிறேன்.

721. ஆகத்ய கருணாவிஷ்டோ யமஸ்ஸர்வ ஹிதேரதஃ ।
ஸ்தவிரப்ராஹ்மணோ பூத்வா ப்ரோவாசேதம் வசஸ்ததா ॥

ஸர்வஹிதேரதஃ - ஸமஸ்த பூதங்களினுடைய ஹிதத்திலாஸக்தியுடைய, யமஃ - யமன், கருணாவிஷ்டஃ - கருணையுடன் கூடினவனாய், ஸ்தவிர - கிழவனான, ப்ராஹ்மணோ பூத்வா - ப்ராஹ்மண வேஷத்தைப் பூண்டு, ஆகத்ய - வந்து, ததா - அப்பொழுது, இதம் வசஃ - இந்த வாக்கியத்தை, ப்ரோவாச - சொன்னான்.

722. அலம்பாலே விஶாலாக்ஷி ரோதநேநாதி விஹ்வலே ।
நபூயஃ ப்ராப்யதே தாதஸ் தஸ்மாந் நார்ஹதி ஶோசிதும் ॥

அதி விஹ்வலே - மிகவும் துக்கிதையான, விஶாலாக்ஷி - விஶாலமான கண்களுடைய, பாலே - குழந்தாய், ரோதநே - அழுகையானது, அலம் - போதுமானது, தே - உன்னுடைய, தாதஃ - பிதாவை, பூயஃ - மறுபடியும், ந ப்ராப்யஸே - லபிக்கமாட்டாய், தஸ்மாத் - ஆகையால், ஶோசிதும் - துக்கிப்பதற்கு, ந அர்ஹதி - தகுந்தவளல்ல.

723. தஸ்மாத் த்வம் துக்கமுத்ஸ்ருஜ்ய ஶ்ரோதுமர்ஹஸி ஸுவ்ரதே । பித்ருஸ்யாம் விப்ரயோகோயம் யேநாபூத் கர்மணாதவ ॥

(720) (721)
(722) (723)

ஸுவ்ரதே - நன்னடக்கையுடையவளே, தஸ்மாத் - அந்த காரணத்தினால், த்வம் - நீ, துக்கம் - துக்கத்தை, உச்ஸ்ருஜ்ய - விட்டு, தவ - உன்னுடைய, யேந - எந்த, கர்மணா - கர்மத்தினால், அயம் - இந்த, பித்ருப்யாம் - தாய் தந்தையர்களுடைய, விப்ரயோகஃ - வியோகமோ, (அந்த கர்மத்தை), ஸ்ரோதும் - கேட்க, அர்ஹஸி - தகுந்தவள்.

724. புரா த்வம் ஸுந்தரீநாம வேஶ்யா பரமஸுந்தரீ ।
ந்ருத்த கீதாதி நிபுணா வீணா வேணு விசக்ஷணா ॥

த்வம் - நீ, புரா - பூர்வகாலத்தில், ந்ருத்த - ஆட்டத்திலும், கீதாதி - பாட்டு முதலான வித்யைகளிலும், நிபுணா - வல்லவளாயும், வீணா - வீணை வாசிப்பதிலும், வேணு - புள்ளாங்குழல் பாடுவதிலும், விசக்ஷணா - நல்ல யோக்யதை யுடையவளாயும், பரம ஸுந்தரீ - மிக்க அழகுடையவளாயுமுள்ள, ஸுந்தரீநாம - சுந்தரி என்னும் பெயருடைய, வேஶ்யா - தாசி.

725. ஶ்ருணு தஸ்ய மஹா ப்ராஜ்ஞே நிமித்தம் வததோ மம ।
யேந த்வம் ப்ராஹ்மணஸ்யாஸ்ய குலே ஜாதா மஹாத்மநஃ ॥

ஹே மஹா ப்ராஜ்ஞே - விசேஷ ஜ்ஞானமுடையவளே, யேந - எந்த காரணத்தினால், மஹாத்மநஃ - மஹாத்மாவான, அஸ்ய - இந்த, ப்ராஹ்மணஸ்ய - ப்ராஹ்மணனுடைய, குலே - வம்சத்தில், ஜாத - பிறந்த, தஸ்ய-அந்த, நிமித்தம் - காரணத்தை, வததஃ - சொல்லுகின்ற, மம - என்னுடைய, வாக்யம் - வாக்கியத்தை, ஶ்ருணு - கேள்.

726. பிதேவ தர்மராஜோஹூத் தஸ்யாஸ்தத் ப்ரியதர்ஶநஃ ।
ஸாந்த்வயந் ஸ மஹாதேஜா வ்யாஜஹார ச தாம்ப்ரதி ॥

தஸ்யாஃ - அவளுக்கு, யஃ - எந்த, தர்மராஜஃ - தர்மராஜன், பிதேவ - தகப்பனைப் போலவே, தத் - அவளுக்கு, ப்ரியதர்ஶநஃ ப்ரியமான பார்வையுடன் ப்ரஸந்நராக, ஆபூத் - ஆனார், ஸஃ - அந்த, மஹாதேஜாஃ - மஹாதேஜோசாலியான யமன், ஸாந்த்வயந் - நல்வார்த்தைகளைச் சொல்லி, தாம் ப்ரதி - அவளைக் குறித்து, வ்யாஜஹ்ரே - சொன்னான்.

727. ஹத்ரே த்வயா ஸுஷ்டு க்ருதம் ந கிஞ்சிதிஹ வித்யதே ।
இதோ தவாதஶ ஜந்மாந்தே த்வாம் கஶ்சித்விதித ஆவிஶத் ॥
விஷ்ணுபக்தோ நிவாஸார்தம் ராத்ரியாந்து தவ வேஶ்மநி ।
தத் ஸந்நிதாந ப்ரபவஸ்தவ ஸாது ஸமாகமஃ ॥
ஸாஹிவை ப்ரஹ்மவிதுஷீ ஶ்ரீமத் ரங்கமுபாஶ்ரிதா ।
தத்ர தீர்த்தோத்தமம் ஶ்ரீமத்புஷ்கரம் நாம ஸம்ஶ்ரிதா ॥
தர்மஜ்ஞா தர்மபரமா யஸ்யாஸ்தே ஸங்கமோ பவத் ॥

(724) (725)
(726) காருடபுராணம். (727) காருடபுராணம்.

ஹே பத்ரே - க்ஷேமங்களுடையவளே, இஹ - இந்த ஜந்மத்தில், த்வயா - உன்னால், ஸுக்ருதம் - ஸுக்ருதம், கிஞ்சித் அபி - கொஞ்சமாகிலும், ந விதயதே - செய்யப்படவில்லை, இதஃ - இதற்கு, த்வாதஶ ஜந்மாந்தே-பன்னிரண்டாவது ஜந்மத்தினுடைய முடிவில், த்வாம் - உன்னை, கஶ்சித் - ஒரு, விஷ்ணு பக்தஃ - விஷ்ணுபக்தனான, ஸித்தஃ - சித்த புருஷன், ராத்ரியாம் - ஒரு ராத்ரியிலே, தவ - உன்னுடைய, வேஶ்மநி க்ருஹத்திலே, நிவாஸார்த்தம் - தங்கிப் போகைக்கு, ஆவிஶத் - உட்கார்ந்தான், தவ - உனக்கு, ஸாதுஸமாகமஃ - சாது சங்கமானது, தத் - அவனுடைய, ஸந்நிதாந - ஸந்நிதானத்தாலே, ப்ரபவஃ - உண்டாயிற்று, யஸ்யாஃ - எந்த, தே - உனக்கு, ஸங்கமஃ - சாதுசங்கமானது, அபவத் - உண்டாயிற்றோ, (அதனால்), ஸாஹிவை - அப்படிப்பட்டவீ, ப்ரஹ்ம விதுஷீ - ப்ரஹ்மஜ்ஞாந முடையவளாய், ஸ்ரீமத் ரங்கம் - ஸ்ரீரங்கத்தை, உபாஶ்ரிதா - ஆஶ்ரயித்தாய், தத்ர - அந்த விடத்தில், ஸ்ரீமத் அஶ்வத்தம் நாம - அச்வத்தம் என்று பெயருடைய, தீர்த்தோத்தமம் - உத்தம தீர்த்தத்தை, ஸமாஶ்ரிதா - அடைந்தாய், தர்மஜ்ஞா தர்ம பரமா-நல்ல ஜ்ஞாநாநுஷ்டானங்களை உடையவளா யிருக்கிறாய்.

728. இன்றென்னைப் பொருளாக்கித் தன்னையென்னுள் வைத்தான்
அன்றென்னைப் புறம்போகப் புணர்த்ததென் செய்வான்
குன்றென்னத் திகழ்மாடங்கள் சூழ் திருப்பேரான்
ஒன்றெனக் கருள்செய்ய வுணர்த்த லுற்றேனே.

இன்று - இன்று, என்னை பொருள் ஆக்கி - என்னை ஒரு பொருட்டன்மையுடையேனாகச் செய்து, தன்னை - போக்யபூதனான தன்னை, என்னுள் - என் மனத்தில், வைத்தான் - தானே கொண்டு வைத்தான், அன்று - அந்நாளில், என்னை - பராதீநனான என்னை, புறம்போக - வேறுவிஷயங்களில் கை கழிந்துபோம்படி, புணர்த்தது - சங்கல்பித்தது, என் செய்வான் - யாது செய்கைக்காக, குன்று என்ன மலைகளென்னும்படி, திகழ் - விளங்குகின்ற, மாடங்கள் சூழ் - மாடங்கள் சூழ்ந்த, திருப்பேரான் - திருப்பேர் நகரையுடையான், ஒன்று - இவையிரண்டிலும் ஒன்றுக்கு ஹேதுவை, எனக்கு அருள் செய்ய - எனக்கருளிச் செய்கைக்காக, உணர்த்தலுற்றேன் - தன் திருவுள்ளத்திலே படும்படி அறிவிக்க வேண்டுமென்று உத்தேசித்திரா நின்றேன்.

729. மெய்ந்நின்று கமழ்துளவ விரையேறு திருமுடியன்
கைநின்ற சக்கரத்தன் கருதுமிடம் பொருதுபுனல்
மைநின்ற வரைபோலும் திருவுருவ வாட்டாற்றாற்கு
எந்நன்றி செய்தேனோ வென்னெஞ்சில் திகழ்வதுவே.

மெய் நின்று - திருமேனி முழுதும் நின்று, கமழ் துளபம் - பரிமளிக்கிற திருத்துழாயினுடைய, விரை - வாசனை, ஏறு - மிகுந்து வருகிற, திரு முடி

(728) திருவா. 10 8 9. (729) திருவா. 10.6.8.

யன் - திரு முடியையுடையனாய், கருதும் இடம் - நினைத்த இடத்திலே போய், பொருது - போர் செய்து, கைநின்ற - மீண்டு திருக்கையில் வந்திருந்த, சக்கரத்தன் - திருவாழியுடையனாய், புனல் நின்ற - கடல் நீர்போலே நிலைப்பெற்றிருந்த, மை - கருமையையுடைத்தான வரைபோலும் - மலை போன்ற, திரு உருவம் - அழகிய வடிவையுடையனாய்க்கொண்டு, வாட்டாற்றுற்று - திருவாட்டாற்றி லெழுந்தருளி யிருப்பவனுக்கு, என் நன்றி - என்ன நன்மையை, செய்தேனோ - தனக்குச் செய்தேனாக, என்னெஞ்சில் - என் மனத்தில் புகுந்து, திகழ்வது - விளங்குவது.

730. விடுவேனோ வென்விளக்கை யென்னாவியை
நடுவேவந் துய்யக்கொள்கின்ற நாதனை
தொடுவேசெய் திளவாய்ச்சியர் கண்ணினுள்
விடவேசெய்து விழிக்கும் பிரானையே.

என் விளக்கை - எனக்கு (எல்லாப் பொருள்களையும் விளக்கிக் காட்டுகிற) தீபமானவனை, என் ஆவியை - என் உயிராயிருப்பவனை, நடுவேவந்து-இடையிலே எழுந்தருளி, உய்ய - நான் உஜ்ஜீவிக்கும்படி, கொள்கின்ற - அங்கீகரிக்கிற, நாதனை - சுவாமியை, தொடுவே-கபடச்செயல்களையே, செய்து-பண்ணி, இள ஆய்ச்சியர் - இளமையாகிய இடைப்பெண்களுடைய, கண்ணினுள் - கண்களிலே, விடவே செய்து - விட புருஷர்களுடைய செயலைச் செய்து, விழிக்கும் - கண்கலப்புச் செய்கிற, பிரானை - உபகார சீலனை, விடுவேனோ-விடவல்லேனோ.

731. கருளப்புட்கொடி சக்கரப்படை வானநாட வெங்கார்முகில்
[வண்ணா
பொருளல்லாதவென்னைப் பொருளாக்கி யடிமை கொண்டாய்
தெருகொ ணான்மறைவல்லவர் பலர்வாழ் சிரீவரமங்கலநகர்க்
கருள்செய்தங் கிருந்தா யறியேனொரு கைம்மாறே.

கருளப்புள் - பெரிய திருவடியாகிற, கொடி - கொடியையும், சக்கரப் படை - சக்கராயுதத்தையும், வானநாட - பரமபதநாட்டையுமுடையவனே, எம் கார்முகில்வண்ணா - எம்முடைய காளமேகம்போன்ற வடிவையுடையவனே, (அந்த வடிவழகாலே), பொருள் அல்லாத - ஒருவஸ்துவல்லாத, என்னை - அடியேனை, பொருள் ஆக்கி - ஒரு பொருளாகச் செய்து, அடிமை கொண்டாய் - அதற்கு மேலே வாசிக கைங்கரியத்தையும் அங்கீகரித்தாய் (அதை முழுதும் நடத்துகைக்காக), தெருள் கொள் - ஞானத்தையுடைய, நால் மறை - நான்கு வேதங்களையும், வல்லவர் - தாங்கள் நினைத்தபடி நிர்வகிக்கவல்லவர்கள், பலர் - பலரும், வாழ் - பகவதனுபவத்தாலே சம்பன்னராய் வர்த்திக்கிற, சிரீவரமங்கல நகர்க்கு - சிரீவரமங்கல நகரத்துக்கு, அருள்

(730) திருவா. 1-7-5. (731) திருவா. 5 7-3.

செய்து - கிருபைபண்ணி, அங்கு யிருந்தாய் - அவ்விடத்தே எழுந்தருளி யிருக்கிறவனே, (இப்படி இதுக்கு முன்பு நீ பண்ணின உபகாரத்துக்கு நான்). ஒரு கைம்மாறு - ஒரு பிரதியுபகாரம், அறியேன் - செய்தேனாக அறிகின்றிலேன்.

732. ஸோஷிரம்ய மஹாத்மாநம் க்ருத்வா ராமம் ப்ரதக்ஷிணம் ।
ந்யவேதயதமேயாத்மா த்ருஷ்டா ஸீதேதி தத்வத: ॥

ஸ: அமேயாத்மா - அளவிட முடியாத தைரியமுடைய சிறிய திருவடி, மஹாத்மாநம் - மஹாத்மாவான, ராமம் - ராமரை, அபிகம்ய - அடைந்து, ப்ரதக்ஷிணம் க்ருத்வா - ப்ரதக்ஷிணம் செய்து, த்ருஷ்டா - கண்டேன், ஸீதா - ஸீதையை, இதி - என்று, தத்வத: - உண்மையாக, ந்யவேதயத் - அறிவித்தார்.

733. தருதுயரம் ... ... 705-வது இலக்கம் காண்க.

734. பஞ்சராத்ரஸ்ய க்ருத்ஸ்நஸ்ய வக்தா நாராயண: ஸ்வயம் ।

க்ருத்ஸ்நஸ்ய - சமஸ்தமான, பஞ்சராத்ரஸ்ய - பாஞ்சராத்ர சாஸ்திரத்திற்கும், நாராயண: - நாராயணன், ஸ்வயம் - தானே, வக்தா - அருளிச் செய்தவன்.

735. நோலாதாற்றே னுனபாதங் காணவென்று நுண்ணுணர்வின்
நீலார்கண்டத் தம்மானு நிறைநான்முகனு மிந்திரனும்
சேலேய் கண்ணார் பலர்சூழவிரும்புந் திருவேங்கடத்தானே
மாலாய்மயக்கி யடியேன்பால் வந்தாய்போலே வாராயே.

உனபாதம் - உன் திருவடிகளை, காண - காண்கைக்கு, நோலாது - நோற்காமல், ஆற்றேன் என்று - தரியேனென்று சொல்லி, நுண் உணர்வின் - நுட்பமான ஞானத்தையும், நீல் ஆர் கண்டத்து - கருமை நிறைந்த கண்டத்தையுமுடைய, அம்மானும் - ருத்திரனும், நிறை - (சிருஷ்டிக்கு அநுகுணமான ஞானம் முதலியவைகள்) நிறையப் பெற்ற, நான் முகனும் - பிரமனும், இந்திரனும் - இந்திரனும், சேல் ஏய் - சேல்மீனை நிகர்த்த, கண்ணார் - கண்களையுடையராகிய, பலர் - உமை சரஸ்வதி முதலான பல பெண்களும், சூழ - சூழும்படி, விரும்பும் - அபேக்ஷிக்கிற, திருவேங்கடத்தானே - திருவேங்கடமுடையானே, மால் ஆய் - கருநிறத்தையுடைய கிருஷ்ணனாய், மயக்கி - குண சேஷ்டிதங்களாலே எல்லாரையும் மயங்கப்பண்ணி, வந்தாய் போலே - வந்தாற்போலே, அடியேன்பால் - அடியேன் பக்கலிலே, வாராய் - வந்தருள வேண்டும்.

736. திரோதாநகரீ ஶக்திஸ்ஸா நிக்ரஹ ஸமாஹ்வயா ।
புமாம்ஸம் ஜீவஸம்ஜ்ஞம் ஸா திரோஹாவயதி ஸ்வயம் ॥

---

(732) ரா. பா. 1-78. (734) ஸ்ரீபாஞ்ச.
(735) திருவா. 6-10-8. (736) அஹிர். ஸம். 14.

திரோதாநகரீ - ஜ்ஞாநத்தை மறைக்கின்ற, நிக்ரஹ ஸமாஹ்வயம் - நிக்ரஹமென்று பெயருடைய, ஸா - அந்த, ஶக்திः - சக்தியானது, ஜீவ ஸம்ஜ்ஞம்- ஜீவனென்று பெயருடைய, புமாம்ஸம் - புருஷனே, ஸ்வயம் - தானே, திரோபாவயதி - மறைக்கின்றது.

737. [1] ஏவம் ஸம்ஸ்ருதி சக்ரஸ்யே ஞ்ராம்யமாணே ஸ்வ கர்மஹி:।
ஜீவேது:க்காகுலே விஷ்ணோः க்ருபாகாப் யுபஜாயதே ॥

[2] ஸமீக்ஷிதஸ்து தாஸோயம் கருணு வர்ஷரூபயா ।
கர்மஸாம்யம் ஹஜத்யேவ ஜீவோ விஷ்ணு ஸமீக்ஷயா ॥

[3] ஶக்திஹாவஸ் ஸவை ஜீவமுத்தாரயதி ஸம்ஸ்ருதேः ।
கர்மணீச ஸமே தத்ர தூஷ்ணீம் ஹாவ முபாநதே ॥

1. ஏவம் - இந்த ப்ரகாரம், ஸம்ஸ்ருதி சக்ரஸ்தே - சம்சாரமாகிற சக்கிரத்தில், ஸ்வ - தன்னுடைய, கர்மபிः-கர்மத்தினுல், ப்ராம்யமாணே - சுழன்றுகொண்டு, துக்காகுலேதி - துக்கத்தினுல் வியாகூலப்படும், ஜீவே - ஜீவனைக் குறித்து, விஷ்ணோः - விஷ்ணுவினுடைய, க்ருபா - கருணை, காபி-ஒருநாள், உபஜாயதே - பிறந்தது.

2. கருணு வர்ஷரூபயா - க்ருபாவர்ஷரூபமான, விஷ்ணு ஸமீக்ஷயா - பகவத் கடாக்ஷத்தாலே, ஸமீக்ஷிதः - பார்க்கப்பட்ட, தாஸः - தாஸபூதனுன, அயம் ஜீவः - இந்த ஜீவன், கர்மஸாம்யம் - புண்ய பாப கர்ம சாம்யத்தை, பஜதி - அடைகிருன்.

3. ஸவை - அந்த, சக்தி பாவः - அநுக்ரஹரூபமான ஈஶ்வர சக்தியினுடைய ஸத்பாவமானது, ஜீவம் - ஆத்மாவை, ஸம்ஸ்ருதः - சம்ஸாரத்திலிருந்து, உத்தாரயதி - உத்தரிப்பிக்கின்றது, தத்ர - அப்போது, ஸமே கர்மணீச - சமமான புண்ய பாபகர்மங்கள், தூஷ்ணீம்பாவம் - சாந்த பாவத்தை, உபாகதே - அடைகின்றது.

738. யதா ஹி மோஷகாः பாந்தே பரிபர்ஹ முபேயுஷி ।
நிவ்ருத்த மோக்ஷணேச்சயோ ஹாஸ் ததா ஸந்த உபாஸதே ॥
அநுக்ரஹாத்மிகாயாஸ்து ஶக்தேः பாதக்ஷணே ததா ।
உதாஸாதே ஸமீஹாய கர்மணீதே ஶுஹாஶுஹே ॥
தத்பாதாநந்தரம் ஜந்துர் யுக்தோ மோக்ஷ ஸமீக்ஷயா ।
ப்ரவர்த்தமாந வைராக்யோ விஶேஷஹிநிவேஶவாந் ॥
ஆஹமாநநு ஸஞ்சிந்த்ய குரூநப்யுப ஸர்ப்யச ।
லப்ய ஸத்தः ப்ரகாரைஸ்தைः ப்ரபத்தோ ஹவேதுபாலநः ॥

பாந்தே - வழிப்போகிறவன், பரிபர்ஹம் - திரவ்யத்துக்கு ஸ்தாநபூதமான பாரத்தை, உபேயுஷி - அடைந்திருக்கும்போது, மோஷகாः - திருடர்கள்,

(737) அஹிர். ஸம். (738) ஸ்ரீபாஞ்ச.

நிவ்ருத்த மோக்ஷேச்சுயோகாः ஸந்தः-திருவேதினின்றும் விலகினவர்களாய், கொண்டு, யதா உதாஸதே - எப்படி உதாஸீநர்களா யிருப்பார்களோ, ததா - அப்படியே, அநுக்ரஹாத்மிகாயாः - அநுக்ரஹாத்மகமான, ஶக்தேः து-சக்தியானது, பாதக்ஷணே - விழுந்தக்ஷணத்தில், ஸுபாஸுபே - புண்ய பாபரூபமான, கர்மணீ - கர்மங்களிரண்டும், உதாஸதே - உதாஸீநித்திருக்கும், தத் - அந்த, பாதாநந்தரம் - அநுக்ரஹ சக்தி மேல் விழுந்த பிறகு, ஜந்துः - இச்சேதனன், மோக்ஷஸமீக்ஷயா - மோக்ஷாபேக்ஷையுடன், யுக்த - நல்ல ஜ்ஞாநத்தோடு கூடினவனாய், ப்ரவ்ருத்தமாந - விருத்தியடைந்த, வைராக்யः - வைராக்கியமுடையவனாய், விஶேஷ அபிநிவேஶவாந் - ஜ்ஞாநத்தில் ஆசையுள்ளவனாய், ஆகமவாந் - வேதசாஸ்திரங்களை, அநுசிந்த்ய - விசாரித்து, குரூநபி - ஆசார்யர்களை, உபஸர்ப்ய - ஆஶ்ரயித்து, தைः - அந்த, ப்ரகாரைः - வைராக்யாதிகளால், லப்த ஸத்தः - ஸத்தைபடைந்தவனாய், ப்ரபுத்தः - நல்ல ஜ்ஞாநம் விருத்தியடைந்தவனாய், போதபாலநः - உபாய பரிக்ரஹணம் பண்ணிக்கொண்டு மோக்ஷத்தை யடைகிறான்.

739. அறியேன் மற்றரு ளென்னையாளும் பிரானார்
வெறிதே யருள்செய்வர் செய்வார்கட் குகந்து
சிறியேனுடைச் சிந்தையுள் மூவுலகுந் தன்
நெறியா வயிற்றிற் கொண்டு நின்றொழிந்தாரே.

மற்று - வேறொன்றை, அருள் - உபகாரமாக, அறியேன் - நினைக்கின்றிலேன், என்னை ஆளும் - என்னை யடிமைகொண்ட, பிரானார் - உபகாரகர், செய்வார்கட்கு - தாமுபகரிக்க நினைத்தார்க்கு, வெறிதே - நிர்ஹேதுகமாக, உகந்து - உகந்து, அருள்செய்வர் - உபகாரத்தைப் பண்ணுவர், சிறியேன் உடை - அற்பனான என்னுடைய, சிந்தையுள் - நெஞ்சினுள்ளே, மூவுலகும் - மூன்றுலகங்களையும், நெறிய - ரக்ஷ்யரக்ஷகபாவமாகிற முறை தப்பாதபடி, தன் வயிற்றில் - தன் திருவயிற்றில், கொண்டு - கூடக்கொண்டு, நின்றொழிந்தார் - நின்றுவிட்டார்.

740. இதம் குர்யாத் ... ... 321-வது இலக்கம் காண்க.

741. எந்நன்றி ... ... 729-வது இலக்கம் காண்க.

742. திருமாலிருஞ் சோலைமலை யென்றேனென்ன
திருமால் வந்தென்னெஞ்சு நிறையப்புகுந்தான்
குருமாமணி யுந்துபுனல் பொன்னித் தென்பால்
திருமால் சென்று சேர்விடம் தென்திருப்பேரே.

திருமாலிருஞ்சோலை மலையென்றேன் என்ன - திருமாலிருஞ்சோலைமலை யென்று சொன்னவளவிலே, திருமால் - ஸ்ரீயःபதியான தான், வந்து - வந்து, என் நெஞ்சம் - என் நெஞ்சுக்குள்ளே, நிறைய - பரிபூர்ணமாக, புகுந்

(739) (742) திருவா. 10-8-1.

தான் - நுழைந்தான், திருமால் - பெரிய பிராட்டியோடே சென்று சேர்வு இடம் - சென்று கண்வளர்ந்தருளின யிடம், குருமாமணி - சிலாக்கியமான மாணிக்கங்களை, உந்து - தள்ளுகிற, புனல் - நீரையுடைய, பொன்னி-காவேரி யாற்றின், தென்பால் - தென்பக்கத்தில் உள்ள, தென்திருப்பேரே - அழகிய திருப்பேரேயாம்.

743. மாதவ னென்றதேகொண் டென்னையினி யிப்பால்பட்டது
யாதவங்களும் சேர்கொடேனென் றென்னுள் புகுந்திருந்து
தீதவம் கெடுக்குமமுதம் செந்தாமரை கட்குன்றம்
கோதவமிலென் கன்னற்கட்டி யெம்மானென் கோவிந்தனே.

என் கோவிந்தன் - எனக்காக வந்தவதரித்த கண்ணன், எம்மான் - என் சுவாமி, மாதவன் - லக்ஷ்மீநாயகன், என்றதே - என்று நான் சொன்னதையே, கொண்டு - பற்றுசாகக்கொண்டு, என்னை - அடியேனை, இனி - தன்னை ஆசிரயித்த பின்பு, இப்பால் பட்டது - மேலுள்ள காலமெல்லாம், அவங்கள் - அஜ்ஞானம் முதலான குறைகள், யாதும் - சிறிதும், சேர்கொடேன் என்று - சேரவொட்டேன் என்று சங்கற்பித்து, என் உள்புகுந்து இருந்து - என் நெஞ்சில் நுழைந்திருந்து, தீது - தீமையையும், அவம் - அவத்யையும், கெடுக்கும் - போக்குகிற, அமுதம் - அமிருதம்போல்பவன், செந்தாமரைகண் - செந்தாமரை மலர்போன்ற திருக்கண்களையும், குன்றம் - மலைபோலும் திருமேனியையுமுடையவன், கோது அவம் இல் - குற்றமும் அவமும் இல்லாத, என் கன்னல்கட்டி - என் சர்க்கரைக் கட்டியானவன்.

744. நல்லதோரறம் ... ... 668-வது இலக்கம் காண்க.

745. நோற்றேன் பல்பிறவி யுன்னைக்காண்பதோ ராசையினால்
எற்றேன் இப்பிறப்பே யிடருற்றன னெம்பெருமான்
கோற்றேன் பாய்ந்தொழுகும் குளிர்சோலைசூழ் வேங்கடவா
ஆற்றேன் வந்தடைந்தே னடியேனை யாட்கொண்டருளே.

கோல் - கோல்களில்நின்றும், தேன் - மதுவானது, பாய்ந்து - வழிந்து, ஒழுகும் - வெள்ளமிடா நிற்பதாய், குளிர் - குளிர்த்தியையுடைய, சோலைசூழ்-பொழில்களாலே சூழப்பட்ட, வேங்கடவா - திருமலையை வாஸஸ்தானமாக வுடையவனே, எம் - ஆஸ்ரிதரான எங்களுக்கு, பெருமான் - மஹோபகாரகனே, பல்பிறவி - அநேக ஜன்மங்களுண்டாம்படி, நோற்றேன் - ஸாதநாநுஷ்டானம் பண்ணிப் போந்த அடியேன், எற்றேன் - (தேவரீர் கடாக்ஷத்துக்கு) யோக்யனானேன், (அத்தாலே), உன்னை - தேவரீரை, காண்பது - காணவேணுமென்கிற, ஓர் ஒரு, ஆசையினால் - ஆசையாலே, இப்பிறப்பே - இந்த ஜன்மத்திலேயே, இடருற்றனன் - (ஜன்மம் த்யாஜ்யமென்று) வருந்தினேன், ஆற்றேன் - (மாறிமாறி வரும் பல பிறவிகளை) ஸஹிக்க மாட்டாதவனாய், வந்தடைந்தேன் -

(743) திருவா. 2-7-3. (745) பெரிய. திரு. 1-9-8.

வந்து அடைந்தேன், அடியேனை-அடியவனான என்னை, ஆள் கொண்டருள் - அடிமைகொண்டருள்.

746. நவின்றுரைத்த நாவலர்கள் நாண்மலர்கொண்டு ஆங்கே
பயின்றதனால் பெற்ற பயனென்கொல்—பயின்றார்தம்
மெய்த்தவத்தால் காண்பரிய மேகமணி வண்ணனையான்
எத்தவத்தால் காண்பன்கொ லின்று.

நவின்றுரைத்த-(அவன் திருநாமங்களைப்,பலகால் சொன்ன, நாவலர்கள்-(ப்ரயோஜநாந்தர பரரான) கவிகள், நாள் - செவ்விய, மலர் - பூக்களை, கொண்டு - ஸம்பாதித்து, ஆங்கே - அந்த ஸர்வேஸ்வரனிடத்தில், பயின்றதனால் - ஆஸ்ரயித்ததனால், பெற்ற - அடைந்த, பயன் - ப்ரயோஜநம், என்கொல் - ஏதோ, பயின்றார்தம் - (ஸாதநாந்தரபரராய்) ஆஸ்ரயித்தவர்களுடைய), மெய் - சரீரத்தினால் (செய்யப்பட்ட), தவத்தால் - தபஸ்ஸினால், காண்பரிய-காண துர்பலனான, மேகம் - மேகம்போலும், மணி - நீலரத்நம்போலும் இருக்கிற, வண்ணனை - வடிவையுடையவனை, யான் - நான், இன்று-இப்பொழுது, எத்தவத்தால் - எந்த தபஸ்ஸினால், காண்பன்கொல் - அநுபவிக்கப்பெற்றேன்.

747. யானே தவம்செய்தே னேழ்பிறப்பு மெப்பொழுதும்
யானே தவமுடையே னெம்பெருமான்—யானே
இருந்தமிழ் நன்மாலை யிணையடிக்கே சொன்னேன்
பெருந்தமி ழனல்லேன் பெரிது.

எம்பெருமான் - எமக்கு ஸ்வாமியே, ஏழ்பிறப்பும் - ஏழு ஜந்மங்களிலும், எப்பொழுதும் - எல்லா அவஸ்தைகளிலும், தவம் செய்தேன் - தபஸ்ஸைப் பண்ணினவன், யானே - நானே, தவமுடையேன் - தபஸ்ஸின் பலத்தை யடைந்தவனும், யானே - நானே, இரும் - (லக்ஷணங்களினால்) பூர்ணமாய், தமிழ் - த்ராவிடரூபமாய், நல் - விலக்ஷணமான, மாலை - (சப்த) ஸந்தர்ப்பங்களை, இணை - சேர்ந்திருக்கிற, அடிக்கே - திருவடிகளுக்கே, சொன்னேன் - சொல்லப்பெற்றேன், யானே - நானே, பெருந்தமிழன் - பெரியத்திராவிட பண்டிதன், பெருகு-மிகவும், நல்லேன்-ஸ்ரேஷ்டனானேன்.

748. செங்கணாளி யிட்டிறைஞ்சும் சிங்கவேழ் குன்றுடைய
எங்களீச னெம்பிரானை யிருந்தமிழ் நூற்புலவன்
மங்கையாளன் மன்னுதொல்சீர் வண்டறை தார்க்கலியன்
செங்கையாளன் செஞ்சொல் மாலை வல்லவர் தீதிலரே

செம்-சிவந்த, கண்-கண்களையுடைய, ஆளி-ஸிம்ஹங்கள், இட்டு (திருவடிகளிலே ஸமாராதநோபகரணங்களை) ஸமர்ப்பித்து, இறைஞ்சும் - ஆஸ்ரயியா நின்றுள்ள, சிங்கவேழ்குன்று - சிங்கவேழ் குன்றத்தை, உடைய - வாஸஸ்தா

(746) இரா. திருவ. 86. (747) இரா. திருவ. 74.
(748) பெரிய. திரு. 1-7-10.

நமாக வுடையவனாய், எங்கள் - (ஸம்ஸாரிகளான) நம்போல்வார்க்கும், ஈசன்-ஸ்வாமியாய், எம்பிரானை - எனக்கு உபகாரகனான ஸர்வேஸ்வரன் விஷயமாக, இரு - பெரிய, தமிழ்நூல் - தமிழ் சாஸ்த்ரத்தில், புலவன் - வல்லவாய், மங்கையாளன் - திருமங்கைக்கு ராஜாவாய், தொல்மன்னு - அநாதியாய் நிலைநின்ற, சீர் - ஸ்ரீயையும், வண்டு - வண்டுகள், அறை - சப்தியாநின்றுள்ள, தார் - மாலையையும், செங்கையாளன் - மிகவும் ஔதார்யத்தையுமுடையரான, கலியன் - ஆழ்வார் அருளிச்செய்த, செஞ்சொல்மாலை - செவ்விய சொல் தொடையை, வல்லவர் - கற்கவல்லவர்கள், தீது இலர் - பொல்லாங்கு இல்லாதவர் ஆவர்.

749. [1] நிர்ஹேதுக கடாக்ஷேண மதீயேந மஹாமதே।
ஆசார்ய விஷயீகாராத் ப்ராப்நுவந்தி பராம்கதிம்॥

ஹே மஹாமதே புத்தியில் ச்ரேஷ்டனான ஓ நாரதமஹாமுநியே, மதீயேந-என் சம்பந்தமான, நிர்ஹேதுக கடாக்ஷேண - நிர்ஹேதுக கடாக்ஷத்தினாலும், ஆசார்ய விஷயீகாராத் - ஆசார்ய கடாக்ஷத்தை யடைந்ததினாலும், பராங்கதிம் பரமபதத்தை, ப்ராப்நுவந்தி - அடைகிறான்.

[2] நாஹௌ புருஷகாரேண நசாப் யந்யேந ஹேதுநா।
கேவலம் ஸ்வேச்சைவாஹம் ப்ரேக்ஷயே கஞ்சித் கதாசந॥

அஹௌ - இந்த நான், புருஷகாரேண - புருஷகாரத்தாலேந (ப்ரேக்ஷயே) கடாக்ஷிக்கமாட்டேன், அந்யேந - இதரமாயிருக்கிற, ஹேதுநா அபிச - ஹேதுவினாலேயும் ந (ப்ரேக்ஷயே) கடாக்ஷிக்கமாட்டேன், அஹம் - நான், ஸ்வேச்சையைவ் கேவலம் - என்னுடைய இச்சாமாத்திரத்திலேயே, கஸ்சித் - ஒரு புருஷனை, கதாசந - ஒரு காலத்தில், ப்ரேக்ஷயே - கடாக்ஷிக்கிறேன்.

750. முந்நீர் ... ... 373-வது இலக்கம் காண்க.

751. அவஸ்யமநுபோக்தவ்யம் ... ...599-வது இலக்கம் காண்க.

752. ஸ்ருதிஸ்ஸ்ம்ருதி ... ... 163-வது இலக்கம் காண்க.

753. விதிவாய்க்கின்று ... ... 693-வது இலக்கம் காண்க.

754. நெருங்கேழலார்தம் பெருங்கண்மலர்ப் புண்டரீகம் நம்மேல்
ஒருங்கே பிறழவைத்தா ரிவ்வகாலம் ஒருவர்நம்போல்
வருங்கேழ்பவ ருளரேதொல்லை யாழியஞ் சூழ்பிறப்பும்
மருங்கே வரப்பெருமே சொல்லு வாழிமடநெஞ்சமே.

பெரும்கேழலார்-பெரிய வடிவுடைய வராஹநாயனார், தம் - தம்முடைய, மலர் - விகஸித்த, புண்டரீகம் - தாமரைப்பூப்போன்ற, பெரும் - விசாலமான, கண் - திருக்கண்களை, நம்மேல் - நம்மேலே, ஒருங்கே - முழுதும், பிறழ-சேர,

(749) ஸ்ரீபாஞ்ச. (754) திருவிருத்தம் 45.

வைத்தார் - வைத்தார், இவ்வகாலம் - இவ்வகாலத்திலே, ஒருவர் - யாராவதொருத்தர், நம்போல் - நம்மைப்போலே. வரும் - வரப்பட்ட, கேழ்பவர் - நன்மையையுடையவர், உளரே-உண்டோ? தொல்லை-அநாதியாய், ஆழி - சமுத்ரம் போல் தாண்டத்தகாததாய், அம் - அழகிதாய், (க்ரூரமாய்), சூழ் - சுற்றிக் கொண்டிருக்கிற, பிறப்பும் - ஜந்மமும், மருங்கே - பக்கத்திலாவது, (என் ஸம்பந்தமுடையர்க்கும்), வரப்பெருமே - வருமோ, மடம் - விதேயமான, நெஞ்சமே - ஓ மநமஸ்ஸே, சொல்லு - சொல், வாழி - வாழக்கடவாய்.

755. ஸாக்ஷாந்நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும்।
மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாத் ஶாஸ்த்ர பாணிநா॥

தேவ: - உபயவிபூதிகளையும் ஆட்செய்கிற, நாராயண: - ஸ்ரீமந்நாராயணன், மர்த்யமயீம் - மானிட ஸ்வரூபியான, தநும் - ஆசார்ய சரீரத்தை, க்ருத்வா-அங்கீகரித்து, மக்நாந் - சம்ஸாரமாகிற கடலில் மூழ்கித் தவிக்கின்ற லோகாந் - லோகத்திலுள்ள சேதநர்களை, காருண்யாத் - கருணையினால், ஶாஸ்த்ர - சாஸ்திரங்களாகிற, பாணிநா - திருக்கைகளினாலே, ஸாக்ஷாத் - நேராக, (பற்றியெடுத்து), உத்தரதே - கரையேற்றி யருளுகின்றார்.

755. [1] தேனார் கமலத் திருமாமகள் கொழுநன்
தானே குருவாகித் தன்னருளால்—மானிடர்க்காய்
இந்நிலத்தே தோன்றுதலால் யார்க்குமவன் தாளிணையை
உன்னுவதே சால வுறும்.

தேனார் - மது ஸம்ருத்தி மாறாத கமலம் - தாமரைப்பூவை இருப்பிடமாக வுடைய, திருமாமகள் - பெரியபிராட்டியாருக்கு, கொழுநன் - வல்லபனான ஸர்வேஶ்வரன், தானே - ஸர்வாதிகனானதானே, குருவாகி - மநுஷ்யரூபங் கொண்டு ஆசார்யனாகி, தன்னருளால் - தன்னுடைய க்ருபையாலே, மானிடர்க்காய் - மனுஷ்யர்களுக்காக, இந்நிலத்தே - அவர்களிருந்த இந்த பூமியிலே, தோன்றுதலால் - அவதரிக்கையால், யார்க்கும் - எல்லா சேதனர்க்கும், அவன் தாளிணையை - சேஷியான அந்த வாசார்யன் திருவடிகளை, உன்னுவதே - ப்ராப்யமாக அநுஸந்திக்குமதுவே, சால உறும் - மிகவும் ஸ்வரூபத்துக்குச் சேரும்.

756. பயிலும் பிறப்பிடை ... ... 487-வது இலக்கம் காண்க.

757. ஆளும் பரமனைக் கண்ணனை யாழிப்பிரான்றன்னை
தோளுமோர் நான்குடைத் தூமணிவண்ண னெம்மான்றன்
தாளுந் தடக்கையுங்கூப்பிப் பணியுமவர் கண்டீர் [னைத்
நாளும் பிறப்பிடைதோறெம்மையாளுடை நாதரே

ஆளும் - ஆசிரிதரை அடிமை கொள்ளுகின்ற, பரமனை - சீலம் முதலியவற்றால் சிறந்தவனை, கண்ணனை - கிருஷ்ணனை, ஆழிப்பிரான்தன்னை - திரு

(755) நாரதீயம். (755—1) ஞானசாரம். 38.
(757) திருவா. 3-7-2.

வாழியையுடைய உபகாரகனை, ஓர் நான்குதோளும் உடை - ஒப்பற்ற நான்கு புசங்களையுமுடைய, தூமணிவண்ணன் - பரிசுத்தமாகிய நீலமணிபோலும் நிறத்தை யுடையவனாகிய, எம்மான்தன்னை - எமது சுவாமியை, தாளும் தடக்கையும் கூப்பி - காலையும் பெரிதாகிய கையையும் குவித்து, பணியுமவர் கண்டீர் - நமஸ்கரிப்பவர் கிடீர், நாள்தோறும் - எக்காலத்திலும், பிறப்பிடைதோறு - பிறவிகள்தோறும், எம்மை - எங்களை, ஆள் உடை - அடிமைகளை உடைய, நாதர் - இறைவர்.

758. பெருமக்க ளுள்ளவர்தம் பெருமானை யமரர்கட்
கருமையொழிய வன்றாரமு தூட்டிய வப்பனை
பெருமை பிதற்றவல்லாரைப் பிதற்றுமவர் கண்டீர்
வருமையு மிம்மையு நம்மையளிக்கும் பிராக்களே.

பெருமக்கள் உள்ளவர்தம் - பெரியோர்களா யுள்ளவர்களாகிய நித்திய சூரிகளுக்கு, பெருமானை-அதிபதியாயிருப்பவனை, அமரர்கட்கு - சாவாமையை விரும்பிய தேவர்களுக்கு, அருமைஒழிய - அருமை யில்லாமல், அன்று - அந்நாளில், ஆர் அமுது - பூர்ணமான அமிருதத்தை, ஊட்டிய - உண்பித்த, அப்பனை - உபகாரகனை, பெருமை - அவனுடைய உபகார மகிமையை, பிதற்றவல்லாரை - அக்கிரமமாகப் பிதற்றவல்லவரை, பிதற்றுமவர் கண்டீர் - தாமும் பரவசராய் பிதற்றுமவர்கள் கிடீர், வருமையும் இம்மையும் - பரலோகத்திலும் இஹலோகத்திலும், நம்மை - எம்மை, அளிக்கும் - உஜ்ஜீவிக்கப்பண்ணுகிற, பிராக்கள் - உபகாரகர்கள்

759. அளிக்கும் பரமனைக் கண்ணனை யாழிப்பிரான்றன்னைத்
துளிக்கு நறுங்கண்ணித் தூமணிவண்ண னெம்மான்றன்னைத்
ஒளிக்கொண்ட சோதியை யுள்ளத்துக்கொள்ளுமவர் கண்டீர்
சலிப்பின்றி யாண்டெம்மைச் சன்மசன்மாந்தரங் காப்பரே.

அளிக்கும் - தன்னை உபகரிக்கிற, பரமனை - மேலானவனை, கண்ணனை - கிருஷ்ணனை, ஆழி - திருவாழியையுடைய, பிரான்தன்னை - உபகாரகனை, துளிக்கும் - தேனைத்துளிக்கிற, நறு - பரிமளமான, கண்ணி - திருத்துழாய் மாலையை அணிந்த, தூ - பரிசுத்தமாகிய, மணிவண்ணன் - மாணிக்கம் போலும் வடிவையுடையவனாகிய, எம்மான்தன்னை - எமது சுவாமியை, ஒளி கொண்ட சோதியை - நிறத்தைக்கொண்ட சோதிவடிவானவனை, உள்ளத்து-மனதில், கொள்ளுமவர்கண்டீர் - அநுபவிக்குமவர்கள் கிடீர், எம்மை - எங்களை, சலிப்பு இன்றி-சலன மில்லாமல், ஆண்டு - அடிமை கொண்டு, சன்மசன்மாந்தரம் - இந்த சன்மத்திலும் வேறு சன்மத்திலும், காப்பர் - ரக்ஷிக்குமவர்கள்.

760. சன்ம சன்மாந்தரங்காத் தடியார்களைக் கொண்டுபோய்த்
தன்மைபெறுத்தித் தன்றாளிணைக் கீழ்க் கொள்ளுமப்பனைத்

(758) திருவா. 3-7-5. (759) திருவா. 3-7-6.
(760) திருவா. 3-7-7.

தொன்மை பிதற்றவல்லாரைப் பிதற்றுமவர் கண்டீர்
நன்மை பெறுத்தெம்மை நாளுய்யக்கொள்கின்ற நம்பரே.

சன்மசன்மாந்தரம் - சன்ம பரம்பரைகள், காத்து - வராதபடி தடுத்து, அடியார்களை - சேஷத்துவஜ்ஞானமுடையவர்களை, கொண்டுபோய் - பரம பதத்திற்குக் கொண்டுபோய், தன்மை பெறுத்தி-தனது சொரூபத்தின் தோற்றத்தை உண்டாக்கி, தன் - தன்னுடைய, தாள் இணைக்கீழ் - இரண்டு திருவடிகளின் கீழே, கொள்ளும் - அடிமை கொண்டருளுகிற, அப்பனை - சுவாமியானவனை, தொன்மை - இயற்கையாகிய அவனது உபகாரத்தை, பிதற்றவல்லாரை - அக்கிரமமாக புகழவல்லவரை, பிதற்றுமவர் கண்டீர் - தாமும் அன்போடு புகழுவோர் கிடீர், எம்மை - நம்மை, நன்மைபெருத்து - நன்மையை அடைவித்து, நாள் - எந்நாளும், உய்யக்கொள்கின்ற - உஜ்ஜீவிப்பித்துக் கொள்ளுகின்ற, நம்பர் - விசுவசிக்கத் தக்கவர்கள்.

761. எம்பல் பிறப்பிடை ... ... 489-வது இலக்கம் காண்க.

762. அவனடியார் ... ... 493-வது இலக்கம் காண்க.

763. ஆறெண்ணும் ... ... 501-வது இலக்கம் காண்க.

764. ஞானத்தின் ... ... 502-வது இலக்கம் காண்க.

765. பிச்சச் சிறுபீலிச் சமண்குண்டர் முதலாயோர்
விச்சைக் கிறையென்னு மவ்விறையைப் பணியாதே
கச்சிக் கிடந்தவனூர் கடல்மல்லைத் தலசயனம்
நச்சித் தொழுவாரை நச்சென்றன் நன்னெஞ்சே

பிச்சம் - திரளான மயிலிறகையும், சிறு - சிறிய, பீலி - மயில் தோகையையுமுடைய, சமண்குண்டர் - அமணரான நீசர், முதலாயோர் - முதலானவர்கள், விச்சைக்கு - ஸகல வித்யைகளுக்கும், இறையென்னும் - நிர்வாஹகனென்று ஒருவனைக் கைக்கொள்ளுவர்கள், அவ்விறையை - அவர்களால் ஏற்படுத்தப்பட்டவனை, பணியாது - ஆஶ்ரயியாமல் (ஆஶ்ரிதர்க்காக), கச்சி - திருவெஃகாவிலே, கிடந்தவன் - கண்வளர்ந்தருளுமவன், ஊர் - ஊரான, கடல் மல்லைத்தலசயனம்-திருக்கடல் மல்லையில் ஸ்தலசயநத்திலே (பள்ளிகொண்டருளுகையை), நச்சி - ஆசைப்பட்டு, தொழுவாரை - தொழுமவர்களை, என்றன் - என்னுடைய, நல் - விலக்ஷணமான, நெஞ்சே - மநஸ்ஸே, நச்சு - (நீயும்) ஆசைப்பட்டுத்தொழு.

766. தோராளும் வாளரக்கன் தென்னிலங்கை வெஞ்சமத்துப்
பொன்றிவீழப்
போராளும் சிலையதனல் பொருகணைகள் போக்குவித்தா
யென்றுநாளும்

(765) பெரிய. திரு. 2-6-5. (766) பெரிய. திரு. 7-4-4.

தாராளும் வரைமார்பன் தண்சேறை யெம்பெருமா
னும்பராளும்
பேராளன் பேரோதும் பெரியோரை யொருகாலும்
பிரிகிலேனே.

தேர் ஆளும் - தேர்களை நடத்த வல்லனாய், வாள் - வாளாயுதத்தையுடையனான, அரக்கன் - ராவணாஸுரனுடைய, தென் இலங்கை - ஶ்லாக்யமான லங்கையானது, வெம்சமத்து - க்ருரமானயுத்தத்தில், பொன்றிவீழ - சிதிலமாய் அழிந்து போம்படியாக, போர் ஆளும் - யுத்தத்தை நடத்தவல்ல, சிலையதனால் - தநுஸ்ஸினாலே, பொரு - (தானே) சண்டை செய்யாநின்ற, கணைகள் - பாணங்களை, போக்குவித்தாய் - ப்ரயோகித்தவனே, என்று - என்று சொல்லி, நாளும் - தினந்தோறும், தார் ஆளும், திருத்துழாய் மாலையையுடைய, வரை மார்வன் - மலைபோன்ற திருமார்வையுடையனாய், உம்பர் ஆளும் - மேலுலகங்களைப் பரிபாலநம் பண்ணுகிற, பேராளன் - பெருமையுடைய ஸர்வாதிகனான, தண்சேறை எம்பெருமான் - திருச்சேறையில் எழுந்தருளியிக்கும் எம்பெருமானுடைய, பேர் - திருநாமங்களை, ஓதும் - கீர்த்தியாநின்ற, பெரியோரை - மஹாத்மாக்களை, ஒருகாலும் - ஒருக்ஷணமும், பிரிகிலேன் - பிரியமாட்டேன்.

767. உண்ணாது வெங்கூற்ற மோவாத பாவங்கள்
சேராமேலை
விண்ணோரும் மண்ணோரும் வந்திறைஞ்சும்
மென்தளிர்போ லடியினானைப்
பண்ணார வண்டியம்பும் பைம் பொழில்சூழ்
தண்சேறை யம்மான்றன்னைக்
கண்ணாரக் கண்டுருகிக் கையாரத் தொழுவாரைக்
கருதுங்காலே

மேலை - ப்ரக்ருதிமண்டலத்துக்கு மேலேயுள்ள, விண்ணோரும் - பரமபதவாஸிகளான நித்யஸூரிகளும், மண்ணோரும் - பூமியோடுகூடிய லீலாவிபூதியிலுள்ளவர்களும், வந்து - கிட்டி, இறைஞ்சும் - ஆஶ்ரயிக்கும்படியான, மெல் - ம்ருதுவான, தளிர்போல் - பல்லவம் போன்ற (ஸுகுமாரமான), அடியினை - திருவடிகளையுடையனாய், பண் ஆர - காநம் பொருந்தியிருக்கும்படி, வண்டு - வண்டுகளானவை, இயம்பும் - பாடாநின்ற, பை பொழில் - பரந்த சோலைகளாலே, சூழ் - வ்யாப்தமான, தண்சேறை - திருச்சேறை யென்னும் திவ்யதேசத்தில் எழுந்தருளியிருக்கும், அம்மான்றன்னை - ஸ்வாமியை, கண் ஆர - கண்கள் நிறையும்படி, கண்டு - ஸேவித்து, உருகி - மனம் நெகிழ்ந்து, கை ஆர - கைகள் நிறையும்படி, (கைகளின் குறை தீரும்படி), தொழுவாரை-

(767) பெரிய. திரு. 7-4-8.

ஆஶ்ரயிக்கும் பாகவதர்களை, கருதுங்கால் - நினைக்குமளவில், (அவர்களை), வெம் - க்ரூரமான செயலையுடைய, கூற்றம் - யமதேவதையானது, உண்ணாது - புஜியாது, (உபத்ரவித்து நசிப்பிக்கமாட்டாது), ஓவாத - இடைவிடாமல் பாதிக்கிற, பாவங்கள் - பாபங்களானவை, சேரா - கிட்டமாட்டா.

768. ஈட்டங் கண்டிட ... ... 505-வது இலக்கம் காண்க.

769. தொண்டாடிப்பொடி ... ... 506-வது இலக்கம் காண்க.

770. இன்புறுந்தொண்டர் ... ... 662-வது இலக்கம் காண்க.

771. [1] காணவாரா யென்னென்று கண்ணும்வாயுந் துவர்ந் தடி
நாணிநன்னாட் டலமந்தா லிரங்கி யொருநாணீயந்தோ[யேன்
காணவாராய் கருநாயி றுதிக்குங் கருமாணிக்க
நாணல் மலைபோல்சுடர்ச்சோதி முடிசேர்சென்னியம்மானே.

கருநாயிறு - கரிய சூரியன், உதிக்கும் - உதயமானதாய், மா - பெருமையுள்ள, கருமாணிக்கம் - நீலரத்நமாய், நாள் - செவ்வியழியாதபடி, நல்மலைபோல் - அழகிய பர்வதம்போலே, சுடர் - ஒளிவிளங்குகிற, சோதி - தேஜஸையுடைய, முடி - மயிர்முடியோடே, சேர் - சேர்ந்த, சென்னி - சிரஸையுடைய, அம்மானே - சுவாமியே, காண - காணும்படி, வாராய் - வரவேணும், என்று என்று - என்று பலகாலும் கூப்பிட்டு, கண்ணும் - பார்க்கிற கண்ணும், வாயும் - கூப்பிடுகிறவாயும், துவர்ந்து - உலர்ந்து, நாணி - வெட்கி, நல் நாடு - விலக்ஷணமான தேசத்திலே, அடியேன் - சேஷத்வ நிரூபகமான நான், அலமந்தால் - இப்படி உழன்றால், ஒருநாள் இரங்கி - ஒருநாள் கிருபை பண்ணி, நீ - நீ, காண - நான் காணும்படி, வாராய் - வருகின்றிலை, அந்தோ - ஐயோ.

771. [2] காணுமா றருளா யென்றென்றே கலங்கிக்
கண்ணநீரலமர வினையேன்
பேணுமாறெல்லாம் பேணிநின்பெயரே
பிதற்றுமா றருளெனக் கந்தோ
காணுமா றருளாய் காகுத்தா கண்ணா
தொண்டனேன் கற்பகக்கனியே
பேணுவாரமுதே பெரியதண்புனல்சூழ்
பெருநிலமெடுத்த பேராளா.

காணுமாறு-காணும்படி, அருளாய் - நீ க்ருபைபண்ண வேண்டும், என்று என்று - என்று பலகால் சொல்லி, கலங்கி - காணப்பெறாமையாலே கலங்கி, கண்ண நீர் - கண்ணீரானது, அலமர - பரவாநிற்க, வினையேன் - காணப்பெறாதபாபத்தையுடையேனான நான், பேணும் ஆறு எல்லாம் - ஆதரிக்கும் பிரகாரமெல்லாம், பேணி - ஆதரித்து, நின் பெயரே - உன் திருநாமங்களையே,

(771—1) திருவா. 8.5.2. (771—2) திருவா. 8.1.2.

பிதற்றும் ஆறு - சொல்லிக்கூப்பிடும்படியாயிறே, எனக்கு - எனக்குப்பண்ணின, அருள் - கிருபை, அந்தோ - ஐயோ, காகுத்தா - ககுத்ஸ்த்த வம்ஸத்தில் பிறந்தவனே, கண்ணு - எளியனே, தொண்டனேன்-சபலனான எனக்கு, கற்பகம் - ஔதார்யத்தை யுடையையாய், கனியே - பக்வபலபூதனாய், பேணுவார் - ஆசையுடையார்க்கு, அமுதே - சத்தாஹேதுவான நித்ய போக்யமாய், பெரிய - பெரியதாகிய, தண் - குளிர்ந்த, புனல் - ப்ரளய நீரிலே, சூழ்-அழுந்தின, பெருநிலம் - பெரியபூமியை, எடுத்த - மேலெடுத்த, பேராளா - மஹாபுருஷனே, காணுமாறு - நான் கண்டநுபவிக்கும்படி, அருளாய் - க்ருபை பண்ணியருள வேண்டும்.

772. முரியும் வெண்டிரை முதுகயம்தீப்பட முழங்கழ லெரியம்பின்
வரிகொள் வெஞ்சிலை வளைவித்தமைந்தனும் வந்தில னென்செய்கேன்
எரியும் வெங்கதிர் துயின்றது பாவியேனிணை நெடுங்கண் துயிலா
கரிய னாழிகை யூழியில் பெரியன கழியுமாறறியேனே.

முரியும் - கிளர்த்தியையுடைய, வெண் - வெளுத்த, திரை - அலைகளை யுடைய, முதுகயம் - பழமையான ஸமுத்ரமானது, தீப்பட - நெருப்புக் கொளுத்தி எறியும்படி, முழங்கு - த்வநியாநின்றுள்ள, அழல் - நெருப்பை, எரி - எரியாநின்றுள்ள, அம்பின் - அம்பையுடைய, வரிகொள்-அழகையுடையதான, வெம்சிலை - வெவ்விய தநுஸ்ஸை, வளைவித்த - வளைத்த, மைந்தனும் - மிடுக்குடைய சக்ரவர்த்தித் திருமகனும், வந்திலன் - வருகிறிலன், என்செய்கேன் - என்ன செய்வேன், எரியும் - ப்ரகாசியாநின்ற, வெங்கதிர் - வெப்பத்தையுடைய ஸூர்யன், துயின்றது - அஸ்தமித்தான், பாவியேன் - பாவியான என்னுடைய, இணை - பரஸ்பர ஸத்ருஶமான, நெடும் - விசாலமான, கண் - கண்கள், துயிலா - உறங்கிற்றில்லை, ஊழியில் - கல்பங்களைக் காட்டிலும், பெரியன - பெரிதான, கரிய - கறுத்த, நாழிகை - (ராத்ரியின்) நாழிகையானது, கழியுமாறு - ஒழியும்படியை, அறியேனே - காண்கிறிலேனே.

773. கலங்கமாக்கடல் கடைந்தடைத் திலங்கையர் கோனதுவரையா
பலங்க வெஞ்சமத் தடுசரம்துரந்த வெம்மடிகளும் வாராஞல்[கம்
இலங்கு வெங்கதிரிளமதி யதனொடும் விடைமணியடுமாயன்
விலங்கல்வேயின தோசையுமாயினிவிளைவ தொன்றறியேனே.

மா - பெரிதான, கடல் - ஸமுத்ரமானது, கலங்க - கலங்கும்படியாக, கடைந்து - மதனம்செய்து, அடைத்து - அணைகட்டி, இலங்கையர் - இலங்கையிலிருக்கும் ராக்ஷஸர்க்கு, கோனது - ராஜாவான ராவணனுடைய, வரை - மலைபோல் த்ருடமான, ஆகம் - மார்வானது, மலங்க - துடிக்கும்படி, வெம்சமத்து - யுத்தத்திலே, அடுசரம் - கொலையம்பை, துரந்த - நடத்தின, எம் அடிகளும் - ஸர்வஸ்வாமியானவனும், வாரான் - வருகிறிலன், ஆல் - கஷ்டம், இலங்கு - விளங்காநின்றதாய், வெம் - தபியாநின்ற, கதிர் - கிரணங்களையுடைய, இள

(772) பெரிய திரு. 8.5-6. (773) பெரிய. திரு. 8 5-7.

மதியதனோடும் - பாலசந்த்ரனோடே, விடை - வ்ருஷபத்தினுடைய, மணி - மணியின் ஓசையும், அடும் - முடியாநின்றது, ஆயன் - இடையனான கண்ணனாகிற, விலங்கல் - பர்வதத்திலுண்டான, வேயினது - (மூங்கிலால் செய்யப்பட்ட) குழலின், ஓசையும் - த்வநியும், ஆய் - ஆகிவிட்டது, இனி - இனிமேல், விளைவது - நேரிடும்படியான, ஒன்று - ஒன்றையும், அறியேனே - அறிகிலேன்.

774. ஏர்மலர்ப்பூங் குழலாயர் மாதரெனைப் பலருள்ள
விவ்வூரில் உன்றன்
மார்வுதழுவுதற் காசையின்மை யறிந்தறிந்தே
யுன்றன்பொய்யைக் கேட்டுக்
கூர்மழைபோல் பனிக்கூதலெய்திக்
கூசிநடுங்கி யமுனையாற்றில்
வார்மணற் குன்றிற் புலாநின்றேன்
வாசுதேவா உன் வரவுபார்த்தே.

ஏர் - அழகிய, மலர் - மலரையுடைத்தாய், பூ - இயற்கை வாஸனையையுடைத்தான, குழல் - மயிர்முடியை யுடையரான, ஆயர்மாதர் - இடைப்பெண்கள், எனப்பலருள்ள - என்னைப்போலே பலபேருள்ள, இவ்வூரில் - இந்தத் திருவாய்ப்பாடியிலே, உன்றன்-உன்னுடைய, மார்வு-திருமார்வோடே, தழுவுதற்கு - அணைக்கைக்கு, ஆசையின்மை - ஆசை யில்லாமையை, அறிந்தறிந்து - நன்றாக அறிந்து வைத்தும், உன்றன் - உன்னுடைய, பொய்யைக் கேட்டு - பொய்யான வார்த்தைகளைக்கேட்டு, வாசுதேவா - ஸ்ரீவஸுதேவ புத்ரனே, உன் - உன்னுடைய, வரவு - வருகையை, பார்த்து - எதிர்பார்த்துக் கொண்டு, கூர்மழைபோல் - அடைமழைபோலே பெய்கிற, பனி - பனியாலுண்டான, கூதல்எய்தி - குளிரிலே யகப்பட்டு, கூசி - (ஆர் காண்கிறார்களோ வென்று) கூசி, நடுங்கி - அச்சத்தாலும் குளிராலும் நடுங்கி, யமுனையாற்றில் - பலரும் காணுமிடமான யமுநாநதியிலே, வார் - பெரிய, மணற்குன்றில் - மணற்குன்றிலே, புலாநின்றேன் - விடியுமளவும் நின்றேன்.

775. வெஞ்சிறைப்புள் ... ... 577-வது இலக்கம் காண்க.

776. உங்களோடெங்கள் ... ... 576-வது இலக்கம் காண்க.

777. } நாவினால் நவிற் றின்பமெய்தினேன்
778. } மேவினே னவன் பொன்னடி மெய்ம்மையே
தேவு மற்றறியேன் குருகூர் நம்பி
பாவி னின்னிசை பாடித் திரிவனே.

நண்ணி - பல முடிகளையுடையதாய், நுண் - ஸூக்ஷ்மமாய், சிறு - சிறிதான, தாம்பினால் - கயிற்றினால், கட்டுண்ணப்பண்ணிய - தன்னை யசோதைப்

(774) பெருமா. திரு. 6.1. (777) கண்ணிநுண்சிறுத்தாம்பு. 2

பிராட்டி கட்டும்படி பண்ணிக்கொடுத்த, பெருமாயன் - நிரதிஶயாஶ்சர்ய யுக்தனுய், என்னப்பனில் - எனக்கு ஸ்வாமியான ஸர்வேஶ்வரனிற் காட்டில், நண்ணி - ஆழ்வாரை ப்ரீதி பூர்வகமாக வாஶ்ரயித்து, தென்குருகூர் - தெற்கு திக்கிலிருக்கும் திருநகரிக்கு, நம்பியென்றக்கால் - நிர்வாஹகரான வாழ்வாரென்று அவர் திருநாமத்தைச் சொன்னல், அண்ணிக்கும்-(நினைத்த நெஞ்சும் சொன்ன நாக்கும்) தித்தித்து வராநின்றது, என் - அநாதிகாலம் விஷயப்ரவணனுய்ப் போந்த என்னுடைய, நாவுக்கே - நாக்குக்கன்றோ, அமுதூறும் - அம்ருதம் ஊற்றுமாறுதே யிராநின்றது.

779. அடியேன் ... ... 656-வது இலக்கம் காண்க.

780. உண்டுகளித்தேற்கு ... ... 587-வது இலக்கம் காண்க.

781. நமக்கும் பூவின்மிசை நங்கைக்கு மின்பனை ஞாலத்தார்
தமக்கும் வானத்தவர்க்கும் பெருமானைத் தண்டாமரை
சுமக்கும் பாதப்பெருமானைச் சொன்மாலைகள் சொல்லுமா
றமைக்கவல்லேற் கினியாவர் நிகரகல் வானத்தே.

நமக்கும் - எமக்கும், பூவின்மிசை-பூவில் பிறத்தலால் வந்த போக்கியதையாலும், நங்கைக்கும் - பிராட்டிக்கும், இன்பனை - ஆனந்தத்தை யுண்டாக்குமவனை, ஞாலத்தார்தமக்கும் - உலகத்தார்க்கும், வானத்தவர்க்கும் - பரமபதவாசிகளுக்கும், பெருமானை-சேஷியானவனை, தண்தாமரை-குளிர்ந்த தாமரை மலரானது, சுமக்கும் - சுமக்கும்படியான, பாதம் - திருவடிகளையுடையனை, பெருமானை - சர்வேசுவரனைக்குறித்து, சொன்மாலைகள் - சொல்மாலைகளை, சொல்லும்ஆறு - சொல்லும்படியாக, அமைக்கவல்லேற்கு - என்னை அமைத்து தரிக்கவல்ல எனக்கு, அகல்வானத்து - இடமகன்ற பரமபதத்தில், இனி நிகர்யாவர் - இனிச் சமானமாவார் யாவர் ?

782. கலக்கவேழ் கடலேழ் மலைபுலகேழுங் கழியக்கடாய்
உலக்கத்தேர் கொடுசென்ற மாயமுமுட்பட மற்றும்பல
வலக்கையாழி யிடக்கைச்சங்க மிவையுடை மால்வண்ணனை
மலக்குநாவுடையேற்கு மாறுளதோ விம்மண்ணின் மிசையே.

ஏழ்கடல் - ஏழுகடலையும், ஏழ்மலை - ஏழுமலையும், ஏழ்உலகம் - ஏழுலோகத்தையும், கலக்க - வேற்றுமை தெரியாத பொருந்தும்படியாக, கழிய - அண்டமுகட்டுக் கவ்வருகே போம்படியாய், கடாய் - நடத்தி, தேர்கொடு - தேரைக்கொண்டு, உலக்க சென்ற - முடியச்சென்ற, மாயமும் - ஆச்சரியமும், உட்பட - முதலாக, மற்றும்பல - மேலுமுள்ள பல செயல்களையும், (பரத்துவத்துக்கடையாளமான), வலக்கை - வலக்கையில், ஆழி - திருவாழியும், இடக்கை, இடக்கையில், சங்கமும் - திருச்சங்கமும் ஆகிற, இவை - இந்த அடையாளங்களையும், உடை - உடைய, மால்வண்ணனை - சாமளநிறத்தை யுடையவனை,

(781) திருவா. 4-5-8. (782) திருவா. 6-4-9.

மலக்கும் - மிகு களிப்பாலே சுழலும்படி பண்ணுகின்ற, நா உடையேற்கு - நாவீறுடைய எனக்கு, இ மண்ணின்மிசை - இந்தப் பூமியின்மேலே, மாறு உளதோ - எதிர் உண்டோ,

783. விதியினாற் பெடைமணக்கும் மென்னடைய வன்னங்காள்
மதியினாற் குறண்மாணா யுலகிரந்த கள்வர்க்கு
மதியிலேன் வல்வினையோ மாளாதோ வென்றொருத்தி
மதியெல்லா முள்கலங்கி மயங்குமா லென்னீரே.

விதியினால் - பாக்கியத்தாலே, பெடைமணக்கும் - பேடைகளோடு கலந்திருக்கிற, மெல்நடைய - மிருதுவான நடையையுடைய, அன்னங்காள் - அன்னப்பறவைகளே, மதியினால் - புத்தியினால், குறள்மாண்ஆய் - வாமனப்பிரசாரியாய், உலகு இரந்த - உலகங்களை யாசித்த, கள்வர்க்கு - கபடமுடையவர்க்கு, மதியிலேன் - புத்தியில்லாத என்னுடைய, வல்வினையே - பெரும்பாவந்தானே, மாளாது - போகாதிருப்பது, ஓ என்று - ஐயோவென்று, ஒருத்தி - ஒரு பெண்ணானவள், மதியெல்லாம் - புத்திமுழுதும், உள்கலங்கி - மனத்துடன் கலங்கி, மயங்கும் - மயங்காநின்றாள், என்னீர் - என்று சொல்லுங்கள்.

784. நீயலையே சிறுபூவாய் நெடுமாலார்க் கென்தூதாய்
நோயெனது நுவலென்ன நுவலாதே யிருந்தொழிந்தாய்
சாயலொடு மணிமாமை தளர்ந்தேனா னினியுனது
வாயலகி லின்னடிசில் வைப்பாரை நாடாயே.

சிறுபூவாய் - சிறியபூவையே, நீ அல்லையே - நீ அல்லவா, நெடுமாலார்க்கு - ஆசிரிதரிடத்துப் பேரன்பையுடைய சுவாமிக்கு, என்தூதாய் - என் தூதாகிச் சென்று, எனது நோய் - என் விரகநோயை - நுவல்என்ன - சொல் என்ன, நுவலாதே - சொல்லாதே, இருந்தொழிந்தாய் - செருக்கி யிருந்துவிட்டாய், நான் - யான், சாயலொடு - ஒளியோடுகூடின, மணி - அழகாகிய, மாமை - நிறத்தை, தளர்ந்தேன் - இழந்தேன், இனி - இப்படி ஈடுபட்டபின்பு, உனது - உன்னுடைய, வாய்அலகில் - வாயலகுக்குள்ளே, இன் - மதுரமான, அடிசில் - இரையை, வைப்பாரை - ஊட்டுவாரை, நாடாய் - தேடிக்கொள்.

785. காணவாராய் ... ... 771-வது இலக்கம் காண்க.

786. பாயோரடிவைத் ததன்கீழ்ப் பரவை நிலமெல்லாம்
தாயோ ரடியா லெல்லாவுலகுந் தடவந்த
மாயோ னுன்னைக் காண்பான் வருந்தி எனைநாளும்
தீயோடுடன்சேர் மெழுகாயுலகிற் றிரிவேனோ.

ஓர் அடி - ஒரு திருவடியை, பாய்வைத்து - பரப்பிவைத்து, அதன்கீழ் - அதன்கீழ் யாகும்படி, பரவை - கடல்சூழ்ந்த, நிலம் எல்லாம் - எல்லா நில

(783) திருவா. 1-4-3. (784) திருவா. 1-4-8.
(786) திருவா. 6-9-6.

வுலகங்களையும், தாய் - தாவி, ஓர் அடியால் - மற்றொரு திருவடியினால், உலகு எல்லாம் - மேலுலகங்க ளெல்லாவற்றையும், தடவந்த - பரிசித்த, மாயோன் - ஆச்சரியபூதனே, உன்னைக்காண்பான் - உன்னைக் காணும்பொருட்டு, எனை நாளும் - எல்லாக்காலத்திலும், வருந்தி - கிலேசித்து, தீயோடு உடன்சேர் - தீயோடே கிட்டச்சேர்ந்த, மெழுகு ஆய் - மெழுகின் சுபாவத்தை யுடையேனாகி, உலகில் - நாட்டிலே, திரிவேனோ - சுழலக்கடவேனோ.

787-788. தேவுமற்றறியேன் ... ... 777-வது இலக்கம் காண்க.

789. விஜ்ஞாபநம் வநகிரீஸ்வர ஸத்யரூபா மங்கீகுருஷ்வ கருணார்ணவ மாமகீநாம் । ஸ்ரீரங்கதாமநி யதாபுரமேஷ ஸோஹம் ராமாநுஜார்ய வஶக: பரிவர்த்திஷீய ॥

கருணார்ணவ - கருணைக்கடலான, வநகிரீஸ்வர - வநகிரிநாதனே, மாமகீநாம் - என்னுடையதான, ஸத்யரூபாம் - மெய்யான, விஜ்ஞாபநாம் - விண்ணப்பத்தை, அங்கீகுருஷ்வ - திருவுள்ளம் பற்றவேண்டும், (அது என்னவென்றால்) ஸ: - அந்த, ஸ்ரீரங்கதாமநி - ஸ்ரீரங்கத்தில், யதாபுரம் - முன்போலவே, ஏஷ: - இந்த, ராமாநுஜார்யவஶக: - உடையவர் வசமாகயிருந்துகொண்டு, அஹம் - அடியேன், பரிவர்த்திஷீய - கைங்கரியஞ் செய்யவேண்டும்.

790. கருத்திற்புகுந்துள்ளில் கள்ளங்கழற்றிக் கருதரிய
வருத்தத்தினால் மிகவஞ்சித்து நீயிந்த மண்ணகத்தே
திருத்தித் திருமகள்கேள்வனுக் காக்கியபி னென்னெஞ்சில்
பொருத்தப்படா திராமாநுசா மற்றோர் பொய்ப்பொருளே.

கருத்தில் புகுந்து - (நெடுங்கை நீட்டாக விருக்கில் இவன் நெஞ்சைத் திருத்தப்போகா தென்று) நெஞ்சுதன்னிலே வந்து புகுந்து, (குடியிருக்குமவர்கள் செடியறுக்குமாப்போலே), உள்ளில் - உள்ளுண்டான கள்ளம் கழற்றி - ஆத்மாபஹாரத்தைப் போக்கி, கருதரிய - (வேறு சிலர்க்கு நெஞ்சால் நினைக்கவுங்கூட) அரிதாயிருந்துள்ள, வருத்தத்தினால் - வருத்தத்தாலே, (நானறியில் செய்தகர்ஷி தன்னையும் அழித்துக்கொள்வேனென்று எனக்கொன்றும் தெரியாதபடி), மிகவஞ்சித்து-மிகவும் மறைத்து, நீ - தேவரீர் தாம் (அறிந்ததாக யத்நித்து), திருத்தி - (தரிசுகிடந்த நிலத்தை செய்காலாம்படி திருத்துவாரைப்போலே) திருத்தி, இந்த மண்ணகத்தே - இந்த லோகத்திலே, திருமகள்-தேவரீர்க்கு உத்தேஸ்ய விஷயமான ஸ்ரீய: பதிக்கு, ஆக்கியபின் - அந்தப்புர விநியோகத்துக்கு ஆளாம்படி பண்ணின பின்பு, என் நெஞ்சில் - (இப்படி தேவரீர் திருத்தத்திருந்தின) என்மநஸ்ஸிலே, (தேவரீர் அறிவித்த யதார்த்தமொழிய), மற்றோர் பொய்ப்பொருள் - அதுக்குப் புறம்பாயிருப்பதொரு அயதார்த்தம், பொருத்தப்படாது - வலியப்பொருந்தாது.

---

(789) ஸுந்தரபாஹுஸ்தவம். (790) இரா. நூற். 78.

791. அமல னாதிப்பிரானடியார்க்கென்னை யாட்படுத்த விமலன்
விண்ணவர்கோன் விரையார்பொழில் வேங்கடவன்
நிமலனின்மல னீதிவானவ னீண்மதிளரங்கத்தம்மான் திருக்
கமலபாதம் வந்தென் கண்ணினுள்ளன வொக்கின்றவே

அமலன் - பரிசுத்தனாய், ஆதி - ஜகத்காரணபூதனாய், பிரான் - எனக்கு உபகாரகனாய், என்னை - ப்ரக்ருதி பரவசனான வென்னை, அடியார்க்கு - தன்னுடைய தாஸபூதருக்கு, ஆள்படுத்த - அடிமையாக்குகையாலே வந்த, விமலன் - ஔஜ்வல்யத்தை யுடையனாய், விண்ணவர்கோன் - நித்யஸூரிகளுக்கு ஸ்வாமியாயிருந்து வைத்து லீலாவிபூதியிலுள்ளாரை யடிமை கொள்ளுகைக்காக, விரை ஆர் - பரிமளம் நிறைந்திருந்துள்ள, பொழில் - சோலையையுடைய, வேங்கடவன் - திருமலையிலே வந்து தங்கினவனாய், நிமலன் - நான் விரும்பாதிருக்க எனக்கு உபகரிக்கையாலே உஜ்வலனாய், நின்மலன் - தன்னடியார்க்கு என்னை அடிமையாக்குகையால் வந்த ஔஜ்வல்யத்தையுடையனாய், நீதிவானவன் - உடையவன் உடைமை, என்கிற முறைதப்பாத நித்யவிபூதியிலே யுள்ளவனாய், நீள் - உயர்ந்த, மதிள் - திருமதிள்களையுடைய, அரங்கத்து - கோயிலிலே கண்வளர்ந்தருளுகிற, அம்மான் - ஸர்வஸ்வாமியானவனுடைய, திரு - பெரியபிராட்டியாரும் கூசிப் பிடிக்கத் தக்கதாய்; கமலம் - செந்தாமரைமலர்போன்ற, பாதம் - திருவடிகளானவை, வந்து - தானே வந்து, என் கண்ணின் உள்ளன - என் கண்ணுக்கு இலக்காய், ஒக்கின்றவே - பழைய நிலைமை குலையாதிருந்ததே என்று ஈடுபடுகிறார்.

792. பரம்ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேநரூபேணாபிஸம்பத்யதே ।

பரம் ஜ்யோதிஃ - பரமாத்மாவை, உபஸம்பத்ய - அடைந்து, ஸ்வேந ரூபேண - தனக்கு அஸாதாரணமான ஆகாரத்தினால், அபிநிஷ்பத்யதே-ஆவிர்பவிக்கிறான்.

793. ஸங்க்யாதும் நைவஶக்யந்தே குணாதோஷாஶ்ச ஶார்ங்கிணஃ।
ஆநந்த்யாத் ப்ரதமோ ராஶி ரபாவாதேவ பஶ்சிமஃ ॥

ஶார்ங்கிணஃ - திருச்சார்ங்கத்தையுடைய ஈஶ்வரனுடைய, குணாஃ - திருக்கல்யாண குணங்களும், தோஷாஃ ச - தோஷங்களும், ஸங்க்யாதும் நைவ ஶக்யந்தே - எண்ண முடியாது, ப்ரதமஃ - முதலாவதான, ராஶிஃ - குணக் கூட்டமானது, ஆநந்த்யாத் - எல்லை யற்றனவா யிருப்பதால், (எண்ண முடியாது), பஶ்சிமஃ - இரண்டாவதான, தோஷஃ ச - தோஷங்கள், அபாவாதேவ - இல்லாமையாலே (எண்ண முடியாது).

794-795. கடியன் ... ... 360-வது இலக்கம் காண்க.

796. இவ ளிராப்பகல் வாய்வெரீஇ தன
குவளையொண் கண்ணநீர் கொண்டாள் வண்டு

---

(791) அமலனாதிபிரான், 1. (792) சா. உப. 8-12-2.
(793) (796) திருவா. 2-4-5.

திவளும் தண்ணந்துழாய் கொடீர் என
தவள வண்ணர் தகவுகளே.

இவள் - இவள், இராப்பகல் - இரவும் பகலும், வாய்வெரீஇ - வாய் பிதற்றி, தன - தன்னுடைய, குவளை - நெய்தல் மலர்போல, ஒள் - அழகிய, கண் - கண்ணிலே, நீர்கொண்டாள் - நீரை உடையளானாள், வண்டு-வண்டுகள், திவளும் - படிகின்ற, தண் அம் துழாய் - குளிர்ந்தழகிய திருத்துழாய் மாலையை, கொடீர் - தருகின்றிலீர், தவளவண்ணர் - பரிசுத்தமான சுவபாவமுள்ளவரது, தகவுகள் - கிருபை முதலிய சுபாவங்கள், என - எவ்வெவ்வகையாயிருக்கின்றன.

797. தகவுடையவனே என்னும் பின்னும்
798. மிகவிரும்பும் பிரானென்னும் என
799. தகவுயிர்க் கமுதேஎன்னும் உள்ளம்
உக உருகி நின்றுள்ளுளே.

உள்ளம் தன்னெஞ்சு, உக - அழியும்படி, உருகி - சொரூபம் நீராயுருகி, உள் உள்ளே - தன்னிலே தன்னிலே, நின்று - நின்று, தகவு - என்னைப்புசிப்பிக்கைக்கு அடியான கிருபை முதலிய சுபாவங்களை, உடையவனே - உடையவனே, என்னும் - என்பாள், பின்னும், - மேலும், மிக - மிகுதியாக, விரும்பும் - விரும்பும்படியான, பிரான் - உபகாரகனே, என்னும் - என்பாள், எனது - என்னுடைய, அகஉயிர்க்கு - உள்ளுயிர்க்கு, அமுதே - அமிருதமே, என்னும் - என்னுநிற்பள்.

800. க்யாதஃ ப்ராஜ்ஞஃ க்ருதஜ்ஞஶ்ச ஸாநுக்ரோஶஶ்ச ராகவஃ ।
801. ஸத்வ்ருத்தோ நிரநுக்ரோஶஃ ஶங்கே மத்பாக்ய ஸங்க்ஷயாத் ॥

க்யாதஃ - வாத்ஸல்யாதிகுண ப்ரஸித்தரும், ப்ராஜ்ஞஃ - புத்திமானும், க்ருதஜ்ஞஃ - அல்போபகாரத்தை மேருவாகக் கொள்ளுமவரும், ஸாநுக்ரோஶஃ - தயாஸஹிதரும், ஸத்வ்ருத்தஃ - ஸத்வ்யாபார முடையவருமான, ராகவஃ - சக்ரவர்த்தித் திருமகனுக்கு, மத் - என்னுடைய, பாக்ய ஸங்க்ஷயாத் - பாக்கிய ஹானியால், நிரநுக்ரோஶஃ-க்ருபையில்லாதவராக, இருக்கிறாரென்று, ஶங்கே-சந்தேகப்படுகிறேன்.

802. மாற்பால் ... ... 336-வது இலக்கம் காண்க.

803. நினைப்பன் திருமாலை நீண்டதோள் காண
நினைப்பார் பிறப்பொன்றும் நேரார்—மனைப்பால்
பிறந்தார் பிறந்தெய்தும் பேரின்ப மெல்லாம்
துறந்தார் தொழுதா ரத்தோள்.

நீண்ட - (போக்யதையால்) மிகுந்த, தோள்-புஜங்களை, காண-ஸாக்ஷாத்கரிக்கைக்கு, திருமாலை - ஶ்ரியஃபதியை, நினைப்பன் - த்யானியாநின்றேன்,

(797) திருவா. 2-4-6. (800) ரா. ஸு. 26-13.
(803) இர. திருவ. 42.

நினைப்பார் - த்யாகிக்குமவர்கள், ஒன்று - ஒருவிதமான, பிறப்பும் - ஜந்மத்தையும், நேரார் - கிட்டார்கள், மனைப்பால் - ஓரிடத்தில், பிறந்தார் - ஜந்மித்தவர்கள், பிறந்து - ஜந்மித்து, எய்தும் - அடையும், பேர் - பெரிய, இன்பமெல்லாம் - ஸமஸ்த ஸுகங்களையும், அத்தோள் - அந்த புஜத்தை, தொழுதார் - ஆஸ்ரயித்தவர்கள், துறந்தார் - த்யஜித்தவர்களாவர்கள்.

804. நெஞ்சுருகிக் கண்பனிப்ப நிற்கும் சோரும்
நெடிதுயிர்க்கு முண்டறியா ளுறக்கம்பேணாள்
நஞ்சரவில் துயிலமர்ந்த நம்பீ யென்னும்
வம்பார்பூம் வயலாலி மைந்தாவென்னும்
அஞ்சிறைய புட்கொடியே யாடும் பாடும்
அணியரங்க மாடுதுமோ தோழீ யென்னும்
என்சிறகின் கீழடங்காப் பெண்ணைப் பெற்றேன்
இருநிலத்தோர் பழிபடைத்தேன் ஏபாவமே.

நெஞ்சு - மனஸ்ஸானது, உருகி - (நீர்ப்பண்டமாக) உருகி, கண் - கண்களினின்றும், பனிப்ப - தாரை தாரையாக விழ, நிற்கும் - அசைவற்று நிற்கிறாள், சோரும் - மோஹங்கதையாகிறாள், நெடிதுயிர்க்கும் - நெடுமூச்சு விடாநின்றாள், உண்டறியாள் - போஜநம் செய்தறியாள், உறக்கம் பேணாள் - உறக்கத்தை ஆதரியாள், நஞ்சு - விஷத்தை உமிழாநின்றுள்ள, அரவில் - திருவனந்தாழ்வான் மேலே, துயில் அமர்ந்த - யோகநித்திரை பண்ணுகிற, நம்பீயென்னும் - பூர்ணனே! என்று சொல்லாநின்றாள் வம்பு ஆர் - பரிமளம் மிக்கிருந்துள்ள, பூ - புஷ்பங்களையுடைய, வயல் - வயல்கள் சூழ்ந்த, ஆலி - திருவாலியிலெழுந்தருளியிருக்கிற, மைந்தாவென்னும் - யுவாவானவனே என்று சொல்லாநின்றாள், அஞ்சிறைய - அழகிய சிறகை யுடைத்தான, புட்கொடி - கருடத்வஜத்தை, ஆடும் - அநுகரிக்கும், பாடும் - காநம் பண்ணும், தோழி - என் உயிர்த்தோழியே, அணி - (ஸம்ஸாரத்துக்கு) ஆபரணமான, அரங்கம் - கோயிலிலே போய், ஆடுதுமோ - அவனுடன் ஸம்ஸ்லேஷிக்கப் பெறுவோமோ, என்னும் - என்று சொல்லாநின்றாள், என் சிறகின்கீழ் அடங்கா - என் கைக்கடங்காத, பெண்ணைப் பெற்றேன் - பெண்ணைப் பெற்றேன், இரு நிலத்து - இந்த மஹாப்ருதிவியிலே, ஓர் பழி படைத்தேன் - ஒப்பற்ற பழியை லபித்தேன், ஏ பாவமே - நான் செய்த பாபமே,

805. பந்தோடுகழல் மருவாள் பைங்கிளியும் பாலூட்டாள்
பாவை பேணாள்
வந்தானோ திருவரங்கன் வாரானோவென்றென்றே
வளையும் சோரும்

(804) திருநெடுந்தாண்டகம். 12. (805) பெரிய. திரு. 5-5-9.

சந்தோகன் பவுழிய னைந்தழலோம்பு தைத்திரியன்
சாமவேதி
அந்தோ வந்தென்மகளைச் செய்தனக
ளம்மனைமீர றிகிலேனே

பந்தோடு - பந்தோகூட, கழல் - கழல் என்கிற (பெண்களாடுகிற) காய்களை, மருவாள் - விரும்புகிறிலள், பை - பசுமையான, கிளியும் - கிளிக்கும், பாலூட்டாள் - பாலூட்டமாட்டாள், பாவை - பொம்மையை, பேணாள் - ஆதரிக்கிறிலள், திருவரங்கன் - அழகிய மணவாளன், வந்தான் - எழுந்தருளினான், ஓ - அதிசயம், என்று - என்று சொல்லியும், வாரான் வருகிறிலன், ஓ - கஷ்டம், என்றே - என்று சொல்லியும், வளையும் (கைகளில்) வலயங்களையும், சோரும் - இழவாநின்றாள், சந்தோகன்-ஸாமவேதத்தில் ப்ரதிபாதிக்கப்பட்டவனும், பவுழியன் - கௌஷீதகி ப்ராஹ்மணத்தில் ப்ரதிபாதிக்கப்பட்டவனும், ஐந்து அழல் - பஞ்சாக்நி மத்யவர்த்தியும், ஓம்பு - ஹோமத்தில் ப்ரதிக்திக்கப்பட்டவனும், தைத்திரியன் - தைத்திரியோபநிஷத்தில் ப்ரதிபாதிக்கபட்டவனும், சாமவேதி - ஸாமவேதத்தில் ப்ரதிபாதிக்கப்பட்டவனுமான அவன், வந்து - இவளிருக்குமிடம் வந்து, என்மகளை - என்னுடைய குமாரத்தியை, செய்வனகள் - செய்வனைவகளை, அம்மனைமீர் - தோழிகளே, அறிகிலேனே - அறிய முடியவில்லையே, (அந்தோ கஷ்டம்).

806. அவனடியார் ... ... 493-வது இலக்கம் காண்க.

807. தனிமாப்புகழே யெஞ்ஞான்றும் நிற்கும்படியாத் தான்தோன்றி
முனிமாப்பிரம முதல்வித்தா யுலகமூன்று முளைப்பித்த
தனிமாத்தெய்வந் தளிரடிக்கீழ்ப் புகுதலன்றி யவனடியார்
நனிமாக் கலவியின்பமே நாளும்வாய்க்க நங்கட்கே.

தனி - ஒப்பற்ற, மாபுகழே - பெருங்குணத்தையே, எஞ்ஞான்றும் - எந்நாளும், நிற்கும்படியாய் - நிலைபெற்றிருக்கும்படியாக, தான் தோன்றி - தானே யுண்டாகி, முனி - சிருஷ்டி மநநத்தைப்பண்ணுவதாய், மாபிரமம் - பரப்ரஹ்மமாகிற, முதல் வித்து ஆய் - பிரதாந பீஜமாய், உலகம் மூன்றும் - மூன்றுலகத்தையும், முளைப்பித்த - உற்பவிக்கப்பண்ணின, தனிமாதெய்வம் - ஒப்பற்ற பரதேவதையினுடைய, தளிர் அடிகீழ் - மிருதுவான திருவடிகளின் கீழே, புகுதல் - அன்றி - சேர்க்கையன்றிக்கே, அவன் அடியார் - அவனது அடியார்களுடைய, நனிமா - மிகவும் சிலாக்யமான, கலவியின்பமே - சேர்க்கைச்சுகமே, நங்கட்கு - நமக்கு, நாளும் வாய்க்க - நாடோறும் கிடைக்கவேணும்.

808. காணவாராய் ... ...771. [1] வது இலக்கம் காண்க.

809. காணுமாறருளாய் ... ... 771. [2] வது இலக்கம் காண்க.

810. வெஞ்சிறைப்புள் ... ... 577-வது இலக்கம் காண்க.

(807) திருவா. 8.10-7.

811. கச்சதா மாதுலகுலம் பரதேந ததாநக: ।
ஸத்ருக்நோ நித்ய ஸத்ருக்நோ நீத: ப்ரீதிபுரஸ்க்ருத: ॥

மாதுலகுலம் - மாமாவின் க்ருஹத்தைக் குறித்து, கச்சதா - செல்கின்ற, பரதேந - பரதாழ்வானால், ததா - அப்பொழுது, அநக: - பாபமில்லாதவனும், நித்ய ஸத்ருக்ந: - (பரதாநுவ்ருத்திக்கு விரோதியான ராம சௌந்தர்யமாகிற) நித்ய சத்ருவை ஜயித்திருப்பவருமான, ஸத்ருக்ந: - சத்ருக்நாழ்வான், ப்ரீதி - ப்ரீதியினால், புரஸ்க்ருத: - தூண்டப்பட்டவனாயிருக்க, நீத: - அழைத்துக் கொண்டு போகப்பட்டான்.

812 மனைப்பால் ... ... 803-வது இலக்கம் காண்க.

813. சிறுமாமனிசராய் ... 493-வது இலக்கம் காண்க.

814. பேறொன்று மற்றில்லை நின்சரணன்றி யப்பேறளித்தற்
காறொன்று மில்லை மற்றச்சரணன்றி யென்றிப்பொருளைத்
தேறுமவர்க்கு மெனக்கு முனைத்தந்த செம்மைசொல்லால்
கூறும்பரமன் றிராமாநுசா மெய்ம்மை கூறிடிலே.

இராமாநுசா - உடையவரே, நின் சரண் அன்றி - தேவரீர் திருவடிகளையொழிய, மற்றுப் பேறு - வேறு ப்ராப்யம், ஒன்றில்லை - ஒன்றுமில்லை, அப்பேறு - அந்த ப்ராப்யத்தை, அளித்தற்கு - தருகைக்கு, அச்சரணன்றி - அத்திருவடிகளையொழிய, மற்று ஆறு - வேறு உபாயம், ஒன்றுமில்லையென்று - ஒன்றுமில்லையென்று, இப்பொருளை - இவ்வர்த்த தத்வத்தை, தேறுமவர்க்கும் - தெளிந்திருக்குமவர்களுக்கும், எனக்கும்-எனக்கும், உனை - தேவரீரை, தந்த - உபகரித்தருளின, செம்மை-நேர், மெய்ம்மை கூறிடில் - உண்மை சொல்லில், சொல்லால் - வாசா, கூறும்பரமன்று-வ்யவஹரிக்கைக்கு சக்கியமாகிறதில்லை.

815. [1] ஸசாசார்யவம்ஸோ ... ... 607-வது இலக்கம் காண்க.

815. [2] ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே ।
அபயம் ஸர்வ பூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம ॥

ஸக்ருதேவ - ஒரே தடவை, ப்ரபந்நாய - ப்ரபத்தி செய்தவன் பொருட்டும், தவ - உமக்கு, அஸ்மி இதி ச - தாஸனென்று, யாசதே - யாசிக்கிறவன் பொருட்டும், ஸர்வ பூதேப்ய: - ஸமஸ்த ப்ராணிகளினின்றும், அபயம் - பயநிவ்ருத்தியை, ததாமி - கொடுக்கிறேன், ஏதத் - இது, மம - என்னுடைய, வ்ரதம் - ஸங்கல்பம்.

816. யோ தத்யாத் பகவத் ஜ்ஞாநம் குர்யாத் தர்மோபதேசநம் ।
க்ருத்ஸ்நாம் வா ப்ருதிவீம் தத்யாந் ந தத்துல்யம் கதஞ்சந ॥

---

(811) ரா. அ. 1-1. (814) இரா. நூற். 45.
(815—2) ரா. யு. 18.33. (816)

யஃ - எந்த ஆசார்யர், பகவத்ஜ்ஞாநம் - பகவத் ஜ்ஞானத்தை, தத்யாத் - கொடுத்தருளினரோ, தர்மோபதேசம் - தர்மோபதேசத்தை, யஃ - எவர், குர்யாத் - செய்தருளுகிறாரோ, (அவருக்கு), க்ருத்ஸ்நாம் - ஸமஸ்தமான, ப்ருதிவீம்வா - எல்லாபூமியையும் நித்ய விபூதியையும், தத்யாத் - கொடுக்கவேண்டும், (அப்படிக் கொடுத்தாலும்), கதஞ்சந - எந்த பிரகாரத்தாலும், தத் - அந்த ஜ்ஞாநோபதேசத்திற்கு, துல்யம் - சமானமாக, ந - ஆகாது.

817. ஈஸ்வரஸ்யச ஸௌஹார்தம் யத்ருச்சா ஸுக்ருதம் ஹரேஃ।
விஷ்ணோஃ கடாக்ஷம் அத்வேஷம் ஆபிமுக்யஞ்ச ஸாத்விகைஃ।
ஸம்பாஷணம் ஷடேதாநி ஆசார்ய ப்ராப்தி ஹேதவஃ॥

ஈஸ்வரஸ்யச - ஈஸ்வரனுடைய, ஸௌஹார்த்தம் - நன்னெஞ்சமும், யத்ருச்சாஸுக்ருதம் - தன்னையறியாத ஸுக்ருதமும், ஹரேஃ - பாபஹரனுன, விஷ்ணோஃ - விஷ்ணுவினுடைய, கடாக்ஷம் - கடாக்ஷமும், அத்வேஷம்-த்வேஷமில்லாமையும், ஆபிமுக்யஞ்ச - பிரியமுடனிருக்கையும், ஸாத்விகைஃ - சாதுக்களுடன், ஸம்பாஷணம் - பேசுகையுமாகிற, ஷடேதாநி - இந்த ஆறும், ஆசார்ய ப்ராப்தி - ஆசார்யனை யடைவிப்பதற்கு, ஹேதவஃ - காரணமாகும்.

818. அசிந்த்யாத்புத ... ... 589-வது இலக்கம் காண்க.

819. செந்தழலே வந்தழலைச் செய்திடினுஞ் செங்கமலம்
அந்தரஞ்சேர் வெங்கதிரோற் கல்லா லலராவால்
வெந்துயர் வீட்டாவிடினும் வித்துவக்கோட்டம்மா உன்
அந்தமில் சீர்க்கல்லா லகங்குழைய மாட்டேனே.

செம் - சிவந்த, தழல் - நெருப்பானது, வந்து - கிட்டி, அழலைச் செய்திடினும் - உஷ்ணத்தைப் பண்ணினாலும், செம் - அழகிய, கமலம் - தாமரைகளானவை, அந்தரஞ்சேர் - ஆகாசத்திலே வர்த்திக்கிற, வெங்கதிரோற்கல்லால் - ஸூர்யனுடைய உஷ்ணத்துக்கல்லது, அலரா - மலராவாம், வித்துவக்கோட்டம்மா - வித்துவக்கோட்டம்மானே, வெம் துயர் - என்னுடைய க்ரூரமான துக்கத்தை, வீட்டா விடினும் - நீ போக்காவிட்டாலும், உன் - உன்னுடைய, அந்தமில் - அளவில்லாத, சீர்க்கல்லால் - கல்யாண குணங்களுக்கல்லது, அகம் குழையமாட்டேன் - என்னெஞ்சு களிப்புறுதேன்கிறார்.

820. உள்ளிலு முள்ளம் தடிக்கும் வினைப்படலம்
விள்ளவிழித் துன்னை மெய்யுற்றால்—உள்ள
உலகளவு யானு முளனாவ னென்கொலோ
உலகளந்த மூர்த்தி யுரை.

உள்ளிலும் - (உன்னை) அநுஸந்தித்த மாத்ரத்தில், உள்ளம் - (என்) மநஸ்ஸு, தடிக்கும் - பருக்கநின்றது, வினை-பாபங்களின், படலம் - சமூஹம்,

(817) (819) பெருமாள். திரு. 5-6.
(820) பெரிய. திருவ. 76.

விள்ள - (என்னைவிட்டு) நீங்கும்படி, விழித்து - (நீ) கடாக்ஷித்து, உன்னை - உன்னை, மெய்யுற்றால் - (நான்) ஸாக்ஷாத்கரித்தால், உள்ள - இருக்கிற, உலகளவும் - லோகங்களெல்லாவற்றிலும், யானும் - நானும், உளனாவனென்கொல் - (பருத்து) உளனாவன்போலே யிராநின்றது, உலகு - லோகத்தை, அளந்த - ஆக்ரமித்த, மூர்த்தி - ஸ்வாமீ, உரை - சொல்லு.

821. நாராயணோऽபி விக்ருதிம் யாதி குரோः ப்ரச்யுதஸ்ய துர்புத்தேः। கமலம் ஜலாதபேதம் சோஷயதி ரவிர் ந தோஷயதி ॥

ஜலாத் - நீரை, அபேதம் - பிரிந்த, கமலம் - தாமரையை, ரவிः - சூரியன், சோஷயதி - உலர்த்துகிறானேயொழிய, ந தோஷயதி - அலர்த்த மாட்டுகிறிலன், (அதுபோல); குரோः - ஆசார்ய ஸம்பந்தத்தை, ப்ரச்யுதஸ்ய - குலைத்துக்கொண்ட, துர்புத்தேः - துஷ்ட புத்தியுள்ளவன் விஷயத்தில், நாராயணः அபி - ஸ்ரீமந்நாராயணனும், விக்ருதிம் யாதி - விகாரத்தை யடைவிக்கிறான்.

822. ஒழிக்க ஒழியாது ... ... 122-வது இலக்கம் காண்க.

823. ஸாத்விகைः ... ... 817-வது இலக்கம் காண்க.

824. ஈஶ்வரஸ்யச ... ... 817-வது இலக்கம் காண்க.

825. ஸுலபம் ஸ்வகுரும் த்யக்த்வா துர்லபம் ய உபாஸதே।
லப்தம் த்யக்த்வா தநம் மூடோ குப்தமந்வேஷதி க்ஷிதௌ॥

ஸுலபம் - அதிஸுலபனான, ஸ்வ - தன்னுடைய, குரும் - ஆசாரியனை, த்யக்த்வா - விட்டு, யः - எவன், துர்லபம் - துர்லபமான, உபாஸதே - பகவத் விஷயத்தை உபாஸிக்கிறானோ, மூடः - (அந்த) மூடன், லப்தம் - கைப்பட்ட, தநம் - பொருளை, த்யக்த்வா - கைவிட்டு, க்ஷிதௌ - பூமியில், குப்தம் - புதைக்கப்பட்ட பொருளை, அந்வேஷதே - தேடுகிறதுபோலாவன்.

826. பற்று குருவைப் பரனன்றென விகழ்ந்து
மற்றோர் பரனை வழிப்படுதல்—எற்றேதன்
கைப்பொருள் விட்டாரேனும் காசினியில் தாம்புதைத்த
அப்பொருள் தேடித்திரிவா னற்று.

பற்றுங்குருவை - தன்னாலே பற்றப்பட்டிருக்கிற வாசார்யனை, பரனன்றென - ரக்ஷகனன்றென்று, இகழ்ந்து - அவமதிபண்ணிக் கைவிட்டு, மற்றோர் பரனை - வேறேயொரு பரனான ஸர்வேஶ்வரனை, வழிப்படுதல் - தன் ரக்ஷணார்த்தமாக அநுவர்த்திக்கை, தன்கைப்பொருள் - தன் கையிலிருக்கிற தநத்தை, விட்டு - அல்பமென்று நினைவாலே த்யஜித்து, ஆரேனும் - மற்றெவ

(821) (825)
(826) ஞானசாரம். 34,

ராகிலும், தாம் - தாங்கள், காசினியில் - பூமிக்குள்ளே, புதைத்த - புதைத்து வைத்திருக்கும், அப்பொருள் - அந்த தநத்தை, தேடித்திரிவானற்று - தேடித் திரியுமவன் செயல்போலாகும், எற்றே - என்னே? யென்று துக்கிக்கிறார்.

827. [1] சக்ஷுர் ஗ம்யம் ஗ுரும் த்யக்த்வா ஶாஸ்த்ர ஗ம்யம்து யஃ
ஸ்மரேத் । கரஸ்தமுதகம் த்யக்த்வா ஘நஸ்தமபிவாஞ்சதி ॥

சக்ஷுர் கம்யம் - கண்ணால் பார்க்கத்தகுந்த, குரும் - ஆசாரியனை, த்யக்த்வா - விட்டு, சாஸ்த்ர கம்யம் - சாஸ்திரத்தினு லறியவேண்டிய ஈஶ்வரனை, யஃ - எவன், ஸ்மரேத் - நினைக்கிறானோ, ஸஃ - அவன், கரஸ்தம் - கைப்பட்ட, உதகம் - ஜலத்தை, த்யக்த்வா - விட்டு, கநஸ்த்தம் - மேகஜலத்தை, அபிவாஞ்சதி - இச்சிப்பவன் போலாகும்.

827. [2] எட்டவிருந்த குருவை யிறை யன்றென்று
விட்டோர் பரனை விருப்புறுதல்—பொட்டெனத்தன்
கண் செம்பளித்திருந்துக் கைத்துருத்தி நீர்தூவி
அம்புதத்தைப் பார்த்திருப்பா னற்று.

எட்டவிருந்த - ஸந்நிஹிதனாயிருக்கிற, குருவை - ஆசார்யனை, இறையன்றென்று - ஶேஷியன்றென்று, விட்டு - த்யஜித்து, ஓர்பரனை - ஒப்பற்ற பரனை சர்வேஶ்வரனை, விருப்புறுதல் - லபிக்கவேணுமென்று ஆசைப்படுகை, பொட்டென - சடக்கென, தன் கண் - தன் கண்ணை, செம்பளித்திருந்து - மூடிக்கொண்டிருந்து, கைதுருத்தி நீர் - கையில் துருத்தியில் விடாய்க்காகச் சேர்த்து வைத்திருந்த ஜலத்தை, தூவி - நிலத்திலே உகுத்து, அம்புதத்தை - ஆகாஶவர்த்தியான மேகஜலத்தை, பார்த்திருப்பானற்று - விடாய்த்த போது ஜலபானம் செய்ய இச்சிக்கும் செயலாகும்.

828. ஏதத் ஸாமகாயந் ... ... 396-வது இலக்கம் காண்க.

829. ஏஷநாராயணஃ ஶ்ரீமாந் க்ஷீரார்ணவ நிகேதநஃ ।
நாகபர்யங்க முத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம்புரீம் ॥

ஶ்ரீமாந் - பெரிய பிராட்டியாருடன் கூடினவரும், க்ஷீரார்ணவ நிகேதநஃ - திருப்பாற்கடலை வாசஸ்தானமாக வுடையவருமான, ஏஷஃ - இந்த, நாராயணஃ - பரமாத்மாவானவர், நாகபர்யங்கம் - ஆதிசேஷ ரூபமானகட்டிலை, உத்ஸ்ருஜ்ய - விட்டு, மதுராம் புரீம் - மதுரை என்கிற பட்டணத்திற்கு, ஆகதோஹி - எழுந்தருளினாரன்றோ.

830. லாபஸ்தேஷாம் ஜயஸ்தேஷாம் குதஸ்தேஷாம் பராபவஃ ।
யேஷாமிந்தீவர ஶ்யாமோ ஹ்ருதயே ஸுப்ரதிஷ்டிதஃ ॥

யேஷாம் - எவர்களுடைய, ஹ்ருதயே - மனத்துள், இந்தீவர ச்யாமஃ - கரு நெய்தல் போன்ற திருமேனியுள்ள பகவான், ஸுப்ரதிஷ்டிதஃ - நன்றாய்

(827—1) (827—2) ஞானசாரம். 33. (829) ஹரிவம். 113-62. (830)

அமர்ந்திருக்கிறுரோ, தேஷாம் - அவர்களுக்கு, லாப: - லாபமுண்டாகும், தேஷாம் - அவர்களுக்கு, ஜய: - ஜெயமுண்டாகும், தேஷாம் - அவர்களுக்கு, பராபவ: - அவமானம், குத: - எங்கிருந்து வரும்.

831. கண்கள் சிவந்து பெரியவாய் வாயுஞ்சிவந்து கனிந்துள்ளே
வெண்ப லிலகுசுடரிலகு விலகு மகரகுண்டலத்தன்
கொண்டல்வண்ணன் சுடர்முடிய ஞன்குதோளன் குனிசார்ங்கம்
ஒண்சங்குகதை வாளாழியா னொருவனடியே னுள்ளானே.

கண்கள் சிவந்து - திருக்கண்கள் சிவந்து, பெரிய ஆய் - பெரியன ஆகி, வாயும் சிவந்து - திருவதரமும் சிவந்து, கனிந்து - பழுத்து உள்ளே - அகவாயிலே, வெண்பல் - வெள்ளிய திருமுத்து நிரையினுடைய, இலகு சுடர் விளங்குகின்ற சுடரையும், இலகு - பிரசிக்கிற, விலகு - அசையா நிற்கிற, மகரகுண்டலத்தன் - மகரகுண்டலத்தையு முடையனாய், கொண்டல் - காளமேகத்தின், வண்ணன் - நிறத்தையுடையவனாய், சுடர் முடியன்-பேரொளியையுடைய திருவபிஷேகத்தை யுடையவனாய், நான்கு தோளன் - நான்கு திருத்தோள்களையு முடையனாய், குனி - வளைந்த, சார்ங்கம் - வில், ஒள்சங்கு- அழகிய சங்கம், கதை - கதாயுதம், வாள் - கட்கம், ஆழியான் - திருவாழியையுடையனாய், ஒருவன் - ஒப்பற்றவன், அடியேன் - அடியேனுடைய, உள்ளான் - நெஞ்சிலே பிரகாசியா நின்றான்.

832. யேனைவ குருணு யஸ்ய ந்யாஸ வித்யா ப்ரதீயதே ।
தஸ்யவைகுண்ட துக்தாப்தி த்வாரகாஸ் ஸர்வ ஏவஸ: ॥

ஏனைவ குருணு - எந்த குருவினால், யஸ்ய - எந்த புருஷனுக்கு, ந்யாஸ வித்யா - சரணாகதி வித்யை, ப்ரதீயதே - கொடுக்கப் பட்டதோ, தஸ்ய அந்த சேதநனுக்கு, வைகுண்ட - பரமபதம், துக்தாப்தி - திருப்பாற்கடல், த்வாரகா: - துவாரகை, ஸர்வயேவ - எல்லாம், ஸ: - அந்த ஆசாரியனே.

833. வில்லார் மணிகொழிக்கும் வேங்கடப் பொற்குன்று முதல்
செல்லார் பொழில்சூழ்த் திருப்பதிக—ளெல்லாம்
மருளா மிருளோட மத்தகத்துத் தன்தாள்
அருளாலே வைத்த வவர்

வில்லார் - தேஜஸ்ஸு மிக்கிருந்துள்ள, மணி - ரத்நங்களை, கொழிக்கும்-குவித்தெறடா நிற்கும், வேங்கடம் - திருவேங்கட மென்கிற, பொற்குன்று முதல் - ஸ்ப்ருஹணீயமான திருமலை தொடக்கமாயுள்ள, செல்லார் - மேகங்கள் வந்து படியும்படி யிருக்கும், பொழில் - சோலைகளாலே, சூழ் - சூழப்பட்டிருக்கிற, திருப்பதிகளெல்லாம் - திவ்யதேசங்களெல்லாம், மருளாமிருள் - அஜ்ஞாநமாகிற அந்தகாரமானது, ஓட - அதிசீக்ரமாகப் போம்படியாக, மத்த

(831) திருவா. 8 8-1. (832)
(833) ஞானசாரம், 36.

கத்து - ஶிஷ்யனுடைய சிரஸ்ஸிலே, தன்தாள் - தம்முடைய திருவடிகளை, அருளாலே - நிர்ஹேதுகக்ருபையாலே, வைத்த - வைத்தருளின, அவர் - ஆசார்யரான அவரேயாவர்.

834. தேவுமற்றறியேன் ... ... 777-வது இலக்கம் காண்க.

835. அபிசேத்ஸுதுராசாரோ பஜதே மாமநந்யபாக் ।
ஸாதுரேவ ஸமந்தவ்ய: ஸம்யக் வ்யவஸிதோ ஹி ஸ: ॥

(எவன்) ஸுதுராசார: அபிசேத் - அத்யந்த நிஷித்தாநுஷ்டானத்தை யுடையவனாயிருந்தாலும், மாம் - என்னை, அநந்யபாக் - அநந்ய ப்ரயோஜநராய், பஜதே - பஜிக்கிறானோ, ஸ:- அவன், ஸாதுரேவமந்தவ்ய: - ஜ்ஞாநாதிகனென்று எண்ணத்தகுந்தவன், ஸ: - அவன், ஸம்யக் - நல்ல, வ்யவஸித:ஹி - ஆசாரமுடையவனல்லவா

836. ஶாந்தோ தாந்த உபரதஸ் திதிக்ஷுஸ் ஸமாஹிதோ
பூத்வா ஆத்மந் யேவாத்மாநம் பஶ்யேத் ।

சாந்த: - பஹிரிந்திரிய நிக்ரஹமுள்ளவனையும், தாந்த: - மநோ நிக்ரஹமுள்ளவனையும், உபரத: - இவைகளிரண்டும் தனக்குண்டென்கிற கர்வமில்லாமல் திதிக்ஷு: - இந்திரியங்களுக்கு ஆத்மாவை விஷயமாக்கினவனையும், ஸமாஹித: பூத்வா - நிர்வ்யாபாரனாகியும்ஆகி, ஆத்மநி ஏவ - ஆத்மாவுக்குள்ளிருக்கிற, ஆத்மாநம் - பரமாத்மாவை, பச்யேத் - பார்க்கவேண்டும்.

837. க்ஷேத்ராணி மித்ராணி தநாநி நாதபுத்ராஶ்ச தாரா:பஶவோ க்ருஹாணி । த்வத் பாதபத்ம ப்ரவணாத்மவ்ருத்தேர் பவந்தி ஸர்வே ப்ரதிகூல ரூபா: ॥

ஹேநாத - ஓ ஸ்வாமின், க்ஷேத்ராணி - நிலங்களும், மித்ராணி - தோழன்களும், தநாநி - தநங்களும், புத்ராணி - பிள்ளைகளும், க்ருஹாணி - வீடுகளும், த்வத் - தேவரீரது, பாதபத்ம - திருவடித் தாமரைகளிலே, ப்ரவணாத்ம வ்ருத்தே: - ப்ரேம யுக்தரானவர்களுக்கு, ஸர்வே - இவையெல்லாம், ப்ரதிகூல ரூபா: - விரோதங்களாக, பவந்தி - ஆகின்றன.

838. நல்லபுதல்வர் மனையாள் நவையில் கிளை
இல்ல நிலமாடிவை யனைத்தும்—அல்லலெனத்
தோற்றி யெரிதீயிற் சுடுமேலவர்க் கெளிதாம்
ஏற்றரும் வைகுந்தத் திருப்பு

நல்ல புதல்வர் - குணவான்களான புத்ரர்கள், மனையாள் - குணிவதியான பார்யை, நவையில் கிளை - குற்றமற்ற பந்துக்கள், இல்லம் - க்ருஹம், நிலம் - ஸுக்ஷேத்ரம், மாடு - பசுமுதலானவை, இவையனைத்தும் - இவை

(835) (836) ப்ரு. 9-4.
(837) ஹஸ்திகிரி மாஹாத்மியம். (838) ஞானசாரம். 19.

யெல்லாம், அல்லலெனை - துக்காவஹங்களென்று, தோற்றி - மநஸ்ஸுக்குத் தோற்றி, எரிதீயில் - ஜ்வலிக்கிற அக்நிபோலே, சுடுமேல் - தாபகரமாகில், அவர்க்கு - இப்படிப்பட்ட அவஸ்தை பிறந்தவர்களுக்கு, எற்றரும் - ஸ்வயத்நத்தால் பெறுதற்கரிய, வைகுந்தத்து-பரமபதத்திலே போய், இருப்பு-அடியார் குழாங்களுடன் கூடியிருக்குமிருப்பு, எளிதாம் - ஸுலபமாம்.

839. ஆகம்சேர் நரசிங்கமதாகி யோர்
ஆகம் வள்ளுகிராற் பிளந்தானுறை
மாகவைகுந்தங் காண்பதற் கென்மனம்
ஏகமெண்ணு மிராப்பக லின்றியே.

ஆகம் - ஒருவடிவிலே, சேர் - சேர்ந்த, நரசிங்கமது ஆகி - நரத்வ சிம்ஹத்வங்களை யுடைத்தாய்க்கொண்டு, ஓர் - ஒரு, ஆகம் - மார்பை, வள் - வளர்ந்த, உகிரால் - நகத்தாலே, பிளந்தான் - பிளந்தவன், உறை - வர்த்திக்கிற, மாகவைகுந்தம் - ஸ்ரீவைகுண்டத்தை, காண்பதற்கு - காண்கைக்கு, என் - எனது, மனம் - நெஞ்சானது, இராபகல் - இரவும் பகலும், இன்றி - வேறுபாடின்றி, ஏகம் - ஒருப்ரகாரமாகவே, எண்ணும் - நினைக்கும்.

840. வரம்ஹாதவ ... ... 210-வது இலக்கம் காண்க.

841. ஆயே யிவ்வுலகத்து நிற்பனவுந் திரிவனவும்
நீயே மற்றொருபொருளு மின்றி நீ நின்றமையால்
நோயேமூப் பிறப்பிறப்புப் பிணியேயென் றிவையொழியக்
கூயேகொள் ளடியேனைக் கொடுவுலகங் காட்டேலே

இவ்வுலகத்து - இந்த உலகத்தில், நிற்பனவும் - சஞ்சரியாதனவும், திரிவனவும் - சஞ்சரிப்பனவும், நீயே ஆய் - நீயே ஆகி, மற்று ஒரு பொருளும் இன்றி - வேறு ஒரு பொருளுமில்லாமல், நீ நின்றமையால் - நீ நின்றபடியாலே, (சரீரத்துக்கு வந்த நோய் முதலியவற்றுக்கு சரீரியான ஆத்மா சுகித்தல் துக்கித்தல்களைச் செய்வதுபோல), நோய் - மனநோயும், மூப்பு - முதுமையும், பிறப்பு - பிறவியும், இறப்பு - இறப்பும், பிணி - வியாதியும், என்று - என்று சொல்லப்பட்டு, (தனித்தனியே துக்கத்திற் நத்தாமே) காரணமான, இவை ஒழிய - இவை நீங்கும்படி, அடியேனை - உன் தொண்டனான என்னை, கூய்கொள் - அழைத்துக் கொண்டருளவேணும், (இவற்றில் ஈடுபடுகையால்), கொடு உலகம் - கொடியதாகிய உலகத்தை, காட்டேல் - என் கண்ணுக்கு இலக்காக்காதே.

842. உன்னை விட்டொன்றும்... ... ... 619-வது இலக்கம் காண்க.

843. அன்பன் தன்னை அடைந்தவர்கட் கெல்லாம்
அன்பன் தென்குருகூர் நகர்நம்பிக்கு

(839) திருவா. 9-3-7. (841) திருவா. 4-9-7.
(843) கண்ணிநுண்சிறுத்தாம்பு.

அன்பனுப் மதுரகவி சொன்னசொல்
நம்புவார்பதி வைகுந்தம் காண்மினே.

அன்பன்தன்னை-ரிபூணும்பி வத்ஸலனுன எம்பெருமான்றன்னே, அடைந்தவர்கட்கெல்லாம் - ஆஸ்ரயித்த வெல்லார் பக்கலிலும், அன்பன் - வாத்ஸல்யத்தையுடையராய், தென் - ஸ்ப்ருஹணீயமான, குருகூர்நகர் - திருநகரிக்கு நம்பிக்கு - நிர்வாஹகரான வாழ்வார் விஷயத்தில், அன்பனுப் - நிரதிஶய ஸ்நேஹயுக்தராய், மதுரகவி-மதுரவாக்கான ஸ்ரீமதுரகவியாழ்வார், சொன்ன- அருளிச்செய்த, சொல் - பாசுரங்களை, நம்புவார் - தமக்குத் தஞ்சமாக நினைத்திருக்குமவர்களுக்கு, பதி - ப்ராப்யமான தேசம், வைகுந்தம் - காண்மின்-பரமபதம் கிடீர்.

844. பழுதாகா தொன்றறிந்தேன் பாற்கடலான் பாதம்
வழுவா வகைநினைந்து வைகல்—தொழுவாரை
கண்டிறைஞ்சி வாழ்வார் கலந்த வினைகெடுத்து
விண்திறந்து வீற்றிருப்பார் மிக்கு

பழுதாகாது - வ்யர்த்தமாகாத, ஒன்று - ஒரு உபாயத்தை, அறிந்தேன்- அறிந்தேன், பாற்கடலான் - க்ஷிராப்திநாதனுடைய, பாதம் - திருவடிகளை, வழுவாவகை - நழுவுதலில்லா மார்க்கத்தினால், நினைந்து - அநுஸந்தித்து, வைகல் - ப்ரதிதினமும், தொழுவாரை - ஆஸ்ரயித்தவர்களை, கண்டு-ஸேவித்து, இறைஞ்சி - வணங்கி, வாழ்வார் - ஸுகிப்பவர்கள், கலந்த - (ஆத்மாவோடு) சேர்ந்திருக்கிற, வினை - பாபங்களை, கெடுத்து - போக்கிக்கொண்டு, விண் - பரமபத வாசலை, திறந்து - திறந்து, மிக்கு - பெரிய, வீற்றிருப்பார்- மஹிமையுடனிருப்பார்கள்.

845. குருணாயோऽபிமந்யேத குரும்வா யோऽபிமந்யேத ।
தாவுபௌ பரமாம் ஸித்திம் நியமாதுபகச்சத: ॥

குருணா - ஆசாரியனால், ய: - எவன், அபிமன்யதே - அபிமானிக்கப்படுகிறானே, குரும் - ஆசாரியனை, ய: - எவன், அபிமன்யதேவா - அபிமானிக்கிறானே, தாவுபௌ-அவ்விருவரும், பரமாம்ஸித்திம்-பரமபதத்தை, நியமாத் - க்ரமமாக, உபகச்சத: - அடைகிறார்கள்.

846. மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் நத்யஜேயம் கதஞ்சந ।
தோஷோ யத்யபி தஸ்யஸ்யாத் ஸதாமேதத்கர்ஹிதம் ॥

மித்ரபாவேந - மித்திரன் என்கிற பாவனையால், ஸம்ப்ராப்தம்-வந்தவனை, கதம்சந - எவ்விதத்திலும், நத்யஜேயம் - கைவிடமாட்டேன், தஸ்ய - அவனுக்கு, தோஷ: யத்யபி ஸ்யாத் - தோஷமிருந்தாலுமிருக்கட்டும், ஸதாம் ஏதத் அகர்ஹிதம் - பெரியோர்களுக்கு இகழத்தக்கதன்று.

---

(844) நான். திருவ. 89. (845) பரத்வாஜஸம்ஹிதை.
(846) ஸ்ரீரா. யு. 18-3.

847. தேவபித்ருகார்யாப்யாம் நப்ரமிதிதவ்யம்। மாத்ரு தேவோ பவ। பித்ருதேவோபவ। ஆசார்யதேவோபவ। அதிதிதேவோபவ। யாந்யநவத்யாநி கர்மாணி। தாநிஸேவிதவ்யாநி। நோஇதராணி। யாந்யஸ்மாகம்ஸுசரிதாநி। தாநித்வயோ பாஸ்யாநி॥

தேவபித்ரு கார்யாப்யாம் - தேவர்கள் பித்ருக்கள் இவர்களின் காரியங் களில் நின்றும், நப் ரமிதிதவ்யம் - தப்பாதே, மாத்ரு - தாயை, தேவ:- தெய்வமாக பாவிக்கிறவனாக, பவ - யிரு, பித்ருதேவ: - தகப்பனை தெய்வமாக பாவிக்கிறவனாக, பவ-இரு, ஆசார்ய: தேவ:-ஆசாரியனை தெய்வமாக பாவிக் கிறவனாக, பவ - இரு, அதிதிதேவ: - விருந்தாளிகளை தெய்வமாக பாவிக் கிறவனாக, பவ - இரு, (மேற்கூறியவர்களை தெய்வத்தைப்போல் உபசரிக்க வேணுமென்றபடி), யாநி - எந்த, கர்மாணி - கர்மங்கள், அநவத்யாநி - பாப மில்லாதவைகளோ, தாநி - அவைகள், த்வயா - உன்னால், உபாஸ்யாநி - செய் யத்தக்கவைகள், இதராணி - வேறு பாவத்தோடு கூடியவைகள், நோ வுபாஸ் யாநி - செய்யத் தகாதவைகள், யாநி - எவைகள், அஸ்மாகம் - ஆசாரியனான எங்களுடைய, ஸுசரிதாநி - நன்னடக்கைகளோ, தாநி - அவைகள், த்வயா - உன்னால், உபாஸ்யாநி - செய்யத் தக்கவைகள்.

848. நல்லவென் றோழி நாகணைமிசை நம்பரர்
செல்வர் பெரியர் சிறுமானிடவர் நாம்செய்வதென்
வில்லிபுதுவை விட்டுசித்தர் தங்கள் தேவரை
வல்லபரிசு வருவிப்பரேல் அது கண்டுமே

என் நல்லதோழி - (என்னிழவுக்கு வ்யஸநப்படும்) நல்ல தோழியே, நாகணை மிசை - திருவநந்தாழ்வானாகிற திருப்படுக்கையிலே பள்ளிகொண்ட ருளுமவனாய், நம்-ஆஶ்ரிதரான நமக்கு, பரர் - ஸர்வஸ்மாத்பரனாய், செல்வர்-ஶ்ரியபதியாய், பெரியர் - ப்ரம்மா முதலானோர்க்கும் பெரியரானவரை, சிறு - மிகத்தண்ணியராய், மானிடவர் - மநுஷ்யரான, நாம் - நாம், செய்வது-செய் யத்தக்கது, என் - என்ன விருக்கிறது, வில்லிபுதுவைநகர் - ஸ்ரீவில்லி புத்தூருக்கு, நம்பி - நிர்வாஹகரான, விட்டு சித்தர் - பெரியாழ்வார், தங்கள் - தம்முடைய, தேவரை - ஸ்வாமியானவரை, வல்லபரிசு-திருவந்திக் காப்பிடல் முதலாகச் செய்யக்கூடிய ப்ரகாரங்களாலே, வருவிப்பரேல் - எழுந்தருளப் பண்ணுவரேயானால், அதுகாண்டும் - அவ்வழியாலே காணக்கடவோமென் கிறாள்.

849. எந்தைதந்தை தந்தைதந்தைதம்மூத்தப்பனேழ்படிகால்தொட வந்துவழிவழியாட் செய்கின்றோம் திருவோணத் திருவிழவில் [ங்கி

(847) தைத். உப. சிக்ஷா. 9-2. (848) நாச். திரு. 10-10.
(849) திருப்பல்லாண்டு. 6.

அந்தியம்போதி லரியுருவாகி யரியை அழித்தவனைப்
பந்தனைதீரப் பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே.

எந்தை - நானும் தகப்பனும், தந்தை - அவன் தகப்பனும், தந்தை - அவன் தகப்பனும், தந்தை - அவன் தகப்பனும், தம்மூத்தப்பன் - அவனுக்குத்தகப்பனும் பாட்டனும் (ஆகிய), ஏழ்படிகால் தொடங்கி - ஏழுதலைமுறை தொடங்கி, வந்து - வந்து, வழி வழி - முறை முறையே, ஆள் செய்கின்றோம் - அடிமை செய்கின்றோம், திருவோணம் - திருவோண மென்கிற, திருவிழவில் - திருநாளிலே, அந்தியம்போதில் - சாயங்காலத்தில், அரி உருவாகி - நரசிம்ஹரூபியாய் அவதரித்து, அரியை - சத்ருவான ஹிரண்யனை, அழித்தவனை - ஸம்ஹரித்த நரஸிம்ஹனைக்குறித்து, பந்தனைதீர - (அவருடைய) பாலவ்யாதி தீரும்படி, பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு என்று - பல்லாண்டு பல்லாயித்தாண்டு என்று, பாடுதும் - மங்களாசாஸனம் பண்ணுவோம்.

850. மாறாய தானவனை வள்ளுகிரால் மார்பிரண்டு
கூறாகக் கீறிய கோளரியை—வேறாக
ஏத்தி யிருப்பாரை வெல்லுமே மற்றவரைச்
சாத்தி யிருப்பார் தவம்

மாறாய - சத்ருவான, தானவனை - ஹிரண்யாஸுரனுடைய, மார்பு - மார்பை, வள் - கூரிய, உகிரால் - நகங்களினால், இரண்டு கூறாக - இரண்டு பிளவாக, கீறிய - பிளந்த, கோள் - பலத்தையுடைய, அரியை - நரஸிம்ஹனை, வேறாக - விலக்ஷணமாக, ஏத்தியிருப்பாரை - ஸ்தோத்ரம் பண்ணியிருப்பவர்களை, மற்று - அப்படி, அவரை - ஸ்தோத்ரம் பண்ணுகிற விலக்ஷணரான ஸ்ரீவைஷ்ணவர்களை, சாத்தி யிருப்பார் - ஸ்தோத்ரம் பண்ணுகிற ஸ்ரீவைஷ்ணவர்களின், தவம் - தபஸ்ஸு, வெல்லும் - ஜயிக்கும்.

851. அக்ருத்ரிம த்வச் சரணாரவிந்த ப்ரேம ப்ரகர்ஷாவதி மாத்மவந்தம் । பிதாமஹம் நாதமுநிம் விலோக்ய ப்ரஸீதமத்வ்ருத்தமசிந்தயித்வா ॥

அக்ருத்ரிம - நிருபாதிகமான, த்வச்சரணாரவிந்த - தாமரைமலர் போன்ற தேவரீர் திருவடிகளில், ப்ரேம ப்ரகர்ஷ꞉ - ப்ரீத்யதிசயத்திற்கு, அவதிம் - எல்லையாயும், ஆத்மவந்தம் - தேஹாத்ம விவேகமுடையவராயும், பிதாமஹம் - அடியேனுக்கு பிதாமஹராயுமிருக்கிற, நாதமுநிம் - ஸ்ரீமந்நாதமுநிகளை, விலோக்ய - பார்த்து, மத் - அடியேனுடைய, வ்ருத்தம் - துர்விருத்தாந்தத்தை, அசிந்தயித்வா - திருவுள்ளம்பற்றாமல், ப்ரஸீத - அநுக்ரஹிக்கவேணும்.

852. பரஸ்பர்மநுஷ்ய꞉ ... ... 466-வது இலக்கம் காண்க.

853. தமேவசாத்யம் ... ... 153-வது இலக்கம் காண்க.

854. தமேவ ஶரணம் ... ... 154-வது இலக்கம் காண்க.

(850) நான். திருவ. 18. (851) ஸ்தோத்ர ரத்நம் 65.

855. அநாசார்யோ பலஸ்யாஹி வித்யேவம் நஸ்யதி த்ருவம் ।

அநாசார்யோபலப்தா - ஆசார்யனால் உபதேசிக்கப்படாத, இயம் - இந்த, வித்யா - வித்யையானது, த்ருவம் - நிச்சயமாக, நஸ்யதிஹி - நசித்தே விடுகிறது.

856. ஶாஸ்த்ராதிஷு ஸுத்ருஷ்டாபி ஸாங்கா ஸஹ பலோதயா ।

நப்ரஸீதயதிவை வித்யா விநா ஸதுபதேஶத: ॥

சாஸ்த்ராதிஷு - சாஸ்த்ராதிகளில், ஸுத்ருஷ்டா அபி - நன்றாய் பார்த்திருந்தாலும், வித்யா - வித்யையானது. ஸதுபதேசவிநா - ஸதாசார்யோபதேசமில்லாதபோது, ஸாங்கா - அங்கங்களோடு கூடினதாயும், ஸஹபலோதயா - பல ஸித்தியோடு கூடினதாயும், நப்ரஸீத்யதி - நன்றாய் ஸித்திக்கிறதில்லை.

857. தேநைவதே ... ... 466-வது இலக்கம் காண்க.

858. அநந்ய ஸாத்யே ஸ்வாபீஷ்டே மஹாவிஸ்வாஸ பூர்வகம் ।

ததேகோபாயதா யாச்நா ப்ரபத்தி: ஶரணாகதி: ॥

அநந்யஸாத்யே - அந்யோபாயங்களால் ஸித்திக்கக்கூடாததான, ஸ்வாபீஷ்டே - தன் விருப்பத்தில், மஹாவிஸ்வாஸ பூர்வகம் - மஹாவிஸ்வாஸத்தை முன்னிட்டு, ததேகோபாயதா யாச்நா - அவ்வொருவனையே உபாயமாயிருக்க வேணுமென்கிற ஆசையானது, ப்ரபத்தி: - ப்ரபத்தியாகும், சரணாகதி: - அதுவே சரணாகதியாகும்.

859. பாலமூகஜடாந்தாஸ்ச பங்கவோ பதிராஸ் ததா ।

ஸதாசார்யேண ஸந்த்ருஷ்டா: ப்ராப்நுவந்தி பராம்கதிம்॥

பால - குழந்தைகளும், மூக - ஊமையர்களும், ஜட - மந்தமதிகளும், அந்தா:ச - குருடர்களும், சதாசார்யேண ஸந்த்ருஷ்டா: - ஸதாசாரியன் க்ருபா கடாக்ஷத்தினால் பார்க்கப்பட்டவர்களாய், பராம் கதிம் ப்ராப்நுவந்தி - பரமபத மடைகின்றார்கள்.

860. உபயபரிகர்மித ... ... 282-வது இலக்கம் காண்க.

861. வாடினேன்வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துய ரிடும்பையில் பிறந்து
கூடினேன்கூடி இளையவர் தம்மோ
டவர்தரும் கலவியே கருதி
ஓடினேனோடி உய்வதோர் பொருளா
லுணர்வெனும் பெரும்பதம் தெரிந்து
நாடினேன்நாடி நான் கண்டுகொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்.

---

(855) (856) பாரத். ஸம். 1-3. (858)
(859) பாரத். ஸம். 1-35. (861) பெரிய. திரு. 1-1-1

பெருந்துயர் - மிகுந்த துன்பத்துக்குக் கொள்கமான, இடும்பையில் - சரீரத்திலே, பிறந்து - உண்டாய், கூடினேன் - ஒன்றாய்ப் பொருந்தினேன், கூடி - இப்படி நெடுங்காலம் பொருந்தியிருந்த, இளையவர் - யுவதிகளான ஸ்திரீகள், தரும் - கொடுக்கிற, கலவியே - ஸம்ஶ்லேஷத்தையே, கருதி - நினைத்து, அவர் தம்மோடு - அவர்கள்போன அடிவழியே, ஓடினேன் - பின் தொடர்ந்து ஓடினேன், ஓடி - தேடிக்கொண்டோடி, மனத்தால் - சிந்தையாலே, வருந்தினேன் - துக்கத்தை அநுபவித்தேன், வாடினேன் - வாடிப்போந்தேன், வாடி - வாட்டத்தையுடையனுயிருந்து, உய்வது - உஜ்ஜீவநத்துக்குடலான, ஓர் பொருளால் - ஒரு நல்ல அர்த்தத்தாலே, நாடி - ஆராய்ந்து, நான் - நான், நாராயணு என்னும்-நாராயணு என்கிற, நாமம் - திருநாமத்தை, கண்டுகொண்டேன் - காணப்பெற்றேன்.

862. இன்று தொட்டும் எழுமையும் எம்பிரான்
நின்று தன்புகழ் ஏத்த அருளினுன்
குன்ற மாடத் திருக்குருகூர் நம்பி
என்றும் என்னை இகழ்விலன் காண்மினே

இன்றுதொட்டும் - இன்றுமுதல், எழுமையும் - மேலுள்ள காலங்களிலும், எம்பிரான் - எனக்கு ஸ்வாமியானவர், நின்று - அத்யவஸாயத்தோடே நின்று, தன் - தம்முடைய, புகழ் - கல்யாணகுணங்களை, ஏத்த - ஸ்துதிக்கும்படி, அருளினுன் - க்ருபை பண்ணினுர், குன்றம் - பர்வதங்களையொத்த, மாடம் - மாடங்களையுடைய, திருக்குருகூர் நம்பி - திருநகரியிலே எழுந்தருளியிருக்கிறவாழ்வார், என்றும் - எக்காலத்திலும், என்னை - என்னை, இகழ்விலன் - அநாதரிக்கிறிலர், காண்மின் - காணுங்கோள்.

ப்ரமாணத்திரட்டு ஸம்பூர்ணம்.

பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே ஶரணம்.

ஜீயர் திருவடிகளே ஶரணம்.

---

(862) கண்ணிநுண் சிறுத்தாம்பு. 6.

ஸ்ரீவசநபூஷண வ்யாக்யாந ப்ரமாணத்திரட்டிலுள்ள

ஶ்லோக அகராதி

ஸ்ரீவசநபூஷண வ்யாக்யாந ப்ரமாணத்திரட்டிலுள்ள

செய்யுள் அகராதி

ஸ்ரீவசனபூஷண வ்யாக்யான பிழைத்திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
3	8	வேத ஸம்ஸ்க்ருத ரூப	ஸம்ஸ்க்ருதரூப
5	15, 16	விரத"த்தை	விரதத்தை"
6	16	ததுஜ்ஜீவநார்தமாக	ததுஜ்ஜீவநார்த்தமாக
6	32	வர்தங்களெல்லாம்	வர்த்தங்களெல்லாம்
13	2	ப்ரமாதாவனவன்	ப்ரமாதாவானவன்
14	24	உபக்ாமித்தது	உபக்ரமித்தது,
16	30	பராஹ்ம	ப்ராஹ்ம
17	21	பதிபாத்ய	ப்ரதிபாத்ய
17	27	சித்தாதிளுக்கு	சித்தாதிகளுக்கு
17	30	ப்ரம்ஹ	ப்ரஹ்ம
20	11	மூலம	மூலம்
20	15	ஸ்மர்தீதி	ஸ்ம்ர்தீதி
21	28	மத ஶாநம் ததஃ	தேஶாஸநம் ததஃ
23	3	ரக்ஷணார்தமாக	ரக்ஷணார்த்தமாக
30	8	அங்யாஹி	அநங்யாஹி
30	13	கிரியாநிற்ந	கிரியாநிற்க

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
	25	அனுலும்	ஆனுலும்
33	12, 13	ரகுதராதராமஸ்ய	ரகுதரா ராமஸ்ய
35	23	இஹஜகதி	இஹஜகதீதி
35	32	ப்ராணஸம்ஶயமா பங்கம் 124 "	124 "ப்ராணஸம்ஶய மாபங்கம்
40	33	நிஶ்சலதி	நிஶ்சரதி
41	18	தீப்தாங்	திவ்யாங்
42	10	இவ்வுயாயத்துக்கு	இவ்வுபாயத்துக்கு
43	7	யொள்ளுகிற	கொள்ளுகிற
45	9	தொன்றே யிது	தொன்றிறே யிது
49	4	("கேஶ்வஸ்யாத்மா"	(கேஶவஸ்யாத்மா"
55	21	206 அதேஶ	202 அஶேஷ
65	15	பூர்வஸ்யாதபி	பூர்வஸ்மாதபி
66	6	அண்டத்துப்	அண்டத்துக்குப்
77	15	274 திருமாலை	247 திருமாலை
77	19	போதராயே	போதராதே
79	30	ஸாவேஶ்வரனுக்கும்	ஸர்வேஶ்வரனுக்கும்
86	16	ஶப்தாத்தம்	ஶப்தார்த்தம்
89	20	ரவிப்பிக்கும்தொழிய	ரவிப்பிக்குமதொழிய
93	6	ஸ்வாதர்த்ர்யத்தை	ஸ்வாதந்த்ர்யத்தை
93	23	மென்றயடி	மென்றபடி
93	27	வ்யதேஷட்டவ்யஃ	வ்யபதேஷ்ட்டவ்யஃ
94	15	நியங்களில்லை	நியமங்களில்லை
94	17, 18	வைலக்ஷண்யமும்... அதில்ப்ரபத்தி	வைலக்ஷண்யமும், அதில் ப்ரபத்தி பண்ணுமதிகாரிகளுடைய வைலக்ஷண்யமும், அதில் ப்ரபத்தி
95	26	ஸ்வஶக்தியைவிட்டால்	ஸ்வஶக்தியைவிட்டாள்
96	33	தேணும்	வேணும்
109	17	கைபுருகும்	கைபுகுரும்
110	12	மந்த்ராதீநஞ்ச	மந்த்ராதீநந்து
117	11	"குணோர்தாஸ்ய	362 "குணோர்தாஸ்ய
118	10	யென்றிருப்பார்கள்	யென்றிருப்பர்கள்.
125	7	த்ருகவ்ரதா	த்ருடவ்ரதா
125	29	ஶேஷபூனக	ஶேஷபூதனக
131	14	அத்மாவினுடைய	ஆத்மாவினுடைய

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
133	24	யாகவுமாம்...பலத்தை	யாகவுமாம் புஷ்பத்தை யாகவுமாம்பலத்தை
143	29	ஸ்வதந்த்ரனுப்	ஸ்வதந்த்ரனுய்
148	18	ஹீருணா	வீருணா
155	16	பாாப்யப்ரீதி	ப்ராப்யப்ரீதி
159	5	முடிக்கவையாவது	முடிக்கையாவது
162	27	ஸம்ஸர்காதி	ஸ்ம்ஸர்காத்
170	10	ஆருட-	ஆரூட
175	1	குடகாலாதென்கிற	குடலாகாதென்கிற
177	32	ஆசாசம்	ஆகாசம்
181	6	மென்படி	மென்றபடி
182	5	வாத்ததே	வர்த்ததே
200	16	ஸகலாத்மாக்களுந்கும்	ஸகலாத்மாக்களுக்கும்
207	30	ப்ராப்தகாம	ப்ராரப்தகர்ம
223	15	ஸ்வருபேண வும்	ஸ்வரூபேண வும்
242	20	தருஷ்டா	த்ருஷ்டா
247	18	க்ருதயாகரணதி	க்ருத்யாகரணதி
256	15	ஸ்வருபேண வும்	ஸ்வரூபேண வும்
312	31	நடுவே	நடுவே
316	19	குரூநப்யுபஸர்வ்யச	குரூநப்யுபஸர்ப்யச
323	26	ப்ராப்திக்	ப்ராப்திக்கும்
325	17	சொல்னுகையாலே	சொல்லுகையாலே
328	17	அவிதிதாங்யதேவதாாப	அவிதிதாங்யதேவதாாய்
350	22	ஸ்வாஸ்வாதந்ந்ர்ய	ஸ்வஸ்வாதந்த்ர்ய
368	12	தௌர்லப்யமும	தௌர்லப்யமும்
387	1	பத்துடையடிவர்க்	பத்துடையடியவர்க்
468	31	வேம்யின்	வேம்பின்
538	28	தோஷாம்	தேஷாம்
561	20	ஜகதுபாதாக ... ... சக்தி-சக்தி,	ஜகதுபாதாநசக்தி,தேஜ:-பராபிபவந ஸாமர்த்தியம், சக்தி - சக்தி,
583	18	புருஷகாரத்தாலேந	புருஷகாரத்தாலே, ந
601	31	லாஹஸதேஷாம்	லாஹஸ்தேஷாம்
754	27	நெருங்கேழலார்	பெருங்கேழலார்

[செல்வாங்கன் பிரஸ், சென்னை.] [தாது ஹூ பங்குனிமீ]